# வந்தியத்தேவன் வாள்



கலைமாமணி
விக்கிரமன்

நூல் விவரம்

நூலின் தலைப்பு : வந்தியத்தேவன் வாள்
நூலின் ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன்
பொருள் : வரலாற்றுப் புதினம்
உரிமை : ஆசிரியருக்கு
வெளியீடு : மூன்றாவது பதிப்பு 2007
பக்கங்கள் : 316 + XII = 328
நூலின் அளவு : டெமி 1/8
அச்சுத்தாள் : கிரீம்வோவ்
அச்செழுத்து : 11 புள்ளி
ஒளி அச்சு : பிரில்லியன்ட் கிராபிக்ஸ், சென்னை 600 042.
அச்சிட்டோர் : ஸ்கிரிப்ட் பிரின்டர்ஸ், சென்னை.
நன்றி : அமரர் ஓவியர் மணியம் (மேலட்டையில் வெளியாகியுள்ள கறுப்பு வெள்ளை ஓவியம் 'நந்திபுரத்து நாயகி'யில் வரைந்தது)
வெளியீடு : விக்கிரமன் பதிப்பகம்
3, ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.
தொலைபேசி எண்: 044 - 2371 2485
நூலின் விலை : ரூ.140

MURUGAN LENDING LIBRARY
57/23, ARYA GOWDA ROAD,
WEST MAMBALAM, CHENNAI 33
PHONE : 23748345

# முன்னுரை

'கல்கி இலக்கிய விருது' பெற்ற வரலாற்று எழுத்தாளர்

## கௌதம நீலாம்பரன்

இராஜராஜ சோழன் என்றதுமே, நம் மனக்கண்களின் முன், வானளாவ எழுந்து நிற்கும் பிரம்மாண்டமான தஞ்சைப் பெரிய கோயில்தான் காட்சி தரும். காலத்தை யாரும் இழுத்துப் பிடித்து நிறுத்திவிட முடியாது. ஆனால், மாமனிதர்கள் தங்கள் மகத்தான செயல்களின் மூலம், காலத்தை அளக்கும் கருவி போல, அல்ல, அல்ல; காலத்தையே வியந்து திரும்பிப் பார்க்க வைக்கும் அற்புதமாய் அபூர்வமான தடங்களை, அழுத்தமாகப் பதித்து விட்டுச் செல்கிறார்கள்.

இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயில் மட்டுமன்று; இராஜராஜ சோழனே கூட அப்படிக் காலம் வியந்து நோக்கும் அற்புதமானவர்தான். அரசர்கள் எத்தனையோ பேர் வந்தார்கள், போனார்கள். ஆனால், சரித்திரத்தைத் தன் சாதனைகளால், என்றும் சாகாத அற்புதச் சிற்பங்களாகச் செதுக்கி வைத்த செம்மல் இராஜராஜ சோழன்தான்.

இராஜராஜ சோழனும் அவன் புதல்வன் இராஜேந்திர சோழனும் மட்டும் தெற்கே தோன்றியிராவிடில், வட இந்திய சரித்திரத்தின் பக்கங்களில் வானளாவப் புகழப்படும் அசோக சக்ரவர்த்தி, கனிஷ்கன், ஹர்ஷன் போன்ற மாமன்னர்களே தெற்கில் இல்லை என்னும் அவப்பெயர் ஏற்பட்டிருக்கும்.

செம்பியன், சென்னி, கிள்ளி, வளவன் என்றெல்லாம் குடிப் பெயர்களை உடைய முற்காலச் சோழர்கள் பலர் இருந்தனர் என்ற போதிலும், அவர்களில் கல்லணை கட்டிய கரிகால் வளவன், காவிரிக் கரை நெடுக யானைகள் ஏற முடியாத எழுபது

சிவாலயங்களை மாடக் கோவில்களாக எழுப்பிய கோச்செங்கணான் போன்றோர் மகத்தான சாதனைகள் புரிந்த சோழப் பெருவேந்தர்கள் என்பது உண்மைதான் என்ற போதிலும், பிற்காலச் சோழ பரம்பரை தோன்றி, அதில் நம் இராஜராஜனும் இராஜேந்திரனும் ஒளிரத் தொடங்கிய பின்னர்தான், அந்த மாட்சிமை மிக்க இராஜ பிரகாசத்தில், முற்காலச் சோழர்களும் பேசப்பட்டார்கள்.

விஜயாலய சோழன் காலத்தில் இந்தப் பழைய வம்சம் துளிர் விடத் தொடங்கியது என்றால், இராஜராஜன் காலத்தில்தான் தென்னிந்திய நிலப்பரப்பு முழுவதையும் கவீகரித்து, விஸ்வரூப தரிசனம் காட்டியது. கடல் விளிம்புகளுக்கு அப்பாலும் கால் பதித்தது.

தந்தை எட்டடி பாய்ந்தால், மகன் இராஜேந்திர சோழனோ எட்டியவரை பாய்ந்து, மத்திய இந்தியாவைத் தாண்டி, இமயத்தில் பெருகி வரும் கங்கை வரை தனது வாளை நீட்டினான். தந்தை விழிஞத்தில் கலமறுத்து, மேற்குக் கடல் வரை மேவி நின்றால், மகன் கிழக்குக் கடலைத் தன் மரக்கலப் படையால் கடைந்தும் குடைந்தும் வீரம் பதித்தான். சோழராட்சியை அழுத்தமாக நிலைப்படுத்தி, பின் வந்த சந்ததியர் பெருமை பேசி வாழ வெற்றிப் பதாகையை விண்முட்ட உயர்த்தி வைத்தவன் இவனே.

'இவற்றையெல்லாம் நாங்கள் வரலாற்று நூல்களில் நிறையவே படித்திருக்கிறோமே' என்கிறீர்களா? இந்த வரலாற்றுப் புதினத்தின் முக்கியமான கதாபாத்திரங்கள் இராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும்தான். அதனால்தான் இவ்வளவும் எடுத்துச் சொல்ல நேர்கிறது.

எப்பேர்ப்பட்ட கதாபாத்திரங்கள் இவ்விருவரும்! ஒரு நாட்டின், ஓர் இனத்தின், ஒரு மொழியின், ஏன்... ஒரு சமயத்தின் பலமான அடித்தளமாகவும் கம்பீரமான சிகரமாகவும் திகழ்ந்த பெருவேந்தர்களல்லரோ இவர்கள்? இவ்விரு மாமன்னர்களும் கதாபாத்திரங்களாக உலவும் ஒரு புதினத்தை அவ்வளவு எளிதாக எடை போட்டு விட முடியுமா? சொல்லுங்கள்!

புதினத்தின் தலைப்பு 'வந்தியத்தேவன் வாள்' என்றல்லவா இருக்கிறது என்பீர்கள். உண்மைதான். இப்புதினத்தின் பக்கங்களில் அதிகம் பேசப்படுவதும் வல்லவரையன் வந்தியத்தேவன் பற்றியும், அவருடைய துணைவியார் குந்தவ்வை தேவியார் பற்றியும்தான்.



உங்களுக்கே தெரியும், இராஜராஜ சோழரின் மூத்த சகோதரிதான் குந்தவ்வை. அதுமட்டுமன்று; அக்காள் வளர்த்த அன்புத் தம்பிதான் இராஜராஜர். சோழர் வரலாற்றில் இக்குந்தவ்வை தேவியார் பெற்றிருக்கும் பெரும் புகழும், முக்கியத்துவமும் வேறு எந்த இளவரசிக்காவது உண்டா என்பது ஐயத்திற்குரியதுதான்.

இளமையிலேயே தாயை - தாயின் அரவணைப்பை இழந்து விட்ட அருண்மொழி வர்மராகிய இராஜராஜரை, அக்குறை தெரியாமல் பாசம் பொழிந்து வளர்த்தவர் குந்தவ்வை.

அன்பில் அன்னையாய், பரிவில் தமக்கையாய், அறிவினை ஊட்டுவதில் ஆசானாய், சமய உணர்வினையும் தமிழ்ப் பண்பாட்டினையும் ஊனிலும் உணர்விலும் பதித்து வளர்ப்பதில் நல்லாசானாய், ஆட்சிக் கலை, சமரச மனம், மதிநுட்பம் போன்றவற்றை வளர்ப்பதில் நல்லமைச்சனுமாய்த் திகழ்ந்த பெருமை குந்தவ்வை தேவியாருக்கு உண்டு.

பெரிய பிராட்டி செம்பியன் மாதேவியாரும், அக்காள் குந்தவ்வையும் இல்லையெனில் நிச்சயமாக நம் தமிழ்த் திருநாடு இராஜராஜ சோழன் என்னும் மாமன்னனைப் பெற்றிருக்க இயலாது என்றே துணிந்து கூறலாம்.

அரசர்கள் வரலாற்றில், குடும்பம் என்கிற ஓர் உயரிய அமைப்பு, தெளிவான உறவுப் பெயர்களோடு நம் கண்களுக்கு முதன்முதலாகத் தென்படுவதே கூட, இராஜராஜ சோழரின் வரலாற்றிலிருந்துதான்.

ஆட்சி பீடத்தில் அமர்ந்துவிடும் வெறியில், குரங்கு கைப் பூமாலையெனச் சிதறிப் போன அரச குடும்பங்களின் வரலாறுகளே அனந்தம். ஆனால், சிறிய தந்தைக்கும் கூட, 'ஆள விரும்பினால் ஆளட்டும்' எனக் கூறி, அரச பீடத்திற்கு வழிவிட்டு, ஒதுங்கி நின்று, மக்களே ஆர்வம் காட்டி அவசரப்படுத்தியபோதிலும், நிதானமாகக் காத்திருந்து, உரிய தருணத்தில் மகுடம் தரித்து, செங்கோல் ஏந்திய உயரிய பண்பாளன் இராஜராஜன். தன் மகனுக்கும் கூட, சிறிய தந்தையின் பெயரையே பாசத்துடன் சூட்டி, 'மதுராந்தகன்' என்றழைத்து மகிழ்ந்திருக்கிறான்.

அந்த மதுரான், இராஜேந்திர சோழ தேவனாக ஆகுமுன் உள்ள இளம் பிராயப் பருவ நிகழ்வுகள் இக்கதையின் அடித்தளமாக இலங்குகிறது. காதலும் வீரமும் கை கோத்துக் களிநடம் புரிகின்றன.

திருச்சி மலைக் கோயிலில் நடனத்திலும், சிற்பத்திலும் ஆர்வமுள்ள இள நங்கையான பூங்கொடியை மதுரன் சந்திக்க நேர்வதில் தொடங்குகிற கதை, அடுத்தடுத்த அத்தியாயங்களில் காவிரி வெள்ளம் போல் புதுப்புதுச் சுழிகளும், வளைவு நெளிவுகளுமாய் விரைந்தோடுகிறது.

இளையபிராட்டியாரான குந்தவ்வை தேவியாரும், வல்லவரையர் வந்தியத்தேவரும் மதுரனாகிய சோழ இளவரசன் இராஜேந்திரனைத் தங்கள் தங்களின் விருப்பத்திற்கேற்ப உருட்டி விளையாடுகிறார்கள்.

இளவரசனின் காதலை எதிர்ப்பவர் என்ற வகையில் குந்தவ்வை தேவியார் செய்யும் திரைமறைவு வேலைகள் கதையின் சுவாரஸ்யத்தைக் கூட்டுகின்றன. வல்லவரையரோ வேறு உள் நோக்கத்துடன் காய்களை நகர்த்துகிறார்.

எத்தனை பேர் எத்தனை முயன்றால்தான் என்ன... இளம் புயலை இரு உள்ளங்கைகளால் தடுத்து விட இயலுமா என்ன? கரை புரண்டோடும் காட்டாற்று வெள்ளமல்லவா காதல்! அதைத் தடுத்து அணை கட்டும் வல்லமை கரிகால் சோழனாலும் முடியாதே!

ஆனால், காலம் எதையும் சாதிக்கும் - சூழ்நிலை எதையும் மாற்றும் - பண்பாடு என்றும் தன்னைக் காத்துக் கொள்ளும் பாங்குடையது.

இதையெல்லாம்தான் இந்த 'வந்தியத்தேவன் வாள்' என்னும் புதினம் விவரித்துப் பேசுகிறது. இதன் முழுக் கதையையும் ஒரு சிறு முன்கதைச் சுருக்கம் போல் எடுத்தெழுவது தேவையன்று என்று எண்ணுகிறேன் நான்.

கதையை விதந்தோத முயன்றால், அதன் கற்பனைப் பாங்கு எத்தனை சதவிகிதம் என்பதையெல்லாம் கோடிட்டுக் காட்ட வேண்டியிருக்கும். கற்பனை கலவாத கதை... அதைக் கதையென்று சொல்லவியலாது. வரலாற்றுக் கட்டுரை நூலாகவே ஆகிவிடும்.

'வரலாற்றுப் புதினங்கள் இப்படி இருக்க வேண்டும்' என்னும் வரையறை இலக்கணம் வகுக்கப்பட்ட பேராசிரியர் கல்கி போன்றோரின் சம கால எழுத்து பிரம்மாக்களில் ஒருவர் கலைமாமணி, டாக்டர் விக்கிரமன் அவர்கள்.

'அமுதசுரபி' இலக்கிய இதழில், தாமும் பல வரலாற்றுக் கதைகளை எழுதியதோடு, சாண்டில்யன் போன்ற பிறரையும் எழுத



வைத்து, கல்கி அவர்களுக்குப் பின் வரலாற்றுக் கதைகளை எழுதுவோர் என ஒரு நீண்ட வரிசை எழுத்தாளர்களின் பெயர்கள் பதிவாகத் தளம் அமைத்துக் கொடுத்த பண்பாளர் விக்கிரமன்.

இலக்கியப் பத்திரிகை ஆசிரியர், சிறந்த வரலாற்றுக் கதைகள் பல எழுதிய எழுத்தாளர் என அறுபதாண்டுகளுக்கு மேல் அழுத்தமான தடம் பதித்த கலைமாமணி விக்கிரமன், எழுத்துலகில் வளர்த்து விட்ட எண்ணற்ற இளங்குருத்துகளில் அடியேனும் ஒருவன்.

கால் நூற்றாண்டுக் காலத்திற்கு முன்பே என் கதைகளை 'அமுதசுரபி'யில் வெளியிட்டு, என்னை ஆசீர்வதித்த இப்பெருந்தகை இன்று 'கல்கி இலக்கிய விருது' அளித்தும் என்னை கௌரவித்திருக்கிறார். அத்துடன் 'நம் மாணவன்தானே' எனத் தாழ்வாகப் புறம் தள்ளாமல், 'வந்தியத்தேவன் வாள்' என்னும் தமது புதினத்திற்கு என்னை முன்னுரை எழுதவும் வைத்திருக்கிறார். இரு ஒரு தனிச் சிறப்பு எனில், அது மிகையில்லை.

சரித்திரத்தைக் கதைகளாகச் சொல்வதும், கற்பனை கலந்து விரித்துரைப்பதும் ஏற்கப்பட்ட இலக்கிய மரபு. ஆனால், கதைகளிலிருந்து சரித்திரம் தேடவோ, எழுதவோ யாரும் முயல மாட்டார்கள். இதில் நம்மவர்கள் அன்னப் பறவை மாதிரி எனலாம். வெறும் சரித்திரம் ஏடுகளில் தூசி படிந்து கிடக்கும், என்றாவது ஓர் ஆராய்ச்சி மாணவன் வந்து புரட்ட மாட்டானா என்று.

ஆனால், வரலாற்றுக் கதைகள் சுவையூட்டப்பட்ட பால் பணியாரம் மாதிரி. எவ்வளவு உண்டாலும் திகட்டாது. இப்புதினமும் அத்தகையதே என்பதைப் படிப்பவர்கள் நிச்சயம் உணர்வார்கள்.

ஒரு காதல் கதையை விவரிப்பது போன்று கதைக் களத்தை அமைத்துக் கொண்டு, அருமையான சோழ சரித்திரத்தை மிகச் சிறந்த சித்திர வேலைப்பாடுகளுடன் செதுக்கிக் கொண்டே போகிறார் ஒவ்வோர் அத்தியாயத்திலும்.

எளிய உரையாடல்களுக்கு இடையிடையே முற்காலச் சம்பவங்களை விவரிக்கும் உத்தியை கலைமாமணி விக்கிரமன் அவர்கள் கையாளும் பாங்கு, ஒரு தேர்ந்த சிற்பியையே நினைவூட்டுகிறது.

இவர் ஓர் ஒப்பற்ற எழுத்துச் சிற்பிதானே!

இப்புதினத்தில் வருகின்ற பிரதான கதாபாத்திரங்கள் பலரும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்கு பரிச்சயமானவர்கள். கற்பனை மாந்தர்களும், சில கற்பனைச் சம்பவங்களும் இடம் பெறுவதும் கூட, நிஜ வரலாற்றில் நிகழ்ந்திருக்கக் கூடியதே என நம்பும் வண்ணமாக அமைந்துள்ளன.

இதில் நான் மிகவும் ரசித்த சம்பவங்கள், சாகசங்கள், வர்ணிப்புகள், தத்துவம் புதைந்த வார்த்தைகள் என ஒரு பட்டிய லிட்டுத் தொகுத்தால், அவை ஓர் இலவச இணைப்பு வெளியிடத் தக்க அளவில் சிறு நூலாகவே அமைந்து விடும். எனவே, அவற்றை இங்கு எடுத்தெழுதவில்லை. ஊன்றி வாசிக்கும் ஒவ்வொரு வாசகரும் இதை உணர்ந்து மகிழ்வர்.

காலப் பெருவெளியில், கதையென்னும் கலத்திலேறி, மகத்தான சரித்திரச் சம்பவங்களை நிஜ தரிசனம் செய்ய நிச்சயம் இந்த 'வந்தியத் தேவன் வாள்' என்னும் வரலாற்றுப் புதினம் உங்களுக்கு உதவும் என உறுதி கூறுகிறேன்.

**- கௌதம நீலாம்பரன்**

# காதலும் கடமையும்

## கலைமாமணி விக்கிரமன்

வந்தியத்தேவன் - சிறந்த வீரன். சோழர்குல அரசர்களுக்கு மிக நெருக்கமானவன். சுந்தர சோழர் காலத்தில் சோழ நாட்டிற்கு வந்து சேர்ந்த வந்தியத்தேவன், வல்லவரையர் வந்தியத்தேவன் என்று புகழ்ப் பெயர் பெற்றவன்.

பேராசிரியர் அமரர் கல்கி அவர்கள் மகத்தான வரலாற்று நாவலான 'பொன்னியின் செல்வ'னில் வல்லவரையர் வந்தியத் தேவனைத் தமிழ்ப் பெருமக்களுக்கு அறிமுகப்படுத்தினார். அந்தப் பெயர் தமிழ் மக்கள் உள்ளங்களில் அழியாது பதிந்து விட்டது.

இராசராச சோழர் என்ற பட்டப்பெயருடன் அரியணை ஏறிய அருள்மொழி வர்மருடன் ஈழம் போன்ற நாடுகளுக்குப் படை களுடன் சென்று போர்க்களங்களில் உறுதுணையாக இருந்ததுடன் இனிய நண்பனாகவும் திகழ்ந்தவன்.

இராசராசனின் சகோதரி இளையபிராட்டி குந்தவ்வை தேவியை மணந்த மாவீரன்.

இளைய பிராட்டியாருக்கும் வந்தியத்தேவனுக்கும் காதல் ஏற்பட்டுத் திருமணம் நடைபெற்றது.

காஞ்சிபுரம் அருகேயுள்ள பிரம்மதேசம் ஒரு காலத்தில் சிறப்பான ஊராகத் திகழ்ந்தது. பிரம்ம தேசத்தைத் தலைநகராகக் கொண்டு வல்லவரையர் நாட்டை ஆட்சி புரிந்தவர் வந்தியத்வேன். இவை வரலாற்றிலுள்ள குறிப்புகள்.

'பொன்னியின் செல்வ'னைத் தொடர்ந்து நான் எழுதிய 'நந்தி புரத்து நாயகி' வரலாற்றுப் புதினத்தின் கதைத் தலைவர்களுள் வந்தியத்தேவனும் ஒருவன்.

இளையபிராட்டி குந்தவ்வை தேவியார், இராசராச சோழரின் அருமைக் குமாரன் இராசேந்திரனை இளம் பருவத்திலிருந்து அன்போடு வளர்த்தவர்.

இராசேந்திர சோழரின் இயற்பெயர் மதுராந்தகன். இவை யெல்லாம் வரலாற்றில் உள்ள நிகழ்ச்சிகள். நான் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை.

'வந்தியத்தேவன் வாள்' என்ற இந்தப் புதினம் வல்லவரையரின் வாழ்க்கையின் பிற்பகுதியில் நடைபெற்ற பிற்காலச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது.

'வந்தியத்தேவன் - குந்தவ்வை முதுமைப் பருவ நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கதை எழுதத் தொடங்கியுள்ளீர்களே, கதையில் 'காதல் இருக்காதே; கிளுகிளுப்பு இருக்காதே' என்று இந்த வரலாற்றுப் புதினத்தைத் தொடர்கதையாகத் தொடங்கியபோது சிலர் தெரிவித்தார்கள்.

காதல் என்பது வயது வரம்பிற்கும் அப்பாற்பட்டது. இளவரசன் மதுரன், இன்பவல்லி, அவளுடைய மகள் பூங்கொடி ஆகியோரை மையமாக வைத்தே இந்தப் புதினம் சுழல்கிறது. வந்தியத்தேவன் - குந்தவ்வை பற்றிய சம்பவங்கள் இந்தப் புதினத்தில் அதிகமாகக் குறிப்பிடப் படவில்லை.

பூங்கொடி - மதுரனிடையே ஏற்படும் உணர்ச்சிகளை மிக நுட்பமான முறையில் சித்திரிக்க வேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். ஒவ்வோர் அத்தியாயத்தையும் மிகக் கவனமாக எழுத வேண்டிய கட்டாயம் எனக்கேற்பட்டது.

இந்தப் புதினத்தில் இராசராச சோழ தேவர் வருகிறார். அவருடைய முதுமைப் பருவத்துச் சம்பவங்கள் சில கூறப் படுகின்றன.

தன் இலட்சியத்தை, கனவுகளை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபடுகிறார். பெரிய கோயில் கட்டுவதைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருக்கிறார்.

தன் மகன் மதுரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டும் ஆவலுடைய வராயிருக்கிறார். அவருள்ளத்தே பலப்பல எண்ணங்கள் அலை மோதிக் கொண்டிருக்கின்றன.



அத்துடன் நடந்து போன நிகழ்ச்சியின் நினைவு மின்னல்கள் தோன்றி மறைகின்றன. நடந்து போன நிகழ்ச்சி என்று நான் இங்கு கூறுவது எனது படைப்புகளான 'நந்திபுரத்து நாயகி' மற்றும் அதைத் தொடர்ந்த 'காதல் சிகரம்' புதினங்களில் வரும் சம்பவங்களில் காணலாம்.

வந்தியத்தேவன் வாளில் பல வரலாற்று நிகழ்ச்சிகளையும் விவரித்துள்ளேன். வந்தியத்தேவனுக்கு மற்றொரு மனைவி உண்டு எனும் செய்தி பலருக்கு அதிர்ச்சியைத் தரும். ஒரு மகளும் இருந்திருக்கிறாள். அவை சரித்திர உண்மைகள்.

கோயில் சிற்பங்களையும், கல்வெட்டுகளையும் பற்றிய சிறந்த கட்டுரைகள் எழுதி வரும் திரு. நாராயணசாமி அவர்களும், கல்வெட்டு ஆராய்ச்சியாளர் டாக்டர் தாமரைக்கண்ணன் அவர்களும் இந்தச் சான்றுகளைத் தெரிவித்தார்கள்.

11.8.2007 அன்று அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் சார்பில் நான் தலைவராக இருந்து நடத்திய கல்கி விழாவில் திரு. வைகோ அவர்களிடம் 'கல்கி இலக்கிய விருது' பெற்ற வரலாற்று எழுத்தாளர் கௌதம நீலாம்பரன் இந்த நூலுக்கு முன்னுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

இந்த நூலின் அட்டையில் என்னுடைய 'நந்திபுரத்து நாயகி' தொடருக்கு திரு. மணியம் அவர்கள் வரைந்த ஓவியத்தை (வந்தியத் தேவனுக்கு அந்தப் புதினத்தில் அழியா வடிவம் தந்தவர்) பின் புலமாக பயன்படுத்திக் கொண்டேன். வரலாற்றுக் கதை எழுதுபவரை மேன்மேலும் உற்சாகப்படுத்துபவை ஓவியங்களே!

'அமுதசுரபி'யில் தொடர்கதையாக 'வந்தியத்தேவன் வாள்' வெளிவந்தபோது ஒவ்வோர் இதழிலும் ஓவியங்களை வரைந்து தொடருக்குப் பெருமை சேர்த்தவர் ஓவியர் வினு.

இவர்கள் அத்தனை பேருடன் வாசகர்களாகிய உங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**- விக்கிரமன்**





# வந்தியத்தேவன் வாள்

மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோயில் மணி ஓசையின் நாதம் வெகு தொலைவுக்குக் கேட்டுக் கொண்டிருந்தது.

இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியாரும் வல்லவரையர் வந்தியத்தேவனும் சிவாசாரியார் அளித்த மலர்களையும் திருநீற்றையும் பெற்றுக் கொண்டு கருவறையைச் சுற்றி வலம் வந்து, மீண்டும் ஒருமுறை விநாயகர் திருமுன் நின்றனர்.

வந்தியத்தேவன் மெய்மறந்து, விழிகளை மூடிப் பிள்ளையார் பெருமானைத் துதித்தார். அதுபோல் குந்தவ்வையும் வேண்டி நின்றாள்.

ஒருவர் சற்று விழிகளைத் திறந்து பார்க்கும்போது மற்றவர் ஆழ்ந்த தியானத்தில் இருப்பதைக் கண்டு தாமும் சற்று விழிகளை மூடிக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் இருவரும் ஒரே சமயத்தில் கண் திறந்து ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

வந்தியத்தேவன் முதலில் தொண்டையைச் சற்றுச் செருமிக் கொண்டார்.

''புறப்படலாமா?''

''ஆகா!'' என்று குந்தவ்வை கீற்றுப் புன்னகையை முகமெனும் திரைச் சீலையில் வரைந்தவாறு தன் கணவரை நோக்கினாள்.

''இன்னும் சற்று இங்குத் தங்கி பிள்ளையாரப்பனை நேர்ந்து கொண்டு புறப்படுவது என்றாலும் எனக்குச் சம்மதமே'' என்றார் வந்தியத்தேவன், தம் பங்குக்கு இதழ்களில் புன்னகையை நெளிய விட்டவாறு. அதில் குறும்புத்தனம் திகழ்ந்தது. இதழ்களின் மேலே உள்ள மெல்லிய மீசை வரிசையில் அது பிரதிபலித்திருப்பது போல் குந்தவ்வைக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

''என் பிரார்த்தனைகள் முடிந்துவிட்டன. தாங்கள் ஏதாவது பிரார்த்தனை செய்து நேர்ந்து கொள்வது என்றால் வேண்டிக் கொள்ளலாம்'' என்றாள் குந்தவ்வை.

''இல்லை; இல்லை. எனக்கு வேண்டியது, வேண்டாதது என்று ஒன்றும் இல்லை'' என்று ஏதோ கூறி, மீண்டும் தொடர்ந்து பேச வல்லவரையர், அங்கிருந்து கீழே இறங்க முற்பட்டார்.

காற்று 'வீர் வீர்' என்று வீசிக் கொண்டிருந்தது. கீழே இறங்கும் படிக்கட்டுகள் செப்பனிடப்படாமல், மிகக் கவனமாக இறங்கா விட்டால், கீழே வேகமாகக் கொண்டு'செல்லும் வகையில் குண்டுங் குழியுமாக இருந்தன. எச்சரிக்கையுடன் காலடி எடுத்து வைக்க வேண்டியிருந்தது.

இளையபிராட்டியின் கரத்தை வந்தியத்தேவன் மெல்லப் பிடித்துக் கொண்டார்.

''அதோ பார்த்தீர்களா?'' என்று இளையபிராட்டி சுட்டிக் காட்டினாள். பச்சைப் பசேலென்று சோலைகளுக்கு நடுவே இருகரைகளையும் தொட்டோடும் அகண்ட காவிரியின் காட்சியை வல்லவரையர் பார்த்து, 'ஆஹா' என்று இயற்கையின் எழிற் கோலத்தை ரசித்தார்.

''இந்த அகண்ட காவிரியாறு பழையாறை வரும்போது குறுகி விடுகிறதே?'' என்று வியந்தார் வல்லவரையர். கண்ணுக்கெட்டிய தொலைவு வரையில் காவிரி ஆறு செல்லும் அழகையும், காவிரி யைத் தாண்டி மறுகரையில் திருவரங்கத்துப் பொன் விமானம் கதிரொளியில் பளிச்சிடுவதையும் அவர் கண்டு ரசித்து, ''இங்கேயே சற்று உட்காரலாமா?'' என்று கேட்டார்.

தன் எண்ணமும் அதுவே என்பதுபோல் குந்தவ்வையும் விழிகளால் இசைவு தெரிவித்தாள்.

''எப்படியும் குழந்தை மதுரன் வரும் வரையில் நாம் இங்கு இருக்க வேண்டும். இந்த மலை உச்சிக்கு நாம் வந்து பல ஆண்டுகள் ஆகியிருக்கும் அல்லவா?'' என்று எதிரே எல்லையில்லாமல் விரிந்திருந்த நீலவானத்தைப் பார்த்தவாறு கூறினாள் குந்தவ்வை.

''திருமணமானவுடன் வந்தோம், நமது பிரார்த்தனையை நிறை வேற்ற!'' என்றார் வந்தியத்தேவன். ''இனி அடுத்த பிரார்த்தனையை நிறைவேற்ற எப்போது வரப் போகிறோமோ?'' என்று கேட்டு விட்டு விழி விளிம்பின் வழியே இளைய பிராட்டியை நோக்கினார்.



குழந்தைச் செல்வம் இல்லாதது அவர்கள் இருவருக்கும் பெரும் குறை. அதை நெடிய பெருமூச்சு அவ்வப்போது புலப்படுத்தும். வாழ்வில் எல்லா நலங்களும் பெற்ற சோழர் குலத் தம்பதி பிள்ளை இல்லாக் குறையைப் பற்றி எப்போதாவது நினைப்பர். நினைக்கக் கூட நேரத்தைத் தேடிக்கொள்ள வேண்டிய நிலை.

''ஓகோ! அதுதான் பிள்ளையாரை அவ்வளவு நேரமாக வேண்டிக் கொண்டீர்களா?'' என்று குந்தவ்வை கேட்டாள். அவள் பார்வை நான்கு புறமும் சுற்றி விரிந்தது. உறையூர்க் கோட்டையும் கோயிலும் அடர்ந்த மரங்களிடையே தெரிந்தன.

''பழியை என் மீது மட்டும் போடாதே. உனக்கு மட்டும் ஆசை இல்லையா?'' என்று வல்லவரையர் குந்தவ்வையைச் சீண்டிப் பார்ப்பதில் மகிழ்வடைந்தார்.

வல்லவரையரையும் இளைய பிராட்டியையும் தொடர்ந்து வந்த அரச குடும்பத்து மெய்க்காவலர்கள் சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்தனர். இவ்வளவு அமைதியாக இளைய பிராட்டியும் வல்லவரையர் வந்தியத்தேவனும் அமர்ந்து பேசியதை இதுவரை அவர்கள் கண்டதில்லை.

பழையாறை மாளிகையில் இளைய பிராட்டி வசிக்கும்போது வல்லவரையர் - ஒன்று, போர்க்களத்தில் இருப்பார்; அல்லது சோழ நாட்டில் திக்விஜயம் செய்யும் அரசருடன் சென்றபடி இருப்பார்.

''அரச குடும்பத்தவர்களுக்கு என்ன குறை? பிள்ளையார் சந்நிதி யில் மெய்ம்மறந்து இளைய பிராட்டியும் வல்லவரையரும் நின்று பிரார்த்தனை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தாயா?'' என்று மெய்க் காவலருள் ஒருவன் மெல்லக் கேட்டான்.

''குறை இருந்தால்தான் தெய்வத்தை வேண்டிக் கொள்ள வேண்டுமா? நாட்டு மக்கள் நலனுடன் வாழப் பிரார்த்தனை செய்யக் கூடாதா? நம்மைப் போன்றவர்களுக்குத்தான் கவலையே இல்லை. நமது அரசருக்கு எவ்வளவோ பிரச்னைகள். பாண்டியரும், சாளுக் கியரும், சேரரும் கொடுக்கும் தொல்லையிலிருந்து நாட்டை எப்படிக் காப்பாற்றுவது என்பது அவரது கவலை'' - மற்றவன், தலைப்பாகையைக் கழற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு கூறினான். இருவரும் சற்று மறைவான இடத்தில் ஒதுக்குப்புறமாக அமர்ந்தனர்.

''அது சரிதான்; வல்லவரையருக்கு என்ன கவலை? நம் மாமன்னரின் தமக்கையாரின் கணவன் என்பதால் அவருக்கு நாட்டில் நல்ல செல்வாக்கு. தன் சகோதரியிடம் அரசர் வைத்திருக்கும் அன்பும் மரியாதையும் சொல்லி முடியாது. அதனால் இளைய பிராட்டியின் கணவர் என்பதால் வல்லவரையருக்கு இரட்டிப்பு மரியாதை!''

''இப்படித்தான் இராட்டிரகூட நாட்டிலிருந்து கோவிந்தன் என்பவர் பராந்தக சோழர் காலத்தில் தஞ்சாவூருக்கு வந்தார். சோழ நாட்டு மருமகப் பிள்ளையாக ஆனார். பிறகு இங்கேயே தங்கி விட்டார். 'தள்ளியிருந்தால்தான் மதிப்பும் மரியாதையும்; இல்லா விட்டால் வெளிக்கு மட்டுந்தான் மரியாதை' என்று என் பாட்டனார் சொல்வார்.''

''அதென்னவோ சோழ நாட்டு ராசி, சோழ அரச குடும்பத்து மாப்பிள்ளையாக வருபவர்கள் தங்களது நாட்டை இழந்து தஞ்சையில் அடைக்கலம் புகுந்து விடுகிறார்கள்!''

''இப்படியும் சொல்லலாம்! அடைக்கலம் புக வருபவர்கள் மாப்பிள்ளையாக மாறிவிடுகிறார்கள் என்று!''

இருவரும் மெல்லச் சிரித்தனர்.

''நமது மாமன்னரின் மகளின் கணவர் விமலாதித்தன் கதையும் இப்படித்தானே?'' என்று காவலருள் ஒருவன் குறிப்பிட்டபோது மற்றவன் குறுக்கிட்டு, ''அப்படிச் சொல்லாதே. விமலாதித்தன் வேங்கி நாட்டு மன்னராகி விட்டார்!'' என்றான்.

''நமது இளைய பிராட்டியார் கணவர் மட்டும் என்னவாம்? திருவல்லத்தைச் சுற்றியுள்ள நாட்டுக்குச் சொந்தக்காரராக இருந்தவருக்கு நமது அரசர் காஞ்சி நகருக்கு அடுத்த பல ஊர்களை அளித்து அவரை வல்லவரையர் நாட்டின் சிற்றரசராக்கி விட்டார். பிறகு வல்லவரையருக்கு என்ன குறை?''

ஒருவன் இவ்வாறு கூறியவுடன், மற்றவன் ''அவருக்குள்ள குறையே தனக்கு வாரிசு இல்லை என்பதுதான்'' என்றான்.

''உம்; அந்த ஏக்கத்தைப் போக்கத்தான் பிள்ளையாரப்பனிடம் இன்று இருவரும் நீண்ட நேரம் முறையிட்டார்களா? வேண்டாத நமக்குப் பல குழந்தைகளைக் கொடுத்து விட்டார். வேண்டித் தவம் இருப்பவருக்குக் கொடுப்பதில்லை. முன்பெல்லாம் இளைய



பிராட்டியார் குழந்தை வேண்டும் என்ற நினைவே இல்லாமல் இருந்தார்.''

''மதுராந்தகனைத் தம் வயிற்றுப் பிள்ளை போல் கருதி வளர்த்து வந்தார்கள். இளவரசர் இன்று எப்படி வளர்ந்து விட்டார் பார்த்தாயா?''

''ஆமாம், ஆமாம். அப்பப்பா! என்ன வளர்ச்சி! என்ன கம்பீரம்! ஈழத்துக்குச் சென்று வந்த பிறகு பல நாள்கள் கழித்து இப்பொழுது தான் பார்க்கிறேன். ஆகா; என்ன அழகான வடிவம்!''

''நற்குணங்களுடன் வளர்த்தவர் இளைய பிராட்டியார். நல்ல வீரத்தைப் புகுத்தியவர் வல்லவரையர்!''

''தங்கள் சொந்தக் குழந்தை போல் வளர்த்ததால் தங்களுக்கென்று ஒரு குழந்தை இல்லையே என்று குறைபட்டுக் கொள்ளவில்லை.''

''ஆனால், இப்பொழுது வாரிசு வேண்டும் என்ற கவலை தோன்றி யிருக்கிறது. இளவரசர் மதுராந்தகன் இன்னும் குழந்தையல்லர். தோளுக்கு மிஞ்சினால் தோழர்!''

மெய்க்காவலர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது வல்லவரையரும் இளைய பிராட்டியும் இளவரசர் மதுராந்தகனைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

''வல்லவரையரே!'' தன் கணவர் வந்தியத்தேவனை வழக்கம் போல் விளித்த இளைய பிராட்டியார் தொடர்ந்தாள்: ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. நமக்கு வாரிசு இல்லையே என்றுதான் நாம் இருவரும் கவலைப்படுகிறோம். கவலையின் பங்கு என்னை விடத் தங்களுக்கு அதிகம் என்பதும் நான் அறிவேன். என் வயிற்றுக் குழந்தையைப் போல, செல்வன் மதுரனை வளர்த்து வந்ததால் எனக்கு எந்தவித ஏக்கமோ, குறையோ தெரியவில்லை என்பதுதான் உண்மை. குழந்தை மதுரன், குழந்தை மதுரன் என்று வார்த்தைக்கு ஒரு தடவை சொல்லிக் கொள்கிறோம். ஆனால், மதுரன் இன்னும் குழந்தையல்லன். அவன் வளர்ந்து விட்டான். இனிமேல் அவனை நாம் குழந்தை என்று சொல்ல முடியாது'' என்று இளைய பிராட்டி கூறியபோது அவள் தன் மனத்தில் எதையோ மறைத்துக் கூறுவது போல் தோன்றியது.

வல்லவரையர் மெல்ல நகைத்தார். ''நமக்கு எதற்குக் குழந்தை? எனக்குப் பிறகு நாட்டை ஆள்வதற்குத்தானே? மதுரனே என் நாட்டை ஆளட்டுமே'' என்றார்.

''எனக்கும் முழுச் சம்மதம்தான். நமது வாரிசைப் பற்றிப் பேசவா இங்கு வந்தோம்?'' என்று கேட்டாள் குந்தவ்வை.

''பிறகு எதற்கு வந்தோம்? நமது பிறந்த நாளைக் கொண்டாடவா?'' என்று கேட்டார் வல்லவரையர்.

''என் பிறந்த நாள், நட்சத்திரம் எனக்கே தெரியாது. என் இளவல் பலமுறை வற்புறுத்திக் கேட்டு விட்டார். அரண்மனை ஜோதிடரிடமும் கேட்டாகி விட்டது. உங்கள் நட்சத்திரமும் தெரியாது'' என்று சோகம் இழையோடக் கூறினாள் குந்தவ்வை.

''என் பிறந்த நாளும் எனக்குத் தெரியாது. பிறந்த ஊரும் தெரியாது. அது கிடக்கட்டும். நம் செல்வன் மதுரன் பிறந்த நாள் திருவாதிரை நட்சத்திரம்தானே?'' என்று கேட்டார் வல்லவரையர்.

''ஆமாம்! இன்று மதுரனை உச்சிப் பிள்ளையார் கோயிலில் சந்திப்பதாகக் கூறியுள்ளதன் காரணமே திருவாதிரைத் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டம் வகுக்கத்தான். ஆனால், இன்னும் அவனைக் காணோமே'' என்று வரும் வழியை நோக்கினாள்.

''மதுரனைப் பற்றி வெளியே சொல்ல முடியாத கவலையென்று சற்று முன் குறிப்பிட்டாயே! இதுவரை என்னிடம் சொல்லவில்லையே! இப்பொழுதாவது சொல்லலாமல்லவா?'' என்று வல்லவரையர் கேட்டார்.

குந்தவ்வை பெருமூச்சு விட்டாள். ''வல்லவரையரே! நீங்கள் அறியாதது எதுவுமில்லை. என்னை விட என் இளவல் அருள்மொழியிடம் தற்போது உங்களுக்கு நெருங்கிய தொடர்புண்டு'' என்று அவள் தொடரும்பொழுது வந்தியத்தேவன் குறுக்கிட்டார்.

''தற்பொழுது என்ற சொல்லைப் பயன்படுத்தியதுதான் சரி. அருண்மொழியென்று இன்று மக்கள் போற்றும் இராசராசனின் குணச் சிறப்புகளுக்குக் காரணம் செம்பியன் மாதேவியாரும், நீயும் தானே! ஆகா, இராசராசனின் உள்ளத்துக்குள்ளே சிவபக்தி ததும்புகிறது. சிற்பம், சித்திரம், நடனக் கலைகளில் புலமை பெற வேண்டும் என்ற துடிப்பு அவருக்கு மேலோங்கி நிற்கிறது என்றால் அதற்குக் காரணம் நீ தானே! நானும் என் வாழ்நாளை வீணாக்கி விட்டேன் என்ற வருத்தம் இப்பொழுது ஏற்படுகிறது!''

''என்ன, என்ன வாழ்நாளை வீணாக்கி விட்டீர்களா?''

''ஆமாம்.''



''நடனக் கலையை உன்னிடம் கற்றுக் கொள்ளாமல் போனேனே என்ற வருத்தம் இப்பொழுது மேலோங்கி நிற்கிறது'' என்று வந்தியத் தேவன் கூறியபொழுது இளைய பிராட்டியின் முகம் சிவந்தது.

வயதின் முதிர்ச்சி தெரியாமல் இளமை கொஞ்சிக் குலவும் அந்த மஞ்சள் முகத்தில் படர்ந்த செம்மை சோழ நாட்டுச் செம் மாங்கனியை நினைவூட்டியது.

''போதும் போதும் புகழ்ச்சி. இன்னும் இளம் வயது என்று எண்ணி சிருங்காரம் பேசுகிறீர்கள். நான் சொல்ல வந்ததை மறந்து விடுமாறு செய்யாதீர்கள்'' என்று பொய்க் கோபம் கொண்ட குந்தவை, ''இளவல் அருண்மொழியின் சிவ பக்தியைக் - கலை உணர்வை - நான் வளர்த்தேன். ஆனால், நடனக் கலை ஈடுபாட்டை நான் வளர்க்கவில்லை. சோழ மண்ணின் இயற்கையான கலைப் புலமை அவரிடம் குடி கொண்டிருந்தது. அந்த முல்லைத் தீவுப் பெண் அந்தக் கலையில் அவரை மேலும் ஈடுபடச் செய்தாள்'' என்று கூறிவரும்போது வல்லவரையர் குறுக்கிட்டு, ''யார்? இன்பவல்லியைச் சொல்கிறாயா?'' என்று கேட்டவுடன் குந்தவ்வை தொடர்ந்து, ''ஆமாம்; அவருடைய அபிமான வல்லி - இன்பவல்லி - அவர் உள்ளத்தில் நடனக் கலை மீது தணியாத காதலை ஏற்படுத்தினாள்'' என்றாள்.

''இன்பவல்லியைச் சந்திக்க முடியாமல் உன் இளவல் இராசராசன் தவியாய்த் தவிப்பது எனக்குத் தெரியும்'' என்றார் வல்லவரையர்.

''தவிக்கட்டும், தவிக்கட்டும். ஐப்பசி சதயத் திருவிழாவில் இராஜ ராஜ விஜயம் நாட்டிய நாடகத்தில் நடிப்பதற்கு இன்பவல்லியைக் காணோமே என்று தவியாய்த் தவித்ததும் நான் அறிவேன்.''

''பாவம், இராசராசன்! அதிகாரிகளை நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பித் தேடச் சொல்லியிருக்கிறார். என்னிடம் பழைய கதைகளைக் கூறி வாய்விட்டுப் புலம்புவார். முல்லைத் தீவில் அவர் முதன் முதல் இன்பவல்லியைச் சந்தித்ததைப் பற்றி இத்துடன் எத்தனை முறை என்னிடம் கூறியிருக்கிறார் தெரியுமா?''

''நீங்கள் இப்பொழுது அவர் அருகிலேயே இருக்கிறீர்கள். உங்களிடம் கூறாமல் என்னிடமா கூறுவார்? என்னிடம் அவர் முல்லைத் தீவைப் பற்றியோ இன்பவல்லியைப் பற்றியோ, சோழ நாட்டிற்கு அவள் வந்ததைப் பற்றியோ எதும் பேசுவதில்லை.''

''எப்படிப் பேசுவார்? இந்த விஷயத்தில் நீ கொடிய உள்ளம் படைத்தவள். புனிதமான காதல் அரும்பை முளையிலேயே பறிக்க முற்பட்டாய். இப்படி நான் சொல்வதற்காக நீ என் மீது கோபப்பட மாட்டாய் என்பது தெரியும்.''

''நான் ஏன் கோபப்படப் போகிறேன், வல்லவரையரே? நான் என் குணத்தையெல்லாம் மெல்ல மெல்ல மாற்றிக் கொண்டு வருகிறேன். தஞ்சையும் பழையாறையும் எனக்குப் புளித்து விட்டன. நமது ஊருக்கு - நமது நாட்டிற்குப் போக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு விட்டது.

''ஆசை!'' என்று அழுத்தமாகக் கூறி வல்லவரையர் குந்தவ்வையை நேருக்கு நேர் பார்த்துச் சிரித்தார். அதிலே ஏக்கமும் காதலும் கோபமும் குதூகலமும் விளையாட்டும் குறும்பும் ஒன்றுக்கொன்று மிஞ்சும் வகையில் பின்னிக் கிடந்தன.

''ஆகா... என் நீண்ட நாள் எண்ணம் நிறைவேறப் போகிறது. எண்ணம் என்றுதான் சொன்னேன். ஆசை என்று சொல்லவில்லை. எனக்கும் போர், யுத்தம், படையெடுப்பு என்று சலிப்பு ஏற்பட்டு விட்டது. வல்லத்திற்குச் சென்று புதிய மாளிகை கட்டி, புதுக் குடித்தனம் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் உதித்துவிட்டது. நான் இனி வாளைத் தொடப் போவதில்லை. பிள்ளையார் சந்நிதியில்...'' என்று மேலும் கூறத் தொடங்கினார்.

அவர் வாயைத் தன் கரத்தால் பொத்தி, ''இன்று இந்த இடத்தில் சபதம் ஏதும் செய்துவிடப் போகிறீர்கள். நமது எண்ணங்களை நிறைவேற்ற சில காலம் பிடிக்கும். அதற்குள் மிக மிக முக்கியமான செயல் காத்திருக்கிறது. நான் அதை நிறைவேற்றியாக வேண்டும்'' என்றாள்.

''புதிர் போல மறைபொருளாகப் பேசுகிறாய். அதென்னவென்று சொல்லக்கூடாதா?''

''உங்களிடம் சொன்னால், உடனே மதுரனிடம் சொல்லிவிட்டு மறு காரியம் பார்க்காவிட்டால் உங்கள் தலை வெடித்துவிடும்.''

''சத்தியம் செய்து கொடுக்கட்டுமா?''

''வேண்டாம், வேண்டாம். சமயம் வரும்பொழுது அந்தப் பரம ரகசியத்தை உங்களிடம் சொல்லிவிடுகிறேன். உங்கள் உதவி எனக்கு மிகவும் தேவை. அவ்வப்பொழுது எனக்கு உதவுவதாக சத்தியம் செய்து கொடுத்தால் போதும்.''



''முடியாது. மதுராந்தகனுக்கு எதிரான செயலுக்கு இப்பொழுது என் உதவியா? என்னவென்று இப்பொழுதே சொல்ல வேண்டும்.''

''ஐயோ! இதென்ன சிறுபிள்ளைபோல் பிடிவாதம்?''

''பிடிவாதத்தை உன்னிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன்'' என்று கூறும்போது இளவரசர் மதுராந்தகன் அடிவாரத்திலிருந்து படியேறி வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி கிடைத்தது.

''பார்த்தாயா! மதுரன் வந்து கொண்டிருக்கிறானாம். பிறகு நாம் இருவரும் சந்தித்துப் பேசவே நேரமிருக்காது குந்தவ்வை! அந்த ரகசியத்தைச் சொல்ல மாட்டாயா? காளைப் பருவத்தினனாய் தந்தையை விட ஒருபடி மேலோங்கி, வருங்காலத்தில் பெரும் புகழுடன் விளங்கப் போகும் மதுராந்தகனைப் பற்றிய அந்த ரகசியத்தைச் சொல்ல மாட்டாயா?'' - வந்தியத்தேவன் பரபரப்புடன் கேட்கும்பொழுது குந்தவ்வை அவர் முகத்தைப் பார்த்தவாறு ரசித்துக் கொண்டிருந்தாள்.

''நான் உள்ளத்தில் எழுந்துள்ள ஆவலையும் பரபரப்பையும் அடக்க முடியாமல் கேட்கிறேன். நீ குமரி போல் விளையாடுகிறாய்'' - வந்தியத்தேவனுக்குச் சற்றுக் கோபமே வந்தது.

குந்தவ்வை கலகலவென்று நகைத்து, ''அப்படியா! வல்லவரையர் கோபப்பட்டு இப்பொழுதுதான் பார்க்கிறேன். போர்க்களத்தில் எழும் கோபத்திற்கும், சினத்திற்கும், சீற்றத்திற்கும் இப்பொழுது எழும் கோபத்திற்கும் உள்ள வித்தியாசத்தை இப்பொழுதுதான் உணர்கிறேன்'' என்றாள்.

வல்லவரையர் எதுவும் பேசவில்லை. ''சரி, சரி. நமது அடுத்த திட்டம் என்ன? சொல்லிவிடு. தஞ்சையில் கொண்டாடப்படவிருக்கும் திருவாதிரைத் திருநாளுக்குப் போகப் போகிறாயா? அல்லது என்னுடன் பிரம்மதேயத்திற்கு வரப் போகிறாயா?'' என்று கேட்கும்பொழுது அதில் கண்டிப்புக் கலந்து இருப்பதாக குந்தவ்வைக்குப் புலப்பட்டது.

'ஓ! என் செல்வன் மதுராந்தகன் பிறந்த நாளான திருவாதிரைத் திருநட்சத்திரத் திருநாளுக்குப் போக வேண்டும் என்றும் தோன்றுகிறது. ஊருக்கே போய் விடலாம் என்றும் தோன்றுகிறது. நான் போகாவிடில் அவள் - அவள் வந்து நடனமாடுவாள். உம். கூடாது, கூடாது. அவள் வரக்கூடாது. நான் வர விட மாட்டேன்' இளைய

பிராட்டி உணர்ச்சிவசப்பட்டுத் தனக்குத்தானே கோபமாகப் பேசுவது போல் வல்லவரையருக்குத் தோன்றியது.

''குந்தவ்வை, குந்தவ்வை! உனக்கு என்ன நேர்ந்து விட்டது?'' என்று வல்லவரையர் அவள் தோள்களை மெல்ல அணைத்தவாறு கேட்டார்.

அப்படியே சிறிது நேரம் அவருடைய அணைப்பில் இருந்து விடக் கூடாதா என்று நினைக்கும்போது இளையபிராட்டியின் கண்கள் கலங்கின.

''வல்லவரையரே! உங்களிடம் கூறாமல் வேறு யாரிடம் என் மனத்திலுள்ள அந்த ரகசியத்தை சொல்லி உதவி கேட்பேன்? ஆனால், சில நாள்கள் பொறுத்திருக்க வேண்டும்'' என்று கூறும்போது தொலைவில் இராசராசனின் திருமகன் இளவரசர் மதுராந்தகன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''என் செல்வன் மதுராந்தகன் நடந்து வரும் அழகை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இப்படியேதான் இன்று சோழ சக்ரவர்த்தியாகத் திகழும் இராசராசனும் குமரப் பருவத்தில் காட்சியளிப்பான். அழகுத் திருமகன் அவன். அங்க அவயவங்களை அளந்து எழில் கூட்டியது போன்ற வனப்பு. திருமாலின் கரங்களைப் போல் அவனது இரு கரங்களும் நீண்டிருக்கும். அவனது செங்கைகளில் சங்கு, சக்கரம் போன்ற இரு ரேகைகள்! அவன் கம்பீரமாக நடந்து வருவான். அகன்ற விழிகளுடன் நோக்குவான். நீண்ட கூர்மையான நாசியும், செவ்விதழ்களும், அகன்ற தோள்களும் திருமாலைப் போலவே காட்சியளிப்பதாகப் புலவர்கள் வர்ணிப்பார்கள். இப்போது தந்தையைப் போலவே மதுராந்தகன் விளங்குகிறான். ஆகா! இந்த எழில் வடிவத்தைக் கண்டு மோகிக்காத பெண்கள் இருப்பார்களா? அதனால்தான் அந்த நடனப் பெண் மதுராந்தகனுக்கு வலை வீசி விட்டாள். கூடாது, கூடாது. அப்படி நடக்க விடக் கூடாது'' என்று குந்தவ்வை முணுமுணுத்தது வல்லவரையர் செவிகளில் விழாமலில்லை.

''என்ன சொல்கிறாய் தேவி? மதுராந்தகன் மீது ஒரு நடனப் பெண் காதல் கொண்டிருக்கிறாளா? அதில் என்ன தவறு? மதுரனுக்கும் அவளைப் பிடித்திருந்தால் திருமணத்தை முடித்து விடுவோம். அதற்கு நீ ஏன் குறுக்கே நிற்கிறாய்! இளவரசனை ஒரு சாதாரணக் குடிமகள் காதலிக்கக் கூடாதா? என்னை நீ விரும்பியபோது நான் ஒரு



சாதாரண வீரன்தானே! நமது காதலுக்கு யாராவது தடை விதித்தார்களா? குறுக்கே நின்றார்களா? ஒரு சாதாரணக் குடிமகனான நான் சிறையிலிருந்து விடுதலை அடைந்து வெளிவரும் வரை என்னை மணக்க நீ காத்திருக்கவில்லையா?'' - வல்லவரையர் குந்தவ்வையைச் சமாதானப்படுத்த முயன்றார்.

''இல்லை, இல்லை. இதில் குடிமகள் - இளவரசன் பிரச்னை இல்லை. அதற்கும் மேலாக ஒன்று. அது பரம ரகசியம். இப்பொழுது சொல்ல மாட்டேன்'' என்றாள்.

## 2. யார் அந்தப் பூங்கொடி?

''இளவரசர் மதுராந்தக சோழ தேவர் வாழ்க, வாழ்க!'' என்ற வாழ்த்தொலி, மதுராந்தகன் வருகைக்குக் கட்டியம் கூறியது. அந்த ஒலி கீழே இருந்து வந்தது.

வல்லவரையரும் குந்தவ்வை பிராட்டியும் மெல்ல எழுந்து நுழைவாயில் அருகே சென்றனர். பிராட்டியாரின் மெய்க்காவல் வீரர்கள் எழுந்து அடக்கவொடுக்கமாக மரியாதையைப் புலப்படுத்தி வரிசையாக, நிமிர்ந்த தோள்களுடன் நின்றனர்.

மாலைக் கதிரவன் முதிரத் தொடங்கும் வேளை. கன்னலாய்த் தென்றல் வீசினாலும் காற்றில் சற்றுக் கனலும் கலக்கத் தொடங்கியது. மலையடிவாரக் கோயிலில் எழும் மேள ஓசை உச்சி மலைக்கும் எட்ட முயன்றது. வளர்ந்திருந்த வேப்ப மரத்திலிருந்து ஒரு கிளி ஜிவ்வென்று பறந்து பிள்ளையார் சந்நிதிக்குள் ஓடி மறைந்தது.

பிள்ளையாரைக் கும்பிட வந்தவர்கள், இளவரசர் வருகையை அறிந்ததும் சற்று ஒதுக்குப்புறமாக நின்றனர்.

''நாம் சாமி கும்பிட வந்த வேளை மிக நல்ல வேளை. இளவரசரைக் கண்டு களிக்கும் பேறு பெற்றோம்'' என்று ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

மதுராந்தகன் இன்னும் அங்கு வந்து சேரவில்லை.

இளையபிராட்டியின் சிந்தை சற்று எங்கோ நிலைத்து நின்றது.

'ஜல் ஜல்' என்ற சதங்கை ஒலி. குந்தவ்வை விழிகள் நான்கு பக்கமும் எதையோ தேடின. சதங்கை ஒலி வரும் இடத்தைக் காண உடனே செல்ல வேண்டும் என்ற பரபரப்பு மிகுந்தது.

''என்ன பார்க்கிறாய் தேவி?'' என்ற வல்லவரையர் குந்தவ்வையின் மன நிலையை உணர்ந்து கொண்டார்.

''ஒன்றுமில்லை'' என்று கூறிய பிராட்டியின் விழிகள் மீண்டும் பல பக்கங்களிலும் தாவின.

''உனது அருமை மதுரன் வந்தால் எங்கே உட்காருவான் என்று இடம் தேடுகிறாயா?'' என்று வல்லவரையர் குந்தவ்வையிடமிருந்து மறுமொழியை வரவழைக்கக் கேட்டார்.

''அதோ, அதோ கேட்டீர்களா அந்த ஒலியை?'' என்று இளையபிராட்டியார் குந்தவ்வை தேவியார் வல்லவரையரைப் பார்த்துக் கூறினாள்.

வல்லவரையர் மெல்ல நகைத்தவாறு, ''தேவி! உனக்கு எப்பொழுதும் சதங்கை ஒலி; நடனத் தோற்றங்கள்; பதம் பாடும் நினைவு. மதுரனின் பிறந்தநாள் விழாவில் நடத்தவிருக்கும் நடன நிகழ்ச்சியைப் பற்றியே நினைவு; சிந்தனை. அதனால் வீசும் காற்றில் மிதந்து வருவனவெல்லாம் சதங்கை ஒலியாகவும் மத்தள முழக்கமாகவும் குழலோசையாகவும் வீணையின் நாதமாகவும் உன் செவிகளில் விழுகின்றன'' என்றார்.

குந்தவ்வை கடுமையாக வல்லவரையரை நோக்கி, ''உங்கள் செவிகளில் விழவில்லையா?'' என்று கேட்டாள்.

வல்லவரையருக்குச் சதங்கை ஒலி மெல்லக் கேட்பது போல் தோன்றியது.

''ஆமாம். கோயிலில் நடனமிடும் பெண்ணின் பாதச் சதங்கை எழுப்பும் ஓசையாக இருக்கலாம். அதனால் என்ன இப்பொழுது?'' என்று வல்லவரையர் தமக்கு அக்கறை இல்லாதவர் போல் பேசினார்.

அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இளையபிராட்டி பரபரப்புடன் அங்கிருந்து படிக்கட்டுகள் வழியே கீழே விரைந்தாள்.

உச்சிப் பிள்ளையார் கோயிலை அடையும் மலைப் பாதையில், பல ஆண்டுகளுக்கு முன்பு பல்லவ மன்னன் மகேந்திரவர்மன்



அமைத்த குடைவரைக் கோயில் இருந்தது. அங்கே புடைச் சிற்பமாகச் சிவபெருமானின் வடிவம் கல்லிலே வடிக்கப்பட்டிருந்தது. பல்லவ மண்டபம் என்று அதை ஊரார் அழைத்தார்கள்.

இளையபிராட்டி அந்த இடம் நோக்கி விரைந்தாள்.

இளவரசர் மதுரனின் மெய்க் காவலர்கள் சற்று ஒதுக்குப்புறமாக மண்டபத்துக்கு வெளியே நின்றிருந்தனர். மண்டபத்துக்குள்ளே யாரோ பேசும் குரல் கேட்டது.

குந்தவ்வை மண்டபத்துக்குச் செல்லாமல் வெளியே பாறையின் ஓரமாக மறைவாக நின்று கொண்டிருந்தாள்.

பாறையைக் குடைந்து இடையே தூண்களின்றிச் செதுக்கப்பட்டிருந்த அந்த மண்டபத்தில் சிவபெருமானின் கம்பீரமான தோற்றம் புடைச் சிற்பமாகத் திகழ்ந்தது.

மதுரன் அவற்றை ஆவலுடன் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மற்றும் ஒரு குரல் கேட்டது. குயில்கள் கூடி இசைக்கின்றனவோ? குந்தவ்வை கூர்ந்து கேட்டாள். சதங்கையின் ஒலி! இனிய பேச்சுக் குரலுக்கிடையே சதங்கை ஒலி! தான் சொல்வதற்கு விளக்கம் கூறுவதுபோல் அந்த ஓசை திகழ்ந்தது.

சதங்கையின் ஒலி அந்த மண்டபத்திலின்றுதான் வருகிறது. மெல்லிய சிரிப்பொலி சதங்கை ஒலியுடன் சரிசமமாகக் கைகோத்துக் கேட்கிறது.

இளையபிராட்டி அந்தக் குயிலோசையைக் கூர்ந்து கேட்டாள்.

சிவபெருமானின் நடனத் தோற்றங்களை விளக்குகிறது அந்தக் கிள்ளைமொழி.

'ஓகோ! ஆகா!' என்ற குரல் இடையிடையே எழுகிறது. அது மதுரனின் குரல். திண்தோள் வீரனின் குரல் சிம்மக் குரலாகவும் இருக்கும். சிலபோது களிறின் பிளிறலும் உண்டு. வேங்கையின் உறுமலும் எழும். இப்போது கேட்டதுபோல் மதுரமான குரலும் உண்டு. 'யாழின் இசைக்கிணைந்த மெல்லிய சுருதி அங்கே எழுகின்றதோ?' என்று குந்தவ்வை எண்ணினாள். ஒரு கணம்தான்.

மறுகணம் அவள் உள்ளத்தில் ஒருவித வேகம் - யார் அந்தக் குரலுக்குடையவர்கள்?

ஓ! அந்தப் பெண். நாட்டியப் பெண். அவள் இங்கு எங்கே வந்தாள்? மதுரனுடன் கூடவே, மலையடிவாரத்திலின்று படிக்கட்டு களில் ஏறி வந்தாளா? மதுரன் அவளுடன் பேசிக் கொண்டு வந்தானா? தாம் ஓர் இளவரசன் எனும் உயர்நிலையை மறந்து ஒரு சாதாரணக் குடிமகளுடன் மதுரன் உரையாடி வந்தானா?

'உச்சிப் பிள்ளையார் கோயிலுக்கு வரப் போகிறேன்; நீயும் வா' என்று அவளிடம் சொல்லியிருப்பானோ? அல்லது அவன் வரவை எதிர்பார்த்து அந்தப் பெண் மலையடிவாரத்தில் காத்திருந்திருப் பாளோ? கட்டுக் காவலை மீறி அவள் மதுரனை நெருங்கியது எப்படி?

படிக்கட்டுகளில் ஏறுவது எவ்வளவு கடினம்? எவ்வாறு இருவரும் ஏறியிருப்பர்? காளை போன்ற மதுரன் துள்ளிக் குதித்துத் தாவிப் படிக்கட்டுகளில் ஒரே மூச்சில் கடந்திருப்பான். அவனுக்கு இணையாக அவளும் ஏறியிருப்பாளோ? இடையே அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் கைத்தாங்கலாக கரங்களை இணைத்துப் பிடித்துக் கொண்டு ஏறியிருப்பார்களோ? அவள் தோள்களை அவன் அணைத்து அழைத்து வந்திருக்கலாம்.

'ஓ! கூடாது. அப்படி நடந்திருக்காது. நடந்திருக்கக்கூடாது.

மதுரா! நீ மிகப் பெரியவன். உன் பதவி மிகப் பெரியது. உன்னைப் பற்றி நீ உணர்ந்திருக்க மாட்டாய். சோழ நாட்டின் இணையற்ற இளவரசன் நீ. சோழ நாட்டின் வருங்காலச் சக்ரவர்த்தி நீ. பரகேசரி என்ற பட்டம் புனைந்து அரியணை ஏறப்போகும் நீ என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய்?

நீ யாரைச் சந்திக்கக்கூடாது என்று நான் நினைத்தேனோ, அவளை நீ சந்தித்து விட்டாய். உங்கள் இருவருர்கும் இந்தச் சந்திப்பை - மலைக்குகை மண்டபத்தில் ஏற்படுத்தத் - தூது சென்றது யார்? எனக்குத் தெரியாமல் இந்த நாட்டில் எதிர்பாராத சம்பவங்கள் நடை பெறுகின்றனவா?'

குந்தவ்வையின் சிந்தனையோட்டத்துடன் அவள் செவிகளில் மண்டபத்துப் பேச்சொலியும் ஓரளவு விழுந்து கொண்டிருந்தது. தெளிவாக இல்லாவிடினும், அந்தச் சொல்லாடலில், சில வார்த்தைகள் காதில் விழுந்தன.

மதுரன் அங்குள்ள சிற்பங்களைப் பற்றிக் கேட்டான்.

'மதுரா! நீ முறையாக கற்றறிந்தவனாயிற்றே? ஓர் இளம் பெண் ணிடமிருந்துதான் நீ வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டுமா?



நான் முன்பு ஒருமுறை உனக்குச் சொல்லியிருந்தது நினை வில்லையா மதுரா! 'மலைக் கோட்டைப் பிள்ளையாரைத் தரிசிக்கச் செல்லும் மலைப் பாதையில் கம்பீரமாகத் திகழும் சிவபெருமானை யும் கண்டு வணங்கலாம்' என்று சொல்லியிருக்கிறேனே!

'சிவபெருமான் கோயிலா?' என்று நீ கேட்டது நினைவில்லையா? 'அத்தை' என்று அன்புடன் அழைத்து, 'அந்தக் கோயிலைக் கட்டியது யார்?' என்று நீ கேட்டதை மறந்து விட்டாயா? 'நமது நாட்டிற்குள் நுழைந்து பல்லவ அரசர் இப்படியொரு குகைக் கோயிலை எவ்வாறு அமைத்தார்?' என்று நீ சந்தேகம் கேட்டாய்.

நான் கூறிய பழம் வரலாற்றை, விளக்கத்தை நீ மிகக் கவனமாக அன்று கேட்டதை மறந்து விட்டாயா? அந்த நாளில் பல்லவ அரசர் களுக்குச் சோழ நாடு அடங்கியிருந்ததையும் உன் பாட்டனாருக்குப் பாட்டனார் ஆதித்த சோழர், பல்லவ அரசரை வென்று சோழ அரசை நிலை நாட்டியதையும் பற்றிக் கதை கதையாக நான் கூறியதும், நீ கதை கேட்பது போல் 'உம்' கொட்டி ஆர்வத்துடன் கேட்டதும், உன் மனத்துள் ஓர் இலட்சியக் கனவு உருவாவதை உன் முகமும் ஒளி வீசும் கண்களும் புலப்படுத்தியவை கண்டு மெய்சிலிர்த்து நான் உன்னை ஆரத் தழுவி, முதுகு தடவி உச்சி மோந்து, 'கண்ணே மதுரா! உன்னுடைய காலத்தில் சோழ நாட்டின் புலிக் கொடி திக்கெட்டும் பறக்க வேண்டும்' என்று ஆர்வத்துடன் நான் சொல்லியதையும் கேட்டு, நீ எழுந்து நின்று கை உயர்த்தி, 'அத்தை! நான் வடக்கு, மேற்கு, கிழக்குத் திக்குகளில் புலிக் கொடி நாட்டுவேன்' என்று வீர முழக்கம் செய்ததும் உனக்கு நினைவில்லையா?

'மலைக் கோட்டை பல்லவக் கோயிலைக் காண வேண்டும்' என்று அன்று நீ கூறியதும், 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று நான் கூறியதும் உனக்கு மறந்திருக்க முடியாது.

'அந்தப் பல்லவ மண்டபத்தை ஒரு கோயில் என்று கூற முடியாது; சிற்பி செதுக்கியுள்ள கலை மண்டபம் என்று அழைக்கலாம்' என்று நான் கூறியபோது, நீ உற்சாகத்துடன் 'நமது நாட்டிலும் கலைக் கூடங்கள், மண்டபங்கள் அமைக்க வேண்டும்' என்று உன் ஆசையை வெளிப்படுத்தியதை நான் மறக்கவில்லையடா மதுரா!

அப்பொழுது நீ பதினைந்து வயதுப் பாலகன். பிறகு, பிறகு மலை உச்சிப் பிள்ளையாரைத் தரிசிக்க எனக்கு வாய்ப்பு ஏற்பட வில்லை. நீயும் போயிருக்க முடியாது. உனக்குப் போர்க்களங்கள்

காத்திருந்தன. எனக்கும் எவ்வளவோ பிரச்னைகள்' - குந்தவ்வையின் மனத்தில் பழைய சம்பவங்கள் நிழலாடியதுடன், மண்டபத்தில் எழுந்த பேச்சொலியும் கேட்டவாறிருந்தன. கடந்த கால நிகழ்ச்சிகளின் இனிய நினைவுகள் மண்டபத்தில் எழுந்த சிரிப்பொலி, பேச்சொலி, சதங்கை ஒலியை மறைக்க முயன்றன.

குந்தவ்வையிடமிருந்த அமைதி பறந்தோடி விட்டது. அப்பொழுதே அங்கு சென்று - குந்தவ்வை பாறை மறைவினின்று ஓரடி எடுத்து மண்டபத்தருகே செல்ல முயன்றபோது - அவள் - அந்த நாட்டிய மங்கை - திரும்பிப் பார்த்து விட்டாள்.

அவள் விழிகளும் இளையபிராட்டியின் விழிகளும் ஒரு கணம் சந்தித்தன. மின்னலென ஏற்பட்ட அந்தப் பார்வை ஆயிரம் செய்திகளைப் பேசின.

'பூங்கொடி' என்று அவளை அழைக்க குந்தவ்வை முற்பட்டாள். ஆனால், 'மதுரா' என்றுதான் வார்த்தைகள் அவளிடமிருந்து வந்தன.

மதுரனைத்தான் அவள் பெயரிட்டு உரிமையுடன் அழைக்கலாம். அவளை - அந்தப் புதியவளை - நாட்டியப் பெண்ணை அழைக்கலாமா?

ஏன் அழைக்கக்கூடாது? சோழ நாட்டில் திருக்காளத்திமலை முதல் கொடும்பாளூர் வேளிர் நாட்டு எல்லை வரையிலும் யாரை வேண்டுமானாலும் அழைக்கலாம். ஏன்? பாண்டிய நாட்டு எல்லையும் சோழர்களின் ஆணைக்கு அடிபணிந்துதானே இருக்கிறது. அதனால் குமரி முனை வரை உள்ள யாரையும் அழைக்கலாம். மலை நாட்டு எல்லை வரை அழைக்கலாம். மலை நாடு சோழ நாட்டிற்கு அடிபணிந்து விட்டதே! இளையபிராட்டி குரல் அங்கெல்லாம் எதிரொலிக்கும்.

பாதச் சதங்கை குலுங்கப் பூங்கொடி ஒரே கணத்தில் தாவி அங்கிருந்து விரைந்து ஓடினாள். படிக்கட்டுகளில் இறங்கி ஓடினாள். மான் ஒன்று வேடனுக்கு அஞ்சித் துள்ளி விரைவது போன்ற பரபரப்பு அந்த ஓட்டத்தில் இருந்தது.

அவள் ஏன் ஓடியிருக்க வேண்டும்? சோழ நாட்டுப் பேரரசரின் தமக்கையாரை அவள் நேருக்கு நேர் சந்தித்திருக்கக்கூடாதா?

சோழ நாட்டு இளவரசருடன் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தது போல் சோழ நாட்டு இளையபிராட்டியுடன் சிறிது



நேரம் நின்று பேசியிருக்கக்கூடாதா? அப்படிப் பேச அவள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

பல்லவ மண்டபத்தினின்று இளவரசர் மதுராந்தகன், இளையபிராட்டி குந்தவ்வை தேவியாரைப் பார்த்தான்.

''இதோ வந்து விட்டேன் அத்தை!'' என்று அவன் கூறியது கன்றின் குரல் போல் ஒலித்தது.

''கூப்பிட்டீர்களா அத்தை? நான் வந்து கொண்டே இருக்கிறேனே'' என்று குதித்துக் கொண்டே மதுராந்தகன் குந்தவ்வை அருகில் வந்தான்.

''வல்லவரையர் எங்கே அத்தை?'' என்று மதுரன் கேட்டான். இளையபிராட்டி பேசாமல் மலை உச்சியை நோக்கிக் கையைக் காட்டினாள்.

''நீங்கள் முன்பே வந்து விட்டீர்களா?'' என்ற கேள்விக்குத் தலையை மட்டும் அசைத்தாள் குந்தவ்வை.

குழந்தை மதுரன், செல்வன் மதுரன், குமரன் மதுரன் என்றெல்லாம் ஆசையுடன் அழைக்கும் மதுராந்தகனுடன் பல நாழிகை நேரம் பேசிக் கொண்டிருக்க ஆசை மிகுந்த குந்தவ்வை இப்பொழுது மௌனம் சாதித்தாள்.

அவள் உடல் இலேசாக அதிர்ந்தது. உள்ளத்துக்குள்ளே பொங்கி நிற்கும் ஆத்திரம் எந்தக் கணமும் பொங்கிப் பயலாம்.

மதுரனுடன் படிக்கட்டுகளை அளந்து அளந்து மீண்டும் மலைக் கோயிலை நோக்கி ஏறினாள்.

மதுரன் ஏதேதோ பேசி வந்தான். இளையபிராட்டியின் செவிகளில் அவை ஏதும் விழவில்லை.

வல்லவரையர் மதுரனையும் இளையபிராட்டியையும் வரவேற்றார்.

''இளவரசர் அவர்களே! வருக! வருக!'' என்று முகமலர்ச்சியுடன் வரவேற்றார்.

''சற்று முன்பு இளவரசர் வருகிறார் என்ற வாழ்த்தொலி கேட்டது. ஆனால், உன்னை இவ்வளவு நேரமாகக் காணவில்லையே... உன்னை வரவேற்கச் சென்ற இளையபிராட்டியாரும் வரக் காணவில்லையே என்று எதிர்பார்த்துக் காத்து நிற்கிறேன்'' என்று வல்லவரையர் கூறியது கேட்டு மதுரன் சிரித்தான்.

''வரும் வழியில் ஏன் தாமதம் என்று அவனைக் கேளுங்கள் வல்லவரையரே!'' என்று இளையபிராட்டி சீறினாள். அவளுடைய முகம் சிவந்தது. இதழ்கள் துடித்தன.

மதுரன் மீண்டும் சிரித்தான். வல்லவரையரும் சிரித்தார்.

''உன் அத்தைக்கு இன்று ஏனோ கோபம். உன்னைக் காண்பதற்காக நந்திபுரத்திலிருந்து வந்து இங்கே காத்திருக்கிறாள். உன் பிறந்த நாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று திட்டமிட்டு இவ்வளவு நேரம் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். உன் பிறந்த நாளன்று தஞ்சை மாளிகையில் உன் அத்தையின் நடன நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறப் போகிறது என்று உனக்குத் தெரியுமா?'' வல்லவரையர் இளையபிராட்டியாரின் கோபத்தைச் சற்று மாற்ற முயன்றார்.

''ஓ அத்தை! நான் பாக்கியசாலி. என் பிறந்த நாளன்று நாட்டிய நிகழ்ச்சியை நீங்கள் அமைத்துத் தரப் போகிறீர்களா?'' என்று ஆவலுடன் மதுரன் கேட்டான்.

வந்தியத்தேவன் மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''நானும்கூடப் பாக்கியச்சாலிதான். உன் அத்தையின் நடனத்தை நான் இதுவரை பார்த்ததில்லை'' என்றார்.

குந்தவ்வை அவர் பக்கம் திரும்பி, ''தங்களுக்கு வர வர மறதி அதிகமாகி வருகிறது. தஞ்சை மாளிகையில் நான் என் இளவலின் சதயத் திருநாளன்று நடனமாடவில்லையா?'' என்று கேட்டபோது, குரலில் கோபமும், சற்று எரிச்சலும் மிகுந்திருந்தன.

''ஆமாம். அந்த இளமைக் கால நிகழ்ச்சிகளை நினைத்தாலே இனிக்கிறது. அப்பொழுது நீ ஆடும்போது நான் மெய்மறந்து போனேன்'' என்றார் வல்லவரையர், புகழ்வதால் இளையபிராட்டியின் கோபத்தைத் தணித்துச் சுற்றுச்சூழலை மகிழ்ச்சியாக்கலாம் என்று.

''ஓகோ! இப்பொழுது ஆடினால் நன்றாக இருக்காது என்கிறீர்களா? சற்று முன்புதான் சொன்னீர்கள், என்னிடம் நாட்டியக் கலை பயில வேண்டும் என்று. அதற்குள் மறதியா அல்லது கசந்து விட்டதா?''

இளையபிராட்டிக்கு ஏற்பட்டுள்ள கோபத்தின் காரணம் புரியாமல் மதுரனும், வல்லவரையரும் திகைத்தனர்.



மதுரன் அமைதியை விலக்கி, ''அத்தை அவர்களே! தங்களுக்குக் கோபம் வந்து இப்போதுதான் பார்க்கிறேன். அந்தக் கோபத்துக்குக் காரணம் யார் என நான் அறியலாமா?''

குந்தவ்வை அவனைப் பாராமலேயே, ''பல்லவர் மண்டபத்தில் உன் எதிரே அபிநயித்து நின்றாளே, அந்தப் பெண் யார்?'' என்றாள்.

''அவள் ஓர் ஆடலழகி'' - இதழ்களில் குறும்புப் புன்னகையை உதிர்த்து மதுரன் கூறினான்.

''அவள் ஆடவல்லாள் என்பது தெரியும். உன் கண்களுக்கு அவள் மகா அழகி என்பதையும் நீ சொல்லி விட்டாய். அவள் யார் என்று கேட்கிறேன். சோழ நாட்டு இளவரசர் என்ற மரியாதை இல்லாமல் உன்னுடன் சரிசமமாக படியேறி வரும் துணிவு அவளுக்கு எப்படி வந்தது என்று கேட்கிறேன். நேரே என்னைப் பார்க்க வராமல், மண்டபத்துக்குள் ஏன் நுழைந்தாள் என்று கேட்கிறேன். கங்கையை அணிந்த சிவபெருமான் சிற்பத்தின் நயத்தை விளக்குமாறு என்னிடம் கேட்காமல் அந்த ஆடலழகியை நீ ஏன் கேட்டாய் என்று நான் உன்னைக் கேட்கிறேன். யார் அனுமதியைப் பெற்று அவள் அந்த மண்டபத்தில் உன் எதிரே ஆடினாள் என்று கேட்கிறேன்.''

குந்தவ்வை தேவியார் குரலில் கொப்பளித்த அந்தச் சீற்றத்துடன் கூடிய சொற்களைக் கேட்டு வல்லவரையரும் மதுராந்தகனும் திடுக்கிட்டனர். திகைத்தனர்.

'பல்லவர் குடைவரை மண்டபத்துக்குள் சென்று கங்கைக்கு அருள்புரியும் மூர்த்திச் சிற்பத்தைப் பார்க்க இளவரசர் மதுராந்தகனுக்கு உரிமை இல்லையா? அந்தச் சிற்ப அற்புதத்தை விளக்க வந்த இளமங்கையிடம் விவரம் அறிந்து கொள்ளச் சோழ நாட்டின் இளவரசராக முடிசூட இருப்பவருக்கு உரிமை கிடையாதா?' இவ்வாறு வல்லவரையர் வந்தியத்தேவன் கேட்க நினைத்தார்.

'ஒரு ரகசியம் இருக்கிறது என்று இளையபிராட்டி சொல்லியிருக்கிறாள். அந்த ரகசியம் இந்த இளமங்கையைப் பற்றியதாக இருக்குமோ?' - வந்தியத்தேவன் எண்ணினார்.

குந்தவ்வையின் குற்றச்சாட்டைக் கேட்டு மதுராந்தகன் முகம் வாடவில்லை. மேலும் மலர்ந்த முகத்துடன், ''ஓ! தங்கள் கோபத்துக்கு அதுதான் காரணமா? அந்த நாட்டியப் பெண்ணைப் பற்றி நானே தங்களிடம் கேட்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன்.

அத்தை! அவள் யார்? தஞ்சை மாளிகையில் ஓரிரு தடவை அவளைச் சந்தித்திருக்கிறேன். இன்று, மலைக்கோட்டைப் படிக்கட்டுகளில் ஏறி வந்து கொண்டிருந்தபோது, வழியில் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தவள் என்னைக் கண்டவுடன் வணங்கினாள். தஞ்சை மாளிகையில் முன்பே பார்த்திருந்ததால் நான் அவளைப் பார்த்து முறுவலித்தேன். அவள் என்னுடன் வந்தாள். நான் தடுக்கவில்லை. வழியே குடைவரை மண்டபத்தைப் பார்த்தேன். முன்பு நீங்கள் கூறியிருந்தது நினைவுக்கு வந்தது. உள்ளே நுழைந்தேன். அவளும் வந்தாள். அவளுக்குச் சகல கலைகளும் தெரிந்திருக்கின்றன. சிற்ப நயத்தை விளக்கினாள். அந்தச் சிற்பம் கூறும் கதையை அபிநயித்தாள். அவ்வளவுதான்.''

''போதும், போதும், நிறுத்து மதுரா! நான் உடனே அங்கே வந்துவிட்டேன். என்னைப் பார்த்தவுடன் அவள் ஆடுவதை நிறுத்தினாள். உடனே அங்கிருந்து ஓடினாள். என்னை அவள் சந்திக்க விரும்பவில்லை. அது ஏன் என்றுதான் கேட்கிறேன்'' - குந்தவ்வை கடினமான குரலுடன் கேட்டாள்.

''நானும் அதைத்தான் கேட்கிறேன். அவள் ஏன் உடனே ஓடிப் போய்விட்டாள்? இளையபிராட்டியின் கோபம் உச்ச நிலையை அடையும் வரை அவள் ஏன் அங்கே இருக்கவில்லை?'' - வல்லவரையர் கேட்டார். அதில் குத்தலும் குறும்புத்தனமும் மிகுந்திருந்தன.

குந்தவ்வை வல்லவரையர் பேச்சை லட்சியம் செய்யாமல், ''நீ ஒன்றும் அவளை அறிமுகப்படுத்த வேண்டாம். அவளை எனக்கு முன்பே தெரியும்'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

மதுராந்தகனும், வல்லவரையரும் திகைத்தனர். ''ஓ! உனக்கு அவளை முன்பே தெரியுமா? சோழ நாட்டில் இளையபிராட்டிக்குத் தெரியாமல் அணுவும் அசையாதே'' என்று வல்லவரையர் கூறவும்...

''அப்படி ஒரு காலம் இருந்தது. இப்போது காலம் மாறுகிறது'' என்று கூறிப் பெருமூச்சு விட்ட இளையபிராட்டியை நோக்கி வல்லவரையர்...

''சரி, சரி. இந்தச் சிறு சம்பவத்தைப் பற்றி பெரிதாக நினைத்துக் கவலைப்படாதே. பொழுது சாய்வதற்குள் கீழே இறங்கி விடுவோம். மதுரன் பிறந்த ஆதிரை நாள் வர இன்னும் சில நாள்கள் தாம் இருக்கின்றன. தஞ்சை மாநகரில் கோலாகலமாக விழா



கொண்டாட வேண்டாமா? இந்த ஆண்டு மதுரனும் நானும் சோழ நாட்டில் இருக்கிறோம். அடுத்த ஆண்டு இதே நாளில் எந்த நாட்டில் இருப்போமோ? எந்தப் போர்க்களத்தில் இருப்போமோ?'' என்றார்.

''குழந்தாய்! உன்னை மதுரா என்றழைப்பதா? இளவரசே என்றழைப்பதா? என்று எனக்குத் தெரியவில்லை. இளவரசே மதுராந்தகா! வல்லவரையர் சொல்வதுபோல் சற்று முன்பு நடந்தது சிறு சம்பவமன்று. நீ அந்தப் பெண்ணைச் சந்திக்கக் கூடாது. அவ்வளவுதான் நான் சொல்வேன்.''

தன்னை வளர்த்து ஆளாக்கிய தாய்க்கும் மேலான அத்தை குந்தவ்வை தேவியாரிடமிருந்து இந்தச் சொற்களை இளவரசன் மதுராந்தகன் எதிர்பார்க்கவில்லை.

'அவளைச் சந்திப்பதில் என்ன தவறு இருக்கிறது? இளைய பிராட்டியார் கடுமையாகக் கட்டளையிடுகிறாரே... ஏன்?'

அத்தையின் இந்தக் கட்டளையை ஏற்க முடியாது என்று அவனுடைய உள்மனம் கூறியது.

# 3. கற்சிலையும் பொற்சிலையும்

பூங்கொடி - படிக்கட்டுகளில் தாவிப் பாய்ந்து ஓடிவந்து அடிவாரத்திலுள்ள வீடொன்றின் முகப்பில் நின்று மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் நெஞ்சு விம்மித் தணிந்தது. பெருமூச்சும் படபடப்பும் அடங்குவதற்காக அந்த வீட்டுத் திண்ணையின் தூண் அருகே அமர்ந்தாள். அந்த வீடு மிகப் பெரியது. திண்ணை விசாலமானது. தூண்கள் நிமிர்ந்து அகன்று பளபளப்பாக இருந்தன.

தெருவிலிருந்து பார்ப்பவர்களுக்கு அவள் அங்கே அமர்ந்திருப்பது தெரியாது. ஆனால், அவளால் வீதியைப் பார்க்க முடியும். எதிரே உள்ள வீடுகளைப் பார்க்க முடியும். மலைக் கோயிலின் நுழைவாயிலைப் பார்க்க முடியும். அங்கு வருபவர்களையும், செல்பவர்களையும் பார்க்க முடியும்.

பாதச் சதங்கையை அவள் மெல்ல அவிழ்த்தாள். வீதியில் நடக்கும்போது இனி சதங்கை ஒலி எதற்கு? நெற்றியில் அரும்பிய வியர்வையை முன்றானையினால் துடைத்துக் கொண்டாள். கலைந்திருந்த கேசத்தைச் சரி செய்து கொண்டாள். அவள் உள்ளத்தில் சோர்வு ஏற்படவில்லை. ஏமாற்றம் என்றும் சொல்லி விட முடியாது.

ஆற்றிலே விழுந்து விட்ட கனியைப் போல் - மலரைப் பறிக்கும் சமயத்தில் பூங்காவின் உரிமையாளர் வந்து விட்டது போல் - பெருங்கூட்டத்தில் பிரிந்து போனவரை அடையாளம் காணத் தடை ஏற்பட்டுவிட்டது போல் - மண்டபத்து ஓவியத்தைக் காண முடியாமல் இருள் சூழ்ந்தது போல் - இளவரசரைச் சந்தித்தும் நினைத்ததைப் பேச முடியாத நிலை.

இளவரசர் உச்சிப் பிள்ளையார் கோயிலுக்கு அன்று வரப் போவதை அவள் அறிந்து கொண்டாள்.

பல்லவர் குடைவரை மண்டபம் அவர் கவனத்திலிருந்து தப்பாது; அங்கே அவர் கட்டாயம் வருவார்.

மண்டபத்திற்குள் நாம் இருப்போம். சிற்பத்தோடு சிற்பமாக இருப்போம். இளவரசர் அந்தப் பக்கமாகப் போகும்போது அந்தச் சிற்ப மண்டபத்தைக் காணாமல் இருக்க மாட்டார்.

மண்டபத்துக்குள் நுழையும் அவருக்கு அங்கிருக்கும் சிற்பத்தின் கதையை விளக்க ஒருவரும் இருக்க மாட்டார்கள். அந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்வோம். அவரைச் சந்திக்க அது நல்லதொரு வாய்ப்பு.

பூங்கொடி, மண்டபத்தின் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்தாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே மதுராந்தகன் அந்த மண்டபத்துக்குள் நுழைந்தான்.

''ஆகா... ஆகா...'' என்று மதுராந்தகன் தன்னையறியாமலே வியப்புற்றான். அந்தக் குடைவரை மண்டபத்துச் சிற்பத்தைக் கண்டா?

மதுராந்தகன் சுற்றுமுற்றும் பார்த்தான். மேலும் கீழும் பார்த்தான். கருவறையின் இருபுறமும் துவார பாலகர்கள் சிலைகள் கம்பீரமாக நிற்கின்றனவே... அவற்றைப் பார்த்தான்.



பூங்கொடி பொற்சிலை போல் நின்று கொண்டிருந்தாள். பூங்கொடியை இதற்கு முன்பு அவன் பார்த்திருக்கிறான். அவளுடைய இனிய முகம் ஒரே கணத்தில் விழி வழியே அவன் இதயத்துக்குள் பாய்ந்திருக்கிறது.

கற்சிலையை விட இந்தப் பேசும் பொற்சிலை அவன் கவனத்தைக் கவர்ந்தது. அவன் அவளையே ஒருகண் இமைக்காமல் நோக்கினான்.

''இதுவும் ஒரு சிலையோ?'' என்று குறும்பு இதழ்களில் மின்னக் கேட்டான்.

அவள் பேசவில்லை. பேச அவளுக்கு நா எழவில்லை. அச்சமும் நாணமும், கணத்தில் அவளைக் கணத்தில் கவ்விக் கொண்டன.

காவல் வீரர்கள் சற்றுத் தொலைவிலேயே இருந்தனர். கதிரொளி தன் பொற்கரங்களால் அந்த மண்டபத்தை அதிகம் அணைக்கவில்லை.

அவள் சிரித்தாள். குடத்தை நீரில் அமிழ்த்தும்போது எழும் ஓசை போல் அந்தச் சிரிப்பொலி இருந்தது. மதுராந்தகனுக்கு ஏதாவது பேச வேண்டும் போல் தோன்றியது.

அவளது வில் புருவமும், விழித் தாடகத்தில் துள்ளும் கயல்களும், தோள் பாரத்தால் துவண்டு விழும் இடையுடன் அவள் நிற்கும் தோற்றமும், பாதங்களின் அழகும்... இதென்ன சதங்கை அணிந்திருக்கிறாள்?

அவளுடைய சிரிப்பொலி அவனை மெல்லப் பேச வைத்தது.

''பெண்ணே! நீ நடனமாடுவாயா?''

மாவீரரான மதுராந்தகன் இந்தச் சொற்களை உருக்கச் சற்றுத் திணறினான் என்றே கூற வேண்டும்.

குறும்புத்தனத்தைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருந்த பூங்கொடி உடனே ஏதேதோ சொல்ல நினைத்தாள். வார்த்தைகள் துண்டு துண்டாய் வந்தன.

''ஓ!'' என்றாள். தலையை ஒயிலாக அசைத்தாள். இடுப்பில் கரங்களை வைத்துக் கொண்டாள்.

''இங்கு எதற்காக தனியே வந்து நிற்கிறாய்?''

''இங்கே உள்ள கங்காதர மூர்த்திக்குத் துணையாக!''

"என், கங்காதரனுக்கு வேறு துணையில்லையா?"

"இருக்கிறாள், தலைமேல். ஆனால், அந்தக் கர்வக்காரி கங்காதேவியிடம் சிவன் மயங்கி விடப் போகிறாரே, அதைத் தடுக்கத்தான்."

"ஆகா! கங்கைப் பெண் சிவனைச் சேர்வதைத் தடுத்து விட முடியுமா உன்னால்?"

"முயன்று பார்க்கிறேன்! என் பாதங்களுக்கு உள்ள வலிமை, பாதங்களுடன் கலந்து விட்ட சதங்கையின் திறமை இவற்றைக் கொண்டு சிவபெருமானின் சிந்தையைச் சிதற அடிக்காமல் என் பக்கம் திருப்புவேன்!"

மதுராந்தகன் சிலிர்த்துக் கொண்டான்; மெல்லச் சிரிக்கவும் செய்தான்.

"திறமையாகப் பேசுகிறாய். அவ்வளவு துணிவும் திறமையும் உனக்கு உண்டா?"

"உண்டு; நெளியும் என் மேனிக்கு உண்டு; சுழலும் விழிகளுக்கு உண்டு; துவளும் என் இடைக்கு உண்டு; தாவும் என் பாதங்களுக்கு உண்டு; தாளத்துக்கேற்ப ஒலிக்கும் என் சதங்கைகளுக்கும் திறமை உண்டு; வளையும் கரங்களில் கலகலக்கும் வளையல்களுக்கும் உண்டு."

"நன்றாகப் பேசுகிறாய், நாட்டிய மகளே!"

"நான் பூங்கொடி!"

"ஆமாம், உன் பெயரை முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன். பேச்சில் இசைக்குள்ள இனிமை இருக்கிறது. மென்மையும் இருக்கிறது."

"பேசுவதுடன் பாடவும் செய்வேன்."

"ஊம்..."

"பிறகு சிவபெருமான் திருவிளையாடல்களை ஆடிக் காட்டவும் செய்வேன்."

"அப்படியா! சிவபெருமான் திருவிளையாடல் புராணம் தெரியுமா?"

"தெரியும். இதிகாசமும் கற்றிருக்கிறேன்."

"இளம் வயதிலேயே இவ்வளவு தெரிந்து கொண்டாயா?"



"நடனக்கலை அறிய வேண்டுமானால் இசை தெரிய வேண்டும். இலக்கியம் அறிய வேண்டும். இறை உணர்வு வேண்டும்."

மதுராந்தகன் அவள் விழிகளை நேருக்கு நேர் நோக்கியபடி சிரித்தான். பிறகு, "இதோ நிற்கும் கங்காதர மூர்த்தியின் கதை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

பூங்கொடி உடனே மறுமொழி கூறவில்லை. அவள் தன் முன்றானையைச் சரி செய்து கொண்டாள். நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டாள்.

அவள் பாதங்கள் தரையில் தாளமிட்டன. கரங்கள் உயர்ந்தன. விழிகள் சுழன்றன. இதழ்கள் மெல்லப் பிரிந்தன.

அவள் செஞ்சடை ஈசனான மாறினாள். முடியில் சந்திரன் இருப்பதையும் தோள்களில் நாகாபரணம் அசைவதையும் சின்னஞ் சிறு வடிவினராக விளங்கும் பூதகணத்தின் மீது வலப்பாதம் வைக்கப் பட்டிருப்பதையும் இடக்கரம் இடுப்பில் அமைந்திருப்பதையும் வலக்கரம் படமெடுத்தாடும் பாம்பை ஏந்தியிருப்பதையும் மற்றொரு கரம் உயர்ந்திருப்பதையும் போல உருவகப்படுத்தினாள்.

எதிரேயுள்ள கங்காதர மூர்த்தியின் சிற்பத்தை விளக்க அவள் அபிநயம் புரிந்து காட்டுகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட மதுராந்தகன் பூங்கொடியைப் பார்த்துக் கேட்டான்:

"மௌன நாடகமிடுகிறாயே... அதன் பொருள் என்ன?"

அவன் அவ்வாறு கேட்டது அவளுடைய அசைவுக்குச் சற்று ஓய்வு கொடுப்பதற்காகவும் இருக்கலாம்.

கங்கையை ஏந்திய சிவபெருமானாகவே மாறியிருந்த பூங்கொடி, இதழோரம் மெல்லிய புன்னகையை நெளியவிட்டு, "உலகத்தை அழித்து விடுவேன் என்று கங்காதேவி வானத்திலிருந்து பாய்ந்து வந்தாள். பயந்த தேவர்கள் கோரிக்கையை ஏற்ற சிவபெருமான் வேகமாகப் பாய்ந்து வந்த கங்கையைத் தனது சிறு சடையில் துளியாக அடக்கிவிட்டார். அதைத்தான் நான் அபிநயித்துக் காட்டினேன்" என்றாள்.

"கங்கை ரொம்பவும் பொல்லாதவள்" என்ற மதுரன், "சிவபெருமான் தன் விரிந்த செஞ்சடையில் அவளை அடக்கியிராவிட்டால் இந்த உலகமே அழிந்திருக்குமல்லவா?" என்று கேட்டான்.

''அதெப்படி அவள் பொல்லாதவளாவாள்? அவளாக வர ஆசைப்பட்டாளா? அவளைப் பகீரதன் தானே வரம் வேண்டி அழைத்தார்? அழைத்தவர் அவளை வரவேற்று இருக்க இடம் கொடுப்பதுதானே முறை?'' பூங்கொடி கேட்டாள்.

''அழைத்தால் இறுமாப்புக் கொள்வதா? மக்களை, தேவர்களைப் பயப்பட வைப்பதா? பாய்ந்து வருவதா? பெண்களுக்கு நாணமும், அச்சமும் வேண்டாமா? வீறு கொண்டவளை விரிசடைப் பெருமான் ஒரு துளியாக அடக்கிவிட்டாரே! பாவம் கங்கை!'' என்று கூறி, பூங்கொடியின் முகத்தைப் பார்த்தான்.

''ஏன் உங்களுக்குப் பெண்களைக் கண்டால் பிடிக்காதோ?'' பூங்கொடியின் வேல் விழிகள் பாய்ந்தன.

''பெண்களைப் பிடிக்கும். உன்னைப் போல் அழகிய நடனப் பெண்களைப் பிடிக்கும். ஆனால், அவர்களிடமுள்ள கர்வம் பிடிக்காது.''

''கர்வப்பட்டாலும் கங்கைக்கு உயர்ந்த இடம் கிடைத்து விட்டதே... பார்த்தீர்களா?''

பூங்கொடியின் சாதுர்யமான பேச்சு மதுராந்தகனுக்குப் பிடித்திருந்தது. அவளுடன் இன்னும் பேச வேண்டும் போல் தோன்றியது.

''உன்னைப் போன்ற நடனமணி ஒருத்தியை நாவுக்கரசர் பாடலுக்கு ஏற்ப ஆடச் சொல்லி இந்தச் சிற்பத்தை மகேந்திர பல்லவன் படைத்திருப்பார் என்று நினைக்கிறேன்'' என்று மதுராந்தகன் சொன்னான்.

''நாவுக்கரசருக்குக் கங்காதரரை மிகவும் பிடிக்கும்போல் இருக்கிறது. பல்லவ அரசருக்கு அழகிய சிற்பம் செதுக்க நாவுக்கரசரின் இனிய பாடல் உதவியிருக்கிறது. கங்கையின் கதை, நாவுக்கரசர் பாடல், மகேந்திரவர்மன் சிற்பம் ஆகியவையெல்லாம் முந்நூறு ஆண்டுகளாகியும் அழியாமல் இருக்கின்றனவே... பார்த்தீர்களா?'' பூங்கொடி பேசப் பேச மதுராந்தகன் ரசித்தான்.

''அஞ்சையும் அடக்கி ஆற்றல்
உடையனாய் அநேக காலம்
வஞ்சமில் தவத்துள் நின்று
மன்னிய பகீரதற்கு



வெஞ்சின முகங்களாக
விசையொடு பாயுங் கங்கை
செஞ்சடை யேற்றோர்...''

அவள் பாடிக் கொண்டே மீண்டும் ஆடினாள். சதங்கை ஒலித்தன. மதுரன் கரங்களைக் கொட்டி மகிழ்ச்சி தெரிவித்தான்.

பூங்கொடி ஒரு கணம், ஒரே கணம்தான் கற்சிலை போல் நின்றாள்.

அவள் யாரைப் பார்த்து அப்படி நின்று விட்டாள்?

அவள் யார் விழிகளைப் பார்த்து அவ்வாறு திகைத்து விட்டாள்?

பாறை மறைவினின்று இளையபிராட்டி குந்தவ்வை அந்த மண்டபத்தை நோக்கி வரவும், பூங்கொடி ஒரு கணம் கூட அங்கே நிற்க விரும்பாமல் நாலே எட்டில் அங்கிருந்து பாய்ந்தோடினாள். மலையடிவாரம் வந்து, வீதிக்கு வந்து, சத்திரத்துக்கு வந்து, திண்ணையில் ஏறி அமர்ந்து தூண் மேல் சாய்ந்து வேதனைப் பெருமூச்சை விட்டு, அங்கிருந்து மலையடிவாரம் நோக்கினாள்.

நல்ல சமயத்தில் இளையபிராட்டி வந்து விட்டாளே?

வந்தால் என்ன? அங்கேயே நாம் ஏன் நின்றிருக்கக் கூடாது?

'கூடாது; கூடாது. அங்கே நில்லாமல் ஓடி வந்ததுதான் சரி. இளவரசரை மீண்டும் சந்திக்க முடியாதா?'

ஏக்க பெருமூச்சு அவளிடமிருந்து எழுந்தது.

## 4. இளையபிராட்டியின் இதய வேட்கை

இளையபிராட்டியிடமிருந்து இளவரசன் மதுராந்தகன் விடைபெற்றுச் சென்றுவிட்டான். அவன் அங்கு இருந்த சிறிது நேரமும், பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்ச்சியைப் பற்றி அத்தை குந்தவ்வையுடனும் வல்லவரையருடனும் பேசுவதிலேயே கழிந்தது.

எதிர்பார்த்ததற்கு மாறாக அங்கே கலகலப்பான சூழ்நிலை அமையவில்லை என்பதை வந்தியத்தேவன் புரிந்து கொண்டார். மேலுக்காக மதுராந்தகனும் குந்தவ்வையும் சிரித்துப் பேசுகின்றனர் என்பதை அறிய வல்லவரையருக்கு அதிக நேரமாகவில்லை.

''தஞ்சை மாளிகையில் நிலா முற்றத்தில் புதிதாக அமைக்கப் பட்டிருந்த மேடையில் 'இராஜராஜ விஜயம்' நாட்டிய நாடகம் நடக்கப் போகிறது என்பதை அறிய எனக்கு மிக மகிழ்ச்சி'' என்று மதுராந்தகன் பேச்சைத் தொடங்கினான்.

''புதிய மேடையில் இளையபிராட்டியின் நாட்டிய நிகழ்ச்சி நடப்பது மிகப் பொருத்தமே'' என்று மீண்டும் கூறினார் வந்தியத் தேவன். அதையேதான் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர அதற்கு மேல் பேச்சுத் தொடரவில்லை. உள்ளத்துக்குள்ளிருந்து வராத சொற்களே அங்கு உதிர்ந்தன.

'நான் கலந்து கொள்ளப் போவதில்லை' என்று இளையபிராட்டி சொல்ல நினைத்தாள். உண்மையிலேயே அப்படித்தான் முடிவெடுத் திருந்தாள். ஆனால், அப்படிச் சொல்லவில்லை.

'நடன நிகழ்ச்சியில் தான் கலந்து கொள்ளாவிட்டால் நடனமாட வேறு மங்கையர் கிடைக்க மாட்டார்களா? கூடாது, கூடாது. அப்படி யெல்லாம் மற்றவர்களை அனுமதிக்கக்கூடாது. நாம் கலந்து கொண்டுதான் ஆக வேண்டும்' என்று உறுதியாக முடிவெடுத்தாள்.

சிறிது நேரம் மௌனம்; பிறகு பேச்சு.

மதுராந்தகன் வெயிலின் அளவை உற்றுப் பார்த்தான்.

''அத்தை! நேரமாகிறது; பொழுது சாய்வதற்குள் நான் பழுவூருக் குச் செல்ல வேண்டும். புறப்படட்டுமா? பிறகு தங்களைத் தஞ்சையில் தான் சந்திப்பேன்'' என்று கூறி எழுந்தான் மதுராந்தகன்.

வந்தியத்தேவனும் இளையபிராட்டியும் விடை கொடுத்தனர்.

''நாம் இங்கேயே பொழுது சாயும் வரையில் தங்கி விடலாமா?'' என்ற வந்தியத்தேவன் கேட்டார்.

குந்தவ்வையின் நினைவு வேறு எங்கே இருந்தது. ''உம்; நான் வளர்த்த பிள்ளை; என் தோளில் தாங்கியவன்; இடுப்பில் வளர்ந்தவன்; என் கரத்தைப் பிடித்து நடந்தவன்'' என்று குந்தவ்வை உணர்ச்சியை அடக்க முடியாமல் பேசினாள்.



''ஏன், என் தோளிலும் வளர்ந்திருக்கிறான். வாளெடுத்துச் சுழற்றக் கற்றுக் கொடுத்தவன் நான்'' வல்லவரையரும் கூறினார்.

சற்றுச் சினத்துடன் திரும்பினாள் குந்தவ்வை.

''வாளெடுத்துச் சுழற்றக் கற்றுக் கொடுத்த உங்களுடன் வாள் எடுத்து மோதவில்லையே மதுரன்?'' என்றாள் குந்தவ்வை. பிறகு, ''அவன் என் சொற்களை ஏற்க மறுக்கிறானே? என் கட்டளையை மீறி விடுவான் போல் தோன்றுகிறதே?'' என்று வாய்விட்டுப் புலம்புவதுபோல் பேசினாள்.

வல்லவரையர் அவள் அருகே சற்று நெருங்கி உட்கார்ந்து, ''பிராட்டி! சற்று முன்பு வரை கலகலப்பாய் இருந்தாய்; இங்கிருந்து கீழே இறங்கிச் சென்று வந்ததிலிருந்து... இப்போது உன் முகத்தில் கடுகடுப்பு மிகுந்திருக்கிறது'' என்றார்.

''ஆமாம்! பல்லவ மண்டபத்தில் அவளுடன் மதுரனைச் சேர்த்து பார்த்ததிலிருந்து'' என்று சொன்னபோது அவள் குரலில் சோகம், ஏமாற்றம், வேதனை எல்லாம் நிறைந்திருந்தன.

''அவளா? அவள் என்றால்?'' - வந்தியத்தேவன் கேட்டார்.

''அவள்தான் பூங்கொடி! நீங்கள் அவளை அறிய மாட்டீர்கள். நான் அறிவேன். நான் அவளைத் தஞ்சை மாளிகையில் சந்தித்திருக் கிறேன்.''

''பூங்கொடி... நல்ல பெயர்!''

''நல்ல பெயர் - நாகம் என்றாலும் நன்றாகத்தான் இருக்கிறது.''

''ஏன் அவ்வளவு கடுமையாய் வர்ணிக்கிறாய்? பூங்கொடி ஒற்றர் படையைச் சேர்ந்தவளா? பாண்டிய நாட்டினின்று முன்பு ஒரு பெண் தஞ்சைக்கு வந்திருந்தாளே - பாண்டிய இளவரசர் அமரபுஜங்களை வளர்த்தாளே - தலைவி - அவளைப் போன்றா?''

''இல்லை... இல்லை. ஒற்றர் படையைச் சேர்ந்தவளாக இருந்தால் உடனே தண்டித்து விடுவேனே!''

''இளையபிராட்டி! ஏதோ மறைத்து, மறைத்துப் பேசுகிறாய். முழுமையும் தெரிவிக்காமல் உனக்குள்ளேயே மூடி வைத்துக் கொண்டால், எனக்குப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லை. ரகசியம் என்று சற்று முன்பு சொன்னாய். இப்போது மறைபொருளாய்ப் பேசுகிறாய். என்னிடம் சொல்லக் கூடியதுண்டென்றால், சொல்

வாமென்றால் சொல்லலாம். நான் இதுவரை எதுவும் உன்னிடம் தெரிவிக்காமல் என் இதயத்தில் அடக்கி வைத்திருக்கிறேனோ?''

வல்லவரையர் இவ்வாறு கூறவும், குந்தவ்வை அவரை ஏறிட்டு நோக்கி, ''ஆகா! 'உள்ளது உள்ளபடி உன்னிடம் எல்லாம் சொல்லி விருக்கிறேன்' என்று நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். இரண்டு முக்கியமான சம்பவங்களை நீங்கள் மறைத்திருக்கிறீர்கள். அது போகட்டும். வேறொரு சமயம் அதைப் பற்றிப் பேசுகிறேன். மதுராந்தகனைச் சம்பந்தப்படுத்தும் அந்த ரகசியத்தை உங்களிடம் சமயம் வரும்போது சொல்கிறேன்'' என்றாள்.

வல்லவரையர் மௌனமாக இருந்தார். 'நான் ஏதோ இரண்டு முக்கியமான சம்பவங்களை நெஞ்சத்தில் அடக்கி வைத்துச் சொல்லாமல் இருந்திருக்கிறேன் என்கிறாளே... எதுவாக இருக்கும்? அப்படி மறைப்பதற்கு ஏதும் இருந்ததாய்த் தெரியவில்லையே' என்று கவலையுடன் சிந்தித்தார்.

''என்ன... இதற்கே வாயடைத்து மௌனமாகி விட்டீர்களே?'' என்று இளையபிராட்டி கேட்டாள். அவள் முகத்தில் இதுவரை இருந்து வந்த கோபமும், சோர்வும் மறைந்தன. புதுத் தெளிவு அவள் உள்ளத்தில் ஏற்பட்டதன் பிரதிபலிப்பு தெரிந்தது.

''மௌனத்தால் பல காரியங்களை வெல்லலாம்'' என்றார் வல்லவரையர்.

''அந்தக் கலையை நான் கற்காததால் பல காரியங்களில் தோல்வியைக் கண்டிருக்கிறேன்'' என்றாள் குந்தவ்வை. இதழ்களில் தெரிந்த சிரிப்பு வழக்கமானதில்லை.

''சோழ மாமன்னரின் சகோதரிக்குத் தோல்வியா? நம்ப முடியவில்லையே! பல படையெடுப்புகளுக்குத் திட்டமிட்டு, தக்கவர்களை அனுப்ப யோசனை கூறும் இளையபிராட்டிக்குத் தோல்வியா? இருக்காது'' - வல்லவரையர் தலையை அசைத்து இளையபிராட்டியை நேருக்கு நேர் நோக்கினார்.

வல்லவரையரின் புகழ்ச்சிச் சொற்களால் சோர்வு நீங்கியவளாய், ''இருக்கலாம்; என் மகனைப் போன்று வளர்த்து வரும் மதுராந்தகனின் வெற்றிகளுக்கெல்லாம் திட்டமிட்டு, மாவீரனாக வளர்த்த எனக்கு அவனிடமே தோல்வி'' என்று கூறியபோது சொற்களில் சோகம் பிரதிபலித்தது.



''வெற்றி என்று நினைப்பதும் தோல்வி என்று முடிவு செய்வதும் நமது மனப்பான்மையைப் பொறுத்தது. மதுராந்தகன் இன்னும் சிறுவன் அல்லன். அவன் மாவீரன். பல போர்க்களங்களில் வியக்கத் தக்க வெற்றிகளைக் கண்டவன். அவனுக்கும் சுய சிந்தனைகள், எண்ணங்கள், கனவுகள் உண்டு. அதில் நாம் குறுக்கே நிற்கக்கூடாது. அவன் ஒரு பெண்ணைச் சந்தித்திருக்கிறான். அவ்வளவுதான். உன்னுடைய சொற்படி பார்த்தாலும் அவள் பல கலைகளை அறிந்தவள். நாட்டியக் கலையில் தேர்ந்தவள் என்று தெரிகிறது. நாட்டியமாடுபவளை மதுரன் விரும்பக்கூடாதா? உனக்கு நாட்டியக் கலை நன்றாக வரும் என்று நான் அறிவேன். அப்போதே... அதனால்...''

வல்லவரையர் பேசி வரும்போது இளையபிராட்டி குறுக்கிட்டு, அழுத்தமான குரலில் ''இல்லை... இல்லை. நீங்கள் சொல்வது போல் இல்லை. அவனது உள்ளக்கிடக்கைகளுக்கு மதிப்பளிப்பவள் நான். அவன் விரும்பும் பெண்ணை மணம் புரிந்து வைக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன். அவனுக்கு மிக விரைவில் இளவரசு பட்டம் சூட்டும் விழா நடைபெற வேண்டும். அப்பொழுது அவன் அருகே இளவரசியாக அமரப் போகிறவள் தகுந்தவளாக இருக்க வேண்டும். அதனால்...'' என்றாள்.

''ஏன், தக்கவளைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றலும் குணமும் நெறியும் மதுராந்தகனுக்கு இல்லையா?'' - வல்லவரையர் குரலில் சற்றுக் கடுமை இருந்தது.

''இருக்கும். இருக்கலாம். ஆனால்...''

''ஆனால், என்றால்...''

''அவன் இன்று சந்தித்தானே அந்தப் பெண்ணை இனிச் சந்திக்கக் கூடாது. சந்தித்தால் காதல் வளரும். அதனால்தான் கண்டிப்பாக இருக்கிறேன்.''

''காதல் வளருவதை இளையபிராட்டி தடுக்கிறாள் என்றால் கேட்பவர்கள், அறிபவர்கள், ஊர் உலகத்தினர் வியப்படைவார்கள். உன்னை வெறுப்பார்கள்.''

''வெறுக்கட்டும். ஆனால், என் முடிவை நிலை நிறுத்துவேன். இது எனது அசைக்க முடியாத முடிவு.''

இளையபிராட்டி இவ்வாறு கூறவும் வல்லவரையர் தொடர்ந்து அதைப் பற்றி பேசுவதை நிறுத்திவிட்டுப் புறப்பட எழுந்தார்.

"இன்று நாம் பிரம்மதேசம் புறப்படுகிறோம். கட்டப்படும் நமது புதிய மாளிகை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதைக் காண வேண்டாமா?'' வல்லவரையர் கேட்டார்.

''இல்லை. நான் வரவில்லை. இன்று உறையூரிலேயே தங்கி, நாளைக்குத்தான் தஞ்சை செல்லப் போகிறேன்'' என்று உறுதியுடன் குந்தவ்வை கூறியது கேட்டு, வல்லவரையர் வந்தியத்தேவன் வியப்புற்றார்.

# 5. அன்னையின் அறிவுரைகள்

வழவழப்பான அந்தத் தூணின் மீது தலையைச் சாய்த்துக் கொண்டு பூங்கொடி வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கிழக்கு மேற்காகச் செல்லும் அந்த வீதியின் ஒரு திசையில் சென்றால் உறையூரை அடையலாம். மற்றொரு திசையில் சென்றால் காவிரிக் கரையை அடையலாம்.

தெருவில் பலர் செல்கிறார்கள். அவள் விழிகள் பார்த்துக் கொண்டிருந்தனவே தவிர, மனம் ஒருவரையும் பதிய வைத்துக் கொள்ளவில்லை. சில மாதங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டாள்.

வல்லத்து மாளிகையில் ஒருநாள் கதிரவன் உச்சிவேளையைத் தாண்டிக் கொண்டிருந்த நேரம். தன் கடுமையால் மக்களைக் களைப்புறச் செய்து கொண்டிருந்த நேரம்.

மாளிகையில் பணியை முடித்துக் கொண்ட பணிப் பெண்கள் ஓய்வெடுக்கத் தத்தமது வீடுகளுக்குச் செல்ல ஆயத்தமானார்கள்.

அந்தப்புரத்தில் அரசிக்குக் குற்றேவல் செய்பவர்களும் சக்ரவர்த்தி இளைப்பாறும் கூடத்தில் பணியாற்றுபவர்களும் மடைப்பள்ளியில் உணவு படைக்கும் சமையற்காரர்களுக்கு உதவியாய் இருப்பவர்களும் தங்கள் பணியை முடித்துக் கொண்டு புறப்பட ஆயத்தமாயினர்.



இளையபிராட்டி குந்தவ்வை மிக வேகமாக யாரையோ சந்திக்க விரும்புபவள் போல் அந்தப்புரத்தை நோக்கி வந்தாள்.

பணிப் பெண்கள் வணக்கம் தெரிவித்து வழி விட்டு மரியாதை செலுத்தி ஒதுங்கி நின்றனர்.

குந்தவ்வையும் சற்று நின்றாள். யாரையோ அழைக்க எண்ணிச் சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரையோ கூப்பிட வேண்டும் என்றும் தோன்றியது. யாரை அழைப்பது என்ற திகைப்பும் இருந்தது.

இளையபிராட்டி குறிப்பறிந்து குற்றேவல் புரியும் குமரிப்பெண் ஒருத்தி குலுங்கி நடந்து வந்து அடக்கமாக அவள் எதிரே நின்றாள்.

''தெய்வானைதானே நீ? உன் தகப்பனார் இப்போது எங்கே பணியாற்றுகிறார்?'' என்று குரலில் நெருக்கம் தவழக் கேட்டாள் குந்தவ்வை.

தெய்வானைக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. தன்னைத் தெரிந்து வைத்திருப்பதுடன் தன் தந்தையைப் பற்றியும் கேட்டறியும் இளைய பிராட்டியாரின் உயர்குணம் அவளுக்கு வியப்பை அளித்தது. இனி அவள் தன் தோழிகளிடமும், மற்றப் பணிப்பெண்களிடமும் இளையபிராட்டி தன்னை அழைத்துப் பேசியதைக் கண், காது, மூக்கு வைத்து முரசு அறிவிப்பாள்.

''நமசிவாய கல்தச்சரிடம் என் தந்தை பணி செய்கிறார்'' என்று அடக்கமாக கூறினாள் தெய்வானை. அவள் கூறியது இளைய பிராட்டியின் காதில் விழுந்தாலும் அவளது விழிகளும் மனமும் வேறு எங்கோ திரிந்து யாரையோ தேடின. முகத்தில் இலேசான கடுகடுப்பும் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் எரிச்சலும் நிலை பாவாமல் அவள் தவிப்பதைப் புலப்படுத்தின.

''நான் வழக்கம்போல் உக்ராண உள்ளில் பணியாற்றுகிறேன்'' என்று தன் இருப்பிடத்தையும் இளையபிராட்டி கேட்காமலேயே தெரிவித்தாள் தெய்வானை.

''சுவையான வேலைதான்!'' என்று கூறிய இளையபிராட்டியின் விழிகள் மேல் மாடத்தை அண்ணாந்து நோக்கின. அதுதான் சக்ர வர்த்தி இராசராச சோழ தேவர் பகலில் இளைப்பாறும் இடம்.

''வேலை செய்வதில் எனக்குக் குறை ஏதுமில்லை தேவி! புதிதாகச் சேர்பவர்களுக்குச் சக்ரவர்த்தியிடம் தொண்டாற்றும் அதிர்ஷ்டம் கிட்டுகிறது. மாமன்னருக்குப் பணிவிடை செய்ய

வேண்டும் என்ற எனது நீண்ட நாள் இலட்சியம் இன்னும் கை கூடவில்லை. நிறைவேறாமல் போய்விடுமோ என்ற கவலை எனக்கு இப்போது ஏற்பட்டு வருகிறது'' என்று தெய்வானை அந்தச் சில விநாடிகளில் தன் மனக்குறையையும் வெளியிட்டாள்.

இளையபிராட்டி அவள் கூறியவற்றை முழுமையும் காதில் போட்டுக் கொள்ளாதவள் போல் தோன்றினாலும், அவளது விழிகள் எதையோ தேடுவது போல் சுழன்றாலும் தெய்வானை கூறிய கடைசி வார்த்தைகள் விழுந்தன.

''ஏன்... நீ அதற்குள் கிழவியாகி விட்டாயா! சலித்துக் கொள்கிறாயே?'' என்று கேட்டாள்.

தன் கேள்விக்கு மறுமொழி கூறுகிறாள் இளையபிராட்டி என்பதைப் புரிந்து கொள்ளாத தெய்வானை சற்றுத் திகைத்தாலும் மறுகணமே புரிந்து கொண்டு, ''கிழவியானாலும் நான் மாளிகையை விட்டு விலக மாட்டேன் தேவி! ஆனால், எனது இலட்சியமெல்லாம்...'' என்று அவள் பேசிக் கொண்டிருக்கும்போதே இளையபிராட்டி அங்கிருந்து மாளிகையின் முன் மண்டபத்தை நோக்கி விரைந்தாள்.

குந்தவ்வை எதிர்பார்த்தது போல் பூங்கொடி அங்கே அமர்ந்திருந்தாள்.

இளையபிராட்டி வருவதைப் பார்த்தவுடன் பூங்கொடி மரியாதை தெரிவிக்கும் வகையில் எழுந்து நின்றாள்.

அவளைச் சந்திக்க வந்ததுபோல் புலப்படுத்திக் கொள்ளாத இளையபிராட்டி சற்று நின்று தன் ஒரு விரலை மட்டும், 'நீ யார்?' என்று கேட்பது போல் நீட்டவும், பூங்கொடி முகத்தில் புத்தொளி பூக்க, புன்னகை பரவி, ''நான் பூங்கொடி!'' என்றாள்.

''பூங்கொடியா? உன் பெயரை இதுவரை நான் கேள்விப்பட்டதில்லையே'' என்று புருவத்தை உயர்த்திக் கொண்டாள் இளையபிராட்டி.

''புதுமையான பெயர். எனது வடிவத்தைப் பார்த்து இட்ட பெயர்!'' என்று பூங்கொடி சிறிதும் பயமில்லாமல் இளையபிராட்டியை நேருக்கு நேர் நோக்கிக் கூறினாள்.

அவளது தற்பெருமையும் தைரியமான போக்கும் இளையபிராட்டிக்குப் புரிந்தது.



''நீ பிறக்கும் பொழுதே பூங்கொடி போன்றிருந்தாயா? உன் தாய் சொன்னாளா அல்லது மற்றவர்கள் யாராவது கூறினார்களா?'' இளையபிராட்டி தன் கூர்மையான பார்வையை வீசிய வண்ணம் கேட்டாள்.

பூங்கொடி அந்த விழி வீச்சைத் தாங்கிக் கொண்டாள், ''உம்; என் தாய் என்ன பெயர் வைத்தாளோ? நான் பிறந்த வேளை என்னைத் தாயிடமிருந்து பிரித்து விட்டது'' என்றாள்.

இளையபிராட்டிக்கு ஒரு கணம் அதிர்ச்சி. அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் ''நீ பிறந்தவுடன் உன் தாய் இறந்து விட்டாளா?'' என்று கேட்டாள்.

இளையபிராட்டி ஒரு கணம் எண்ணினாள்... 'இவளிடம் பேசுவதற்காகவா வேகமாக வந்தோம்? ஒரு பணிப் பெண்ணுடன் நின்று பேசுவதற்கு, அவளுடைய நலன்களைப் பரிவுடன் கேட்பதற்காகவா இவ்வளவு நேரம் நின்றோம்?'

பூங்கொடியைப் பாதம் முதல் முடி வரை ஒருமுறை நோக்கிய இளையபிராட்டி, ''உன் தாய் யார்? எங்கே இருந்தாள்? நீ இந்த மாளிகைக்கு எப்போது வந்தாய்? உன்னைச் சக்ரவர்த்திக்குப் பணிவிடை செய்யக் கட்டளையிட்டது யார்?'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டாள்.

பூங்கொடி மெல்ல நகைத்தாள். அந்தச் சிரிப்பில் துளிக்கூட மரியாதை புலப்பட்டதாகத் தெரியவில்லை. இளையபிராட்டி சோழ நாட்டின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவள் என்பதை அவள் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

''என்னைச் சக்ரவர்த்திக்குப் பணிவிடை செய்ய ஒருவர் கட்டளையிட வேண்டுமா?'' என்று பூங்கொடி கேட்டபோது, இளையபிராட்டியின் நாசி கோபத்தால் சற்று விரிந்தது. வேறு ஒரு பெண் சொல்லியிருந்தால் அவளுக்குக் கிடைத்திருக்கும் மரியாதையே வேறு! பணிப்பெண் சொல்லியிருந்தால் அந்த நொடியே அவளது பதவி பறி போயிருக்கும். பிறகு பூங்கொடியின் மீது இளையபிராட்டி இன்னும் ஆத்திரப்படாதது ஏன்?

இளையபிராட்டி தன்னுள் எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டாள். இந்தப் பெண்ணை அதிகாரத்தால் பணிய வைக்க முடியாது என்று அவளுக்குப் புரிந்து விட்டது.

பூங்கொடிக்கு இளையபிராட்டியாரை அடையாளம் தெரியாது. பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறாளே தவிர, நேரே சந்தித்தது இல்லை. இப்போதுகூட தன்னிடம் பேசுவது இளையபிராட்டி என அவளுக்குத் தெரியாது. வல்லத்து மாளிகையில் பல அரசிகள் இருப்பார்கள்; பழகும்போது மிகவும் கவனமாகப் பழக வேண்டும் என்று அவளுடைய தாய் சொல்லி அனுப்பியிருந்தாள்.

ஓர் இரவு முழுவதும் அவள் தாய் கதை கதையாய்ச் சொன்னாள். நடந்த வரலாறு சொன்னாள். நடந்து கொள்ள வேண்டிய விதத்தைச் சொன்னாள். அப்பொழுது சொன்னாள்: ''தஞ்சை மாளிகையில் அரசிகளுக்கும் இளவரசிகளுக்கும் குறைவில்லை. நீ மிகவும் கவனமாகப் பழக வேண்டும்.''

''அரசிகளையும் இளவரசிகளையும் எப்படியம்மா அடையாளம் கண்டு கொள்வது?'' என்று பூங்கொடி கேட்டாள்.

''மிகச் சுலபம். ஆடை அலங்காரத்திலிருந்து கண்டு கொள்ள லாம். மற்றவர்களோடு சரி சமமாகப் பேச மாட்டார்கள். குனிந்து நடக்க மாட்டார்கள். பேச்சில் எப்போதும் ஒருவித அதிகாரத் தோரணை நிறைந்திருக்கும்'' என்று தாய் கூறியபோது பூங்கொடி சிரித்தாள்.

''இது போல் சிரிக்கக்கூடாது. நீ போவதோ பணிப் பெண்ணாக. அதற்குத் தக்கபடி நடிக்க வேண்டும்'' என்று உபதேசித்தாள் தாய்.

''என்னை நமசிவாயக் கல்தச்சரிடம் அனுப்புவதாகச் சொல்லி யிருந்தீர்கள். இப்போது எங்கோ பணிப் பெண்ணகாகப் போகச் சொல்கிறீர்களே'' என்று முணுமுணுத்தாள் பூங்கொடி.

''பூங்கொடி! நான் சொல்வது போல் செய். அடக்கமாயிரு. நமது இலட்சியம் ஈடேறும் வரை நீ பணிவாக நடந்து கொள்ள வேண்டும். என்னைப் பற்றி ஒன்றும் நீ குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது.''

''என்னை விசாரித்தால்? உன் பெயர் என்ன, ஊர் என்ன என்று விசாரித்தால்?''

''பிறந்தவுடனேயே தாயைப் பிரிந்து விட்டேன் என்று சொல்லி விடு. சமயம் வரும்போது நானே வந்து சொல்வேன். அதுவரை இலட்சியம் ஈடேறும் வரை நீ மிக அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.''

''தஞ்சை எனக்குப் புதிது; அங்குள்ளவர்களும் அறிமுகம் இல்லாதவர்கள்.''



''அதனால் உனது பொறுப்பு இன்னும் அதிகமாகிறது. உனக்கு இரண்டு வித அசௌகரியங்கள். ஒன்று பெண்ணாகப் பிறந்தது; மற்றொன்று...''

''மற்றொன்று என்னம்மா?''

''என் மகளாகப் பிறந்தது...''

''தங்கள் மகளாய்ப் பிறக்க நான் மாதவம் செய்திருக்க வேண்டும். கலைத் திறமையும், அழகும், அடக்கமும் உடைய தங்கள் மகள் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன். தங்களைச் சோழ நாட்டினின்று பல காதத் தொலைவுக்கு அனுப்பச் சூழ்ச்சி செய்பவர் களைப் பழிக்குப் பழி வாங்குவது என் இலட்சியம். 'தஞ்சைக்குப் போ; அங்கே சிற்பியைச் சந்தித்துப் பேசு. அவருக்குப் பணிவிடை செய்; நடனக் கலைத் திறமையைத் தஞ்சையில் பிரபலப்படுத்து' என்று தாங்கள் கூறியதும் நான் ஏன் உடனே சம்மதித்தேன் தெரியுமா? தங்களுக்கு ஏற்பட்ட இவ்வளவு துன்பங்களுக்கும் காரணமான அந்த இளையபிராட்டியைப் பழிக்குப்பழி வாங்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது என்ற மகிழ்ச்சியால்...''

பூங்கொடி இவ்வாறு கூறும்போது அவளுடைய தாய் உரத்த குரலில் தடுத்து, ''பூங்கொடி! பழி வாங்கும் மனப்பான்மையை விட்டு விடு. சக்ரவர்த்திகளைச் சந்தித்து நான் கொடுக்கும் ஓலையை அவரிடம் சேர்ப்பித்து விடு'' என்று கூறி நிறுத்தினாள்.

''என்னை உடனே புறப்படச் சொல்கிறீர்கள். தஞ்சைக்குப் போன பிறகு தங்களை எப்போது சந்திப்பேன்?''

''ஏன் பூங்கொடி சந்தேகம்? நீ சென்ற மறுநாளே சக்ரவர்த்தி களிடமிருந்து எனக்கு அழைப்பு வரும். அப்போது பழைய கதைகள் பலவற்றைக் கூறுகிறேன். இன்பமாகத் துள்ளித் திரிந்த என்னைச் சிறையிலிருப்பது போல் வாழச் செய்தவர்களின் கதையைக் கூறுகிறேன்...''

''அம்மா... அம்மா! எனக்குத் தெரியும். தங்கள் வாழ்வில் குறுக் கிட்டவர்களைப் பற்றி எனக்குத் தெரியும்.'' இவ்வாறு பூங்கொடி கூறியவுடன் அவளுடைய தாய் பரபரப்புடன், ''உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''நீங்கள் பேசிக் கொண்டிருந்தபோது கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.''

''மறைந்து கேட்பது தவறல்லவா?''

''கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் கேட்கவில்லை. நான் உறங்கி விட்டேன் என்று நீங்கள் பேசிக் கொண்டிருந்தீர்கள். இளைய பிராட்டி என்ற பெயருடைய குந்தவ்வையைப் பற்றிப் பேசினீர்கள்...''

தீயை மிதித்தது போல் திடுக்கிட்டாள் பூங்கொடியின் தாய்.

''பூங்கொடி! தஞ்சைக்குச் சென்றவுடன் இந்த விவகாரங்களில் எல்லாம் நீ தலையிடாதே. நான் இட்ட பணியைச் செய்து முடி. அங்கு அரண்மனையில் பல அரசகுமாரிகள் இருப்பர். அரசிகள் இருப்பர். அவர்களுடன் மிகக் கவனமாகப் பழகு. குறிப்பாக இளையபிராட்டியாருடன் பேசும்போது, பழகும்போது மிக மிகக் கவனம் தேவை'' என்று எச்சரித்தாள்.

தாயின் எச்சரிக்கையை மனத்தில் கொண்டு வந்த பூங்கொடிக்குத் தஞ்சையில் புதிய அனுபவம் காத்திருந்தது.

# 6. கண்காணிப்பும் கட்டுப்பாடும்

அன்றைய நிகழ்ச்சியை இப்போது நினைவுபடுத்திக் கொண்டதும், பூங்கொடிக்குச் சிரிப்பு வந்தது. தன் துணிவை எண்ணித் தானே வியந்து கொள்வாள். அந்தத் துணிவு அசட்டுத் தனமானது என்று தாய் எச்சரித்திருக்கிறாள்.

தாயின் கட்டளையை நினைத்து அடக்கமாகப் பேச வேண்டும்; பெரியவர்களிடம் இன்னும் சிறிது மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று நினைப்பாள். ஆனால், இயற்கையாக எழும் ஒரு வித வேகம் என்ன பேசுகிறோம் என்பதை எண்ணாமலேயே வெளிப் பட்டுவிடும்.

அவள் வந்த அன்றே வல்லத்து மாளிகையில் பணி செய்யும் வாய்ப்பு அவளுக்குக் கிடைத்தது. சில நாள்களுக்குள்ளே இராசராச சோழரின் இருப்பிடத்துக்குச் சென்று வரும் சிறப்புப் பணி



அவளுக்குக் கிடைத்தது. மாளிகைக்குச் செல்லும் வழியில் கட்டிளங் காளையான இளவரசன் மதுராந்த விழிகளைச் சந்திக்கும் அனுபவம் ஒருநாள் நேரிட்டது.

தடாகக் கரையில் யதேச்சையாகச் சந்தித்தபோது அந்த அழகிய விழிகளுக்குடையவர் சோழ நாட்டு இளவரசர் என்பது அவளுக்குத் தெரியாது.

இராசராச சோழரின் அருகே கொடும்பாளூர் வேளிர் பேசிக் கொண்டிருந்தபோது அவளுக்குப் பல செய்திகள் தெரிய வந்தன. முழு நேரமும் அங்கேயே தங்கியிருக்க முடியவில்லை. அவளுக்குப் பல வேலைகளை இட்டு இங்குமங்கும் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

அவளுடைய அன்றையப் பணி முடிவடைந்து ஓய்வெடுக்க நினைக்கும் நேரத்தில்தான் இளையபிராட்டி அவளைச் சந்தித்தாள். இளையபிராட்டியை அவளுக்கு அடையாளம் தெரியவில்லை.

''பூங்கொடி! நீ எங்கே தங்கியிருக்கிறாய்?'' என்று இளைய பிராட்டி கேட்டாள்.

''நவசிவாயக் கல்தச்சர் வீட்டில்.''

''வசதியாக இருக்கிறதா?''

''உறங்குவதற்கு மட்டுமே நான் அங்கே போகிறேன். மற்ற நேரங் களில் மாளிகையிலேயே வாழ்கிறேன். வசதிக்கு என்ன குறைவு?''

''மாளிகையை விட ஓலைக் குடிலில் வாழத்தான் எனக்குப் பிடிக்கும்'' என்றாள் இளையபிராட்டி, பூங்கொடியின் விழிகளை ஆராய்ந்தவாறு.

''மாளிகையிலேயே நாள் முழுவதும் இருக்கிறீர்கள். சற்று மாறுதலுக்காகக் குடிசையை விரும்புகிறீர்கள். ஆனால், நான் பிறந்தது முதல் குடிசையிலேயே இருக்கிறேன். எனக்கு மாளிகை வாழ்க்கை பிடிக்கிறது.''

''ஓ! பிறந்ததும் வளர்ந்ததும் குடிசையில்தானா? உன்னைப் பார்த்தால் வசதி படைத்த குடும்பத்திலிருந்து வந்தவள் போல் தோன்றுகிறதே!''

''தோற்றத்தைக் கண்டு முடிவு செய்வது சரியன்று; நானும் என் தாயும் இந்த உலகத்தில் துன்பத்தையே கண்டவர்கள். பிறரால் வஞ்சிக்கப்படுவது ஒன்றையே கண்டவர்கள்'' - இப்படிக் கூறிய

பூங்கொடி சட்டென்று நிறுத்தினாள். ஏதோ சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டதைப் போல் பதறினாள்.

இளையபிராட்டி மெல்ல நகைத்தாள். அதில் குறும்புத்தனம் மிளிர்ந்தது.

''பெண்ணே! பிறந்தவுடனேயே தாயைப் பிரிந்து விட்டதாகக் கூறினாயே? இப்போது தாயுடன் வறுமையை அனுபவித்தேன் என்கிறாய்...'' என்று கூறி அவளையே கூர்ந்து நோக்கினாள்.

பூங்கொடி திகைத்தாள். பேச முடியாமல் திடுக்கிட்டாள். அவளுடைய குறும்புத்தனமான பேச்சும், அலட்சியப் போக்கும் மறைந்தன. நம்மை இவ்வளவு தூரம் விசாரித்து அறிபவர்கள் யாராக இருக்க முடியும் என்ற சந்தேகம் அவளுக்கு எழுந்தது.

நெஞ்சிலிருந்து வார்த்தைகள் வெளிவரத் தடுமாறின. ''நீங்கள்... நீங்கள்...'' என்று ஏதோ கேட்க முனைந்தாள்.

இளையபிராட்டி சிரித்த முகத்துடன் அவள் அருகில் சென்று அவளது தோளைத் தொட்டு, ''பூங்கொடி, பயப்படாதே! இதுவரை பொல்லாதவள் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கும் குந்தவ்வை நான்தான்'' என்றாள்.

பூங்கொடியின் முகத்தில் எந்தவித மாறுதலும் தெரியவில்லை. இளையபிராட்டியின் இதயத்தை ஊடுருவும் விழிகளால் கூட அவள் இதயத்தில் அப்போது ஏற்பட்டு ள குமுறலை உணர முடிய வில்லை. முகம் சலனமற்றிருந்தது. இவ்வளவு நேரம் இருந்த குறும்புத்தனம் மட்டுமே மாறியிருந்தது.

'தன் தாய் அடிக்கடி கூறும் இளையபிராட்டியை நேருக்கு நேர் சந்தித்து விட்டோம். யாரை உடனே சந்திக்காமலிருக்குமாறு தாய் எச்சரித்தாளோ அந்தக் குந்தவ்வை தேவியாரைச் சந்தித்து விட்டோம்'... தன் உள்ளத்தில் எழுந்த பூகம்பத்தையும் ஊழிக் காற்றையும் ஒருகணம் அடக்கிக் கொண்ட பூங்கொடி மெல்லிய முறுவலை வரவழைத்துக் கொண்டாள்.

''என்னைக் கண்டு பயந்து விட்டாயா பூங்கொடி?'' என்று இளையபிராட்டி கேட்டாள். பூங்கொடியின் அன்னை நிச்சயம் தன்னைப் பற்றிச் சொல்லியிருப்பாள் என்பது இளையபிராட்டிக்குத் தெரியும். 'பூங்கொடியின் வீட்டில் ஒவ்வொரு நாளும் என்னைப் பற்றிய சிந்தனை, பேச்சு வராமல் இருந்திருக்காது; பூங்கொடி



என்னைப் பற்றி ஒருவித உருவத்தைத் தன் இதயத்தில் வரைந்திருப் பாள். ஒருவித முடிவும் எடுத்திருப்பாள். என்னை அறிந்தவுடனேயே பூங்கொடிக்குக் கோபமும், சீற்றமும், எரிச்சலும் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும். உணர்ச்சியை அடக்க வல்ல இந்தப் பெண் எந்த விதத் தோற்றத்திலும் நடமாட வல்லவள்; நடிக்க வல்லவள்' என்று முடிவெடுத்த இளையபிராட்டி, பூங்கொடியின் விழிகளையே இமைக்காமல் நோக்கினாள்.

பூங்கொடி கலகலவென்று நகைத்தாள். வெண் பொற்காசுகள் உதிர்ந்தன போலிருந்தது. இதழ்களும் பல்வரிசையும் பவழமல்லி மலர்கள் கோத்தன போலிருந்தன.

''பயமா? எனக்கா? நான் எதற்குப் பயப்பட வேண்டும்? பயப்படும் தோற்றமோ, பேச்சோ ஏதுமே தங்களிடம் நான் காண வில்லையே'' என்று பூங்கொடி கூறினாள்.

''எனது தோற்றம் பயங்கரமாக இருக்கும் என்று கற்பனை செய்திருந்தாயா? அல்லது யாராவது வர்ணித்திருந்தார்களா?'' என்று இளையபிராட்டி கேட்டாள். பூங்கொடி இதற்கும் தன் புன்முறுவலையே மறுமொழியாக அளித்தாள். தான் எதிர்பார்த்த விடை பூங்கொடியிடமிருந்து கிடைக்காதது இளையபிராட்டிக்கு ஏமாற்றமாகவே இருந்தது. 'தன் அறிவுத்திறன் இந்தப் பெண்ணிடம் பலிக்கவில்லையே? கல்நெஞ்சங்கொண்ட இவள் மிகப் பொல்லாத வளாக இருக்கத்தான் வேண்டும். கடைசியாக ஒரு பாணத்தை எய்து பார்ப்போம்.'

''உன் முகத்தில் சற்று முன் இருந்த மகிழ்ச்சியைக் காணோமே பூங்கொடி? என் பெயரைக் கேட்டவுடன் உன் உள்ளத்திலே சஞ்சலம் ஏற்பட்டு விட்டதா?'' என்று கேட்டவுடன் பூங்கொடி மிக அமைதியாக -

''தேவி! தங்களை எனக்கு யாரென்றே தெரியாது. தங்களைக் கண்டவுடன் எனக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டன. அரச குடும்பத்தில் மிக முக்கியமானவர்களாக இருப்பீர்கள் என்று நினைத்தேன். என்னைப் பற்றிக் கேட்டறியத் தொடங்கியவுடன் நானும் தங்களை இன்னார் என அறிந்து கொள்ள ஆசைப்பட்டேன்.''

''பெயரைக் கூறியவுடன் திகைத்து விட்டாய். உன் தாய் வர்ணித் திருந்தவளை நேரில் கண்டவுடன் மனத்தில் பலவித எண்ணங்களை ஏற்பட்டு விட்டன. இல்லையா?''

''இல்லை, தேவி... இல்லை. கற்பனையில் தாங்கள் மிகவும் கெட்டிக்காரர் போல் இருந்தீர்கள். நான் நினைக்காததை நினைத்ததாகக் கூறுகிறீர்கள். தாயைப் பற்றிச் சொன்னீர்களே... என் தாயை நீங்கள் அறிவீர்களா?''

''நன்றாக அறிவேன். இளையபிராட்டி என்றால் உன் தாய்க்கு உயிர் என்பதை அறிவேன்.''

''என் தாய் இதுவரையில் ஒருநாள் கூடத் தங்களை அறிந்ததாகக் கூறவில்லையே?''

''வேறு யாரையெல்லாம் தெரிந்ததாகக் கூறினாள்?''

''பழுவேட்டரையர் மகளைத் தெரியும் என்றாள். வானதியைத் தெரியும் என்றாள். அமைச்சர் அநிருத்த பிரம்மராயரைத் தெரியும் என்றாள். வல்லவரையரைத் தெரியும் என்றாள். சக்ரவர்த்தி அவர்களையும் அறிந்திருப்பதாகக் கூறியிருக்கிறாள்.''

பூங்கொடி இவ்வாறு கூறியது கேட்டு இளையபிராட்டி உள்ளூற வியந்தாள். பூங்கொடி மிகப் பொல்லாதவள்; சர்வ வல்லமையுள்ளவள் எனப் புரிந்து கொண்டாள்.

''பூங்கொடி! நீ கூறியவர்களுள் பழுவேட்டரையர் மகள் இந்த உலகத்தில் இல்லை. வானவன்மாதேவி ஒரு குழந்தையை பெற்றெடுத்து விட்டு வானுலகம் சென்று விட்டாள். மாமேதை அநிருத்தர் சுவர்க்கஸ்தராகி விட்டார். காலஞ் சென்றவர்களை உன் தாயார் அறிந்து வைத்திருக்கிறாள் போல் இருக்கிறது'' என்று இளையபிராட்டி கூறியபோது இதழ்களில் குறும்புத்தனம் மிளிர்ந்தது.

''வல்லவரையர் தெரியும் என்று கூறினார்கள். சக்ரவர்த்தியையும் அறிவேன் என்றாள்'' என்று கூறிய பூங்கொடி சற்று மெல்லிய குழைவு நிறைந்த குரலில், ''ஏன் தேவி! மாளிகைக்கு அழைத்து வந்தீர்களே... அவர்தானே இளவரசர்? வானுலகம் சென்று விட்ட வானவன்மாதேவி பெற்றெடுத்த திருக்குமாரர்?'' என்று கேட்டாள்.

இளையபிராட்டி முகத்தில் இலேசாக ஏற்பட்ட மாறுதலைப் பூங்கொடி கவனிக்கவில்லை.

பூங்கொடியின் உள்ளத்தை இளையபிராட்டி புரிந்து கொண்டு, 'முடிவு செய்தது சரிதான். பூங்கொடி மதுரனைச் சந்திக்க விரும்புகிறாள். அழகும் வீரமும் இளமையும் நிறைந்த சோழர் குலத்து ஒரே



தலைமகனைத் தன் வலையில் சிக்க வைக்கப் பார்க்கிறாள். கூடாது; இதை நடைபெற விடக்கூடாது' என்று தீர்மானித்தாள்.

''பூங்கொடி! உன்னிடம் பேச்சுக் கொடுத்ததிலிருந்து உன் அறிவுக் கூர்மையை மிக நன்றாகப் புரிந்து கொண்டேன். புத்திசாலித்தனமாக மறைக்கப் பார்க்கிறாய். கெட்டிக்காரி. மாளிகையில் உனக்குப் பணி செய்யச் சிபாரிசு செய்தவரும் மிகவும் சாமர்த்தியசாலிதான்.''

''நமசிவாய ஸ்தபதி என்னைச் சிபாரிசு செய்தார்.''

''உன்னுடைய தாய் என்று கூறினாயே?''

''நான் அவ்வாறு சொல்லவில்லை தேவி! தாங்களே கற்பனை செய்து விட்டீர்கள். என்னைப் பார்த்தவுடனே தங்களுடைய கற்பனை வளம் அதிகமாகிவிட்டது. தாங்களும் எதையோ என்னிடம் கேட்க வேண்டுமென்பதற்காகச் சுற்றி வளைத்துப் பேசுகிறீர்கள். என் தாயைத் தங்களுக்குத் தெரியுமா? என்னைப் பற்றி என்ன கேட்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ... அதை நேரிடையே கேட்டு விடலாமே! நான் ஒரு பணிப்பெண். அரசக் குடும்பத்தவர்கள், மாளிகையில் பணிபுரிபவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். கேளுங்கள் தேவி!''

பூங்கொடியின் இந்த வார்த்தைகள் விலாவில் வேல் முனையால் மெல்ல இடிப்பது போல் தோன்றின. இளையபிராட்டியைக் கோபம் கொள்ளச் செய்தன. இத்தகைய சொற்களை அவள் வாழ்நாளில் கேட்டதேயில்லை.

''பூங்கொடி! நீ மிகக் கெட்டிகாரி என்று மட்டும் நினைத்தேன். ஆனால், குறும்புத்தனமும் உடையவள் என்பதைப் புரிந்து கொண்டேன். யாரிடம் எவ்வாறு பேச வேண்டும் என்பது உனக்குத் தெரியவில்லை. சக்ரவர்த்திகளின் இருப்பிடத்திற்குச் சென்று வரும் பணியை உனக்கு அளித்திருக்கிறார்கள். மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.''

'யாரிடம் எப்படிப் பேசுவது?' என்று இளையபிராட்டி கோபமாகக் கேட்டபோது பூங்கொடி, ''என்னுடைய தாய் மரியாதையைச் சிறு வயதிலேயே புகட்டி விட்டார்கள். அடக்கம் உடன் பிறந்து விட்டது. நான் தங்களிடம் எதும் முறை தவறிப் பேசவில்லை. தங்களைப் பற்றி எனக்குத் தெரியவே தெரியாது. ஏதாவது தவறாகப் பேசியிருந்தால் பொறுத்தருளுங்கள்'' என்று பணிவுடன் கூறினாள்.

இளையபிராட்டி பெருமூச்சு விட்டாள். பூங்கொடியின் வருகை ஏதோ ஓர் ஆபத்தைச் சோழ மாளிகையில் ஏற்படுத்தப் போகிறது என்பதைப் புரிந்துகொண்டு விட்டாள். 'பூங்கொடியை மிகக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். குறிப்பாக அவள் மதுரனைச் சந்திக்காமல் கட்டுப்படுத்த வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டாள்.

பூங்கொடிக்குச் சில அறிவுரைகளை வழங்கிய பின் குந்தவ்வை அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

மறுநாள், பூங்கொடி இராசராசனிடம் பணியாற்றுவதனின்று மாற்றப்பட்டாள்.

## 7. எங்கே அந்த இளைஞன்?

பூங்கொடி பெருமூச்சு விட்டாள். கடந்து போன நாள்களின் நினைவுச் சுழலில் அவள் சிக்கித் தடுமாறிக் கொண்டிருந்தாள். எனினும் அவள் பார்வை மலைக்கோட்டை மலையடிவாரத்திலேயே இருந்தது. 'மலை மீதிருந்து இளவரசர் இறங்கி வருவார். அவர் புறப்படும்போது அவர் பார்வையில் படுமாறு சென்று நிற்போம்' என்ற ஆசை. ஆனால், அவருடன் இளையபிராட்டியும் இறங்கி வந்தால்?

'இளையபிராட்டி என்னை வஞ்சம் தீர்த்துக் கொள்வதென்று சபதம் எடுத்துக் கொண்டு விட்டாரா? நடந்த செய்திகளை என் தாய் அறிந்தால் என்ன நினைப்பாரோ? என்ன முடிவெடுப்பாரோ? நான் நடந்து கொண்ட விதம் சரியில்லையா?'

யாரோ தன் அருகே வந்து நிற்பது போன்ற உணர்வு ஏற்படவே திடுக்கிட்டு திரும்பினாள்.

"பூங்கொடி! இளவரசர் மதுரன் வருகிறாரா என்று எதிர்பார்த்து நிற்கிறாயா?''

அந்தக் குரலில் இனிமை இருந்தது. அவனுடைய தோற்றத்தைப் போலவே.



'என் பெயர் இவருக்கு எப்படித் தெரியும்? நான் யாருக்காகக் காத்திருக்கிறேன் என்பதை இவர் அறிந்தது எவ்வாறு?' பூங்கொடியின் புருவம் சுருங்கிற்று. பிறகு வியப்பால் வில்லாய் வளைந்தது.

"மதுரனா? யார் அவர்? அவருக்காக நான் ஏன் காத்திருக்க வேண்டும்? நீங்கள் வேறு யாரையோ நினைத்து...'' என்று பூங்கொடி அவனைத் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்.

அவனுடைய விழிகளை நேருக்கு நேர் சந்திக்க அவளால் முடியவில்லை. இதயத்தில் உள்ளதை அப்படியே அறிந்து கொள்ளும் சக்தி அந்த விழி வீச்சுக்கு இருந்தது. [illegible]ழியின் நடுவே ஒரு சுடர் நின்று நிதானமாக ஒளிவீசிக் கொண்டிருந்தது.

அவன் சிரித்தான். சற்று ஏறி இறங்கிய பல் வரிசை. அந்தச் சிரிப்புக்கு அவை சிறப்பை அளித்தன. அந்தச் சிரிப்பு மறுமுறை அவனுடன் பேச வேண்டும் என்ற அழைப்பை விடுத்தது.

"நீதான் பூங்கொடி என்பதில் எந்தவித மாற்றமும் இல்லை என்று நினைக்கிறேன். பெயரை மாற்றிக் கொள்ள உன் தாயும் விரும்ப மாட்டாள். தஞ்சாவூரிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு நீ புறப்பட்டதும் தெரியும். இளவரசர் வருகைக்காக நீ மலைக்கோட்டை வட்டமிட்டதும் தெரியும்'' என்றான் அந்த இளைஞன்.

"யார் இவர் அல்லது இவன்? தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளாமலேயே பேசுகிறானே? வட்டமிட்டேனாமே...'' - பூங்கொடி சிலிர்த்துக் கொண்டாள். 'வட்டமிடுவது பருந்துதான். நான் யாரையும் எதையும் கொத்திக் கொண்டு போக விரும்பவில்லையே! இவனோடு என்ன பேச்சு? இங்கிருந்து போய் விடலாம்' என்ற அவள் ஒரு கணம் எண்ணினாள்.

இருந்தாலும், 'இவன் யார்? தன் நடவடிக்கைகளை அறிய ஏன் விரும்புகிறான்?' என்று [illegible]ரிந்து கொள்ள விரும்பி, மலையடிவாரத்தின் மீதும் அவன் மீதும் பார்வையை மாற்றி மாற்றிப் பரவ விட்டவாறு, "நான் வட்டமிடுகிறேனா? வட்டமிட்டு நான் யாரையும் கொத்திக் கொண்டு போக விரும்பவில்லை. நீங்கள் தவறாக அடையாளம் கண்டு என்னிடம் பேசுகிறீர்கள்'' என்றாள்.

"இல்லை... இல்லை... சரியான பறவையுடன்தான் பேசுகிறேன். நீ யாரையும் கொத்திச் செல்ல விரும்பவில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், உன்னைக் கொத்திச் செல்ல திட்டமிடப்

படுகிறது'' என்றான் அந்த இளைஞன். தன் நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளை மேல் உடையினால் அவன் மெல்லத் துடைத்துக் கொண்டான். மேல் உடை விலகியவுடன் பரந்த மார்பு தெரிந்தது. அது அவன் சேமித்து வைத்திருந்த வலிமையைப் புலப்படுத்தியது. அவன் இடையில் உடைவாள் இல்லை. சொற்கள் தெளிவாக வெளிவந்தன.

பூங்கொடியினால் அவனைப் பார்க்கவும் முடியவில்லை; பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை.

''நீ யார்? இல்லை, இல்லை... நீங்கள் யார்? என் மீது என்ன அக்கறை?'' பூங்கொடி மலையடிவாரத்தைப் பார்த்தவாறே கேட்டாள்.

''நீ என்றே சொல்லலாம். போலியாக நீங்கள் என்று அழைப்பதை விட மன நிறைவுடன் நீ என்று அழைத்தாலே போதும்.''

''நீயோ... நீங்களோ... எப்படிச் சமயத்துக்கு வருகிறதோ அப்படி அழைக்கிறேன். உங்கள் பெயரைச் சொல்லுங்கள். அழைக்கிறேன். அத்துடன் என் மீது தங்களுக்கு என்ன அக்கறை என்றும் சொல்லுங்கள்.''

அவன் சிரித்தான். ''என்னைப் பற்றி நிறையச் சொல்கிறேன். உன் மீது மிகுந்த அக்கறைப்படும்படி உன் தாயார் சொல்லியிருக்கிறார்.''

இதைக் கேட்டுப் பூங்கொடி திடுக்கிட்டுத் திரும்பினாள். ''என் தாயைத் தாங்கள் அறிவீர்களா?'' என்று கேட்டாள்.

அவன் மேலும் கீழுமாய்த் தலையை அசைத்தான்.

''அம்மாவை எப்போது பார்த்தீர்கள்?''

''நேற்று முன்தினம். நீ தஞ்சையிலிருந்து புறப்பட்ட அன்றே.''

''நான் இங்கு வரப்போவது என் அம்மாவுக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

இதைக் கேட்ட பூங்கொடியின் முகம் மாறியது. முன்பே படர்ந்திருந்த களைப்பு, சோர்வுடன் இப்பொழுது பயமும் சேர்ந்தது.

''பயப்படுவதற்கு ஒன்றுமில்லை பூங்கொடி! சற்றுக் கவனமாக இருக்க வேண்டும்; அவ்வளவே. இதைச் சொல்லத்தான் நான் வந்தேன்.''



பூங்கொடி அவனை ஒருமுறை இமைக்காமல் நோக்கினாள்.

''உனது ஒவ்வொரு நடவடிக்கையையும் இளையபிராட்டியார் மிகக் கவனமாகக் கண்காணிக்கிறார்'' என்று அவன் கூறியதைக் கேட்டு, ''என்னை ஏன் கண்காணிக்க வேண்டும்? நான் எதிரி நாட்டைச் சேர்ந்தவளா?'' என்று பூங்கொடி கேட்டாள்.

அவன் சொன்னான்: ''அப்படித்தான் இளையபிராட்டி நினைக்கிறாள். அவள் நினைப்பதை அறிந்த பிறகு நாமும் அதற்கேற்ப மிகக் கவனத்துடன் நடக்க வேண்டாமா?''

''இளையபிராட்டி என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும். எனக்கு அக்கறையில்லை. என் தாய் ஒரு காரியத்தை நிறைவேற்றச் சொல்லியிருக்கிறார். அதற்கான நான் சோழ அரச குடும்பத்துடன் பழகுகிறேன். அது முடிந்தவுடன் நான் சோழ நாட்டை விட்டே போய் விடுவேன்'' என்று கூறிய பூங்கொடி இப்போது திண்ணையிலிருந்து துள்ளி எழுந்தாள்.

தொலைவில் மலைக்கோட்டையிலிருந்து இறங்கி இளவரசர் வர, மதுராந்தகன் பரிவாரங்கள் அணிவகுத்து நிற்பதைப் பார்த்தாள்.

''அதோ, அவர் புறப்படுகிறார். நான் அவரைச் சந்திக்க வேண்டும்'' என்று படிக்கட்டுகளை விட்டு இறங்க முற்பட்ட பூங்கொடியின் கரத்தை அழுத்தமாகப் பற்றிய அந்த இளைஞன், ''எங்கே போகிறாய்? நீ இளவரசர் இருக்கும் இடத்துக்குப் போகக் கூடாது'' என்று சற்றுக் கண்டிப்பாகக் கூறினான்.

'நீ யார் என்னைத் தடுக்க?' என்பதுபோல அவள் சீற்றத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் பிடியினின்று விடுவித்துக் கொள்ள முயன்றும் முடியாமல், அவனை நோக்கி ''என்னை ஏன் தடுக்கிறீர்கள்? நான் அவரைச் சந்தித்தாக வேண்டும்'' என்றாள்.

''சந்திக்கலாம். சந்திக்க ஏற்பாடு செய்கிறேன். இப்பொழுது நீ சென்று ஓய்வு எடுத்துக் கொள். காலையிலிருந்து பசியுடனிருக்கிறாய் என்பதும் எனக்குத் தெரியும். உன் விழியில் பசி புலப்படுகிறது. களைப்பு நடமாடுகிறது'' என்றான்.

பூங்கொடி ஏக்கத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் சொற்களில் உள்ள வேகம் தன்மீது காட்டும் பற்றா அல்லது அதிலும் மறைவாகச் சூழ்ச்சி இருக்கிறதா என்று அவளுக்குப் புரியவில்லை.

பூங்கொடியின் கரத்தைப் பற்றி இழுத்துச் செல்லாத குறையாக அந்தப் பெரிய வீட்டினுள் அந்த இளைஞன் நுழைந்தான்.

அந்த வீட்டில் யாரும் இருப்பதாய்த் தெரியவில்லை. முன் கூடத்து அறை பூட்டப்பட்டிருந்தது. முற்றத்தில் உள்ள கொடியில் காவித் துணி உலர்த்தப்பட்டிருந்தது. தவசிகள் யாராவது இருப்பார்கள் எனப் புலப்படுத்தியது.

இரண்டாவது கட்டிலும் யாரும் இல்லை. மூன்றாவது கட்டில் பேச்சுக் குரல் கேட்டது. உணவுக் கூடம் போல் தோன்றியது.

''பூங்கொடி! தைரியமாக இரு. குளிக்கிறாயா? இருபுறமும் கதவை மூடிவிட்டால் யாரும் வர மாட்டார்கள்.''

பூங்கொடி அங்கே சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''அண்டாக்களில் தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கிறது. குளித்து விட்டு வந்தவுடன் சுடச்சுட உணவு படைக்க தவசிப்பிள்ளை ஆயத்தமாக உள்ளார். நீ குளிப்பதற்குள் நான் உனக்கு மாற்று உடை வாங்கி வருகிறேன்'' என்று கூறி விட்டு, அவளது பேச்சுக்கு மறு பேச்சை எதிர்பாராமல் அவன் சென்று விட்டான்.

தொட்டி முற்றத்தில் குளிப்பதற்கு வசதியாக இருந்தது. ஆடை களை க் களையப் பயமாக இருந்தது. புடைவையை நனைத்து விட்டால் மாற்று உடை இல்லாவிடில் ஈரத்துடன் நடுங்க வேண்டி யிருக்குமே என்ற கவலையுடன் கூச்சம் மிக, உட்கார்ந்தவாறு ஆடையைக் களைந்து அண்டாவிலிருந்து தண்ணீரை மொண்டு ஊற்றிக் கொண்டாள்.

கதவு தட்டும் ஓசை கேட்டது. ''குளித்து விட்டாயா?'' என்ற குரல். பரபரப்புடன் புடைவைத் தலைப்பால் துவட்டிக் கொண்டு பூங்கொடி புடைவையைச் சுற்றுப் போர்த்திக் கொண்டு, கதவைத் திறந்தாள். அந்த இளைஞன் கையில் உடையுடன் நின்றான்.

அந்த உடைகளைப் பார்த்த பூங்கொடி திகைத்தாள். சிரிப்பும் வந்தது. ஆண்கள் அணியும் உடை. மீசை தாடி போன்ற செயற்கைப் பொருள்கள். தலைக்கு முண்டாசு. இடையில் உடைவாள். பூங்கொடி அவனை வியப்புடன் பார்த்தாள்.

''இவை உனக்குத்தான். இந்த உடையுடன் நீ சென்றால்தான் உயிர் பிழைக்கலாம். அத்துடன் இளவரசரைச் சந்திக்கலாம்.''



''ஆண் உடையா? எவ்வளவு நாளைக்கு ஏமாற்ற முடியும்? அகப்பட்டுக் கொண்டால் அவமானத்துடன் தண்டனையும் கிடைக்குமே!''

''ஒன்றும் ஆகாது. என்னுடன் வா. அழகிய இளம் பெண்ணை வெளியே நான் அழைத்துச் செல்வதைவிட ஓர் இளம் வீரனுடன் செல்வதால் சந்தேகம் ஏற்படாதல்லவா?''

''எதற்காக இந்த வேடம்?''

''இளவரசரைச் சந்திக்க வேண்டும் என்கிறாயே? சந்திக்க மிகச் சுலபமாக இது ஒரு வழி. தைரியமாக நடமாட உதவும்.''

பூங்கொடி ஏதும் பேசவில்லை.

''அந்த அறைக்குள் சென்று உடை மாற்றிக் கொள். அதற்குள் தட்டில் உணவு கொண்டு வருகிறேன். பிறகு இளம் மீசை, இளம் தாடியை அணிவித்து விடுகிறேன்'' என்றான்.

'இவனுக்கு ஏன் இவ்வளவு அக்கறை? இவன் சூழ்ச்சியிலிருந்து தப்ப முடியாதோ?' எனப் பூங்கொடி கவலைக் கொண்டாள்.

''பூங்கொடி! தாமதிக்காதே. படகுத் துறைக்கு இளவரசர் வரப் போகிறார். படகில் ஏறிக் காவிரியைக் கடந்து செல்லப் போகிறாய். அங்கே நீ இளவரசரைச் சந்திக்கிறாய்'' என்ற அவனது பேச்சு பூங்கொடிக்கு நம்பிக்கை அளித்தது.

பூங்கொடி இப்பொழுது இளம் வீரனாகக் கம்பீரமாகக் காட்சி யளித்தாள்.

தோணித் துறையில் பல தோணிகள் நின்றிருந்தன. சுழன்று ஓடும் காவிரியைக் கடந்து செல்ல அவை உதவிக் கொண்டிருந்தன.

அரசக் குடும்பத்தவர் வருகிறார்கள் என்றால் அவர்களை அழைத்துச் செல்ல அரச குடும்பத்திற்காக உள்ள தோணி பயன்படுத்தப்படும்.

பெரிய படகு. அன்னம் போன்ற வடிவில் அலங்கரிக்கப்பட்ட படகு. இரு தளங்களுடன் கூடிய விசாலமான படகு. காவிரிக் கரையில் மதுராந்தகன் வருகைக்காகக் காத்திருந்தது.

இளம் வீரன் உடையில் பூங்கொடியும் காத்திருந்தாள். அவளுடன் சேர்ந்து கொள்வதாகக் கூறிய அந்த இளைஞன் மட்டும் இன்னும் வரவில்லை.

# 8. பொய் வேடத்தில் தவித்த பூங்கொடி?

அகண்ட காவிரி இரு கரைகளையும் தழுவியவாறு சுழன்று சுழன்று ஓடிக் கொண்டிருந்தது.

தோணித் துறையில் அரச குடும்பத்துப் பெரும் படகு, புறப்பட ஆயத்தமாக நின்று கொண்டிருந்தது. சிறு மரக்கலம் போல் காட்சியளித்த, அந்தப் பெரும் படகில் பலவித வசதிகள் இருந்தன. நூறு பேர் நிற்குமளவுக்கு மேல் தளம் நீண்டு அகன்றிருந்தது. பாய் மரம் மட்டும் இருந்து விட்டால் அது ஒரு மரக்கலமே.

படகின் அடித்தளம் பஞ்சணை மெத்தைகளுடன் சிறு கூடம் போல் திகழ்ந்தது. வண்ணத் திரைச்சீலைகள் அந்த இடத்து நுழை வாயிலை அழகுபடுத்தின.

துடுப்பும் கோலும் போட ஆயத்தமாகக் காத்திருந்த படகோட்டிகளின் திண்தோள்களில் ஒருவித மினுமினுப்பு இருந்தது. அவர்களுடைய முறுக்கிவிடப்பட்ட மீசையும் தலை முண்டாசும் அவர்கள் எந்தக் கணமும் போர் வீரர்களாக மாறும் வலியுள்ளவர்கள் என்பதைப் புலப்படுத்தின.

ஆற்று நீரின் மெல்லிய அலைகள் படகுகளின் அடிப்புறத்தே மோதிச் 'சளக் சளக்' என்ற ஓசையை உண்டாக்கின. அதனால் படகும் மெல்ல அசைந்தவாறு இருந்தது. படகின் முகப்புடன் பிணைக்கப்பட்ட சங்கிலி வளையம் கரையிலுள்ள மர வேருடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. மர வேரில் உட்கார்ந்து சற்று அமைதியாக வெற்றிலையைச் சுவைத்துக் கொண்டிருந்த படகுத் தலைவரின் பார்வை மட்டும் இளவரசர் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தது.

இளவரசர் வருவதற்கு முன்பே அவருடைய பரிவாரங்கள் வரத் தொடங்கினர். இளவரசருக்குத் தேவையான பண்டங்களைச் சுமந்து வருவோர் கரையில் மூட்டைகளைக் கொண்டு சேர்க்கத் தொடங்கினர்.



'இளவரசர் மதுராந்தக சோழ தேவர் வாழ்க! வாழ்க!' என்ற வாழ்த்தொலி திடீரென்ற எழுந்தது. குதிரைகளின் குளம்படி ஓசை கேட்டது. புலிக்கொடி பிடித்து அணிவகுத்து வந்தவர்கள் குதிரைகளினின்று இறங்கி வழிவிட்டு, மரியாதையுடன் வரிசையாக நின்றார்கள்.

ஆற்றங்கரை ஓரம் அகன்று வளர்ந்திருந்த அரச மரத்தின் அருகே இளவரசர் வருகைக்காகக் காத்திருந்த இளம் வீரன் வடிவில் இருந்த பூங்கொடி, மிகத் தெளிவாக இளவரசரைப் பார்த்தாள். இளவரசர் இந்தப் பக்கம், அந்தப் பக்கம் நோக்காது நேர்கொண்ட பார்வையுடன் வந்து கொண்டிருந்தது அவளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

வெயிலில் வந்ததால் சற்றுக் களைப்புற்றதுபோல் அவர் தோன்றினாலும், மாலைக் கதிரவனின் பொன்னொளி பட்டு வியர்வைத் துளிகள் செம்பொன் நிற மேனிக்குப் புது மெருகிட்டன.

அதோ... இளவரசர் படகில் ஏறிவிடப் போகிறார்!

மதுராந்தகனின் கம்பீரமான தோற்றத்தை அள்ளிப் பருகிக் கொண்டிருந்த பூங்கொடியின் உள்ளத்தில் அச்சமும் கவலையும் சூழ்ந்தன. மாற்றுருவில் அவளை அங்கே வருமாறு ஏற்பாடு செய்த அந்தப் புதியவன் - இளைஞன் - இன்னும் வரவில்லை.

'இப்படியோர் அறிமுகமற்றவரின் பேச்சைக் கேட்டு, சுய வடிவை விட்டு மாறுவேடத்தில் தான் வந்திருப்பது சரிதானா?' என்று தன்னைத் தானே அவள் கேட்டுக் கொண்டாள். இப்படியோர் இளம் வீரன் வடிவில் இல்லாமல், பூங்கொடியாக அந்த இடத்தில் நின்றிருந்தால், ஒருவேளை இளவரசரின் பார்வையில் பட்டு அவர் அருகே செல்லும் வாய்ப்புக் கிடைத்திருக்கலாம்; நல்ல வாய்ப்பை நழுவ விட்டுவிட்டோமே!

அவள் பார்வை இளவரசரிடமிருந்து தாவி அந்தப் புதிய இளைஞனைத் தேடியது.

இளவரசர் படகில் ஏறிவிட்டார். மேல் தளத்தின் ஓரமாக நின்று கொண்ட அவர், சுழன்றோடும் பொன்னி நதியின் மேனியை மாலைக் கதிரவன் செம்பொன் துகிலால் போர்த்திவிடும் அதிசயத்தை ரசித்துக் கொண்டிருந்தார்.

''விக்கிரம சிங்க வேளாரே! இத்தகைய ரசவாத வித்தையை நாம் வேறு எங்கு கண்டு மகிழ்ந்திருக்கிறோம் என்பது தங்களுக்கு

''என்று மதுராந்தகன், தம் அருகே நின்று நினைவிருக்கிறதா?'' என்று மதுராந்தகன், தம் அருகே நின்று காவிரியின் சுழலை நோக்கியவாறிருந்த சோழ நாட்டுப் படைத் தலைவர்களுள் ஒருவரான கம்பன் மணியனை நோக்கிக் கேட்டார்.

இளவரசர் மதுராந்தகனை விடச் சில ஆண்டுகளே மூத்தவர், கம்பன் மணியன் விக்கிரம சிங்க வேளார் என்ற புகழ்ப் பெயருடன் கூடிய அவர் சோழ நாட்டின் படை வீரர்களுடன் சேர்ந்து, சேர நாட்டுப் போர்க்களங்கள் பலவற்றில், சோழப் படை வீரர்களுக்குத் தலைமை தாங்கி, வெற்றி மாலையைச் சூடியிருக்கிறார். சேர நாட்டுக் கடற்கரையில் மேல் திசையில் கதிரவன் மறையும் காட்சியை மதுரனும் அவரும் கண்டு இயற்கையின் அற்புதத் திருக்கோலத்தில் மனத்தைப் பறி கொடுத்திருக்கின்றனர்.

''ஆகா! மறக்க முடியுமா? திருவிழிஞம் கடற்கரையில் வட்டத் திகிரி போல் சுழன்று சுழன்று கதிரவன் மேலைக் கடலில் நீராடக் குதித்தக் காட்சியை இன்னும் மறக்க முடியவில்லை'' என்று கம்பன் மணியன் கூறியவுடன், மதுராந்தகனும் உணர்ச்சிவசப்பட்டவராக, ''ஆமாம், மூவேந்த வேளாரே! சேர நாட்டிலேயே தங்கிவிட வேண்டும் என்ற ஆசை அப்போதே உண்டாகிவிட்டது'' என்ற பழைய நினைவை மனக்கண் முன் கொண்டு வந்தார்.

''ஆமாம்; சேர நாட்டிலேயே தங்கிவிடும் மனநிலை தங்களுக்கு இருந்தது என்பது எனக்குத் தெரியும். அடுத்துச் செய்ய வேண்டிய பணிகளை வகுத்து உத்தரவிட்ட சக்ரவர்த்திகள் நம்மை உற்சாகப் படுத்த வேண்டிச் சேர வெற்றியின் நினைவாக என்ன பரிசு வேண்டும் என்று நம்மைக் கேட்டது நினைவிருக்கிறதா?''

கம்பன் மணியன் இவ்வாறு கேட்டபோது மதுராந்தகனின் நினைவு சேர நாட்டு வெற்றி விழாவை நோக்கிச் சென்றது. அது நடந்து சில ஆண்டுகள் ஆகிவிட்டன. இருந்தாலும் அந்தச் சம்பவம் பசுமையாகவே அவன் மனத்தில் இருந்தது. சேர நாட்டுப் போர்க்களங்கள் பலவற்றிற்குத் தந்தை இராசராச சோழருடன் மதுரனும் சென்றிருக்கிறான். ஒரு சமயம் இராசராசரின் பிறந்த நாளான சதயத் திருநாள் வந்தது.

சேர நாட்டுத் திருமுட்டம் என்ற ஊரில் இராசராசன் தன் பிறந்த நாளைக் கொண்டாடினார். அந்த ஊரின் பெயரை மாற்றி அன்று முதல் மும்முடிச் சோழநல்லூர் என்ற பெயரில் வழங்குமாறு உத்தர



விட்டார். விழா நாளன்று இராசராசனை வாழ்த்த முதியவர் ஒருவர் வந்தார்.

அவர் விழிகளில் முதிர்ந்த அறிவின் ஒளி வீசியது. இராசராசனுடன் அவர் சைவ சமயத்தைப் பற்றியும் நாட்டியக் கலையைப் பற்றியும் கோயில்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார். சோதிட சாத்திரத்தில் வல்லவராகத் திகழ்ந்த அவர் இராசராசனுடன் அந்தக் கலையின் சிறப்பை எடுத்துரைத்தவாறு இருந்தார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவற்றை அவர் விவரித்தார்.

தஞ்சையில் மீண்டும் சோழப் பரம்பரையினர் அரியணை ஏற விஜயாலயர் செய்த வரலாற்றையும் வீரம்மிக்க தன் பெற்றோரைப் பற்றியெல்லாம் இராசராசன் அவரிடம் விவரித்துக் கொண்டிருந்தார். தம் சகோதரன் ஆதித்த கரிகாலன் கொலையுண்டதையும், தம் சிறிய தந்தை மதுராந்தகன் என்ற உத்தம சோழருக்கும் தமக்கும் அரியணைக்கு ஏற்பட்ட போட்டியையும் இராசராசன் விவரித்துக் கொண்டிருந்தார்.

அரியணை உரிமையைத் தம் சிறிய தந்தை உத்தம சோழருக்கு விட்டுக் கொடுத்து, தாம் கடல் கடந்த நாடுகளுக்குப் பயணம் செய்ய முற்பட்டதையும் அவர் விவரித்தார்.

மரக்கலம் ஏறிப் பயணம் செய்தபோது வழியில் தாம் சென்ற கலம் முல்லைத் தீவில் பழுது பார்க்கச் சிறிது காலம் தங்கியதை எடுத்துக் கூறி, அந்த முல்லைத் தீவு மக்களின் கலை அறிவையும், அங்கே அழகிய பெண் ஒருத்தியைத் தான் சந்தித்ததையும் விவரித்தார்.

சோழ சக்ரவர்த்தி விவரித்து வந்த சுய சரிதத்தைக் கேட்டவாறிருந்த முதியவர் நேரமறிந்து விடைபெற எழுந்தார்.

''இராசகேசரி இராசராச சோழ தேவரே நீவிர் வாழ்க! நும் கொற்றம் வாழ்க!'' என்று வாழ்த்தி விடை பெறும்போது, அவர் கூறிய ஒரு சொல் இராசராசனைப் பெரிதும் கவர்ந்தது.

''சோழ சக்ரவர்த்திகளே! நீங்கள் இதுவரையில் கூறி வந்த சரிதம் இப்படியே காற்றிலே கரைந்துவிடக் கூடாது; இதைக் காவியமாக்க வேண்டும். தங்களுடைய பன்னாட்டுத் திக்விஜயத்தை நாடகமாகப் படைத்து, கூத்தில் வல்லவர்களைக் கொண்டு நாட்டிய நாடகமாக்கினால் பட்டி தொட்டி மக்களெல்லாம் நுமது பெருமையை, தாம் வாழும் சோழ நாட்டுப் பெருமையை உணர்வர், தலை நிமிர்வர்!'' என்று கூறினார்.

இராசராச விஜயம் - நாட்டிய நாடகம்! இராசராசன் மனத்தில் அந்த எண்ணம் மொட்டு விட்டது. தஞ்சை சென்றவுடன் தக்கவரைக் கொண்டு இசை, நாட்டிய நாடகம் ஒன்றைப் படைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

தம் வாழ்க்கையோடு பின்னப்பட்ட அந்த நாடகத்தில் இன்ப வல்லியும் ஒரு கதைப் பாத்திரமாக வருவாள் என்ற எண்ணம் ஏற்பட்டபோது அவருடைய மெய்சிலிர்த்தது. 'இன்பவல்லியா? ஆ! அவள் இப்போது எங்கு இருக்கிறாளோ? அவள் விஷயத்தில் நான் நடந்து கொண்ட முறை சரியில்லையோ?' என்ற வேதனை அவர் மனத்தில் எழுந்தது. அவள் இருப்பிடத்தை ஒற்றர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. சோதிடரிடமாவது கேட்போம் என்று இன்ப வல்லியைப் பற்றிக் கேட்க வாயெடுத்தார். ஆனால், கேட்க வில்லை. அந்த முதியவர் - சோதிடர் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

அவர் சென்ற மறுகணமே இளைஞன் மதுராந்தகன் அங்கு வந்தான். அவன் செவிகளில், அந்தப் பேரறிஞருடன் தன் தந்தை பேசிய முழு உரையாடலும் விழவில்லை என்றாலும் கடல் கடந்த நாடுகள், கலை, நாட்டியம், நாடகம் என்பவை மட்டுமே விழுந்தன.

**ம**துரன் அன்று தந்தைக்கும் தனக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை இப்போது நினைவுபடுத்திக் கொண்டான்.

''சேர விஜயத்தின் நினைவாக உங்களுக்கு என்ன பரிசு வேண்டும்?'' என்று தன் தந்தை வினவியபோது அவரை நோக்கிக் கேட்டது இப்போதும் அவன் நினைவை விட்டகலவில்லை.

''பேரரசே! இயற்கைச் சூழல் நிறைந்த இந்த மலை நாட்டில் தங்கிச் சில காலம் கழித்துத் தங்களைப் போன்று கடல் கடந்து சென்று பல நாடுகளைச் சுற்றிப் பார்க்க அனுமதிக்க வேண்டும். முல்லைத் தீவு, மரகதத் தீவு, சாவகத் தீவு, கடாரம் போன்ற நாடு களுக்குச் சென்று அங்குள்ள கலைஞர்களோடு தொடர்பு கொண்டு, கலை பல கற்று வர வேண்டும். அதுவே என் ஆசை'' என்றான்.

முல்லைத் தீவு என்றவுடன் இராசராசன் முகம் சிறுத்தது. முல்லைத் தீவில் இன்பவல்லியைத் தாம் சந்தித்ததைப் பற்றி மூதறிஞரிடம் சற்று முன்பு பேசிக் கொண்டிருந்ததைத் தம் மகன் கேட்டிருப்பானோ என்ற ஐயம் அவருக்கு எழுந்தது.



''மதுரா! பேரறிஞர் என்னுடன் கடல் கடந்த நாடுகளைப் பற்றிப் பேசி யவையெல்லாம் கேட்டாயா?'' என்ற கேள்வியை அவனிடம் வீசி, மகன் முகத்தை உற்று நோக்கி அவன் உள்ளத்தை ஊடுருவ முயன்றார்.

''முல்லைத் தீவு, சாவகத் தீவு இவற்றிலெல்லாம் தாங்கள் என்ன என்ன கண்டு மகிழ்ந்தீர்கள் என்பனவற்றையெல்லாம் தங்களிடம் கேட்டு அறிய வேண்டும் என்ற ஆவல் எனக்குண்டு. ஆனால், நேரமும் காலமும் கூடி வரவில்லை. ஆனால், முல்லைத் தீவு பற்றிப் பேசிக் கொண்டது ஏதோ காதில் விழுந்தது. பெயரே மிக அழகாக இருக்கிறது. அங்கெல்லாம் செல்ல வேண்டும் என்ற ஆவல் ஏற்படு கிறது. சேர நாட்டு இயற்கை வளம் என் மனத்தில் நிறைந்துள்ளது. நாம் வென்ற இந்தப் பகுதியிலே புலிக் கொடியை நிலைநாட்டி நான் இங்கேயே தங்கிவிடட்டுமா அரசே?'' என்று மகன் கேட்டபோது தான், இன்பவல்லியைப் பற்றி அவன் அறிந்து கொள்ளவில்லை என்ற திருப்தி இராசராசருக்கு ஏற்பட்டது.

கடல் கடந்த நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தி லிருந்து மகனுடைய கவனத்தை மாற்ற விரும்பிப் பேச்சைத் திசை திருப்பி, ''மதுரா! நம் மனத்துக்குப் பிடித்த இடங்களில் எல்லாம் தங்கி விட முடியுமா? இன்னும் கொங்கு நாட்டிலும், குடமலை நாடுகளின் மலை வளத்திலும், துங்கபத்திரை, கிருஷ்ணை, கோதாவரி நதிகளின் நீர் வளத்திலும் நீ மயங்கி மனத்தைப் பறி கொடுத்து அங்கெல்லாம் தங்க முடிவெடுத்துவிடக் கூடாது, மகனே! இயற்கையை ரசிக்க வேண்டும்; முடிந்தால் வெல்ல வேண்டும். அடிமைப்படக் கூடாது, மகனே! இன்னும் நிறைய வயதிருக்கிறது உனக்கு. வெற்றித் திருவுக்கு மாலையிடப் போகிறாய்; மணக்கப் போகிறாய். வீரப் புகழ்நாட்டப் போகிறாய்'' என்று கூறி, கம்பன் மணியனை நோக்கி, ''பார்த்தீர்களா? நல்லவேளையாக சேர நாட்டி லேயே தங்கி விட வேண்டும் என்ற ஆசை உமக்கு எழவில்லை'' என்றார், உதட்டில் குறும்புப் புன்னகை தவழ.

''சக்ரவர்த்திகளே! சோழ வளநாடு எனக்குப் பிடித்த மண். அந்த மண்ணிலே, எனது சொந்த ஊரிலே, சிவபெருமானுக்குக் கோயில் கட்டி வழிபடுவது ஒன்றே எனது ஆசை. வேற்று நாடுகளில் தங்கும் ஆசை இல்லை'' என்று கூறி விட்டார் கம்பன் மணியன்.

இராசராசன் மனமகிழ்ந்து, அவரை அருகில் இருந்த ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே பொன்னும் மணியும் குவிந்திருந்தன. எல்லாம் சேர நாட்டின் சொத்து.

''மூவேந்த வேளாரே! இதோ பாருங்கள், நமது வெற்றியின் பரிசு! வைர வைடூரியங்கள் மின்னுவதை! ரத்தின கோமேதகங்கள் ஒளி வீசுவதை! உங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

கம்பன் மணியனின் பார்வை பொற்குவியலின் மீது விழவில்லை. வைர வைடூரிய நவரத்தினங்களின் மீது படவில்லை. அந்த நிதிக் குவியல்களுக்கு அருகே தங்கப் பீடங்களில் கம்பீரமாகத் திகழ்ந்து கொண்டிருந்த சிவபெருமான், பார்வதி திருமேனிகளின் மீது அவரது பார்வை சென்றது.

இப்பொழுது கம்பன் மணியனுக்கு, அந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. கம்பன் மணியன் மெல்ல நகைத்துக் கொண்டார்.

''என்ன, உங்களுக்குள்ளேயே சிரித்துக் கொள்கிறீர்கள் வேளாரே?'' என்று கேட்டான் மதுரன்.

''சேர நாட்டிலே, சோழ சக்ரவர்த்திகளோடு பேசிக் கொண்டிருந்த அந்த நாளின் நினைவு வந்தது. அறையில் நிறைந்திருந்த பொன் வைர வைடூரியங்களைச் சுட்டிக்காட்டி 'வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்' என்றார் மாமன்னர். என்னால் சுமக்கக் கூடிய அளவுக்கு எடுத்துக் கொண்டிருக்கலாம்.''

''ஏன் எடுத்துக் கொள்ளவில்லை?''

''இளவரசே! பொன்னும் மணியும் எவ்வளவு நாள்களுக்கு வரும்? இந்த உலகத்தில் சில காலம் வளமுடன் வாழ வழி செய்யும். ஆனால், வருங்காலத்துக்கு? அதனால் சக்ரவர்த்திகளை நோக்கி அங்கே இருந்த சிவ - பார்வதி உடன்உறை செப்புத் திருமேனிகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தருமாறு கேட்டேன்.''

''இறைவன் திருமேனிகளையா? அவை தங்களுக்கு எதற்கு? போர்க்களத்துக்கு உடன் எடுத்துச் செல்வீர்களா? வாழ்க்கையில் எந்த விதத்தில் அந்தச் செப்புப் படிமங்கள் உதவும்?''

மதுரன் இவ்வாறு கூறவும், கம்பன் மணியன் அவனை வியப்புடன் நோக்கி, ''என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள் இளவரசே? போர்க்களங்களும் வெற்றிகளுமா நிலைக்கப் போகின்றன? எனக்கு நம்பிக்கை இல்லை. கொலை வாளை இடையிலே சுமந்து, போர்க்களங்களில் எதிரிகளின் தலைகளை வெட்டிச் சாய்த்து, ரத்த ஆற்றில் மூழ்கி எழும் செயலா நமது பெயரை அழியாமல் நிலைத்து



நிற்க வைக்கும் என்று எண்ணுகிறீர்கள்? சிவபெருமானின் திருத்தாள்களை மனத்தில் என்றும் மறவாது நினைத்திருக்க உதவும் இறைவனின் திருஉருவங்கள் தாம் நமக்குத் துணையாக இருக்கும். அதனால்தான் அழகிய அந்தச் செப்புப் படிமங்களைக் கேட்டேன்'' என்றார்.

''உங்கள் வேண்டுகோளை மன்னர் ஏற்றாரா? சக்ரவர்த்திகள் தந்தாரா? நான் கேட்டதை மறுத்ததுபோல்...'' என்று மதுரன் கேட்கவும், ''இளவரசே! தங்கள் தந்தையின் சிவ பக்தியை அப்போதுதான் நான் அறிந்தேன். சேர நாட்டினின்று அவர் கைப்பற்றிய ஒரு செப்புத் திருமேனியைக் கூட அவர் தர முன் வரவில்லை. அதற்கு மாறாக அங்கிருந்த மரகத தேவர் திருமேனியைச் சுட்டிக்காட்டி 'வேளாரே! இந்த விக்கிரகத்தைப் பார்த்தீர்களா? எவ்வளவு அழகாயிருக்கிறது? பெயருக்கு ஏற்றபடி ஒளி வீசுகிறது' என்றார். என் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கூறி கம்பன் மணியன் நிறுத்தினார்.

கம்பன் மணியன் சொல்வதை ஆவலுடன் கேட்டவாறிருந்த மதுராந்தகன், ''உம் பிறகு என்ன ஆயிற்று? தங்கள் விருப்பம் நிறைவேறியதா இல்லையா?'' என்று கேட்டான்.

'இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்த அவர், ''சக்ரவர்த்திகளைக் குறை கூற முடியாது. அவருக்குச் சிற்பங்கள் மீதும், செப்புப் படிமங்கள் மீதும் உள்ள மரியாதை கலந்த ஆசையைப் புரிந்து கொண்டேன். அவர் என்னைச் சமாதானப்படுத்தினார். 'வேளாரே! எதை வேண்டுமானாலும் கேளுங்கள். இந்தத் திருமேனிகளை மட்டும் கேட்காதீர்கள். சேர வெற்றியின் நினைவாக நான் இவற்றைத் தஞ்சைக்கு எடுத்துச் செல்கிறேன். அங்கே கோயில் கட்டி இந்தத் திருமேனிகளை வீற்றிருக்கச் செய்யப் போகிறேன். பொன்னையும் பொருளையும் கேட்காமல், இறைவன் திருச்சிலைகளைக் கேட்கும் தங்கள் தெய்வ பக்தியை மெச்சுகிறேன். தங்களுக்கு உயர்தரமான விக்கிரகம் ஒன்றைப் பரிசாகத் தரப் போகிறேன்' என்று கூறி நிறுத்தி, என் முகத்தை மன்னர் நோக்கினார். முகத்தில் எந்தவிதச் சலனத்தையும், பிரதிபலிப்பையும் புலப்படுத்தாமல் அமைதியாக நான் இருந்தேன்.

''சக்ரவர்த்திகள் மிக அமைதியாக, 'வேளாரே! நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்யக் கூடுமானால் அதற்கு விலை மதிப்பற்ற பரிசொன்றை உங்களுக்குத் தருகிறேன்' என்று கூறினார்.''

''உதவியா? சக்ரவர்த்தியா தங்களிடம் உதவி கேட்டார்?'' - மதுரன் ஆவலுடன் கேட்டான்.

''ஆமாம்; எனக்கு அதில் மிகப் பெருமைதான். மன்னர் பிரான் என்னிடம் உதவியொன்று கேட்டதே பரிசுதானே?'' எனவுரைத்த கம்பன் மணியன் மெல்லிய புன்முறுவலுடன் கூறினார், ''பொறுத் தருள வேண்டும், இளவரசே! மன்னர் என்னிடம் வாக்குறுதி பெற்றிருக்கிறார்; அவர் கேட்ட அந்த உதவியை ஒருவரிடமும் நான் கூறக்கூடாது என்று.''

மதுரன் முகம் மாறியது; ''என்னிடம் கூடச் சொல்லக் கூடாதா?''

''சக்ரவர்த்திகள் வாக்குறுதி கேட்டார்; உதவி கேட்டார் என்ற விஷயத்தை நான் இவ்வாறு வெளியே புலப்படுத்துவதே தவறுதான்'' என்ற கம்பன் மணியன் அந்தப் பேச்சிலிருந்து கவனத்தை மாற்று வதற்காக, ''அதோ பாருங்கள்! வானிலே பவனி வந்த சூரியன் மிக மிக மெல்ல மெல்ல - ஆனால், எவ்வளவு வேகமாக மேற்குத் திசை யில் இறங்குகிறான் பார்த்தீர்களா? மறுகரையை நாம் அடைவதற் குள் இருட்டிவிடும் என்று நினைக்கிறேன்'' என்றார்.

மதுரன் எதும் மறுமொழி கூறவில்லை. கம்பன் மணியனிடம், தனது தந்தை என்ன உதவி கேட்டிருப்பார் என்ற எண்ணம் அவனது மனத்தைச் சுற்றி வட்டமிட்டது.

கம்பன் மணியன் சுட்டிக் காட்டிய மேற்கு வானத்து ரசவாத வித்தையைக் கூடப் பாராமல், மேல் தளத்தின் மறுபக்கத்துக்குச் சென்றான்.

படகோட்டி துடுப்புகளை விரைவாகப் போடும் லாகவம் அவனது கவனத்தைக் கவரவில்லை.

கம்பன் மணியன் மதுரனை விட மூத்தவர் என்றாலும், மதுர னுடனே இணைந்து எங்கும் செல்வார். இவ்வளவு காலமாக அவர் தம் மனத்தில் மன்னர் கூறிய ரகசியத்தை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வந்தார் என்றால், அது அவருடைய மன உறுதியைப் புலப்படுத்துகிறது என்று மதுரன் எண்ணினாலும் தனக்குத் தெரியாமல் அப்படி என்ன ரகசிய உதவியைத் தன் தந்தை கேட்டிருப்பார் என்று மதுரன் சிந்திக்கலானான்.

பொன்னியின் குளிர் நீரில் தவழ்ந்து வந்த காற்று மென்மையாக உடலைத் தழுவிச் சென்றாலும், மதுரனுக்கு உடலில் இலேசான



வெம்மை சூழ்ந்தது. நா வறட்சி ஏற்பட்டது போல் உணர்ந்தான். ஏதாவது பருகினால் நல்லது என்று எண்ணினான்.

''யார் அங்கே?'' என்று கை தட்டி அழைத்தான்.

கீழ்த்தளத்துக்குச் செல்லும் வாயில் அருகே நின்று கொண்டிருந்த இளம் வீரன் வடிவில் இருந்த பூங்கொடியை மதுரன் அழைத்தான்.

தன்னை இளவரசர் அழைப்பார் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. இதுவரை கம்பன் மணியனுடன் இளவரசர் பேசிக் கொண்டிருப்பதை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த பூங்கொடி, இளவரசர் அழைக்கும் கரவொலி கேட்டதும் உடனே தன்னை அழைத்ததும் அதிர்ச்சியை அளித்தது.

படகுத்துறையில் மரத்தடியில் அந்தப் புதியவனான இளைஞனுக் காகக் காத்திருந்தவள், அடுத்து என்ன செய்வது என்று திகைத்துப் படகருகே நெருங்கியபோது பின் பக்கத்திலிருந்து ஒரு முரட்டுக்கரம் அவள் முதுகைத் தட்டியது.

''ஏன் இங்கே நிற்கிறாய்? இந்தப் பழக்கூடையை யார் எடுத்துச் சென்று படகில் ஏற்றுவது? படகு புறப்பட வேண்டாமா? உம்; சீக்கிரம்'' என்று அந்த உருவம் அதட்டியது.

கரையில் ஒரு கூடையில் செவ்வாழைப் பழங்கள் நிறைந்திருந்தன.

''இளம் வயதிலேயே படை வீரனாக வர மட்டும் ஆசை. 'போர்க் களத்தில் மட்டுமே தோள் வலியைக் காட்டுவேன்; மற்ற வேலை களைச் செய்ய மாட்டேன்' என்று வேலை செய்யப் பின் வாங்கினால் நடக்குமா?'' என்று கூறித் தானும் ஒரு கை கொடுத்துப் பழக் கூடையை அவளுடைய தலையில் தூக்கி வைத்து உதவியது அந்த உருவம்.

பழக்கூடைப் பாரம் தலையை அழுத்த, பூங்கொடி படகில் தட்டுத் தடுமாறி ஏறி, பழக் கூடையைக் கீழ்த்தட்டில் வைத்துவிட்டு, மேல் தளத்துக்கு வருவதற்குப் படகுத் தள வாயில் அருகே நின்றாள்.

அப்போதுதான் இளவரசரும், கம்பன் மணியனும் ஓடும் பிரவாகத்தைப் பார்த்தவாறு பேசிக் கொண்டிருந்தனர். பூங்கொடி அவர்களைப் பார்த்தவாறு நின்றாள்.

மதுரன் அங்கே ஒரு நிலையில் நிற்காமல் திரும்புவதும், பிறகு ஓடும் நதியை எட்டிப் பார்ப்பதுமாக, கம்பன் மணியனுடன் பேசிக்

கொண்டிருந்ததை அந்த மறைவிடத்திலிருந்து பார்ப்பது அவளுக்கு மிக வசதியாக இருந்தது. மதுரனின் கம்பீரத் தோற்றமும், விரிந்த திண் தோள்களும், காற்றில் இலேசாக அசைந்து கழுத்தில் மெல்லத் தவழும் கேசமும், முகத்தின் கம்பீரத்தை அதிகப்படுத்தும் கவர்ந்து சர்க்கும் நாசியும், ஒளி பாய்ச்சும் விழிகளும், மெல்லிய மீசையும், நெடிய கரங்களும், அசைந்தாடும் செவிக் குண்டலங்களும் பூங் கொடியின் உள்ளத்தைச் சுண்டி இழுத்தன.

'இந்தப் படகு இப்படியே போய்க் கொண்டே இருக்காதா? நாம் இது போலவே நின்று இளவரசரின் திருஉருவத்தை ரசித்தவாறு இருக்க மாட்டோமா?' என்று பூங்கொடி எண்ணினாள்.

ஆனால், ஒரு தவறு செய்து விட்டோம். இப்படி ஒரு பொய் வேடம் புனைந்திருக்க வேண்டாம்.

பூங்கொடியாக நாம் இங்கு வந்திருந்தால் இளவரசர் நம்மை வரவேற்றிருக்க மாட்டாரா?

அதோ அவருடன் பேசிக் கொண்டிருப்பதற்கு மாறாக நம்மிடம் பேசுவார். நின்றவாறு பேசுவார். மேல் தளத்தில் என்னையும் கூட உட்காரச் சொல்லிப் பேசுவார். ஆடச் சொல்லியிருப்பார்.

ஆடினால் என்ன? படகின் ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஏற்ப நம்மால் ஆட முடியாதா?

சாயுங்கால வேளையில் பறவையினங்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சியைப் போல், மிகக் குதூகலகமாக ஆடிக் காட்ட முடியாதா? மாலைக் கதிரவனின் சாயும் கதிர்களைப் போன்று நாட்டியத்தில் உணர்ச்சிகளைப் பின்னிக் காட்ட முடியாதா?

இளவரசரும் ஆட்டத்தில் ரசித்து உற்சாக மிகுதியால் ஆடத் தொடங்கலாம். கை கொடுத்தும் ஆடலாம். கை கோத்தும் ஆடலாம். அளவோடு அடியெடுத்து வைக்கும் நமது பாதங்களுக்கு இணையாக அவருடைய பாதங்களை வைத்து ஆடலாம். கை கொட்டி ஆடலாம். இடுப்பில் கரம் கொடுத்து ஆடலாம். இரு கரங்களையும் பிடித்துச் சுழன்றாடலாம்.

ஆகா! ஆட வைத்தால் யாரொருவர் ஆடாதாரே? ஆனால், தாய் என்ன சொல்லியிருக்கிறாள்? மறந்துவிடக்கூடாது.

'பெண்ணே! மாளிகையில் கவனமாகப் பழகு. உன் அழகுக்கு உன்னிடம் தோழமை பூண்டு வருவார்கள். உன் பருவத்துக்காக



உன்னுடன் நெருங்கிப் பேச வருவார்கள். அரண்மனை அதிகாரி களைத் திரும்பிப் பாராதே. ஆனால், அதே சமயம் அரச குமாரர் மனத்தைச் சுண்டி இழுக்கும் வண்ணம் பழகு. சோழ இளவரசர் பார்வையில் நீ ஒருவேளை பட்டுவிட்டால், உன் ஆடலால் அவர் பித்தாகிப் பித்தம் தலைக்கேறி உன்னை அவர் அடையத் துடிக்கும் நிலை வரும்போது நீ அவரை ஒதுக்கிவிடு. அந்த மோகத் தீயில் அவர் எரிந்து சாம்பலாகட்டும்.'

அடாடா! என் தாய்க்கு ஏன் இவ்வளவு கோபம்? சோழ இளவரசர் பார்வையில் ஒருவேளை நான் பட்டுவிட்டால்?

ஒருவேளை என்ன... நல்லவேளையில்தான் பட்டுவிட்டேன். என் அழகு அவர் விழிகளில் பதிந்திருக்கும். என் நடனத் திறமை அவரைக் கவர்ந்திருக்கும். ஆனால், அவரை நெருங்குவதற்கு முன் இளையபிராட்டி பிரித்து விட்டாரே? இப்பொழுது இந்தப் படகில் யார் என்னைத் தடுக்க முடியும்?

ஓ! பேதைப் பெண்ணே! நீ இப்போது ஓர் இளைஞன் வடிவில் இருக்கிறாய். ஆண் வேடம் பூண்டிருக்கிறாய். வீரன் வடிவில் இருக்கிறாய். எதற்காக இந்த வேடத்தை ஏற்றாய்? ஒரே நொடியில், சத்திரத் திண்ணையில் சந்தித்த அந்தப் புதிய இளைஞனின் பேச்சில் ஏன் மயங்கினாய்? உன்னை எதற்காக அவன் இப்படி மாறுவேடம் பூணச் செய்தான்? மிக எளிதில் நம்பி விடுகிறாயே.

அப்போதுதான் - இளவரசர் ''யார் அங்கே?'' என்று கைதட்டும் ஓசை கேட்டது. ''பருக ஏதாவது கொண்டு வா'' என்ற குரலும் கேட்டது.

அவள் அப்படியே நின்று கொண்டிருந்தாள். அப்படிக் கம்பம் போல் நிற்கலாமா? யாராவது பார்த்து விட மாட்டார்களா?

## 9. திகைப்பூட்டிய செய்தி

இளையபிராட்டி குந்தவ்வை தேவியார் தஞ்சை மாளிகையை அடைந்தபொழுது நன்றாகச் சாய்ந்து விட்டது. இருள் அரசன் தன் ஆட்சியைத் தஞ்சையில் நிலை நாட்டத் தொடங்கி விட்டான்.

அரச மாளிகை நுழைவாயிலிலும், நடைபாதையிலும் கற்றூண்களிலும் பெரும் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டன. ஆசார வாசலைக் கடந்து நடுவே விரிந்திருந்த தோட்டத்துக்கு அப்பால் இருந்த முக மண்டபத்துத் தூண்களில் சுழுந்துகள் காற்றில் அலைபாய்ந்து எரிந்து கொண்டிருந்தன.

அதைக் கடந்து மிக விசாலமான கொலு மண்டபத்தில் தொங்கிக் கொண்டிருந்த சினத்து அலங்கார விளக்குகள் ஒவ்வொன்றையும் பணியாட்கள் ஏற்றிக் கொண்டிருந்தனர்.

கொலு மண்டபத்துக்கு இருபுறமும் அந்தப்புரத்து மகளிர் அமர்ந்து சபை நிகழ்ச்சிகளை நோக்கும் நீண்ட மாடத்தில் இருள் நிறைந்திருந்தது.

கொலு மண்டபத்தைக் கடந்து, அந்தப்புரத்துக்குச் செல்லும் படிக்கட்டுகளில் போதுமான வெளிச்சம் இல்லை.

மெத்தென்று இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்ட படிக்கட்டு களில் இளையபிராட்டி அடிமேல் அடிவைத்து ஏறியபோது, கடந்து போன நினைவுகள் அவளைப் பின் தொடர்ந்ததால், நடை சற்றுத் தடைப்பட்டது.

ஒருமுறை கொலு மண்டபத்தை நின்ற இடத்திலிருந்து திரும்பிப் பார்த்தாள். அரியணை உள்ள மேடையை மெல்லிய திரைச் சீலை சூழ்ந்திருந்தது. எதிரே இருபுறமும் உள்ள இருக்கைகளை ஒருமுறை அவள் பார்த்தாள்.

இதே அரியணையில் அவளுடைய தந்தை இராசகேசரி சுந்தர சோழர் கம்பீரமாக அமர்ந்திருந்து ஆட்சி புரிந்ததை அவள் அந்தப்புர மகளிர் வீற்றிருந்து நோக்கும் மாடத்திலிருந்து பார்த்திருக்கிறாள். பிறகு அவர் நோய்வாய்ப்பட்டு சபை மண்டபத்துக்கே வர முடியாத நிலையில், சில காலம் சபை மண்டபம் வெறிச்சோடி இருந்ததையும் பார்த்திருக்கிறாள். பிறகு நடந்த கலக்கம் நிறைந்த நாள்களையும் அவள் அறிவாள். தந்தை நோய்வாய்ப்பட்டு, காஞ்சிப் பொன் மாளிகையில் கிடந்தபோது தனது மூத்த சகோதரன் ஆதித்த கரிகாலன், இளவரசு பட்டத்தை ஏற்றுக் கொள்வான் என்று குதூகல மாக இருந்ததையும் ஆனால், இளவரசு பட்டம் சிறிய தந்தை உத்தம சோழருக்குத்தான் என்று ஏற்பட்டவுடன் மன வேதனைப்பட்டதை யும் நினைத்துக் கொண்டாள். அடுத்து நடந்த நிகழ்ச்சியின் நினைவு களோ அவளைப் பயங்கரமாக உலுக்கிவிட்டன.



அவள் உடல் நடுங்கியது. அவளுடைய மூத்த சகோதரனும், நம்பிக்கை நட்சத்திரமுமாகத் திகழ்ந்த ஆதித்த கரிகாலன் படு கொலை செய்யப்பட்ட சம்பவம்... அதைத் தொடர்ந்து தந்தை இறந்தது. ஆ... சங்கிலி போல் தொடர்ந்த நிகழ்ச்சிகளின் அதிர்ச்சி யினின்று அவளால் மீளவே முடியவில்லை.

அவை மட்டுமா? ஆதித்த கரிகாலனுக்குப் பிறகு சோழ அரியணையில் அமரப் போகிறவர் தன் இளவல் அருண்மொழி வர்மர் என்று எண்ணியிருந்தது போக, தன் சிறிய தந்தை அரசு உரிமை ஏற்றதும், அருள்மொழி கடல் கடந்த நாடுகளுக்குச் சென்றதும் அவள் மன மாளிகையை இருளடையச் செய்தன. அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கு ஆறுதல் கூறக்கூட ஒருவருமே இல்லை. அவளுடைய இதய தெய்வம் வல்லவரையரும் குற்றஞ்சாட்டப் பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

குந்தவ்வையைத் தவிர வேறு எந்தப் பெண்ணாலும் இடி இறங்கியது போன்று தொடர்ந்து நடந்த அதிர்ச்சி நிறைந்த நிகழ்ச்சி களைத் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. அதிர்ச்சியையும் துயரத் தையும் மறக்க அவள் அந்தப்புரத்திலேயே தங்கியிருந்தாள்.

காலம் அப்படியே செல்லவில்லை. பனிப்படலம் கலையாமல் மூடிக் கிடக்கவில்லை. அந்தகாரத்தின் நுனி விளிம்பில் மின்மினிப் பூச்சி போன்ற ஒளிக்கதிர் மெல்லப் பரவியது. மலரத் துடிக்கும் தேன் மலர் மொட்டுகளின் மீது வைகறை விரல்கள் தடவிப் பரிமாறின.

கடல் கடந்த நாடுகளிலிருந்து இளவல் அருண்மொழி வந்தார். சோழ நாட்டை, மதுராந்தகச் சோழர் என்ற பட்டப் பெயருடன் ஆண்டு வந்த உத்தமசோழர் சுவர்க்கஸ்தரானார். அடுத்து அருண் மொழி வர்மர் தாம் அரசராக வேண்டும் என்ற ஒரே குரல் கொடுத்து, ஆதித்த கரிகாலரைக் கொன்ற கொடியவர்களைக் கண்டுபிடிப்பதில் முதலமைச்சர் அநிருத்தப் பிரம்மராயர் பெரிதும் உதவினார். வல்லவரையர் வந்தியத்தேவன் கொடுஞ்சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். எல்லாம் சுபம், சுபம், மங்களம்.

இளையபிராட்டி என்ற மதிப்புமிகு பெயரால் குந்தவ்வை தேவியார் அழைக்கப்பட்டார். அவள் அன்புடன் வளர்த்து வந்த இளவல் மதுரன் - இராசராசனின் மகன் மதுரன் - நாள் ஒன்று கழியக் கழியப் புதிய பொலிவோடு கண் எதிரே வளர்ந்து கம்பீரமாக நின்றது ஒன்றே இளையபிராட்டியின் துயரத்தை எல்லாம் மாற்றியது.

வாழ்க்கைச் சக்கரம் சோகப் பாதையைக் கடந்து புகழ் தரும் பொலிவு மிகுந்த பாதை வழியே கம்பீரமாக உருண்டது.

இளையபிராட்டி பெருமூச்சு விட்டாள். கடந்த கால நினைவுகளை அந்தப் படிக்கட்டுகள் நினைவுபடுத்தின. படிக்கட்டு ஒவ்வொன்றும் கடந்த காலக் கதைகளைக் கூறவல்லவை. இனி வருங்காலம் ஒளிமயமாக இருக்கும்.

இன்று, இப்பொழுது, இளையபிராட்டியின் நடையில் புதிய துள்ளல் இருந்தது. தன் இளவல், சோழ சக்ரவர்த்தி, உலகம் புகழும் மாவேந்தர் இராசராச சோழ தேவரைக் காண அவள் செல்கிறாள்.

அவருடைய பிறந்த நாள் விழா - சதயத் திருநாள் - விரைவில் வர இருக்கிறது. இன்று அதைப் பற்றிப் பேசப் போகிறோம் எனும் பொழுதே அவளுக்குப் புத்துணர்ச்சி பொங்குகிறது.

சோழ நாட்டுக்கு எதும் குறைவில்லை. எட்டுத் திக்கிலும் புலிக் கொடியின் புகழ் ஓங்கியிருக்கிறது. இராசராசனின் பெருமையை நிலைநாட்ட அவர் மகன் மதுரன் கம்பீரமாக நிற்கிறான். அயல் நாட்டவர்கள் மதுராந்தகன் என்றாலே கதி கலங்குகிறார்கள்.

மகிழ்ச்சியால் விரிந்திருந்த குந்தவ்வையின் உள்ளத்தில் ஏதோ ஒரு சிறு நெருடல். ஒன்றென்றால் அதைத் தீர்த்துக் கொள்ளலாம். பல. ஒன்று - இளவரசர் மதுராந்தகனைப் பற்றியது. மற்றொன்று - அவளுடைய இதயவேந்தன் வல்லவரையர் வந்தியத்தேவனைப் பற்றியது.

இவ்வாறு நினைத்துக் கொண்டே இராசராசனின் அந்தரங்க அறையருகே அவள் வந்துவிட்டாள்.

உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. யாரோ பேசும் குரல் கேட்டது. இந்த நேரத்தில் அவருடைய அந்தரங்க அறையில் அமர்ந்து பேசுபவர் யாராயிருக்கும்? இளையபிராட்டி அறையின் வெளியே சற்று நின்றாள்.

தொலைவில் மிக பய பக்தியுடன் நின்றிருந்த பணியாட்கள் இளைய பிராட்டியரைக் கண்டவுடன் எண்சாண் உடம்பை ஒரு சாணாகக் குறுக்கிக் கொண்டு பணிவுடன் நின்றனர்.

சோழ நாட்டில் பெரிய பிராட்டியார் என்ற மரியாதையுடன் அழைக்கப்படும் செம்பியன் மாதேவியாருக்கு அடுத்தபடியாக இளையபிராட்டியாருக்கு மதிப்பும், மரியாதையும் மிக அதிகம்.



பெரிய பிராட்டியாருக்கு இல்லாத அதிகாரம் குந்தவ்வை தேவியிடம் இருந்தாலும், வல்லவரையரின் துணைவியார் என்ற மரியாதை வேறு சேர்ந்ததால், குந்தவ்வைக்குச் சோழ மாளிகையில் மரியாதை மிக அதிகம். அன்புடன் பயமும் கலந்த மரியாதை.

தான் வந்திருக்கும் செய்தியை அரசரிடம் சென்று தெரிவித்த பிறகுதான் உள்ளே நுழைய வேண்டும் என்பதில்லை. என்றாலும் குந்தவ்வை உள்ளே நுழையவில்லை.

தொலைவில் நின்ற பணியாளனை அழைத்தாள். வயது முதிர்ந்த, மிக நம்பிக்கைக்குரியவன் அவன்.

''கேசவா...'' என்று அழைத்தவுடனே, அவன் தன் வயதையும் மறந்து விரைந்து வந்து, வாய் பொத்தி, பயபக்தியுடன் நின்றான். இளையபிராட்டியைச் சிறு வயதிலிருந்தே அவன் அறிவான். அந்த மாளிகையில் நடைபெற்ற இன்ப துன்ப நிகழ்ச்சிகள் பலவற்றை அவன் கண்கூடாகக் கண்டிருக்கிறான்.

வல்லவரையர் வந்தியத்தேவன் முதன் முதலில் அந்த மாளிகைக்கு வந்ததையும், குந்தவ்வையைச் சந்தித்ததையும் அவன் அறிவான்.

''இளையபிராட்டி மட்டும் ஆண் மகனாகப் பிறந்திருந்தால் ஆதித்த கரிகாலனுக்குப் பிறகு அவங்கதான் சோழ நாட்டு அரசராயிருப்பாங்க'' என்று அவன் வேடிக்கையாகத் தன் சக ஊழியர்களிடம் கூறவும், ''இப்பொழுது மட்டும் என்ன, இளையபிராட்டி கிழித்த கோட்டை நமது அரசர் தாண்டமாட்டாரே! நமது அரசர் என்ன... இளவரசரும் இளையபிராட்டியாரின் யோசனைப்படி தானே நடக்கிறார்?'' என்று அவர்கள் மறுமொழி கூறியதைக் கேசவன் ஆமோதித்தான்.

''கேசவா! நலமாயிருக்கிறாயா? உன் மகன் நலமா? உன் மகள் எங்கே இருக்கிறாள்?'' என்று கேசவனின் குடும்ப நலனை விசாரித்துக் கொண்டே, ''நமது சக்ரவர்த்தி நலமா? சென்ற சில நாள்களாக உடல் நலமில்லாமல் இருந்ததாகக் கேள்விப்பட்டேன்'' என்று கேட்டாள்.

அகமும் முகமும் மலரக் கேசவன் தன் மகனும், மகளும் நலமாக இருப்பதை விவரித்து, ''அரசர் உடல்நலம் இப்பொழுது சற்று முன்னேறியிருக்கிறது'' என்று தெரிவித்தான்.

''அதுதானே பார்த்தேன்... சற்றுக்கூட ஓய்வில்லாமல் பொழுது சாய்ந்த பிறகும் யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறாரே'' என்று

அரசர் இருப்பிடத்தை எட்டிப் பார்த்துப் பேசுபவள் போலக் கேட்டாள் இளையபிராட்டி.

''ஆமாங்க... சென்ற சில நாள்களாகவே அரசர் யார் யாரையே அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறார்'' என்றான்.

இளையபிராட்டி அவனிடம் பேசிக் கொண்டே உள்ளேயிருந்து வரும் பேச்சொலியிலும் கவனம் செலுத்தினாள்.

மஞ்சத்தில் சாய்ந்தவாறு, தன் எதிரேயுள்ள அமுதன் தீர்த்தகர னுடன் இராசராசர் பேசிக் கொண்டிருந்தார்.

விளத்தூர் கிழவன் அமுதன் தீர்த்தகரன் என்றழைக்கப்படும் அவர் இராசராசனின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெரிதும் பெற்றிருந்த காரணத்தால் திருமந்திர ஓலை நாயக அலுவலில் அமர்த்தப்பட்டு பல ஆண்டுகளாக அந்தப் பணியைச் சிறப்புடன் ஆற்றி வந்தார்.

இப்பொழுது அவர் கரத்தில், அரசரின் உத்தரவை எழுத ஓலையும் எழுத்தாணியும் இல்லை. இருவருமே ஏதோ மிக முக்கிய அலுவல் குறித்துக் கலந்தாலோசித்துக் கொண்டிருந்தனர். அரசர் சொல்வதை மிக கவனமாகக் கேட்பதும், பிறகு அதற்கு மறுமொழியாகத் தீர்த்தகரன் கூறுவதும் அதை அரசர் ஊன்றிக் கவனிப்பதுமாக உரையாடல் நடந்து கொண்டிருந்தது.

''அமுதனாரே! கல்யாணபுரத்திலிருந்து வந்த செய்தி உண்மை தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு விட்டீர்களா?'' என்று இராசராசன் கேட்டார்.

''ஆம், சக்ரவர்த்திகளே! நாகப்பட்டினத்துப் புத்த விகாரைக்குச் சென்றிருந்தபோது பிட்சுவைச் சந்தித்தேன்.''

''பிட்சுவையா? கல்யாணபுரத்திலிருந்து புறப்பட்டு நாகப்பட்டி னத்துக்கு வந்திருக்கிறாரா? பயண நலத்தைக் கேட்டறிந்தீர்களா?''

''வழியில் பயணக் களைப்பு இல்லாதபடி ஆங்காங்கே உள்ள சத்திரங்கள் மிகவும் உதவியாக இருந்தனவாம். ஆனால், சாளுக்கிய நாட்டு எல்லையைக் கடந்து வருவது அவ்வளவு எளிதாக இல்லை யாம். சாளுக்கிய மன்னன் சத்தியாச்ரயனின் கெடுபிடி மிக அதிகமாம்.''

ஓ! தைலபன் இறந்த பிறகு சத்தியாச்ரயனின் விநோதப் போக்கு மிக அதிகமாகிவிட்டதா?''



''சக்ரவர்த்திகளே! சத்தியாச்ரயன் நமது பலத்தை இன்னும் தவறாகவே மதிப்பிடுகிறான். தாங்கள் குதிரைமீதிருந்து அவனுடன் நேருக்கு நேர் சண்டையிட்டு அவனை ஓட ஓட விரட்டியதை மறந்து விட்டான். வேங்கியின் மீது படையெடுத்து அந்த நாட்டுப் பகுதி களைச் சாளுக்கிய நாட்டுடன் சேர்த்துக் கொள்ளத் திட்டமிட்டுப் படைகளை சில ஆண்டுகளாகத் திரட்டி வருகிறான். அதன் பிறகு நமது நாட்டின் மீதும் படையெடுக்கத் திட்டமாம். அவன் போருக்கு ஆயத்தமாகும் செய்தி வெளியே தெரியக்கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறானாம்.''

''ஓ! போருக்கு ஆயத்தம் செய்கிறானா சத்தியாச்ரயன்? தீர்த்தகரரே! சாளுக்கியத் தலைவலியை நிரந்தரமாக நாம் அழித்து ஒழித்து விட வேண்டாமா?''

இதற்குத் தீர்க்கரன் மறுமொழி கூறும் முன்பாக இராசராசனே தொடர்ந்து, ''பூண்டோடு ஒழித்தால்தான் நாம் நிம்மதியாக இருக்கலாம். என் காலத்துக்குப் பிறகு மதுரன் ஆட்சியில் சாளுக்கியர்கள் தொந்தரவு இருக்கக்கூடாது என்பது என் கருத்து. சரி; நாகப்பட்டினத்துக்கு அந்தப் பிட்சு எவ்வாறு வந்து சேர்ந்தார்? அதை விவரமாகச் சொல்லுங்கள். பிட்சுவை உளவு அறிந்து செல்ல ஒரு வேளை சத்தியாச்ரயன் இங்கே அனுப்பி இருக்கலாம் அல்லவா?''

இராசராசனின் இந்தக் கேள்வியைக் கேட்டு, தீர்த்தகரன் ஒரு கணம் திகைத்தாலும் மறுகணம், நிமிர்ந்து உட்கார்ந்து ''சக்ரவர்த்தி களே! வேற்று நாட்டினின்று வந்த பிட்சுவை நான் உடனே நம்பி விடுவேனா? நான் வணங்கும் புத்தபிரான் பெயரைச் சொல்வதால் - உடனே நம்புவதற்கு நானும் மெய்ப்பொருள் நாயனாரா!'' என்று கேட்டபோது இராசராசன் மெல்ல நகைத்தார்.

சிவனடியார்கள் பெயரைச் சொல்பவர்களை - திருநீறு அணிந்து சிவனடியார் போன்று வேடம் பூண்டவர்களை - நம்பி விடுவாராம் மெய்ப்பொருள் நாயனார் எனும் அரசர். அவருடைய எதிரி, சிவனடியார் வடிவில் வந்து அவரை மிக எளிதில் கொன்று விட்டார். அந்தச் சிவனடியாரின் கதையை நினைத்தே இராசராசன் மெல்ல நகைத்தார்.

''அந்த இளம் பிட்சுவை எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தெரியும். அவர் கல்யாணபுரத்துக்குச் சென்று அங்குக் குருமார் களிடம் துறவு பெற்றார். சாத்திர அறிவு மிகப் பெற்ற அவருக்குக்

கல்யாணபுரத்தில் நல்ல மதிப்பு. ஆனால், அவருக்கு ஏனோ கல்யாண புரத்தில் தங்கியிருக்கப் பிடிக்கவில்லை. நாகப்பட்டினத்துப் புத்த விகாரத்துக்கு வந்துவிட வேண்டும் என்று அவர் முயன்றிருக்கிறார். அதற்குப் பலன் சமீபத்தில்தான் கிடைத்தது. ஆனால், இரு நிபந் தனைகளுடன்தான் அவரைச் சாளுக்கிய நாட்டை விட்டுச் செல்ல அனுமதித்தார்கள். ஒன்று, சாளுக்கிய நாடு போருக்கு ஆயத்த மாவதைப் பற்றியோ, ஆயுதங்கள் போர்க் கருவிகள் சேமித்து வைத்திருக்கும் இடத்தைப் பற்றியோ அவர் ஒருவரிடமும் சொல்லி விடக்கூடாது. மற்றொன்று தன்னுடன் மற்றொரு துறவியையும் அழைத்துச் செல்ல வேண்டும். சோழ நாட்டுப் படை பலம், போர் ஆயத்தங்கள் பற்றி முழு விவரமும் அவரிடம் தெரிவித்து, அவரை எவ்வளவு விரைவில் கல்யாணபுரத்துக்குத் திருப்பி அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவில் அனுப்பி வைக்க வேண்டும். இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதாக அவர் சத்தியம் செய்தால்தான் சாளுக்கிய நாட்டை விட்டு அவர் வெளியேறலாம்.''

தீர்த்தகரன் இவ்வாறு கூறி நிறுத்தியவுடன் இராசராசன் கேட்டார்: ''இளம் பிட்சு சத்தியம் செய்துவிட்டு வந்திருக்கிறாரா?''

''ஆமாம்'' என்றார் தீர்த்தகரன்.

''அவருடன் மற்றொரு பிட்சுவும் வந்திருக்கிறாரா?''

''ஆமாம்; நிழல் போல் பின் தொடர்கிறார்.''

''பிட்சுவை நிழல் போல் தொடர்வதால் சோழ நாட்டு ரகசியங் களை அவர் எப்படி அறிய முடியும்?''

''நான் அதைப் பற்றி விசாரித்தேன். இளம் பிட்சு அதி புத்திசாலி; திறமைசாலியும் கூட. ஆனாலும் இப்போது அவர் செய்வதறியாமல் திகைக்கிறார்!''

''ஏன் திகைக்க வேண்டும்? அவருடன் நிழல் போல் ஒட்டிக் கொண்டிருப்பவரை ஒற்றன் என்று கூறி நம் அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட வேண்டியதுதானே?''

''சக்ரவர்த்திகளே! நானும் இந்த யோசனையைக் கூறி, ஒரு கணத்தில் அவருடைய அச்சத்தைப் போக்கிவிட முயன்றேன். அவர் முகத்தில் கலவரம் நிறைந்த சோக உணர்வு படர்ந்தது. சத்தியத்தை மீறி வாக்களித்தபடி நடக்காவிடில், தன் உயிருக்கு உடனே ஆபத்து ஏற்படுமாம்.''



''எப்படி?''

''இவர்கள் இருவரையும் கண்காணிக்க மூன்றாவதாக ஓர் ஒற்றனையும் சத்தியாச்ரயன் அனுப்பியுள்ளானாம்...''

''சோழ நாட்டில் சாளுக்கிய ஒற்றனா? நமது ஒற்றர்கள் இதை அறிவார்களா?''

''இதுவரை அறியவில்லை என்றே தெரிகிறது. ஏனென்றால், சோழ நாட்டிலேயே இருக்கும் ஒருவர் சாளுக்கிய ஒற்றராக இருக்கிறார் என்றால் அவ்வளவு எளிதில் அவரைக் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், அந்த ஒற்றருக்குப் பிட்சு நாகப்பட்டினம் வந்தது தெரியும். அவர் சாளுக்கிய அரசருக்குச் செய்து கொடுத்த சத்தியம் தெரியும். சத்தியம் மீறினால் அவர் உயிரைப் பறிக்கும் வலிமை அவருக் குண்டாம்.''

தீர்த்தகரன் இவ்வாறு கூறி நிறுத்தவும், இராசராசன் சற்று மௌன மாக இருந்து, பிறகு திருமந்திர ஓலை நாயகத்தைப் பார்த்து, ''இவ்வளவு செய்திகளை அறிந்து வைத்துள்ளீர்கள். திருமந்திர ஓலை நாயகமாக அரண்மனையிலேயே இருப்பவருக்கு இவ்வளவு செய்திகள் தெரிந்திருப்பது பாராட்டுக்குரியதுதான். சரி; இளம் பிட்சுவின் பெயர் என்னவென்று சொன்னீர்கள்?''

''அனந்தபாலர்!''

''கல்யாணபுரத்தில் இருந்து அவர் ஏன் நாகப்பட்டினத்துக்கு வரத் துடித்தார்?''

''அதையும் விசாரித்து விட்டேன். அது ஒரு காதல் விஷயம்'' என்று கூறிய திருமந்திர ஓலை நாயகத்தின் முகத்தில் மெல்லிய புன்னகை எழுந்தது.

''காதலா? இளம்பிட்சுவுக்குக் காதலா?'' என்று இராசராசன் வியப்புடன் கேட்டார்.

''சக்ரவர்த்திகளே! இளம் பிட்சு அனந்தபாலராக இருக்கும்போது அவர் காதல் விவகாரத்தில் இறங்கவில்லை. பூர்வாச்ரமத்தில் அவர் சந்திரசூடன் என்ற திருப்பெயருடன் நாகப்பட்டினத்துக்குப் போய் ஓடி ஆடி விளையாடி, கல்வி கற்று வாழ்ந்தபோது காதல் கலை யிலும் அனுபவப்பட்டார்.''

''ஓகோ... சந்திரசூடன் சகலகலா வல்லவனா?'' சக்ரவர்த்தியார், தம் சிந்தனையை எங்கோ, ஓடவிட்டவாறு கேட்டார்.

''ஆமாம்... சந்திரகுடன் கல்வி கற்கக் காஞ்சிமா நகரம் சென்றான். வேதம், தத்துவம், உபநிடதம், வியாகரணம் எல்லாம் கற்றுத் தேர்ந்தான். அவனுடைய உள்ளத் தடாகத்தில் காதல் பூ அரும்பு விட்டது...'' இராசராசன் நிமிர்ந்து

மஞ்சத்தில் சற்று ஒய்வாகச் சாய்ந்திருந்த இராசராசன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''வேதம், உபநிடதம், தர்க்கம், வியாகரணம் கற்றதால் மட்டும், மாறன் கை வில்லினின்று தப்ப முடியுமா? காதல் மகத்தானது. அது எப்போது தோன்றும்? எப்போது பற்றும்? எப்போது பரவும்? எப்போது சோதனையில் ஆழ்த்தும்? எப்போது பிரிவு அளித்து வேதனைப்படுத்தும்? எப்போது தியாகத்துக்கு ஆயத்தப்படும்? எப்போது சிக்கலில் ஆழ்த்தும் என்று சொல்ல முடியாது. இளம் பிட்சு மட்டும் அதற்கு விலக்கா?'' என்று கூறி மன்னர் பெருமூச்சு விட்டார்.

''சக்ரவர்த்திகளே! இளம் பிட்சுவாக மாறுவதற்கு முன்புதான் இந்தக் காதல் நாடகம்!'' என்று தீர்த்தகரன், சக்ரவர்த்திகளுக்கு ஞாபகமூட்டுவது போல் தெரிவிக்கவும், ''தீர்த்தகரரே! பிட்சு வாகவோ, அடியாராகவோ, இளவரசராகவோ, அரசராகவோ... எந்த உருவத்தில் இருந்தாலும் காதல் எனும் அற்புதச் சக்தியில் சிக்காமல் தப்ப முடியாது'' என்று கூறியபோது அனுபவத்தில் முதிர்ந்த உணர்வு அந்தச் சொற்களில் இருந்தது.

இவ்வளவு உரையாடல்களையும் வாயிற்கதவின் அருகே நின்று கேட்டுக் கொண்டிருந்த இளையபிராட்டி. இப்போது கம்பீரமாக உள்ளே நுழைந்தாள்.

உலகத்து சக்ரவர்த்தி என்றாலும் இளையபிராட்டிக்கு இராசராசன் என்றுமே தம்பிதான்.

''தம்பி!'' என்றழைத்த குரல் கேட்டவுடனே இராசராசனுக்கு ஒரு கணம் மெய்சிலிர்த்தது. அருகிலிருந்த திருமந்திர ஓலை நாயகத்திடம் ''யார் அக்கையாரா?'' என்று கேட்டவாறு மெல்ல எழ முயன்று, ''இளையபிராட்டியாரா! வாருங்கள், வாருங்கள்.... ஏது இந்த நேரத்தில்?'' என்று கூறி வரவேற்றார். திருமந்திர ஓலை நாயகம் மெல்ல எழுந்து மரியாதையுடன் ஒதுங்கிக் கைகூப்பி நின்றார்.



''மிக சுவாரஸ்யமான கட்டத்தில் நான் வந்து கலைத்து விட்டேன் அல்லவா? காதல் தத்துவ ஆராய்ச்சி நடைபெறுகிறது. நானும் கலந்து கொள்கிறேன். அந்தப் புனிதத் தத்துவத்தில் எனக்கும் அனுபவம் உண்டு. அது எப்போது பிரிவை அளித்து வேதனைப்படுத்தும்; எப்போது தியாகத்துக்கு ஆயத்தப்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. தம்பி! எவ்வளவு உண்மை! எவ்வளவு அனுபவ பூர்வமான உண்மை!'' என்று இளையபிராட்டி கூறியவாறு, இராசராசன் அருகே அமர்ந்தாள்.

இராசராசனுக்கு ஒரு கணம் பேசச் சொற்கள் ஏதும் வரவில்லை. சகோதரியை வரவேற்க வார்த்தைகள் வரவில்லை. சாய்ந்திருந்தவர் மெல்ல எழுந்து அவளுக்கு மரியாதை தெரிவித்து வரவேற்க முயன்றார்.

''தம்பி! அப்படியே இரு. நமக்குள் என்ன உபசாரம், மரியாதையெல்லாம்? மிகவும் முக்கியமான பேச்சுக் கட்டத்தில் நான் வந்து இடையே தடைப்படுத்தி விட்டேன்'' என்று கூறியவாறு சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''சந்திரகுடனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்களே... அவன் பெயரை எங்கோ கேட்டது போல் தோன்றுகிறது'' என்று தீர்த்தகரனைக் கேட்டாள்.

தீர்த்தகரன், அரசரைப் பார்த்தார். அவரிடமிருந்து 'சொல்லலாம்' என்ற கண் அசைப்பு வந்தவுடன் சந்திரகுடனைப் பற்றிச் சொன்னார்.

சந்திரகுடனைப் பற்றிச் சொல்லச் சொல்ல... இளையபிராட்டியின் நினைவுகள் பின் நோக்கிச் சென்றன.

தீர்த்தகரன் சொல்லி முடித்ததும் இளையபிராட்டி கேட்டாள்: ''தீர்த்தகரரே! இப்போது சந்திரகுடன், இல்லை - இல்லை - புத்த பிட்சு எங்கிருக்கிறார்? நான் அவரை உடனே சந்திக்க வேண்டுமே'' என்று கேட்டாள்.

இதற்கு இராசராசனே மறுமொழி கூறினார்: ''தேவி! புத்த பிட்சு இங்கே வருவார். வருமாறு ஏற்பாடு செய்கிறேன். அவர் இப்போது நமது அரண்மனையில் மிக முக்கியஸ்தராகி விட்டார். அவரை நமது அரண்மனையிலேயே வைத்துக் கொள்வதா அல்லது சுதந்தரமாகச் சோழ நாடெங்கும் நடமாட விடுவதா என்பதைத்தான் முடிவு செய்ய வேண்டும்'' என்றார்.

''பிட்சவுக்குத் தடை விதிக்காதீர்கள்'' என்றாள் குந்தவ்வை.

மெல்லச் சிரித்த இராசராசன், ''தீர்த்தகரர் சொல்கிறார்... 'பிட்ச சோழ நாட்டுக்கு மிக வேண்டியவராக இருப்பார்' என்று. ஆனால். சாளுக்கிய சத்தியாச்ரயர் பிட்சவைப் பெரிதும் நம்பியுள்ளார். ஆனால், எப்படிச் சோழ நாட்டில் பிட்ச சுதந்தரமாக உலவவிட முடியும்?'' என்று குந்தவ்வையை நோக்கிக் கேட்டார்.

''தம்பி! பிட்சவைத் தன்விச்சையாக நடமாட விடு; கட்டுப்பாடு விதிக்காதே. மிக அவசியமும், அவசரமும் கூட'' என்ற இளைய பிராட்டியின் அழுத்தமான வேண்டுகோள், கட்டளை போலவே தோன்றியது இராசராசனுக்கு.

இளையபிராட்டி ஒன்று சொல்கிறாள் என்றால் அதில் முக்கியத்துவம் இருக்கும் என்று இராசராசன் அறிவார். அதைக் கேட்டறிய விரும்பிய இராசராசன், தீர்த்தகரனை மறுநாள் வருமாறு சொல்லிவிட்டு, குந்தவ்வையை நோக்கி, ''அக்கா! வல்லவரையர் எங்கே? அவரும் வந்திருந்தால் மிக முக்கியமான ஆலோசனை நடத்தி முடிவு எடுக்கலாம் என எண்ணினேன். சாளுக்கியர்கள் வேங்கி மீது படையெடுக்கும் முன்பே நாம் கல்யாணபுரத்தைத் தாக்கி அவர்களைச் செயலற்றுப் போகுமாறு செய்ய வேண்டும்'' என்றார்.

''உறையூர் சென்றிருந்தோம். சிராப்பள்ளிமலை உச்சிக்குச் சென்று பிள்ளையாரை வணங்கினோம்...'' என்று பேச்சைத் தொடரும்போது இராசராசன் குறுக்கிட்டு மெல்ல நகைத்தவாறு, ''என்ன வேண்டிக் கொண்டீர்கள்?'' என்று கேட்டார்.

''என் இளவல் உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட நெடுங்காலம் வாழ வேண்டிக் கொண்டேன்.''

''பிறகு...?!''

''செல்வன் மதுரன் பெயரும் புகழும் பெற்று வாழ வேண்டும் என்று வேண்டினேன். விரைவில் இளவரசராகப் பட்டம் பெற்றுத் தந்தையின் புகழைத் தரணியெங்கும் நிலை நாட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்.''

''அவ்வளவுதானா? உங்களுக்கென்று ஒன்றும் வேண்டிக் கொள்ளவில்லையா?'' என்று இராசராசர் கேட்டவுடன், அக்கையார் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை நொடியில் கண்டறிந்த அரசர், ''அக்கா! எனக்காகவும் என் மகனுக்காகவும் நிறையவே வாழ்ந்து



விட்டீர்கள். இனி உங்களுக்காக வாழ வேண்டாமா? அதற்குப் பிள்ளையார் அருளை நீங்கள் வேண்ட வேண்டாமா?'' என்று கேட்டார்.

''எங்களுக்கு என்ன குறை அருள்மொழி? தந்தை, தாய்க்குப் பிறகு உடன்பிறந்த தமக்கையிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டு சகல வசதிகளையும் செய்து கொடுத்து, சொந்தமாக நாட்டையும் கொடுத்த என் மதிப்புமிகு தம்பியின் அன்பு என்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்ற பிள்ளையாரை வேண்டிக் கொண்டேன். தம்பியிடம் எங்களுக்குள்ள அன்பு என்றும் மாறக்கூடாது என்றும் வேண்டிக் கொண்டேன்'' என்று கூறியபோது இளையபிராட்டியின் குரல் தழுதழுப்பதையும் இராசராசன் உணரத் தவறவில்லை.

''அக்கா! தாங்கள் என்னை உருவாக்கவில்லை என்றால் இந்த இராசராசன் ஏது? அதுபோல் தாயில்லாக் குழந்தையான மதுரனைச் சொந்தப் பிள்ளைபோல் வளர்க்கவில்லை என்றால் சோழ நாட்டுக்கு ஒளிமயமான எதிர்காலம் ஏது?

''வல்லவரையர் பழுவேட்டரையரைப் போல், சம்புவரையரைப் போல் சுதந்தரமாக குறுநில மன்னராக விளங்க வேண்டும் என்பதற்காகப் பிரம்மதேசத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை அளித்தேன். அது ஒரு பெரிய பரிசா - வல்லவரையர் சோழ நாட்டுக்குச் செய்த தொண்டையும் தங்களுடைய பணியையும் ஒப்பிடும்போது? ஆனால், எனக்கு மட்டும் ஒரு குறை தேவி! சொல்லட்டுமா?'' என்று கேட்டார்.

இளையபிராட்டி, தன் இளவல் இராசராசனை நிமிர்ந்து பார்த்தாள். என்ன சொல்லப் போகிறார் என்பதை ஓரளவு ஊகித்துக் கொண்டுவிட்ட இளையபிராட்டியின் முகம் சிவக்கத் தொடங்கியது. அதேபோது விழிகளில் மெல்லிய நீர்த்திரை பரவியது.

''என் சகோதரியின் குலப் பெயர் விளங்க ஒரு வாரிசு உருவாக வேண்டாமா? தங்களுக்கு ஒரு பெண் பிறந்திருந்தால் அந்தப் பெண்ணை என் மகன் மதுரனுக்கு மணம் செய்து கொடுத்திருப்பேன். அவர்களுக்குப் பிறக்கும் மகன் தொடர்ந்து சோழ அரியணையில் அமர்வான். இப்படி ஓர் இலட்சியக் கனவு கண்டேன். என் ஆசையை நிறைவேற்றவாவது...'' என்று இராசராசர் கூறவும், இளையபிராட்டி தன் வேதனை உணர்வை வெளிக்குப் புலப்படுத்த விரும்பாமல், அந்தச் சூழ்நிலையை மாற்ற விரும்பினாள்.

''வல்லவரையர் பழுவூருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார். அங்கிருந்து பிரம்மதேசம் செல்கிறார். புதிய மாளிகை உருவாகி வருகிறது. கட்டடம் நிர்மாணிக்கும் பணியைப் பார்வையிட்டு விட்டுத் திரும்புவார். ஐப்பசி சதயம் உன் பிறந்த நாள் அன்றோ! அதற்குள் வந்து விடுவார். வல்லவரையருக்கு ஆசை - இராசராச விஜயம் நாடகத்தில் நான் பங்கேற்க வேண்டுமாம்!'' என்று கூறிச் சிரித்து, பேச்சை வேறு பக்கம் திருப்ப எண்ணினாள்.

''ஓ! பழுவூருக்கா! பழுவேட்டரையர் உடல்நலம் இல்லாமல் படுத்த படுக்கையாய் இருப்பதாகக் கேள்வி. நீங்கள் போய்ப் பார்க்க வில்லையா? புதிய மாளிகை உருவாவதைக் காண வேண்டாமா? நான் ஒன்று கேட்கிறேன்; கோபிக்கக்கூடாது பிராட்டி! தாங்கள் வல்லவரையரை விட்டு இனி பிரியவே கூடாது. நாளையே புறப்பட்டுப் பிரம்மதேசம் சென்று வல்லவரையரையும் அழைத்துக் கொண்டு தஞ்சைக்கு வந்து சேருங்கள். சாளுக்கியப் போரைப் பற்றி கலந்தாலோசிக்க வேண்டும்'' என்றார்.

இளையபிராட்டி மௌனமாக இருந்தாள். பிறகு மெல்லிய குரலில், ''மாளிகை உருவாவதை விட அவருக்குத் தன் மகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல். மகளைப் பார்த்துவிட்டுத் தஞ்சைக்கு விரைவில் வந்து விடுவார். அதனால் நான் பிரம்மதேசம் போவதில் பயனில்லை'' என்றாள்.

இராசராசர் திடுக்கிட்டார். ''என்ன சொல்கிறீர்கள்? வல்லவரையர் தம் மகளைப் பார்க்கப் போயிருக்கிறாரா? மகளா? அவருடைய மகளா? வல்லவரையருக்கு!'' என்று திகைப்புடன் கேட்டார்.

''ஆம்'' என்று தலையை அசைத்தாள் இளையபிராட்டி.

## 10. முதியவர் வேடத்தில் வந்த இளைஞன்

பூங்கொடிக்கு விழிப்பு ஏற்பட்டது. பாதி விழியைத் திறந்து பார்க்க முடிந்தது. உடலை அசைக்க முடியவில்லை. ஆனால்,



சுற்றுப்புறத்தில் நடப்பவை புலனுக்கு எட்டின. அருகே இருந்த மாமரத்திலிருந்து கருங்குருவியின் ''அக்கூ அக்கூ'' என்ற இனிய கீதம் கேட்டது. கருங்குருவியின் குரல் கேட்டால் அப்பொழுது நேரம் என்னவென்று பூங்கொடிக்குத் தெரியும்.

எவ்வளவோ நாள்கள் நடுநிசி தாண்டியவுடன் அவளுக்குத் தூக்கம் கலைந்து விடும். மெல்ல எழுந்து வெளியே வருவாள். வானம் இருண்டிருக்கும். சில நாள்களில் மேல் கோடியில் சந்திரனின் சந்தனக் கிண்ண வடிவம் வானத்தே தொக்கி நின்று, எதையோ 'எடுத்துக் கொள், எடுத்துக் கொள்' என்று சொல்வதுபோல் விளங்கும்.

இளங்காற்று சில்லென்று வீசும். எதிரே உள்ள குளக்கரைக்குச் சென்று படிக்கட்டுகளில் அமர்வாள். ஆகாய இருட்டை விரட்ட முற்படும் சந்திர ஒளியைக் கண்டு, மதியைப் பார்த்துக் குளத்து நீரின் கருமையில் தலை நீட்டும் ஓரிரண்டு அல்லி மலர்கள் பூத்துச் சிரித்து நிற்கும்.

அவள் குளத்து நீதில் பாதங்களை நனைப்பாள். விழித்தெழுந்த மீன் குஞ்சுகள் மெல்லியலாளின் ஸ்பரிசம் உணர்ந்த அவை அவள் பாதத்தை முத்தமிட்டுக் குறுகுறுக்க வைக்கும்.

எங்கோ கரிச்சான் குருவி குரல் எழுப்பும். அந்தக் குரல் அவளுக்குப் பழைய நினைவுகளைத் தூண்டும்.

படிக்கட்டுகள் வழியே பாதம் பதித்து, ஒற்றையடிப் பாதை வழியே நடந்து சிவன் கோயில் வாசல் வந்து நிற்பாள். கோயில் மண்டபத்தில் ஜீவ சிற்பங்களாக மாறுவதற்குத் தவமிருக்கும் திருப் பணிக்காகப் அங்கு சேர்ந்திருக்கும் பாறைகளின் மேல் அமர்வாள்.

அருகே பூத்துள்ள பவழமல்லியின் மணம் அவள் நெஞ்சைத் தொட்டு வேதனையைக் கிளறி விடும்.

எங்கிருந்தோ செம்போத்து குரல் கொடுக்கும். அவள் வானத்தை நோக்குவாள். அந்தப் புள்ளினக் குரல், நேரத்தைக் காலக் கருவி போல் அவளுக்கு உணர்த்தும். வைகறை நெருங்குகிறது என்பதைப் புரிந்துக் கொள்வாள். காலைக் கடுங்குளிரை நெருங்க விடாமல் கையது கொண்டு மெய்யது பொத்தி அவள் விரைந்து நடப்பாள்.

அமைதியான அந்தக் கிராமத்துத் தெரு வழியே நடந்து மீண்டும் வீட்டை அடைவாள். திடீரென்று விழித்துக் கொண்ட அவள் தாய்

தன் மகளை அருகே காணாது வீட்டு வாயில் திண்ணையில் காத்திருப்பாள். மகளுடைய கரங்களைப் பிடித்து மெல்லத் திண்ணையில் அருகே அமர வைக்கும்போது அவள் பார்வை ஆயிரம் கேள்விகளைக் கேட்பது போல் தோன்றும்.

''பூங்கொடி! இந்தக் காலை இளங்குளிர் வேளையிலும் உன் கரங்கள் வெயிலில் காயும் துணி போல் வெப்பமாயிருக்கின்றனவே?'' என்று மட்டும் சொல்வாள். பூங்கொடி பெருமூச்சை மட்டுமே மறு மொழியாகக் கூறுவாள்.

எங்கிருந்தோ குயில் கூவும் இனிய ஓசை வரும். சிறிது நேரத்தில் சேவல் குரல் எழுப்பும். அன்றைய புதிய பொழுதின் முதல் ஜாமம் பூததுவிடும்.

குயிலின் குரலில், சேவலின் கூவலில் பூங்கொடி நேரத்தை உணர்ந்து பெருமூச்சு விட்ட நாள்கள் எவ்வளவோ! புள்ளினக் குரலோசையினின்று நாழிகையை அவள் உணர்வதுபோல், அவளுடைய தாய் அவளுடைய ஒவ்வோர் அங்கத்தின் அசைவினின்றும் தன் மகளின் இதய உணர்வுகளை அறிவாள்.

தாயைப் பிரிந்து பல நாள்களாகி எங்கோ ஓர் இடத்தில் மணல் தரையில் கிடந்த அவளுக்குக் கரிச்சானின் மெல்லிய குரல் பழைய நினைவுகளைக் கிளறியதோடு புதிய நம்பிக்கையை அளித்தது.

இன்று... விடிவெள்ளி முளைக்கும் வேளையில் பூங்கொடி மணல் தரையில் கிடக்கிறாள். அருகே ஆற்று நீரின் சலசலப்பு கேட்கிறது. நீரை முத்தமிட்டு அதன் மீது தவழ்ந்து வரும் காற்று தன்னையும் தழுவுவதால் ஏற்படும் சிலிர்ப்பை அவள் உணர்கிறாள். சோர்வு சிறிது குறைகிறது.

ஆற்றங்கரை அருகே தான் தரையில் கிடப்பது அவளுக்குப் புரிந்தது.

நனைந்து போயிருந்த ஆடையின் ஈரம் சற்று உலர்ந்திருக்கிறது. ஈரம் கசிந்து கூந்தலில் மணல் துகள்கள் ஒட்டியிருக்கின்றன.

வலக் காலை மெல்ல அசைக்க முடிகிறது. தன் மேனியையே ஒருமுறை தடவிப் பார்த்து, அந்தப் பொழுதில் தான் தானாயிருப்பது நிஜம் என்பதை உணர முடிகிறது.

மேனியெங்கும் தடவிக் கொள்ளும் விரல்களினின்று தான் சேலை அணியாததும், அணிந்திருந்த ஓர் இளம் வீரனுக்குரிய உடை



நீரில் நனைந்து கொஞ்சம் கொஞ்சமாய்க் காய்ந்திருப்பதும் அவளுக்குப் புரிகிறது. பெண் என்று புரியாமல் இருக்க இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கும் மார்புக் கச்சையின் ஈரம், உடல் சூட்டால் உலரப் பார்க்கிறது.

ஒரு கணம் அவள் தனக்குத்தானே மெல்ல நகைத்துக் கொள் கிறாள். முதல் நாள் நடந்த நிகழ்ச்சி மனத்திரையில் ஓவியமாகத் தீட்டப்படுகிறது. இதுவரையில் தடுமாறிப் போயிருந்த நினைவுச் சிலை நேரே நிற்கிறது. புகை படிந்து மங்கியிருந்த நினைவுக் கண்ணாடி தெளிவடைகிறது. நடந்த சம்பவங்கள் இதய அரங்கில் மெல்ல அபிநயம் பிடிக்கின்றன.

நடந்தவற்றை நினைத்துக் கொள்கிறாள்.

சத்திரத்துத் திண்ணையில் அமர்ந்து தெருக்கோடியில் இளவரசர் வருகிறாரா என்று பார்த்திருந்தபோது அந்தப் புதிய இளைஞன் தன்னருகே வந்து நின்றதை உணர்ந்து திடுக்கிட்டது புரிகிறது.

திடுக்கிட்டாலும், மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்க்கக் கூடிய திருவுருவம் அந்த இளைஞனுடையது என்பதை அவள் உணர்கிறாள். அவன் பேச்சும் இனிமையாக இருக்கிறது. தன்னைப் பற்றி அவன் முற்றும் தெரிந்தவனாக இருப்பதை அறியும்போது அவனை நம்ப வேண்டும் என்று உடனே தோன்றுகிறது. ஏன் அப்படி?

மறுபடியும் அந்த நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டாள். தன் நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளை மேல் ஆடையினால் அவன் மெல்லத் துடைத்துக் கொண்டபோது அவனுடைய பரந்த மார்பு தெரிந்ததே - அந்த மார்பு இப்பொழுது அவள் கண் எதிரே நிற்கிறது. அவனைப் பார்க்கவும் முடியவில்லை; பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை. இப்படி ஒரு நிலை அப்பொழுது தனக்கு ஏற்பட்டதை நினைத்துக் கொண்டாள். சற்று நாணமான செயல்தான்.

தன் தாயை மிக நன்றாக அறிந்திருப்பதாக அவன் கூறினான். தான் தஞ்சையினின்று புறப்பட்டதும், மலைக்கோட்டைக்கு வந்ததும் அவனுக்குத் தெரியுமாம்! அதனால் அவளுக்கு அவன் மீது நம்பிக்கை ஏற்பட்டது. அவளுடைய தாய் இட்ட கட்டளையை நிறைவேற்ற அவன் உதவுவான் என்ற நம்பிக்கை அவள் மனத்தில் வேர் பாய்ந்தது. மந்திரத்தால் கட்டுண்டவள் போல் அவள் இயங்கினாள். வேறு வேடம் பூணச் சொன்னான். ஆண்கள் அணியும் உடைகளை அவன் கொண்டு வந்தான். அவள் தடுக்கவில்லை;

மறுக்கவில்லை. பொய் மீசையைப் பார்த்தவுடன் அவளுக்குச் சிரிப்பு வந்தது. நாடக அரங்கின் நினைவு வந்தது.

அவன் தன்னைப் படகுத் துறையில் காத்திருக்கச் சொன்னான். அப்படியே செய்தாள். படகுத் துறைக்கு இளவரசர் வரப் போகிறார்; படகில் ஏறிக் காவிரியைக் கடந்து செல்லப் போகிறோம்; அங்கே இளவரசரைச் சந்திக்கலாம் என்று சொன்னான். சரியான யோசனை எனத் தோன்றியது.

பெரிய படகு. அலங்கரிக்கப்பட்ட படகு. அதிலும் ஏறிவிட்டாள். கனமான பழக்கூடையைச் சுமந்தாள். பாரம் அழுத்தியது. சலித்துக் கொண்டாள். பிறகு, மேல் தளத்தில் இளவரசரும், கம்பன் மணியனும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அப்படி ஓர் இளம் வீரன் வடிவத்தில் தான் அங்கு வந்திராமல் இருந்திருக்கலாம். பூங்கொடியாகப் படகுத் துறையில் நின்றிருந்தால் இளவரசர் அவளைப் படகுக்குள் அழைத்திருக்க மாட்டாரா? இப்பொழுது பூங்கொடி அவ்வாறுதான் எண்ணினாள். அடுத்து என்ன நடந்தது?

மேல் தளத்தில் கம்பன் மணியனும் இளவரசரும் பேசிக் கொண்டிருந்தபோது இளவரசர், ''யார் அங்கே?'' என்று கை தட்டி அழைத்தார்.

''பருக ஏதாவது கொண்டு வா'' என்ற குரல் கேட்டது. படகின் கீழ்த்தட்டின் நுழைவாயில் அருகே நின்றிருந்தாள்.

அவளருகே இப்போது யாரோ வந்து நிற்பது போல் தோன்றியது. அந்த இளைஞன்தான்.

இவர் எப்படி இங்கே வந்தார்? அவரும் மாறுவேடம் அணிந்திருந்தாரா? சற்று முதியவர் போல் தோற்றமளிக்கிறாரே என்ற வியப்புடன் அவள் திரும்பிப் பார்த்தாள்.

''பூங்கொடி! இந்தப் பழரசத்தை இளவரசரிடம் சென்று கொடு'' என்று ஒரு குவளையை நீட்டினான் அந்த முதியவர் வடிவில் இருந்த இளைஞன்.

பூங்கொடி திகைப்புடன் அவனை நோக்கினாள். ''இப்படியெல்லாம் திகைத்துக் கம்பம் போல் நிற்கக்கூடாது. வேறு யாராவது பார்த்துவிட்டால் வந்தது ஆபத்து'' என்று மெல்ல - ஆனால், கடுமையான - குரலில் அவன் கூறினான்.



''உங்களைக் காணவில்லையே என்று கவலைப்பட்டேன். நல்ல வேளை நீங்கள் இந்தப் படகில்தான் இருக்கிறீர்களா?'' என்று பூங்கொடி நிம்மதியடைந்தவள் போல் பெருமூச்சு விட்டாள்.

'ச்சூ' என்று கூறி அவள் கரத்தை அழுத்தி, ''ஆபத்தை வரவேற்காதே; சொன்னபடி செய். பழரசத்தைக் கொடுத்து விட்டு அங்கே நிற்காமல் உடனே மளமளவென்று கீழே இறங்கி வந்து விடு. மறு கணம் அங்கே அதிர்ச்சி தரும் சம்பவம் ஒன்று நடக்கப் போகிறது'' என்றான் அந்த வாலிபன். பூங்கொடிக்கு ஒன்றும் புரியவில்லை.

''பெண்ணே! காரியத்தைக் கெடுத்து விடுவாய் போலிருக்கிறது. இன்னும் சற்றுத் தாமதித்தால் படகு நட்டாற்றுக்குச் சென்றுவிடும். பிறகு பிரவாகத்தை எதிர்த்து நீந்த முடியுமா?''

''நட்டாறா? பிரவாகத்தை எதிர்த்து நீந்துவதா?'' பூங்கொடி கேட்டாள்.

''கேள்வி மேல் கேள்வி கேட்காதே. உனது பணியும் எனது பணியும் வெற்றிகரமாக முடிவடையும் கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.''

''எனது பணி இன்னும் முடிவடையவில்லையே; இளவரசரை நான் சந்தித்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே...''

''எதற்காக நீ சந்திக்கப் போகிறாய்? காதல் வார்த்தைகள் பேசுவதற்கா?'' என்று மெல்ல நகைத்தவாறு கூறிய அவன், ''இளவரசரை நீ சந்திக்கப் போவதில்லை; சந்திப்பதால் உனக்குத்தான் ஆபத்து'' என்றான்.

''எனக்கு ஏதும் ஆபத்து ஏற்படாது. தன் அருகேயே நான் இருப்பதை அவர் விரும்புவார். அதுதான் என் இலட்சியம். நீங்கள் வேறு ஏதோ திட்டம் போடுகிறீர்கள்.''

''சரி... சரி. உன்னுடன் வாதமிட்டு விளக்கும் நிலையில் நான் இல்லை. அதற்குச் சமயமில்லை. இந்தக் குவளையைக் கொடுத்து விட்டு, ஒரு கணம் கூட அங்கேயே நிற்காமல் வரப் போகிறாயா அல்லது நான் 'ஓ' வென்று கூவி, 'இதோ ஆண் வேடத்தில் ஒரு பெண்; ஓர் ஒற்றன்' என்று கூவட்டுமா?''

அவன் துரிதப்படுத்தினான். பயமுறுத்தினான். பூங்கொடி நடுங்கினாள். ஒருகணம் திகைத்தாள்.

பூங்கொடி பழரசக் குவளையுடன், மரப்படிக்கட்டுகளில் ஏறி இளவரசர் நிற்கும் மேல் தளத்திற்குச் சென்றாள். இளவரசரும், கம்பன் மணியனும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இருள் அடர்ந்த அந்த வேளையில் இளவரசரின் குரல் மட்டுமே கேட்டது. அங்கேயே நின்று இளவரசரின் இனிய குரலைக் கேட்டுக் கொண்டே இருக்கத் தோன்றியது.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தவற்றுள் பல அவளுக்குப் புரிய வில்லை. ஆனால் சதிகாரர்கள், விரோதிகள், பகைவர்கள், ஒற்றர்கள், படையெடுப்பு, போர்க்களம், பாண்டியர்கள், சாளுக்கியர்கள் என்ற வார்த்தைகள் மட்டும் காதில் விழுந்தன.

கம்பன் மணியன் உறுதியாகப் பேசியது கேட்டது.

''இளவரசரே! நீங்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் நோக்கத்துடன் சிலர் திரிந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நமது ஒற்றர்கள் கண்டறிந் துள்ளார்கள்'' என்று கம்பன் மணியன் கூறிய சொற்கள் அவளுக்குத் தெளிவாகக் கேட்டன.

''என் உயிருக்கா?'' என்று ஏளனமாகச் சிரித்த இளவரசர், ''அந்தத் துணிவுடையவர்கள் யார் இருக்கிறார்கள்? பாண்டியர்களின் வாரிசு யாராவது மீண்டும் தலையெடுத்து எங்காவது ஒளிந்து கொண்டிருக் கிறார்களா? சாளுக்கியர்கள் நம் நாட்டிற்குள் வந்து என்னைக் கொல்லத் திட்டமிட்டிருக்கிறார்களா? சிறு பிள்ளைப் பேச்சாக இருக்கிறதே! என்னைக் கொல்வதால் அவர்களுக்குக் கிடைக்கும் பலன் என்ன?'' என்று இளவரசர் கேட்டார்.

''இளவரசரே! தெரிந்து கேட்கிறீர்களா? அல்லது என் வாய் மூலம் செய்தி வர வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? சோழ நாட்டின் வருங்கால அரசர் தாங்கள். தங்களுடைய தோள் வலிமையும், வாள் வலிமையும், போர்க்கள யுத்த முறைகளும், அஞ்சா நெஞ்சமும் நமது பகையரசர்கள் மனத்தில் பெரும் கிலியை ஏற்படுத்தி இருக்கின்றன. அதைத் தவிர...'' என்று அவர் கூறி முடிப்பதற்குள், ''உம்... என்ன வென்று சொல்லுங்கள்'' என்று இளவரசர் மதுரன் துரிதப்படுத்தினார்.

''தங்களுக்கு இளவரச பட்டம் சூட்டுவதைப் பற்றி நமது நாட்டிலேயே சிலருக்குக் கருத்து வேற்றுமை உள்ளது. சோழ நாட்டின் சக்ரவர்த்தியாகத் தாங்கள் வருவதை எப்படியாவது தடுத்து



விட வேண்டும் என்ற நோக்கமுள்ளவர்களும் இருக்கிறார்கள்'' என்றார் கம்பன் மணியன்.

பெரிதாக நகைத்த இளவரசர், ''ஓ! அப்படி ஒரு வாரிசுப் போட்டி யிருக்கிறதா? ஓகோ! சக்ரவர்த்தி இராசராசரின் ஒரே மகன் என்ற பெருமை மிகுந்த எனக்குப் போட்டியாக மற்றோர் இளவரசர் வளர்கிறாரா? அப்படியென்றால் அவரை நான் சந்தித்தாக வேண்டும். என் உயிருக்கு விலை பேசுபவரை, நேருக்கு நேர் நான் பார்த்தாக வேண்டுமே. மணியனாரே சொல்லுங்கள், யார் அவர்? நாளையே சந்தித்து விடுகிறேன்'' என்று கூறும்போது அவர் குரலில் பரபரப்பும், ஆவேசமும் இருந்தன.

கம்பன் மணியன் கூறிய இந்தச் செய்தி சாதாரணமானதன்று; மிகப் பயங்கரமான சதி, சோழ நாட்டில் உருவாகிறதென்றால் சோழ நாட்டு ஒற்றர்களுக்குத் தெரிந்திராமல் இருக்குமா? சக்ரவர்த்தியின் கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் இருக்குமா? அப்படிப்பட்ட சதியை அறிந்திருந்தால் சக்ரவர்த்தி வாளாயிருப்பாரா?

''மணியனாரே! உண்மையைச் சொல்கிறீர்களா? அல்லது கற்பனையாக இப்படியும் நடக்கக்கூடும் என்று நினைத்துச் சொல்கிறீர்களா? சக்ரவர்த்திகளின் அந்தரங்க அபிமானம் மிகப் பெற்ற நீங்கள் பல ரகசியங்களை மனத்திலே புதைத்து வைத்திருக் கிறீர்கள். ஆனால், என்னிடம் அபிமானம் மிகுந்த தாங்கள் அவற்றை என்னிடம் கூறுவதற்கே தயங்குகிறீர்கள்; அல்லது விருப்பப்படா திருக்கிறீர்கள். இப்பொழுது மற்றுமொரு பயங்கரமான செய்தியை - சதியைச் - சொல்கிறீர்கள். என்ன நடக்கிறது என்பதைச் சொல் லுங்கள். நாம் அவற்றை முளையிலேயே கிள்ளி விட வேண்டாமா?

கம்பன் மணியன் சற்று நேரம் மௌனமாயிருந்தார். ''அப்படி நினைக்காதீர்கள் இளவரசர் அவர்களே! பல செய்திகள் எனக்குத் தெரியும். அவை எனக்கும் சக்ரவர்த்திகளுக்கும் மட்டுமே தெரியும். அந்தரங்கச் செய்திகள் வெளிப்படாமல் வெளிப்படுத்தாமல் இருப்பதில்தான் எனக்குப் பெருமை. என் மீது சக்ரவர்த்திக்கு நம்பிக்கை. நான் அமைச்சரோ, குறுநில மன்னரோ அல்லன். ஒரு பகுதிப் படையின் தலைவன். தங்களுடன் ஒன்று சேர்ந்து போர்க் களங்களுக்கு வந்தவன். தங்கள் அடிமை. சோழ நாட்டிற்கே அடிமை. அடிமை என்று கூறும்போது நாட்டு விசுவாசம் முதன்மை யானது. நாட்டுப்பற்று மிகுந்த என்மீது நம்பிக்கை வைத்து சக்ரவர்த்தி சில பணிகளை இடுகிறார். அவற்றைத் தலை மேல்

ஏற்றுச் செய்து முடிக்க வேண்டியவன் நான். மிகக் கவனமாக இருக்க வேண்டியவன். என்னிடம் சக்ரவர்த்தி மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதனாலேயே என்னிடம் பொறாமை கொண்டிருப்பவர்கள் சிலருண்டு. என் மீது பொறாமை கொள்வதால் அவர்கள் சோழ நாட்டின் விரோதிகள் என்று சொல்ல மாட்டேன். என் செல்வாக்கின் மீதுதான் அவர்களுக்குப் பொறாமை. நாளாக ஆக எனக்கு அரசியல் வாழ்க்கை அலுப்பளித்து வருகிறது. போர்க்களங்களைக் கண்டாலே பிடிப்பதில்லை. எனது சொந்த ஊருக்குச் சென்று அமைதியாக வாழ வேண்டும் என்ற எண்ணம் தலை தூக்குகிறது. ஆனால், அதற்கு முன்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பை நான் நிறைவேற்றியாக வேண்டும். கடமையை விடப் பொறுப்பு மிக முக்கியம். அதே போல் மதிப்பும் மரியாதையும் அன்பும் வைத்திருக்கும் தங்கள் நலனையும் நான் கவனிக்க வேண்டும். அவற்றுள் ஒன்றுதான் - தங்கள் உயிர். தங்களை நெருங்கவோ - எதிர்க்கவோ யாரும் துணிய மாட்டார். தங்கள் வாளின் ஒலிக்கு எதிரே துவண்டோடி பலர் மட்டும் எதிர்த்து நிற்கப் போதுமானதன்று. சதிக் கூட்டத்தாரைக் கூண்டோடு அழிக்கத்தக்க தருணத்தைப் பார்த்திருக்க வேண்டும். நாமும் மிக எச்சரிக்கையுடனிருக்க வேண்டும் என்பதற்காகவே சொல்ல வந்தேன்'' என்று கூறி அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார்.

இளவரசர் மதுரன் மீண்டும் பெரிதாக நகைத்து, ''எச்சரிக்கை - கவனம்... சுத்த வீரன் கடைப்பிடிக்க வேண்டிய இலக்கணம். என்னைத் தொடர்ந்து நிழல் போல் மெய்க்காவல் வீரர்கள் உள்ளனர். இன்னும் என்ன பாதுகாப்பு வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? என்னைச் சுற்றி வேலி ஒன்று போட்டுக் கொள்ளட்டுமா? முகத்தை மட்டும் விட்டு, உடல் முழுவதற்கும் கவசம் அணிந்து கொள்ளட்டுமா? அல்லது பெரிய அகழியின் நடுவே இரும்பு மாளிகையில் இருக்கட்டுமா?'' என்று கூறிப் பெரிதாக அவன் நகைத்தது எங்கும் எதிரொலித்தது.

கம்பன் மணியனுக்குச் சற்று அச்சம் ஏற்பட்டது. 'நாம் மிகவும் அந்தரங்கமாகப் பேசத் தொடங்கியதை இவர் இப்படிப் பகிரங்கப்படுத்த முயல்வார் போல தோன்றுகிறதே' என்று எண்ணிய மணியன் பேச்சை மாற்ற விரும்பி, ''இளவரசே! மெல்லப் பேசுங்கள். இப்படி நான் தங்களுக்குக் கட்டளையிடுவதற்குப் பொறுத்தருளுங்கள். எனக்கு எட்டியுள்ள தகவலின்படி, தங்களைத் தொடர்ந்து வேற்று நாட்டு ஒற்றர்கள் வருகிறார்கள். அவர்கள் யார்? எங்கிருந்து



வருகிறார்கள்? என்பன எல்லாம் எனக்குத் தெரியாது. தாங்கள் திருச்சி மலைக்குச் சென்றபோது கூட அவர்கள் தொடர்ந்தார்களாம்...'' என்றார்.

''உடனே என்னிடம் தெரிவிக்க வேண்டியதுதானே. தங்களுக்கு அதிகாரமில்லையா? அவர்களை அந்த இடத்திலேயே வெட்டித் துண்டமாக்கக் கட்டளையிடுவதற்கென்ன?'' - இளவரசர் சீறினார்.

''எப்படி முடியும்? சதிகாரர்கள் யார் என்று எவ்வாறு கண்டு பிடிப்பது? நிரபராதிகளுக்குத் தண்டனை வழங்கக் கூடாதல்லவா? மரண தண்டனை விதிக்கும் உரிமை சக்ரவர்த்திக்குத்தான். மற்றவர்கள் நீதி வழங்குவதை தங்கள் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது.''

''போர்க்களத்திலே நம்மை எதிர்ப்பவர்களை நாம் கொன்று குவிப்பதில்லையா? அங்கே சுற்றம் என்றும் நண்பர் என்றும் பார்ப்பதில்லையே! பொது விரோதி என்ற பெயரில் கடமையைச் செய்வதில்லையா? ரத்த அருவியிலே குளித்துக் களிப்பதில்லையா?''

''போர்க்களம் வேறு; அமைதியான காலம் வேறு. ஒற்றர் - சதிகாரர் என்று சந்தேகப்படுகிறோமே தவிர, திட்டவட்டமாகக் குற்றம் சாட்ட சான்று இல்லையே... அதனால்தான் நான் கேட்டுக் கொள்கிறேன். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று.''

மதுரன் சமாதானமடைந்ததாகத் தோன்றவில்லை. ''குழப்புகிறீர்கள், மணியன் அவர்களே! என் அருகே நெருங்கத் துணிவு யாருக்கு இருக்கிறது?'' என்று கேட்டார்.

சற்று மௌனமாக இருந்த கம்பன் மணியன், ''இளவரசே! கோபிக்காமல் இருந்தால், சீறி எழாதிருந்தால் சொல்கிறேன்'' என்று கூறி, அந்த இருட்டிலும் இளவரசர் முகத்தைக் கூர்ந்து நோக்கினார்.

இளவரசர் மெல்ல நகைத்து, ''மணியனாரே! நான் முன் கோபக்காரனாக இருப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். என் அத்தையாரும் அவ்வாறே சொல்கிறார். நீங்களும் அப்படித்தான் நினைக்கிறீர்களா? என்னிடமுள்ள குறைகளை நன்றாக எடுத்துக் கூறுங்கள். உம், சொல்லுங்கள்!'' என்றார்.

''இளவரசே! இன்று மலைக்கோயில் பாதையில் உள்ள மண்டபத்தில் ஓர் இளம் மங்கையால் தங்களிடம் மிக நெருங்கிப் பேச முடிந்தது. அங்கெல்லாம் மெய்க்காவலர் வா முடியவில்லை''

என்று சொல்லி முடிப்பதற்குள், இளவரசர் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "கம்பன் மணியனாரே! அந்தப் பெண் எங்கே? அவளுடைய ஆட்டமும், நொடிக்கு நொடி மாற்றிக் கொள்ளும் முக பாவமும் விழிகளால் பேசும் நேர்த்தியும்... என்னால் மறக்க முடியவில்லை. மணியனாரே! அந்த ஆடலழகி யார், எங்கே இருக்கிறாள் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டவுடன் கம்பன் மணியன் திடுக்கிட்டார்.

"இளவரசரே! எனக்கு அந்தப் பெண்ணைப் பற்றி ஏதும் தெரியாது. மலைக் கோயிலிலிருந்து தாங்கள் இறங்கி வரும்போது கிடைத்த செய்தியிலிருந்து நான் சொல்கிறேன். அந்த ஆடல் மங்கையிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு ஒற்றர் படையைச் சேர்ந்தவர் என்னிடம் சொன்னார்..." என்று கூறினார் கம்பன் மணியன்.

"ஓ! ஒற்றர் படையைச் சேர்ந்தவர்கள் என் நடவடிக்கைகளையும் கண்காணிக்கிறார்களா?"

"தேவைதானே! நாட்டைக் காக்கும் தங்களைக் காப்பாற்ற வேண்டாமா? அதனால் கண்ணை இமை காப்பதுபோல் காப்பார்கள்."

"உம்; மணியனாரே! அந்த இளம் மங்கையைத் தஞ்சை மாளிகையில் சந்தித்தேன். பிறகு மற்றோர் இடத்தில் கண்டேன். அதற்குப் பிறகு மலைக் கோயில்தான் எதிர்பாராத விதமாகப் பார்த்தேன். அவள் சிற்ப நயங்களை மிகவும் அழகாக விளக்கினாள். அவள் நாட்டியக் கலையில் சிறந்திருக்கிறாள். சிற்ப சாத்திரம் கற்றிருக்கிறாள். அவள் அழகுக்கு அறிவும் துணை செய்கின்றன. என் இலட்சியத்தை நிறைவேற்ற நான் சிலர் உதவியை நாடப் போகிறேன். அதற்காக என் விழிகள் பலரைத் தேடுகின்றன. என் விழியில் சிக்கிய வனிதை அவள். அவளுடன் பேசுவது என் அத்தைக்கு ஏனோ பிடிக்கவில்லை. உம். போகட்டும். அந்தப் பெண்ணிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று ஒற்றர் கூறினாரா? மேலும் அவர் என்ன சொன்னார்?" இளவரசர் கேட்டார்.

"அவ்வளவுதான் கூறிச் சென்று விட்டார். அயல்நாட்டு ஒற்றன் என்று சந்தேகப்படும் ஒருவருடன் அந்தப் பெண் ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததை அவர் கண்டாராம்."

"ஓகோ!"

"இப்பொழுது அந்த ஆடலழகி எங்கே?"



"எனக்குத் தெரியாது. ஒற்றர் கூறியதைத் தங்களிடம் தெரிவிப்பது என் கடமை; சொல்லி விட்டேன்."

பூங்கொடியின் செவியில் இந்தச் சம்பாஷணைகள் விழுந்தன; அவள் திடுக்கிட்டாள்.

கையிலுள்ள பழரசக் குவளையைப் பார்த்தாள். அந்தக் குவளையை இளவரசரிடம் கொடுப்பதாக வேண்டாமா என்ற சந்தேகம் அவளுள்ளத்தே எழுந்தது. நதியில் தவழ்ந்து வரும் காற்று சுகமாக வரும் அந்த வேளையிலும் அவள் உடல் முழுவதும் வியர்த்தது. உடலில் மெல்லிய நடுக்கம் ஏற்பட்டது. லேசாகத் தலை சுற்றுவது போல் தோன்றியது. தாம் ஏதோ சதியில் சிக்கியிருப்பது போல் உள்ளுணர்வு கூறியது.

'தன்னைச் சந்தித்த அந்த இளைஞர் சதிகாரர். அவரிடம் நாம் சிக்கிவிட்டோமே... அவரிடமிருந்த தப்ப வேண்டும்' என்று கணத்தில் முடிவு செய்தாள்.

கையிலுள்ள குவளையுடன் கீழே இறங்க முற்பட்டாள். படிக்கட்டில் தடுமாறினாள். பழரசம் சிந்தியது. 'மியாவ்' என்ற குரலுடன் ஓடி வந்த பூனை ஒன்று சிந்திய ரசத்தைச் சுவைத்தது.

"ஏன் திரும்பி விட்டாய்?" - முதியவர் வடிவில் இருந்த அந்த இளைஞன் அவள் கரங்களை அழுத்தமாகப் பிடித்தான்.

பூங்கொடி ஏதும் பேசவில்லை. அவள் கரத்தை உதறினாள். அங்கிருந்து விரைந்து செல்ல முயன்றாள்.

"விட மாட்டேன்... ஏன் பழரசத்தைக் கொடுக்காமல் திரும்பி விட்டாய்? கீழே கொட்டி விட்டாய்... ஆபத்தை விலைக்கு வாங்கி விட்டாய்... அதே பார் அந்தப் பூனையை..." - அவன் குரல் கடுமையாக இருந்தது.

படகின் ஓரமாக இருந்த விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் பழ ரசத்தை ருசித்த பூனை பயங்கரமாகக் குரல் கொடுத்துச் சற்றுத் தொலைவில் சுருண்டு கிடந்தது தெரிந்தது.

பூங்கொடிக்கு இதயமே ஒரு கணம் நின்றுவிடும் போலாகி விட்டது.

"விஷத்தையா கொடுக்கச் சொன்னாய் பாதகா?" என்று சீற்றத்துடன் பேசினாள்.

''நீ ஒருவிதத்தில் இளவரசரைப் பழி தீர்த்துக் கொள்ள முயல்கிறாய். நான் ஒரு விதத்தில்... என்ன தவறு... ஏ பெண்ணே! என்னைக் காட்டிக் கொடுக்க நினைக்காதே... இங்கிருந்து ஓரடி கூட எடுத்து வைக்க விட மாட்டேன்'' என்று கூறி அவள் தோள்களை அழுத்தமாகப் பற்றித் தன் பக்கம் திருப்ப முயன்றவன் கரத்தில் இருந்த கத்தி இருளிலும் பளபளத்தது.

## 11. சொல், பூங்கொடி! சொல்லி விடு!

காலை இளங்காற்று மெல்ல வீசிக் கொண்டிருந்தது. கதிரவன் வருகைக்குக் கட்டியங்கூறும் வெள்ளி மலர் பனிச்சென்று கீழ்வானில் பூத்திருந்தது. இளமங்கையர் பாதங்களில் பூசும் செம்பஞ்சுக் குழம்பு சிந்தினாற் போன்று சித்திரம் வானத் திரைச் சீலையில் வரையப்பட்டிருந்தது.

பூங்கொடியை விட்டு உறக்கம் பறந்து விட்டது. மயக்கம் விலகி விட்டது. களைப்பு மட்டும் சுற்றிப் பிணைந்திருந்தது. எழுந்திக்க மீண்டும் முயன்றாள்; முடியவில்லை.

அந்த மோசக்கார இளைஞன் கரத்தில் பளபளத்த கத்தியின் நினைவு மங்கவில்லை. பிறகு -

வாளுக்கும் வேலுக்கும் அவள் பயப்படக்கூடிய நிலையைத் தாண்டி வெகு காலமாகிறது. அவள் கொண்டிருக்கும் பிளக்க முடியாத உறுதியைத் தாங்கிக் கொண்டிருக்கும் நெஞ்சம் எதற்கும் அஞ்சாது. சில நாழிகைக்கு முன் நடந்ததை நினைத்தாள்.

அவள் உடல் மெல்ல நடுங்கியது. கத்தி பாய்ந்து விட்டால் உயிர் போய்விடுமே என்பதற்காக அஞ்சவில்லை. தன் தாய் இட்டிருக்கும் பணியை நிறைவேற்றாமல் போய்விட்டால் என்ன செய்வது என்று அவள் கவலைப்பட்டாள்.



மறுகணம் வந்த வழியே மரப்படிகளில் ஏறினாள். மேல் தளத்துக்கு விரைந்தாள். கண்மூடித் திறக்கும் நேரத்தில் பிரவாகத்தில் குதித்து விட்டாள்.

அங்கே ஏற்பட்ட சலசலப்பைக் கண்டு இளவரசர் மதுரனும், கம்பன் மணியனும் என்ன நடந்தது என்று புரியாமல் திரும்பிப் பார்ப்பதற்குள், மற்றோர் உருவமும் ஆற்று வெள்ளத்தில் குதித்ததையும், அப்போதே நிலையைப் புரிந்து கொண்ட படகிலிருந்த வீரர்கள் மேல் தளம் வரை ஓடி வந்து செய்வதறியாது திகைத்து நிற்பதையும் கண்டனர்.

''என்ன நடந்தது? நதியில் குதித்தவர்கள் யார்?'' கம்பன் மணியன் கடுமையான குரலில் கேட்டார்.

ஒருவராலும் சொல்ல முடியவில்லை. மணியனின் கடுமையான சொல்லைக் கேட்டவுடன் இரண்டு வீரர்கள் ஆற்றில் குதித்து, சுழலுடன் செல்லும் பொன்னியின் வெள்ளத்தில் நீந்தியதை இருளில் புரிந்து கொள்ள முடியவில்லை.

இளவரசர் இருந்த அரச குடும்பப் படகு மறுகரையை அடைந்தது. 'யார் குதித்தார்கள்? ஏன் குதித்தார்கள்? அவர்களைத் தொடர்ந்து ஆற்று வெள்ளத்தில் குதித்த சோழ வீரர்கள் என்ன ஆனார்கள்?' என்பதே புரியாத புதிராக இருந்தது.

காவிரியாற்றங்கரை மாளிகையில் இரவு இளவரசர் தங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது. இரவு உணவுக்குப் பிறகு இளவரசர் கம்பன் மணியனை அழைத்து, படகில் நடைபெற்ற சம்பவத்தைக் குறித்து வினவினார்.

கம்பன் மணியன் அதற்குள் நடந்தவற்றைக் கேட்டறிந்து வைத்திருந்தார். எனினும் உடனே மறுமொழி கூறவில்லை.

''என்ன யோசிக்கிறீர்கள் மணியனாரே?'' என்று இளவரசர் வினவினார்.

''நான் எதிர்பார்த்தபடியே நடைபெற்றிருக்கிறது'' என்றார் மணியன்.

''நடைபெற்ற சம்பவம் இப்படி நடைபெறும் என்பதை முன்னரே அறிவீரோ?'' மதுரன் கேட்டார்.

''இல்லை... இல்லை. நடைபெறப் போகிறது என்று அறிந்தால் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருக்க மாட்டேனா?'' கம்பன் மணியன் கூறியதன் பொருள் இளவரசருக்கு விளங்கவில்லை.

''என்ன சொல்கிறீர்கள்? விளங்குமாறு சொல்லலாமே.''

''இளவரசரே! தாங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சொன்னேனல்லவா? சாளுக்கிய நாட்டினின்று வந்த ஒற்றன் நமது படகிலேயே உடன் வந்திருக்கிறான்.''

''நம்மால் அதை முன்பாக அறிய முடியவில்லை. இன்னும் சதிகாரர்கள் எவ்வளவு பேர் இந்த நாட்டில் உலவுகிறார்களோ?'' கவலை தெரிவித்தார் இளவரசர். மேலும் அவர் கேட்டார்:

''அரச குடும்பத்துப் படகில், அந்நிய ஒற்றன் இருப்பதென்றால் நமது ஒற்றர் படையையே மாற்றியமைக்க வேண்டும் என்று தோன்றுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''நான் அப்படி நினைக்கவில்லை. நமது ஒற்றர் படையினர் என்னிடம் முன்பே எச்சரித்து விட்டனர். ஆனால், எதிரி நாட்டுச் சதிகாரர்களும் திறமை மிக்கவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. சாளுக்கியர்கள் பெரும் போருக்கு ஆயத்தமாகிறார்கள்.''

''ஓ! அதற்கிடையே சோழ நாட்டுக்குள் ஊடுருவிக் குழப்பம் விளைவிக்கப் பார்க்கிறார்களா?''

''இல்லை... சோழ இளவரசரைத் தங்கள் போர்ப் பசிக்கு இரையாக்கப் பார்க்கிறார்கள்.''

கம்பன் மணியன் இவ்வாறு கூறியவுடன் மதுரன் பெரிதாக நகைத்தார்.

''கோழைகள்! நேருக்கு நேர் மோத விரும்பாத பூச்சிகள். மணியனாரே! அவர்கள் விழித்து எழுவதற்குள் அவர்கள் இருப்பிடமே சென்று நசுக்கி விட்டால்? நாளையே சக்ரவர்த்திகளிடம் இது குறித்துத் தெரிவித்து விரையில் தக்க முடிவெடுக்கச் செய்கிறேன். ஆனால், சதிகாரர்களை விரைவில் கண்டுபிடித்தாக வேண்டுமே? ஆற்றுப் பிரவாகத்தில் குதித்தவர்களைக் கண்டுபிடித்தாகி விட்டதா? நமது வீரர்களும் குதித்தார்களே?'' என்று கேட்டார் இளவரசர்.

கம்பன் மணியன் சற்று மௌனமாயிருந்த பிறகு, ''நமது வீரர்களின் திறமையை நாம் பாராட்ட வேண்டும். பயங்கரமா சுழலை எதிர்த்து நீந்திச் சென்று சதிகாரனைக் கண்டுபிடித்து விட்டனர்'' என்று சொல்லும்போது பெருமிதம் இருந்தாலும் கவலையும் தொனித்தது.



''சதிகாரனைப் பிடித்து விட்டார்களா? எங்கே அவன்?'' என்று இருப்பிடத்தை விட்டுத் துள்ளி எழுந்தார் மதுரன்.

''ஒருவன் சிக்கினான். மற்றொருத்தியைக் காணவில்லை'' என்றார் மணியன்.

''மற்றொருத்தியா? என்ன சொல்கிறீர்கள்? நமது படகில் பெண் இருந்தாளா? அவள் ஆற்றில் குதித்தாளா? நமது படகில் அவள் வந்தது எப்படி? பயங்கரமான ஆற்றுச் சுழலில் நீந்தும் துணிவுடைய சாளுக்கியச் சதிகாரியா? விசித்திரமாயிருக்கிறதே!'' என்று வியப்புடன் மணியனை நோக்கினார் இளவரசர்.

கம்பன் மணியன் மெல்லச் சிரித்தார். ''இளவரசரே! நீர மிகுந்த அந்தப் பெண்ணையும் தேடிக் கொண்டிருக்கிறோம். அவளை விசாரித்தால் பல உண்மைகள் வெளிப்படும். தங்களை அவள் இதற்கு முன்பு சந்தித்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது'' என்றார்.

இளவரசர் அவரைத் திரும்பிப் பார்த்து, ''என்னை அவள் சந்தித்திருக்கிறாளா? யாராயிருக்க முடியும்?'' என்று கூறி சற்றுச் சிந்தித்தார். பிறகு, கம்பன் மணியனை நோக்கி, ''என்னிடம் நெருங்கிப் பேசும் துணிவு கொண்டவள் ஒருத்திதான் உண்டு. உங்களுக்குத் தெரியும். நீங்களும் மறைமுகமாக அந்த நெருக்கத்தைப் பற்றி எச்சரித்திருக்கிறீர்கள்'' என்று கூறி மணியனை நோக்கினார்.

இளவரசர் சமயம் பார்த்து தனக்கு விடை கூறுகிறார் என்று எண்ணி, ''சோழ நாட்டில் அதிகாரிகளுள் ஒருவர் என்ற முறையில் அல்லாமல் தங்களுடன் வயது வேற்றுமை பாராத நண்பர் என்ற முறையில் நான் ஏதாவது எச்சரித்திருக்கலாம். தவறு என்றால் என்னைப் பொறுத்தருளுங்கள்'' என்று கூறிச் சற்று நிறுத்தியவரை நோக்கி இளவரசர், ''மணியனாரே! நீங்கள் தவறாக எண்ணக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன என்பதை நான் அறிவேன். மூவேந்தர் வேளானைத் தங்களுக்குத் தெரியும். ஆனால், அவனுக்கும் எனக்கும் உள்ள நெருக்கமான நட்பைத் தாங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. அவனும் நானும்தான் நமது சேனைத் தலைவர் கிருஷ்ணன் ராமனிடம் வாள் வித்தைப் பயிற்சித் தொடங்கினோம்'' என்று சொல்லத் தொடங்கியவரை மணியன் குறுக்கிட்டு, ''வல்லவரையர் வந்தியத்தேவன் அல்லவா தங்களுக்கு முதன்முதலில் வாள் வீசக் கற்றுக் கொடுத்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்!'' என்று தன் ஐயத்தைப் புலப்படுத்தவும் இளவரசர் சற்று மௌனமாயிருந்தார்.

பிறகு சொன்னார்: "ஆமாம்! வல்லவரையர் அறியாமல் நான் வாளை எடுத்து வீச முயலுவேன். அவர் என் ஆர்வத்தைக் கண்டு வாளை இடமும் வலமுமாகச் சுழற்றவும், பாதங்களை எப்படி எல்லாம் எடுத்து வைப்பது என்றும் எதிரிகள் வீச்சிலிருந்து எப்படித் தற்காத்துக் கொண்டு திரும்பவும் தாக்குவது என்றும் பொறுமையாக மனத்தில் பதியும் வண்ணம் கற்றுக் கொடுத்தார். வந்தியத்தேவன் வாள் மிக அதிர்ஷ்டம் வாய்ந்தது. அவர் எனக்கு ஏதாவது பரிசு தர விரும்பினால் நான் அவரது வாளைத்தான் கேட்பேன். அவருடைய கரத்திலிருக்கும்போது அந்த வாளுக்கு உள்ள சக்தியே தனிதான். பிறகு வல்லவரையர் வெவ்வேறு போர் முனைகளுக்குச் சென்று விட்டார். அந்தச் சமயத்தில்தான் கிருஷ்ணன் ராமர் எனக்குப் போர் முறைகள் பயிற்றுவித்தார். அவ்வாறு பயிலும்போது என்னுடன் சேர்ந்துக் கற்றவன் மூவேந்தர் வேளான். மூவேந்த வேளான் என்ற சிறப்புப் பெயரிட்டழைப்போம். அவனது இயற்பெயர் எனக்குத் தெரியாது. அவனைச் சந்தித்துப் பல ஆண்டுகளாகி விட்டன. மதுரையில் இருக்கிறான். அவன் வீட்டுக்குச் செல்லும்போது அவன் சகோதரியைச் சந்திப்பேன். இருவரும் நேரம் போவது தெரியாமல் பேசுவோம். மணலில் சிறு வீடு கட்டுவோம். மரக் கிளைகளில் ஊஞ்சலாடுவோம். குளத்திலே மரக்கிளையிலிருந்து தண்ணீரில் குதித்துப் படிக்கட்டுகளில் உட்கார்ந்திருக்கும் அவள் மீது தண்ணீரை அபிஷேகம் செய்வேன்.

"மணியனாரே! பிள்ளைப் பிராய விளையாட்டின் இன்பமே தனி தான். மூவேந்த வேளானைக் கண்ணை மூடிக் கொள்ளச் சொல்லி விட்டு நாங்கள் இருவரும் ஓடி ஒளிந்து கொள்வோம். வேளான் எங்களைத் தேடுவான். பெரும் புதர் நடுவில் இருவரும் மிக நெருக்கமாக உட்கார்ந்து கொள்வோம்."

இளவரசர் பிள்ளைப் பிராயச் சம்பவங்களை நினைத்துப் பெரு மூச்சு விட்டார். "பத்து பன்னிரண்டு வயதுப் பருவம் அப்படியே இருக்கக்கூடாதா? விளையாட்டுப் பிராயத்தில் நான் மூவேந்த வேளானுடைய தங்கையுடன் ஆடி ஓடி விளையாடிய நிகழ்ச்சிகளை மறக்க முடியவில்லை. மணியனாரே! புதர் நடுவே நானும் அவளும் ஒளிந்து கொண்டிருக்கும்போது அவள் சகோதரன் அந்தப் பக்கமாக தேடி வரும் காலடி ஓசை கேட்டபோது மூச்சுக்கூட விடாமல் ஒருவரையொருவர் இறுக அணைத்துக் கொண்டிருந்த அந்த



நினைவுகள்..." சிறிது நேரம் இளவரசர் ஏதும் பேசாமல் மௌன மானார். பிறகு பேசினார்:

"நான் அவளுடன் பழகுவதைச் சிலர் மறைமுகமாகத் தடுத்தனர். 'சோழ சாம்ராஜ்யத்துச் சக்ரவர்த்தியாக வரப்போகும் நீ ஒரு பெண்ணுடன் கூடி ஆடிப் பாடி விளையாடலாமா? வீரம் வளரும் பருவத்தில் உன்னொத்த ஆண் பிள்ளைகளுடன் கூடிப் பழகுவதை விட்டு, இப்படி ஒரு பெண்ணுடன்... உன் நிலை என்ன? அவள் குடும்ப நிலை என்ன?' என்று மிகப் பெரியவர்கள் எச்சரித்தனர். ஆனால், என்னால் அவளை மறக்க முடியவில்லை. பத்தாண்டு களுக்குப் பிறகு அவளைச் சந்தித்தேன். மூவேந்த வேளான் இப்போது சக்ரவர்த்தியின் அபிமானத்தைப் பெற்றவன். போர்க் களத்திலே வீரத்தை நிலைநாட்டி வீர மூவேந்த வேளான் ஆகி விட்டான். பழைய நட்பை நான் மறக்கவில்லை. நான் இளவரசன் என்பதால் என்னிடம் பழையபடி நெருங்கிப் பேச அவன் கூச்சப் படுகிறான். மரியாதை பாசத்தையும் வென்று நின்றது. நான் அவன் தோள் மீது சகஜமாகக் கரத்தைப் போட்டு பேசும்போது அவன் உடல் சிலிர்க்கும்.

" 'மதுரா... மதுரா...' என்றழைத்த அவன், 'இளவரசே! இளவரசே!' என்று பய பக்தியுடன் அழைக்கிறான். ஒரு நட்பை மகுடம் பிரிக்கிறது. ஆனால், அவனுடைய தங்கைக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லை. அவளுடைய வேல்விழியைப் பார்க்கும்போதெல்லாம் வீரன் கை வேலொன்று அவள் முகத் தாமரையில் வைத்ததுபோல் தோன்றுகிறது.

"விரிந்த விழிகளும், வாடாத புன்சிரிப்பும், எழில் கொஞ்சும் வடிவமும், அச்சம் என்பதை அறியாத பருவமும் என்னைக் கவர்ந் தன. மணியனாரே! நான் அவ்வப்போது மூவேந்த வேளானைத் தேடிச் செல்வதைத்தானே தாங்கள் மறைமுகமாக எச்சரித்தீர்கள்!"

இனிய நினைவுகளை மீண்டும் நினைத்துப் பார்த்து, இடை விடாமல் இளவரசர் பேசி வந்ததைக் கேட்டு வந்த கம்பன் மணியனார், "ஓ! மூவேந்த வேளானின் தங்கைக்கு அவ்வளவு துணிவா?" என்று மட்டும் கேட்டார்.

"ஆனால், அவள் சமீப காலத்தில் என்னைச் சந்தித்ததாக நினைவு இல்லையே? என்னை நெருங்கித் துணிவுடன் பேசக் கூடியவள் அவள் ஒருத்தியே" என்றார் இளவரசர்.

''அவள் மட்டுமில்லை; இளவரசே! என் எண்ணம் சரியென்றால், ஆற்றில் குதித்தவளும் இன்று பகலில் திருச்சிராப்பள்ளி மலைக் கோயிலில் உங்களைச் சந்தித்தவளும் தங்களுடன் நெருங்கிப் பேசக் கூடியவள் என்று தோன்றுகிறது'' என்று கூறியவுடன் இளவரசர் துள்ளி எழுந்தார்.

''யாரைச் சொல்கிறீர்கள்? அந்த நாட்டிய மங்கையையா?'' என்று வினவியவர், ''உடனே அவளைத் தேடிக் கண்டு பிடியுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

படைவீரர்கள் காவிரியாற்றங்கரை நெடுகத் தேடி அலைந்தனர். அவர்கள் கண்களுக்குப் பூங்கொடி புலப்படவில்லை.

பொழுது மெல்லப் புலர்ந்தது. கதிரவனின் மெல்லிய கரங்கள் எங்கும் பரவத் தொடங்கிய வேளையில் களைப்பு மிகவே பூங்கொடி மெல்ல இமைகளை மூடினாள். இமையின் பாரம் தாங்காமல் விழிகள் சுழன்றன. உறக்கம் அவளை அணைத்தது. கனவுகள் வராத, சிந்தனைக் குதிரைகளின் குளம்படி ஓசை கேட்காத ஆழ்ந்த உறக்கம் அழுத்தியது.

யாரோ தன் முகத்தருகே குனிந்து பார்ப்பது போலவும், நாசியருகே விரல்களின் ஸ்பரிசம் படுவது போலவும் உணர்ந்த பூங்கொடி திடுக்கிட்டு விழித்தாள். எழுந்து உட்காரக் கூடிய தெம்பு உதித்து விட்டது.

இளவரசர் மதுரன் அவள் அருகே குனிந்து அவள் உறங்குகிறாளா அல்லது மயக்கமுற்றிருக்கிறாளா என்று அறிய முயன்று கொண்டிருந்தார்.

''பெண்ணே! நீ சகலகலாவல்லியோ! நடனமாடுகிறாய், பல்லவ மன்னர்கள் படைத்த வரலாறு விளக்குகிறாய், மாறு வேடத்தில் அந்தப் பாத்திரத்துக்கு ஏற்ப மாறிவிடுகிறாய். ஆற்று வெள்ளத்தில் அஞ்சாமல் குதித்து நீந்துகிறாய். உனது துணிவைப் பாராட்டுகிறேன்'' என்று கூறிய இளவரசரைக் கண்டு எழுந்திருக்க முயன்றவளைக் கையமர்த்தி, அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்து கேட்டார்:

''பெண்ணே! இந்த மண் தரையில் படுத்திருக்கிறாயே... உடல் நோவாதா? ஆற்றுப் பிரவாகத்தில் வெகு தொலைவு நீந்தியதால் ஏற்பட்ட களைப்பு இப்போது எவ்வாறு இருக்கிறது?''



இயற்கையாகப் பெண்களுக்குள்ள நாணம் அவளைப் பற்றியது. தன் இரு கரங்களைக் கொண்டு, மெய்யது தழுவி இளவரசரைக் காணக் கூசித் தலை குனிந்தாள்.

இளம் வாலிபன் உடையில் காட்சியளித்த அவளை அந்த நிலையில் இளவரசரால் ரசிக்காமலிருக்க அவர் ஒன்றும் முற்றும் துறந்த முனிவரல்லர்.

இளவரசர் விழி வீச்சின் சக்தி தாங்காமல் அவள் தன்னையே மறுபக்கம் திருப்பிக் கொண்டாள். உள்ளத்து உறுதியும், வெஞ்சினமும், துணிவும் கொண்டவளாக இருந்தாலும் பெண்மைக்குரிய இயற்கையான நாணம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

''பெண்ணே! உன் பெயரைக் கேட்காமலேயே 'பெண்ணே, பெண்ணே' என்றழைப்பதால் உனக்குக் கோபம் வருகிறதல்லவா?'' எழுந்து நின்ற அவளை இளவரசர் கரம் நீட்டி தன் பக்கம் திருப்ப முயன்றார். அதற்குள் அவள் விரைந்து ஓடி மரத்தின் மறைவில் நின்றாள்.

மரத்தின் மறைவினின்று பார்க்கும்போது இளவரசரின் கம்பீரத் தோற்றம் தெரிந்தது.

'விஷம் கொடுத்து இவரைக் கொல்வதற்கு நான் ஒரு கருவியாக இருந்தேனே!' என்று எண்ணியபோது அவளுக்கு வேதனையாக இருந்தது.

'நமது நோக்கம் இளவரசரைக் கொல்வதன்று; வேதனையடையச் செய்வது... எண்ணி எண்ணி ஏக்கமடையச் செய்வது. நமது கொள்கைக்கும் திட்டத்துக்கும் நமது செயல் விரோதமல்லவா?' என்று எண்ணினாள்.

பூங்கொடி மறைந்து நின்றிருந்த மரத்தடிக்கு மதுரன் வந்து கொண்டிருந்தார்.

''பூங்கொடி! அழகான பெயர். ஆனால், பெயருக்கு ஏற்ப உன் நடவடிக்கை இல்லையே?'' என்று கூறிக் கொண்டே மரத்தடிக்கு வந்தார்.

சரக்கொன்றை மரத்தில் பொன் ஆபரணத் தோரணம் போல் மலர்க் கொத்துகள் பூத்துக் குலுங்கி நின்றன. மறுமொழி கூறப் பூங்கொடிக்குச் சொற்கள் நாவில் வரிசையாக வந்து நின்றன. ஆனால், அவள் தன்னை அடக்கிக் கொண்டாள்.

''பூங்கொடி! காவிரியாற்று வெள்ளத்தின் கடுமை உனக்குத் தெரியாதா? பிரவாகத்தில் குதிக்க எவ்வாறு துணிந்தாய்? இந்தப் பகுதியில் முதலைகள் அதிகம். உயிரைப் பணயம் வைக்கும் அளவுக்கு என்ன நேர்ந்தது? நீ யார்? உன்னைப் பற்றிய விவரத்தை நான் அறியலாமா?'' மதுரன் மரத்தின் மறுபக்கம் எட்டிப் பார்த்துக் கேட்டார்.

''உன்னைத் தொடர்ந்து மற்றொருவனும் குதித்தானாம். அவன் ஒரு சதிகாரன் என்று சொல்கிறார்கள். உனக்கும் அவனுக்கும் உள்ள உறவு என்ன? சீக்கிரம் சொல்லி விடு. உன்னைத் தேடி வீரர்கள் அலைகிறார்கள். எப்படியும் கண்டுபிடித்து விடுவார்கள். அவர்களிடம் அகப்பட்டால் சிறையில் அடைத்த பிறகுதான் மீதி விசாரணை எல்லாம். உண்மையைச் சொல்லிவிடு. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். உன்னைப் பார்த்தால் சதிகாரி போல் தெரிய வில்லை. ஆனால், பல கலைகளையும் கற்றிருக்கும் உன்னால் எந்த விதத்திலும் நடிக்க முடியும் என்றே தோன்றுகிறது. சொல், பூங்கொடி! சொல்லி விடு.''

பூங்கொடி உதட்டை அழுத்தமாக வைத்துக் கொண்டாள். 'இளவரசர் கேட்பதற்கு மறுமொழி கூறுவதா அல்லது இப்படியே ஓட்டம் பிடித்து விடுவதா?' என்று பூங்கொடி எண்ணினாள்.

திரும்பிப் பார்த்தாள். புதர்களுக்கிடையே ஒற்றையடிப் பாதை ஒன்று செல்வது தெரிந்தது. இப்போது இளவரசரிடம் நேருக்கு நேர் பேசுவதை விடக் கொடி வழி வழியே ஓடிச் செல்வதுதான் நல்லது.

அவர் பின் தொடரலாம் அல்லது...

அவள் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது இளவரசர் கேட்டார்: ''பூங்கொடி! ஆற்று வெள்ளத்தில் எப்படியோ எதிர் நீச்சலிட்டுக் கரையேறி விட்டாய். இரவெல்லாம் வானவெளிப் பந்தலின் கீழ் மண் விரிப்பில் படுத்துக் கிடந்திருக்கிறாய். இந்தப் பகுதிக்கு யாருமே வர மாட்டார்கள். விலங்குகள் நடமாடும் இடத்தில் இரவெல்லாம் நீ கிடந்திருக்கிறாய். நீ அச்சப்படவில்லையா?

''பூங்கொடி! உன்னைப் பற்றி நீ சொல்லத் தயங்குகிறாய் என்று தெரிகிறது. பூங்கொடி! உன் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது எனக்கும் கவலையாக இருக்கிறது. நான் நினைப்பது போல் நீ ஒரு கலையரசியாக இல்லாமல் சதிக் கூட்டத்தைச் சேர்ந்தவளாக இருப் பாயோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. என் உள்மனம் ஏனோ



உனக்காகக் கவலைப்படுகிறது. பூங்கொடி, உண்மையைச் சொல்லி விடு!'' என்று பேசியவாறிருக்கும்போதே பூங்கொடி ஒரு கணத்தில் அங்கிருந்து ஒற்றையடிப் பாதை வழியே விரைந்து ஓடலானாள்.

# 12. இளவரசரைச் சந்திக்கும் இனிய வாய்ப்பு

அகண்ட காவிரியின் கரையில் அமைந்திருந்த மாளிகையின் ஒரு புறத்தே இருந்த விசாலமான அறையில் பூங்கொடி படுத்திருந் தாள்.

பெரிய பெரிய சாளரங்கள், வெளியே இருந்து வரும் இனிய தென்றலை உள்ளே தவழ்ந்து வர வழி விட்டுக் கொண்டிருந்தன. புத்தம் புதிய வண்ணம் பூசப்பட்டு, மெத்து மெத்தென்ற இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்ட அந்த அறை, சோழ நாட்டு இளவரசிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டதாகும்.

அறையின் நடுவே சேர நாட்டுத் தேக்கு மரத்தால் ஆன நுணுக்க மாக அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் இலவம் பஞ்சு மெத்தை விரிக்கப் பட்டிருந்தது. நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடிய உருவங்கள் தச்சர்களின் கைவண்ணத்தால் மஞ்சத்தின் கால்களாக விளங்கின.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் கனவு போல் அவளுக்குத் தோன்றியது. அறுபது நாழிகைப் போதில் மிக வேகமாக நடைபெற்ற சம்பவங் களைத் தொகுத்துப் பார்த்தால் அவளுக்குச் சிரிப்பு வந்தது. சிந்தனைக்கு நிறைய வேலைகள். வியப்பு மேலிட்டது. அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று உணர முடியாத சம்பவங்கள். ஏதோ வீர சாகசக் கதையை தாய் சோறூட்டும்போது சொல்வாளே அது போல் இருந்தது.

தனக்கு இவ்வளவு துணிவும், மனப்பலமும் எவ்வாறு ஏற்பட்டன என்று ஒரு கணம் எண்ணினாள். தன்னை வளர்த்து உருவாக்கி வரும் தாயின் சக்தியை ஒரு கணம் எண்ணிக் கொண்டாள்.

தாய் இட்ட கட்டளையை நிறைவேற்ற இன்னும் என்ன வெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யலாம் என்ற உறுதி நெஞ்சுக்குள் எழுந்தது.

தாய் சொன்னபடி இளவரசரைச் சந்தித்தோம். ஆனால், நெருங்க முடியவில்லையே! இடையூறுகள் ஒவ்வொன்றாக, புதிது புதிதாகத் தோன்றுகின்றனவே! நமக்கு முதல் எதிரி இளையபிராட்டி என்று தான் நினைத்திருந்தோம். புதிதாக எங்கிருந்து முளைத்தானோ அந்த இளைஞன்? அவன் சோழ நாட்டின் விரோதி என்று உணரும் சக்தி ஏன் நமக்கு இல்லாமல் போய்விட்டது?

மிகக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டியவை என்று கூறிய வற்றில் முதல் ஒன்றிலேயே தோற்றுவிட்டோமே.

தாயின் கட்டளை சோழர் குலத்தவரை வேரறுப்பதன்றே! அந்த இளம் வாலிபன் என் இதயத்தை அறிந்து கொண்டு ஒரே கணத்தில் நெருங்கிப் பழகிவிட்டானே! அவன் சொல்வதற்கெல்லாம் ஆடும் படியாகிவிட்டதே! கவனமாக இல்லாமல் இதில் தோற்றுவிட்டோமே!

'சோழ மாளிகைக்குள் பணிப் பெண்ணாகச் சேர்ந்து விடு. உயிரே போவதானாலும் உன்னை யார் என்று அடையாளம் காட்டிக் கொள்ளாதே. உன்னுடைய நாட்டியத் திறமையைப் புலப்படுத்தத் தயங்காதே. இளவரசரைச் சந்திப்பது ஒன்றே உன் குறிக்கோளாக இருக்க வேண்டும். உன் அழகையும் இளமையையும் கண்டு தங்கள் பசிக்கு விருந்தாக்க முயல்வார்கள் பெண்ணே! கற்பு நிலை கல்யாண மானவர்களை விடக் கன்னிப் பெண்களுக்குத்தான் மிக அவசியம். உன் இதயம் ஒரு கல் மலர் போல் திண்மையாக இருக்க வேண்டும். உன் விழிகளை வேலாகப் பயன்படுத்த நேரும்போது அவ்வாறு பயன்படுத்தத் தயங்காதே. தேன் துளிகளை சொட்ட வேண்டிய நேரங்களில் தேன் துளிகளைச் சொல்லால் தெளித்து விடு. உறுதியை எந்தக் காலத்திலும் கைவிடாதே...'

பூங்கொடி தாய் சொல்வதை மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டாள். ஒவ்வொரு முறையும் சொல்லும்போது தாயின் குரலில் அழுத்தம் இருப்பது புலப்படும். ஒரு தடவையாவது தாயிடம் காரணம் கேட்க அவள் துணியவில்லை.

ஒரே ஒருமுறை அவள் கேட்டிருக்கிறாள்: ''அம்மா! என் அப்பா எப்போ வருவார்?'' குழந்தை மனத்தில் இந்தக் கேள்வியைக் கேட்க லாமா வேண்டாமா என்று கூடத் தோன்றவில்லை. அவள் வயதை



யொத்த குழந்தைகளுக்குத் தந்தை இருந்து அன்பு செலுத்துகிறார்; அந்த ஏக்கம் தன் மகளுக்கும் நிச்சயம் இருக்கும் என்று அவளுக்குத் தெரியாதா? ஆனால், தன் மகளுக்கு விளக்கிச் சொல்லும் காலம் இன்னும் வரவில்லை. காலம் கனியும்போது அந்த ரகசியத்தைச் சொல்லிவிடுவோம் என்று எண்ணியிருந்தபோது அவள் கேட்டு விட்டாள்.

''பூங்கொடி! உன் அப்பா யார் என்றுதானே கேட்டாய்?''

''ஆமாம் அம்மா! அன்றைக்குப் பச்சைக் குதிரை தாண்டி விளை யாடிக் கொண்டிருந்தேன். சுந்தரியின் அம்மா ஓடிவந்து, 'ஏண்டி, குதிரை விளையாட்டு விளையாடிக் காலை, கையை முறித்துக் கொண்டால் சுந்தரியின் அப்பா என்னைத்தான் கொன்று போட்டு விடுவார். அவளைக் கேட்க யாரும் இல்லை...' என்று சொல்லி, சுந்தரியின் காதைத் திருகி அழைத்துச் சென்றாள். ஏனம்மா, என்னைக் கேட்க யாருமில்லையா?''

''ஏன் இல்லை? நான் இருக்கேனடி மகளே! உன் கால், கை பழுதடையாமல் நன்றாக இருக்க வேண்டும் என்பதில் எனக்கு மிகவும் கவலையடி மகளே! உன் தந்தை இருந்தால் என்னென்ன செய்வாரோ அவற்றை நான் செய்வேனடி!'' தாய் அன்புடன் சொன்னாள்.

பூங்கொடி ஆவலுடன் தாயை நோக்கி, ''என் அப்பா சோழ அரசர் மாளிகைக்குப் போவாரா? என் அப்பா என்னை அன்புடன் அணைத்து வீர தீரக் கதைகளைச் சொல்வாரா? என் அப்பா நாடகம், நாட்டியம் காண என்னைத் தஞ்சைபுரிக்கு அழைத்துச் செல்வாரா?''

மகள் கேட்ட கேள்விகள் தாய்க்கு ஒரு கணம் கவலையை அளித்தன. மறுகணம் ஆவேசம் கலந்த மகிழ்ச்சியுடன், ''மகளே! சோழ அரசர் மாளிகை என்ன பெரிய சுவர்க்கபுரியோ? அங்கேயே உன்னை வாழ வைக்க முடியும் கண்ணே! பொறுத்திரு. நமது இந்த விசாலமான தோட்டமும், தோட்டத்தின் நடுவே உள்ள குடிலும், வீசும் தென்றலும், புள்ளினங்களின் இன்னிசையும் நீ ஆசையுடன் வளர்க்கும் மானும், நாகு கன்றுக்குட்டியும் சோழ மாளிகையில் இருக்குமா? அங்கே காவல்காரர்கள் எப்போதும் சுற்றிச் சுற்றி வந்து பயமுறுத்துவார்கள். இங்கே அந்தத் தொல்லை இல்லை.''

''ஆமாம், அம்மா...''

''என்றாலும் உன் ஆசையை விரைவில் நிறைவேற்றுவேன். சோழ மாளிகையில் நீ இளவரசியாக வளைய வருமாறு செய்கிறேன்.''

''இளவரசியாகவா?''

''ஆமாம் கண்ணே! இளவரசி என்றவுடன் என்ன அப்படி வியப்படைகிறாய்? இப்போது இருக்கிறோமே இந்த வாழ்க்கைக்கு இணை உலகில் வேறு எதுமில்லை. என்றாலும் சோழ மாளிகைக்கு நீ விரைவில் செல்ல வழி செய்கிறேன். உன் ஆசையை நிறைவேற்று வதற்காக மட்டுமல்ல; என் சபதத்தை நிறைவேற்ற!''

''உங்கள் சபதமா? அது என்ன அம்மா?''

''பிறகு சொல்கிறேன். அடுத்த உன் ஆசை என்னவென்று கேட்டாய், வீர தீரக் கதைகள்தானே? உனக்கு வேண்டிய கதைகளைச் சொல்கிறேன்...''

பூங்கொடி நிமிர்ந்து உட்கார்ந்தாள். அம்மா கதை சொல்லப் போகிறாள்.

''அம்மா! கதை சொல்லப் போகிறீர்களா? என்ன கதை சொல்வீர்கள் அம்மா?'' பூங்கொடி தாயின் எதிரே மண்டியிட்டு அமர்ந்து கேட்டாள்.

''எந்தக் கதை வேண்டும்? நான் பிறந்த கதை வேண்டுமா? வளர்ந்த கதை வேண்டுமா? வாழும் கதை வேண்டுமா?''

பூங்கொடி பிரமிப்புடன் தாயைப் பார்த்தாள். ''அந்தக் கதை யெல்லாம் வேண்டாம் அம்மா! வீர தீர பராக்கிரமக் கதை வேண்டும்'' பூங்கொடி கண்கள் மலரக் கேட்டாள்.

''காஞ்சிமா நகரம், காஞ்சிமா நகரம் என்று ஒரு பெரிய நகரம் பாலாற்றங்கரையில் இருந்தது'' என்று தாய் தொடங்கியவுடன் பூங்கொடி சிரித்து, ''இருந்தது என்ன? காஞ்சிமா நகரம் என்று ஒரு பெரிய நகரம் இப்பொழுது கூடத்தான் இருக்கிறது'' என்றாள்.

மகளைச் சுட்டெரிப்பவள் போல் பார்த்து, ''பூங்கொடி! கதை சொல்லும்போது குறுக்கே கேட்கக்கூடாது. 'உம்' சொல்வது என்றால் சொல். இல்லாவிடில் மௌனமாக இரு. என்ன?'' என்றாள்.

''சரிம்மா''

''காஞ்சிமா நகரத்தில் ஆதித்த கரிகாலர் அழகிய மாளிகையைக் கட்டினார். பொன் மாளிகை அது'' என்று தொடங்கினாள்.



பூங்கொடிக்குக் குறுக்கிட்டுப் பேச வேண்டும் என்று ஆவல். அவர் யார் என்று கேட்க ஆவல்.

''ஆதித்த கரிகாலன், சோழ சக்ரவர்த்தி சுந்தர சோழரின் மூத்த மகன். அவர் தன் தந்தை சுந்தர சோழரைப் பொன் மாளிகையில் வந்து சிறிது காலம் தங்கியிருக்குமாறு கேட்டுக் கொண்டபோது சுந்தர சோழர் வரவில்லை. ஆதித்த கரிகாலன் ஒருநாள் கொலை செய்யப்பட்டார்.''

''ஐயோ'' என்று பூங்கொடி அலறினாள். ''சோழ நாட்டுத் தலை மகனைக் கொலை செய்த கொடியவன் யார்?'' பூங்கொடி பரபரப்புடன் கேட்டாள்.

''பார்த்தாயா, பார்த்தாயா! எனக்கு மிகக் கோபம் வரும். குறுக்கே பேசக்கூடாது'' எனக் கண்டித்தாள்.

''மிகவும் பரபரப்பான இடங்களைச் சொல்லும்போது, அடுத்து என்ன நேருமோ என்ற ஆவல் ஏற்படும்போது நான் எப்படி அம்மா குறுக்கே பேசாமல் இருப்பது?'' பூங்கொடியின் குரலில் குழைவு இருந்தது. தாய் மெல்லச் சிரித்துக் கையசைத்துத் தொடர்ந்தாள்.

''ஆமாம்; சோழ நாட்டிற்கே ஒரு சாபக்கேடு. வளர்ந்த பிள்ளைகள் இறந்து விடுகின்றனர். ஆதித்த சோழன், இராசாதித்தன் - பிறகு ஆதித்த கரிகாலன் இப்படி கொடியவர்கள் பலர் சூழ்ச்சி செய்து ஆதித்த கரிகாலனைக் கொன்று விட்டனர். சோழ நாடே அழுதது. குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று துடித் தெழுந்தனர். பழி ஓரிடம் பாவம் ஓரிடம். வாணர் குலத்து வீரர் வந்தியத்தேவன் மீது குற்றம் சாட்டப்பட்டது. வந்தியத்தேவன் சிறையில் வாட நேர்ந்தது. ஒரு வருடமா, இரண்டு வருடங்களா... பத்து வருடங்கள். ஆதித்த கரிகாலனின் சகோதரி குந்தவ்வை தேவியாரும் வந்தியத்தேவனும் ஒருவரையொருவர் நேசித்தனர்.''

''என்னம்மா... சோழ நாட்டிலேயே மிகுந்த செல்வாக்கு வாய்ந்த இளையபிராட்டியாரால், ஒன்றும் செய்ய முடியவில்லையா? இப் பொழுது சோழ நாட்டிலே மிகுந்த செல்வாக்குடன் இருக்கிறாரே அதே இளையபிராட்டியார்தானே!'' பூங்கொடி குறுக்கிட்டாள்.

தாய் மறுமொழி கூறவில்லை.

''குந்தவ்வை செல்வாக்கு மிகுந்தவராயிருந்தும், தன் இதயத்தில் வீற்றிருக்கும் வாணர்குல வீரனைக் கொலைக் குற்றஞ் சுமத்திச் சிறை

செய்யும்பொழுது அவளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அந்தப் போதில் இளவரசர் அருண்மொழி வர்மர் சோழ நாட்டில் இல்லை.''

''அருண்மொழி வர்மர் என்று யாரை அம்மா சொல்கிறீர்கள்? சக்ர வர்த்திகளையா!'' இப்பொழுது பூங்கொடி கேட்டாள்.

''ஆமாம்; ஆமாம். இப்பொழுது இராசராச சோழ சக்ரவர்த்தி யாகத் திகழ்பவர்தான். அருண்மொழி எப்பொழுது சோழ நாட்டுக் குத் திரும்பி வருவார் என்று குந்தவ்வை தவித்துக் கொண்டிருந்தாள். நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்ட மரக்கலத்தில் சித்திரசேனர் என்ற மாற்றுப் பெயருடன் அருண்மொழி வர்மர் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தபோது, அவர் ஏறியிருந்த கலம் முல்லைத் தீவில் பழுது பார்ப்பதற்கு நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அருண்மொழி அந்தத் தீவில் இறங்கினார்.

''மரக்கலங்களைப் பழுது பார்க்கும் கார்மேகம் என்ற தொழிலாளி யின் மகளைச் சந்திக்கும் வாய்ப்பு சித்திரசேனர் என்ற பெயரில் உள்ள அருண்மொழிக்கு ஏற்பட்டது. கார்மேகத்தின் மகள் எழில் மிகுந்த கலையரசி. கூத்தும் பாட்டும் அவள் உடன்பிறந்த கலைகள். முல்லைத் தீவில் நடைபெறும் எல்லா நடனத்திலும் அவள் கலந்து கொள்வாள்.

''அந்தத் தீவிலுள்ள ஆண்களுக்கு அவள்மீது ஒரு கண். ஆனால், வளர்ப்புத் தந்தை கார்மேகம், அவர்கள் ஒருவரையும் நெருங்க விடுவதில்லை. அவர்களது கபட ஆசையை மறைமுகமாகக் கண்டிப் பார். ஆனால் சித்திரசேனர் மட்டும் அந்தத் தீவில் தங்கிய இரண்டு நாள்களில் கார்மேகத்தின் அழகிய மகளின் இதயத்தில் குடிபுகுந்து விட்டார்.''

தாய் கூறிவரும்போது பூங்கொடிக்குப் பல சந்தேகங்கள் ஏற்பட்டன. கேட்டால் தாய் கோபிப்பாள். கேட்காமலிருக்கவும் முடியாது. ஆர்வம் உள்ளத்தில் துள்ளி நிற்கிறது.

''அம்மா! நமது பேரரசருக்குத்தானே அருண்மொழி வர்மர் என்ற பெயர்'' என்று கேட்டாள்.

''ஆமாம்.''

''அருண்மொழி வர்மர்தானே சித்திரசேனர்? நகை வியாபாரியாக மாறுவேடத்தில் சென்றார்?''

''ஆமாம், மகளே! சித்திரசேனர் முல்லைத் தீவில் தங்கிய அந்த இரண்டு நாள்களில் கார்மேகத்தின் மகள் அவருடைய் பழகியதை



அவளுடைய வளர்ப்புத் தந்தை கார்மேகனால் தடுக்க முடிய வில்லை. குரவைக் கூத்திலும், தேவாரப் பதிகங்களைப் பாடும் இசை வெள்ளத்திலும், ஆடலிலும் பாடலிலும் அக மகிழ்ந்து இருந்தார் அருண்மொழி வர்மர். அவளும் சோழ நாட்டில் பிறந்தவள் என்பதை சித்திரசேனர் அறியவில்லை. இதற்கிடையே ஒன்று சொல்ல மறந்து விட்டேனே! நாகப்பட்டினத்தில் சித்திரசேனர் கலம் ஏறியபோது எப்படியாவது அவரைக் கொன்றுவிட வேண்டும் எனும் எண்ணம் கொண்ட ரவிதாசனும் அவனுடன் வந்த ஐவரும் அந்தக் கலத்தில் ஏறிக் கொண்டனர். அந்த ஐந்து பேரும் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். எப்படியாவது அந்தக் கலத்தை வரும் அமாவாசை அன்று ஒரு குறிப்பிட்ட இடம் சென்றதும் கொள்ளையடித்து விடத் திட்டமிட்டனர்.''

''ரவிதாசன் யார் அம்மா?''

''அவன் ஒரு கொடியவன். அவனால் சோழர் குடும்பத்திற்கே பெரும் துயர் ஏற்பட்டது. அந்தக் கதையைப் பிறகு சொல்கிறேன். ரவிதாசனுக்கு அருண்மொழி வர்மரை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்ற வெறி. அவனுடன் வந்தவர்களுக்கோ அந்த மரக் கலத்தைக் கொள்ளையடிக்கும் திட்டம். குறிப்பிட்ட இடம் வந்ததும் கலம் ஒரு புதைகுழியில் சிக்கி நகராமல் நின்று விட்டது.

'காளி கோபம் கொண்டு விட்டாள். அதனால்தான் கலம் நகர வில்லை' என்று ரவிதாசன் கூறி, அதற்குப் பரிகாரமாக அழகிய இளைஞன் ஒருவனைப் பலியிட வேண்டும் என்றும், அதற்கு ஏற்றவன் சித்திரசேனன் என்ற இரத்தின வியாபாரிதான் என்றும் கூறினான்.

மரக்கலம் எப்படியாவது நகர வேண்டும் என்பதில் ஆவல் கொண்டு கொள்ளையர் சித்திரசேனனைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் சித்திரசேனனை வெட்டி வீழ்த்த முனைந்தபோது சித்திரசேனன், கொள்ளையர் ஒருவனிடமிருந்தே வாளைப் பறித்து சக்ராயுதம் போல் சுழற்றிச் சுழற்றிக் கொள்ளைக்காரர்களை வெட்டி வீழ்த்தி னார்.''

பூங்கொடியின் உடல் மெல்லச் சிலிர்த்தது. ஒருவித அச்சமிருந் தாலும் அடுத்து என்ன நேருமோ என்ற ஆவலும் இருந்ததால் தாயின் முகத்தை ஆவல் நிறைந்த விழிகளுடன் நோக்கினாள். தாயின் முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லை.

''காளிக்குப் பலிகொடுக்க அந்த இரத்தின வியாபாரியை ரவிதாசன் தேர்ந்தெடுத்தானே - அவன் எண்ணம் நிறைவேறியதா அம்மா?'' கவலையுடன் பூங்கொடி கேட்டாள்.

தாய் நகைத்தாள்... ''ரவிதாசன் திட்டம் நிறைவேறியிருந்தால் இப்பொழுது, தஞ்சை புரியிலே இராசராசர் அரியணையில் இருக்க முடியுமா? இரத்தின வியாபாரி கடவுள் அருளால் பெரும் ஆபத்தினின்று தப்பி விட்டார்.''

நேரே அந்த நிகழ்ச்சியைப் பார்த்தவள் போல் தாய் சொல்கிறாளே எப்படி என்று அறிய, பூங்கொடிக்கு ஆவல்.

''அம்மா! அந்தக் கார்மேகத்தின் மகளை உனக்குத் தெரியுமா அம்மா? உனக்கு எப்படி அம்மா அன்று நடந்தவை அனைத்தும் தெரிந்தன?'' என்று கேட்டாள்.

''அது ஒரு கதை. பிறகு உனக்குச் சொல்கிறேன்'' என்று கூறி மற்றொரு நாள் மீதிக் கதையையும் தாய் கூறி விட்டாள்.

பழைய நினைவுகளிலிருந்து தன் சிந்தனையை மாற்ற முயன்றாள் பூங்கொடி. அவளால் முடியவில்லை. சோழ மன்னர் இராசராசரின் கதையை தாய் சொல்லி வந்ததை இப்பொழுது நினைத்தாலும் பிரமிப்பாக இருக்கிறது. அம்மாவுக்கு இந்தக் கதைகள் எப்படித் தெரியும்? அம்மா அதற்கு மறுமொழி கூறவில்லை.

அந்த அறையின் கதவருகே யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. பணிப் பெண்கள் இருவர் வந்தனர். அவர்களுள் ஒருத்தி கலகலப் பாகப் பேசினாள். ஒருத்தியின் முகத்தில் கண்டிப்பு புலப்பட்டது.

''இதென்ன, இப்படித் தரையில் படுத்திருக்கிறாள்?'' என்று ஒருத்தி கேட்டாள்.

மற்றொருத்தி கலகலவென நகைத்து, ''தரையிலா? இரத்தினக் கம்பளத்தில் படுத்திருக்கிறாள்'' என்று கூறினாள்.

''ஏனம்மா! இப்படிப் படுத்திருக்கிறாய்... உச்சிப்பொழுது தாண்டப் போகிறது. எப்பொழுது ஆடை அலங்காரம் செய்து கொள்வது?'' என்று கேட்டாள்.

பூங்கொடிக்கு அவர்களைக் கண்டால் ஏனோ பிடிக்கவில்லை.

''என் விருப்பம் நான் தரையில் படுப்பேன். தண்ணீர் கூட குடிக்க மாட்டேன். நீங்கள் யார்? என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்.



போய் விடுங்கள்'' பூங்கொடி எழுந்து உட்கார்ந்து அவர்களைப் பார்த்துக் கூவினாள்.

பணிப் பெண்கள் ஒருவரையொருவர் பார்த்து,மெல்லச் சிரித்துக் கொண்டனர்.

''இளவரசர் சொன்னது சரியாகிவிட்டது'' என்றாள் ஒருத்தி.

''என்ன சொன்னார், என்னைப் பற்றி?'' - பூங்கொடி சீறினாள்.

''உன்னிடம் நாங்கள் ஏன் சொல்ல வேண்டும்? எங்கள் விருப்பம்'' என்றாள் மற்றொருத்தி.

பூங்கொடிக்குக் கோபம் பொங்கியது. ''இளவரசர் என்ன சொன்னார் என்பதை நீங்கள் சொல்லியாக வேண்டும். இல்லாவிடில் உங்களைச் சும்மா விட மாட்டேன்.''

அவர்கள் மறுபடியும் சிரித்தனர். ''எங்களை நீ என்ன செய்வாய்?''

''இளவரசரிடமே கேட்பேன். என்னைப் பற்றி என்ன சொன் னீர்கள் என்று கேட்பேன்.''

''ஆகா! அதை நீ செய்தால் உனக்குக் கோடிப் புண்ணியம். உன்னை அலங்காரம் செய்து அழைத்து வரச் சொன்னார். காலையிலிருந்து நாங்களும் முயல்கிறோம். நீயாக இளவரசரிடம் சென்று விட்டால் அதை விட பேருபகாரம் வேறொன்றுமில்லை. வா, வா... சீக்கிரமாகக் குளித்துப் புத்தாடை உடுத்திச் செல்லலாம். இதோ பார் பட்டாடை. நீ அதிர்ஷ்டசாலி பெண்ணே! இந்தப் பட்டாடை எளிதில் கிடைக்காது'' என்ற அவர்கள் பேச்சுக்குப் பூங்கொடியால் மறுமொழி கூற முடியவில்லை.

நறுமணப் பொருள்கள் நிறைந்த இளஞ்சூடான நீரை மொண்டு மொண்டு குளித்துவிட்டு, பட்டாடை அணிந்து வந்த அவளைப் பார்த்து, கண் இமைக்காமல் பணிப் பெண்கள் வியப்புடன் நின்றனர்.

''நான் இப்பொழுது எப்படி இருக்கிறேன்'' என்ற கேட்டாள் பூங்கொடி.

''ஓஹோ... ஹோ!'' என்று பணிப் பெண்கள் நகைத்தனர்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' பூங்கொடி மீண்டும் ஆத்திரத்துடன் கூவினாள்.

''எங்கள் விருப்பம். சிரிப்போம். நீ யார் கேட்க?'' என்று கூறி மறுபடியும் நகைத்தனர். 'என்னைப் பைத்தியக்காரியாக்கி

விடுவார்கள் போலிருக்கிறது. இவர்களிடம் சமாதானமாகப் பேச வேண்டும்' என்று எண்ணிய பூங்கொடி, ''என் அருமை சகோதரிகளே! நானும் உங்களைப் போன்றவளே! என்னை ஏன் விரோதிபோல் நடத்துகிறீர்கள்?'' என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டாள்.

அவர்கள் வாயைப் பொத்திக் கொண்டு ''அடடா! அப்படி யெல்லாம் சொல்லாதீர்கள். நீங்கள் இளவரசரின் அபிமானத்தைப் பெற்றவர்கள். இளவரசியாக மாறினாலும் மாறிவிடலாம். அப்பொழுது உங்கள் தயவு எனக்கு வேண்டுமம்மா. எங்களை அப்பொழுது மிகவும் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று ஒருத்தி சொன்னபோது பூங்கொடிக்குச் சிரிப்பு வந்தது.

''உனக்குப் பசிக்கவில்லையா? வா... பசியாறி விட்டு இளவரசரைச் சந்திக்கச் செல்லலாம்'' என்றனர் பணிப் பெண்கள்.

பூங்கொடி அவர்களுடன் செல்லப் புறப்பட்டாள். இளவரசரைச் சந்திக்க நல்ல வாய்ப்பு நேர்ந்திருக்கிறது. நழுவ விடக்கூடாது என்று எண்ணினாள்.

அங்கே அப்போது இளவரசர் வந்து கொண்டிருந்தார்.

கம்பீரமான நடை, அழகிய தோற்றம் கண்டு பூங்கொடியின் மெய் சிலிர்த்தது.

# 13. ''என்னை மறந்து விடுங்கள்''

இளவரசர் மதுரன், பூங்கொடி இருக்கும் இடம் வந்து சென்ற பிறகு பூங்கொடி சிறிது நேரம் சிந்தித்தவாறு நின்றாள்.

''களைப்பு நீங்கி, நீராடிப் புத்தாடை அணிந்து அழகுக்கு அழகு செய்து ஓவியப் பாவை போல் நிற்பாய் என்று நான் எண்ணினேன்'' என்று கூறியவாறு மதுரன் அங்கிருந்த மஞ்சத்தில் அமர்ந்தான்.

பூங்கொடிக்கு வெட்கமாக இருந்தது. அந்த அறையில் கண்ணாடி இருந்தால் தன் முகத்தைப் பார்த்துக் கொள்ளலாம் என்று சுற்றும் முற்றும் தேடினாள்.



அவருக்கே தெரியும், தன்னை வரவேற்கும் அலங்காரத்துடன் நான் இல்லை என்று.

''பூங்கொடி! அதுதானே உன் பெயர்? பேச மாட்டாயா?'' மதுரன் கேட்டான். பூங்கொடி குனிந்த தலையுடன் நின்று கொண்டிருந்தாள்.

''அழகிய அலங்காரத்துடன் உன்னைக் கண்டு, உன்னுடன் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு, உன்னை அழைத்துச் சென்று உன்னை ஆடச் செய்து...'' மதுரன் முடிக்கவில்லை.

''நான் ஆயத்தமாக இருக்கிறேன். புத்தாடை அணிந்திருக் கிறேனே! என்னுடன் பேச ஏதாவது தடையுண்டா? உங்கள் எதிரே ஆடுவதற்கு எந்தக் கணத்திலும் நான் சித்தமாயிருக்கிறேன்'' என்றாள் பூங்கொடி.

'நாணமுற்றவள் போல் அச்சம் நிறைந்தவள் போல் குனிந்த தலையுடன் நின்று கொண்டிருந்த இவளா அழுத்தந்திருத்தமாக இவ்வாறு பேசுகிறாள்?' மதுரன் வியந்தான்.

''இல்லை; இல்லை. ஆடுவதற்கு ஏற்ற இடம் இதுவன்று. விசாலமான கூடத்தில் பூங்காற்று மெல்ல உடலை வருடிச் செல்லும் இடத்தில், இசைப் பெண்கள் பாட நீ ஆட வேண்டும்'' மதுரன் குரலில் புதிய உற்சாகம் இருந்தது.

''இல்லை; இல்லை. அங்கெல்லாம் நான் ஆடுவதற்கில்லை.''

பூங்கொடியின் மறுத்துப் பேசும் மறுமொழி கேட்டு மதுரன் திகைத்தான்.

''தங்கள் எதிரே ஆடுவேன். மற்றவர் எதிரே ஆடுவதற்கு நான் அரங்கேறவில்லை. என் தாயின் கட்டளை...''

''ஓ! குழல் ஒலிக்க மத்தளம் முழங்க இசைக்கேற்ப ஆடுவதில் உனக்கு விருப்பமில்லையா?''

''எனக்கு விருப்பம்தான். ஆனால், என் தாயின் ஒப்புதல் கேட்க வேண்டும்.''

''தாயைக் கேட்காமல் நீ எதும் செய்ய மாட்டாயா? நேற்று நீ குடைவரை மண்டபத்தில் ஆடியதும்...''

''ஆம்... என் தாய் சொல்லித்தான்.''

''ஓடும் வெள்ளத்தில் குதித்தது?''

"... ... ..."

"பேசாமல் இருப்பதும் தாய் சொல்லித்தானா?"

"இளவரசர் அவர்களே! ஒவ்வொரு கணமும் நிகழ்ச்சிகள் மாறு கின்றன. அவற்றையெல்லாம் முன்பாகவே அறிந்து யோசனைகளை என் தாய் சொல்ல முடியுமா? குறிப்பாக நான் நடந்து கொள்ள வேண்டியவற்றை என் தாய் சொல்லியிருக்கிறாள். அதை நான் மீறக் கூடாது."

"காவிரிக்கரை மாளிகையில், சோழ இளவரசரைச் சந்திக்கும் போது இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக் கிறாளா?"

"நான்தான் கூறுகிறேனே... பொதுவாக என் தாய் எச்சரித்திருக் கிறாள். குறிப்பாக... அரச குடும்பத்தாரிடம் பழகும்போது மிகக் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக் கிறாள்."

"சரி... இசையுடன் ஆடக்கூடாது என்று சொல்லியிருக்கிறாளா?"

"ஆமாம்.. நான் ஆடப் பிறந்தவள் அல்லள். நாட்டியக் கலையைத் தெய்வமாகக் கருதி அதை ஆராதித்து வருமாறு தான் என் தாய் சொல்லியிருக்கிறாள்."

"உனக்கு நாட்டியத்தைக் கற்றுக் கொடுத்தவர் யார்?"

"என் தாய்!"

"உன் தாய் வடக்கே இருந்து வந்தவர்களா?"

"இல்லை; நாட்டியக் கலை தெரிந்திருப்பவர்கள் எல்லாம் வடக்கே இருந்துதான் வர வேண்டுமா?"

"என் தந்தை... பேரரசர் அப்படித்தான் சொல்லியிருக்கிறார். ஆட வல்லவர்கள் சிலரைத் திருக்காளத்தியிலிருந்து அழைத்து வர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்."

"தொண்டை மண்டலத்தில்தான் நாட்டியம் தெரிந்தவர்கள் இருக் கிறார்களா? சோழ நாட்டில் இல்லையா? தொண்டை நாடு வடநாடா?"

"அப்படியா... எனக்குத் தெரியாதே!"

"தஞ்சைக்கு அருகே உள்ள திருவையாறு எனும் கலைப் பெருமை மிகுந்த ஊரை நீங்கள் அறிய மாட்டீர்களா?"



"இளம் வயதிலிருந்தே போர்க்களம், யுத்த பூமி என்று சுற்றிக் கொண்டிருந்த நான் கலைப் பூமியைக் காணும் பேறு பெறவில்லை. போதும் யுத்தம். போதும் போர். வாளுக்கும் வேலுக்கும் விடை கொடுத்துக் கலைத்தேவியை இனி ஆராதிப்போம் என்ற உள்ளத் துடிப்போடு இருந்த என் எதிரே நீ வந்தாய். பல கலைகளை அறிந் திருக்கும் உன்னைப் பலவிதங்களில் எனக்குப் பிடித்து விட்டது."

"எந்த எந்த வகைகளில்...?"

"துணிவு; சுந்தரமான பேச்சு; கலைஞானம்!"

"பிறகு?"

"ஆடல் கலைக்கு அடிப்படைத் தேவையான எழில்!"

"ஓ!"

"வேலையும் வாளையும் மறக்க நினைத்த எனக்கு வேலையும் வாளையும் மீண்டும் நினைவுபடுத்தும் உன் வடிவம்!"

"நான் எதிரி நாட்டைச் சேர்ந்தவளா, என்னைப் பார்த்தவுடன் வேலும் வாளும் நினைவுக்கு வருவதற்கு?"

"எதிரி நாட்டைச் சேர்ந்தவளாக இருந்தால் உன்னுடன் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருப்பேனா? என் உள்ளத்துணர்ச்சியை உரைத்திருப்பேனா? ஆனால், நீ ஒரு கள்ளி!"

பூங்கொடி திடுக்கிட்டாள். புலப்படுத்திக் கொள்ளாமல், "எங்கே திருடினேன்? எதைத் திருடினேன்?" என்றாள். விழிகள் வியப்பைப் புலப்படுத்துவதற்கு மாறாகக் குறும்புத்தனத்தைக் குறிப்பிட்டன.

"சோழப் பெருநாட்டின் இளவரசர் அவ்வளவு எளிதில் ஒரு பெண்ணுடன் சமமாகப் பேச மாட்டார்."

"தன் பிள்ளைப் பிராய நண்பருடைய சகோதரியைத் தவிர..."

மதுரன் திடுக்கிட்டுக் கேட்டான். "நான் படகுத்தளத்தில் மூவேந்தர் வேளாருடன் பேசிக் கொண்டிருந்தது உனக்கு எப்படித் தெரியும்?"

"கேட்டுக் கொண்டிருந்தேன். ஒன்றும் ரகசியம் அல்லவே? சாதாரண போர் வீரனின் மனத்தை மயக்கவே பல மங்கையர் இருக்கும்போது பெரும் சாம்ராஜ்யத்து இளவரசர் கடைக்கண் பார்வை பட்டால் போதும் என்று வரிசையாக நிற்க வனிதையர் கூட்டம் படையெடுத்து வராதா?" என்று கூறி நகைத்தான்.

''என்னை அப்படி நினைத்து விட்டாயா? வெற்றித் திருவைத் தவிர வேறு மடந்தையை அடைய நினைக்காத என்னை இப்படி மதிப்பீடு செய்து விட்டாயா? கால காலத்துக்குப் பழகியவள் போல் என்னிடம் பேசும் உன் துணிவு எனக்கு மிகப் பிடிக்கிறது.''

''பிறகு... அழுத்தமான பேச்சு, கலைஞானம் இவையெல்லாம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' என்று கூறிப் பூங்கொடி நகைத்தாள். உடன் சேர்ந்து மதுரனும் நகைத்தான்.

''சரி... சரி... நேரம் பறக்கிறது. உன் நடனத்தைக் காண விரைந்து வந்தேன். ஏமாற்றம்தான்'' - மதுரன் எழுந்தான்.

பூங்கொடி அவர் எதிரே நளினமாக நின்று, ''இளவரசே! மரியாதைக் குறைவாக உரையாடியிருந்தால் பொறுத்துக் கொள்ளுங்கள். என் நாட்டியத்தை நீங்கள் ஒருவர்தான் கண்டு மகிழ வேண்டும். மற்றவர் எதிரே ஆடுவதற்கு எனக்கு விருப்பமில்லை'' என்றாள்.

''இதையும் உன் தாய்தான் சொல்லிக் கொடுத்தாளா? எனக்கு மட்டும் நீ ஆடினால் போதும் என்று உன் தாய் யோசனை சொல்லியிருக்கிறாளா?''

மதுரனின் கேள்வியுடன் சேர்ந்த கூர்மையான பார்வையை எதிர்த்துத் தன் விழிகளைப் பாய்ச்ச, பூங்கொடியால் இயலுமென்றாலும் அவள் அவ்வாறு செய்யாமல், தலையை நிலம் நோக்கி விழியின் கடைக் கோணத்தால் இளவரசர் முகம் நோக்கி, ''இளவரசே! என் தாய் சிலவற்றைச் சொல்லியிருக்கிறாள். பலவற்றைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறாள் என்று முன்பே சொன்னேன். அவர்கள்தான் என் தந்தை, குரு, தெய்வம் எல்லாம். அவர்கள் எச்சரித்திருந்த ஒன்றிலிருந்து மட்டும் நான் சற்று வேறுபட்டுள்ளேன்'' என்றாள்.

''என்ன அது?''

''அரச குடும்பத்தவர்களுடன் பழகும்போது மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று தாய் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறாள். ஆனால்...''

''உம்; சொல். ஆனால்... நான் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் தானே? என்னிடமும்...''

''தங்களிடம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் அல்லவா? ஆனால், அதற்கு மாறாகத் தங்களைச் சந்திக்க வேண்டும், தங்களுடன் தனியே உரையாட வேண்டும் என்று முன்பே முடிவு செய்து விட்டேன்.''



''முன்பு... என்றால்?''

''தங்களைத் தஞ்சை மாளிகையில் சந்தித்த அன்றே. பிறகு நான் தங்களைச் சந்திக்கக்கூடாது என்பதற்காகவே என்னை நான் தங்கள் பார்வையில் படாமலிருக்குமாறு தவிர்த்து வந்தேன்.''

''அப்படியானால், இவ்வாறு அரண்மனையில் நீ பணி புரிய வரக் காரணம் என்ன?''

''சொல்லவும் வேண்டுமா?''

''ஆமாம்; நான் அறிந்து கொள்ள வேண்டும்.''

மீண்டும் பூங்கொடி மறுமொழியாக விழி நகையை உகுத்தாள். பிறகு மெல்லிய குரலில், ''இளவரசர் அவர்களே! எங்கோ ஒரு கிராமப் பகுதியில் மனித சஞ்சாரமற்ற இடத்தில் இருந்தால் தங்களைச் சந்திக்க முடியுமா? அதனால்தான் தஞ்சை மாளிகையில் அரசருக்குப் பணிவிடை செய்யும் பணிப் பெண்ணாகச் சேர்ந்தேன். தங்கள் வருகையை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தேன். ஆனால், தங்கள் அத்தையாரைச் சந்தித்தேன்...''

''இளையபிராட்டியைச் சந்தித்துப் பேசினாயா?''

''நான் பேசியதை விட அவர்கள்தாம் அதிகம் பேசினார்கள். பலன்... எனக்கு இடமாற்றம் கிடைத்தது.''

அங்கே சிறிது நேரம் மௌனம் நிலவியது. பூங்கொடி மெல்ல இளவரசரை நோக்கினாள். இளவரசரின் சிந்தனை வேறு எங்கோ சுழன்றது.

''பூங்கொடி! என் அத்தைக்கு என் மீது அளவுகடந்த அன்பு. என்னை வளர்த்தவர்களே அவர்கள்தாம். என் நல்வாழ்வில் மிக அக்கறை கொண்டவர்கள். என் தந்தை மாமன்னர் இராசராச சோழ சக்ரவர்த்தி அமர்ந்திருக்கும் அரியணையில் நான் அமரப் போகிறேன் என்பதனால், சோழ மகுடத்துக்கு ஏற்றவாறு என்னைப் பரிபூரணமாக உருவாக்க அவர்கள் பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள். என் அத்தான் வல்லவரையரோ, மாவீரனாக நான் திகழ வேண்டும் என்பதில் மிகக் கருத்துடையவர்கள்'' என்று மதுரன் சொல்லி வரும்போது பூங்கொடி குறுக்கிட்டு...

''ஓ! அவர்கள் தங்களைப் பரிபூரண வீரனாகவும், எட்டுத் திக்கும் சென்று சோழர் கொடியை நாட்டும் மகா சக்ரவர்த்தியாகவும் உருவாக்க நினைக்கிறார்கள். உங்கள் கவனம் துளிக்கூடச் சிதறி விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்தும் உடையவர்கள். அப்படித் தானே?''

''ஆம்... அதில் என்ன சந்தேகம்?''

''அப்படியென்றால் என்னை மறந்து விடுங்கள்'' என்று பூங்கொடி கூறவும், சிந்தனை கலைந்த மதுரன் திடுக்கிட்டு, ''என்ன சொல்கிறாய் பூங்கொடி?'' என்று கேட்டான்.

''ஆமாம்! என்னை மறந்து விடுங்கள். வெள்ளத்தில் குதித்து எதிர் நீச்சலிட்டுப் போராடி என் தாய் அருளால் கரை ஒதுங்கிய என்னைக் காப்பாற்றி, ஆற்றங்கரை மாளிகையில், இளவரசிகளுக்கே உரித்தான அறையில் கொண்டு சேர்த்து, பணிவிடைக்காகப் பாங்கிகளை அமர்த்தி, என்னைத் தேடி வந்து, என் நாட்டியக் கலையை ரசிக்க வேண்டும் என்று அறிந்த கணத்திலிருந்து நான் தங்களுக்கு அடிமையாகி விட்டேன். முற்பிறவியின் தொடர்பாக இருக்கலாம்; விட்டகுறையாக இருக்கலாம். என் கலையை ரசித்துப் போற்றும் ஆர்வமுடைய மாபெரும் நாட்டு இளவரசர் எதிரே சரி சமதையாக நிற்கிறேன் என்றால் அதற்கு ஒரு சாதாரண பணிப்பெண்ணுக்கு ஏழைக்குச் சோழ மகளுக்கு இயற்கையான கலை ஆற்றல்தான் காரணம்; தங்கள் கலை உள்ளம் ஆதரிப்பதுதான் காரணம்; அந்தக் கலை உள்ளம், உங்கள் உள்ளத்திலுள்ள வீர உணர்ச்சியைக் குறைத்து விடலாம் அல்லது மாற்றி விடலாம். அதை உணர்ந்தோ என்னவோ, இளைய பிராட்டியார் அப்படி முடிவு எடுத்திருக்கிறார்.''

பூங்கொடி சற்று உணர்ச்சிவயப்பட்டே பேசினாள். அவளுடைய ஒவ்வொரு சொல்லையும் மதுரன் கவனமாகக் கேட்டான்.

''இளையபிராட்டியார் என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?''

''நான் தங்களைச் சந்தித்து விடக் கூடாதாம்.''

''சந்தித்தால்?''

''தங்களுக்குத் தெரியாதா? தங்கள் இதயத்தில் இயற்கையாக வளரத் துடிக்கும் கலை உணர்வு என்னைக் கண்டவுடன் பொங்கி எழுமாம்.''



''ஆமாம், உண்மைதான். இளம் வயது முதல் நான் அற்புதக் கனவு காண்கிறேன். பெரிய கோயில் கட்ட வேண்டும், பெரிய நகரம் அமைக்க வேண்டும், பெரிய ஏரி வெட்ட வேண்டும். அதில் இமயம் முதல் குமரி வரை உள்ள புண்ணியத் தீர்த்தங்களிலிருந்து புனித நீர் கொண்டு நிறைக்க வேண்டும். இறைவன் எதிரே எப்போதும் இசை ஒலி கேட்க வேண்டும். உலகத்தை ஆட்டி வைக்க ஆடும் ஆடலரசனின் எதிரே கலைப் பெண்கள் ஆட வேண்டும்.

''நடனக் கலை நுணுக்கங்களை ஏட்டில் எழுதி வைக்க வேண்டும். சிற்பத்தில் வடிக்க வேண்டும். ஓவியமாகத் தீட்ட வேண்டும். அத்தகைய மாபெரும் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே என் கனவு. கனவு அன்று; நனவாக வேண்டிய இலட்சியம். என் கலை எண்ணத்துக்கு வடிவம் கொடுக்கக் கூடியவள் நீதான் என்பதை நேற்று நான் அழுத்தமாக முடிவு எடுத்து விட்டேன். உன்னைச் சந்திக்க விரும்பினேன். உன்னைக் காணவில்லையே என்ற கவலை என் உள்ளத்தில் எழுந்தது. உன்னைத் தேடிக் கண்டுபிடிக்க யாரை அனுப்புவது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். உன்னைச் சந்தித்து விட்டேன். உன்னுடன் நாட்டியக் கலையைப் பற்றிக் கலந்துரையாட வேண்டும். நீ ஆடும்போது உன் முகத் தாமரையில் ஏற்படும் ஆயிரமாயிரம் உணர்வுகளைக் காண வேண்டும். கர முத்திரைகளை உன்னிப்பாக நோக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் தான் இங்கே இப்போது வந்தேன்.''

மதுரன் கலைத் தாக மேலீட்டால் பேசிக் கொண்டே இருக்கும் போது பூங்கொடி 'களுக்'கென்ற ஒலியுடன் சிரித்து விட்டாள்.

''பூங்கொடி! ஏன் சிரித்தாய்?''

''நினைத்தேன், நகைத்தேன்.''

''என்ன நினைத்தாய்?''

''கரிகளோடும், பரிகளோடும் பகைவர் பூமியை வெல்லப் படை எடுத்துச் செல்லும் உங்கள் இதயத்தில் இவ்வளவு பெரிய கலைக் கனவுகளா? அதை நினைக்கும்போது நகைப்பு வந்தது.''

''அதில் சிரிக்க என்ன இருக்கிறது?''

''உங்கள் தந்தையும் இவ்வாறே சித்திரம், சிற்பம், நடனம், இலக்கியம் என்று இள வயதில் ஆர்வமுடையவராய் இருந்தார். அவருக்கும் பெரிய பெரிய இலட்சியங்கள் எல்லாம் உண்டு என்று

கேள்விப்பட்டேன். பெரிய கோயில், பெரிய லிங்கம், பெரிய ஆட வல்லார், பெரிய விமானம், கோயிலில் நாட்டியத் தோற்றங்களைச் சிலையாக வடிக்க வேண்டும் என்றெல்லாம் பேராவல். நாட்டியக் கலை என்றால் அவருக்கு உயிர். பிறகு அந்த ஆர்வம் என்னவாயிற்று?''

''ஏன், என்னவாயிற்று? என் தந்தையின் உள்ளத்திலிருந்து கலை உணர்வை ஒருவராலும் அழிக்க முடியாது. கலை உணர்வு கொண்டவராதலால்தான் அவர் உள்ளத்தில் கருணை பொங்கியிருக்கிறது. பகைவனுக்கு அருள வேண்டும் என்ற தயவு மேலோங்கி என் தந்தை தன் உள்ளத்து உணர்வுகளை என்னிடம் பலமுறை கூறியிருக்கிறார்.''

''சரி, அவர் ஏன் தன் கலைக் கனவை நனவாக்க முயற்சி எடுக்கவில்லை?''

''சோழ நாட்டைப் பலப்படுத்தி மாற்றாரை அடக்கி, நாட்டை விரிவுபடுத்திச் சோழ நாட்டை பொன்னாடாக்க வேண்டும் என்ற முதல் இலட்சியத்தை நிறைவேற்றவே அவருக்கு இவ்வளவு ஆண்டுகள் பிடித்துவிட்டன. உனக்கு நாட்டு நடப்பு தெரியுமா?''

''நன்றாகத் தெரியும். மறைந்திருந்து எந்த நொடியிலும் தலை தூக்கத் தக்க தருணம் எதிர்நோக்கியிருக்கும் பாண்டியர்கள், கடற் படையைக் கொண்டு பயமுறுத்தும் சேரர்கள், வடக்கே சாளுக்கியர்கள் என்று இப்படி நாலா திக்குகளிலும் அவர் போரிட வேண்டியிருந்தது. அதற்காகத் தங்கள் வலிமையைப் பயன்படுத்த வேண்டியிருந்தது.''

''அப்பப்பா! எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே!''

''என் தாய் சொல்லியிருக்கிறாள்; சொல்லுவாள்; சொல்லிக் கொண்டே இருப்பாள்.''

''உன் தாய்க்கு இவ்வளவு செய்திகள் எப்படித் தெரியும்? எங்கோ சிறு கிராமத்தில் வாழும் உன் தாய், நாட்டுச் செய்திகள் அனைத்தையும் எவ்வாறு அறிந்தாள்?''

''அவர்கள் எவ்வாறு அறிவார்கள் என்பதை நான் ஏன் கேட்க வேண்டும்? நமது மாமன்னர் இராசராசருக்கு நாட்டியக் கலையிலுள்ள ஆர்வத்தைப் பற்றி என் தாய் சொல்லியிருக்கிறாள்'' என்று பூங்கொடி கூறவும் மதுரன் மிக ஆர்வத்துடன் அவளைப் பார்த்து ''உன் தாயை நான் சந்திக்கலாமா?'' என்று கேட்டான்.



''வேண்டாம்; வேண்டாம். என் தாயின் சொல்லை மீறிய பாவத்துக்கு ஆளாகிவிடுவேன். என் தாயைச் சந்திக்கும் பேச்சே வேண்டாம். என்னைச் சந்திப்பதையும் என்னுடன் உரையாட நினைப்பதையும் மறந்து விடுங்கள். உங்களைப் பற்றி உங்கள் அத்தை, அத்தான், மாமன்னர் அனைவரும் பெரும் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். அந்தக் கனவுக்குக் கலை ஆர்வம் குறுக்கே நிற்கக்கூடாது. இங்கிருந்து போய் விடுங்கள். ஆ; பொறுத் தருளுங்கள்; நீங்கள் ஏன் போக வேண்டும்? என்னை இங்கிருந்து செல்ல வழி செய்யுங்கள்'' என்று கூறி, இதுவரை மலர்ந்திருந்த முக உணர்ச்சியைக் கணத்தில் மாற்றிக் கொண்டாள்.

சோழ இளவரசர் மதுரன் மஞ்சத்தை விட்டு எழுந்து, ''பூங்கொடி! என் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் கலை ஆர்வத்தைத் தடுக்க யாராலும் இயலாது. என் கனவில் ஒரு பெண் எப்பொழுதும் வருவாள். உலகத்தினழகை எல்லாம் ஒன்று திரட்டிப் படைக்கப் பட்ட பூம்பாவை அவள். நடனக் கலைக்காகவே பிரமன் படைத்த வடிவம், விற்புருவமும், வேல் விழிகளும், பேசாமல் பேசும் இதழ்களும், நெளியும் கரங்களும், செஞ்சீரடிகளும்... ஆகா... அந்தக் கனவுக் கன்னி எனக்கு நாட்டியக் கலையின் அரிச்சுவடிப் பாடங்களை நாள்தோறும் சொல்லிக் கொடுப்பாள். தன் விழிகளால் என் விழிகள் எத்தகைய கோணங்களில் நோக்க வேண்டும்; உணர்வுகளுக்கு ஏற்ப சுழல வேண்டும் என்றெல்லாம் கற்றுக் கொடுப்பாள். தவறாக நான் ஆடும்போது சீறிப் பாய்ந்து தவறைத் திருத்துவாள். இரவிலே கலைக் கனவு காண்பேன்; பகலிலே போர்க்களத்திலே வாளெடுத்துச் சுழற்றுவேன். எரிதணல் போன்ற விழிகளுடன் எதிர்களை நோக்கிக் கர்ஜிப்பேன். கலை, ஆர்வம், என் வீர உணர்ச்சியை என்றுமே கருகச் செய்ததில்லை. அந்த வடிவழகி - நடன தேவதை எனக்கு உற்சாகமூட்டி வருகிறாள். இரவில் அவள் அளிக்கும் கலைப் பாடம் பகலிலே போர்க்களத்தில் புகழை அள்ளித் தந்து கொண்டிருந்தது.''

பூங்கொடி இளவரசரை நோக்கி வினவினாள். ''இப்பொழுதும் அந்தத் தேவதை கனவில் வருகிறாளா?''

''நேற்று வரை இரவில் வந்தாள். இன்று இதோ பகலிலேயே வந்து விட்டாள். பூங்கொடி! நான் கற்பனை செய்த பெண், கனவு தேவதை உன் வடிவில் வந்து விட்டாள். பூங்கொடி! என் கலை மலர்ச்சிக்கு இன்று முதல் நீ நன்னீர் வார்ப்பாயா? ஆடு; ஆடு; ஆடிக் கொண்டே இரு.''

இளவரசர் உணர்ச்சி வேகத்தில் தன்னை மறந்து பேசினார்... பூங்கொடிக்கு ஒருபுறம் மகிழ்ச்சி. மறுபுறம் கவலை. தன் எண்ணம் நிறைவேறுகிறது என்பதில் மகிழ்ச்சி. மறுபுறம் என்ன நேருமோ என்ற கவலை. மிகப் பிரயத்தனத்துடன் முக பாவத்தை மாற்றிக் கொண்டு, ''இளவரசர் அவர்களே! இங்கிருந்து போய் விடுங்கள். என்னை மறந்து விடுங்கள்! தங்கள் அத்தையும், தந்தையும் மகத்தான கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கனவைச் சிதைத்தால், அந்தக் கோபம் என்மீது பாயும். இதனை எதிர்பார்த்து என் தாய் முன்பே எச்சரித்திருக்கிறாள்'' என்றாள்.

''தாய், தாய்... எல்லாவற்றுக்கும் தாயா? விவரம் அறிந்தளல்லவா நீ? சுய முடிவெடுக்கும் வயதும் அறிவும் அடைந்தவளல்லவா நீ? என்னைச் சந்திக்கும் ஆர்வமிருப்பதாகச் சற்று முன்பு கூறினாய். அதனால்தான் ஆண் உடையில் படகில் வந்தாய். அப்பொழுது எமது வீரர்கள் கண்டிருந்தால் உன் நிலை என்னவாகியிருக்கும்? அவ்வாறு துணிவுடன் செயலாற்ற முற்பட்ட நீ இப்போது ஏன் தயங்குகிறாய்? இதுவரை நான் இப்படி ஒரு பெண்ணிடம் பேசியதில்லை. முன் கோபக்காரன் என்று பெயரெடுத்த நான் இன்று எப்படி மாறியிருக் கிறேன்? அதற்கு நாட்டியக் கலையே காரணம். கை தட்டினால் நடனப் பெண்கள் உடனடியாக நூறாயிரம் பேர் வருவர். ஆனால், என் உள்ளத்தில் நீ நின்று நடனமிடத் தொடங்கிவிட்டதால் இவ்வளவு நேரம் விவாதிக்க வேண்டி வருகிறது.

''உம்; புறப்படு! நீராடிப் புத்துடை அணிந்து வசந்த மண்டபத் துக்கு வந்து சேர். இரவு முழுமதி வானில் பவனி வரும்போது நீ என் முன்னால் ஆடுகிறாய். உன் விருப்பப்படி இசை வேண்டாம். நானும் நீயும் மட்டும்தான். நீ ஆடு; நான் ரசிக்கிறேன். நான் ஆடுகிறேன்; தவறிருந்தால் திருத்து'' என்று கூறி, கை தட்டி ''யார் அங்கே?'' என்று அழைத்து, பூங்கொடியை அலங்கரித்து வசந்த மண்டபத்துக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு அவர்களுடையது என்று கூறி, விர்ரென்று எழுந்து சென்றான்.

முழுமதி மெல்ல எழுந்து, காரிருளை அகற்றிய அந்த ஆற்றங் கரைப் பகுதியில் அழகாக அமைந்த வசந்த மண்டபத்தில் பூங்கொடி பட்டாடை உடுத்தி, தேவலோக ரம்பையைப் போல் நின்றிருந்தாள்.



# 14. கடத்தியவர் யார்?

காவிரியின் குளிர் நீரில் தவழ்ந்து வரும் தென்றல், நந்த வனத்தில் பூத்திருந்த மல்லிகை, முல்லை, இருவாட்சி மலர்களின் மணத்தையும் சேர்த்துச் சுமந்து வந்தது.

பூங்கொடி நின்று கொண்டிருந்தாள். இளவரசர் வருகையை எதிர் பார்த்து, அவள் ஒருபோது மெல்லச் சிரித்துக் கொண்டாள். தனக்குத் தானே ஏதோ பேசிக் கொள்வதுபோல் உதடுகள் முணுமுணுத்தன.

'என் அழகில் அவர் மயங்கிவிட்டார். தாயார் சொல்வார்களே, தேனைக் குடித்த மந்திபோல் என்று... அப்படித்தானோ?

சே! அப்படி நாம் அவரை மந்தி என்று வர்ணிக்கக்கூடாது. அவர் சோழ நாட்டுச் சுந்தரபுருஷன். மக்கள் அவருடைய எழிலைப் புகழ்கிறார்கள். காணும் மங்கையர் சொக்கி நிற்கும் அழகு படைத்த அவரைப் போய் மந்தி என்று கூறலாமா?

தவறுதான். நமக்குள்ள வஞ்சினத்தால் உண்மையை மறக்க லாமா? அவர் தோற்றத்தைப் பழிக்கலாமா? அவருக்கு என் மீது அவ்வளவு அன்பு - என் கலையின் மீது ஆவல்! சோழ நாட்டின் இளவரசர் பட்டம் சூடிக் கொள்ளப் போகும் மகத்தான மனிதர் என் நாட்டியத்தை ரசிக்க விரும்புகிறார். என்ன வார்த்தை அவர் சொன்னார் சற்று முன்பு? 'இங்கே நானும் நீயும் மட்டும்தான்; நீ ஆடு; நான் ரசிக்கிறேன். நான் ஆடுகிறேன்; தவறு இருந்தால் நீ திருத்து' என்று அவர் என்னிடம் மிக நெருங்கிய பழக்கமுள்ளவர்கள் போல் கூறினாரே! அவரைப் போய் பழிக்கலாமா?

நான் என்ன செய்வேன்? என் தாயார் கூறிய சம்பவங்கள் என் நினைவுக்கு வந்தன. அரச குடும்பத்தாரிடம் எச்சரிக்கையாய் இரு என்று கூறினார்களே? அதனால்தான் இளவரசரைப் பார்த்தவுடன் சற்று எரிச்சல் வருகிறது. சற்றுக் கோபம் வருகிறது; சற்று ஆத்திரம் வருகிறது. உம்; சற்று நேரத்துக்கு நாம் அந்த உணர்ச்சிகளை அடக்கிக்

கொள்வோம். இளவரசர் வருவார், ஆடச் சொல்வார். என்ன ஆடுவது?

முல்லைத் தீவில் பல ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதாக அவள் தாய் கூறியது நினைவுக்கு வந்தது.

*'ஒருசமயம், கடல் கடந்து சென்றபோது கலம் பழுதுற்றதால் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரத்தின வியாபாரி ஒருவர் முல்லைத் தீவில் தங்கினார். இருவரும் பேசிக் கொண்டார்கள். அவள் கதையை அந்த வியாபாரி கேட்டார். அவள் சொன்னாள்:*

*"என் கதையை மற்றொரு நாள் கூறுகிறேன். இப்போது வேளை வந்துவிட்டது. இதுகாறும் நான் கற்றிருந்த கலையை யார் எதிரேயாவது அரங்கேற்ற வேண்டிய வேளையை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். இதோ... இப்பொழுது அந்த வேளை வந்து விட்டது. என் ஆட்டத்தில் தவறிருந்தால் பொறுத்தருளுங்கள்'' என்று அவள் கூறினாள். கால்களில் சதங்கையை அணிந்திருந்தாள்.*

*அகக்கூத்து ஆடத் தொடங்கினாள். பாடியவாறு ஆடினாள். ஆடியவாறு பாடினாள். மாயவன் ஆடும் பாண்டரங்கம் ஆடினாள். நெடியோன் ஆடும் துடியாடினாள். திருமகள் ஆடும் பாவைக் கூத்தாடினாள். ஆட்டத்துக்கு உறுதுணையாகக் கலீர் கலீரெனச் சதங்கை ஒலி மட்டுமே எழுந்தது.**

*கடற்கரைப் பகுதி முழுமையும் அமைதியுடன் அவள் ஆட்டத்தை ரசித்தது. புள்ளினங்கள் உறங்கியவாறே கனவிலே அவள் கூத்தைக் கேட்டு மகிழ்ந்தன. மறுநாள் பொழுது விடியும்போது உற்சாகமாகப் பறக்க வழிகோலின. வெண்திரை தன் கரங்கொட்டி நில மகளை முத்தமிட்டு மகிழ்ந்தது.*

*அவள் பாவைக் கூத்தாடத் தொடங்கினாள். அவளுக்கு முதற் கை கொடுக்க இப்போது அவன் முன் வந்தான். முதல் நாள் கண்ட ஆட்டத்தை நொடியில் கற்று கொண்டு அவன் ஆடுவதைக் கண்டு அவள் அதிசயித்தாள்.*

*முதற் கை கொடுக்க அவள் கரத்தை அவன் பிடித்தபோது அவளது உடல் சிலிர்த்தது. அவன் கை விரல்களுடன் அவளுடைய விரல்கள் பிணைந்தபோது அவளது உள்ளமும் சிலிர்த்தது.'*

---

*** விக்கிரமன் எழுதிய 'நந்திபுரத்து நாயகி' புதினத்தில் முழுமையும் காணலாம்.**



இந்த நினைவுகள் எழுந்தவுடனே பூங்கொடியின் உடல் சிலிர்த்தது. இளவரசர் அங்கே வந்து அவளுடைய கரங்களைப் பிடித்து ஆடுவது போல் உணர்ந்தாள்.

முல்லைத் தீவுச் சம்பவம் போலவே இன்று நடக்கப் போகிறதோ என்று அவளுக்குத் தோன்றியது.

அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை. இளவரசர் இன்னும் வரவில்லை அவள் உடனே ஆடத் தொடங்கினாள்; ஆடிக் கொண்டே இருந்தாள். இளவரசருடன் சேர்ந்து ஆடுவது போன்ற தோற்றம் அவளுள் எழுந்தது.

பூங்கொடி துவண்டாள். உண்மையிலேயே அவள் துவண்டாள். அவள் பாதங்கள் கனத்தன. கால்களில் ஒருவித நடுக்கம். நிற்க முடியாத நிலை. ஏன் அப்படி ஏற்பட்டது என்று அவளால் உணர முடியவில்லை.

அருகே இருந்த மேடையில் அமர்ந்தாள். இளவரசர் எந்த நொடியிலும் வந்து விடுவார். அவர் வந்தால் நாம் எழுந்திருக்கக் கூடாது. இவ்வளவு நேரம் ஏன் தாமதம் என்று கேட்போம்; நிச்சயம் அவர் ஏதாவது சமாதானம் சொல்வார். மேலும் தாமதிக்க மாட்டார்; நீங்கள் வருவதற்கு முன்பே ஆடிவிட்டேன் என்று சொல்வோம். நேரம் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதனால் உடனே அவர் என்னை ஆடச் சொல்வார். நாமே பாடுவோம். என்ன பாடலாம்? தாய் எவ்வளவோ பாடல்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறாள். திருநாவுக்கரசரின் தமிழ்த்தேன் பாடலைப் பாடலாம் அல்லது ஒரு பாடலைச் சோழ சக்ரவர்த்திகள் எதிரே மட்டும் வாய்ப்பு நேரும்போது பாடு என்று தாய் சொல்லியிருந்தாரே அதை இப்போது பாடலாமா?

'குன்றெறிந்து குலம் காத்து குமரன் வந்து
காவானோ தோழி? காவானோ தோழி?
மன்றிலும் பொதியிலும் மகிழ்ந்தே விளங்குவான்
மலையிடைப் பொழிலிடை மலர்ந்தே வாழ்வான்
இன்றிங்கு வந்தெனக் காறுதல் கூறியே
இடரொழித் தினிமை கூட்டுவனோ தோழி?'

அவள் முணுமுணுத்தாள். இல்லை; வாய்விட்டே பாடினாள். அந்த அமைதி நிலவிய நிலா வேளையில், சில வண்டுகளும் இரவுப் பட்சிகளும் மெல்ல எழுப்பும் ஓசையைத் தவிர, வேறு ஒலி எழாச் சூழலில் அவள் வானத்தைப் பார்த்துப் பாடிக் கொண்டிருந்தாள்.

யாரோ வரும் காலடி ஓசை கேட்கிறது பூங்கொடி திரும்பிப் பார்த்தாள்.

சோழ வீரர்கள் இருவர் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் நின்ற தோரணையிலிருந்து அவர்களிடம் மிகுந்த மரியாதை கலந்திருப்பது தெரிந்தது.

'யார் நீங்கள்?' என்று கேட்பது போல் புருவத்தை உயர்த்தினாள் பூங்கொடி.

''இளவரசர் எங்களை அனுப்பினார். பழையாறையிலிருந்து செய்தி வந்தது. மிகவும் முக்கியமான பணி. அவர் விரைந்திருக் கிறார். தங்களைப் பழையாறைக்கு அழைத்து வருமாறு கூறினார்'' - அவர்கள் குரலில் மிகுந்த பணிவும் மரியாதையும் இருந்தன.

பூங்கொடி திடுக்கிட்டாள். இப்படியும் ஒரு திடீர்த் திருப்பமா? என்று எண்ணினாள். இதில் ஏதாவது சூழ்ச்சி இருக்குமோ?

இருக்கட்டுமே! அவள் கவலைப்படவில்லை. இளவரசரை உடனே சந்திக்க வேண்டும் எனும் ஆவலும் தேவையும் பரபரப்பும் அவளுக்கு இப்போதில்லை. 'என்னைச் சந்திப்பதில், என் ஆடலை ரசிப்பதில் அவருக்குத்தான் ஆர்வம் அதிகம். சூழ்ச்சியாக இருந்தால் ஏமாறப் போவது அவர்தான். உம்!'

அவள் மீண்டும் கேட்டாள்: ''இளவரசர் எங்கே இருக்கிறார்?''

பணிவான குரலில்: ''பழையாறை மாளிகையில்.''

''பழையாறையா?''

''ஆமாம்!''

''ஓ! நந்திபுரம் என்று சொல்வார்களே... அந்த ஊரா?''

பூங்கொடியின் தாய் நந்திபுரத்தைப் பற்றி கூறியிருக்கிறாள். பழையாறையின் பழைய பெயர் நந்திபுரம்; பல்லவர்களின் கோட்டை இருந்த இடம்.

அழைக்க வந்த பணி வீரர்களுக்கு அந்த விவரம் தெரிந்திருக்க நியாயமில்லை. அவர்கள் திகைத்தனர். அவர்களுள் ஒருவன் மட்டும் புரிந்து கொண்டான்.

''ஆமாம்... நந்திபுரந்தான்'' என்றான்.



''அங்கே இளையபிராட்டி இருக்கிறார்களா?'' என்று கேட்டாள் பூங்கொடி.

பூங்கொடியின் தாய் கூறியிருக்கிறாள். நந்திபுரம் இளையபிராட்டி குந்தவ்வைக்கு மிகப் பிரியமான நகரம் என்று. அவர்களை 'நந்தி புரத்து நாயகி' என்று தன் தாய் புகழ்ந்திருப்பது நினைவுக்கு வந்தது.

அழைக்க வந்த வீரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

பூங்கொடிக்குச் சந்தேகம் துளிர்விடத் தொடங்கியது. ஆனால், அவர்கள் அடுத்த நொடியிலேயே, ''மாளிகையில் யார் யார் இருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. நாங்கள் அறிந்த வரையில் இளையபிராட்டியார் பழையாறையில் இல்லை'' என்றவுடன் பூங்கொடிக்குச் சற்று மன நிறைவு ஏற்பட்டது.

''இளையபிராட்டியார் இப்பொழுது எங்கே இருப்பார்கள்?'' அடுத்த கேள்விக்கும் உடனே மறுமொழி கூற வீரர்களால் இயலவில்லை என்றாலும் அவர்களுள் சற்றுப் புத்தி சாதுர்யமுடைய ஒருவன், ''இளையபிராட்டியார் எங்கே இருப்பார்கள்? அவருடைய தலைவர் வல்லவரையர் இருக்கும் இடத்தில்தான்!'' என்று கூறிய போது, அவர்களுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கம் கருதிச் சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள்.

''நேரமாகிக் கொண்டிருக்கிறது, புறப்படுங்கள். தாமதமானால் இளவரசர் எங்களைத் தண்டிப்பார்'' என்று வீரர்கள் துரிதப்படுத்தினர்.

பூங்கொடி எழுந்தாள். பாதங்களில் கட்டியிருந்த சதங்கை அமைதியான அந்த வேளையில் 'கலீர் கலீர்' என்று ஒலித்தது. மெல்லக் குனிந்து சதங்கைகளைக் கழற்றினாள்.

பல்லக்குக் காத்திருந்தது.

''சிவிகையில் ஏறிப் பழையாறைக்குச் செல்வதென்றால் நாளை தானே அடைய முடியும்?'' பூங்கொடி கேட்டாள்.

வீரர்கள் மறுமொழி கூறவில்லை. சிவிகையில் பூங்கொடி அமர்ந்து கொள்ள, அது குலுங்கக் குலுங்க அதைச் சுமந்து விரைந்தனர்.

ஆற்றங்கரையில் பல்லக்கு இறக்கப்பட்டது. திரையில் விலக்கி எட்டிப் பார்த்த பூங்கொடியை நோக்கி வீரர்கள், ''வாருங்கள்! படகில் செல்லலாம்'' என்றனர்.

''படகிலா?''

''ஆமாம்... காவிரியைக் கடந்து சென்றால் அங்கிருந்து பழையாறையைச் சீக்கிரம் அடையலாம்.''

காவிரியைக் கடந்து மறுகரைக்கு வந்ததாக அவள் நினைவு. அவள் தயங்கினாள். அவளை அப்படியே தூக்கிப் படகில் அமர்த்தி விடுவார்கள்போல் தோன்றியது. படகில் ஏற மறுத்தாள்.

''நான் படகில் ஏறப் போவதில்லை. இளவரசர் என்னை அழைக்கவில்லை. பொய் சொல்கிறீர்கள். சூழ்ச்சி செய்கிறீர்கள். இளவரசர் அறிந்தால் தண்டனை வழங்குவார் என்பது உறுதி'' என்று கூறித் திரும்பி நடந்து ஓட முற்பட்டவளை, வீரர்களில் ஒருவனின் அழுத்தமான பிடி தடுத்தது. தடுத்தவுடன் அவள் மறுகணம் ஏதோ ஒருவித நெடி தாளாமல் துவண்டாள்.

# 15. புன்னகையுடன் புத்த பிட்சு

பூங்கொடி கண்விழித்தபோது, அந்த அறையில் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. மேலே கூரை வேயப்பட்ட பர்ணசாலை போன்று சூழ்நிலையுடைய அந்த இடம் தூய்மையான தோற்றத்துடன் விளங்கியது. குளிர்ந்த காற்று எங்கிருந்தோ நறுமணத்தையும் சுமந்து வந்தது. விதவிதமான புள்ளினங்களின் குரலோடு கன்றின் குரலும் கேட்டது. அந்தக் குரலில்தான் எத்தனை பாசம்!

கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த பூங்கொடி மெல்ல எழுந்து, அந்த அறையின் வலக் கோடியிலிருந்த சாளரத்தின் வழியே வெளியே எட்டிப் பார்த்தாள்.

பலகணிக்கு அப்பால் மரத்தடியில் சருகுகள் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்ட புகை அங்கிருந்து எழுந்து, நாலா பக்கமும் பரவியது. அந்தப் புகை காற்றடிக்கும் பக்கம் சுழன்று வந்தது. ஆனால், அந்தப் புகை நறுமணத்தைத் தரவில்லை. ஆயினும் நறுமணம் எங்கிருந்தோ மிதந்து வந்ததைப் பூங்கொடி உணர்ந்தாள். மூச்சை மெல்ல இழுத்து மணத்தை நுகர்ந்தாள். மனத்துக்கு இதமாக இருந்தது. உடலில் புதுத் தெம்பு ஏற்பட்டதை அவள் உணர்ந்தாள்.



என்ன முயன்றும், அவளால் தாயோடு இருக்கும் நினைவை மறக்க முடியவில்லை. காலையில் இந்த நேரத்தில் அவள் நீராடி, புத்துடை அணிந்து, நடராசர் சிலை எதிரே நின்று, முதல் நாள் தாய் கற்றுக் கொடுத்த நடனத் தோற்றங்களை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டு செயல்படுத்த முயல்வாள். அவள் இடை அசையும், கரங்கள் நெளியும். விரல்கள் பலவித முத்திரைகளைப் புலப் படுத்தும். விழிகள் பல உணர்வுகளை வெளிப்படுத்திச் சுழலும். அவள் பாதங்கள் தாளமிடும் சப்தம் கேட்டுத் தாய் அங்கே வருவாள்.

நடராசர் சிலை அருகிருந்து அகிலின் புகை நறுமணம் வீசி எங்கும் பரவும். தாயின் மெல்லிய பாடல் குரலும், உள்ளத்துள்ளே ததும்பி நிற்கும் கலை ஆர்வமும் நேரம் போவது தெரியாமல் அவளை ஆடிக் கொண்டே இருக்கச் செய்யும்.

வீட்டிலே அவள் நுகரும் அதே மணம் இங்கும்.

பூங்கொடி இருப்பிடம் விட்டு வெளியே வந்தாள். ஓலை வேயப் பட்ட அந்தச் சிறு குடிலுக்கு அருகே மற்றொரு சிறு குடில். ஓலை மீது பூசணிக் கொடி படர்ந்திருந்தது. வெளியே சிறு திண்ணை மூங்கில் கதவு திறந்திருந்தது. அந்தக் குடிலிலிருந்துதான் நறுமணப் புகை வெளியே பரவிக் கொண்டிருந்தது.

பூங்கொடி மெல்ல எட்டிப் பார்த்தாள். அங்கே ஒருவரையும் காணவில்லை. மிகவும் தூய்மையாக அந்தக் குடில் விளங்கியது. கம்பீரமான புத்தர் சிலை. புத்தரின் பாதங்களில் சிவப்பு நிற மலர்கள் தூவப்பட்டிருந்தன. சிலைக்கு எதிரே ஓலைப்பாய்.

குத்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பல துளைகளுடன் கூடிய, கலை நுணுக்க வேலைப்பாடு மிகுந்த தூபக் கலத்தினின்று அந்த நறுமணம் சுழன்ற வண்ணம் மேகச் சுருள் போல் எழுந்து பரவிக் கொண்டிருந்தது.

அருள் பொங்கித் தவழும் வதனத்துடன் புத்தர் பிரான் கம்பீரமாக வீற்றிருக்கும் திருத்தோற்றங்களைக் கண்டு சிலிர்த்து நின்றாள். தன்னையறியாமலேயே விழிகள் மூடிக் கொண்டன. கை தானாகவே கும்பிட்டது.

அவள் இதயத் தாடகம் இனம் புரியாத சிந்தனைகளால் குழம்பிக் கொண்டிருந்தது. இரண்டு நாள்களில் எதிர்பாராமல் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களை அவள் நினைத்துப் பார்க்க இப்போது நேரம் கிடைத்தது.

தஞ்சைக்கும் உறையூருக்கும் துணையின்றிச் செல்லக் கூடிய துணிவு தனக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பதை எண்ணிப் பார்த்தாள். எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தும் தன்னால் எவ்வாறு தாங்கிக் கொள்ள முடிகிறது? அவள் வியந்தாள். அரச குடும்பத்தாரிடம் மோதும் மனப்பான்மை தனக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பதை இப்பொழுது நினைத்தாள். தாயின் துணையின்றி வேறு துணையறியா அவள் தன்னந்தனியே இவ்வளவு நாள்கள் தஞ்சையிலும் உறையூரிலும் எவ்வாறு நடமாட முடிந்தது என்று எண்ணிப் பார்த்தபோது, அவள் உடல் மெய் சிலிர்த்தது.

பூங்கொடி சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரையும் காணவில்லை. காற்றிலே மரக்கிளைகள் அசையும் ஓசையும் அணிலும் முயலும் விரைந்தோடுவதால் ஏற்படும் சலசலப்பும் கேட்டன. வெளியே வந்து சுற்றும் முற்றும் பார்த்தாள்.

நாம் எங்கிருக்கிறோம்? இது எந்த இடம்? இளவரசரைச் சந்திக்க விடாமல், தன்னை மயக்கமடையச் செய்து, தன்னை முதல் நாள் இரவு யாரோ தூக்கி வந்த நிகழ்ச்சி அவள் நினைவுக்கு வந்தது. கவர்ந்து வந்தவர்கள் பர்ணசாலைபோல் தோற்றமளிக்கும் இங்கே கொண்டு வரக் காரணம் என்ன? பல கேள்விகள் அவள் மனத்தில் எழுந்தன.

பூங்கொடி வெளியே நடந்தாள். ஒவ்வொரு மரமாக நிமிர்ந்து பார்த்தாள். கைக்கெட்டும் உயரத்தில் வளர்ந்திருந்த தென்னை மரத்தில் குலை குலையாகச் செவ்விள நீர்க் குலைகள் தொங்கியதைக் கண்டாள். மூங்கில் புதரில் மூங்கில்கள் காற்றில் அசையும் போது 'சர் சர்' என்று ஓசை எழுப்புவதைக் கேட்டாள்.

சுதந்தரமாக வளர்ந்திருக்கும் பூச்செடிகளையும் பூத்துக் குலுங்கும் மலர்க் கொடிகளையும் பார்க்கும்போது, அவளுக்கு மன அமைதி ஏற்பட்டது.

பூசணி மலர்கள் கொடியிடையே பூத்து நின்று அவளைப் பார்த்துச் சிரித்தன. சரக்கொன்றை மலர்கள் தோரணம் போல் அசைந்தாடின. அடர்ந்த செடி கொடிகளின் இடையே ஒற்றையடிப் பாதை சென்றது. அதன் வழியே சென்று பார்க்கும் எண்ணம் ஏற்பட்டது. வழியே ஒரு வாய்க்கால். அதன் வழியே சலசலவெனத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. அருகே உள்ள சிற்றாறு ஒன்றிலிருந்து அது பிரிந்து வருவதாக இருக்கலாம். நீரில் வேகம் இருந்தது.



அதில் மூழ்கிக் குளிக்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. மேனி மீது குளிர்ந்த நீர் பட்டால், இதயத்துக்கு மேலும் புத்துணர்வு ஏற்படும் என்று தோன்றியது. இதுநாள் வரை அவள் காலை வேளையில் குளிக்காமல் இருந்ததில்லை. உணவு கொண்டதும் இல்லை. இப்பொழுது பசித்தது.

சோழ நாட்டு இளவரசியைப் போன்ற பகட்டான ஆடையை அவளுக்கு நேற்று அணிவித்து அலங்கரித்திருந்தார்கள்.

ஆனால், உணவு ஏதும் தரவில்லை. சிறு சுழல்களுடன் விரைந்தோடி வரும் தண்ணீரில் இறங்கி அமிழ்ந்து குளித்தாள். 'இப்படி ஓர் அழகிய சூழலில் வாழ்நாள் முழுவதும் இருந்து விட்டாலே போதும்; நமக்கெதற்கு அரச குடும்பத்தாருடன் பிணக்கு? தாயையும் அழைத்துக் கொண்டு இந்த ஆற்றங்கரைக்கே வந்து விடுவோம்' - அவள் எண்ணம் விரிந்தது.

இந்த ஆற்றின் பெயர் என்ன? காவிரியினின்று பிரிந்து வரும் சிற்றாறா? வாய்க்காலா? அல்லது காவிரியில் கலக்கப் போகும் சிற்றோடையா? இந்த இடத்திற்கு நம்மை ஏன் அழைத்து வந்தார்கள்? உணவுக்கு என்ன வழி? மக்கள் நடமாட்டத்தையே காணவில்லையே?

முதல் நாள் ஆடையை மறுநாள் உடுத்திப் பழக்கமில்லாதவள். பட்டாடையாயினும் உடுத்தியதை மீண்டும் உடுத்த மனம் வரவில்லை. துவைத்து உடுத்தவும் வழியில்லை. அரை மனத்துடன் பட்டாடையை உடுத்திக் கொண்டு புறப்பட்டாள்.

யாராவது இங்கு இருக்கத்தான் வேண்டும். யாரோ புத்தர் பிரானுக்கு மலர் தூவி வணங்கியிருக்கிறார்கள். நறுமணப் புகை பரவச் செய்திருக்கிறார்கள். புத்தர் பிரானைத் துதிப்பவர்கள் யாரோ இங்கு இருக்க வேண்டும்.

குடிலில் தான் தங்கிய இடம் அடைந்தபோது வியப்பு காத்திருந்தது! அங்கே மாற்றுடை வைக்கப்பட்டிருந்தது. காவி நிறப் புடைவை. ஒரு தட்டில் சூடான சோறு. அருகே சிறு கிண்ணத்தில் தயிர். மற்றொரு தட்டில் வாழைப்பழங்கள்.

ஒரு கணம் பூங்கொடி திகைத்து நின்று விட்டாள். யார் இவற்றைக் கொண்டு வைத்திருப்பார்கள்? சுற்றும் முற்றும் பார்த்தாள்; வெளியே வந்து பார்த்தாள்.

அடுத்து குடிலுக்கு ஓடினாள். புத்தர் பிரான் மௌனமாய்த் தியானத்திலிருந்தார். நறுமணப் புகை சூழ்ந்திருந்தது.

''யார் இங்கே?'' - பூங்கொடி குரல் கொடுத்தாள்.

''யாருமே இல்லையா?'' மீண்டும் குரல் கொடுத்தாள். அமைதி - மௌனம். பூங்கொடி மீண்டும் தன் இருப்பிடம் அடைந்தாள். தயிரைக் கலந்து சோறுண்டாள். அது அமுதமாக இருந்தது, அந்த வேளைக்கு.

இப்பொழுது யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. பூங்கொடி திரும்பினாள். வாயிற்படியருகே நிழலாடியது. நெடிய நிழல் ஒன்று அறையில் படர்ந்தது. அசையாமல் இருந்த நிழல் மெல்ல அசைந்தது.

பூங்கொடி பரபரப்புடன் எழுந்தாள். நிழலுக்குரிய அந்த உருவம் புன்னகையுடனும், அமைதி தவழும் முகத்துடனும் அறை வாசலில் நின்றது; இமைக்கவும் மறந்து பூங்கொடி அந்தத் தோற்றத்துக்கு உரியவரை நோக்கினாள்.

புத்த பிட்சு!

பளிச்சென்று காவி உடை. சிவந்த மேனி. உயர்ந்த தோற்றம். மழித்து நாளானதால் உரோமம் படர்ந்த தலை. கூர்மையான நாசி. கலைஞர்களுக்கே இலக்கணமாய் அமைந்த உதடுகள். பார்வையில் அமைதி இருந்தாலும் மற்றவர் இதயத்தை ஊடுருவும் விழிகள். பிட்சு அதே புன்னகை மாறாமல் நின்றார்.

''பூங்கொடி! என்னை உனக்கு நினைவில்லையா?'' பிட்சுவின் குரலில் இனிமை இருந்தது. இனிய இசையை எதிரொலிக்கும் அந்த உருவம் ஏன் காவி உடையில் இருக்க வேண்டும்? என் பெயரைத் தெரிந்து வைத்திருக்கிறாரே!

ஆமாம்; இன்று வரை எப்போதோ பார்த்த நினைவு. குரலைக் கேட்ட நினைவு. நினைவு கொள்ள முயன்றாள்.

''நினைவுக்கு வரவில்லையா? உன் தாய் நலமாக இருக்கிறாளா?''

பூங்கொடி புரிந்து கொண்டாள்... 'ஆ... இவரா?'

''தாங்களா?'' பூங்கொடி வியப்பால் கூவினாள்.

''ஆமாம்; நானேதான்! நான் இப்பொழுது பிட்சு அனந்தபாலர்.''



# 16. அவர்களா அந்த மூதாட்டி?

பூங்கொடி, இமைக்காமல் பிட்சுவையே பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். பத்தாண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளை அவள் நினைவுபடுத்திக் கொண்டாள்.

அவள் அப்பொழுது பத்து வயதுச் சிறுமி. நாகப்பட்டினத்துக் கருகே கடற்கரையோரமாகச் சிற்றூர் ஒன்று. பெயர் நினைவில் இல்லை. அங்கே தென்னந்தோப்பின் நடுவே அவள் தாயுடன் தன்னந்தனியாய் வாழ்ந்து வந்தாள். அவர்கள் வீட்டில் அம்மாவைத் தவிர வேறு யாரும் இல்லை. எப்போதாவது தனித்தனியேயும் இருவர் சேர்ந்தும் சிலர் அவள் தாயைக் காண வருவார்கள்.

முதியவர்கள் வருவார்கள்; இளைஞர்கள் வருவார்கள். மூதாட்டி ஒருத்தி இரு தடவை வந்திருக்கிறாள். மூதாட்டியுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, பூங்கொடியை அங்கே தங்கியிருக்க விடாமல், வெளியே சென்று விளையாடிக் கொண்டிருக்குமாறு தாய் அவளை அனுப்பி விடுவாள். அதனால் அவள் யார் என்பதைப் பூங்கொடியால் அறிந்து கொள்ள முடியவில்லை.

மூதாட்டி சென்ற பிறகு தன் தாய் முகத்தில் பெரும் மாறுதல் ஏற்பட்டிருப்பதையும், மனக் கவலையை மறக்க அவள் போலியாகச் சிரித்துப் பேச முயல்வதையும் அவளுக்குத் தெரியும் வயதுதான்.

''அம்மா! அந்த மூதாட்டி என்ன சொல்லி விட்டுச் சென்றாள்? அவர்கள் வந்து போன பிறகு நீங்கள் மிகக் கவலையுடன் இருக்கிறீர்களே, அவர்கள் யார்?'' என்று பூங்கொடி கேட்டிருக்கிறாள்.

''ஒன்றுமில்லை பூங்கொடி!'' என்று தாய் கூறி வலிந்து முறுவலை வரவழைத்துக் கொள்வாள். பூங்கொடிக்குச் சமாதானம் ஏற்படாது. தாயைச் சிறிது நேரம் உற்றுப் பார்ப்பாள்.

''அம்மா! என்னவோ நடந்திருக்கிறது. எதையோ தாங்கள் மறைக்கிறீர்கள்'' என்றாள் பூங்கொடி.

அதுவரையில் கோபம் கொள்ளாத தாய், ''பூங்கொடி! உனக்குத் தேவையில்லாதவற்றில் தலையிடாதே'' என்று கூறிக் கடிந்து கொண்டது இன்றைக்கும் அவள் நினைவை விட்டு மறையவில்லை.

ஒரு தடவை அதே மூதாட்டி வந்து கொண்டிருப்பது பூங்கொடிக்குத் தெரிந்தது. தாயிடம் விரைந்து சென்று, ''அம்மா! அவர்கள் வருகிறார்கள்'' என்று பரபரப்புடன் கூறினாள்.

''யார்?'' என்று கேட்டவாறு தாய் வெளியே நோக்கினாள். அவள் முகம் மாறியதைக் கண்ட பூங்கொடி, ''அம்மா! இன்று நான் அவர்களைக் கேட்டு விடப் போகிறேன்'' என்றாள்.

''என்ன கேட்கப் போகிறாய்?'' என்பதை விழிகள் மூலமும் புருவத்தை உயர்த்தியதன் மூலமும் தாய் வினவினாள்.

''அவர்கள் இங்கு வந்து சென்றவுடன் தங்கள் மனத்தில் கவலை ஏற்படுகிறது. தாங்கள் வருத்தமும் வேதனையும் அடைகிறீர்கள் என்பதைத் தங்கள் முகம் புலப்படுத்துகிறது. அவர்கள் தங்களிடம் என்ன பேசுகிறார்கள்? என்ன சொல்கிறார்கள்? தாங்கள் அஞ்சு வதற்கு என்ன காரணம்?''

பூங்கொடி வயதும் அனுபவமும் மிகுந்த மூதாட்டி போல் பேசுவதைத் தாய் கேட்டுக் கொண்டே இருந்தாள். பேசும்போது தன் மகள் முகத்தில் ஏற்படும் மாறுதலையும் வேகத்தையும் சீற்றத்தை யும் பொறுப்புணர்வு மேலிட்டு நிற்பதையும் காணக் காண அவளுக்குப் பெருமையாக இருந்தது.

தன் மகள் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று நாள்தோறும் பிரார்த்தனை செய்து வருவது நிறைவேறி விடும் என்ற நம்பிக்கை வலுப் பெற்றது.

தன் மகளின் கூர்மையான அறிவாற்றலைக் கண்டு அவள் வியந்தாள். ஆனால், தன் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு, ''பூங்கொடி! மூதாட்டியைப் பற்றி நீ ஏதும் குறை கூறக்கூடாது. எனக்கும் அவர்களுக்கும் உள்ளது சொந்த விஷயம். நீ விவரமறியாச் சிறு பெண். வெளியே சென்று விளையாடிக் கொண்டிரு...'' என்று கூறவும், பூங்கொடி ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

தாயின் கடுமையான பார்வையைக் கண்டு நடுங்கி, அந்த இடத்தை விட்டுச் செல்ல முயன்றவளை, ''பூங்கொடி! அதோ சந்திர சூடன் வருகிறான். தோட்டத்து மலர்களை எல்லாம் பறித்து



விடுகிறான். 'பூக்கள் செடிகளிலேயே இருப்பதுதான் அழகு' என்று அவனிடம் சொல். போ விரைந்து ஓடு...'' என்று கூறியதைக் கட்டளை போல் ஏற்றுக் கொண்டு ஓடினாள்.

பூங்கொடி அந்தச் சம்பவத்தை நினைவுபடுத்திக் கொண்டாள். அந்தச் சந்திரசூடன் இப்பொழுது மிக மாறுதலுடன் எதிரே பிட்சு வாக நிற்கிறார்.

'நீ... நீ... என்று அந்தக் காலத்தில் அழைத்தேன்; இப்போது நீ என்று அவரை அழைக்கலாமா?'

மரியாதை செலுத்தி வணங்குவதற்குரிய தோற்றம். செம்மை கலந்த மஞ்சள் உடை, பொன் நிற மேனி, விரதத்தால் கடுமையான உடல், விழிகளில் அறிவின் ஒளி.

''பூங்கொடி! திகைத்து நின்றுவிட்டாயே! என்னை மறந்து விட்டாயா?'' - அனந்தபாலர் கேட்டார்.

''சுவாமி! தங்களை எப்படி மறக்க முடியும்?'' என்று பேசுவதற் குள் வார்த்தைகளைத் தேடிப் பிடிக்கத் தொடங்கி விட்டாள்.

''பூங்கொடி! சுவாமி என்று என்னை அழைக்க வேண்டாம். பத்து வருடங்களுக்கு முன்பு எப்படி அழைத்தாயோ அப்படியே அழைக்க லாம்'' என்று அனந்தபாலர் சொல்லிவிட்டாரே தவிர, பூங்கொடி யால் அப்படி அவரை விளிக்க நாணமாக, அச்சமாக இருந்தது.

அப்பொழுதிருந்த பருவம் காரணமாக, விளையாட்டு வயது காரணமாக அவரை, 'அட - நீ - வாடா' என்றும் அழைத்திருக்கிறாள்.

மலர்ச் செடி, கொடிகளிலிருந்து பூக்களைப் பறிக்கும்போது இருவருக்கும் போட்டி உண்டாகும். பூங்கொடி நிறையப் பறித்து விடுவாள். அவளிடம் சந்திரசூடன் கெஞ்சுவான்.

''உனக்கெதற்கு இவ்வளவு பூ? என்னிடம் கொடுத்து விடு பூங்கொடி!''

''உனக்கு எதற்கு? நான் நடராசர் சிலைக்கு அணிவிப்பேன். என் அம்மா பூச்சரம் தொடுத்துத் தருவாள். நான் கூந்தலின் சூடிக் கொள்வேன்.''

''என் வாக்கை நான் நிறைவேற்ற வேண்டும். புத்த பள்ளிக்குக் கொண்டு தர நான் பொறுப்பேற்றிருக்கிறேன். உங்கள் வீட்டுத்

தோட்டத்தில் நிறைய மலர்கள் பூக்கின்றன. பெரிய பிட்சுவிடம் நான் வாக்களித்திருக்கிறேன்.''

''நீ ஏன் புத்த பள்ளிக்குச் செல்கிறாய்? புத்த சாமியார்களிடமே பேசிக் கொண்டிருக்கிறாய்? ஒரு நாளாவது காயாரோகணர் கோயிலுக்குப் போயிருக்கிறாயா?''

''எனக்கென்னவோ அமைதி தவழும் புத்த விகாரைக்குச் சென்று அங்குள்ள பிட்சுகளுடன் பேசிக் கொண்டிருப்பதே விருப்பமாய் இருக்கிறது. அதனால்தான் மலர் கொய்ய இங்கு வந்தேன். நீயோ எனக்கு ஒன்றுகூட வைக்காமல் பறித்து விடுகிறாய்...''

பூங்கொடி அவனைப் பார்த்து, ''இதோ வேண்டிய மலர்களை எடுத்துக் கொள். என் தலையில் சூடிக் கொள்வதை விட புத்தர் பிரான் திருப்பாதங்களில் அலங்கரிக்க அளிப்பதே நல்லது'' என்றாள். பிறகு, ''என்னை ஒருநாள் விகாரைக்கு அழைத்துச் சொல்கிறாயா?'' என்று கேட்டாள்.

''அங்கே கன்னிப் பெண்கள் வரக் கூடாது.''

''புத்தர் பிரானைப் பெண்கள் வணங்கக் கூடாதா?''

''ஓ! புத்தர் பிரானை வணங்க அழைத்துச் செல்கிறேன். இப்பொழுதே வருகிறாயா?''

''இல்லை... இல்லை... என் அம்மாவிடம் ஒரு மூதாட்டி பேசிக் கொண்டிருக்கிறாள். அவள் சென்ற பிறகு வருகிறேன்.''

சந்திரசூடன் மலர்களுடன் சென்று விட்டான். பிறகு புத்தர் பிரானைத் தரிசிக்கச் செல்லும் வாய்ப்பு பூங்கொடிக்குக் கிடைக்கவில்லை.

பூங்கொடி பெருமூச்சு விட்டாள். ''என்னை அப்பொழுதே புத்தர் பிரானை வணங்குவதற்கு அழைத்தீர்கள். நான் வரவில்லை. என் தாயின் மனத்தை நோகச் செய்வதற்காகவே வந்த மூதாட்டியின் மேல் எனக்குக் கோபம். அவரால் என் தாய் மனம் உடைந்து போனாள். குருவிக் கூடு கலைவது போல் நாங்கள் வாழுமிடத்தைக் கலைத்துக் கொண்டு வேறு ஊருக்குப் போகும்படி நேர்ந்து விட்டது. அந்த மூதாட்டி - மூதாட்டியாம் மூதாட்டி - என் எதிரே அவர்கள் இப்பொழுது வந்தால்?'' பூங்கொடி உதட்டை மடித்துக் காலைப் பலமாகத் தரையில் உதைத்துத் தன் கோபத்தைப் புலப்படுத்தினாள்.



பிட்சு மெல்ல நகைத்து, ''பல ஆண்டுகள் சென்ற பிறகும் உனக்கு அந்த மூதாட்டியின் மீதுள்ள கோபம் தணியவில்லை. ஆனால், அவர்கள் மூதாட்டி போல் நடித்தவர்கள். நிஜமாகவே வயதானவர்களல்லர்; வேடம் பூண்டவர்கள். அப்பொழுதே எனக்குத் தெரியும்'' என்றார்.

பூங்கொடி திடுக்கிட்டாள். ''அந்த மூதாட்டி யாரென்று உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்...''

''யார் அவர்கள்? இப்பொழுதும் அதேபோல் வேடமணிந்து உலா வருகிறார்களா?'' பூங்கொடி பரபரப்புடன் கேட்டாள்.

பிட்சு மெல்ல நகைத்து மூதாட்டியின் பெயரைத் தெரிவித்தார். அதைக் கேட்டவுடன் பூங்கொடி, ''ஆ! அவர்களா?'' என்று வியப்புடன் கேட்டாள்.

## 17. யார் அந்த அபிமானவல்லி?

பொழுது மெல்லப் புலர்ந்து கொண்டிருந்தது. பௌர்ணமி கழிந்து பன்னிரண்டு நாள்கள் ஆகியிருந்தன. கீற்றுச் சந்திரன் கீழ்வானத்தில் கதிரவன் வரவுக்குக் கட்டியங் கூறுவது போல் காத்துக் கொண்டிருந்தான்.

உறக்கம் பிடிக்காமல் இராசராச சோழர் மேல் மாடத்துத் திறந்த வெளி முற்றத்தில் மெல்ல உலவிக் கொண்டிருந்தார்.

அரசியார் கண் விழித்தபோது அருகே கணவரைக் காணாமல், வெளியே உலவிக் கொண்டிருக்கும் அவரருகே சென்றாள்.

''பனி விழும் இந்தக் காலை வேளையில் இவ்வாறு தாங்கள் வெளி முற்றத்தில் உலவலாமா?'' என்று அன்புடன் கடிந்து கொண்டு அவர் தோளை மெல்லத் தொட்டாள்.

''மாளிகைக்குள்ளே அடைந்து கிடப்பது களைப்பை ஏற்படுத்துகிறது; அதனால்...'' என்று கூறி, இராசராசன் அரசியைப் புன்முறுவலுடன் நோக்கினார்.

''ஆடவல்லான் அருளால் தாங்கள் உடல் நலமடைந்தீர்கள். சில நாள்களாவது ஓய்வுடன் இருக்க வேண்டும் என்று மருத்துவர் கூறியதை மறந்து விட்டீர்களா?'' என்று அரசி கேட்டாள்.

''தேவையான அளவுக்கு ஓய்வு பெற்றாகி விட்டது. இனி மனச் சுமையைக் குறைக்க வேண்டும்'' என்றார் அரசர்.

''மனச்சுமையா?'' தன் அகன்ற விழிகளுடன், வியப்புடன் நோக்கினாள் அரசி.

இதுவரையில் தன்னிடம் எத்தகைய மனக் குறையையும் அவர் தெரிவிக்கவில்லை. எப்போதும் சிந்தனை; தமிழ்ப் புலவர்களுடன் கூடிப் பேசுதல்; தேவாரப் பதிகங்களைத் திருமுறைப்படுத்துவதைப் பற்றிச் சிந்தித்தல்; படைத் தலைவர்களுடன் கூடிப் பேசிப் படை எடுப்பு, போர் முறை, போர்க்களம், அவற்றைக் குறித்துத் திட்டமிடுதல்... இவ்வாறே நேரம் போவது தெரியாமல் செயலாற்றிக் கொண்டிருந்த அரசர் தன் மனத்தில் குறை என்று ஒன்றையும் கொண்டதில்லை, வெளிப்படுத்தியதும் இல்லை.

அதற்கு மாறாக அரசியார் மனத்தைப் பலவிதச் சிந்தனைகளும் கவலைகளும் சுமையாக அழுத்திக் கொண்டிருந்தன. அரசரிடம் தன் கவலையைப் பகிர்ந்து கொள்ளச் சரியான நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

அரசர் உடல்நலம் குணமாகிக் கடந்த சில நாள்களாகத் தன்னைச் சந்திக்க வருபவர்களுக்கு அனுமதி அளித்தும், இளைய பிராட்டியாருடன் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டும், திருமந்திர ஓலை நாயகமான அமுதன் தீர்த்தகரரை அழைத்துப் பேசிக் கொண்டும் இருப்பதைப் பார்த்தவுடன் அரசியாரும், தன் மனத்திலுள்ளதைக் கலந்து பேசச் சரியான சூழ்நிலை அமைந்து விட்டது என்று முடிவு செய்து அதற்கான நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்று விடிகாலையில் திருப்பள்ளி எழுச்சி இசை ஒலிக்காமலேயே எழுந்து விட்ட மன்னரிடம் பேச இதுவே நல்ல தருணம் என்று முடிவு செய்தாள். ஆனால், அரசியார் தொடங்கு முன்பே மன்னர் தன் மனச்சுமையைப் பற்றி கூறுகிறார் என்றால்...?



மறுமொழி ஏதும் பேசாமல் தன்னை வியப்புடன் உற்று நோக்கியவாறிருந்த அரசி, சக்திவிடங்கியின் கரங்களை மெல்லப் பிடித்து, ''சக்திவிடங்கி! என்ன அப்படிப் பார்க்கிறாய்? 'மனச் சுமையா' என்று வியப்புடன் கேட்கிறாயே? எனக்கு மட்டும் இதயத்தை அழுத்தும் எண்ணங்கள் கிடையாதா?'' என்று கேட்டு தன் ஆழ்ந்த அன்பைப் புலப்படுத்துவது போல் அவளுடைய கரங்களை மெல்ல அழுத்தி, ''சக்தி விடங்கி! நீ உன் உடல் நலத்தைக் கவனித்துக் கொள்கிறாயா? கரங்கள் மெலிந்து விட்டனவே. முகத்தில் சுருக்கங்கள்; விழிகள் சோர்ந்து காணப்படுகின்றன. இயற்கை வெளிச்சத்தில், பல ஆண்டுகளுக்குப் பிறகு உன்னைப் பூரணமாக இன்றுதான் பார்க்கிறேன்'' என்றார் அரசர், சக்தி விடங்கியை உச்சி முதல் பாதம் வரை ஒரு தடவை விழியால் நீராட்டி.

முதுமைக் கோலம் மெல்லப் படர்ந்து வரும் அந்தப் பருவத்திலும் நாணத்தால் முகம் மாற, தலையை மெல்லச் சாய்த்து முறுவலை மட்டும் வரவழைத்துக் கொண்டு, ''உங்கள் நலம்தான் என் நலம். உங்கள் தோள்கள் மெலிந்திருப்பதை விட என் கரங்களுக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லை'' என்றாள்.

''அப்படியா? உரக்கச் சொல்லாதே! அரசரின் தோள் வலிமை குன்றினால் பகைவர்களுக்குக் கொண்டாட்டம்!'' என்று கூறி நகைத்து, தேவியை மெல்லத் தன் அருகணைத்து, ''சக்தி விடங்கி! உன்னுடன் நாளெல்லாம் பலவற்றைப் பேச வேண்டும் என்ற எண்ணம். நீயும் உன் மனத்திலுள்ளதை என்னிடம் தெரிவிக்க நேரத்தை எதிர்பார்த்திருக்கிறாய்'' என்று அரசர் கூறியவுடன் மீண்டும் வியப்பால் அரசரை நோக்கினாள்.

'நம் உள்ளத்திலிருப்பதை இவர் எப்படி அறிவார்? ஓ! சோழ நாட்டு மக்கள் உள்ளத்தை அறிந்து வைத்திருக்கும் இவரால் என் மனத்தை அறிந்து வைத்திருப்பது வியப்பில்லை' என்று எண்ணிய அரசி, ''மதுரனைப் பார்த்துப் பேசி பல நாள்களாகி விட்டன. எப்பொழுதும் வடக்கும், தெற்கும் என்று அவனைப் போர்ப் பூமிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று கூறி வந்தவளைத் தடுத்தது அரசரின் பேச்சு.

''ஆமாம்; கீழ்த் திசைக்கும் அனுப்பப் போகிறேன். அவன் சகல கலைகளையும் அறிய வேண்டும்; அனுபவம் பல பெற வேண்டும். சக்தி! உனக்குத் தெரியாதா? அவனை வானவன்மாதேவி பெற்றெடுத்தபோது நான் இருந்த நிலை என்ன? இந்தச் சோழ நாட்டு

மணிமகுடம் எனக்குக் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சோழ நாட்டில் கலகம், கலகம். எனக்கு மூத்தவர் படுகொலை செய்யப்பட்டார். கொலை செய்தவரைக் கண்டுபிடித்து, உரிய தண்டனை வழங்கியாக வேண்டிய பொறுப்பு, கடமை என் தோள் மீது ஏறியிருந்ததை நீ அறிந்திருப்பாய்...'' என்று கூறி நிறுத்தி அரசியை நோக்கினார்.

''சக்தி! பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவங்கள் சிலவற்றை நாம் மறந்து விடுகிறோம். சில நம் நினைவிலிருந்து அறவே கலைந்து விடுகின்றன. என் தமக்கையார் இளைய பிராட்டியாருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை...'' என்று அவர் கூறியபோது, சக்தி மெல்லிய குரலில் ''அவ்வளவு எளிதில் மறக்கக் கூடிய சம்பவமா, வல்லவரையர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டது? நான் மறந்து விடவில்லை. தாங்கள் அலைந்து திரிந்து உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டனை பெற்றுத் தந்ததையும் நான் மறந்துவிடவில்லை'' என்றாள்.

''சக்தி! பழைய நினைவுகள் கசப்பான நினைவுகள் என்றாலும் பசுமையான சில நினைவுகளும் இருக்கின்றன. குழந்தை மதுரன் தாயற்ற பிள்ளை என்று தெரியாமல் இளையபிராட்டி வளர்த்தாள்'' என்று அரசர் கூறியவுடன் லோகமாதேவியின் முகம் சற்று மாறியது.

''வானவன் மாதேவி காலமானதும் எனக்குப் பட்டத்து அரசி என்ற உயர் இடம் கிடைத்தது. ஆனால், மதுரனின் தாய் என்ற இடம் கிடைக்கவில்லை. இளையபிராட்டியார் மதுரனைத் தாய் நிலையி லிருந்து வளர்த்தார்கள் என்றாலும் எனக்கு மதுரன் மீது உள்ள அன்பு என்றும் குறைந்ததில்லை'' என்றாள்.

இராசராசன் பெரிதாக நகைத்தார். ''சக்தி! மதுரனுக்கு நீ ஒருத்தி மட்டுமா? பத்துப் பேர் சிற்றன்னையர்! பத்துப் பேரில் ஒருத்தியைத் தவிர மற்றவர்கள் அனைவரும் மதுரன் மீது அன்பைப் பொழிந்தனர் என்பதில் ஒரு குறையும் சொல்ல முடியாது'' என்று கூறும்போது அந்தப் பேச்சில் ஒரு முக்கிய செய்தியே மறைந்திருந்தது.

அரசி பரபரப்புடன் * பத்துப் பேரில் ஒருத்தியைத் தவிர என்கிறீர் களே? அவள் யார்? மதுரனைப் பிடிக்காதவள் யார்? இதுவரையில்

* வானவன் மாதேவி, சோழ மாதேவி, திரைலோக்கிய மாதேவி, பஞ்சவன் மாதேவி, அபிமானவல்லி, இலாட மாதேவி, பிருதிவி மாதேவி, மீனவன் மாதேவி, வீர நாராயணி, வில்லவன் மாதேவி.



எனக்குத் தெரியாமல் போய் விட்டதே'' என்று கேட்டாள். அந்தப் பழி வெளி உலகில் தன்னைத் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறதோ என்ற கவலை அரசிக்கு ஏற்பட்டது.

அரசியை உற்றுப் பார்த்து, ''தேவி! தெரிந்தே நீ கேட்கிறாயா? வாழ்நாளில் நான் அறவழிப்படி நடக்க வேண்டும் என்று பெரிதாக முயன்றிருக்கிறேன். சிலபோது அறியாமலே தவறு செய்திருக்க லாம். அப்படிப்பட்ட தவறொன்றைச் செய்ததால் நான் மன வேதனைப் படுகிறேன். அந்த மனச்சுமை என்னை அழுத்துகிறது'' என்று கூறும் போது அரசர் குரலில் வேதனை மெல்லிய கீற்றாகப் பளிச்சிட்டது.

''தவறா... தாங்களா? எனக்கும் ஒன்றும் புரியவில்லையே! அரச குல வழக்கப்படிதான் தாங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள். அந்தப்புரத்தில் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்கிறோம். மூத்தவள் என்ற மரியாதை, அரசி என்ற கௌரவம் இரண்டையும் எனக்குக் கொடுக்க மற்றவர்கள் என்றுமே தவறியதில்லை. ஆனால், எனக்கு மட்டும் புரியாத புதிரொன்றிருக்கிறது. செவிவழிச் செய்தி யாகவும் வதந்தியாகவும் ரகசியப் பேச்சாகவும் நான் கேள்விப் பட்டது ஒன்றுண்டு'' என்று அவள் கூறி வரும்போது இராசராசர் குறுக்கிட்டார்.

''நீ அறிந்த வதந்தியை இதுவரை என்னிடம் சொல்லவில்லையே!''

''பொதுவாகவே ஆண்களைப் பெண்களோடு தொடர்புபடுத்தி வதந்தி பரவும். ஊர் வம்பு என்பார்கள். மன்னரைப் பற்றி என்றால் கேட்கவே வேண்டாம். பல சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அரசர்கள் பலரை மணந்து கொள்வதும் இயற்கையே. அவற்றையெல்லாம் போய் தங்களைக் கேட்பது என்றால் எனக்கு நாணமாக இருந்தது.''

இராசராசர் மெல்ல நகைத்தவாறு, ''சக்தி! இதில் என்ன நாணம்? நமக்குள் அந்தரங்கம் என்ன இருக்கிறது? கேட்டிருக்கலாமே'' என்றார்.

''ஒன்றுபட்ட மனமுடைய கணவர் - மனைவியிடையே அந்தரங்கம் என்று எதும் இல்லைதான். ஆனால், அந்தரங்கத்துக்குள் அந்தரங்கம் என்று ஒன்றுண்டு என்பதை மறைப்பதற்கில்லை; நீங்கள் இந்த மாபெரும் சோழ சாம்ராஜ்ய மாமன்னர். எல்லாவற்றையும் என்னிடம் சொல்லித்தான் ஆக வேண்டும் என்பதில்லை. அதைப் போன்று தங்கள் இதயத்துக்குள் புதைந்திருக்கும் அபிமானம் மிகுந்த ஒன்றை வெளிப்படுத்தாமல் இருக்கவும் தங்களுக்கு உரிமையுண்டு.''

அரசி சற்று நிறுத்தினாள். மன்னரை நோக்கினாள்.

''சக்தி! நீ சுற்றி வளைத்து என்ன கேட்கப் போகிறாய் என்பது எனக்குப் புரிகிறது. சுமையாகவும் உனக்கு அது இருந்திருக்கலாம். அபிமானவல்லியைப் பற்றி நீ அறிய விரும்பியிருக்கலாம். உனக்குத் தெரிந்திருக்குமே; தெரிந்த விஷயத்தையே ஏன் சொல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அபிமானவல்லி என்று அன்புடன் அழைக்கப்பட்ட அவள் பெயரைப் பிறகு சொல்கிறேன். அந்தப்புரத்தில் மற்ற தேவியருடன் அவளும் இருந்திருக்க வேண்டியவள். நான் செய்த சிறு பிழையால் அவளை நான் பிரிந்திருக்க நேரிட்டது'' என்று கூறிச் சற்று நிறுத்தினார் மன்னர்.

''அபிமானவல்லி! நானும் கேள்விப்பட்டிருக்கிறேன் அந்தப் பெயரை. ஆனால், ஒருமுறை கூட அவளைச் சந்தித்ததில்லை. அவள் எந்த நாட்டு இளவரசி?'' தேவி கேட்டாள்.

''அவள் எந்த நாட்டைச் சேர்ந்தவளும் அல்லள். என் இதய சாம்ராஜ்யத்தில் குடி புகுந்தவள். கடல் கடந்து சென்றிருந்தபோது அவளைச் சந்தித்தேன். பிறகு அவள் சோழ நாட்டுக்கு வந்தாள். அரச பதவி ஏற்ற பிறகு நான் அவளைச் சந்தித்தேன். பிறகு அவளைக் காணவில்லை. அவளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்; அவள் எங்கிருக்கிறாளோ?'' - அரசரின் குரலில் வேதனை கலந்திருந்தது.

அரசி திகைக்கவில்லை. அரசர் கூறுவதில் அனுதாபமும் கொள்ள வில்லை. கற்பனை கலந்து மன்னர் சொல்கிறார் என்றும் முடிவு செய்ய முடியாது. பிறகு?

''அரசே சோழ நாட்டு மாமன்னர் சொல்லும் செய்தி இது என்று என்னால் நம்ப முடியவில்லை. உங்கள் இதய ராணியை அவ்வளவு எளிதில் தங்களால் மறந்து விட முடிகிறதோ?'' - அரசி நேருக்கு நேர் மன்னரை நோக்கினாள்.

''மறப்பதா? எப்படி இயலும்? நான் தேடிக் கொண்டிருக்கிறேன். என் இதயம் தேடிக் கொண்டிருக்கிறது. என் உணர்வு தேடிக் கொண் டிருக்கிறது. என் உயிர் தேடிக் கொண்டிருக்கிறது. சக்தி! பகைவர் நாடுகளில் நடப்பனவற்றை அறிந்து கொள்ளும் ஆற்றல் மிக்க நமது ஒற்றர்களால் கூட அவளுடைய இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை'' குரலில் பெருமூச்சு விட்டார்.

''என்னால் நம்ப முடியவில்லை. தங்களுக்கும் அபிமானவல்லிக் கும் ஏதோ பலத்த கருத்து வேற்றுமை. தாங்கள் முயன்றால் சோழ



மாளிகைக்கு அவளை அழைத்து வந்திருப்பீர்கள்'' - அரசியின் குரலில் அழுத்தம் இருந்தது.

''இல்லை, சக்தி... இல்லை. அவளுக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை ஏதும் இல்லை. யாரோ தவறாக அவள் உள்ளத்தில் ஏதேதோ புகுத்தியிருக்க வேண்டும். பல கலைகள் அறிந்தவள் அவள். நடனக் கலையில் புலமை மிக்கவள். அவளும், நானும் சேர்ந்து பல கற்பனைக் கோட்டைகள் கட்டினோம். அற்புத மாளிகை அமைக்க விரும்பினோம். ஓவியமும், காவியமும், நடனமும் கலந்த கலை மாளிகை படைக்க விரும்பினோம். ஆனால், சக்தி! என் கலை உள்ளத்தில் போர்த் தாகம் பிறந்தது. நாட்டை விரிவுபடுத்த வேண்டும் எனும் வெறி எழுந்தது.

''கலையை மறந்தேன். போர்க்களங்களைப் பற்றிச் சிந்தித்தேன். அதனால் அபிமானவல்லியைப் பற்றி நினைக்கவும் மறந்தேன். அந்தப்புரத்து எட்டு பேரும் என்னை எங்கே நினைக்க விட்டீர்கள்? இப்போது என் உள்ளத்தில் புத்துணர்ச்சி பிறந்திருக்கிறது. அண்மை யில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது அமைதியாகச் சிந்தித் தேன். என் நீண்ட காலக் கனவை நனவாக்க முடிவு செய்து விட்டேன்.

''என் மனத்தில் அழுத்திக் கொண்டிருந்த சுமையை மெல்ல மெல்ல இறக்கி வைத்துக் குறைக்க விரும்புகிறேன். தஞ்சை மாநகரில் பெரிய கோயில் ஒன்று கட்ட விரும்புகிறேன். கடல்கடந்த நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தபோது நான் கண்ட கனவுகளை நனவாக்கப் பெரிய கோயில், பெரிய விமானம், பெரிய லிங்கம், பெரிய ஆடவல்லான் திருவுருவம், பெரிய நந்தி என்று எல்லா வற்றையும் மிகப் பெரிய அளவில் அமைக்கத் திட்டமிட்டுச் செயல் படுத்த விரும்புகிறேன். அதற்காக வரைபடங்கள் தீட்ட, கோயில் அமைப்பைத் திட்டமிட, சிற்பங்களைப் படைக்க, சிற்பியைத் தேடி அழைத்து வர உத்தரவிட்டுள்ளேன். ஆறு வேளை பூசை நடை பெறும் இடமாக மட்டும் அது இருக்கக்கூடாது. கலைஞர்கள் எப்போதும் ஆராதிக்கும் இடமாகவும் அது விளங்க வேண்டும் என்று கனவு கண்டேன். இதற்கிடையில் கிடைத்த செய்தி என் திட்டத்தைச் சற்று தாமதப்படுத்தும்போல் தோன்றுகிறது.''

''என்ன? தங்கள் திட்டத்துக்கு முட்டுக்கட்டையா?''

''ஆமாம்! சாளுக்கியர் சோழ நாட்டின் மீது படையெடுக்க ஆயத்தம் செய்கிறார்களாம். நம் நாட்டில் சாளுக்கிய ஒற்றர்கள்

ஊடுருவி இருக்கிறார்களாம். அவர்களைக் கண்டுபிடித்து, சாளுக்கி யர்கள் கொட்டத்தை ஒடுக்கி ஆக வேண்டும்; உடனே இதைச் செய்தாக வேண்டும்'' என்று கூறி அரசர் சற்று அமைதியடைந்தார்.

தேவி ஏதும் பேசவில்லை. 'அதற்கு என்ன செய்யப் போகி றீர்கள்?' என்று அவள் கேட்கவில்லை. ஏனென்றால் 'அரசர் முடிவு செய்திருப்பார். அதை வெளியே தெரிவிக்க விரும்பினால் அவர் சொல்லாமல் இருப்பாரா?' என்றெண்ணி மௌனமாக இருந்தாள்.

''இவற்றையே நான் நேற்றிரவு உறங்காமல் சிந்தித்துக் கொண்டிருந் தேன். சோழ நாட்டுக்கு இப்போதுள்ள ஒரே பகைவர் சாளுக்கியர். அவர்களது வலிமையை அவர்களுடைய நாட்டுக்குச் சென்றே அடக்கி ஒழிக்க வேண்டும். மதுரனைப் படைகளுடன் சாளுக்கிய நாட்டிற்கு அனுப்பப் போகிறேன்'' என்று கூறியபோது அரசி குறுக்கிட்டு ஏதோ சொல்ல விரும்பியது தெரிந்தது.

''என்ன சக்தி?''

''மீண்டும் மதுரனைப் போர்க்களத்துக்கு அனுப்ப வேண்டுமா? படைத் தளபதிகள் இல்லையா? நமது கிருஷ்ணராமன் ஒருவர் போதாதா?''

''கிருஷ்ணராமனால் இப்போது போர்க்களத்துக்குச் செல்ல முடியாது. அவர் உடல்நலம் குன்றியிருக்கிறார். மேலும் இளைய பிராட்டியார் யோசனையும் மதுரனை அனுப்ப வேண்டும் என்பதே!''

''இளையபிராட்டி கூறினாரா?'', 'அவர் என்ன தலையிடுவது?' என்ற கேள்வி தேவியின் குரலில் பொதிந்திருந்தது.

''இளையபிராட்டி கூறுகிறார் என்றால் வல்லவரையரின் கருத்தும் அதில் முதன்மையாக இருக்கும்'' என்றார் அரசர்.

''அரசே! முதலிலேயே நான் ஒன்றைக் கூற முயன்றேன். என் மனத்தின் சுமையைத் தெரிவிக்க விரும்பினேன்'' என்று லோகமா தேவி கூறினாள்.

''தேவி! உன் மனத்தில் அழுத்திக் கொண்டிருப்பதைக் கேட்காமல் நான் ஏதேதோ பேசிக் கொண்டிருந்து விட்டேன். சொல்லு தேவி!''

''அரசே! மதுரனைப் பற்றிப் பேச வந்தேன். தாங்களோ மதுரனைப் போர்க்களத்துக்கு அனுப்பத் திட்டமிடுகிறீர்கள். நான் என்ன சொல்வது?'' தேவி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.



''சொல் சக்தி! மதுரனைப் பற்றி என்ன சொல்ல வருகிறாய்? உங்களுக்கெல்லாம் மதுரன் இன்னும் குழந்தைதான். இளைய பிராட்டிக்கோ அவன் வருங்காலச் சோழ நாட்டு மாமன்னன். மக்களுக்கோ அவன் மாவீரன். பகைவர்களுக்கோ அவன் கொடிய காலன். சொல், தேவி! சொல்'' என்று பரபரத்தார் இராசராசன்.

''மதுரன் இன்னும் குழந்தை அல்லன். அவனுக்குத் தாங்கள் இன்னும் இளவரசுப் பட்டங்கூடச் சூட்டவில்லை. அவனுக்குத் திருமணம் புரிவிக்க வேண்டாமா? உங்களுக்கு ஒரு பெயரன் உதிக்க வேண்டாமா? மதுரனுக்கு நல்ல இடத்தில் பெண் பார்த்துத் திருமணம் செய்விக்க வேண்டாமா? இளவரசியை... வருங்கால அரசியை இப்பொழுதே தேடிக் கண்டுபிடித்து மணம் புரிவிக்க வேண்டாமா?'' என்று கேட்டாள் அரசி. இராசராசன் சுற்றும் முற்றும் நோக்கினார்.

கீழ்த் திசையிலிருந்து மிக விரைவாகக் கதிரவன் மேலேறி வந்து கொண்டிருந்தான். பணிப் பெண்கள் மேல் மாடத்திற்குத் தங்கள் பணியை நிறைவேற்ற வந்து கொண்டிருந்தனர்.

தேவி கேட்ட கேள்வியைச் சிந்தித்துக் கொண்டே உட்கூடம் செல்லப் புறப்பட்ட இராசராசனை நோக்கி வணங்கிய பணிப் பெண், இளையபிராட்டி குந்தவ்வை வந்திருப்பதைத் தெரிவித்தாள்.

''இளையபிராட்டியாரிடம் நானே கேட்கிறேன்'' என்றாள் அரசி.

காலைக் கடன்கள் முடிவடைந்த பிறகு இளையபிராட்டி இராச ராசனிடம் பல நாட்டு நடப்புகளைப் பற்றிப் பேசும்பொழுது இராச ராசன் கேட்டார்: ''அக்கையாரே! உங்களுக்கு ஒரு புதிய திட்டத்தைத் தெரிவிக்கப் போகிறேன்'' என்றார்.

'புதிய திட்டமா?' என்பதுபோல் இளையபிராட்டியின் புருவம் உயர்ந்தது.

''இளையபிராட்டியாரே! என்னை உருவாக்கியவரே! என் மகன் மதுரனை இந்த நாட்டில் வருங்கால அரசராக்க வழிகாட்டி வருபவரே! தங்கள் பிறந்த நாளைத் தஞ்சையில் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளேன்'' என்றார்.

குந்தவ்வை வியப்படைந்தாள். ''என் பிறந்த நாளையா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்; சோழ நாட்டின் பெருமைக்கு அடித்தளமிட்டுள்ள தங்கள் பிறந்த நாளைக் கொண்டாடப் போகிறேன். நான் பெரிதாகத் திட்டமிட்டுச் செயலில் ஈடுபட்டிருப்பதை நீ நன்கறிவாய். அப்படி செய்யும்போது போட்டியாக ஏதாவது செய்ய நீ நினைக்கிறாயா? என் பிறந்த நாள் எனக்கே நினைவில்லை. தங்களுக்குப் பின் தோன்றியவன் நான். சதயத்திற்கு முன் நட்சத்திரம் என்னவென்று தங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாமல் என்ன? அவிட்டம்...''

''மாளிகையின் பரம்பரைச் சோதிடர் நேற்று என்னைச் சந்தித்துப் பலவற்றைப் பேசிக் கொண்டிருந்தார். அவரிடம் நான் தங்கள் பிறந்த நாளைப் பற்றியும் தங்களுடைய சாதகப் பலன்களையும் கேட்டேன். அவரிடமிருந்து அறிந்தவற்றுள் மிக முக்கியமானது தங்கள் பிறந்த நாள். அவிட்ட நட்சத்திரத்தில் தாங்கள் பிறந்துள்ளீர்கள் என்பதையும் தங்களால் இந்த நாடும், சோழர் குலமும் மேலும் பெருமை அடையப் போகிறது என்பதையும் அறிந்தேன். அதனால் பெரியவர்களான தங்கள் திருநட்சத்திர நாளைக் கொண்டாட முடிவு செய்தேன். அதிர்ஷ்டத்தை அளிக்கும் அவிட்ட நட்சத்திரத்தில் தாங்கள் பிறந்த செய்தி எனக்கு மிக மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்தது.''

இளையபிராட்டி எதும் பேசவில்லை. மௌனமாயிருந்தாள்.

''தேவி! ஏன் ஏதும் பேசாமல் மௌனமாயிருக்கிறீர்கள்?'' என்று இராசராசன் கேட்டார்.

''நான் இங்கு வந்த நோக்கமே வேறு. மிக முக்கியமான நடவடிக்கையை எடுக்குமாறு உன்னிடம் கூற வந்தேன். நீயோ, சிந்தனையை வேறு திசையில் திருப்பி விடுகிறாய்'' என்று கூறவும், இராசராசன், ''சொல்லுங்கள், சொல்லுங்கள் அக்கா! மிக முக்கியமான நடவடிக்கையைத் தாமதப்படுத்த விரும்பவில்லை'' என்றார்.

''சாளுக்கிய நாட்டு ஒற்றர் ஒருவர் இருக்குமிடம் எனக்குத் தெரிந்திருக்கிறது. அவரை உடனே சிறைப்படுத்த வேண்டும். உன்னைச் சந்திக்க மதுரனை இங்கே வருமாறு சொல்லியிருக்கிறேன். அவன் வந்தவுடன் சாளுக்கியப் படையெடுப்புப் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்'' என்றாள்.

''சாளுக்கிய ஒற்றரைச் சிறைப்படுத்தும் கட்டளையைத் தாங்களே இட்டிருக்கலாம். மதுரனைப் படைகளுக்குத் தலைமை வகிக்க



செய்ய வேண்டும் என்று சற்று நேரத்துக்கு முன்பு நானே அரசியிடம் பேசிக் கொண்டிருந்தேன். சரி, மூன்றாவதாக எதைச் சொல்ல விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டார்.

இளையபிராட்டி சற்று மௌனமாக இருந்தாள். அரசியைப் பார்த்தாள். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''தம்பி அருண்மொழி! அவள் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விட்டேன்'' என்றாள்.

அவள்... அவள்! இராசராசனுக்குப் புரிந்துவிட்டது. 'அவள் யார்?' என்பது லோகமாதேவிக்குப் புரிந்தும் புரியாமல் இருந்தது.

## 18. வாள் எங்கே?

கொள்ளிடம் ஆற்றைக் கடந்து வல்லவரையர் வந்தியத்தேவன் பழுவூரை அடையும்போது இரவின் ஆட்சி பரவத் தொடங்கியது.

வல்லவரையரின் குதிரை மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தே சென்றது. உறையூரினின்று புறப்பட்ட பிறகு வேறு பரியை மாற்றாமல் ஒரே குதிரையில் வந்ததால் சோர்வு மிகுந்ததாலும் போதிய ஆகாரம் இல்லாததாலும் குதிரை சோர்வடைந்து விட்டது.

வல்லவரையரும் அதன் போக்குப்படியே விட்டுவிட்டார். மெல்லவே அதை நடத்தி வந்தார். சில இடங்களில் இறங்கிக் குதிரையுடன் தானும் நடந்து வந்தார்.

தம் இடையில் கட்டப்பட்டிருந்த பெரும் வாளை அவர் கரங்கள் அவ்வப்போது தொட்டுப் பார்த்தன. சோழ நாட்டின் உயர்வுக்காகப் பல போர்க்களங்களில் அந்த வாள் பெரும் பங்கு பெற்றிருக்கிறது.

மாற்றார் நெஞ்சைப் பிளந்தும், சுழன்று வரும் பகைவர் வாள்களைத் தாங்கிய கரங்களை வெட்டியும், நேருக்கு நேர் நின்று போரிடத் துணிந்து நிற்கும் அஞ்சா நெஞ்சமுடைய பகை வீரர்களின் மார்பிலே குருதிக் கோலமிட்டும் ரத்தக் குளியல்கள் பல நூறு கண்ட வாள் அது.

கதிரொளியிலே வந்தியத்தேவன் வாள் சூரிய ஒளியைப் பிரதிபலித்து மின்னும். சந்திரன் ஒளியிலே தன் போர்க்குணம் மறந்து அடக்கமாக நிலவொளியை உமிழும்.

இராசராசனே பலமுறை அந்த வாளை எடுத்து 'விர்விர்' என்று சுழற்றிப் பார்த்தும் முகத்துக்கு நேரே உயர்த்தியும், முத்தமிட்டு மகிழ்ந்தும் ''வல்லவரையரே! தங்களுக்கு வெற்றி தருவது உங்கள் கரங்களா? கரங்களில் பூரணமாகக் திகழும் தங்கள் வாளா?'' என்று கேட்டிருக்கிறார்.

வல்லவரையரும் மெல்ல நகைத்தவாறு, ''பேரரசே! என் வெற்றிச் சிறப்புக்குத் தங்களுடைய அன்பான உள்ளந்தான் காரணம்'' என்று அடக்கமாகக் கூறியிருக்கிறார்.

இராசராசனுக்கு வந்தியத்தேவன் வாளின் மீது தனிப்பட்ட காதல்; மோகம் என்றும் சொல்லலாம். இராசராசனும், வந்தியத்தேவனும் இணைந்து பல போர்க்களங்களிலே தம் வீர தீர பராக்கிரமங்களைப் புலப்படுத்திய காலத்திலும் வந்தியத்தேவன் வாளின் ஆற்றலைக் கண்டு இராசராசன் வியந்திருக்கிறார்.

''வல்லவரையரே! தங்களுடைய வாளின் வலிமையைக் காஞ்சிக் கருகே ஒருமுறை கண் கூடாக நான் கண்டதிலிருந்து எனக்கும் இது போன்ற வாளை அடைய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது'' என்று இராசராசன் வல்லவரையரிடம் கூறியபோது வல்லவரையர் இதழ் விலகாமல் நகைத்தார்.

''வாளிலே என்ன மாயம் இருக்கிறது மாமன்னரே! வாளைப் பயன்படுத்துபவர் கரங்களின் சக்திதான்; கரங்களை இயக்கும் தோளின் வலிமைதான் என்பது தங்களுக்குத் தெரியாதா? ஏதோ என்னைப் புகழ வேண்டும் என்பதற்காக என் வாளைப் புகழ்கிறீர் களா?'' என்றார்.

''இல்லை, இல்லை வல்லவரையரே! பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம். காஞ்சிப் போர்க்களத்தில் கண்கூடாகப் பார்த்தேன். நமது அன்பன் வேங்கி மன்னன் சக்திவர்மனை, நம்மிடம் தோற்ற வீமன் திடீரென்றுத் தாக்கி அவனைக் காஞ்சி வரை துரத்தி வந்த நிகழ்ச்சியை மறந்து விட்டீர்களா! வீமன் போதிய பலத்துடன் வந்திருந்தான். கலிங்கப்படையின் துணை வேறு. திடீரென்று போர் நிகழும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. நல்ல வேளையாக அப்பொழுது நீங்கள் பிரம்மதேயத்தில் இருந்தீர்கள். காஞ்சிக்கு



அருகே இருந்ததால் குறைந்த படைகளுடன் விரைந்து வந்தீர்கள். நானும் காஞ்சியில் இருந்தேன். இரு வியூகங்களாகத் தாக்கிய எதிரி வீரர்களைத் தாங்கள் ஒருவரே சுழல் வாளால் தாக்கிப் போர் புரிந்ததைக் கண்டதனால் சொல்கிறேன்'' அரசர் பெருமிதத்துடன் கூறினார்.

வந்தியத்தேவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு ''மாமன்னரே! என்னைப் புகழ்ந்து உற்சாகப்படுத்துவதற்காக, என் வாளைப் புகழ்கிறீர்கள். தங்கள் தோள் வலிமை இன்று நினைத் தாலும் பிரமிப்பை அளிக்கிறது. தன்னந்தனியராய் சாளுக்கிய சத்தியாச்ரயனுடன் கல்யாணபுரத்தில் போர் புரிந்தீர்களே அந்த வேளையில் யார் கை வாள் வலிமையுடன் இயங்கியது? சுழலும் தங்கள் கை வாளுக்கு அஞ்சி சத்தியாச்ரயன் ஓடோடியதை நான் நினைவுபடுத்தலாமா?'' என்றார்.

வந்தியத்தேவன் அருகே மிக நெருங்கிய இராசராசன், ''வல்லவரையரே! உங்கள் வாதத்திறமையை,சொல் வலிமையை எப்போதுமே நிலைநாட்டி விடுகிறீர்கள். வாள் வீசுவதிலுள்ள நுணுக்கங்களை மதுரனுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்'' என்று சொன்னார்.

இராசராசனின் அருமை மகன் மதுரன், பிள்ளைப் பிராயத்திலிருந்தே வல்லவரையரிடம் எல்லாப் போர் முறைகளையும் பயின்று வருவதைச் சக்ரவர்த்திகள் அறிவார். தமக்கையார் இளைய பிராட்டி குந்தவ்வை தேவியாரும் அவள் கணவர் வல்லவரையரும் சேர்ந்தே மதுரனைப் பல கலைகளிலும் தேர்ச்சி பெற்ற சிறந்த வீரனாக்கி வருவது ஊர் உலகம் அறிந்த செய்தி. எனினும் இப்பொழுது அவர் புதுமையாகக் கேட்பதில் உள் ரகசியம் ஏதோ இருக்கிறது என்று வல்லவரையர் எண்ணினார். தன் வாளின் பெருமையை நினைக்கும்போது அவருக்குத் தன் வாளின் மீது தனித்தவொரு மதிப்பு ஏற்பட்டது.

அமைதியாக இன்று நடந்து வரும்போது வல்லவரையர் பழைய சம்பவங்களை நினைத்துக் கொண்டார்.

திருச்சிராப்பள்ளி மலை உச்சியில் வல்லவரையரும் இளைய பிராட்டியும் கடுமையாக விவாதித்துப் பின் புறப்பட்டபோது, பிரம்மதேயத்துக்கு இருவரும் செல்லலாம் என வல்லவரையர் அவளை அழைத்தார். ஆனால், குந்தவ்வை உறுதியுடன் அவருடன் செல்ல மறுத்து விட்டாள். இளையபிராட்டி உடன் வராமல் வல்ல

வரையர் மட்டுமே உறையூரிலிருந்து புறப்பட்டார். வல்லவரையர் நாட்டுத் தலைநகரமான பிரம்மதேயத்துக்குச் செல்ல எண்ணியவர் வழியில் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.

பழுவூரில் பழுவேட்டரையர் உடல்நலமில்லாமல் நீண்ட நாள்களாகப் படுத்த படுக்கையாயிருந்த செய்தியை வல்லவரையர் அறிந்திருந்தார். பழுவேட்டரையர் சோழ நாட்டின் உயர்வுக்கு அரும்பாடு பட்டு ஆற்றிய பணிகளை வல்லவரையர் அறிவார்.

வாணர் குலத்தவருள் வந்தியத்தேவன் ஒருவரே சோழர்களுக்கு மிக உதவியவர். சுந்தரசோழர் ஆட்சியின் இறுதியில்தான் சோழ நாட்டிற்கு ஒருவர் ஆதரவும் இல்லாதவராக வந்தியத்தேவன் வந்து சேர்ந்தார். ஆனால், பழுவேட்டரையர் அப்படியல்லர்; விஜயாலயர் காலம் முதல் பழுவேட்டரையர் சோழ நாட்டுக்குப் பெரிதும் உதவியிருக்கிறார்.

பழுவேட்டரையரின் பரம்பரையில் கண்டன் மறவனின் பங்கு மகத்தானது. அவரது சகோதரர் சிறிய பழுவேட்டரையரின் மகள் பஞ்சவன் மாதேவியை இராசராசன் மணந்திருந்தார். கண்டன் மறவன் சிறிய பழுவேட்டரையர் என்று மக்களால் அன்புடன் அழைக்கப் படுபவர். சோழர் குலத்துடன் மணத் தொடர்பு கொண்டு புகழ் பெற்றவர்.

அவர் காலமான பிறகு அவருடைய சகோதரியின் கணவர் பழுவூர் குறுநில மன்னரானார். அவரும் சிறிய பழுவேட்டரையர் என்றழைக்கப் பட்டார். அவருக்கு இப்போது எண்பது வயதுக்கு மேலாகியது.

இப்பொழுது சிறிய பழுவேட்டரையர் உடல் வலிமை குன்றி மாளிகையை விட்டு நகர முடியாமல் படுத்த படுக்கையாக இருக்கிறார். உடல் நோயை விட மன நோய்தான் அவரை அதிகம் பீடித்திருந்தது. பழுவேட்டரையருக்குத் தங்கள் குலப் பரம்பரையை விளங்க வைக்க ஆண்மகவு இல்லை எனும் குறை அவருக்குண்டு. தவிர, இராசராசனை மணந்திருக்கும் தன் மகள் பஞ்சவன் மாதேவியின் வயிற்றிலாவது ஓர் ஆண் குழந்தை பிறந்து சோழ நாட்டு இளவரசன் என்ற சிறப்புக்குரியவராகக் கூடாதா? என்ற ஏக்கமே பெரிதும் அவரைப் பீடித்திருந்தது.

பழுவேட்டரையரைச் சந்திக்க முடியாமல் இராசராசனும் நோய் வாய்ப்பட்டிருந்த இந்தத் தருணத்தில் தான் சென்று சந்திப்பது பழுவேட்டரையருக்கு மன ஆறுதலைத் தரும் என்று வல்லவரையர் நினைத்தார். அதனால் பிரம்மதேயம் செல்லும் பாதையினின்றும் பிரிந்து பழுவூரை அடைந்தார்.



பழுவூருக்கு எந்த நேரத்திலும் மதுரனும் வரலாம். மதுரனுடன் சிறிது நேரம் அந்தரங்கமாகப் பேச வாய்ப்பு ஏற்படும். இந்த எண்ணத்திலும் வல்லவரையர் பழுவூருக்கு வந்தார்.

பழுவூர் நகரம் மிக அமைதியுடன் திகழ்ந்தது. இரவு நேரத்தில் பழுவேட்டரையரைச் சந்திக்க வேண்டாம்; காலையில் சந்திப்போம் என்று தன்னை அடையாளம் புலப்படுத்திக் கொள்ளாமல் வல்லவரையர் சத்திரத்தில் தங்கினார். ஓய்வு பெற குதிரையைத் தக்கவரிடம் ஒப்படைத்து விட்டு வல்லவரையர் சத்திரத்துத் திண்ணையில் தங்கினார். புழுதி படிந்திருந்த மேலாடைகளைக் கழற்றி விட்டு வாள் உறையையும் அவிழ்த்து அருகே வைத்துக் கொண்டு படுத்தார்.

சத்திரத்துத் தலைவன் வல்லவரையரை அடையாளம் கண்டு கொள்ளாமல், யாரோ வழிப்போக்கர் என்றெண்ணி இரவு ஆகாரம் பற்றி அவரை வினவினார். பால் மட்டும் கேட்டுப் பெற்றுப் பருகி விட்டுப் படுத்தார் வல்லவரையர்.

படுத்தவுடன் உறக்கம் அவரது விழிகளை அணைத்தது. ஒரு கரம் வாளை அணைத்துக் கொண்டிருந்தது.

நடுநிசியைத் தாண்டியபோது, அவரது ஆழ்ந்த உறக்கத்தில் ஒரு சலனம். கனவுகள் அவரது அடிமனத்துடன் தொடர்பு கொண்டு புதுப்புது சம்பவங்களை, காட்சிகளை அளித்துக் கொண்டிருந்தன.

வல்லவரையர் நாட்டுத் தலைநகரான பிரம்மதேயத்தில் புதிதாகக் கட்டப்படும் மாளிகை அவர் கண் எதிரே தோன்றியது. மாளிகை முடிவடையும் நிலையில் இருந்தது. அழகான மாளிகை கட்டி முடித்த பிறகு, இளையபிராட்டியுடன் புதுமனை புகுந்து அமைதியாக மீதமுள்ள வாழ்நாளைக் கழிக்க வேண்டும் எனும் தன் கோரிக்கையை இளையபிராட்டியிடம் அவர் சொல்கிறார். இளைய பிராட்டி முகம் கொடுத்துப் பேசவில்லை. சமீப காலமாக இளைய பிராட்டி தன்னிடம் முன்பு போல் அன்பாகப் பேசுவதில்லை. அதற்கான காரணம் அறிய அவர் தனக்குள்ளே சிந்திக்கிறார். மதுரன் இன்னும் சிறுவனல்லன்; கம்பீரமாக வளர்ந்து விட்ட இளைஞன். சோழ நாட்டின் இளவரசராகப் போகிறவன். திருமணம் புரிந்து கொண்டு மறு வருடமே தந்தை என்ற இடத்தை அடையப் போகிறவன். அவனுடைய சொந்த நடவடிக்கைகளில் இளையபிராட்டி

தலையிடுவதில் வல்லவரையர் கருத்து வேற்றுமை மிகக் கொண்டிருந்தார். குறிப்பாக மனத்துக்குப் பிடித்தவளை மதுரன் காதலிப்பதில் இளையபிராட்டி குறுக்கிடுவது வல்லவரையருக்கு நியாயமாகப்படவில்லை. அதனால் எழுந்த கருத்து வேற்றுமை சற்றுக் கடுமையான வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தின.

வல்லவரையர் இதுவரை மறைத்திருந்த ஒரு ரகசியம் இளைய பிராட்டிக்குத் தெரிந்து விட்டதோ என்னவோ!

வல்லவரையரின் ஆழ்ந்த உறக்கம் சற்று சலனமடைந்தது.

தன் அந்தரங்கம் வெளிப்படும் நாள் வெகுவிரைவில் என்பதை வல்லவரையர் உணர்ந்துதானிருந்தார். பிரம்மதேயப் புது மாளிகைக் குடிபுகு விழா அன்று அந்த ரகசியம் உலகுக்கே வெளிப்பட்டு விடலாம். பரம்பரையாக வல்லவரையர் குடும்பத்து வாளை அவர் யாரிடமாவது ஒப்படைத்துத்தானாக வேண்டும். இனி போர்க் களத்துக்குச் செல்வதில்லை என்ற உறுதியை ஏற்க வேண்டும். ஒன்று தக்கவரிடம் வாளை ஒப்படைக்க வேண்டும். அல்லது அவரது புதிய மாளிகையின் கொலு மண்டபத்தில் அரியணையின் பின்புறத்தில் அலங்காரம் செய்யப்பட்ட பீடத்தில் வாளை வைத்து விட வேண்டும். காண்பவர் பயபக்தியுடன் 'வந்தியத்தேவன் வாள்' என்று கூறி வாளை வணங்க வேண்டும்.

வல்லவரையர் மீண்டும் திரும்பிப் படுத்தார். 'மன்னர் இராசராசர் என் வாளைப் பற்றி மீண்டும் கேட்கலாம். தன்னிடம் தந்து விடுமாறு வற்புறுத்தக்கூடும் அல்லது மதுராந்தகனிடம் தருமாறு கேட்டுக் கொள்ளலாம். மதுராந்தகனிடம் ஒப்படைப்பது நியாயம்தான். தோள் வலியுடன் வாள் வலியும் சேர அவனால் மகத்தான செயல் புரிய முடியும். ஆனால், ஒரு நிபந்தனை. மதுராந்தகன் தனது கோரிக்கைக்கு உடன்பட வேண்டும்.'

வல்லவரையர் உறக்கத்திலேயே சிரித்துக் கொண்டார்.

'கோரிக்கையைக் கேட்டால் மதுரன் திடுக்கிடுவானா? அல்லது வியப்படைவானா? எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். என் வாளை அடைபவன் என் ஆசையை நிறைவேற்றுபவனாக இருக்க வேண்டும்.'

ஆசை; இவ்வளவு வயதுக்கு மேல் வல்லவரையரே உமக்கு ஆசையா?



வல்லவரையர் நாடு மிகச் சிறிய நாடு. குறுநில மன்னர் என்ற பதவி இராசராசன் கொடுத்தது. வல்லவரையர் நாட்டு மக்கள் உமது ஆசையை, அபிலாஷையை, கோரிக்கையைப் பற்றி ஏதும் சொல்ல மாட்டார்கள். இரண்டுவிதக் கருத்து என்பதே அவர்களிடம் இடையாது. நீங்கள் இட்டதே சட்டம். இளையபிராட்டியையும் வந்தியத்தேவனையும் அவர்கள் தேவ மாந்தராக மதிக்கிறார்கள். ஆனால், சோழ நாட்டு மக்கள் சற்று அதிர்ச்சியடைவார்கள்.

இளையபிராட்டியை அவர்கள் சோழ சக்ரவர்த்திக்கு அடுத்த இடத்தில் வைத்து மரியாதை செலுத்துகிறார்கள். சோழ சக்ரவர்த்திக்கு அளிக்கும் மரியாதையை விட ஒரு படி மேலேயே அளிக்கிறார்கள் என்று சொல்லலாம்.

இளையபிராட்டியின் வயிற்றில் ஒரு சிசு உதித்து, தாங்கள் அதைக் கண்டு மகிழ வேண்டும் என்ற ஆசையுடையவர்கள் சோழ நாட்டு மக்கள்.

'சோழ நாட்டின் முன்னேற்றத்திற்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டு விட்ட இளையபிராட்டி அவர்களே! உங்கள் குடும்பம்; சொந்த வாழ்க்கை என்பதையும் சற்றுச் சிந்தித்துக் கவனிக்கக்கூடாதா?' என்று சோழ நாட்டுப் பெரியவர்கள் வெளிப்படையாகவே கூறுவார்கள்.

''அக்கா! நீங்கள் பெண்ணைப் பெற்றிருந்தால் மதுரனுக்குத் திருமணம் செய்து கொடுத்து அவளை இளவரசி பட்டத்தில் ஏற்றி அமர்த்தியிருப்பேன். இறையருளால் அவர்கள் வயிற்றில் பிறக்கும் ஆண் மகன் சோழ அரசராக மதுரனுக்குப் பிறகு சோழ அரியணையில் அமரக்கூடும். இளையபிராட்டியின் பெயரன் சோழ பரம்பரையில் ஓர் அரசனாக வருவதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!'' என்று இராசராசன் கூறும்போது, இளையபிராட்டி சற்றும் சலனமின்றி, ''இராசராசா! இந்த விஷயத்தில் நீ கொடுத்து வைக்காதவன்தான் என்று உறுதிப்படுத்திக் கொள்'' என்பாள்.

''என்ன அவ்வாறு சொல்லி விட்டீர்கள்? உங்கள் வயிற்றில் ஒரு பெண் கூடவா பிறக்காது? பெண் பிறந்தால் மதுரனுக்கு...''

''இராசராசா! மதுரனுக்கு இப்பொழுது முப்பது வயது நடக்கிறது. அவன் ஒரு குழந்தையை மணப்பதா? வீண் கனவு கண்டு மனத்தைக் குழப்பப்படுத்திக் கொள்ளாதே'' என்று அழுத்தம்

திருத்தமாகக் கூறி விடுவாள். இராசராசன் பெருமூச்சு விடுவார். அவருக்கு வல்லவரையர் மீதுதான் அனுதாபம் எல்லாம்.

வல்லவரையர் இந்தச் சம்பவத்தையும் உரையாடலையும் எப்போதாவது நினைத்துக் கொள்வார்.

பழுவூர் சத்திரத்தில் படுத்துக் கொண்டு அவர் காணும் கனவுக் காட்சி வாரிசைப் பற்றிய சித்திரத்தைத் தீட்டியது.

''மாமன்னரே!'' என்று குதூகலத்துடன் அழைத்த வந்தியத்தேவன், ''வல்லவரையர் வீட்டு மணத் தொடர்புதானே தங்கள் இலட்சியம்?'' என்று கேட்டார்.

''ஆமாம்.''

''அப்படியென்றால் மதுரனை மணக்க நான் பெண் தருகிறேன்.''

''பெண்ணா? வேறு பெண்களைச் சிபாரிசு செய்யப் போகிறீர்களா? மதுரனுக்குப் பெண் தர குறுநில மன்னர் வரிசையாக நிற்கிறார்கள். உங்கள் தொடர்பு வேண்டும் என்று கேட்டால் மற்றவரைச் சிபாரிசு செய்வதாகக் கூறுகிறீர்களே!''

''மற்றவருக்குச் சிபாரிசு இல்லை; என் மகளை மணம் புரிவிக்கிறேன்.''

''உங்கள் மகளையா? புதிராக இருக்கிறதே! நீங்கள் யாரையாவது வளர்ப்புப் பெண்ணாக ஏற்று வளர்க்கிறீர்களா?''

''இல்லை அரசே! என் சொந்த மகள்தான்.''

வல்லவரையர் இவ்வாறு கூறியது கேட்டு இராசராசன் திடுக்கிடுகிறார்.

''என் மகளை மதுரனுக்கு மணம் புரிவித்தால், மதுரனிடம் எனது வாளை ஒப்படைத்து விடுகிறேன்'' வந்தியத்தேவன் அழுத்தம் திருத்தமாகக் கூறியது கேட்ட இராசராசன் மேலும் திகைத்தார்.

''வல்லவரையரே! புதிர் போடுகிறீர்களா? வந்தியத்தேவன் வாள் சிறப்புடையது என்று கூறுவதால் இப்படி ஒரு நிபந்தனை ஏற்படுத்துகிறீர்களா?'' என்று இராசராசன் சற்றுக் கோபமாகவே கேட்டார்.

''ஆமாம்; ஆமாம்; நிபந்தனைதான். என் மகளை மணப்பவருக்குத்தான் வாளைக் கொடுப்பேன். என்ன குந்தவ்வை தேவி! மகளா? என்று நீயும் வியப்புடன் பார்க்கிறாய்! உன்னிடமிருந்து சிற்றம்



எழுவதை அறிவேன். உனக்குத்தான் என் ரகசியம் தெரியுமே! உன் தம்பியிடம் உண்மையைச் சொல்லி விடுவதுதானே?'' என்று கூறி வல்லவரையர் பெரிதாகச் சிரிக்கிறார். அவரது உடல் குலுங்குகிறது.

வல்லவரையர் உறக்கம் கலைகிறது. கனவு கலைகிறது. தான் படுத்திருக்கும் இடம் பழுவூர் சத்திரத்துத் திண்ணை என்பதை அவர் உணர்கிறார். இரவு நேரத்துத் தென்றல் தவழ்ந்துக் கொண்டிருக்கும் போது அவர் உடல் வியர்த்திருந்தது.

'ஆகா! என் அருமை வாளே! நீ கனவிலும் மிகக் கம்பீரமாகக் காட்சி தருகிறாய். என்னை விட்டு நீ பிரிய மாட்டாய்!' என்று கூறி அருகே இருந்த தன் வாளைத் தொட முயல்கிறார். வாளைக் காணவில்லை.

# 19. முன்னாள் பிட்சுவா?

சலசலவென்று ஓடிவரும் ஆற்று நீரின் குளுமையும், மரக்கிளைகளின் அடர்ந்து இன்னிசைக்கும் புள்ளினங்களின் இனிய கீதமும், எங்கு திரும்பினாலும் பூத்துச் சிரித்து நிற்கும் மலர்களின் அழகு வடிவமும் பூங்கொடியை மிகவும் கவர்ந்தன. அந்த நந்தவனத்தை விட்டு, குடிலை விட்டு வரவே அவளுக்கு மனமில்லை.

இளம் பிட்சுவின் பேச்சு அவளைக் கவர்ந்தது. கன்றுக் குட்டியும், பழுப்பு வெள்ளை நிறம் கலந்த பூனைக் குட்டியும், எங்கிருந்தோ பறந்து வரும் பஞ்சவர்ணக்கிளியொன்றும் அவளுக்குத் தோழர்களாகி விட்டன. பிட்சு இல்லாத வேளைகளில் அவள் அவற்றோடு பேசி, விளையாடிக் கொண்டிருப்பதுதான் பொழுதுபோக்காக இருந்தது.

அவள் என்னவோ திட்டமிட்டுதான் புறப்பட்டாள். ஆனால், எங்கோ சென்றாள். எங்கோ வந்திருக்கிறாள்.

கன்றின் கழுத்தை கழுத்தை மெல்லத் தடவிக் கொண்டிருக்கும் போது அவளுடைய சிந்தனை சுழன்றது. இரண்டு நாள்களாக அவள் எதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள்; ஏன் காத்திருக்கிறாள் என்று அவளுக்கே புரியவில்லை.

இதுவரையில் நடந்த நிகழ்ச்சிகள் கனவல்ல; இப்படியே நடந்து கொண்டே சென்றால் அதன் முடிவுதான் என்ன? இன்று பிட்சுவிடம் கேட்டுவிட வேண்டும் என்று அவள் நினைத்தாள்.

தன் உடைகளைப் பார்த்து அவளே மெல்ல சிரித்துக் கொண்டாள்.

பட்டாடை உடுத்தி வந்ததைத் துவைத்துக் காய வைத்து உலர்த்தி காவியுடையை உடுத்திக் கொண்டாள். மறுநாளும் அவளுக்கு மற்றொரு காவிப் புடைவை காத்திருந்தது.

அவளுக்கு வியப்பாக இருந்தது. இங்கே சந்நியாசினிகள் யாராவது இருக்கிறார்களா?

முதல் நாளே காவியுடைக் கோலத்தில் அவளை ஏற இறங்க நோக்கிய பிட்சு, "உனக்கு இந்த உடை எடுப்பாக இருக்கிறது" என்றார்.

பூங்கொடி மெல்ல நகைத்தாள். 'துறவு ஆடையில் இல்லையா?'

'"எதற்காக சிரிக்கிறாய் பூங்கொடி?" என்று பிட்சு கேட்டார்.

"மற்றவர் கவனத்தைத் திருப்பாமல் இருப்பதற்காகத்தான் இந்த உடையைச் சந்நியாசிகளுக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். தாங்களோ இந்த உடை எடுப்பாக இருக்கிறது என்று கூறுகிறீர்கள். அழகிய பெண் என்றால் மனத்தை வக்கிரமாக்கிக் கொள்ளும் ஆண்களின் கவனத்தை ஈர்க்கும் இந்த உடையை அணியக்கூடாது என்று நான் நினைக்கிறேன். இன்னும் எவ்வளவோ செயலாற்ற வேண்டியிருக்கிறது. நாளையிலிருந்து என்னுடைய ஒரே ஆடையைக் காய வைத்து உடுத்திக் கொள்கிறேன்" என்றாள்.

பிட்சு மௌனமாக இருந்தார். பிறகு, "நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது. ஒரு காலத்தில் சோழ நாட்டில் சமணத் துறவிகளும், பௌத்தத் துறவிகளும் நிறைந்திருந்தனர். மக்கள் வாழ்க்கையுடன் கலந்திருந்தனர். ஒருவரும் அவர்களை வித்தியாசமாகப் பார்ப்பதில்லை. சைவ - வைணவ மதங்கள் தலைதூக்கிய பிறகு எங்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது" என்று கூறும்போது பூங்கொடி குறுக்கிட்டு, "எங்களுக்கு என்று தங்களையும் சேர்த்துச் சொல்கிறீர்களே! பிறக்கும்போது புத்தபிரானின் சமயத்தில் சேர்ந்தவர்களாகவா பிறந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம்! உனக்குத் தெரிந்திருக்குமோ, இல்லையோ; நானறியேன். உன் தாய் அறிவாள். என் தந்தை அம்மன் கோயில் பூசாரி.



அவர் இறந்த பிறகு எனக்கு உற்றார் உறவினர் ஒருவரும் இல்லாமல் போய் விட்டனர். என் வீட்டருகே இருந்த பௌத்த மடத்துத் துறவியின் கருணைக்கரங்களும், பாச விழிகளும், இனிய சொற்களும் என்னை அணைத்து ஏற்றிருக்காவிட்டால் நான் மண்ணோடு மண்ணாகியிருப்பேன். என் தந்தை செய்த பூசைகளும், அந்தக் கோயில்களும், தத்துவமும் மறந்து விட்டன. புத்தபிரானின் கருணை ததும்பும் முகம் என்னைத் தடுத்தாட் கொண்டுவிட்டது. என்னை அரவணைத்த புத்த பிட்சு எனக்குப் பல கலைகளைக் கற்றுத் தந்தார். சோழ நாட்டிலிருந்து சாளுக்கிய நாட்டிற்குச் சிலர் புறப்பட்டுச் சென்றனர். அவர்களோடு என்னையும் சேர்த்து அனுப்பி விட்டார்..." - பிட்சு சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பூங்கொடியின் விழிகளை ஒருமுறை உற்று நோக்கினார். பிறகு தொடர்ந்தார்:

"பூங்கொடி! என் வரலாற்றை உன்னிடம் ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூறுகிறேன். ஏனோ, உன்னிடம் அவ்வளவையும் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் எந்தவித இடையூறு ஏற்பட்டாலும் கவலைப்படவில்லை" என்றபோது பூங்கொடியும் பிட்சு அனந்தபாலரின் முகத்தை முழுமையாக நேருக்கு நேர் நோக்கி...

"தூய பிட்சுவின் நடந்து போன கதையில் என்ன ரகசியம் இருக்க முடியும்? அப்படியே இருந்தாலும் அதைக் கொண்டு தங்களுக்கு எதிராக நான் ஏன் பயன்படுத்தப் போகிறேன்? நாகப்பட்டினத்துக் கடற்கரை ஊரில் சிறு வயதில் தங்களுடன் விளையாடிய இனிய பொழுதுகளை நினைத்துக் கொள்கிறேன். புத்தப் பள்ளிக்கு நீங்கள் என்னை அழைத்துச் செல்ல மறுக்க வில்லையா? நினைத்துப் பாருங்கள்... கன்னிப்பெண்கள் புத்த விகாரைக்கு வரக்கூடாது என்று சொன்னீர்கள். நான் விவரமறியாப் பருவத்தினள் அந்தச் சமயம்" என்றாள்.

"புத்த பிட்சுகள் தங்கியிருக்கும் இடத்திற்குத்தான் அழைத்துச் செல்ல மாட்டேன் என்று கூறினேன். புத்த பிரானைப் பெண்கள் வணங்க அழைத்துச் செல்வதாக உறுதி கூறியதாக நினைவு. வேறு ஏதோ ஒரு பணி இருப்பதாக நீ வர மறுத்ததாகவும் நினைவு."

பூங்கொடி நகைத்தாள். "ஆமாம்! ஆமாம்! இன்றும் பசுமையாக நினைவுக்கு வருகிறது. அன்று நடந்த சம்பவத்தை என்னால் மறக்க

முடியவில்லை. அந்த நிகழ்ச்சிப் புதிரை நீங்கள் இப்பொழுது விடுவித்தீர்கள்.''

''ஆமாம்! உன்னையும் புத்தர் கோயிலுக்கு அழைத்துச் சென்று புத்த பிரான் மீது உனக்கு ஈடுபாடு ஏற்படுமாறு செய்ய வேண்டும் என்று என் உள்ளுணர்வு கூறிக் கொண்டேயிருந்தது. இன்னும் அந்த பிள்ளைப்பிராயத்து ஆசைகள் நிறையவே இருந்தன. அவற்றில் பல, பல நாள்களுக்குத் தொடர்ந்திருந்தன. சில, இன்றளவும் அழியாது இதயத்தில் இருக்கின்றன.''

பிட்சு அனந்தபாலர் பேசிக் கொண்டே போனார். அவர் முகத்தை வைத்த விழி மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் பூங்கொடி. உள்ளத்தில் நிழலாடுவதை உணர முயல்வது போல அவள் பார்வை இருந்தது.

''இமை கொட்டாமல் பார்க்கிறாயே பூங்கொடி!'' என்று கேட்டார் பிட்சு.

'ஆமாம்' என்பது போல் தலையசைத்தாள் பூங்கொடி.

''நான் பேசுகிறேன்; நீ ஒன்றும் பேசாமல் சிலை போல் இருக்கிறாய். ஆனால், உன் விழிகள் பேசுகின்றன'' என்றார்.

''என் இதயமும் சிலைக்குள்ளது போல் இருந்து விட்டால் நல்லது என்று தோன்றுகிறது.''

''கல் போன்று இதயம் மாற வேண்டும் என்று நினைக்கிறாயா? பெண்கள் இதயம் பல சமயங்களில் கல். சில சமயங்களில் மலர்.''

''பெண்களின் இதயத்தை ஆராய்ச்சி செய்வதில் உங்களுக்கு அனுபவம் ஏற்பட்டது எப்படி? நாகப்பட்டினத்து இளம் வாலிபன், சோழ நாட்டினின்று சாளுக்கிய நாட்டுக்குச் சென்று பிட்சுவான கதையை நான் அறியலாமா?'' - பூங்கொடியின் இதழ்களில் குறும்பு நகை மிளிர்ந்தது.

''பூங்கொடியின் இதயம் சிலையாகவும், சிரிக்கும் மலராகவும் மாறக்கூடியது என்று நான் அறிந்து கொண்டேன். என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் எனும் ஆவல் உனக்கு இருப்பது ஒன்றே என்னைச் சிலிர்க்க வைக்கிறது.''

''சிலிர்க்க வைக்கிறதா? பிட்சுகள் உடலையும் உள்ளத்தையும் உணர்ச்சி அப்பாற்பட்ட நிலையில் வைக்க வேண்டும். தங்கள் உடல் ஏன் சிலிர்க்கிறது?''



பூங்கொடி இப்படிக் கேட்டவுடன், பிட்சு நகைத்தார். ''பூங்கொடி! என் வாழ்க்கையே விசித்திரமானது. என்னை நானே உணர்ந்து கொள்ள முடியாமல் பலமுறை சங்கடப்பட்டிருக்கிறேன். மனம் விட்டு உன்னிடம் பேசுவதற்குக் கடந்த இரண்டு நாள்களும் நான் பட்டபாடு எனக்குத் தெரியும். இரண்டு நாள்கள் என்ன? அதற்கும் மேலேயே உன்னைத் தொடர்ந்து நான் வந்து கொண்டே இருந்தேன்...'' என்று கூறிப் பூங்கொடியின் முகத்தை நோக்கினார்.

இதைக் கேட்டுப் பூங்கொடி திடுக்கிட்டாள். ஆனால், வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல், வியப்பு நிறைந்த குரலில், ''என்னைத் தொடர்ந்தா?''

''ஆமாம்... பூங்கொடி! என் தலைவர் எனக்கு இட்ட கட்டளை.''

''தலைவரா! தலைமைப் பிட்சுவா? தலைமைப் பிட்சு சாளுக்கிய நாட்டினின்று இங்கு எங்கே வந்தார்?''

''தலைவர் என்றால் தலைமைப் பிட்சு என்று அர்த்தமன்று. சோழ நாட்டில் என்னை ஆட்டிப் படைக்கும் தலைவர்.''

''உங்களை ஏன் ஆட்டிப் படைக்க வேண்டும்? உங்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்தான் என்ன?''

''நானாக வரவழைத்துக் கொண்டதுதான். நானாக ஏற்படுத்திக் கொண்ட பின்னல்தான்'' - பிட்சுவின் குரல் மெலிந்தது.

''பிட்சு அவர்களே! மனம் விட்டுப் பேசுவது உங்கள் மீதுள்ள மதிப்பை உயர்த்துகிறது என்றாலும், பிட்சுவாக இருக்கும் தாங்கள் முழு மரியாதையை அந்தப் புனித பீடத்துக்குச் செலுத்தவில்லை என்று தோன்றுகிறது'' - பூங்கொடியின் கடுமையான கருத்து அவரை மீண்டும் திடுக்கிட வைத்தது.

''மனத்தின் மறைவிட உண்மைகளை அம்பலமாக்குவது கூடாது. அதுவும் ஒரு பெண்ணிடத்தில். ஆனால், உன்னிடம் உள்ளது உள்ளபடி சொல்லிவிட வேண்டும் என்ற வேகம் எனக்கு வந்து விட்டது. உன்னிடம் எதையும் மறைக்கக்கூடாது என்று உள்மனம் என்னை இடித்துக் கூறுகிறது. அப்படிச் சொன்னால்தான், மனத்தைத் திறந்து காட்டினால்தான் உன் இதயத்தில் அமரலாம் என்று நான் உறுதியான முடிவுக்கு வந்தேன்.''

பிட்சு இவ்வாறு பேசிக் கொண்டிருந்தபோது பூங்கொடியின் உடல் மெல்ல நடுங்கியது. பிட்சுவின் பேச்சிலே மறைந்திருக்கும்

நிஜ உருவம் மெல்ல மெல்லப் புரியத் தொடங்கியது. 'ஒருவேளை நான் நினைப்பது போல் இல்லாமலும் இருக்கலாம் அல்லவா?' - அவள் குழம்பினாள்.

பிட்சு தொடர்ந்து பேசினார்: ''பூங்கொடி! உன் தாயை நான் சந்தித்தேன்'' என்று அவர் சொன்னபோது பூங்கொடியின் புருவங்கள் வியப்பால் உயர்ந்தன.

''உனக்கு வியப்பளிக்கக்கூடிய செய்திகளையே நான் சொல்லி வருவதாக நினைக்க வேண்டாம். உன் தாயைச் சிறு வயதில் நான் பார்த்திருக்கிறேன். உங்கள் வீட்டில் உன்னுடன் விளையாடி இருக்கிறேன். உன் தாய் அரசகுலத் தொடர்புடையவர்கள் என்று எனக்குத் தெரியும்'' என்று சொல்லும்போது பூங்கொடி சற்றுக் கோபமாகக் குறுக்கிட்டு...

''எப்படித் தெரியும் உங்களுக்கு? எனக்குச் சந்தேகம் தோன்றுகிறது. நீங்கள் சோழ நாட்டுக்கு வந்த பிறகு அரசாங்கச் செய்திகளை அறிந்து அதைக் கொண்டு உங்களுக்குச் சாதகமாகச் சிலவற்றை நிறைவேற்றிக் கொள்ளப் போகிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றாள்.

''இருக்கலாம். ஒவ்வொருவரும் தங்கள் லட்சியம் ஈடேறப் பல முயற்சிகளில் ஈடுபடுவர் என்பதில் என்ன சந்தேகம்? எனக்கென்று பல கனவுகள், கற்பனைகள் உண்டு. அவற்றை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற பிடிவாதமும் உண்டு'' என்று பிட்சு சொல்லி வரும்போது பூங்கொடி மீண்டும் குறுக்கிட்டாள்.

''அனந்தபாலரே! துறவியாக மாறிய பிறகு பூர்வாச்ரமத்தைப் பற்றிப் பேசுவதோ, கனவு காண்பதோ, கற்பனையாக மனத்தில் எண்ணங்களை வளர்த்துக் கொள்வதோ, அவற்றைப் பற்றி நினைத்துக் கொண்டு இருப்பதோ முறையன்று என்பது தங்களுக்குத் தெரியாதா?'' என்றாள்.

''தெரியும்; துறவியும் மனிதன்தானே!'' - பிட்சு.

''இல்லை, சாதாரண மனிதனுக்கும் மேலானவர். மண்ணில் பிறந்த உடலின் குணங்களையெல்லாம் மாசு நீங்கக் கழுவி விட்டவர். புடம் போட்ட தங்கம். அவருக்கென்று தனி மனம் கிடையாது. அவர் இந்தச் சமூக மக்களின் உயர்வு, நலன், வாழ்க்கை மேம்பாடு பற்றியே நினைக்க வேண்டியவர். உங்கள் கருத்து, போக்கு



இவற்றை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். உம்; இருக்கட்டும். என் தாயைச் சந்தித்த செய்தியைச் சொல்லத் தொடங்கினீர்கள். நான் குறுக்கிட்டு விட்டேன். தொடர்ந்து சொல்லுங்கள்'' என்றாள்.

பிட்சு சிரித்தவாறு சொன்னார்: ''பூங்கொடி! உன் தாய் கூறியதையெல்லாம் அப்படியே உன்னிடம் விளங்கக் காண்கிறேன். எடுத்த காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற பிடிவாதம்; எதற்கும் அஞ்சாமை.''

''உம்; சொல்லுங்கள். அஞ்சியஞ்சிச் செத்துக் கொண்டிருக்கும் என் தாயைப் போல் நான் இருக்க மாட்டேன். என் தாய்க்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நான் பழிக்கு பழி வாங்குவேன். எடுத்த காரியத்தை நிறைவேற்ற என்னால் முடியும் என்று என் தாய் முழுமையாக நினைக்கிறாள் என்றால் அதுவே எனக்குப் பெரிய வெற்றி. உம்; சொல்லுங்கள். என் அம்மா, எனக்காகவே இந்த உலகில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் அருமை அம்மா என்ன சொன்னார்கள் என்று சொல்லுங்கள்'' என்று பூங்கொடி வற்புறுத்தினாள்.

''உன் தாயுடன் நான் பேசிக் கொண்டிருந்தவற்றைச் சொல்ல முற்படுவதற்குள் நீ பலமுறை குறுக்கிட்டு விட்டாய்...''

''இனி நீங்கள் பேசி முடிக்கும் வரையில் நான் ஒன்றுமே பேச மாட்டேன். உம்; சொல்லுங்கள்'' என்று கூறிய பூங்கொடி வாயைப் பொத்திக் கொண்டாள்.

''பூங்கொடி! சோழ சக்ரவர்த்தி உன் தாய்க்குச் செய்த கொடுமையை எல்லாம் உன் தாய் எடுத்துச் சொன்னாள்'' என்ற பிட்சு தொடங்கியபோது, பூங்கொடி வேகமாக ''அப்படி ஒருநாளும் சொல்லியிருக்க மாட்டார். சோழ சக்ரவர்த்தியின் மீது என் அம்மாவுக்கு எந்தவிதக் கோபமும் இல்லை. என்ன காரணத்தாலோ என் அம்மாவை மறைத்து வைத்துப் பயமுறுத்தி வைத்த அந்த இளைய பிராட்டியைப் பற்றித்தான் என் தாயார் ஏதாவது சொல்லியிருக்கலாம். இளையபிராட்டியைப் பற்றியும் என் தாயார் ஒரு வார்த்தை கூடத் தவறாகச் சொல்லியிருப்பார்களா என்பது சந்தேகம்தான். பிட்சு அவர்களே! கற்பனையாக ஏதாவது தாங்கள் சொல்ல முற்படாதீர்கள். இந்த உலகிலுள்ள ஒருவரையும் நம்ப விரும்பாத நான் தங்களை மட்டும் நம்புகிறேன். ஏனோ தங்களைப் பார்த்தவுடன் என் எண்ணங்களுக்கு உதவக் கூடியவர் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது.''

பூங்கொடியின் முகத்தையே சற்று அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்த பிட்சு, ''பூங்கொடி! நீ ஓர் அபூர்வப்பெண். இந்த இளம் வயதிலேயே நீ சகல கலைகளையும் கற்றுணர்ந்திருக்கிறாய் என்பது உண்மை; அவற்றை விட மற்றவர் மனத்துள் உள்ளதை உணரக் கூடிய சக்தி உனக்கு இருக்கிறது என்பதுதான் பேருண்மை. பூங்கொடி! நீ சொன்னது போல் என்னிடம் சக்ரவர்த்திகளைப் பற்றியோ, அல்லது குந்தவ்வையைப் பற்றியோ ஒரு வார்த்தை சொல்லவில்லை. நானே யூகித்து, உன்னிடமிருந்து சில உண்மைகளை அறிய அவ்வாறு கூறினேன். ஆனால், உன் தாய் என்னிடம் பல செய்திகளைக் கூறினார்கள். அவற்றில் ஒன்று, அரச குடும்பத்தவரிடம் உனக்குள்ள வெஞ்சினம், நீ எடுத்துள்ள சபதம், இளவரசரை உன் மீது காதல் மோகமடையச் செய்து தவிக்க வைத்து உண்மையிலேயே பித்தனாக ஆக்கி...''

பிட்சு சொல்லிக் கொண்டே போகும்போது பூங்கொடி 'உச்' என்று உதடுகளை மூடி ஒலி எழுப்பி, ''முன்னாள் பிட்சுவே! மிக முக்கியமான ரகசியத்தை இப்படி நீங்கள் முரசறையலாமா? என் தாய் இவ்வளவு செய்தியையும் தங்களிடம் சொல்லியிருப்பார்கள் என்று என்னால் நம்ப முடியவில்லை என்றாலும் தாங்கள் கூறியவை சரியே. இளவரசர் மதுரனைப் பழி வாங்குவதன் மூலம் சோழர் குலத்தையே கண்ணீர் விடுமாறு செய்ய முடிவு செய்திருப்பது உண்மையே. ஆனால், பரம ரகசியமான திட்டத்தை இப்படி நீங்கள் வெளியே நாலு பேர் கேட்குமாறு சொல்லலாமா?'' என்றாள்.

தன்னை முன்னாள் பிட்சுவே என்றழைத்தால் துணுக்குற்ற பிட்சு, ''பூங்கொடி! நான் முன்னாள் பிட்சுவாவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். அந்த நாளை - வேளையை - ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன். உன்னிடமிருந்து ஒரு கண்ணசைவு கிடைத்தால் போதும்; நான் பிட்சுக் கோலத்தைத் துறந்து விடுவேன். உன் சபதத்தை, உன் திட்டத்தை, உன் தாய் என்னிடம் சொல்லவில்லை. நானே அறிந்து கொண்டேன். உன் தாய் தெரிவிக்கவில்லை என்ற செய்தியை, நீ உணர்ந்தறிந்த ஆற்றலை மெச்சுகிறேன். பூங்கொடி! நாலு பேர் அறிய அந்த ரகசியத்தை முரசு ஒலிப்பதுபோல் அறிவிப்பதாகக் கூறுகிறாயே அதெப்படி? என்னைத் தவிர வேறு யார் இங்கு இருக்கிறார்கள்?'' என்று பிட்சு கேட்டார்.

''அனந்தபாலரே! நொடிக்கு நொடி தங்கள் முகம் மாறி வருவதையும், மனம் மாறி வருவதையும், குணம் மாறி வருவதையும் நான் காண்கிறேன். இந்த இடத்தில் தங்களைத் தவிர மற்றும் சிலர் இருக்கிறார்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. என்னிடம் தங்கள் முழு வரலாற்றையும் சொல்வதாகக் கூறி வேறு பேச்சைத் தொடர்கிறீர்கள்; பாதையை மாற்றுவதைக் காண்கிறேன். சோழ நாட்டிற்கு எதிராகச் சதி செய்யும் கூட்டத்தாரின் பிடியிலிருந்து தப்ப முடியாமல் நீங்கள் தவிக்கிறீர்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. என்னையும் துணைச் சேர்த்துக் கொண்டு சோழ நாட்டில் கலகமொன்று விளைவிக்க உங்கள் ஆதரவாளர்கள் முடிவு செய்துள்ளதையும் என்னால் உணர முடிகிறது. என் வாய்மொழி மூலமாக, மற்றவர்கள் அறியும் வண்ணம் என் இரகசியத் திட்டங்களை வெளிப்படுத்தித் தெரிவிக்க, இவ்வாறு பேசுவதை உணர்கிறேன். அவர்களில் சிலர் இங்கு இருக்கிறார்கள். சிலர் இன்னும் சில நாழிகைகளில் வருவார்கள். அப்படித்தானே?'' என்று பூங்கொடி கேட்டதும் பிட்சுவின் மேனியில் சிலிர்ப்பும் நடுக்கமும் ஏற்பட்டன.



# 20. மாறு வேடத்தில் வந்த மனிதன் யார்?

தன் வாழ்நாளிலேயே, வந்தியத்தேவன் திடுக்கிட்டது அன்றுதான்.

தன் உடைவாளைக் காணவில்லை. என்ன கவனக் குறைவாக இருந்துவிட்டோம். வீரன் கை உடைவாளும், நாட்டின் சுதந்தரமும் மிக முக்கியமான தூய வீரனுக்குக் கண் போன்றவை. என்ன காரியம் செய்து விட்டோம்! சத்திரத்துத் திண்ணையில் தங்கியது எவ்வளவு தவறு?

அந்தச் சத்திரம் மிக அமைதியாக இருந்தது. அரச மரத்து இலைகளின் சலசலவென்ற ஒலியைத் தவிர வேறு சந்தடியற்ற அந்த நள்ளிரவு அமைதியின் துணையுடன் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது.

சத்திரத்தின் வெளியே வந்து பரபரப்புடன் சுற்றும் முற்றும் பார்த்தார் வல்லவரையர். அருகே கிணறு ஒன்றிருந்தது. அதனருகே தான் பெரிய அரசமரம் வளர்ந்திருந்தது.

அந்தக் கிணற்றருகே விரைந்தார் வல்லவரையர். யாரோ மெல்ல நடக்கும் காலடி ஓசை கேட்டது.

''யாரது அங்கே? நில்... நகராதே'' என்று வல்லவரையர் குரல் கொடுத்து அந்த இடம் நோக்கி விரைந்தார்.

சிரிப்பொலிதான் மறுமொழியாக வந்தது.

''யாரது சிரிப்பது? நில் அங்கேயே!'' என்று மறுபடியும் கூறிய வாறு வல்லவரையர் குரல் வந்த திக்கை நோக்கிப் பாய்ந்தார்.

சிரிப்பொலி இப்போது வேறு இடத்திலிருந்து கேட்டது. குழந் தைகள் 'கண்ணாமூச்சி' விளையாடுவதுபோல் சிரிப்பொலி திசை மாறி ஒலித்துக் கொண்டிருந்தது. வல்லவரையர் இங்கும் அங்கும் அந்த உருவத்தைப் பிடிக்கப் பாய்ந்து கொண்டிருந்தார். ஆத்திரம், கோபம், ஏமாற்றம் யாவும் ஒன்று கலந்து அவர் உடலில் புதியதொரு வேகத்தை ஊட்டின.

''பாவம், இந்த வயதில் இப்படி ஒரு தடுமாற்றமா?'' என்ற குரல் வல்லவரையரின் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.

''ஏய்! யாரவன்? எனக்கென்ன தடுமாற்றம்? இருளில் மறைந்து மறைந்து ஓடும் நீ ஒரு சுத்த வீரனாக இருந்தால் என் எதிரே வா'' என்று ஆத்திரத்துடன் கூவினார்.

''உங்கள் எதிரேதான் இருக்கிறேன். நீர் ஒரு மாபெரும் வீரர் என்று பெயர் பெற்றவர். சோழ நாட்டவர் நடத்தும் போர்களில் எல்லாம் முன்னின்று நடத்திப் புகழ் வாய்ந்தவர். திறமையிருந்தால் என்னிடம் நேருக்கு நேர் மோதலாம்'' என்றான் அந்தக் குரலுக்குரியவன்.

''நேருக்கு நேர் போரிடுபவர்களோடு மோதித்தான் எனக்குப் பழக்கம். மறைந்திருந்து குரல் கொடுத்து, மல்லுக்கு அழைக்கும் கோழைகளிடம் நான் மோத மாட்டேன். வா வெளியே'' என்று கர்ஜித்தார் வல்லவரையர்.

''ஐயோ, பாவம்! வல்லவரையரே! நான் வெளியே வருகிறேன். வெளியே மை இருட்டு, கையிலே தங்களிடம் வாளுமில்லை. எப்படி என்னுடன் மோதுவீர்கள்? நிராயுதபாணியான ஒருவருடன்



நான் போரிட மாட்டேன்'' என்றவனின் பேச்சு ஒரு கணம் வல்ல வரையருக்கு வியப்பை அளித்தது.

என்ன துணிவு இருந்தால் அவன் என்னிடம் இவ்வாறு பேசத் துணிந்திருப்பான்! என்னிடம் வாளில்லை என்பதை அறிந்திருக் கிறான்!

''மறைந்திருப்பவரே! மறுபடியும் கூறுகிறேன், வெளியே வாருங்கள். மரியாதை கொடுத்தே பேசுகிறேன். தூங்குபவர்களிடம் திருடுபவர்கள் பழுவூரில் இருப்பது பழுவேட்டரையருக்கு அவ மானம்'' என்று கூறியபோது வல்லவரையரின் சினம் தீவிரமடைந்தது.

''சோழ நாட்டு மாவீரர், அரசரின் அருமைத் தமக்கையாரின் கணவர், வல்லவரையர் நாட்டுக் குறுநில மன்னவர், பழுவூர் நாட்டுக்கு இப்படி ரகசியமாக வந்து சத்திரத்தில் தன்னை மறந்து தூங்கலாமா?''

இந்த மறுமொழியைக் கேட்ட வல்லவரையர் திடுக்கிட்டார்.

'பல ஆண்டுகளுக்கு முன்பு இளமைப் பருவத்தில் நான் சோழ நாட்டுக்கு ஒரு வீரனாக வந்தேன். அரச குடும்பத்தவரின் அபிமானம் பெற்றேன். பெரும் அபவாதத்தை ஏற்றுச் சிறையில் வாடினேன். பிறகு சோழ குலத்து மருமகப் பிள்ளையானேன். படைத் தலைவரா னேன். போர்க்களங்களுக்கு அரசருடன் சென்றேன். பிறகு அவரது திருக்குமாரனுடன் சென்றேன். வல்லவரையருக்கு ஒரு நாட்டைப் பரிசாக அளிக்க வேண்டும் என்று சோழ அரசர் நினைத்தார். அதன் படியே எனக்குக் கிடைத்து குறுநிலத்துத் தலைவரானேன். பாலாற்றங்கரையில் பழம்பெருமை வாய்ந்த பிரம்மதேசம் ஊரை விரிவுபடுத்தி அங்கே அழகிய மாளிகையைக் கட்டினேன். நான் சிற்றரசன். மற்றொரு சிற்றரசனின் நாட்டுக்கு வருகை தரும்போது முன் அறிவிப்புடன் வர வேண்டும். வந்திருக்க வேண்டும். அதுதான் முறை. நான் அவ்வாறு செய்யாமல் வந்ததன் பலனை, இப்போது அனுபவிக்கிறேன். சத்திரத்தில் தங்கியது மரியாதைக் குறைவு. கவனமின்றி உறங்கியது புத்திக் குறைவு. சரி, இவற்றை நான் உணர்கிறேன். ஆனால், மறைந்திருந்து பேசுபவர் என்னை நன்றாக அறிந்திருக்கிறார். என்னைக் குத்திக் காட்டுகிறார். ஹூம்...' பெரு மூச்சு விட்டார் வல்லவரையர்.

பொறுமை இழந்த அவர், ''ஏய்'' என்ற மரியாதைக் குறைவான குரலில், ''வெளியே வருகிறாயா, நான் அங்கு வரட்டுமா?'' என்றார்.

''ஆகா! தங்கள் வரவு நல்வரவாருக'' என்று கூறி மீண்டும் நகைத்தது அந்தக் குரல். வல்லவரையரின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. தான் தாக்கப்பட்டது போன்றும் பழிக்கப்பட்டது போன்றும் உணர்ந்தார். குரல் வந்த திக்கை நோக்கிப் பாய்ந்தார்.

சிறிது நேரம் குழந்தைகள் ஓடிப் பிடிப்பது போன்ற விளையாட்டு நடைபெற்றது. வல்லவரையருக்கு அந்தப் பகுதியில் அதிகம் பழக்கமில்லாததால், சேற்றிலும் கற்குவியல்களிலும் பாதங்களைப் பதிக்க நேர்ந்தது. சற்று நேரம் ஓர் ஓரமாக அமைதியாக நின்றார். அந்த உருவம் அடிமேல் அடிவைத்து அந்தப் பக்கம் வந்தது. அதன் மீது பாய்ந்தார்.

உருவத்தைக் கட்டிப் பிடித்து ஓடி விட முடியாமல் நிறுத்தினார். இருளில் உருவத்தின் முகம் தெரியவில்லை.

மீண்டும் அதே சிரிப்பு. ''இருவரும் வாட் போரிடலாமா?'' மிக நெருக்கமாக வந்து அந்தக் குரலுக்கு உரியவன் கேட்டதும், வந்தியத் தேவனுக்கு ஏற்பட்ட எரிச்சலுக்கு அளவேயில்லை.

''இவ்வளவு நேரம் நான் மரியாதை கொடுத்தேன். திருடனென்று பாராமல் ஏன் உனக்கு மரியாதை தந்தேன் என்று எனக்கே புரியவில்லை. கோபத்தை விட்டு நான் அதிக நாள்களாகின்றன. என்னை வாட் போரிட அழைக்கும் அறிவிலியே! களவாடிய என் வாளை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, வா போருக்கு'' என்றார்.

மீண்டும் சிரிப்பு. அதில் குழந்தைத் தனமிருந்தது.

தன் பிடியைத் தளர்த்தி விட்டு, முஷ்டியை மடக்கிக் கொண்டு பலமாக அவன் முகத்தை நோக்கி ஒரு குத்து விட்டார், வல்லவரையர். அந்தக் குத்து விழுந்திருந்தால் எதிராளியின் பற்கள் உடைந்திருக்கும். ஆனால், மிக எளிதாக அந்த உருவம் தலையைச் சாய்த்து குத்து தன் மீது படாமல் தப்பிவிட்டது.

மீண்டும் சிரிப்பு.

''ஆகா! வல்லவரையரின் கரங்களில் வலிமையிருக்கிறது. இந்தக் குத்து எப்படியிருக்கும் என்று எனக்குப் புரிகிறது...''

குரலை மாற்றிக் கொண்டு அவன் பேசினாலும் அந்தக் குரலை எங்கோ கேட்டது போலிருந்தது.

**இப்பொழுது அந்த இருள் தடைப்பட்டது.**



எங்கிருந்தோ வெளிச்சம் திடீரெனப் பரவியது. தீப்பந்தம் ஏந்திக் கொண்டு குதிரை மீது ஒருவர் வருவது தெரிந்தது. சிறிது சிறிதாக அந்த ஒளி சத்திரத்திற்கு அருகே வந்தது.

குதிரை மீதிருந்து இறங்கியவன் தீப்பந்தத்தை ஓரிடத்தில் வைத்து விட்டு, சத்திரத்திற்குள் நுழைந்து கதவைத் தட்டினான்.

கதவு திறந்தே இருந்தது. சத்திரத்துத் தலைவன் தூக்கக் கலக்கத்தில் எழுந்து வந்து வெளியே பழுவேட்டரையர் மாளிகையிலிருந்து வந்திருக்கும் வீரனைக் கண்டு வணக்கம் தெரிவித்தான்.

''இங்கே வல்லவரையர் வந்து தங்கியிருப்பதாகக் கேள்விப் பட்டோம். அவரிருந்தால் அவரைப் பழுவேட்டரையர் சந்தித்து மரியாதை தெரிவித்து அழைத்து வரச் சொன்னார்'' என்றான்.

சத்திரத்துத் தலைவனுக்குப் புரியவில்லை. ''இங்கு வல்லவரையர் வந்து தங்கவில்லை'' என்றான்.

பழுவேட்டரையரின் வீரன் மிகக் கோபக் குரலில், ''நீங்கள் சத்திரத்துக் காவலராக இருக்கத் தகுதியில்லாதவர். சத்திரத்தில் யார் வந்து தங்குகிறார் என்று தெரிந்து கொள்ளாமல் எதற்காக இருக்கிறீர்கள்?'' என்றான்.

தூக்கக் கலக்கமும், திடீரென வீரனின் அதிகாரக் குரலும் சேரவே சத்திரத்துத் தலைவன் நடுநடுங்கிப் போனான். பிறகு சற்று யோசித்து, ''நள்ளிரவுக்குப் பின் ஒருவர் வந்தார். பால் மட்டும் வாங்கிப் பருகி விட்டு நல்ல காற்று வேண்டும் என்று சத்திரத்துத் திண்ணையில் படுத்துத் தூங்குகிறார்'' என்றான்.

''அவர் எங்கே?'' - வீரன் கேட்டான். சத்திரத்துத் தலைவனுக்குப் புரியவில்லை.

இவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போது சத்திரத்தின் வெளியே சற்று வெளிச்சம் பரவியது. வல்லவரையர் இப்போது அந்த உருவத்தை நன்றாகப் பார்த்தார்.

அடர்த்தியாகத் தாடியும், மீசையுமாகத் தலையில் முண்டாசுடன் மேலே நன்றாகப் போர்த்தி, உயரமாக, திடகாத்திரமாக இருந்த அந்த உருவத்தின் விழிகளை மட்டும் முன்பே அறிந்ததுபோல் தோன்றியது.

''என்னுடன் சண்டையிட வாள்தானே வேண்டும்? நான் தருகிறேன்'' என்றது அந்த உருவம்.

'வாள் தருகிறாராமே வாள்! என் வாளை எடுத்துக் கொண்டு ஓடப் பார்த்தவனை நாம் கண்டுவிட்டதால், அந்த வாளையே என்னிடம் திருப்பித் தருவதாகக் கூறுகிறானோ! உம்; தரட்டும்!'

''என் வாள் எங்கே?'' அவன் கரத்தை அழுத்தமாகப் பிடித்தார்.

''உங்கள் வாளா? அதைத்தான் தொலைத்து விட்டு நிற்கிறீர்களே!''

அவன் பேச்சு எரிச்சலைத் தந்தது.

''உன்னைச் சும்மா விடப் போவதில்லை'' வல்லவரையர் முழங்கினார்.

''நானும் தங்களிடம் ஏதும் பெறாமல் சும்மாவிட்டு விடப் போவதில்லை'' மீண்டும் சிரித்தான் அவன்.

அந்தச் சிரிப்பு நெருப்பை அள்ளிக் கொட்டுவது போலிருந்தது.

வெளியே இருவர் வாதாடும் குரல் கேட்கவே குதிரை வீரனும் சத்திரத்துத் தலைவரும் திரும்பிப் பார்த்தனர்.

''வல்லவரையரே! நானும் தங்களை இலேசில் இந்த இடத்தை விட்டுப் போக விடப் போவதில்லை. என்னை வாட்போருக்கு அழைத்தீர்கள். நிராயுதபாணியான தங்களுக்கு ஒரு வாளை எடுத்துக் கொடுத்துத் தங்களுடன் போரிட நான் ஆயத்தமாக இருக்கிறேன். வாருங்கள். வாள் தருகிறேன்'' என்று வேகமாக சத்திரத்தினுள்ளே சென்றான். அவனைத் தொடர்ந்து வல்லவரையர் விரைந்தார். சத்திரத்துத் தலைவனையும் பழுவேட்டரையர் அனுப்பிய வீரனையும் இடித்துத் தள்ளிக் கொண்டு அவர்கள் உள்ளே நுழைந்ததைக் கண்டு திகைத்து நின்றனர்.

''இவர்கள் யாரென்று தெரியவில்லை. திறந்த வீட்டிற்குள் அனுமதியின்றி நுழைகிறார்களே'' என்று கூறி அவர்களைப் பின் தொடர்ந்தான் சத்திரத்துத் தலைவன்.

''ஏதோ உள்ளே வைத்ததை எடுப்பது போலல்லவா அவர்கள் செல்கிறார்கள்?'' என்ற வீரன் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

வல்லவரையரை அழைத்து வந்தவன் ஓர் அறையின் கதவைத் திறந்தான். உள்ளே சிறு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. விளக்கின் திரியைத் தூண்டி விட்டுப் பிரகாசமாக்கி அறையின் நடுவே ஒரு மஞ்சத்தில் மூடப்பட்டிருந்த போர்வையை விலக்கினான், அந்த வீர இளைஞன்.



வந்தியத்தேவன் வியப்புற்றுத் தன்னையறியாமல் 'ஆ! என்னுடைய வாள்' என்று குரல் கொடுத்தார்.

''ஆமாம்; வல்லவரையர் வந்தியத்தேவனுடைய வாள்தான்'' என்று கூறி மீண்டும் அந்த மர்ம மனிதன் சிரித்தான்.

இப்பொழுது அந்தச் சிரிப்பைக் கண்டு வந்தியத்தேவன் எரிச்சலடையவில்லை. அவனை ஒருமுறை பார்த்தார். அவரும் மெல்ல நகைத்தார். சத்திரத்தலைவனும், பழுவேட்டரையரின் வீரனும் மிக மரியாதையுடன் கைகட்டி நின்றனர்.

பழுவேட்டரையர் வேறோர் அறையில் படுத்த படுக்கையாயிருந்தார். நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவரைக் காண வேண்டும் என்ற ஆவலில் வல்லவரையர் பழுவூருக்கு வந்தார்; இரவு வெகுநேரம் கழித்துப் பழுவூர் நகருக்கு வந்ததாலும், தன் வருகை பற்றி முன்னமே அறிவிக்காததாலும் மற்றவருக்குத் தொந்தரவு தரக்கூடாது என்பதற்காக, வல்லவரையர் சத்திரத்துத் திண்ணையில் உறங்கியதும், ஆழ்ந்த உறக்கத்தின் இடையே கனவு ஏற்பட்டதும், கனவில் தன் வாளைப் பற்றிய சிந்தனைகள் எழுந்ததும் இரவு அந்த நேரத்திலும் வல்லவரையருக்கு நாடகம் ஒன்று நடந்தது போலவே தோன்றின.

மெய்யாகவே அவர் வாள் காணாமல் போய் சிறிது நேரம் கழித்துக் கிடைத்ததும் நாடகம் போலவே தோன்றின. ஆனால், அந்த மர்ம மனிதன் உண்மைத் தோற்றத்தை வல்லவரையர் அறிந்தபோது வியப்புற்றார்.

''மதுரா! உனக்கு மாறுவேடம் மிகப் பொருத்தமாக இருக்கிறது. ஆனால், உன் விழிகளைப் பார்த்து எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. எங்கோ கேட்ட குரல் போலவே தோன்றியது. இந்த நள்ளிரவு வேளையில் பழுவூருக்கு எப்படி வந்தாய்? நீ வருவது மற்றவருக்குத் தெரியுமா?'' என்று வல்லவரையர் கேட்டார்.

''அதெல்லாம் ஒரு கதை போல் வல்லவரையரே! நான் பழுவூருக்கு வருவதை யாரும் அறிய மாட்டார்கள். பழுவூருக்கு வந்தபோது தங்களுடைய குதிரை மரத்தடியில் கட்டப்பட்டிருப்பதைக் கண்டேன். தங்களைத் தேடி அலைந்தபோது சத்திரத்தில் தாங்கள் உறங்குவதைக் கண்டேன்'' என்று மதுரன் கூறியபோது வல்லவரையர் குறுக்கிட்டு, ''என்னாலும் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. வாளை எடுத்து ஒளித்து வைத்து என்னைச்

சிறிது நேரம் திண்டாட வைத்து விட்டாயே! அது சரி. என் முழுப் பலம் கொண்ட மட்டும் என் கை முட்டியால் உன்னை நோக்கிக் குத்து விட்டேன். நீ மிக இலாகவமாக முகத்தைத் திருப்பியிரா விட்டால், ஐயோ... நினைக்கவே பயமாக இருக்கிறது'' என்றார் வல்லவரையர்.

''வல்லவரையரே! தங்கள் கரத்தின் வலுவையும், தாங்கள் இளம் வயதினரைப் போல் என்னைப் பிடிக்க ஓடி ஆடிப் பாய்ந்து வந்ததையும் பார்த்தால் தங்களுக்கு வயதாகி விட்டது என்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள்'' என்று கூறிவிட்டு, மிகவும் மெல்லிய குரலில் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே, ''வல்லவரையரே! நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா?'' என்றான்.

வல்லவரையருக்கா தெரியாது, மதுரன் கேட்கப் போவது?

''ஆமாம்; ஆமாம். இதிலென்ன ரகசியம்?'' என்றார், மெல்லிய முறுவலுடன்.

''என்னிடம் இதுவரையில் சொல்லவில்லையே?''

''சொல்வதற்கான நேரம் காலம் எதிர்பார்த்திருந்தேன்!''

''நீங்கள் மற்றொரு மனைவியை மணந்த செய்தியை என்னிடம் சொல்லப் பதினாறாண்டுகளாக ஒருநாள் கூடக் கிடைக்கவில்லையா?''

''நான் திருப்பிக் கேட்கிறேன்; பதினாறாண்டுகளாக ஒரு நாளாவது எங்கள் ஊருக்கு வர வேண்டும் என்று நீ நினைத்ததுண்டா?''

''நினைத்ததுண்டு. பிரம்மதேசம்... அழகான பெயர். பாலாற்றங் கரையில் உள்ள அந்த ஊரின் சிறப்பைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்களுக்குத் தெரியாதா, வல்லவரையரே! தஞ்சாவூரில் இப்பொழுதுதான் சேர்ந்தாற்போல சில நாள்கள் தங்கியிருக்கிறேன். இன்னும் சில நாள்களில் மீண்டும் கல்யாணபுரம் நோக்கிப் புறப்பட நேரலாம். நம்மைத் தாக்க சாளுக்கியர்கள் படை திரட்டுகிறார்களாம். அதற்குள் தங்களைச் சந்தித்து மனம் விட்டுப் பேச விரும்பினேன்'' என்றான் மதுரன்.

''மதுரா! நான் உன்னைச் சந்தித்துப் பேசத் தக்க நேரங்காலத்தை எதிர்பார்த்தேன். ஏதோ என் உள்ளுணர்வு கூறியது, பழுவூரில் உன்னைச் சந்திக்க முடியும் என்று. சந்தித்து விட்டேன். நானும் உன்னை ஒன்ற கேட்க விரும்பினேன். அதற்கு இப்பொழுதுதான் தக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.''



மதுரனும், வந்தியத்தேவனும் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தனர். பல முக்கிய விஷயங்கள் பேசப்பட்டன. அவற்றுள் ஒன்று பூங்கொடியைப் பற்றியது.

பூங்கொடியின் அழகிலும், அவளது நடனக் கலையிலும் மதுரன் மனத்தைப் பறி கொடுத்து விட்டான் என்பதை வல்லவரையர் அறிந்து கொண்டார். இளையபிராட்டியார் அதற்குக் குறுக்கே நிற்பதையும் அறிந்து கொண்டார்.

## 21. எனக்கு ஏனிந்த அலங்காரம்?

கடும் நோய்வாய்ப்பட்டிருந்த பழுவேட்டரையர் தன் படுக்கையில் இருந்து மெல்ல மெல்ல எழுந்து உட்காரப் பணியாளர்கள் இருவர் உதவினர். பிறகு அவர்களும் உடனே அங்கிருந்து சென்று விட்டனர். மிக முக்கியப் பேச்சு வார்த்தை அந்த இடத்தில் நடைபெறும்போது பணி செய்வோரை, எவ்வளவு நம்பிக்கை வாய்ந்தவராக இருந்தாலும் அங்கே இருக்க அனுமதிப்பதில்லை.

பழுவேட்டரையருடைய மாளிகை சிறிய அளவில் இருந்தாலும் கம்பீரமாகத் திகழ்ந்தது. மாளிகையின் மேல் மாடத்தின் நடுவே விசாலமான கூடத்தில் நான்குபுறமும் பெரும் பலகணிகள் திகழ, சந்தனத்தால் சித்திர வேலைப்பாட்டுடன் செய்யப்பட்ட மஞ்சத்தில் பழுவேட்டரையர் படுத்திருந்தார்.

வல்லவரையர் வந்தியத்தேவன் வந்திருக்கிறார் என்றும், நகரின் ஒருபுறத்தே உள்ள சத்திரத்தில் தங்கியிருப்பதாகவும் பழுவேட்டரையருக்குச் செய்தி கிடைத்தவுடன் உடனே தக்க மரியாதைகளுடன் அவரை அழைத்து வரக் கட்டளையிட்டார். அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் வல்லவரையரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு எழுந்தது.

வல்லவரையருடன், இராசராச சோழரின் திருக்குமாரர் மதுராந்தகனும் வந்திருப்பதாக அறிந்த பழுவேட்டரையருக்கு வியப்பு ஏற்பட்டது. பக்கவாத நோயினால் மிகவும் தொல்லைப் பட்டுக் கொண்டிருந்த அவருக்குச் சோழர் குலத்து மிக முக்கியமானவர்கள் தம்மைக் காண வந்திருக்கும் செய்தி புதுத்தெம்பை ஏற்படுத்தியது. பழுவேட்டரையர் மாளிகை பரபரப்புடன் காணப் பட்டது. மதுரனும் வல்லவரையரும் பழுவேட்டரையரைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். பகல் விருந்து ஏற்பாடாயிற்று.

பழுவேட்டரையரின் பெயர்த்தி கோதையைச் சுற்றிப் பல பெண்கள் சூழ்ந்து கொண்டு அவளுக்கு அலங்காரம் செய்விப்பதில் முனைந்தனர். நகைச்சுவையுடன் மெல்ல ஏதோ கூறினர். அதனால் எழுந்த சிரிப்பு அந்த இடத்தையே அதிர வைத்தது.

பழுவேட்டரையர் சேர மரபினர். அந்த மரபுக்கேற்ற மஞ்சள் நிற மேனியும், கம்பீரத் தோற்றமுமுடைய கோதை மிக விரைவில் தோழிகள் பேசிக் கொள்வதிலுள்ள உட்பொருளைப் புரிந்து கொண்டாள். அவர்கள் சிரிக்கும்போது அவளால் சிரிக்க முடியவில்லை. ஆனால், அவர்கள் ரகசியமாகப் பேசிச் சிரிப்பது அவளுக்கு எரிச்சலை அளித்தது.

''ஏய், பொன்னழகி! எது பேசினாலும் என் காது படப் பேசு. என்ன சிரிப்பு?'' என்று கோதை சீறினாள்.

பொன்னழகி மீண்டும் அருகேயிருந்தவளைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கொண்டு, ''இளவரசி செவிடானது எப்போது என்று தெரியவில்லை. மற்றொரு முறை அந்த இனிய பேச்சைக் கேட்க வேண்டும் என்று அவளுக்கு ஆசை. அதனால்தான் கோபிக்கிறாள்'' என்றாள். பிறகு, கோதையின் காதுகளில் படும்படி, ''இப்போதே நம்மைக் கவனிப்பது குறைந்து விட்டது. தஞ்சைக்குப் போய் விட்டால்... அவ்வளவுதான்'' என்றவுடன் அருகே இருந்தவள், ''பொன்னழகி! இன்றே இளவரசியைச் சோழ இளவரசர் அழைத்துச் சென்று விடப் போகிறாரா?'' என்று கேட்டாள்.

''அப்படித்தான் தோன்றுகிறது; சோழ இளவரசனுடன் அவருடைய அத்தான் வல்லவரையர் வந்தியத்தேவனும் வந்திருக்கிறார்.''

''பெண் கேட்கவா?''

''அப்படித்தான் தோன்றுகிறது.''



''அப்படியென்றால் கோதை நம்மை விட்டுப் பிரிந்து விடுவாள் என்று சொல்லு.''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

''இன்றே புறப்பட்டுப் போகிறாளா? திருமண வைபவங்கள் இல்லாமலா? இதென்ன காந்தர்வ விவாகமா?''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

கோதைக்கு எரிச்சலாக வந்தது. அவர்கள் இருவரும் தன்னை உட்கார வைத்து அலங்காரம் செய்வதாகப் பெயர் செய்து கொண்டு நையாண்டி செய்கிறார்கள் என்று அவள் புரிந்து கொண்டாள்.

கூந்தலை அலங்காரம் செய்யும் அவர்களிடம் சிக்கியிருந்த கோதையால் அவர்களிடமிருந்து விடுபட முடியவில்லை. திரும்பி அவர்களைப் பார்க்கவும் முடியவில்லை.

அவர்கள் என்ன சொல்கிறார்கள்? 'சோழ இளவரசர் வரப் போகிறார் என்று எனக்கு இதற்கு முன்பு தெரியாது. காலையில் எழுந்ததிலிருந்து தோழிகளும், பணிப்பெண்களும் என்னைச் சூழ்ந்து கொண்டு விட்டார்களே... என்ன காரணமாக இருக்கும்! இந்தப் பொன்னழகி எப்போதுமே குறும்புக்காரி. எனக்குத் திருமணம் பேசுகிறார்கள் என்பதை அறிந்ததிலிருந்து இப்படி ஏதாவது பேசி, எல்லாரும் கூடிச் சிரித்து மகிழ்வது வழக்கமாகி விட்டது' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்ட கோதை, பொன்னழகியின் பக்கம் திடீரென்று திரும்பி, ''என்னடி! ஏதேதோ தலையும் இல்லாமல் காலும் இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று அதட்டலுடன் கேட்டாள்.

கோதையின் கூந்தலை அழகாகக் கோபுரம் போல் எடுத்துச் செருகி மணிமாலையால் அலங்கரித்து முடிக்கும் தருணம், பொன்னழகியும் மற்றவர்களும் ஒருகணம் திகைத்தனர். கோதையைப் பார்த்து அவர்கள் மீண்டும் நகைத்தனர்.

''பழுவூர் நாட்டு இளவரசி அவர்களே! தங்களுக்குக் கோபம் வரும்போது மிக அழகாக இருப்பீர்கள் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதுவரை அதைக் கண்டறியும் வாய்ப்பு எனக்கு ஏற்படவில்லை. ஆகா! கோபம் ஏற்படும்போது சிவக்கும் தங்கள் கன்னங்கள் காலைத் தாமரையை நினைவுபடுத்துகின்றன. இன்னும் அதிகமானால் தங்கள் இதழ்களுக்கும் கன்னங்களுக்கும் வித்தியாசம்

தெரியாதோ என்ற நிலைதான்!'' என்று பொன்னழகி கூறியபோது, அங்கே நகைப்பொலி எழுந்து எங்கும் பரவியது. கோதையும் சிரித்து விட்டாள்.

''உங்கள் பாட்டனாருக்கு இப்பொழுது உடல்நலம் நன்றாக இருந்தால் பெயர்த்திக்கு நாங்கள் செய்திருக்கும் அலங்காரம் அவருக்குப் பிடித்திருக்காது. இளையபிராட்டியார் குந்தவ்வை தேவியாரின் கூந்தல் அலங்காரத்தையும் மிஞ்ச வேண்டும் என்ற முறையில் செய்ததற்குக் காரணம் இருக்கிறது'' என்றபோது மற்றொரு பெண் குறுக்கிட்டு, ''இன்னொரு காரணமும் இருக்கிறது'' என்றாள்.

''என்ன காரணம்?'' கோதை புருவத்தாலேயே கேள்வி கேட்டாள்.

''வல்லவரையர் வந்திருக்கிறாரே!''

''வல்லவரையருக்கும் கோதையின் கூந்தல் அலங்காரத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''வல்லவரையர் முதன்முதலில் இளையபிராட்டியைச் சந்தித்த போது இளையபிராட்டியாரின் கூந்தல் அலங்காரத்தைக் கண்டுதான் மயங்கினாராம். இப்பொழுது...''

''இப்பொழுது சோழ இளவரசர் கோதையின் முடி அலங்காரத்தைக் கண்டு சொக்கிவிடுவார் என்றுதானே சொல்கிறாய்?''

''இல்லை... இல்லை... இளவரசர் மதுரனுக்குக் கோதையை வல்லவரையர் சிபாரிசு செய்ய இந்த அலங்காரம் மிகவும் உதவியாக இருக்கும். அதனால்தான் கோதை கோபம் கொண்டாலும் அவள் பாட்டனாருக்குப் பிடிக்காதிருந்தாலும் நாங்கள் கவலைப்படாமல் கோதைக்கு அழகுக்கு அழகு செய்தோம்.''

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. கோதை சிந்தித்தாள். சோழ இளவரசருக்குத் தன்னை மணம் முடிக்கப் பாட்டனார் முடிவு செய்திருக்கிறார். இளவரசர் தன்னைக் காணும்போது அவர் மனத்தில் இடம்பெறும் வகையில், தான் விளங்க வேண்டும் என்பதற்காகத் தோழிகளும் பணிப்பெண்களும் மிகுந்த கவனத்துடன் அலங்காரம் செய்கிறார்கள் என்பதை அறிந்து தன் கோபத்தை மறந்து நாணமுற்றவளாய், ''எனக்கு அலங்காரம் செய்து பிறகு என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள். மீண்டும் அங்கே சிரிப்பொலி.

''அலங்காரம் செய்து தங்களைச் சபை மண்டபத்தில் பதுமை போல் நிறுத்துவோம்'' என்றபோது மீண்டும் சிரிப்பொலி.



அங்கிருந்தவர்களுள் சற்றே வயது முதிர்ந்த பெண் சொன்னாள்: ''கோதை! தந்தையற்ற உனக்குத் தந்தை போல் பரிவும் பாசமும் செலுத்திவரும் பாட்டனாரின் கனவு உன்னைச் சோழ நாட்டு இளவரசியாக்க வேண்டும் என்பதே. இதற்கு முன்பும் பழுவேட்டரையர் குலத்தினர் சோழ நாட்டு இளவரசிகளாகத் திகழ்ந்திருக்கிறார்கள். அவர்களின் வயிற்றுதிக்கும் திருமகனுக்குச் சோழ அரசராகும் பாக்கியம் கிடைக்கவில்லை. இராசராச சோழரின் ஒரே மகன் மதுரனுக்கு இளவரசர் பட்டம் சூட்டும் விழா ஏற்பாடுகள் மிக வேகமாக நடைபெறுகின்றன. அதுசமயம் சோழ நாட்டு இளவரசிப் பட்டம் பழுவேட்டரையர் குலத்தவருக்குக் கிடைக்க வேண்டும் என்பது பாட்டனாரின் ஆசை. தொண்ணூறு வயதுக்கும் மேற்பட்ட வயதினரான அவர் தெளிவாகச் சிந்திக்கிறார். பழுவூரார் குலம் சோழ நாட்டிலேயே முதன்மையுற்று என்றும் நின்று நிலவ வேண்டும் என்பது அவரது எண்ணம். அதைப் பற்றியே நினைக்கிறார்'' என்றாள்.

அறிவும் அனுபவமும் ஆற்றலும் மிகுந்தவர் என்று பழுவூர் மாளிகையில் கருதப்படும் அந்தப் பெண் நல்லாள் கூறியதைக் கோதை மிகக் கவனமாகக் கேட்டாள்.

'மதுரனுக்குச் சோழ நாட்டின் இளவரசர் பட்டம் மிக விரைவில் சூட்டப் போகிறார்கள். பட்டம் சூட்டும் விழாவில் நானும் மதுரனுடன் சரிநிகராக அமரும் வாய்ப்புக் கிடைக்கும். சோழ நாட்டு இளவரசி என்று என்னை எல்லாரும் போற்றிப் புகழ்வார்கள். பிறகு... சோழ நாட்டின் அரியணையில் மதுரன் அமருவார். அவரருகே சோழ அரசியாக நான் அமருவேன். புலிக்கொடி பறக்க... பல நாட்டு மன்னர்கள்... ஆகா!' நினைக்கும்போதே கோதைக்குச் சொல்ல முடியாத மதிப்பும் கர்வமும் தலைக்கேறின.

அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை மற்றவர்கள் கவனித்தனர்.

''இளவரசரை நான் நேருக்கு நேர் சந்திக்க வேண்டுமா?'' கோதை கேட்டாள்.

''அப்படியெல்லாம் ஒன்றும் ஏற்பாடு இல்லை. உன்னை விருந்தின்போது பாட்டனார் அழைப்பார். விருந்தில் நீ பாலமுதம் பரிமாற நேரலாம். இளவரசருக்கு அது மிகப் பிடிக்குமாம். அந்தச் சமயம் நீ அவரைப் பார்க்கலாம். அவர் உன்னைப் பார்ப்பார். அப்புறம் நீ எங்களை எல்லாம் ஏன் பார்க்கப் போகிறாய்?''

அருகில் இருந்தவர்கள் சிரித்தனர்.

**வ**ல்லவரையரும் மதுரனும் பழுவேட்டரையரைச் சந்தித்துப் பேசினர். சிறு குன்றொன்று சுருண்டு படுத்துக் கிடப்பது போன்ற தோற்றத்தைக் கண்டு வல்லவரையர் மனம் கலங்கினார்.

பழுவேட்டரையர் என்றால் எதிரி நாட்டவர்களுக்குச் சிம்ம சொப்பனம். சோழ நாட்டிலுள்ளவர்களுக்குப் பயம் கலந்த மரியாதை. சோழர் குல நலனுக்காக, பழுவேட்டரையர் பரம்பரை ஆற்றிய பணி கொஞ்சமா?

மதுரனை மட்டும் தனியே சந்தித்துப் பேச வேண்டும் என்ற பரபரப்புடனிருந்த பழுவேட்டரையருக்கு, உடன் வந்தியத்தேவன் இருப்பது பிடிக்கவில்லை. பழுவேட்டரையர் மிக முக்கியமான முடிவு எடுக்க விரும்பினார்.

அவருக்கு அப்போதிருந்த உடல்நிலையில் அதிக நேரம் விவாதிப்பதோ, பேசுவதோ இயலாது.

சிறிது நேரம் மௌனமாகச் சென்றது. கடந்து போன ஆண்டு களில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி வந்தியத்தேவனே பேச்சைத் தொடங்கினார்.

முதலில் காஞ்சிமா நகருக்கு அருகிலுள்ள பிரம்மதேசத்தில் தான் புதிய மாளிகை கட்டியிருப்பதைப் பற்றி வல்லவரையர் வர்ணித் தார்.

பழுவேட்டரையர் கேட்டுக் கொண்டிருந்து விட்டுப் பிறகு மெல்லக் கூறினார்: ''உனக்கு எதற்கு தனி மாளிகை? தஞ்சாபுரியில் உள்ள மாளிகையும் உன் மாளிகைதானே!''

இந்தச் சொற்களைக் கேட்டு வந்தியத்தேவன் திடுக்கிட்டார். பழுவேட்டரையர் சொற்களில் குத்தலிருப்பதை உணர்ந்தார்.

இளையபிராட்டியாரை மணப்பதற்கு முன்பு - தஞ்சைக்குத் தான் வந்ததும், சுந்தரசோழர் அபிமானத்தைப் பெற்றதும், அருண்மொழி வர்மனின் அன்புக்குப் பாத்திரமானதும், இளையபிராட்டியின் இரு விழிகளுக்கு அடிமையானதும் அவர் எதிரே நாடகம்போல் தோன்றின.

தன் மீது பயங்கரக் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டதும், தான் நிர பராதி என்று விடுவிக்கப்பட்டதும் ஏதோ கனவு போல் தோன்றின.



பிறகு... அருண்மொழி, இராசராசன் என்ற பட்டப்பெயருடன் அரியணை ஏறியதும், அவருக்கு உறுதுணையாகப் பல போர்க் களங்களில் கலந்து கொண்டு வெற்றியைக் குவித்ததும்...

இராசராசனின் தூதுவராகச் சேரநாடு சென்றதும், மேலைச் சாளுக்கியர்களுடன் கடும்போர் புரிந்ததும், எப்போதும் போர் போர் என்று நான்கு திக்குகளிலும் சென்று பல ஆண்டுகள் பாசறை களிலேயே கழித்ததும் -

இளையபிராட்டியாரோடு சேர்ந்து தொடர்ந்து பத்து நாள்கள் கூட தஞ்சை மாளிகையில் வாழாத - வாழ நேரம் காலமில்லாத - தன்னைப் பார்த்துத் 'தஞ்சை மாளிகை இருக்கும்போது, பிரம்மதேசத்தில் ஏன் மற்றொரு மாளிகை' என்று கேட்கிறார், இந்தப் பாட்டன் பழு வேட்டரையர்!

வயது மிக முதிர்ந்தும், உடல் வலிமை குறைந்தும் இன்னும் பரம்பரையோடு பிறந்த கொடுமைத்தனம் போகாததைப் பற்றி நினைத்த வல்லவரையர் பழுவேட்டரையரிடம் கடுமையாகப் பேச நினைத்தார். ஆனால், அதற்கு மாறாகப் பழுவேட்டரையர் மேலும் பொறாமையை வளர்க்க விரும்பினார்.

''பாட்டா! இந்த வயதிலும் தங்களுக்கு நினைவாற்றல் மிக நன்றாக இருக்கிறது. தஞ்சையில் எனக்கென்று ஒரு மாளிகை இருப்பது உண்மையே! இராசராச சோழ தேவர் தன்னை வளர்த்து ஆளாக்கிய தன் சகோதரி குந்தவ்வைக்கு அழகிய மாளிகையைக் கட்டிப் பிறந்த வீட்டுப் பரிசாக அளித்தார். அந்த விவரம் தங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. பெரிய பழுவேட்டரையருக்கு முழு விவரங்களும் நன்கு தெரியும். பழுவேட்டரையரின் சகோதரியை மணந்து, பிறகு பழுவூர் உரிமையை ஏற்றதால் அதற்கு முன்பு நடந்தவை தங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. மேலும் பல ஆண்டுகளாகவே தாங்கள் பழுவூரை விட்டு வெளியே வருவதில்லை. உடல் தளர்ந்து விட்டது. மனைவியின் வீட்டில் அமைதியாகக் காலங்கழிக்க எனக்கு விருப்பமில்லை. எனக்கென்று ஒரு நாடு கிடைத்தது. சோழ குடும்பத்துக்கு நான் ஆற்றிய தொண்டிற்காக அவர்கள் எனக்கு அளித்த பரிசு!''

''எனக்கு மட்டும் என்ன? பழுவூர்க் குடும்பத்துக்குச் சோழ நாடு மிகப் பெரிய பரிசுகளை, விலை மதிப்பற்ற பரிசுகளை அளித்திருக் கிறது. இராசராசரின் அந்தப்புரத்தில் ஒருத்தியாகத் திகழும் வாய்ப்பு

யாருக்குக் கிடைக்கும்? பஞ்சவன் மாதேவி என்ற சிறப்புப் பெயர் பெற்று உத்தமசோழர் அன்பையும், மற்றொருத்தி இராசராசர் அன்பையும் பெற்றுத் திகழும் பாக்கியம் வேறு எந்தக் குலப் பெண்ணுக்குக் கிடைக்கும்?''

''ஆனால் நீங்கள் பொறாமைப்படுவீர்கள் என்று எனக்கு நிச்சயம் தெரியும், இந்த வல்லவரையருக்கு இரட்டைப் பரிசு கிடைத்ததே என்று. சோழ நாட்டிலே அதிகம் பயனடைந்தவன் நான் என்று சொல்வீர்கள். எனக்குத் தகுதி உண்டு. இன்னும் கூட அதிகம் பெற எனக்கு உரிமை உண்டு. பிரம்மதேச மாளிகையின் ஒவ்வொரு செங்கல்லும் கற்றூணும் என் பெருமையைப் பேசும். சோழ நாட்டிற்கு நான் செய்துள்ள பணிகளைக் கூறும். வல்லவரையர் குடும்பத்திற்குச் சோழ அரசக் குடும்பத்தவருடன் மணத் தொடர்பு கொள்ளும் அளவுக்குத் தகுதி உண்டு...''

வல்லவரையர் கூறிக் கொண்டே போகும்போது பழுவேட்டரையர் பலமாகச் சிரித்தார்.

''ஓ! வல்லவரையரே! உன் அந்தஸ்துக்கு உனக்குக் கிடைத்திருக்கும் லாபம் மிக அதிகமே. எங்கள் குடும்பத்தவர் எதிரே நிற்பதற்கும் கூட சமதையில்லாத உனக்கு சிற்றரசர் என்ற அந்தஸ்து! ஒரு நாடு, மாளிகை... இதற்கு மேலும் நீ சோழ நாட்டுடன் மணத் தொடர்பு கொள்ள ஆசைப்படுகிறாய்! நியாயமா? சோழ மகளை அபகரித்து, மயக்கிக் காதலித்து மணமும் புரிந்து கொண்டாய். அதை விட திருமணப் பரிசு வேறு உனக்கு வேண்டுமா?'' என்றார். அவருக்கு மூச்சுத் திணறியது.

''ஆமாம்; இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறேன். சோழ நாட்டின் சம்பந்தியாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நியாயமான ஆசை!''

''சோழ அரசர் குலத்துடன் சம்பந்தமா? சம்பந்தியா? வம்சப் பெயரைச் சொல்ல வக்கற்ற உனக்குப் பேராசை மிக அதிகம்!'' - பழுவேட்டரையர் கோபத்தை அடக்கிக் கொண்டார்.

''ஏன்... என் வம்சம் விளங்க... வம்சத்தைப் பெருக்க எனக்கு வாரிசு இல்லை என்று யார் சொன்னார்கள்?'' வல்லவரையர் குரலில் சற்றுக் கடுமை இருந்தது.



பழுவேட்டரையர் பலமாகச் சிரித்து, ''குந்தவ்வைக்கு இந்த வயதுக்குப் பிறகும் மகப்பேறு ஏற்படும் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்றார்.

''பாட்டா! நீங்கள் பழுவூரிலேயே படுத்துக் கிடப்பவர். என்னைப் பற்றி, என் பெருமையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர். எனது நாட்டுத் தலைநகரான பிரம்மதேச மாளிகையில் சோழர் பரம்பரையின் பெயரைச் சொல்ல அழகான பெண் வளர்கிறாள்'' என்று அமைதியான குரலில் கூறினார் வல்லவரையர்.

''ஓ! பிரம்மதேச மாளிகையில் சோழ பரம்பரை காப்பாற்றப் படுகிறதா?'' பழுவேட்டரையர் எழுந்து உட்கார முயன்று பேசினார்.

''ஆமாம்; எனது அருமை மகள் மாளிகையில் வளர்கிறாள். சோழர் குலத்துடன் ஒன்று சேரும் துடிப்புடன் வளர்கிறாள். இதோ! இளவரசர் மதுராந்தகருக்குத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ள வளர்கிறாள். என் மகள் வளர்கிறாள். ஆம்; சோழ நாட்டின் இளவரசியாகப் போகும் மதுரனுக்காகவே வளர்கிறாள்!'' என்று வந்தியத்தேவன், தம் குரலில் அழுத்தமும் பெருமையும் பொங்கக் கூறினார்.

''மதுரனுக்காகவா? வல்லவரையரே! சோழ இளவரசனுக்காக உன் மகள் வளர்வதாக என்ன துணிவுடன் கூறுகிறாய்? பரம்பரையாக நீ அரச வம்சத்தவனல்லன். ஒரு நாடோடி. ஓடி வந்தவன். குருட்டு அதிர்ஷ்டத்தால் இந்த நிலைக்கு வந்தவன். குந்தவ்வையை மணப்பதற்கு முன்பே உனக்கு மணமாகி விட்டதா? உனக்கு ஒரு மகள் இருக்கிறாளா? சோழர் குலத்தையே ஏமாற்றி விட்டாயே! மதுரனை உன் மருமகனாக்கிக் கொள்ளக் கனவு காணாதே. அதனால்தான் சோழ இளவரசனுடன் பேச இவ்வளவு தொலைவு வந்தாயா? ஒரு நாளும் உன் ஆசை ஈடேறாது'' என்று கூவினார்.

அவர் பிறகு மிக்க களைப்படைந்து படுக்கையில் சாய்ந்தார்.

அவருக்கு நினைவு தப்பியது.

# 22. என் மகளல்லள்; நம் மகள்

சோழர் குலத்துக்குப் பேருதவி செய்து உறுதுணையாக இருந்து வந்த பழுவேட்டரையர் மறைந்து விட்டார். தொண்ணூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த அந்த மாவீரர் இனி விழித்தெழாத ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்து விட்டார். சோழ நாட்டின் புலிக் கொடி நான்கு திசைகளிலும் பறப்பதற்குப் பக்கபலமாக இருந்த பழுவூர்க் குலத்தின் கடைசி மாவீரர் கடைசி கடைசியாக உணர்ச்சி வயப்பட்டுப் பேசியபடியே மூச்சை அடக்கிக் கொண்டார்.

பழுவூர் மாளிகையில் சோழ நாட்டுக் குறுநில மன்னர்கள் அனைவரும் கூடிவிட்டனர். தஞ்சையிலிருந்து மாமன்னர் இராச ராசனும் வந்திருந்தார். ஈமச் சடங்குகளைப் பழுவேட்டரையரின் சகோதரி வயிற்றுப் பெயரன் செய்தார்.

கோதைக்கு ஏற்பட்ட துயரத்தைத் தேற்றுவது மிகக் கடினமாக இருந்தது. இளையபிராட்டியார் குந்தவ்வை தேவியார் அவள் அருகே அமர்ந்து ஒரு தாய்போல அவளை அணைத்துத் தேற்றினார்.

கோதை தன் அகன்ற விழிகளால் குந்தவ்வையை நோக்கினாள். கண்ணீரை மெல்லத் துடைத்துக் கொண்டாள். இதுவரையில் அவள் குந்தவ்வையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாள். மிக அருகே இன்று இளையபிராட்டியைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்ததால் தன் துயரத்தையும் மறந்தாள்.

துயரச் சாயல் மெல்ல மெல்ல அவளிடமிருந்து குறைந்து வருவதைக் கண்ட குந்தவ்வை, கலைந்திருந்த கோதையின் கூந்தலை மெல்லக் கோதிச் சரி செய்து, கன்னத்தில் வழிந்திருந்த கண்ணீர்ச் சுவடுகளைத் துடைத்து அன்புடன் ''கோதை!'' என்று அழைத்தாள்.

தாயற்ற பெண்ணான கோதைக்கு அன்னத்தின் தூவியைப் போன்ற குந்தவ்வையின் அணைப்பு மேனியில் சிலிர்ப்பை அளித்தது. யுகயுமாகப் பழகியவளைப் போல் குந்தவ்வையின் தோள்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.



குந்தவ்வையின் மணிவயிற்றில் ஒரு குழந்தை கூட உதிக்கவில்லை என்றாலும் மழலை இன்பத்தை அவள் அனுபவித்திருக்கிறாள்.

மதுரன் பிறக்கும்போதே தாயை இழந்தான். தந்தைக்குத் தந்தை யாகவும், தாய்க்குத் தாயாகவுமிருந்து அவனைச் சீராட்டி வளர்த்திருக் கிறாள்.

பழுவேட்டரையரின் மகள், சகோதரர் மகள்களை, சகோதரியின் புதல்வர்களை அவள் அறிவாள். அந்தப்புரத்தில் அரசியாகவும் இளைய ராணியாகவும் வாழ்ந்தவர்கள். இப்பொழுது பழுவேட்டரையரின் சகோதரியின் பெயர்த்தி கோதை அவளிடம் அன்புக்காக ஏங்கு கிறாள்.

''கோதை! உலகத்தில் இறப்பதும் பிறப்பதும் நாள்தோறும் நடப்பவைதான். ஒரு குழந்தை பிறக்கிறது. அதை நாம் செல்வச் சிறப்புடன் வளர்த்து மகிழ்கிறோம். நம்மை விட்டுப் பிரிந்து விட்டால் பெரும் துயரமடைகிறோம். திரும்பி வராமலே பிரிந்து விட்டாலோ நமக்கு ஏற்படும் அதிர்ச்சிக்கு அளவில்லை. அத்துடன் நமக்கு எல்லாமே போய்விட்டது போன்ற பிரமை. அப்படித்தான் எனக்கும் நேர்ந்தது. உனக்கு என் சகோதரர் ஆதித்த கரிகாலனைத் தெரியுமா?'' என்று கேட்டுக் கோதையின் முகத்தை மெல்ல நிமிர்த்தினாள்.

ஏக்கத்துடன் பார்த்த கோதை 'தெரியாது' என்று விடை கூறுவது விழிகளில் தெரிந்தது.

''உனக்கு எப்படியம்மா தெரியும்? பதினெட்டு வயது கூட நிறையாத பாவை நீ. அந்தத் துயரச் சம்பவம் நடைபெற்றுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நீ பிறப்பதற்கு முன்பு நடந்த சம்பவம். என் சகோதரனிடம் நான் மிகுந்த அன்பு கொண்டிருந்தேன். அவரைக் கொடியவர்கள் கொலை செய்து விட்டபோது நான் அடைந்த துன்பம் சொல்லி முடியுமா? பிறகு என் தந்தையை இழந்தேன். தாயை இழந்தேன். அவர்களைப் பிரியாமல் இருக்க முடியுமா? நாம் மிகப் பாசம் கொள்ளும் ஒவ்வொருவரும் நம்மை விட்டுப் பிரியாமல் இந்த உலகில் இருந்தால் இந்தப் பூமி தாங்குமா? நான் மனத்தை மிகவும் தேற்றிக் கொண்டேன் என்று கூடச் சொல்லலாம். இறந்து போகிறவர்களைப் பற்றி வருத்தப்படுகிறோமே... இருப்பவர் களால் நமக்கு ஏற்படும் தொல்லைகளால் நாம் அடையும் மன வருத்தத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று குந்தவ்வை

கேட்டவுடன் கோதைக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. அவள் துயரம் மெல்ல மெல்லக் கரைந்தது.

''கோதை! மறுமொழி கூறாமல் மௌனமாயிருக்கிறாயே?'' என்று குந்தவ்வை கேட்டாள்.

''எனக்குச் சொல்லத் தெரியவில்லை. எனக்கு வருத்தமே ஏற்படாமல் என் பாட்டனார் இதுவரையில் துணையாக இருந்து விட்டார். இப்பொழுதுதான் எனக்கு விழிகளில் நீர் சுரக்கிறது. ஒரு விதத் தனிமைப் பயம் இப்பொழுதுதான் தோன்றியிருக்கிறது. அதனால், நம்முடன் இருப்பவர்களால் ஏற்படும் துயரத்தைப் பற்றி என்னால் கற்பனை செய்து பார்க்கவும் தோன்றவில்லை!'' என்று கூறும்போது அவள் இதயத்திலிருந்து ஒரு பகுதிச் சுமை குறைந்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

குந்தவ்வை மெல்லச் சிரித்து, அவள் கன்னத்தை மென்மையாகத் தட்டி, ''உனக்கும் வேண்டியவர் என்று ஒருவர் ஏற்படுவார். அவரைப் பிரியும்போது உன் விழிகளில் துயர மணிகள் துளிர்க்கும். பிரிவு என்றால் - சில நாள்கள் பிரிவைச் சொல்கிறேன். அதைக் கூட உன்னால் தாங்க முடியாது போகலாம்'' என்று கூறும்போது அருகே இருந்தவர்கள் வாயை மூடிக் கொண்டு ஒலி மட்டும் கேட்கும் வண்ணம் சிரித்தனர்.

கோதை திரும்பிப் பார்த்தாள். அங்கே மூன்று பேர் நின்றிருந்தனர். அந்த முதிய பருவத்திலும் கம்பீரமாக, இராசராசன் பொலிவுடன் நின்று கொண்டிருந்தார். அவரருகே வந்தியத்தேவன் இருந்தார். இருவருக்கும் பின்னால் மதுரன் முகம் தெரிந்தது.

''கோதையை என்ன சொல்லிப் பயமுறுத்துகிறீர்கள்?'' என்று குந்தவ்வையைக் கேட்டவாறு இராசராசன் அருகே உள்ள இருக்கையில் அமர்ந்தார்.

குந்தவ்வை அனைவரையும் ஒரு தடவை விழிகளால் அளந்து, இதழ்களில் குறும்புப் புன்னகை நெளிய, ''பழுவேட்டரையர் பரம்பரையில் வந்த கோதையைப் பயமுறுத்த ஒருவராலும் முடியாது. பாட்டனாரின் பிரிவால் ஏற்பட்ட துக்கத்தினின்று அவளைத் தேற்ற முயல்கிறேன்'' என்றாள். பிறகு, ''சாவினால் மட்டும்தானா இதயத்தில் பெருவலி ஏற்படுகிறது? மற்றும் எவ்வளவோ ஏமாற்றங்கள்; தோல்விகள். பெண்ணாகப் பிறந்து விட்டால் இவற்றையெல்லாம் தாங்கத்தான் வேண்டும். ஓர் ஏழைப் பெண்ணிலிருந்து அரச



குடும்பத்து மகளிர் வரை இதயத்தைப் புண்ணாக்குவதில் ஆண் குலத்தவருக்குப் பெரும் பங்கிருக்கிறது. அந்த வலியைத் தாங்கிக் கொள்ளும் வலிமை வேண்டும். அதைத்தான் நான் கோதையிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

தன் தமக்கையாரின் பேச்சில் யாரையோ மறைமுகமாகக் குறை கூறும் தன்மை இருப்பதைக் கண்டார் சோழ மாமன்னர். அவர் எதிர் பார்த்தபடியே வந்தியத்தேவனிடமிருந்து அதற்கு மறுமொழி கிடைத்தது. வல்லவரையர் கோதையைப் பார்த்துப் பேசுவது போல், ''கோதை! உன் மனத்துகந்தவரை மணந்து அவரை உன் விருப்பப்படி நடக்குமாறு வற்புறுத்துவாய், அப்படித்தானே?'' என்று கேட்டார்.

வல்லவரையருடைய இந்தக் கேள்வியை இராசராசனோ, அவர் குமாரர் மதுரனோ எதிர்பார்க்கவில்லை. கோதை நிமிர்ந்து பார்த்தாள். மறுமொழி கூறலாமா, வேண்டாமா என்று சிறிது சிந்தித்தாள்.

''மனத்துக்குகந்தவரை மணந்தால் என் வற்புறுத்தலுக்கு அங்கே இடமில்லை'' என்று கூறியவுடன், 'ஆஹா' என்று அங்கிருந்தவர்கள் அனைவரும் குரல் கொடுத்து அவளைப் பாராட்டினர்.

வந்தியத்தேவன் ஏதோ கூற வாயெடுத்தார். பெரும் விவாதத்தில் அவர் இறங்கிவிடப் போகிறார் என்ற கவலையில் இராசராசன் குறுக்கிட்டு, ''உன்னை மணந்தவுடனே உன் மணவாளன் போர்க்களத்திற்குப் புறப்படுவதாகக் கூறுகிறானென்றால் நீ அதற்குச் சம்மதிப்பாயா?'' என்று கேட்டார்.

''போர்க்களத்திற்குச் செல்லும் வீரரை மகிழ்வுடன் வழியனுப்புவதுதானே அரச குல மகளிருக்கு அழகு? வீரத் திலகமிட்டு அவரை வழியனுப்புவேன்'' என்று பளீரென்று மறுமொழி கூறியவுடன் இராசராசன் முகத்தில் தனிப்பொலிவு ஏற்பட்டது.

அவர் எதற்காக அவ்வாறு கேட்டார் என்பது சிறிது நேரத்தில் புலப்பட்டது. சோழ மாமன்னர் மற்றும் வல்லவரையர் எதிரே அமர்ந்து பேசுவது சரியில்லை என்று தோழி பொன்னழகி குறிப்பால் தெரிவிக்க, கோதை அந்தப்புரத்துக்குச் சென்று விட்டாள். வல்லவரையர் அரசரை நோக்கிக் கேட்டார்:

''தாங்கள் ஏதோ ஒரு திட்டத்தை மனத்தில் வைத்துக் கொண்டு தான் கோதையிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். தங்கள்

உள்ளக் கிடக்கையை என்னிடம் சொல்வதென்றால் சொல் லுங்கள்.''

இராசராசன் கடகடவென்று நகைத்தார். ''வல்லவரையரே! தங்களிடம் சொல்லாமலா? தங்களுக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை. மதுரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட நாள் பார்க்கச் சோதிடர்களிடம் சொல்லி விட்டேன். மதுரன் இளவரசுப் பட்டம் சூடி அரியணை ஏறும் நாளன்று அவனுடன் சரிசமமாக அமர்வதற்கேற்ற இளவரசியையும் தேர்ந்தெடுத்து விட்டேன். திருமணத்தை விரைவில் நடத்த வேண்டும். இளவரசர் பதவியை ஏற்றவுடன் மதுரன் வடக்கு நோக்கிப் படைகளுடன் புறப்பட வேண்டும். இந்தச் செய்தி - திட்டம் - தங்களுக்குத் தெரிந்திருக்கும் என எண்ணுகிறேன்'' என்றார்.

வல்லவரையர், தமக்கேற்பட்ட வியப்பை வெளியே புலப் படுத்திக் கொள்ளவில்லை.

''மதுரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறீர்கள் என்பதறிய மிக மகிழ்ச்சி. நாள் குறித்தாகிவிட்டதா? சோழ நாட்டின் இளவரசி யாகும் பேறு பெற்றவள் யாரோ?'' என்று வல்லவரையர் கேட்டார்.

''இளையபிராட்டியின் ஆலோசனையின் பேரில் நான் மிகவும் சிந்தித்துப் பழுவேட்டரையர் குலத்தில் வந்த கோதை தேவியை என் மருமகளாக்கிக் கொள்ள முடிவு செய்துள்ளேன். அமரரான இரு பழுவேட்டரையர்களுக்கும் என் சகோதரியிடம் சற்று மனத் தாங்கல் உண்டு. அந்த மனத் தாங்கல் இப்பொழுது அமரரான பழுவேட்டரை யரும் தெரிந்து வைத்திருந்தார். அவர் ஜீவியவந்தராக இருக்கும் போதே அவரைச் சந்திக்க அக்கையார் விரும்பினார்கள். மதுரனும், நீங்களும் பாக்கியசாலிகள். அவரது கடைசி மூச்சின்போது அவர் அருகே இருந்து விட்டீர்கள். மதுரனையும், வல்லவரையரையும் பார்த்ததில் அவர் மிக மகிழ்ச்சியடைந்திருப்பார். அவர் ஆத்மா சாந்தி யடைந்திருக்கும்.''

இராசராசன் கூறியது கேட்டு வல்லவரையர் வந்தியத்தேவன் உள்ளத்தில் ஆத்திரம் பொங்கியது. ஆனால், அதைப் புலப்படுத்திக் கொள்ளவில்லை. மதுரனை ஒரு தடவை நோக்கினார்.

பழுவேட்டரையர் இறக்குமுன்பு கூறிய வார்த்தைகளின் ஒலி கூட அடங்கியிருக்காது. தம்மைப் பற்றி மிகக் கடுமையான சொற்களால் விமர்சித்ததும், சோழ நாட்டிற்குத் தாம் ஆற்றிய பணிகளைக் குறை



கூறியதும் வந்தியத்தேவன் நெஞ்சில் அழிக்க முடியாதபடி பதிந்து விட்டன. எவ்வளவு நாள்களாக பழுவேட்டரையர் தம் உள்ளத்தில் அந்தக் கடுமையான சொற்களை அடக்கி வைத்திருந்தாரோ! பழுவேட்டரையர் கனல் கக்கும் சொற்களை உதித்தபோது மதுரனும் கேட்டுக் கொண்டிருந்ததை வல்லவரையர் அறிவார்.

பழுவூர் மாளிகையில் நடந்தவற்றை இராசராசனிடம் சொல்ல வல்லவரையர் விரும்பவில்லை. இராசராசன் பழுவேட்டரையர் குலத்தினின்று மீண்டும் பெண் எடுத்துச் சம்பந்தம் செய்து கொள்ளப் போகிறார். இந்தச் சமயத்தில் நாம் எது சொன்னாலும் அவர் மனத்தில் பதியாது. எடுபடாது.

வந்தியத்தேவன் சிறிது நேரம் மௌனமாகச் சிந்தித்தார். பிறகு ஓர் உறுதியான முடிவிற்கு வந்து விட்டார். பழுவேட்டரையர் குலத்துடன் மதுரனுக்குச் சம்பந்தம் ஏற்படுத்துவதை அவர் விரும்ப வில்லை. அதனால் முகத்தில் கடுமையை வரவழைத்துக் கொண்டு, ''சோழர் குல மாமன்னரே! பழுவேட்டரையருடைய பெயர்த்தியை மதுரனுக்கு மணம் புரிவிப்பதில் எனக்கு எள்ளளவுக்கூடச் சம்மத மில்லை'' என்றார்.

வல்லவரையர் இவ்வாறு கூறுவார் என்று இராசராசன் எதிர் பார்க்கவில்லை.

வல்லவரையர் கூறியதைக் கேட்டு இராசராச சோழருக்குச் சிரிப்பதா, சீறுவதா என்று தெரியவில்லை. பழுவேட்டரையர் பெயர்த்தியைத் தன் மகன் மதுரனுக்கு மணம் முடிக்க உறுதி செய்ததற்கு இப்படி இருமுனை எதிர்ப்பு வரும் என்று அவர் எதிர் பார்க்கவில்லை.

இளையபிராட்டிக்கும், வல்லவரையருக்கும் கடுமையான கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். பழுவூரில் வைத்து இவற்றை விவாதிக்க அவர் விரும்பவில்லை.

வல்லவரையரின் கொள்கையை மதுரனும் ஆதரிப்பதை அறிந்த இராசராசர் தஞ்சைக்குச் சென்று அனைவரையும் சமாதானப்படுத்த லாம் என்று தஞ்சைக்குப் புறப்பட ஆயத்தமானார்.

''நான் பிரம்மதேசம் செல்கிறேன். தஞ்சைக்கு வரவில்லை'' என்றார் வல்லவரையர். இராசராசனின் சகோதரியின் கணவர்; அத்தான் முறை ஒருபுறம்; சோழ நாட்டின் குறுநில மன்னர் என்ற

தகுதி ஒருபுறம்; அவற்றுக்கும் மேலாக வல்லவரையரும் இராசராசனும் உயிர் நண்பர்களாக இளமையில் பழகிய செய்தி நாடறியும். அவர்களிடையே கருத்து வேற்றுமைகளோ, பிணக்குகளோ ஏற்பட்டதில்லை. இராசராசன் எதை நினைத்தாரோ, அதையே வந்தியத்தேவனும் நினைத்தார். வந்தியத்தேவன் என்ன செய்யத் திட்டமிடுகிறாரோ அதை நிறைவேற்றி முடிப்பார் இராசராசன். மன்னரானவுடன் வல்லவரையரது ஆலோசனையை ஏற்று இராசராசன் அவற்றை நிறைவேற்றினார். வல்லவரையர் வந்தியத்தேவனைச் சோழ நாட்டு மாதண்ட நாயகனாக நியமித்தார். வல்லவரையர் இராசராசனுடன் இணைந்து நடத்தி வெற்றி கண்ட போர்க்களங்கள் பல. மதுரனுக்கு வந்தியத்தேவனே போர் முறைகளைக் கற்றுக் கொடுத்தார். மதுரன் வாள் வீசுவதில் திறமை பெற்று விளங்குவதற்கு வல்லவரையரே பெரிதும் காரணம். போர்க்கள நுணுக்கங்களை வல்லவரையரிடமிருந்து கற்றுணர்ந்த மதுரன் தன் அத்தானைக் 'குருவே' என்று மரியாதையுடன் அழைப்பான்.

''குருவுக்கு என்ன காணிக்கை தரப் போகிறாய்?'' என்று வல்லவரையர் மதுரனிடம் கேட்டார்.

''என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் தருகிறேன்'' என்று உற்சாகமாகக் கூறினான் மதுரன். பிறகு தொடர்ந்து, ''குரு கேட்காமலேயே அவர் குறிப்பறிந்து, அவர் தேவையறிந்து காணிக்கை அளிப்பதுதான் மாணாக்கரின் கடமை'' என்றான்.

''எனக்கு நீ அளிக்கக்கூடிய காணிக்கை ஒன்றுண்டு. சமயம் வரும் போது தெரிவிக்கிறேன்'' என்றார் வல்லவரையர்.

''சமயம் வரும்போது தாங்கள் தெரிவிக்காமலேயே குறிப்பறிந்து நிறைவேற்றுகிறேன்'' என்று கூறினான் மதுரன்.

தஞ்சைக்கு மன்னர் அழைக்கிறார்; வல்லவரையர் தனது ஊரான பிரம்மதேசம் செல்கிறேன் என்கிறார்.

அவருக்குக் கோபம் ஏற்பட்டது எதனால்? மதுரனின் திருமணம் குறித்துத் தான் தேர்ந்தெடுத்த பெண் அவருக்குப் பிடிக்கவில்லை. அதனால் இருக்குமா? என்ன காரணமாயிருக்கும்?

''வல்லவரையரே! நாம் தஞ்சைக்குச் செல்வோம். அங்கே சென்று கலந்தாலோசிக்க வேண்டியவை பல உள்ளன. நீங்களும் தஞ்சைக்கு வருகிறீர்கள்'' என்றார்.



''என்னைப் பொறுத்தருளுங்கள். நான் தஞ்சைக்கு வரவில்லை. பிரம்மதேசம் செல்லும் வழியில் பழுவேட்டரையரைச் சந்திப்பதற்காகப் பழுவூருக்கு வந்தேன். பழுவேட்டரையர் பரம்பரை பரம்பரையாக என் மீது கொண்டிருந்த கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. பாவம், கடைசி காலத்தில் என் நினைவுடன் அவர் உயிர் நீத்தார். பிரம்மதேசத்தில் புதிய மாளிகை கட்டி முடிக்கப்பட்டு விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. நான் பார்க்க வேண்டும். இறுதிக் காலத்தில் மாளிகையில் அமைதியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதனால் தஞ்சைக்கு நான் இப்பொழுது வரவில்லை'' என்றார் வல்லவரையர்.

இராசராசன் சிறிது நேரம் அவரையே பார்த்தவாறிருந்து விட்டுச் சற்றுச் சிரித்தவாறு இளையபிராட்டியை நோக்கி, ''நீங்கள் கூப்பிட்டுத்தான் அவர் வருவார் போலிருக்கிறது. தஞ்சையில் நாம் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டியவை பல உள்ளன. வல்லவரையரை அழைத்துக் கொண்டு வாருங்கள்'' என்று கூறிவிட்டு இராசராசன் அங்கிருந்து புறப்பட்டார். மதுரனும் தஞ்சைக்கு உடன் சென்றான்.

இளையபிராட்டியும் வல்லவரையரும் அங்கே சிறிது நேரம் மௌனமாயிருந்தனர். பிறகு மாளிகைத் தோட்டத்துக்குச் சென்று அங்கே மரத்தடியில் அமர்ந்தனர்.

மரக்கிளையில் அமர்ந்திருந்த இரு வானம்பாடிகள் ஒன்றோடொன்று பேசிக் கொண்டு அவர்களைப் பார்த்துச் சிரிப்பது போல இனிமையாகக் கீதம் பாடின.

வந்தியத்தேவனே பேச்சைத் தொடங்கினார். ''நான் இப்பொழுதே புறப்பட்டால்தான் நான்கு நாள்களிலாவது பிரம்மதேசம் சென்றடையலாம். பழுவேட்டரையரின் பெயர்த்தியை மதுரனுக்குத் திருமணம் புரிய ஏற்பாடு செய்தது எனக்கு வருத்தமாக இருக்கிறது. மதுரனுக்கு விருப்பம் இருக்கிறதா என்று கேட்டறியாமல் அவ்வாறு நீ முடிவு செய்வது சரியில்லை என்பது என் கருத்து'' என்று கூறியது கேட்ட இளையபிராட்டியின் முகம் சிவந்தது.

அவர் ஏதோ கூற முற்படும் முன்பு வந்தியத்தேவன் தொடர்ந்து, ''மதுரன் இன்னும் சிறுவனல்லன். வீர வாலிபப் பருவத்தையும் அவன் கடக்கப் போகிறான். அவனுடைய கருத்தை நீ கேட்கவில்லை. மேலும் அவனுடைய காதலிலும் நீ குறுக்கிட்டு நிற்கிறாய்.

காதல் சிட்டுகளைப் பிரிப்பது பாவம் என்று உனக்குத் தெரியாதா?'' என்று கூறவும் -

குந்தவ்வை மிக அமைதியாக, ''மதுரானுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதே என் திட்டம். மதுரானுக்கு மணம் புரிவிக்க ஏற்ற பெண் எந்தக் குறுநில மன்னருக்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மதுரான் ஒரு பெண்ணிடம் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறான் என அறிந்தேன். அந்தப் பெண் அவனுக்கு ஏற்றவளல்லள்'' என்று கூறும்போது -

வல்லவரையர் குறுக்கிட்டு, ''அந்தப் பெண்ணிடம் மதுரானுக்கு உண்மையிலேயே காதல் இருக்குமானால் அந்தஸ்து, பதவி, குலம், கோத்திரம் பார்த்து அதற்காகக் காதலை நாம் தடுப்பது நியாயமன்று'' என்றார்.

''மதுரான் மனத்தை நான் முழுவதும் அறியவில்லை. மேலும் அந்த நடனப்பெண் ஒரு சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவள். மதுரானுடன் சரிசமமாக அரியணையில் அமரப் போகிறவளை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். என் கருத்தை யாரும் மறுக்க மாட்டார்கள் என நினைக்கிறேன்'' என்றாள் குந்தவ்வை.

''நான் மறுக்கிறேன். காதல் எந்தக் கட்டுப்பாட்டையும் அந்தஸ் தையும் மீறியது. என்னையே எடுத்துக் கொள்ளேன்; நான் நாடற்றவன். எங்கிருந்தோ ஓடி வந்தவன். சோழ நாட்டு அரச குமாரியைக் காதலித்தேன். சுந்தரசோழர் ஆதரித்தார். கரிகாலன் ஆதரித்தார். இராசராசனாக மாறிய அருண்மொழி ஆதரித்தார். பழுவேட்டரையர் ஒருவர்தான் எதிர்த்தார். கடைசி வரை எதிர்த்தார். பெரியவர் எதிர்த்தார். சின்னவர் எதிர்த்தார். அவர்கள் மன நிலையை அறிந்து அதைப்போல் இப்போது, அமரரான பழுவேட்டரையரும் எதிர்த்து என்னை மிகவும் தாழ்த்திப் பேசினார். என் மீது அபாண்ட மாகக் கொலை குற்றம் சாட்டப்பட்டது. தண்டனையை அனுபவித் தேன். உண்மைக் காதல் வென்றது.

''அப்படிப்பட்ட என் விரோதியின் குடும்பத்துப் பெண்ணை மதுரானுக்கு மணம்புரிவித்துச் சோழ நாட்டின் வருங்கால அரசியாக்க முடிவு செய்து விட்டாய். எனக்குச் சம்மதமில்லாத காரியத்தில் நான் இறங்க மாட்டேன். நான் பிரம்ம தேசம் சென்றாக வேண்டும்'' என்று கூறியது கேட்டு குந்தவ்வை சற்று அமைதியாக -



''பிரம்மதேசத்தில் தங்கள் மகள் காத்திருப்பாளல்லவா?'' என்றாள்.

''அருமை மகளைப் பார்த்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அவளுக்குத் திருமணம் முடிக்க வேண்டும். இறைவன் உன் மூலம் வாரிசைத் தராவிடினும் வல்லவரையர் குலம் தழைக்க வழி செய்துள்ளார்'' என்றார்.

இளையபிராட்டி ஏதோ கூற முயன்றாள். பிறகு தன்னையே அமைதிப்படுத்திக் கொண்டு, ''தங்கள் மகள் என் மகள் அல்லவா? தாயற்ற அவளை நான் மகளாக ஏற்றுச் சீராட்டிப் பாராட்ட உரிமை கிடையாதா?'' என்றாள்.

வல்லவரையர் இளையபிராட்டியின் விழிகளை நேருக்கு நேர் சந்தித்து, ''இப்பொழுதுதான் அந்தப் பாசமே உனக்கு உதித்திருக் கிறது!'' என்றார்.

''இன்றுதான் சாளுக்கிய இளவரசிக்குப் பிறந்த உங்கள் மகளைப் பற்றி என்னிடம் கூறியுள்ளீர்கள்.''

''நானும் நீயும் தனியே அமர்ந்து பேசுவதற்கு வாய்ப்பு ஏற் பட்டதே மிகக் குறைவுதான். ஒரு தடவை நான் சொல்லியிருப்பதாக நினைவு. அது போகட்டும். இப்பொழுதாவது என் மகள் நினைவு உனக்கு ஏற்பட்டதே!''

''என் மகள் என்று கூறாதீர்கள். நம் மகள் என்று சொல்லுங்கள்.''

''நம் மகள் என்று பாசத்துடன் நீ நினைத்திருந்தால் நல்லதொரு வாய்ப்பை அவளுக்குச் சாதகமாகப் பயன்படுத்தாமல் செய்திருப் பாயா?''

''என்ன சொல்கிறீர்கள்?''

''உன் வயிற்றில் ஒரு பெண் பிறந்திருந்தால் மதுரானுக்கு அவளை மணம் செய்து கொடுத்து இளவரசியாக்க நினைத்திருக்க மாட்டாயா?''

வல்லவரையர் இவ்வாறு கூறியவுடன், குந்தவ்வை அடுத்து என்ன சொல்வதென்ற புரியாமல் திகைத்தாள்.

# 23. புத்த பிட்சுவுக்கு விடுதலை

சோழப் பெருநாட்டு மாமன்னர் இராசராச சோழர் பழுவூரிலிருந்து தமது பரிவாரங்களுடன் புறப்பட்டார்.

பழுவூரைத் தலைநகராகக் கொண்டு கம்பீரமாக ஆட்சி புரியும் சக்தியுடையவர் அந்தப் பரம்பரையில் இனி யாரும் இல்லை என்பதை அவர் புரிந்து கொண்டார். பழுவேட்டரையரின் மகள் வயிற்றுப் பெயர்த்தியைத் தன் மகனுக்கு மணம் புரிவிப்பதன் மூலம் பழுவேட்டரையர் சோழ நாட்டிற்கு ஆற்றிய தொண்டிற்கு ஆழ்ந்த நன்றி தெரிவிக்கவும் முடிவு செய்திருந்தார்.

தஞ்சை சென்றவுடன், அரசி சக்திவிடங்கியிடம் நல்ல செய்தியைச் சொல்ல வேண்டும் என்று மனத்தில் நினைத்தார்.

''சக்தி! உனக்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூற வேண்டும்.

'அவள் திகைப்பாள். துக்கச் செய்தி கேட்கப் போய் வந்த நான் நல்ல செய்தி கொண்டு வந்திருப்பதாகச் சொன்னால் யார்தான் திடுக்கிட மாட்டார்கள்?'

'ஆமாம் சக்தி! நல்ல செய்திதான். உன் மகனுக்கு ஏற்றவளை மணம் முடிக்க நிச்சயித்து வந்திருக்கிறேன்' என்று சொன்ன பிறகும் அவளுக்குப் புரியாது. அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாளல்லவா!

'பழுவேட்டரையர் குலத்துதித்த கோதை பெயருக்கேற்ப அறிவு, அழகு, வீர பரம்பரையில் வந்தவள். நாள் குறிக்க வேண்டியதுதான். மதுரானுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட ஏற்ற நாள் பார்க்க இனியும் காலதாமதப்படுத்தக் கூடாது.'

அரசருடைய இந்தச் சொற்களைக் கேட்டு அரசிக்கு உற்சாகமோ, அல்லது பிடித்தமில்லாததால் முகச் சுளிவோ ஏற்படாது.

மகன் மதுரானுக்கு மணம் புரிவிக்க வேண்டும். அரண்மனை புகும் புதுப்பெண், மதுரானின் இல்லாள் நாளைக்கு அரியணையில்



அரசரோடு சரிசமமாக அமரக் கூடியவளாகத் திகழ வேண்டும். அவ்வளவே அரசி விரும்புவது. அவள் என்ன சொல்வாள்? 'சக்ரவர்த்தி! தங்களுக்குத் தெரியாததா? தங்கள் முடிவே என் முடிவு' என்று சொல்வாள்.

இராசராச சோழர் இவ்வாறு நினைவில் கோலமிட்டவாறு ரதத்தில் அமர்ந்திருந்தார். புரவிகள் முதலில் தாள கதி தவறாமல் குதி நடை போட்டுச் சென்றன; பிறகு விரைந்தன.

முன்புறம் குதிரை வீரர்கள் நால்வர் ரதத்தின் வேகத்திற்கு ஈடு கொடுத்து விரைந்தனர். பின்புறம் இரண்டு வீரர்கள் தொடர்ந்தனர்.

கொள்ளிடம் ஆற்றைக் கடக்கும் முன்பு சற்று இளைப்பாற விரும்பிய இராசராசன், படகுத் துறை அருகே இருந்த சிறு மாளிகையை நோக்கி ரதத்தைச் செலுத்தச் சொன்னார்.

மாளிகையின் வாசலில் சிலர் கூடியிருந்தனர். அவர்கள் ஒருவரோடொருவர் பேசியவாறிருந்தாலும் அவர்கள் கவனமெல்லாம் மாளிகைக்குள்ளேயிருந்து வரும் செய்தியில் இருந்தது.

புலிக்கொடி ஏந்திய வீரர்கள் வருவதைப் பார்த்தவுடனேயே அவர்களிடையே அமைதி நிலவியது. வழியை அடைத்துக் கொண்டிருந்தவர்கள் விலகி நின்றனர்.

''இராசகேசரி இராசராச சோழ தேவர் வாழ்க!''

''இரணமுக வீமன் வாழ்க!''

''சத்ரு புஜங்கன் வாழ்க!''

''கேரளாந்தகன் வாழ்க!''

''சண்ட பராக்கிரமன் வாழ்க!''

''பாண்டிய குலாசனி வாழ்க!''

''மும்முடிச் சோழன் வாழ்க!''

''செயங் கொண்ட சோழ தேவர் வாழ்க!''

''உடையார் ஸ்ரீ இராசராச தேவர் வாழ்க வாழ்க!'' என்று மக்கள் வாழ்த்தொலி எழுப்பினர்.

இராசராசன் கையை உயர்த்தி அவர்கள் வாழ்த்தை ஏற்று, தன் வாழ்த்தைத் தெரிவித்து அங்கே கூட்டமாக அவர்கள் நின்றிருப்பதன் காரணத்தை வினவினார்.

ஆளுக்கொருவராகப் பேசாமல், முதியவர் ஒருவர் மட்டும் கை கட்டி மிக மரியாதையுடன் பேசினார்...

''சக்ரவர்த்தி அவர்களே! படகுத் துறையருகே மயங்கிய நிலையில் இளம் பெண் ஒருத்தியை பிட்சு ஒருவர் தோளில் சுமந்து வருவதைக் கண்டோம். எங்களுக்குச் சந்தேகம் எழவே, அந்தப் பிட்சுவை நிறுத்தி விவரம் கேட்டறிய முற்பட்டபோது, பிட்சு அந்தப் பெண்ணைக் கீழே கிடத்தி விட்டு ஓட முற்பட்டார். நாங்கள் விடுவோமா? துரத்திச் சென்று பிடித்து விட்டோம். கிராம நாட்டாண்மைக்காரருக்கு விவரம் சொன்னோம். மயங்கிய நிலையிலிருந்த பெண்ணை அவர் உள்ளே கிடத்தி மயக்கம் தெளிவிக்க முயன்று கொண்டிருக்கிறார். மருத்துவருக்குச் சொல்லியனுப்பியுள்ளோம்'' என்றார். இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவருக்குப் பெருமூச்சு வாங்கியது.

இராசராசன் மாளிகையின் உட்புறம் நோக்கியவாறு, ''அந்த பெண் யார், எந்த ஊர் என்று தெரிந்ததா?'' என்று கேட்டார்.

''தெரியவில்லை சக்ரவர்த்திகளே! அரச குடும்பப் பெண் போல் தோன்றுகிறாள். ஆனால், காவி உடை உடுத்தியிருக்கிறாள்'' என்றார் பெரியவர்.

''அந்தப் பிட்சுவை விசாரித்தீர்களா?'' அரசர் கேட்டார்.

''அவரைப் பார்த்தால் எங்களுக்குச் சந்தேகமாயிருக்கிறது'' என்றார் மற்றொருவர்.

''அந்தப் பெண்ணை மயங்கிய நிலையில் பிட்சு தோளில் சுமந்து வந்ததாகக் கூறினீர்களே... அப்படியிருக்க உதவியவரையே சந்தேகிக்கலாமா?'' அரசர் கேட்டுவிட்டு அவரையே கூர்ந்து நோக்கினார்.

''உண்மையாக உதவியவராக இருந்தால், அந்தப் பெண்ணைக் கிடத்திவிட்டு ஏன் அவர் ஓடுகிறார்? எங்களுக்குச் சந்தேகமாயிருக்கிறது'' பெரியவர் தயக்கத்துடன் கூறினார்.

மன்னர் கேட்பதற்குத் துளிக்கூடப் பயமின்றி கூட்டத்திலிருந்தவர்கள் மாறி மாறி விடை கூறவும், இராசராசன் மாளிகைக்குள் சென்றார்.

கொள்ளிடக்கரை மாளிகை அரச குடும்பத்தவர்கள் வரும்பொழுது தங்குவதற்காக, பழுவேட்டரையரால் கட்டப்பட்டது. தொன்மைப் புகழ் பெற்றது. அண்மைக் காலத்தில் அதிகம்



பராமரிக்கப்படாததால் பொலிவு குன்றிக் காணப்பட்டது. மாளிகையைச் சுற்றியிருந்த சிறு தோட்டத்தில் புதர்கள் மண்டிக் கிடந்தன. பெரிய வேப்பமரமொன்று தன் கிளைகளை மெல்ல அசைத்துக் கொண்டிருந்தது.

சக்ரவர்த்திகள் அங்கு வருவாரென்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. மயக்கமுற்ற நிலையிலிருந்த பெண்ணைப் பார்க்க அவள் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தார் மன்னர்.

அந்தப் பெண் தரையில் கிடத்தப்பட்டிருந்தாள். மருத்துவருக்குச் சொல்லியனுப்பியிருந்தனர். மயக்கம் தெளிவிக்க அவள் முகத்தில் தண்ணீர் தெளித்திருந்ததால் தண்ணீர் வழிந்து தேங்கி அவள் புடைவையை நனைத்திருந்தது. அரசர் நாட்டாண்மைக்காரரைக் கடிந்து கொண்டார்.

''ஊருக்குள் சொல்லியனுப்பி பெண்கள் யாரையாவது உதவிக்கு அழைத்திருக்கக் கூடாதா? இவ்வளவு ஆண் பிள்ளைகள், ஒரு பெண்ணைச் சுற்றிச் சூழ்ந்திருக்கிறீர்களே, காற்று வர வேண்டாமா? நமது நாட்டில் பகுத்தறிவுக்குப் பஞ்சம் வந்து விட்டதா?''

சோழ சக்ரவர்த்திகள் கடுமையாகப் பேசுவது கேட்டு அனைவரும் நடுநடுங்கி விட்டனர். மறுகணமே அங்குச் சூழ்ந்திருந்தவர்கள் வேகமாக வெளியேறினர். நாட்டாண்மைக்காரரும் மற்றும் சிலர் மட்டுமே தலையைக் குனிந்தவாறு கையைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தனர்.

மயங்கிய நிலையிலிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தார். அந்த முகத்தை இதற்கு முன்பு பார்த்த நினைவு அவர் மனத்தில் பளீரிட்டது. அடையாளம் கண்டு கொள்ள முயன்றார்.

மிக நெருங்கிப் பழகிய நினைவு. பெரிய அரச குடும்பப் பெண் போல் தோன்றுகிறாள் என்று வெளியே இருந்தவர்கள் பேசிக் கொண்டதையும் நினைத்துப் பார்த்தார்.

மன்னரின் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின. வெளிக் காற்றில் சற்று நிற்க வேண்டும் போல் தோன்றியது.

குளிர்ந்த காற்று அவர் மேனியில் இதமாகப் பட்டது. மாளிகையின் பின்புறமுள்ள இருட்டறையில் பிட்சுவை அடைத்திருந்தார்கள். அவரை விசாரிக்க வேண்டும் எனத் தோன்றியது. குறுக்கும் நெடுக்குமாகச் சற்று உலவினார். அந்தப் பெண்ணைப் பற்றி ஏதாவது

மனத்தில் தோன்றுகிறதா என்று நினைவுபடுத்திக் கொள்ள முயன்றார்.

ஊர் மருத்துவர் அரசர் எதிரே மிக மரியாதையுடன் நின்றார்.

''அந்தப் பெண்ணின் பின் மண்டையில் இலேசாக அடி பட்டிருக்கிறது. அதனால் மயங்கியிருக்கிறாள். உயிருக்கு ஆபத்தில்லை. நாடி பார்த்தேன். சுவாசம் சீராக வருகிறது'' என்று மருத்துவர் சொல்லிக் கொண்டே போனார்.

'அவளை யார் அடித்திருப்பார்கள்? சோழ நாட்டில் ஒரு பெண்ணைத் தீண்டி பின் மண்டையில் அடிக்கக்கூடிய கயவர்கள் இருக்கிறார்களா?''

பிட்சுவை அழைத்து வரச் சொல்லிக் கட்டளையிட்டார்.

அரசர் நேர் பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல் பிட்சு தலை குனிந்து நின்றிருந்தார். நாற்பது வயதைத் தாண்டியவராயினும் அவர் உடல் இருபது வயதுக்கான மிடுக்குடன் இருந்தது. புருவங்கள் நேர்க்கோடாகச் சேர்ந்திருந்தன. முகத்தில் அறிவொளிக்கு மாறான சூழ்ச்சியும் கொடுமையும் பிரதிபலித்தன. வெயிலிலும் மழையிலும் காய்ந்து போனதால் நிறம் மாறிய மேனி.

கடுமையான விரதம், தவம், புலனடக்கம் இவற்றாலன்றி அவருடைய உடல் வீரர்களுக்குண்டான உடற்பயிற்சியினால் வைரம் பாய்ந்திருந்தது. இராசராசன் அதை நொடியில் அறிந்து கொண்டார்.

''இந்தப் பெண்ணை எங்கே சந்தித்தீர்கள் அடிகளே?'' என்று மிக மரியாதையுடன் கேட்டார் இராசராசன்.

மன்னரை ஒருமுறை நிமிர்ந்து நோக்கினார் பிட்சு. உடனே மறுமொழி கூறவில்லை. ஏதோ முணுமுணுப்பது கேட்டது.

''இந்தக் காலத்தில் ஆபத்துக்கு உதவி செய்தால் சங்கடத்தில் சிக்கிக் கொள்ள வேண்டியதுதான்'' என்று பிட்சு கூறினார்.

''யாருக்கு ஆபத்து?'' அரசர் கேட்டார்.

''இந்தப் பெண்ணுக்குத்தான்.''

''யாரால் ஏற்பட்டது?''

''இவளைக் கொள்ளிடத்தின் மறுகரையில் சிலர் சூழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அவர்களிடமிருந்து நான் காப்பாற்றி



னேன். அப்பொழுதே அவள் தள்ளாடுவது தெரிந்தது. 'என்னைக் காப்பாற்றுங்கள்; பழுவூருக்கு அழைத்துச் செல்லுங்கள்' என்று அவள் முணுமுணுத்தது என் காதில் விழுந்தது. அவளை மெல்லக் கைத்தாங்கலாக நடத்திச் சென்று படகில் ஏற்றினேன். படகு ஓட்டியைக் காணவில்லை. நானே படகை ஓட்டிக் கொண்டு வந்தேன். நடுவழியிலேயே படகில், அவள் மயக்கமடைந்து சாய்ந்து விட்டதைக் கண்டேன். கரையை அடைந்ததும், அவளைத் தூக்கிக் கொண்டு கரை இறங்கினேன். இந்தப் பெண்ணை நான் அபகரித்துச் செல்வதாக நினைத்துக் கிராம மக்கள் என்னைத் தாக்க முற்பட்டார்கள். என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினேன். மக்கள் என்னை விட்டுவிடவில்லை. பிடித்து இங்கே கொண்டு வந்து அடைத்து விட்டார்கள்.''

பிட்சு கூறியதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சோழ மன்னர், ''அடிகளாரே! இந்தப் பெண்ணை மற்றவர்கள் சூழ்ந்து கொண்டிருந்த இடத்திற்கு நீங்கள் ஏன் வந்தீர்கள்?'' என்று கேட்டார்.

''நான் வரவில்லை. அவர்கள்தான் நான் இருக்குமிடத்திற்கு வந்தார்கள்'' என்று பிட்சு கூறினார்.

''அடிகளாரே! தங்கள் இருப்பிடம், தாங்கள் தங்கும் பௌத்த விகாரை எங்கேயிருக்கிறது என்று நான் அறியலாமா?'' - மன்னர் மிக விநயமாக வினவினாலும், பிட்சு பொறுமை இழந்தவராகப் பதில் சொன்னார்.

''இந்த மாளிகையின் இருட்டறையில் என்னைச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் தண்டனையை இப்போது புத்தர் பிரான் எனக்களித்து விட்டார். மற்றவர் துன்பப்படும்போது பார்க்கச் சகிக்காது உதவிக்குச் சென்ற எனக்கு ஏன் இவ்வாறு தண்டனையளித்தார்? சோழப் பெருமன்னரே! எனக்கு என்று ஓர் ஊர் கிடையாது. கிடைத்ததை உண்டு, ஊர் ஊராகச் சுற்றி மக்கள் துயர் துடைப்பது தான் என் பணி. என்னைச் சுதந்தரமாகப் போக விடுகிறீர்களா?''

இராசராசன் ஒருகணம் கூடச் சிந்திக்காமல் அருகே இருந்தவர்களை அழைத்து, ''அடிகளாரை அவர் விருப்பப்படி செல்ல விடுங்கள்'' என்றார்.

அங்கிருந்தவர்களுக்கு வியப்பு ஏற்பட்டது. ஒரு பெண்ணைக் கவர்ந்து கொண்டு ஓடி வந்தவரை விசாரித்துத் தண்டனை வழங்காமல் அவர் விருப்பப்படி செல்ல அனுமதித்து விட்டாரே

என்று மனத்திலேயே குறையாக நினைத்துக் கொண்டனர். மறை முகமாகப் பின் தொடர்ந்து பிட்சுவின் நடவடிக்கைகளைக் கண் காணிக்க உடனே மன்னர் ஏற்பாடு செய்து விட்டது மற்றவர் களுக்குத் தெரியாது.

இராசராச சோழர் புறப்பட்டார். மயங்கிக் கிடந்த அந்தப் பெண்ணையும் ரதத்தில் ஏற்றச் சொல்லி அவளுடன் புறப்பட்டார்.

தஞ்சையை நோக்கி ரதம் விரைந்து சென்றது. அயர்ந்த நித்திரை யில் ஆழ்ந்திருப்பவள் போல் தன் நினைவின்றிப் படுத்திருந்த அந்தப் பெண்ணின் முகத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தார் அரசர்.

அவள் யார் என்று இன்னும் அரசரால் நினைவில் கொண்டு வர முடியவில்லை. மதுரனுக்கு மணமகளை உறுதிப்படுத்தி வந்திருக் கும் செய்தியை, 'உனக்கு ஒரு நற்செய்தி கொண்டு வந்திருக்கிறேன்' என்று அரசி சக்தி விடங்கியிடம் மகிழ்வுடன் சொல்ல நினைத்தவர், ஓர் அழகிய பெண்ணை வேளத்திற்கு எடுத்துச் செல்லும் செய்தி யைச் சொல்லிவிட்டு, பழுவூரில் நடந்த நிகழ்ச்சிகளை விவரித்தார்.

அரசியார் சக்தி விடங்கி, வேளத்திற்குச் சென்று தனி அறை ஒன்றில் மயக்கம் தெளிந்த நிலையில் உறங்கிக் கொண்டிருக்கும் அழகிய பெண்ணைப் பார்த்தவுடனேயே, "ஓ! சிறிது காலத்திற்கு முன்பு மாளிகையில் பணிபுரிந்த பூங்கொடி அல்லவா!" என்று வியப்புடன் கூறினாள். இராசராசனுக்கு பளீரென்று நினைவு வந்து விட்டது.

பூங்கொடி - ஆம்; இவள் இன்பவல்லியைப் போலவே இருக் கிறாள். பல ஆண்டுகளுக்கு முன்பு முல்லைத் தீவில் சந்தித்தபோது தோற்றமளித்த இளவயது இன்பவல்லியைப் போலவே இருக் கிறாள்.

"இன்பவல்லி... இன்பவல்லி" என்று அவர் இருமுறை அழுத்தமாக உச்சரித்தார்.

மயக்கம் தெளிந்து, உறக்கமும் கலைந்த நிலையிலிருந்த பூங் கொடியின் செவிகளில் அந்தச் சொற்கள் விழுந்தன. தன் தாயின் பெயரை உச்சரிப்பவர் யார் என்ற மெல்லக் கண் திறந்து பார்த்தாள்.



# 24. பிட்சு எங்கே?

இராசராச சோழர் தன்னைச் சிறிதும் சந்தேகப்படாமல் விடுதலை செய்து விட்டார் என்பதில் பிட்சுவுக்குப் பெரும் மகிழ்ச்சி. அதை வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை. முகத்தில் சோர்வும், வருத்தமும் இருப்பதாகக் காட்டிக் கொண்டு, பழுவூருக் குள் நுழைந்து, சத்திரத்தை அடைந்தார்.

"என்ன இருந்தாலும் சோழ மாமன்னர் தர்மவான்தான். ஒரு புத்த பிட்சு தவறு செய்யவே மாட்டார் என்று அவருக்குத் தெரியும்" என்று சத்திரத்துத் தலைவனிடம் கூறி, "இன்று இங்குத் தங்கி நாளை புறப்படுகிறேன்" என்று கேட்டுக் கொண்டார்.

"எவ்வளவு நாள்கள் வேண்டுமானாலும் தங்குங்கள் அடிகளாரே தங்களுக்கு எந்தவித உணவு வேண்டுமோ சொல்லுங்கள்" என்று மிகப் பரிவுடன் கேட்டார் சத்திரத் தலைவர்.

பிட்சு மெல்ல நகைத்தார். "பிட்சுகளுக்கு ஏற்ற உணவு என்ன வென்று அறிய மாட்டீர்களா? அதையே எனக்குக் கொடுங்கள்" என்றார்.

பிட்சு படுத்தவுடன் உறங்கி விட்டதைக் கண்ட சத்திரத்துத் தலைவர், மறுநாள் அவருடன் பேசிக் கொள்ளலாம் என்று தன் அலுவலைக் கவனிக்கச் சென்று விட்டார்.

காலையில் பிட்சுவைக் காணவில்லை. பிட்சு இருள் பிரிவதற்கு முன்பே புறப்பட்டுச் சென்று விட்டார். அவரைத் தொடர்ந்து கண் காணிக்க சோழ மன்னரால் நியமிக்கப்பட்ட இருவரும் பிட்சுவைக் காணாமல் திகைத்தனர்.

சத்திரத்துத் தலைவரிடம் பிட்சுவைக் குறித்துக் கேட்டும் பலனில்லை. பிட்சுவைப் பின் தொடராமல் அவரைத் தப்பிச் செல்ல விட்டதற்கு அரசர் கடுமையாகத் தண்டிப்பாரே என்ன செய்வது என்ற கவலையுடன் பழுவூரைச் சுற்றி வந்தனர்.

பழுவூரை ஒட்டிச் செல்லும் வாய்க்கால் மதகு அருகே அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தபோது மரத்தின் மறைவில் அப்போதுதான் வந்தமர்ந்த நால்வர் மிகச் சோர்வுடன் பேசிக் கொண்டனர்.

''இங்கு தானே நம்மைக் காத்திருக்குமாறு அந்தப் பிட்சு கூறினார்?'' என்று சந்தேகத்துடன் கேட்டார் ஒருவர்.

''ஆமாம்; பழுவூருக்கு வருமாறு சொன்னார். ஒரு பெண்ணுடன் வந்து தங்குவதாகவும் சில ரகசியச் செய்திகளைக் கூறுவதாகவும் சொல்லியிருந்தாரே'' என்று மற்றவர் கூறினார்.

''சாளுக்கிய மன்னருக்கு அடுத்த பௌர்ணமிக்குள் நாம் பிட்சு தரும் செய்தியைக் கொண்டு சென்றாக வேண்டும். இன்று புறப் பட்டால்தான் போய்ச் சேர முடியும்.''

''ஆமாம்; மிக முக்கியத் தகவல்களைத் தருவதாகப் பிட்சு கூறி யிருந்தார். சாளுக்கியப் படைகள் காஞ்சியை வந்தடையுமுன்பே தஞ்சையில் நிறைவேற்ற வேண்டியவற்றைக் கூறுவதாகப் பிட்சு சொல்லியிருந்தார். ஹூம்...''

''பிட்சுவை நகரம் முழுமையும் தேடி விட்டீர்களா?''

''எல்லா இடங்களிலும் தேடி விட்டேன். ஊர் சத்திரத்தில் சென்று கேட்டேன். சத்திரத் தலைவர் என்னை ஏற இறங்கப் பார்க்கிறார். 'சற்று முன்புதான் இரண்டு பேர் பிட்சுவைப் பற்றி விசாரித்தார்கள். நீங்கள் வேறு கேட்கிறீர்கள். பௌத்த சமயத்தில் சேரப் போகிறீர் களா?' என்று சத்திரத் தலைவர் சற்றுக் குத்தலாகக் கேட்டார்.''

சற்று நேரம் அங்கே மௌனம் நிலவியது. ''ஓ! பிட்சுவை மற்றும் இருவர் தேடினார்களா? யாராயிருக்கும்?'' கவலையுடன் கேட்டார் நால்வருள் ஒருவர்.

பொழுது சாய்ந்து, ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியாத நிலை.

''இனி இங்கே தங்கியிருப்பதில் பயனில்லை. நாம் புறப்பட்டுத் தஞ்சைக்கே செல்வோம். பிட்சு ஒரு வேளை எதிரே வந்தாலும் வரலாம்'' என்று ஒருவர் யோசனை கூற அனைவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

அவர்கள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் சோழ நாட்டு ஒற்றர்கள் அவர்களைப் பின் தொடர்ந்தனர். ஒற்றருள் ஒருவனுக்கு யோசனை ஒன்று தோன்றியது.



''நான் அந்த நால்வரிடம் ஒரு நாடகம் நடிக்கப் போகிறேன். நீ சிறிது நேரம் கழித்துக் கலந்து கொள்'' என்று கூறி வேகமாக ஓடினார்.

குறுக்கு வழியாகச் சென்று அந்த நால்வரின் எதிரே ஓடி வந்து மூச்சிரைக்க நின்று, ''ஐயாமார்களே! பிட்சு உங்களை எங்கெல்லாம் தேடுவார்?'' என்று வார்த்தை முழுவதும் தெளிவாக வராதது போல் கேட்டார்.

அவர்கள் திடுக்கிட்டனர். 'நம்மை இவன் எதற்குத் தேடுகிறான்? யாரிவன்?' என்ற சந்தேகம் அவர்களிடம் எழுந்தது.

''யாரப்பா நீ? எங்களை ஏன் தேடுகிறாய்?''

''நான் ஏன் தேடுகிறேன்? பிட்சு அல்லவா தேடுகிறார்? அவர் உங்களுக்காக சத்திரத்தில் வெகு நேரமாகக் காத்திருந்து கண்கள் பூத்துப் போய் இப்பொழுதுதான் பழுவேட்டரையர் மாளிகையின் பக்கம் சென்றிருக்கிறார்'' என்றார் சோழ ஒற்றர்.

நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஆமாம்; நாங்களும் பிட்சுவும் ஆற்றைக் கடந்து படகில் வந்தோம். அவருடன் ஓர் அழகிய பெண் வந்தாள்'' என்று கூறி நிறுத்தினர்.

''நடு வீதியில் நின்று பேச வேண்டாம். அப்படி மறைவாகச் செல்வோம்'' என்றனர் சாளுக்கிய உளவாளிகள்.

''மறைவாக எதற்குச் செல்வது? சத்திரத்திற்கே போய் விடுவோம். அங்கே உணவருந்தி விட்டு அமைதியாகப் பேசுவோம். அதற்குள் பிட்சு வந்து விடுவார்'' என்றார் சோழ ஒற்றர்.

நால்வருள் ஒருவனுக்குச் சிறிது சந்தேகம்.

''எங்களை எப்படிக் கண்டு பிடித்தீர்?'' என்று கேட்டான்.

''பழுவூர் மாளிகைக்குப் பிட்சுவுடன் சென்றபோது அவர் சொன்னார்: 'இந்தச் சாளுக்கிய உளவாளிகள் சொன்னால் சொன்ன படி நடப்பதில்லை; மாலையிலிருந்து காத்திருக்கிறேன். இந்தப் பெண்ணைச் சத்திரத்தில் என்னுடன் தங்க வைத்திருந்தால் சந்தேகப் படுவார்கள். பழுவூர் மாளிகையில் தங்குமாறு செய்து வருகிறேன். சரி; அவர்களைத் தேடிப்பிடி' என்று கூறிச் சென்றார். நானும் எனது நண்பரும் சற்றுத் தொலைவு போய் வருவதற்குள் நீங்கள்

சத்திரத்திற்கு வந்து தேடி விட்டுப் போய் விட்டீர்களாம்! நான் ஒரு பக்கமும் என் நண்பர் ஒரு பக்கமுமாகத் தேடி அலைந்தோம்; வாய்க்கால் கரைக்கு என் நண்பன் சென்றான்; நான் கோயில் பக்கம் சென்றேன்'' என்றார்.

சாளுக்கிய ஒற்றர்கள் நால்வருக்கும் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது.

''பிட்சு பரபரப்பாய் இருக்கிறார், இன்று தங்களைச் சந்தித்தாக வேண்டுமாம்'' என்றார்.

நால்வருக்கும் எள்ளளவு இருந்த சந்தேகமும் தீர்ந்தது. சத்திரத்தை நோக்கி விரைந்தனர்.

சத்திரத் தலைவனைத் தனியே அழைத்துச் சோழ ஒற்றர்கள் தங்கள் அடையாள இலச்சினையைக் காட்டி, ''நான்கு பேருக்கும் நல்ல விருந்தளியுங்கள். பிறகு சொல்கிறோம்'' என்று கூறினர்.

வசதியான இடம் ஒன்று நான்கு பேருக்கும் தரப்பட்டது. மிகக் களைப்புற்றிருந்த அவர்களுக்குப் பசியும் மிக அதிகமாக இருந்தது.

சத்திரத்துத் தலைவன் அவர்களிடம் மிகவும் பணிவுடன் ''சுடச் சுடச் சோற்றை இலையில் பரிமாறியுள்ளேன். கைகால் முகம் கழுவி விட்டு வாருங்கள்'' என்று அழைத்தார்.

சாளுக்கிய ஒற்றர்கள் வயிறு புடைக்க உண்டனர். கை கழுவி விட்டு, ''பிட்சுவை இன்னும் காணவில்லையே?'' என்று கேட்டனர்.

வெளியே சென்று வந்தவர் போல் நடித்த சோழ ஒற்றர், ''பிட்சுவைச் சந்தித்தேன். உங்கள் வருகையைப் பற்றிச் சொன்னேன். இன்னும் சிறிது நாழிகையில் வருவதாகவும் நள்ளிரவுக்குப் பிறகு வெளியே போகலாம் என்னும் இரவு ஆகாரம் உண்ட பிறகு களைப்பாறுமாறும், தான் வந்து விடுவதாகவும் சொல்லச் சொன்னார்'' என்றார்.

''அப்பாடா'' என்று நால்வரும் படுத்தனர்.

இரவு நடுநிசிக்குப் பிறகு உண்மையிலே பிட்சு சத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்.

சோழ ஒற்றருள் ஒருவனைச் சத்திரத்துத் தலைவன் என எண்ணி, ''ஐயா! என்னைத் தேடி யாராவது வந்தார்களா? தங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் அதிகாலையிலேயே சென்று விட்டேன்'' என்று கேட்டார்.



அரைத் தூக்கத்தில் பேசுவதுபோல், ''ஆமாம்... ஆமாம், தங்களைத் தேடி வந்தவர்கள் இங்கு விருந்து உண்டு அறையில் தூங்குகிறார்கள்'' என்றான்.

நான்கு ஒற்றர்களும் உறங்கும் அறைக்குப் பிட்சு சென்று அவர்களை எழுப்பினார்.

''ஆகா! சொன்னபடி வந்து விட்டீர்களா?'' என்று கூறி பிட்சுவையும் அங்கேயே உட்காருமாறு கூறினார்கள்.

பிட்சு அங்கே உட்கார்ந்து விளக்கைத் தூண்டி, அந்த நால்வருடைய அடையாளங்களையும் ஒருமுறை சந்தேகத்திற்கு இடமில்லாமல் பார்த்துக் கொண்டனர்.

''இன்று இரவே புறப்பட்டால்தான் இரண்டு நாள்களில் காஞ்சியை அடையலாம். உடனே சொல்லுங்கள்'' என்று துரிதப் படுத்தினார்.

பிட்சு சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு கதவைத் தாளிட்டு ரகசியச் செய்திகளைச் சொல்லத் தொடங்கினார்.

சொல்லி முடித்துவிட்டு, ''இப்போதே புறப்படுங்கள்'' என்று வேகப்படுத்தினார்.

கதவைத் திறக்க முயன்றபோது அந்த அறைக் கதவு வெளியே தாளிடப்பட்டிருப்பதைக் கண்டு அவர்கள் திடுக்கிட்டனர்.

பிட்சுவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கதவைப் பலமாகத் தட்டினால் சத்திரத்திலுள்ளவர்கள் விழித்துக் கொள்வார்கள்.

எதற்கும் காலை வரை அமைதியாகக் காத்திருப்போம் என்று பிட்சு முடிவு செய்தார்.

காலை வரை அவர்கள் அங்கே தங்கியிருக்க சோழ ஒற்றர்கள் விடவில்லை. இரவு கடைசி ஜாமத்தில் சோழ வீரர்கள் அந்த அறைக்கு வெளியே சூழ்ந்து நிற்கக் கதவு திறக்கப்பட்டது.

வெளியே வந்த சாளுக்கிய ஒற்றர்களையும், பிட்சுவையும் சோழ வீரர்கள் சிறைப்பிடித்தனர்.

# 25. மதுரனுக்கு மணமகள் யார்?

பழூரிலே, இளையபிராட்டியும் வந்தியத்தேவனும் மனம் விட்டுப் பேசினர். பல ஆண்டுகளுக்குப் பிறகு அதுபோன்ற உரையாடல் நடைபெற்றது. ஒருவருக்கொருவர் குற்றஞ்சுமத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தாலும், வார்த்தைகள் வரவில்லை.

மௌனமும், வந்து முட்டும் வருத்தமும் இளையபிராட்டியிடம் குறுக்கிட்டன. தனக்கு ஒரு குழந்தை பிறந்திருந்தால்...

வல்லவரையர் இவ்வாறு சுட்டிக் காட்டுவார் என்று இளைய பிராட்டி நினைக்கவில்லை. ஏன்... அவளே கூட எந்த ஒரு வேளையிலும், பொழுதிலும் கொஞ்சிக் குலவ ஒரு குழந்தை தனக்கு இல்லையே என்று நினைக்கவில்லை.

தன் இளவல் இராசராசனின் திருக்குமாரன் மதுரனைத் தவிர மற்ற எந்தக் குழந்தையையும் பற்றி அவள் நினைத்தாளில்லை. மதுரனைக் கொஞ்சிக் குலவிய நாள்களை நினைத்துக் கொண்டாள். அவனை வளர்ப்பதில் இளையபிராட்டியார் எடுத்துக் கொண்ட அக்கறை, ஆசை இவையனைத்தையும் மீண்டும் பல ஆண்டுகளுக்குப் பிறகு நினைத்துப் பார்ப்பதில் அவளுக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை.

வல்லவரையருக்கும் மதுரன் மீது கொள்ளை ஆசைதான். ஒரு முறை பெரிய மரக்கலம் கட்டுமிடத்தில் வல்லவரையரும், இளைய பிராட்டியும் பேசிக் கொண்டவை நினைவுக்கு வந்தன.

மரக்கலக் கோரையாற்றில் பெரும் மரக்கலம் - போர் வீரர்களை ஏற்றிச் செல்லக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய மரக்கலம் - கட்டப்பட்டு வந்தது.

''அந்த மரக்கலத்தில் போர் வீரர்களும் போர்க்கலங்களும் செல்லலாம். பெண்கள் வரக்கூடாது. அப்படித்தானே?'' என்று குந்தவ்வை கேட்டாள்.



''ஆமாம்; அதனாலென்ன? வேறு ஒரு கலத்தைக் கட்டச் செய் வோம் அல்லது தனியே ஒரு கலத்தைக் கேட்டுப் பெறுவோம் அல்லது நகரத்தார்களின் மரக்கலம் நாகையிலிருந்து புறப்படும் போது நாமும் அவர்களுடன் சேர்ந்து கொள்வோம். பயணத்துக்கான ஏற்பாடுகளை இப்போதிருந்தே செய்வோம். நமக்கென்ன ஏற்பாடு செய்து விட்டுத்தான் புறப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை'' என்று வல்லவரையர் கூறினார்.

இளையபிராட்டி உடனே எதும் மறுமொழி கூறவில்லை.

இயற்கையாகவே அகன்றிருக்கும் அவளது விழிகள் மேலும் விரிந்தன. சிறிது நேரம் கழித்து - ''ஓ!'' என்று வியப்புக் குரல் எழுப்பினாள்.

''என்ன சொன்னீர்கள்? நமக்குக் கவலையோ கடமையோ எதும் இல்லையென்றா?!'' என்று மெல்ல நகைத்தவாறு கேட்டாள்.

''கடமை எதுமில்லை என்று சொல்ல மாட்டேன், தேவி! சோழ நாட்டின் மிக முக்கியப் பெண்மணியான இளையபிராட்டியாரிடம் அவ்வப்போது யோசனை கேட்க வருபவர்கள், உதவி பெற வருபவர்கள் இளையபிராட்டியைக் காணாமல் திண்டாடுவார்கள்'' என்று கூறிய வல்லவரையர் குரலைத் தாழ்த்திக் கொண்டு, குந்தவ்வை செவியருகே சென்று, ''நம் மழலைச் செல்வத்தை எப்படி அழைத்துச் செல்வது? யாருடைய பாதுகாப்பில் விட்டுச் செல்வது என்ற கவலையா?'' என்று மெல்லப் பேசினார். இளையபிராட்டியார் அதைக் கேட்டு வெட்கத்தால் முகம் சிவக்க நாணமுற்று அங்கிருந்து ஓடிவிடுவாள் என்று நினைத்தார்.

வல்லவரையர் உள்ளத்தில் பெரும் குறை இருந்தது. வருடங்கள் ஓடி அதைக் குறிக்கும் வயதும் ஏறி வருகிறதே. ஒரு மழலையை மடியிலிட்டுக் கொஞ்ச வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருப்பதில் தவறில்லை. அவரைப் போன்றே இளையபிராட்டியின் உள்ளத்திலும் ஆவலும், வேதனையும் இருக்கும் என எண்ணினார். அதை வெளிப்படையாகக் கூறும்போது பெண்மைக்கே உரிய நாண உணர்ச்சி மேலிட ஊடல் கொண்டோடுவாள். அதைக் கண்டு ரசிப்பதே தனி இன்பம் என்று எண்ணினார்.

ஆனால், இளையபிராட்டியின் முகம் அப்படியொன்றும் நாணத்தால் சிவந்து விடவில்லை. வெட்கமடைந்து தலை குனிந்து விடவில்லை. அதற்கு மாறாக அவள் கண்களின் ஒளி வீசின. தலை

நிமிர்ந்தது. முகத்தில் கடமை உணர்ச்சி மிளிர்ந்தது. கம்பீரமான குரலில், ''ஆம்; மழலைச் செல்வத்தை எப்படி உடன் அழைத்துச் செல்வது என்ற கவலைதான்'' என்றாள். வந்தியத்தேவனுக்கு ஒரு கணம் புரியவில்லை.

''பெரும் பொறுப்பை ஏற்றிருக்கும் நான் அதிலிருந்து தவற முடியாது'' என்றாள் அழுத்தந்திருத்தமாக.

வல்லவரையர் புரியாமல் விழித்தார். ஆனால், குந்தவ்வை மேலும் தொடர்ந்து, ''அதே பொறுப்பில் தங்களுக்கும் பங்குண்டு'' என்று விரைந்தோடிச் சென்று அருள்மொழியின் செல்வனை அணைத்தெடுத்து ஓடிவந்து, ''இதோ பாருங்கள், நான் பெறாத பிள்ளையை!'' என்று கூறி அருள்மொழியின் செல்வன் மதுரனைக் கட்டியணைத்து முத்தங்கள் பொழிந்து, ''இந்த மழலையை நான் எங்கு விட்டுச் செல்வேன்? வானவன்மாதேவி என் கரங்களில் ஒப்படைத்துச் சென்ற செல்வக்குமரனைப் பிறர் பொறுப்பில் விடலாமா? அவனது வருங்காலத்தைப் பற்றி நான் பெரும் கனவு கண்டு கொண்டிருக்கும்போது கடல் கடந்து கலைச் செல்வங்களைக் காணச் சுற்றுப்பயணத்திற்கு நான் ஆசைப்படலாமா?'' என்றாள்.

''கண்ணே மதுரா! உன்னை ஆளாக்கி, அறிஞனாக்கி, வீரனாக்கிக் காணும்வரை உன்னை விட்டுப் பிரிய மாட்டேன்'' என்று கூறிக் கொஞ்சினாள்.

அந்தச் சம்பவம் வல்லவரையரை மெய்சிலிர்க்க வைத்தது.

இப்பொழுது அதை நினைத்துக் கொண்டபோதும் இளைய பிராட்டிக்கு மெய்சிலிர்த்தது. ஏனோ வல்லவரையருக்கும் சிலிர்ப்பு ஏற்பட்டது.

இருவர் வதனங்களிலும் புதுச்சோபை ஏற்பட்டது. புதிய புன்னகை பிறந்தது.

''எதற்காகவோ சிரிக்க முயல்கிறீர்கள்'' என்று குந்தவ்வை கேட்டாள்.

''பல ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்ததை நினைத்துக் கொண்டேன்'' என்றார் வல்லவரையர்.

அது எந்த நிகழ்ச்சி என்று ஒரு கணத்தில் இளையபிராட்டிக்குப் புரிந்து விட்டது என்றாலும், ''பல ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது



ஒன்றா, இரண்டா? முகத்தில் புன்னகை பூக்கத்தக்க நிகழ்ச்சி அப்படி என்னதான் நடந்தது?'' என்று கேட்டாள்.

''மரக்கலத்தில் ஏறிக் கடற்பயணம் செய்ய நினைத்தோமே, அப்பொழுது நீ கூறிய ஒன்றை இப்பொழுது நினைத்தேன். சிரிப்பு வந்தது'' என்றார்.

''ஓ! செல்வன் மதுரனைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்து கூறிய வார்த்தைகளை நினைத்துச் சிரிக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''மதுரனை அறிஞனாக்கினாய். மாபெரும் வீரனாக்கினாய். பிறகும் உனக்கென்று ஒரு குழந்தையை அடைய வேண்டும் என்ற ஆசை துளிர்க்கவில்லையா?'' - வல்லவரையருக்கு இளைய பிராட்டியின் மீது பரிதாபமே எழுந்தது.

இளையபிராட்டி இப்பொழுது கண் கலங்கினாள். ''உங்களுக்கு அன்றே ஏற்பட்ட மழலைச் செல்வ ஆசையை ரகசியமாகத் தீர்த்துக் கொண்டீர்கள். என்ன இருந்தாலும் நான் பெண் எனும் பேதை தானே? ஒருவிதத்தில் அதுவும் நன்மைக்குத்தான். எனக்கும் பெண் பிறப்பதற்கு மாறாக ஆண் குழந்தை பிறந்திருந்தால் வல்லவரையருடைய நாட்டிற்கு உரிமை கொண்டாடியிருக்குமே?'' என்றாள்.

வல்லவரையர் முகம் சிறுத்தது. ''சரி, சரி... நாம் நடந்து போனவற்றை மட்டும் பேசாமல் நடக்கப் போவதையும் சற்றுப் பேசுவோம். சிறிது நேரத்தில் நான் பிரம்மதேசம் புறப்படுகிறேன்'' என்றார்.

''நானும் தங்களுடன் வருகிறேன். உங்கள் மகளை இல்லை - இல்லை - என் மகளை நான் காண வேண்டாமா?'' என்று கேட்டு விழிகளால் குத்துவது போல் நோக்கினாள்.

''வேண்டாம்; இப்பொழுது நீ வர வேண்டாம். என்னுடன் அழைத்துச் சென்று விட வேண்டும் என்ற ஆவல் முன்பு இருந்தது. ஆனால், புதிய மாளிகை பூர்த்தியடையட்டும். புதிய மாளிகை பூர்த்தியானவுடன் உன்னைச் சகல மரியாதைகளுடன் வரவேற்பேன். என்ன இருந்தாலும் நீ தானே வல்லவரையர் நாட்டு அரசி?'' என்றார்.

இளையபிராட்டியின் விழிகளில் நீர் தளும்பியது. அதை மறைக்க மெல்ல விழிகளை மூடிக் கொண்டவுடன் இமைக்கதவு ஒரு கணம் தாளிடப்பட்டதால் தாங்காது நீர்த் துளிகள் கன்னப் பகுதியில் தழுவி

உருண்டன. வல்லவரையர் கரம் வாஞ்சையுடன் அவள் விழி நீரைத் துடைக்க நீண்டது.

''இளையபிராட்டி! தஞ்சையில் இராசராசன் உனக்காகக் காத்திருப்பார். நீ உடனே புறப்படு. மதுரானுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட நாள் குறித்து விட்டார். இளவரசியாக அவருடன் அமருவது யார் என்ற பிரச்னைதான் முடிவெடுக்கப்பட வேண்டிய ஒன்று. நீ சென்றால்தான் அதற்கு முடிவு கிடைக்கும். தஞ்சைக்குச் சென்றால், நீ என் மகளைப் பற்றிச் சொல்ல வேண்டாம். முன்பே அவர் மனத்தில் பெரும் சஞ்சலமேற்பட்டிருக்கிறது. மதுரன் மனத்திலே வேறொரு மங்கைக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பழுவேட்டரையர் சகோதரியின் பெயர்த்தியை மதுரானுக்கு மணம் புரிவிக்க அரசர் விருப்பமுடையவராயிருக்கிறார். இந்த நிலையில் நானும் பிரச்னையை எழுப்ப விரும்பவில்லை'' என்றார்.

குந்தவ்வை தலையை அசைத்தாள். ''இனி நீங்கள் இல்லாமல் தனியே நான் ஓரிடத்திற்கும் செல்லப் போவதில்லை'' என்றாள்.

குந்தவ்வை எந்த வார்த்தையையும் முன் யோசனையின்றி, சிந்திக்காமல் சொல்லவே மாட்டாள்.

சில நாள்களுக்கு முன்பு உறையூரில் பேசிக் கொண்டிருந்தபோது அவள் கூறியதற்கும், சற்று முன்பு கூறியதற்கும் மிகுந்த வேற்றுமை இருந்ததைக் காண வல்லவரையருக்கு வியப்பாக இருந்தது.

வல்லவரையர், இளையபிராட்டியைக் கூர்ந்து நோக்கினார்.

விழிகளின் வேகத்தைத் தாங்கும் சக்தி படைத்த இளையபிராட்டி, வல்லவரையரின் வார்த்தையைத் தாங்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

''குந்தவ்வை'' என்று வந்தியத்தேவன் மெல்ல அழைத்தார்.

அவ்வாறு பெயரிட்டு அழைப்பது நீண்ட காலத்திற்குப் பிறகு அப்பொழுதுதான்.

குந்தவ்வை நிமிர்ந்து பார்த்தாள்.

''நீ உடனே தஞ்சைக்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டும். பல காரியங்கள் உனக்காக அங்கே காத்திருக்கும்'' என்றார் வல்லவரையர்.

இயலாது என்பதைப் போல குந்தவ்வை தலையை அசைத்தாள்.



''மதுரானுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவதற்கான நாளைக் குறிப்பார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டுமல்லவா? புறப்படு'' என்று மீண்டும் வற்புறுத்தினார்.

''அப்படியென்றால் உங்களுக்கும் அந்த விழாவில் பங்கு உண்டல்லவா?'' என்று கேட்டாள் குந்தவ்வை.

இப்பொழுது வந்தியத்தேவன் 'இல்லை' என்பதை விளக்கத் தலையை அசைத்தார்.

''எனக்கு அதில் பொறுப்பு ஒன்றுமில்லை. மதுரனை வாழ்த்துவதற்காக நான் விழாவின்போது வருவேன். மற்றவற்றை நீயே கவனித்து முடிவு செய்யலாம்.''

வல்லவரையர் கூறியது கேட்ட இளையபிராட்டி, ''நானும் அது போல் விழாவன்று வாழ்த்துக் கூற வருகிறேன். புறப்படுங்கள், பிரம்மதேசம் போகலாம். என்னை வர வேண்டாம் என்று தடுத்தாலும் நான் வந்துதான் தீருவேன். பாலாற்றைக் கண்டு பல ஆண்டுகள் ஆகின்றன. காஞ்சியில் என் தந்தை கட்டிய பொன் மாளிகை பொலிவுடன் விளங்குகிறதா என்பதையும் பார்க்க ஆவலாக இருக்கிறது. அதனால் நான் தங்களுடன் வரத்தான் போகிறேன்'' என்று அழுத்தத்திருத்தமாகக் கூறினாள்.

வந்தியத்தேவனால் எதும் பேச முடியவில்லை. என்ன சொல்லியும் இளையபிராட்டியைச் சமாதானப்படுத்த முடியாது என்பது அவருக்குத் தெரியும்.

ஒரே ஒரு காரணம்தான் இப்பொழுது இருக்கிறது அவளைச் சம்மதிக்க வைக்க... ''இளையபிராட்டி! இந்த விஷயத்தில் பிடிவாதம் பிடிக்காதே. மதுரனின் இளவாசுப் பட்டம் சூட்டுவிழா நிகழ்ச்சிக்காக மட்டும் நீ அங்கிருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதைவிட மிக முக்கியமான நிகழ்ச்சியுமிருக்கிறது. மதுரானுக்கு அந்த நடனப் பெண்ணின் மீது ஏற்பட்டுள்ள மோகம் இன்னும் தணியவில்லை. அவளைத்தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாகத் தந்தையிடம் வற்புறுத்தப் போகிறான். நீதான் தகுந்த முடிவெடுக்க வேண்டும்'' என்றார்.

''ஒரு நாளும் நடக்காது. மதுரன் அவளை மணக்கவே முடியாது. தடை செய்வதற்கு வேண்டியவற்றைச் செய்து விட்டேன். கவலைப்பட வேண்டாம்'' என்றாள்.

''மதுரனுக்கு உன் மீது கடும்கோபம் ஏற்படும். அந்தச் சமயத்தில் அவனைச் சமாதானப்படுத்த நீ அங்கே இருக்க வேண்டாமா?'' வல்லவரையர் கேட்டார்.

''என் மீது கோபம் ஏற்படும். அதற்காக நான் என்ன செய்ய முடியும்? ஆனால், உண்மை தெரிந்த பிறகு மதுரன் மிகவும் மகிழ்வான். வியப்படைவான்.''

''அந்த உண்மையைத் தெரிவிக்க நீ அங்கே இருக்க வேண்டாமா? எனவே, பிரம்மதேசத்தில் இருப்பதை விடத் தஞ்சையில் இருப்பது தான் முறை என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த விஷயத்தில் நான் சொல்வதை நீ கேட்டாக வேண்டும்'' - வல்லவரையர் குரலில் சற்றுக் கடுமை இருந்தது.

இளையபிராட்டி எதும் பேசவில்லை. பிறகு அவளும் சற்று அழுத்தந்திருத்தமாக, ''பிரம்மதேசத்திற்கு நான் வரக்கூடாது என்பது தங்கள் எண்ணம் என்றால் நான் என்ன செய்ய முடியும்? நமது மகளை நான் பார்க்கக்கூடாது என்பது உங்கள் விருப்பம் என்றால் நான் என்ன செய்ய முடியும்?'' என்று கூறிப் பெருமூச்சு விட்டு, ''மதுரனுக்கு உங்கள் மகளைத் திருமணம் செய்து வைக்கும் முயற்சியில் நான் ஈடுபடுவதைக் கூட நீங்கள் விரும்ப மாட்டீர்கள் போலிருக்கிறது'' என்றாள்.

''சரி, நான் தஞ்சைக்குப் புறப்படுகிறேன். மதுரனுடைய வாழ்க்கையில் என்னென்ன புதுமைகள் நடைபெறப் போகின்றனவோ? யார் அறிவார்கள்? தஞ்சைக்கு வருமாறு மன்னரிடமிருந்து தங்களுக்கு அழைப்பு வந்தால் நீங்கள் வராமலா இருக்கப் போகிறீர்கள்?'' என்று கூறிவிட்டு, இளையபிராட்டி அங்கிருந்து புறப்பட்டாள்.

''மன்னர் அழைத்தால் மட்டும் நான் வரப் போகிறேனா? இனி என் ஊரை விட்டு நான் எங்குமே செல்லப் போவதில்லை. என் ஊர், என் மாளிகை, என் நாடு, என் மகள்... இதுதான் இனி சகலமும் எனக்கு'' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

என் மனைவி என்று வல்லவரையர் கூறாதது இளையபிராட்டியின் செவிகளில் விழாமலில்லை.



# 26. இன்பவல்லியின் இதயக் குமுறல்

இராசராச சோழ தேவர் பூங்கொடியை மெல்லத் தன் அருகே அழைத்தார். பூங்கொடி சுற்றும் முற்றும் பார்த்து மஞ்சத்தின் அருகே வந்து நின்றாள்.

''இப்படி உட்கார் பூங்கொடி!'' என்று இராசராசன் கூறியது அவளுக்கு வியப்பாக இருந்தது. அவர் தன்னைப் பார்த்துத்தான் கூறுகிறாரா என்று ஒரு கணம் திகைத்தாள்.

அவளுடைய மனத்தில் இதுவரை இருந்து வந்த கோப முடிவுகளெல்லாம் சரிந்து விடும் போல் தோன்றியது.

அரச குடும்பத்தவர்களைப் பற்றி அவள் தாய் இன்பவல்லி கதை கதையாகச் சொல்லி இருக்கிறாள். எந்த அரச குலத்தைப் பற்றிச் சொல்கிறோம் என்று அவள் தாய் முதலில் சொல்லவில்லை.

அரசரைப் பெயரைச் சொல்லவில்லை. தன் வாழ்வில் நடந்த கதை என்று கூறி ஒவ்வொரு நாளும் மெல்ல மெல்லச் சிறிது சிறிதாகக் கூற -

பூங்கொடிக்கு அதைக் கேட்கும்போது ஒரு கணம் சுவையாக இருக்கும். ஒரு கணம் ஆத்திரம் மேலிடும்.

மற்றொரு கணம் அவள் தாயைப் பார்த்துக் கேட்பாள்: ''அம்மா! இப்படிக்கூட ஒரு பெண் இருக்க முடியுமா? வெளுத்ததையெல்லாம் பால் என்று நம்பக் கூடிய பெண்கள் சோழ நாட்டில்தான் இருப்பார்கள் போலிருக்கிறது. நீங்கள் ஏன் இதுவரை உண்மையைச் சொல்லவில்லை? உங்களுக்கு வேதனை தந்தவர் யார்? எந்த அரசர்?'' என்று ஒரு சமயம் அவள் கோபத்துடன் கேட்டிருக்கிறாள்.

அப்படி இவள் கோபம் கொள்ளக்கூடிய, ஆத்திரம் கொள்ளக் கூடிய விதமான சம்பவம் என்ன சொல்லியிருப்பாள்?

நந்திபுரத்து வீதிகளில் இன்பவல்லி சுற்றியலைந்த கதை அது. அது நடந்து எவ்வளவோ ஆண்டுகளாகிவிட்டன. இருபது இருபத்தைந்து ஆண்டுகள் இருக்குமா? இருக்கும். இப்பொழுதும் விழிகளை மூடிக் கொண்டு அந்தச் சம்பவத்தை மீண்டும் நினைத்துப் பார்ப்பது போல், அப்படியே கண் எதிரே தோன்றுவது போல் இன்பவல்லி சொல்லி வரும்போது பூங்கொடிக்குத் தாய் சொல்வதைக் கூர்ந்து கேட்க வேண்டும் போல் தோன்றியது. ஆனால், கேட்கும் போது உணர்ச்சிப் பிரவாகத்தை அவளால் தடை செய்யவும் முடிய வில்லை.

நந்திபுரத்து வீதிகளில் இப்போதைப்போல் மக்கள் நடமாட்டம் அப்பொழுது அதிகமில்லை. பழையாறையின் நந்திபுரம் ஒரு பகுதியாகத் திகழும் அளவுக்கு பழையாறை விரிந்து விட்டது.

அது நடந்து எவ்வளவோ காலமாகி விட்டது. நந்திபுரத்து வீதி களில் அவள் சுற்றியலைந்தாள். ஒரு சமயம் மிகவும் வேண்டிய வரைத் தேடுபவள்போல் இங்குமங்கும் உற்றுக் கவனித்து நோக்கிய வாறு வீதிகளில் விரைந்து நடந்தாள்.

வருவோர் போவோரை நிறுத்திப் பேசினாள். அவள் அறிந்திருந்த - அவளுக்கு மிகவும் வேண்டிய சுமதி எதிர்ப்படுகிறாளா என்று அவள் விழிகள் தேடின. அவள் வீடு இங்குதான் இருந்தது.

வழியில் சந்தித்த ஒரு பெண்ணைப் பார்த்து, "நீ தான் சுமதியா?" என்று கேட்டாள்.

அந்தப் பெண் திருதிருவென்று விழித்தாள். அவள் இன்பவல்லி யைப் பார்த்து மிகவும் பயத்துடன் நா தடுமாறி, "நான் சுமதியில்லை. நீ யார்?" என்று கேட்டுவிட்டு மறுமொழிக்குக் கூடக் காத்திராமல் ஓடி மறைந்தாள்.

இன்பவல்லி, அவள் ஓடுவதைப் பார்த்துச் சிரித்தாள். 'நான் என்ன அப்படிக் கேட்டு விட்டேன்? இந்தப் பெண் இப்படிப் பயந்து ஓடுகிறாளே!' என்று வேதனை அடைந்தாள். சுமதியைச் சந்தித்தால் நந்திபுரத்துச் சூழ்நிலையைக் கேட்டறிந்து கொள்ளலாம். அந்த எண்ணத்தில்தான் சுமதியைச் சந்திக்கப் பரபரத்தாள்.

சுமதி அவள் நினைவில் இருந்தாளே தவிர அவளுடைய முழுத் தோற்றத்தை மறந்து விட்டாள் என்றுதான் தோன்றுகிறது. இல்லாவிடில் அவளுடைய முகம்கூட நினைவில்லாமல் மறந்து



போயிருக்குமா? இல்லாவிடில் வேறு யாரையோ பார்த்து, "நீதான் சுமதியா?" என்று கேட்டிருப்பாளா?

"சுமதி... சுமதி" என்று இன்பவல்லி அழைத்துக் கொண்டே வீதியிலே சென்றாள். சுமதியே வழியில் எதிர்ப்பட்டு விட்டாள்.

இன்பவல்லிக்கு இப்பொழுது சுமதியை நன்றாக அடையாளம் தெரிந்து விட்டது.

"இன்பவல்லி! எப்பொழுது இங்கு வந்தீர்கள்? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டாள்; கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

தன் பெயரை வாஞ்சையுடன் கூப்பிடும் அன்புடையவள் யார் என்று எண்ணி இன்பவல்லி அவளை உற்று நோக்கினாள்.

இன்பவல்லியை அப்போது பார்ப்பவர்களால் உடனே அடையாளம் கண்டு கொள்ள முடியாது. நீராடிச் சில நாள்கள் ஆகியிருந்தபடி யாலும் சாலை வழியே நடந்து வந்ததாலும் புழுதி படிந்திருந்தது. உள்ளத்து வேதனை முகத்திலே பதிந்து வெளிறிப் போயிருந்த தாலும் அவளை உடனே மற்றவரால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

இன்பவல்லியை நோக்கி சுமதி, "நான்தான் சுமதி! என்னைத் தானே தேடுகிறீர்கள்? என்னை அடையாளம் தெரியவில்லையா. இன்பவல்லி?" என்று கேட்டாள்.

இன்பவல்லிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. சுமதியை மூச்சுத் திணறும்படி அழுத்தமாகத் தழுவிக் கொண்டாள்.

"சுமதியேதான்; கண்டு கொண்டேன் சுமதியை. சுமதியுடன் சென்றால் இளையபிராட்டியின் இருப்பிடம் அடையலாம். இளைய பிராட்டியின் மாளிகையை அடைந்தால் அங்கே இளையபிராட்டி யைச் சந்திக்கலாம். இளையபிராட்டியைச் சந்தித்தால் அருண் மொழிவர்மரைப் பற்றி அவரிடம் கேட்டறியலாம்."

நந்திபுரத்து வீதியிலே சுமதியைச் சந்தித்த சம்பவத்தை இப்பொழுது நினைவுபடுத்தித் தன் தாய் கூறுவதைக் கேட்டு வந்த பூங்கொடி, "அம்மா! நீங்களும் இளையபிராட்டி என்று குறிப்பிடுகிறீர்களே! இப்பொழுது 'இளையபிராட்டி... இளையபிராட்டி' என்று அழைக் கிறார்களே அவர்கள்தானே! அவர்களைப் பார்க்கும்போது மிகுந்த

பயமும் மரியாதையும் கொண்டு மற்றவர்கள் நடுங்குகிறார்களே... அவர்கள்தானே!'' என்று கேட்டாள்.

இன்பவல்லி மௌனமாக இருந்தாலும் அவளுக்கு இளைய பிராட்டியைப் பற்றிச் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று தோன்றியது.

''ஆமாம் மகளே! இளையபிராட்டி சர்வ வல்லமையுடையவள். அரசரை ஆட்டிப் படைக்கக் கூடிய சக்தி படைத்தவள். அவள் மட்டும் இல்லையென்றால் - அவள் மட்டும் தடையாக இல்லை என்றால் - அவள் மட்டும் குறுக்கிடவில்லை என்றால் - நான் அவரை எப்போதோ சந்திருப்பேன்.''

''அவர்... அவர் என்று சொல்கிறீர்களே? யாரையம்மா குறிப்பிட்டுச் சொல்கிறீர்கள்?'' என்று பூங்கொடி கேட்டாள்.

''சொல்கிறேன் மகளே! சொல்லித்தான் ஆக வேண்டும். எப்போதாவது நீ இளையபிராட்டியைச் சந்தித்தால் அவர்களிடம் கேட்க வேண்டும் என்பதற்காகக் கேள்விகளை உன்னிடம் சொல்லி வைக்கிறேன்'' என்றாள் இன்பவல்லி.

சொல்லிவிட்டு அவள் மேலும் தொடர்ந்தாள்: ''கேள், பூங்கொடி! நான் சுமதியைச் சந்தித்தவுடன் அவள் என் சுக சௌக்யங்களை விசாரித்தாள். இளையபிராட்டியைச் சந்தித்தால் இளவரசரைச் சந்தித்தது போலத்தான். இளவரசர் இருக்குமிடத்தை எளிதில் கண்டறியலாம் என்று அவளைக் கேட்டேன்'' என்று சொல்லி விட்டு, ''நான் கேட்டவுடன் சுமதி மெல்ல நகைத்துக் கொண்டாள். அந்த நகைப்பில் பல பல செய்திகள் புதைந்திருப்பதைப் போல் தோன்றின.

சுமதி சொன்னாள்: ''இன்பவல்லி! இளவரசர், இளவரசர் என்று இனியும் சொல்லாதீர்கள்; அவர் இப்போது அரசர் - மாமன்னர். அவருக்குப் பட்டம் சூட்டும் விழா விரைவில் நடைபெறப் போகிறது.''

இன்பவல்லி மகிழ்ச்சி நிறைந்த அதிர்ச்சியில் மார்பை மெல்லப் பிடித்துக் கொண்டாள். பிறகு பரபரப்புடன், ''சுமதி! நல்ல செய்திகளைக் கேட்டறிய வேண்டும் என்றுதான் உன்னைத் தேடியலைந்தேன். உன் சாயலைப் போன்றுள்ள ஒரு பெண்ணை நிறுத்தி, 'நீ சுமதி இல்லையா?' என்று கேட்டேன். அவள் என்னைப் பார்த்துப் பயந்து



ஓடி விட்டாள். சுமதி! என்னைப் பார்த்தால் பயப்படும்படியான தோற்றமா இருக்கிறது?'' என்று இன்பவல்லி இரக்கக் குரலுடன் ஆவல் அதிகம் சேர்ந்திருக்கக் கேட்டாள்.

''நான் ஒன்று சொல்லட்டுமா?'' என்றாள் சுமதி.

''சொல்லு சுமதி! உனக்குத் தெரிந்த செய்தியை எல்லாம் சொல்லு. என் தலைவர் என்னைச் சந்திக்கும்போது இரத்தின வியாபாரியாக அறிமுகமானார். பிறகு அவரைச் சோழ இளவரசர் என்று தெரிந்து கொண்டேன். இப்போது அவர் சோழப் பெருநாட்டின் அரசர் என்று அறிந்து கொள்வதில் - என்னை விட மிகப் பாக்கியசாலி வேறு யாரும் இருக்க முடியாது!'' என்று கூறி இன்பவல்லி சற்று நிறுத்திய போது சுமதி கேட்டாள்.

''இன்பவல்லி! சற்று உணர்ச்சிவயப்பட்டு பேசுகிறீர்கள். முன்பெல்லாம் இப்படி இருக்க மாட்டீர்கள். அருண்மொழி வர்மர் அரசராகிவிட்டார். அவரை அரசராகப் பெறுவதில் உங்களைப் போல் இந்த நாட்டின் லட்சோப லட்சம் மக்களும் பாக்கியசாலிகள். நீங்கள் மட்டும் மகிழ்ச்சியடைவதில் என்ன சிறப்பு இருக்கிறது?''

இன்பவல்லி தன் விழிகளை அகல விரித்துக் கொண்டு அரிய செய்தி ஒன்றைச் சொல்வதுபோல், ''சுமதி! இந்த நாட்டில் வாழும் மக்களும் நானும் ஒன்றாகி விடுவோமா? நானும் ஒரு காலத்தில் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், நான் பெரும் பாக்கியசாலி. உனக்குத் தெரியாதா? எனக்கும் அவருக்கும் ஏற்பட்டது தெய்விகக் காதல்! அது சோழப் பெருநாட்டில் ஒருவரும் அடைய முடியாதது. சோழ நாட்டினின்று கடல் கடந்த நாடுகளுக்குப் புறப்பட்ட சோழ நாட்டு இளவரசருக்குச் சோழ அரியணை இல்லை என்ற நிலை அப்போது. தனது இனிய சகோதரரைக் கொலையாளியின் கொடிய வாளுக்குப் பறி கொடுத்த துயரம் நிறைந்த நெஞ்சுடன் அவர் கடற்பயணம் மேற்கொண்டிருக்கிறார். இவையெல்லாம் பிறகுதான் எனக்குத் தெரிந்தது. அவர் ஏறிவந்த கலம் முல்லைத் தீவுக்கருகே நங்கூரம் பாய்ச்சி நின்றது. முல்லைத் தீவில் முழு நிலவு பொழியும் இரவில் அங்குள்ள மக்கள் குன்றக் குரவை ஆடினர்.

''அவர் அப்பொழுது அங்கு வந்தார். குன்றக் குரவையின் பொருள் கேட்டறிந்தபோது அவரடைந்த வியப்பிற்கு அளவில்லை. அவர் விழிகள் சுற்றும் முற்றும் பார்த்தன. முல்லைத் தீவில் உள்ள ஆண்களும் பெண்களும் அழகானவர்கள். அவர்களின் தலைக்கோல்

அழகும், அதிலே குடியிருக்கும் மலர்களின் அழகும் அதற்குச் சமமாகப் போட்டியிடும் மதிமுக அழகும், அந்த நிலவொளியில் சௌந்தர்ய புரியை அவருக்கு நினைவூட்டின. எழில் நங்கையரின் அழகு ரசனையை அவர் கண்டு வியப்படைந்து என்னிடம் அதைப் பற்றி வியந்து பாராட்டியிருக்கிறார். செக்கச் செவேலென்றிருக்கும் அழகு மலரைச் சுற்றி, கருநீல வண்ணமுள்ள குவளையை வைத்துத் தொகுத்து அவர்கள் அணிந்திருக்கும் அழகை அவர் பாராட்டியிருக் கிறார்.

''சுமதி! எங்கள் தெய்விகக் காதல் இப்படிப்பட்ட ரசனை மிகுந்த வார்த்தைப் பரிமாற்றங்களால் வளர்ந்தது. நாங்கள் வேறென்ன பேசியிருக்க முடியும்? முல்லைத் தீவு மக்கள் ஆடினர். கைகோத்து ஆடினர். பாதங்களைத் தாளங்களுக்கு ஏற்ப மாற்றி வைத்து ஆடினர். குதித்து ஆடினர். குனிந்து ஆடினர். பரம்பரம் போல் சுழன்றனர். ஒரு சமயம் வில் போல் வளைந்தனர். ஒருபோது வேல் போல் பாய்ந்தனர். அந்தக் கூத்துக் குழாத்தின் நடுவே வனப்புமிக்க திண் தோள் ஆடவன் எங்கள் தீவு அழகுப் பெண்களின் கை பிடித்தாடுவது எத்துணை சிறப்பாக இருந்தது தெரியுமா? மற்ற பெண்களின் கை பிடித்தாடும்போது எனக்குப் பொறாமையாக இருந்தது. நான் அவரையே பார்த்தவாறிருந்தேன். அவர் பாதங்கள் அசைந்தன. கை விரல்கள் இலேசாகத் தொடையில் தாளமிட்டன. இதழ்கள் மெல்ல முணுமுணுத்தன.

'கோழிக் கொடியன் வாழ்கவென்று கூத்திடுவோமே!
குன்றமர் செல்வன் வெல்கவெனக் கூத்திடுவோமே!'

என்ற பாடலை நாங்கள் ஒன்று சேர்ந்து பாடினோம்.

''அவர் அந்தப் பாடலைக் கேட்டு மயங்கியிருக்க வேண்டும். பிறகு அவர் என்னிடம் சொன்ன வார்த்தைகள் இன்றளவும் நினைவில் இருக்கின்றன. 'இதுபோன்ற பாட்டிலும் பரதத்திலும் மனத்தை ஈடுபடுத்தி லயித்து மெய்மறந்து வாழ்வதை விட நாட்டு விவகாரங்கள் எனக்கு எதற்கு? குறிஞ்சி நிலத்துக் குமரன் புகழ் பாடிக் கூத்தாடியே காலத்தைக் கழிக்கலாம் போலிருக்கிறதே!' என்று அவர் சொன்னதை என்னால் மறக்க முடியவில்லை. அவர் என் பெயரைச் சொல்லி அழைத்தது இன்றும் என் செவிகளில் மது தாரையாகச் சொட்டிக் கொண்டிருக்கிறது. 'இன்பவல்லி' என்றழைத்து அவர் சொன்னார்: 'இங்கே ஆடுபவர்கள் மனிதர்கள்தானா? அல்லது தேவ லோகத்திலிருந்து வந்து இறங்கி இரவிலே ஆடிப் பொழுது புலரா



முன்னர் போய்விடும் தேவ தேவியரா? இந்தத் தீவு தேவர்கள் வந்து வாழும் தீவா? அப்படியென்றால் நான் வந்த கலத்தின் தலைவன் இங்கு ஏன் கலத்தை நங்கூரம் பாய்ச்சினான்? அவனே மாய மனிதனோ? உடன் வந்த வணிகர்கள் எல்லாம் மாயாவிகளோ? இருக்காது, இருக்காது. மாயமாய் இருந்தால், இன்பவல்லி! நீயும் மாயந்தானே? அப்படியென்றால் பொற்பாவையான நீயும் மாய மாகி விடுவாயோ?' என்று அவர் கூறிய அந்தப் போதிலேயே நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

''எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு - ஏழெட்டு ஆண்டுகள் இருக்குமா? இருக்கும், இருக்கும். அவரது இனிய சொற்கள்... அவர் பெயரிட்டு அழைத்த இன்பச் சொற்கள்... பொற் பாவை என்று இதழிலிருந்து விரிந்த மலர்ச் சொற்கள் என்னை நெகிழ வைத்தன. இன்றும் இன்றும் இன்றளவும் அந்த இனிய நினைவில் மிதந்து கொண்டிருக்கிறேன் நான்.

''சுமதி! எங்கள் காதல் வளர்ந்த விதம் தெய்விகமானது என்று சொன்னேனே... அது வெறும் புகழ்ச்சியான வார்த்தை என்று எண்ணி விடாதே! அப்பொழுது நான் விரும்பிப் பாடிய ஒரு பாடலை இப்போது பாடிக் காட்டுகிறேன்.

'குன்றெறிந்து குலம் காத்த
குமரன் வந்து காவானோ தோழி?
மன்றிலும் பொதியிலிலும்
மகிழ்ந்து விளக்குவான்
மலையிடைப் பொழிலிடை
மலர்ந்தே வாழ்பவன்
இன்றிங்கு வந்தெனக்கு
ஆறுதல் கூறியே
இடரொழிந்து இனிமை
கூட்டுவனோ தோழி?'

அந்தத் தெய்வமணம் கமழும் பாடல் எங்களை மிக நெருக்க மாக்கியது.

''இப்பொழுது சொல் சுமதி! நாங்கள் முல்லைத் தீவில் பழகிய போது எங்களிடையே வேற்றுமை எதுமில்லை. சில காலத்திற்குப் பிறகுதான் அவரை ஓர் இளவரசர் என்று புரிந்து கொண்டேன். இப்பொழுது அவர் அரசர் என்றறியும்போது எனக்கு இரட்டிப்பு

மகிழ்ச்சி என்றாலும், அவர் மாமன்னராவார் என்று முன்பே அறிந்து அவரை நான் காதலிக்கவில்லை என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும். சோழ நாட்டு எளிய மக்கள் மகிழ்ச்சியடைவதை விட எனது மகிழ்ச்சியில் உயர்வு இருக்கிறது என்பதை நீ ஒப்புக் கொள்ள வேண்டும். நான் பாக்கியசாலி என்பதை நீ ஏற்றுக் கொள்ள இன்னும் எந்தவிதத் தடையும் உனக்கு இல்லை அல்லவா!''

இன்பவல்லி தன்னை மறந்து பேசுகிறாள் என்பதைச் சுமதி உணர்ந்தாள். பேதைப் பெண். மன்னர் மீது அவள் கொண்டுள்ள காதல் அவ்வளவு எளிதில் நிறைவேறுமா என்பதும் சந்தேகமே! நிறைவேறவும் வாய்ப்புக் கிடையாது என்பதே உண்மை. இதை எப்படி அவளிடம் எடுத்துச் சொல்வது?

சுமதி நிலை கொள்ளாது தவித்தாள். இன்பவல்லியின் நிலையைக் கண்டு அவள் பரிதாபப்பட்டாள்.

''சுமதி! நீ ஏதோ சொல்ல நினைக்கிறாய். இப்போதே சொல்லி விடு. பிறகு என்னைச் சந்திப்பதே பெரும்பாடாகி விடும். அருண் மொழி வர்மர் சோழ நாட்டு அரசர் என்றால் நான் அரசி! பேரரசிக்கு உண்டான ஆடம்பரம் எனக்குப் பிடிக்காது. மாளிகை வாழ்வையும் வெறுப்பவள். ஆனால், நாடக பாத்திரத்திற்கேற்ப நடிக்க வேண்டுமே! அதனால் கட்டுப்பாட்டிற்குள் நான் அகப்பட்டுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

''என்னைச் சந்திப்பதற்குக் கட்டுப்பாடு. நான் என் விருப்பம் போல் எங்கும் செல்ல முடியாது. என்னைத் தொடர்ந்து பணிப் பெண்கள்; மெய்க்காவலர்கள். கூண்டுக்கிளிதான்! என்னை இளைய பிராட்டியின் மாளிகைக்கு நீ அழைத்துச் செல்லும் வரை நான் சாதாரண இன்பவல்லிதான்! அதனால் இப்போதே சொல்லி விடு. பிறகு நான் சோழ நாட்டுப் பேரரசி! இன்பவல்லி! இன்பவல்லி என்ற பெயரை மாற்றி வேறு பெயரைச் சூட்டி விடுவார்கள். கோப்பெருந் தேவி, லோகமாதேவி என்று பெயரிலும் உயர்வைக் கிடைக்கச் செய்து விடுவார்கள்! அப்படித்தானே சுமதி?'' என்று கூறிச் சிரித்தாள் இன்பவல்லி. அந்தச் சிரிப்பு வழக்கத்திற்கு மாறுபட்டதாக இருந்தது.

சுமதி நடு நடுங்கினாள். சொல்லலாமா, வேண்டாமா என்று உள் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தபோதே மனக் கட்டுப்பாட்டை மீறி அந்த எச்சரிக்கை வெளிப்பட்டது. இன்பவல்லியின் காதலுக்கு எப்படியும் இடையூறு வரும் என்று சுமதிக்குத் தெரியும். அதை



முன்னதாகவே இப்பொழுதே எச்சரித்து விட்டால், பிறகு அவர் அதிர்ச்சியடைவதிலிருந்து தடுக்கலாம் என்ற எண்ணம் தலை தூக்கி நின்றது.

''இன்பவல்லி!'' என்றழைத்தாள்.

''சொல்லு, சுமதி! சொல்லு.''

''இன்பவல்லி! நீங்கள் சோழ நாட்டின் அரசியாக ஆகப் போவதில் எனக்கு மகிழ்ச்சி. ஆனால்...'' என்று கூறி நிறுத்தினாள். சுமதி என்ன சொல்லப் போகிறாள் என்பதை அறிய இன்பவல்லி ஆவலுடன் காத்திருந்தாள்.

''இன்பவல்லி! சோழ நாட்டின் அரசியாகக் கூடிய பாக்கியம் ஒரே ஒருவருக்கே உண்டு என்று உனக்குத் தெரியாதா?'' சுமதி கேட்டாள்.

சுமதி ஏன் இவ்வாறு கேட்கிறாள் என்று இன்பவல்லிக்குத் தோன்றவில்லை. அவள் உள்ளத்தில் திடீரென்று பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

''ஆம்; நான் அரசியாகப் போகிறேன். என்னிடம் அருண்மொழிக் குள்ள அன்பின் ஆழம் உனக்குத் தெரியாது. அரசியாகக் கூடிய அதிர்ஷ்டம் என் ஒருத்திக்கே உண்டு!'' இன்பவல்லி அழுத்தமாகச் சொன்னாள்.

சுமதி மெல்லச் சிரித்தாள்... ''இருக்கலாம். ஆனால், அருண் மொழி வர்மருக்கு மகுடம் அணிவிக்கும் திருவிழா விரைவில் நடக்கப் போகிறது. கோலாகலமான அந்த விழாவின்போது அரியணையில் அவரருகே சரிசமமாக அமர்வதற்கு ஒரு பெண் வேண்டும். அவள்தான் அரசி என்ற அந்தஸ்து பெற்றவள். இருவருக்கும் மகுடம் அணிவித்துச் செங்கோல் அளிப்பார்கள். வெண் சாமரம் வீசுவார்கள். மங்கல ஆரத்தி எடுப்பார்கள். அருண் மொழி வர்மருக்குப் பட்டப்பெயர் ஒன்று புதிதாகச் சூட்டுவார்கள். அரசியின் பெயர் மாறுவதைத் தெரிந்து வைத்திருக்கிறாய் அல்லவா? அதைப் போலத்தான். அந்தப் பெயருக்குரியவளைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். அரசர் அருகே உடன் அமருபவளுக்கு லோகமாதேவி என்ற பெயர் சூட்டப் போகிறார்களாம்!''

சுமதி சொல்லி வரும்போதே இன்பவல்லியின் முகம் மாறியது.

''அருண்மொழி வர்மருக்குப் புதுப் பெயரா? அரசியாக அவருடன் அமர வேறு ஒருத்தி வருகிறாளா? என்னால் நம்ப முடிய

வில்லையே. சுமதி! என்னை இளையபிராட்டி வீட்டிற்கு உடனே அழைத்துச் செல்'' என்று கூவினாள். அவள் உடல் நடுங்கியது.

**ப**ல ஆண்டுகளுக்கு முன் நடந்து இந்தச் சம்பவத்தைக் கொண்ட கதையை இன்பவல்லி தன் மகள் பூங்கொடிக்குச் சொல்லி வரும்போது, பூங்கொடி கேட்டாள்: ''அருண்மொழி வர்மரென்று யாரைச் சொல்கிறீர்கள்?''

''மகளே, பூங்கொடி! முழுக் கதையையும் சொல்கிறேன்; பொறுமையாகக் கேள். உனக்கு எழும் சந்தேகத்தையெல்லாம் தெளிவுபடுத்திக் கொண்ட பிறகு ஒரு முடிவுக்கு வா. நான் சொல்வதைப் போல் நீ செய். ஆனால், நான் செய்ததைப் போல் நீ செய்யாதே'' என்றாள் இன்பவல்லி.

இதுவரையில் ஏதோ சுவையாக கதையைக் கேட்பது போல் கேட்டு வந்த பூங்கொடி நிமிர்ந்து உட்கார்ந்தாள். இன்பவல்லி தன் மகளிடம் அருண்மொழி வர்மரைப் பற்றித் தெரிவித்தாள்.

பூங்கொடிக்கு ஏற்பட்ட வியப்புக்கு எல்லையில்லை. ''அம்மா! அருண்மொழி வர்மருக்குத் திருமணம் ஆகிவிட்டது என்று சுமதி சொன்னதைக் கேட்டவுடன் நீங்கள் என்ன செய்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''குழந்தாய்! நான் என்ன செய்தேன்? அந்தத் துயரச் சம்பவத்தை நீ ஏன் இப்பொழுது நினைவுபடுத்துகிறாய்?'' இன்பவல்லியின் குரல் தழுதழுத்தது. விழிகளில் நீர் தானாகத் ததும்பி வழியும் நிலையில் இருந்தது.

''அம்மா! என்னிடம் சொல்ல வேண்டாம் என்று உங்களுக்குத் தோன்றினால் மனத்தில் வருத்தத்தைச் சுமந்து கொண்டு சொல்ல வேண்டாம். ஏதோ கதை சொல்கிறீர்கள் என்றுதான் ஆவலுடன் கேட்கத் தொடங்கினேன். கதை, தங்கள் சொந்த வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது என்பதை அறியும்போது ஒரு கணம் ஆவலும், ஒரு கணம் வேதனையும் ஏற்பட்டன. முழுக் கதையையும் தாங்கள் சொல்ல வேண்டாம் தாயே! எனக்குப் புரிந்து விட்டது. நீங்கள் வஞ்சிக்கப்பட்டு விட்டீர்கள். தாங்கள் சோழ நாட்டு அரசியாகும் பேறு பெறவில்லை. அப்படித்தானே?'' என்று பூங்கொடி கேட்கும்போது அவள் விழிகளில் சீற்றம் கூத்தாடியது. இன்பவல்லி மீண்டும் தொடர்ந்தாள்.



''நான் அருண்மொழி வர்மரைச் சந்தித்தேன். அவரது பட்டமேற்கும் விழாவில் எனக்கென்று ஓர் இடம் மண்டபக் கோடியில் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தில் அமருவதற்கு நான் விரும்பவில்லை. சபையில் நடனமாடவே விரும்பினேன். அருண்மொழிக்கு முடிசூட்டு விழா நடக்கும் நாளில் முதல் நடனம் என்னுடையதாக இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். இளையபிராட்டியார் தடை விதித்து விட்டார். இளையபிராட்டி மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆனால், பிறகுதான் நான் அறிந்தேன். அருண்மொழி வர்மரே சுயநலத்துடன் நான் ஆடுவதைத் தடுத்துவிட்டார் என்பதைப் புரிந்து கொண்டேன். அவர் கூறிய சொற்கள் இன்றளவும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

'இன்பவல்லி! என்னுடைய சுயநலம் காரணமாகத்தான் நான் உன்னை நடனமிட அனுமதிக்கவில்லை. சிற்பத்தில்தான் உன் உருவம் பதிய வேண்டும். என் இதயத்தில்தான் உன் உருவம் பதிய வேண்டும். நீ பொது நடனப் பெண் இல்லை. மற்றவர்களுக்காக நீ ஆடக் கூடாது. உன் நடனத்தை நான் அவ்வப்போது கண்டு கொண்டு தான் இருக்கப் போகிறேன்' என்று அவர் கூறியவை இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.''

''அவ்வாறு அவர் சொன்னதைப் போல் உங்கள் நடனத்தை அவர் அவ்வப்போது கண்டு ரசித்தாரா?''

''இல்லை பூங்கொடி! என்னிடம் இளையபிராட்டி ஓர் உறுதிமொழி பெற்றுக் கொண்டார்.''

''என்ன உறுதிமொழி அம்மா?''

இன்பவல்லி சற்று மௌனமாக இருந்தாள். பிறகு கூறினாள்: ''பூங்கொடி! அந்தச் செய்தி முழுமையும் உனக்குத் தெரிய வேண்டாம். அருண்மொழி வர்மரை மறந்து விடுமாறு என்னை இளையபிராட்டி கேட்டுக் கொண்டார். சோழ நாட்டில் எந்தக் காலத்திலும் வாரிசுரிமைச் சண்டை வந்து விடக்கூடாது என்று கேட்டுக் கொண்டார். அதனால் அருண்மொழியை நான் சந்திக்கவே கூடாது என்றும் உறுதி பெற்றார்.''

''வாரிசுரிமை சண்டையா?'' - பூங்கொடிக்குப் புரியவில்லை.

''உனக்கு அவை பற்றி இப்போது தெரிய வேண்டாம். என் வயிற்றில் அவர் மூலம் ஒரு குழந்தை பிறந்து, பட்டத்து அரசிக்கும்

குழந்தை பிறந்தால், நாளைக்குச் சோழ நாட்டின் அரசுரிமைக்கும் போட்டி ஏற்படுமல்லவா?''

''அதெப்படி அம்மா ஏற்படும்? அரசர் விரும்பிச் சம்மதிப்பவருக்குத்தானே பட்ட உரிமை? அருண்மொழி வர்மன் வாரிசுரிமைப் போர் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள மாட்டாரா?''

இன்பவல்லி மெல்ல நகைத்தவாறு, ''இப்பொழுது வேண்டாம். பிறகு சொல்கிறேன் மகளே!'' என்றாள்.

''அருண்மொழியைப் பிறகு நீங்கள் சந்திக்கவில்லையா அம்மா? பெரும் தியாகம் செய்துள்ளீர்கள். தங்களுக்குத் தொல்லை தந்தவர்களை எளிதில் விட்டுவிடக்கூடாதம்மா'' என்று பூங்கொடி சீறிய போது, இன்பவல்லி மேலும் கூறினாள்.

தனக்கும் அருண்மொழிக்கும் ஏற்பட்ட சந்திப்பைப் பற்றிய முழு விவரமும் கூறினாள். இளையபிராட்டி மிகவும் கோபித்துக் கொண்டு கண்காணாத இடத்தில் தன்னைக் கொண்டு குடியமர்த்தியதைப் பற்றிக் கூறினாள்.

பூங்கொடி விழி நீரைத் துடைத்துக் கொண்டாள்.

''அப்படியென்றால் பிறகு நீங்கள் திருமணம் செய்து கொள்ள வில்லையா?'' என்று கேட்டபோது இன்பவல்லி பெரிதாகச் சிரித்து விட்டாள்.

தன் மகள் இன்னும் உலகம் அறியாதவளாயிருக்கிறாளே என்று கவலைப்பட்டு மகளை அருகே அழைத்துச் சுருக்கமாக நடந்தவற்றைக் கூறினாள். அரச குடும்பத்தவர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றி எடுத்துக் கூறினாள்.

பூங்கொடி அப்பொழுது ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். சோழ அரச குடும்பத்தார் மீது வெஞ்சினம் கொண்டாள்.



# 27. சாளரத்தில் கேட்ட குரல்!

இராசராச சோழ தேவர் பூங்கொடி கூறியவற்றை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

தன்னுடைய தாய் கூறிய சொந்தக் கதையை அப்படியே அவரிடம் ஒரு வரி விடாமல் கூறி வந்தாள்.

யாரிடம் சொல்கிறோம் என்பதை அவள் தெரிந்துதான் சொன்னாள். தன் தாய் குறிப்பிட்ட சோழ அரசர் இராசராசர் என்று அவள் புரிந்து கொண்டுதான் மிகக் கவனத்துடன் அவரிடம் பேசினாள். தன் உள்ளத்தில் எழுந்த வெஞ்சினத்தை அவள் மனத்திற்குள் அடக்கிக் கொண்டு பேசினாள்.

சோழ அரச குடும்பத்தவர் மீது அவள் எந்த முறையில் தன் கோபத்தைப் புலப்படுத்தப் போகிறாள்? எந்த விதத்தில் பழி தீர்த்துக் கொள்ளப் போகிறாள்? ஏதாவது திட்டம் தீட்டியிருக்கிறாயா? அரச குடும்பத்தவரைத் தீர்த்துக் கட்டுவது அவள் திட்டமாக இருக்குமா?

இல்லை... இல்லை. அப்படிப்பட்ட குணம் அவளிடமில்லை. அதை வளர்த்துக் கொள்ளும் ரத்தம் எள்ளளவும் அவள் உடலில் ஓடவில்லை.

தன் கதையை மெல்ல மெல்லத் தன் மகளிடம் சொல்லி வரும்போது, அவள் தாய் இன்பவல்லி, தன் மகளுக்கு ஒழுக்கத்தைக் கற்றுத் தந்தாள். கட்டுப்பாட்டைக் கற்றுத் தந்தாள். அடக்கத்தைக் கற்றுத் தந்தாள். தான் அறிந்த கலையைக் கற்றுத் தந்தபோது அந்தக் கலை புனிதமானது என்பதைத் தன் மகளுக்குத் தெளிவு படுத்தினாள். நாட்டியக் கலையை அரச குடும்பத்தவர்களுக்கு மட்டும் உரிய கலையை வளர்க்காமல் நாட்டு மக்களுக்குப் பயன்படுமாறு, அவர்கள் ரசிக்குமாறு, அவர்கள் அறிந்து கொள்ளுமாறு செய்வதைக் கடமையாகக் கொள்ளுமாறு அழுத்தமாகச் சொன்னாள்.

தன் தாயின் ஒவ்வொரு சொல்லையும் பூங்கொடி கவனமாக ஏற்றாள். இளவரசன் மதுரனைச் சந்தித்தபோதும், இப்பொழுது அரசர் இராசராசருடன் சமதையாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போதும், அவள் தன் இதயக் குமுறலை மிகப் பிரயாசையுடன் அடக்கிக் கொண்டாள்.

இராசராசருடன் பேசிக் கொண்டிருந்தபோது அவள் தன் தாய்க்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றித் தன் மனத்தில் பட்டதைச் சொல்லி விடத் துடித்தாள்.

''பூங்கொடி! உன் தாய் எங்கே இருக்கிறாள்?'' இராசராசர் கேட்டார். அவர் ஓரளவுக்குப் புரிந்து கொண்டு விட்டார். அவள் தாயைக் காண வேண்டும் என்ற பரபரப்பு அவருக்கு ஏற்பட்டது. மனத்தை அடக்கியாள அவரால் முடியாதா?

பூங்கொடி உடனே மறுமொழி கூறவில்லை. அவரை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து விட்டுத் தலைகுனிந்தாள்.

''என் தாய் மிகத் தொலைவில் இருக்கிறாள்'' என்றாள்.

''மிகத் தொலைவில் என்றால்?''

''கடல் கடந்த தீவுகளுக்கு அப்பால் என்று சொல்லி விட மாட்டேன்!''

பூங்கொடி இவ்வாறு கூறிவிட்டு அரசரை நிமிர்ந்து நோக்கினாள்.

இராசராசர் திடுக்கிட்டார். 'இந்தப் பெண் என்ன சொல்கிறாள்?' அவர் சற்றுச் சிந்தித்தார். 'கடல் கடந்த நாடுகள் என்று கூறி முல்லைத் தீவை நினைவுபடுத்துகிறாளா?'

''என்ன சொல்கிறாய் பூங்கொடி? யாருடன் பேசுகிறோம் என்ற நினைவாவது இருக்கிறதா? உன்னைக் கண்டவுடன் என் மனத்தில் ஒருவிதப் பாசம் சூழ்ந்து கொண்டது. அதனால் உன்னை இங்கே அழைத்தேன். அருகே உட்கார வைத்தேன். பணிப் பெண்களை ஓர் எல்லைக்கு அப்பால் நெருங்க விடுவதில்லை'' - சிறிது கடுமை அவர் குரலில் சிலிர்த்ததைக் கேட்ட பூங்கொடி மெல்லத் தன்னை அடக்கிக் கொண்டாள்.

எழுந்து நின்றாள். மிகவும் பயந்தவள் போல் தன்னைப் புலப்படுத்திக் கொண்டாள். விழிகளிலே பயத்தைத் தேக்கினாள். புருவத்தில், உதடுகளில், தோள் குலுக்கலில், கைகளைச் சேர்த்துக்



கோத்துக் கொண்டதில் மிக மிகப் பணிவினைத் தெரிவித்துக் கொண்டாள்.

அவளிடம் ஏற்பட்ட மாற்றத்தை இராசராசன் கணத்தில் புரிந்து கொண்டார். ஆனால், பூங்கொடியிடம் ஏற்பட்ட மாற்றம் நடிப்பு என்பதை அவர் உணரவில்லை.

பூங்கொடியின் முக மாற்றத்தை அவர் இமை கொட்டாமல் கண்டவாறிருந்தார். பூங்கொடியின் உடல் பயத்தால் நெளிந்ததாக எண்ணினார். அவளுடைய ஒவ்வோர் அங்க அசைவும் அவருக்கு எதையோ உணர்த்தின. அவர் மனத்தில் நிகழ்ச்சிக் கோடுகள் பளிச்சிட்டன. சம்பவக் கோவைகள் மின்னலிட்டன.

''பூங்கொடி! உன் வீடெங்கே என்று கேட்டேன். தக்க மறுமொழி இல்லை'' என்று அரசர் நினைவுபடுத்தினார். நினைவுபடுத்ியதன் மூலம் அவர் எதையோ புரிந்து கொள்ள முயன்றார். மறைந்திருக்கும் ஓர் உண்மையை அறிந்து கொள்ள முயன்றார்.

''என் வீட்டைப் பற்றி தாங்கள் வினவவில்லை என்பதை நான் எடுத்துக் கூறுவதற்குப் பொறுத்தருள வேண்டும்'' - பூங்கொடி அடக்கமாகக் கூறினாள். ''கோட்டைக்கு வெளியே நான் தங்கியிருக்கும் வீட்டைப் பற்றியா கேட்கிறீர்கள்?'' - பூங்கொடி அரசரை நிமிர்ந்து நோக்கினாள்.

ஆகா; அதே தோற்றம், அதே அலையும் விழிகள்!

இராசராசர் தடுமாறினார். இவள் - இவள் அப்படியே இன்ப வல்லியைப் பிரதிபலிக்கிறாள். விழிகளை மெல்ல மூடிக் கொண்டு ஒருமுறை பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியை மனத் திரையில் வரி வடிவமாக வரைய முயன்றார்.

''பூங்கொடி! உன் தாய் எங்கே இருப்பதாகச் சொன்னாய்?'' மீண்டும் கேட்டார்.

''மாமன்னர் அவர்களே! உடனே இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல என்னால் முடியவில்லை. என் தாய் இருப்பிடம் தஞ்சைக் கோட்டையினின்று மிகத் தொலைவுதான்'' பயத்தால் வார்த்தைகளைத் தடுமாறிச் சொல்வது போல் சொன்னாள். நடித்தாள்.

ஆனால், விழிகளின் கீழ்க் கோணம் மட்டும் அரசரின் முழு முக உணர்ச்சியையும் நிறுத்துப் பார்க்க முயன்றன.

காவிரிக் கரையைத் தாண்டியா?''

''ஆமாம்!''

''கடற்கரைக்கு அருகிலா?''

''ஹூஹூம்...''

''பழுவூருக்கு வந்தாயே அதன் அருகிலா?''

''இல்லை.''

''உன் வீட்டின் வழி உனக்குத் தெரியாதா?''

''தெரியும். ஆனால், இங்கிருந்து சரியான வழி சொல்லத் தெரியவில்லை.''

''சிறு வயதிலிருந்தே அங்கேதான் வசிக்கிறீர்களா?''

''இல்லை... இல்லை... நாகப்பட்டினம் அருகே சிறிது காலம் வசித்தோம். கரூர் போகும் வழியில் கொஞ்சநாள்...''

''பிறகு?''

''இப்பொழுது இருக்குமிடத்தில்தான் பல ஆண்டுகளாக வசிக்கிறோம்.''

''உன்னுடன் யார் யார் வசிக்கிறார்கள்?''

''நாங்கள் வசிக்கும் இடம் சின்னஞ்சிறு கிராமம். கிராமம் என்று கூடக் கூற முடியாது. ஏழெட்டு வீடுகள். பெரிய தோட்டம். அருகே பெரிய ஏரி. சற்றுத் தொலைவில் ஒரு பெரிய ஆறு. அதன் அருகே வானந்திரம். குறுக்கு வழியாகச் சென்றால் இரு நாள்கள் பயணத்தில் உறையூரை அடையலாம்.''

''ஓ! அருமையான இயற்கைச் சூழ்நிலை...''

''ஆமாம்; மனித சஞ்சாரமற்ற இடம். எங்கள் வீட்டருகே வசிப்பவர்கள் மிகவும் நல்லவர்கள். நல்லவர்களாகத்தான் இருந்தாக வேண்டும்.''

''அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள்?''

''அவர்கள் சுகவாசிகள். அவர்கள் எந்த வேலையும் செய்ய வில்லை. அவர்களுடைய குழந்தைகள் என் தாயிடம் நடனம் பயில்கிறார்கள். தங்கள் மகன்களும் மகள்களும் நடனம் பயில



வேண்டுமென்பதற்காகவே அவர்கள் அந்தக் கிராமத்தில் தங்கி யிருக்கிறார்கள்.''

''எவ்வளவு பேர் நடனம் பயில்கிறார்கள்?''

''பத்துப் பேர்.''

''ஏழு குடும்பத்திற்கும் சேர்த்துப் பத்துப் பேரா?''

''இல்லை... நான்கு குடும்பத்தினரின் வீட்டைச் சேர்ந்த இளைஞர்களும், இளம் பெண்களுமாகப் பத்துப் பேர்.''

''மற்ற மூன்று குடும்பத்தினர்?''

அரசர் இவ்வாறு கேட்டவுடன் பூங்கொடி சற்று மௌனமானாள். பிறகு, ''அவர்கள் வீட்டிலிருந்து ஒருவரும் நடனம் பயிலவில்லை'' என்றாள்.

''பிறகு எதற்காக அவர்கள் அங்கே இருக்கிறார்கள்?'' - மன்னர் புருவங்கள் மறுமொழி அறிய உயர்ந்தன.

''எங்களைக் கவனித்துக் கொள்ள'' என்று கூறிய பூங்கொடியின் முகத்தில் சற்றுக் கோபம் சுடர் விட்டது.

''உங்களைக் கவனித்துக் கொள்ள மூன்று குடும்பங்களா?''

''ஆமாம். எங்களுக்கு வேண்டிய நலன்களைக் கவனிக்க... உதவ... அந்தக் கிராமத்தை விட்டு வெளியே எங்கும் சென்று பண்டங்களுக்காக நாங்கள் அலைந்து திரியாமல், எங்களுக்கு வேண்டிய வசதி செய்து தர.''

''ஓ! உங்களுக்கு ஒருவிதக் குறையும் வராமல் பார்த்துக் கொள்ள... அப்படியென்றால் உனக்கும் உன் தாய்க்கும் எந்தவிதக் குறையும் இல்லை. பசி இல்லை. பயமில்லை. நாட்டியம் பயில் பவர்கள் எல்லாரும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ?''

''அப்படிச் சொல்ல முடியாது. என் தாயிடம் நாட்டியக் கலையைக் கற்று வடக்கே சென்று ஆடிப் பிழைத்து வாழப் போகிறவர்கள்.''

''உன் தாயின் நாட்டியத் திறமை அவர்களுக்குத் தெரிந்திருக் கிறது...''

''சோழ சக்ரவர்த்திகளின் அருளால் என் தாயின் நடனப் புலமை திக்கெட்டும் பரவியிருக்கிறது.''

அரசர் முகம் சற்றுச் சிவந்தது.

''என் அருள் என்று சொல்கிறாயே... சோழ நாட்டில் கலைக்கு மதிப்புண்டு. கலைஞர்களை மிகவும் போற்றுவார்கள். நீ சொல்வது போல் உன் தாய் சிறந்த நடனக் கலை அறிந்தவள். அரசு ஆதரவின்றியே உன் தாயால் வாழ முடிகிறது. உங்களை மக்களே கவனித்து கவலைப்படாமல் உங்களை வாழ வைத்துக் கலையையும் வளர்க்கிறார்களா?''

''மாமன்னர் அவர்களே! தங்கள் உத்தரவின்பேரில்தான் என் தாய்க்கு உதவுகிறார்கள். அவர்களாகவே முன் வந்து உதவவில்லை. என் தாயைக் கண்ணைப் போல் பாதுகாக்கிறார்கள். ஒரு குறையும் வராமல் காப்பாற்றுகிறார்கள். கிராம எல்லையைத் தாண்டவிடாமல் எல்லாவித சௌகர்யங்களும் ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள்.''

அரசர் ஏதோ கூற வாயெடுத்தார். பூங்கொடி தொடர்ந்து பேசினாள்... ''அந்த ஏழு குடும்பத்தினரைத் தவிர மற்றவர்கள் அந்தக் கிராமத்திற்குள் நுழையக் கூடாது. அவ்வளவு கண்டிப்பு. என் தாயும் வெளியே செல்லக்கூடாது.''

அரசர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''ஒரு கலைஞருக்கு அவ்வளவு கண்டிப்பா? கட்டுப்பாடா? கலைக்கு இவ்வளவு பாதுகாவலா?'' அரசர் வியப்புடன் கேட்டார்.

பூங்கொடியின் குரலில் சற்று ஏளனம் இருந்தது.

''கலையை விடக் கலைஞருக்குத்தான் காவல். சாளுக்கிய நாட்டவர்கள் கலைஞரைக் கவர்ந்து சென்று விடக்கூடாது என்பதில் சோழ சக்ரவர்த்திக்கு அவ்வளவு அக்கறை.''

இராசராசர் முகம் மேலும் சிவந்தது. ''என்ன சொல்கிறாய் பெண்ணே! நான் அப்படி ஏதும் உத்தரவிடவில்லையே! இப்படி ஒரு கிராமம் இருப்பதாகவும் அந்நிய நாட்டவர்கள் ஏழு குடும்பங்களுடன் தங்கள் மகன், மகள்களுக்கு நடனக் கலையைக் கற்றுத் தரத் தங்கியிருப்பதும் தெரியாது. நடனக் கலைஞருக்கு வேலியிட்டுக் காவல் காப்பதும் எனக்குத் தெரியாது. நான் ஒருபோதும் அப்படி உத்தரவிடவில்லையே...'' என்று கூறியபோது அவரிடம் பரபரப்பு ஏற்பட்டது புலப்பட்டது.

''ஓ! சோழ சக்ரவர்த்திகளின் பெயரைச் சொல்லித்தான் அந்தச் சிறு கிராமத்தில் எல்லாம் நடைபெறுகின்றன. ஏழெட்டு வயதுடையவர்



களாக இருக்கும்போது நடனம் கற்க வந்தவர்கள் இன்று விவரம் தெரிந்த இளம் பருவத்தினராகத் திகழ்கிறார்கள். அழகிய இளம் வாலிபர்கள் மீசை முளைக்காத பருவத்தில் 'தா... தை' என்று தாளத்திற்கேற்ப ஆடியவர்கள், இன்று அரும்பியுள்ள மெல்லிய மீசையில் துளிர்க்கும் வியர்வைத் துளியை அவ்வப்போது துடைத்துக் கொள்கிறார்கள். கச்சையணிந்து மேலாடையை அள்ளி இடுப்பில் செருகிக் கொண்டு, என் தாயின் கண்டிப்பான கண் வீச்சுக்கு இலக்காகி ஆடை சற்றும் விலகாமல் மார்பைக் குலுக்கி, கரங்களை வளைத்து இடையே அசைத்து, குனிந்து வளைந்து, நெளிந்து பாதங்களைத் தாளத்திற்கேற்ப வைத்து, சதங்கை ஒலிக்க நடனம் பயில்கிறார்கள். அவர்கள் விவரம் புரிந்து கொள்ளும் பருவமடைந்து விட்டார்கள். அவர்கள் தங்கள் நடனக் குருவாம் என் தாயை, சோழ நாட்டைச் சுற்றிப் பார்க்க அழைக்கிறார்கள். சோழ சக்ரவர்த்திகளைத் தரிசிக்க அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால்... ஆனால்'' பூங்கொடி மெல்லப் பேச்சை நிறுத்தினாள்.

''ஆனால், என்ன? சொல் பூங்கொடி! நடனம் பயிலும் நடனமணிகளை அழைத்து வருவதற்கென்ன தடை?'' அரசர் கேட்டார்.

''ஆமாம்... தடைதான். என் தாய், கிராமத்தைத் தாண்டக்கூடாது. எனக்கும் அப்படித்தான். ஆனால், நான் ஒருவரும் அறியாமல் புறப்பட்டு வந்து விட்டேன். நான் போயாக வேண்டும். அதற்குள் எனக்குத்தான் எவ்வளவு தொல்லைகள்! ஒரு பெண் சுதந்திரமாக சோழ நாட்டில் நடமாட முடியவில்லையே... சோழ சக்ரவர்த்திகள் இராசராச சோழ தேவரின் பொற்காலம்தான் இங்கே நடைபெறுகிறதா?'' பூங்கொடியின் குரலில் கம்பீரம், அழுத்தம், வேகம், ஆத்திரம் எல்லாம் கலந்து வீசின.

இராசராசர் நிமிர்ந்து உட்கார்ந்தார். எழுந்திருக்கும் நிலையில் இருந்தார். கரவொலி எழுப்பினார்.

''யாரங்கே?'' என்று குரல் கொடுத்தார்.

பொறுப்பு மிகுந்த இரண்டு பணியாட்கள் விரைந்து வந்தனர்.

''நான் புறப்பட வேண்டும். ரதம் ஆயத்தமாகட்டும்'' என்று கட்டளையிட்டார். பூங்கொடியை நோக்கி, ''உம்... புறப்பட வேண்டும். உன்னை ஆயத்தப்படுத்திக் கொள். உணவை உடனே முடித்துக் கொள். வேற்றுடை மாற்றிக் கொள். உன் தாயை உடனே

நான் கண்டாக வேண்டும். நீ எனக்கு அந்தக் கிராமத்திற்குச் செல்லும் வழியைக் காட்டுகிறாய்'' என்றார்.

பூங்கொடி திடுக்கிட்டாள். தன் தாயைக் காண அரசர் வருகிறாரா? உடனே புறப்படுகிறாரா?

'அரசரை அழைத்துச் செல்லலாமா... வேண்டாமா?' என்று கணம் சிந்தித்தாள்.

''உம்... தாமதப்படுத்தாதே. உடனே புறப்பட வேண்டும். வேறு நல்ல பட்டாடை தரச் சொல்கிறேன். தலை வாரிப் பூச்சூடி, டத்தழகுடன் என்னுடன் புறப்பட்டு வா. இன்னும் ஒரு நாழிகைக்குள் நாம் புறப்படுகிறோம்'' - அரசர் பேச்சு கட்டளையாக எழுந்தது.

**த**ஞ்சை சிவகங்கை மாளிகையின் வாசலுக்கு வந்த இராசராசர், கம்பீரமாக இருபுறமும் பார்த்தார். அவரது தோற்றத்தில் புதுப் பொலிவு இருந்தது. முதுமை கூட சற்று ஒதுங்கியிருப்பது போல் தோன்றியது.

அவர் எங்கு புறப்படுகிறார் எனும் செய்தி ஒருவருக்கும் தெரிய வில்லை. பூங்கொடியை அவரது விழிகள் தேடின.

''என்ன தம்பி! யாருக்காகக் காத்திருக்கிறாய்? மாளிகை வாயிலுக்கே வந்து வரவேற்பு பெறும் பேறு பெற்றவர் யாரோ?'' என்ற குரல் கேட்டுத் திகைத்துத் திரும்பிய சோழ மன்னர், அங்கே இளையபிராட்டி நிற்பதைக் கண்டு மேலும் வியப்படைந்தார்.

''நினைத்தேன் வந்தீர்கள். இப்பொழுதுதான் வருகிறீர்களா? வல்லவரையர் உடன் வரவில்லையா?'' என்று கேட்டார். அப்பொழுதும் அவர் விழிகள் பூங்கொடியைத் தேடின.

இளையபிராட்டியார் தன் மனத்தில் கனன்று கொண்டிருக்கும் வேதனையை மறைத்துக் கொண்டு, ''இப்பொழுதுதான் வருகிறேன். என்னை வரவேற்க மாளிகை வாயிலுக்கே வந்து விட்டீர்களே!'' என்றாள்.

என்ன சொல்வதென்றே இராசராசருக்கு அப்பொழுது எதும் தோன்றவில்லை.

பூங்கொடியை அங்கே காணவில்லை.



அந்தச் சமயத்தில் அறையொன்றிற்குள் பூங்கொடி 'ஓ'வென்று சப்தமிட்டவாறிருந்தாள். கதவைப் படபடவென்று தட்டினாள்.

அரசருடைய யோசனைப்படி சிறிது உணவு அருந்த மடப்பள்ளிக் குச் சென்றாள். சூடான பொங்கல் உள்ளத்திற்கும் ஆறுதலாக இருந்தது.

பணிப் பெண் ஒருத்தி அவளைத் தனி அறைக்கு அழைத்துச் சென்று, புதுப் புடைவை அளித்து உடுத்திக் கொள்ளச் சொல்லிக் கதவை மூடிச் சென்றாள்.

புடைவையை உடுத்திக் கொண்டு வெளியே வரப் பூங்கொடி முயன்றபோதுதான் அந்த அறைக்கதவு வெளிப்புறம் தாழிடப் பட்டிருப்பதை அறிந்தாள்.

என்ன சொல்லி அழைப்பாள்?

''யாரங்கே!'' என்று கூவினாள்... கதவைப் படபடவென்று தட்டினாள்.

தனக்காக அரசர் காத்திருக்கிறார் என்பதை எப்படி வெளிப்படுத்து வாள்?

கதவு உடையுமாறு தட்டினாள்.

''அம்மா... அம்மா!'' என்று கூவினாள்.

''அம்மா! உன்னைச் சந்திக்கச் சோழ நாட்டுப் பேரரசர் வருகிறாரம்மா... தங்களிடம் அழைத்துச் செல்லுமாறு என்னை அவர் கேட்டுக் கொண்டாரம்மா! அவர் என்னிடம் அன்புடன் நடந்து கொண்டாரம்மா! எங்கும் வெளியேற முடியாமல் தங்களைச் சிறை வைத்தாற்போல் அந்தக் கிராமத்தில் வைத்திருக்கும் செய்தியைச் சொன்னேனம்மா... அவர் நம் இருப்பிடம் வந்தால் எல்லா பிரச்னை களும் தீர்ந்துவிடும் அம்மா! அரசருடன் புறப்பட முடியாமல் யாரோ வெளியே கதவைத் தாழிட்டுச் சென்று விட்டார்களம்மா... அம்மா... அம்மா!'' என்று புலம்பினாள்.

இப்பொழுது தனக்கு அசுர பலம் வந்து விடக்கூடாதா என்று அவள் துடிதுடித்தாள்.

நேரமாகிக் கொண்டிருந்தது. வேதனை, ஆத்திரம், ஏமாற்றம் அனைத்தும் கண்ணீராகப் பெருகி வழிந்தன. கதவைத் தட்டியதால் அவள் உள்ளங்கை சிவந்து கனிந்தது.

சுவரோரமாகக் களைத்துப் போய் சாய்ந்தாள். விழிகளை மூடிக் கொண்டாள். அந்தச் சோகம் நிறைந்த வேளையிலும் சுகமாக உறக்கம் வந்தது. நடப்பது நடக்கட்டும் என்று நித்திரை தேவியின் அரவணைப்பில் துவண்டாள்.

சிறிது நேரம் சென்றிருக்கலாம். ஏதோ என் மீது ஊர்வது போன்ற உணர்வு ஏற்படத் திடுக்கிட்டு விழித்தாள்.

அவள் சாய்ந்து கொண்டிருந்த சுவருகே தலைக்கு நேரே உள்ள சாளரத்தினின்று ஒரு பூங்கொடி தொங்கி அசைந்து, அவள் மேல் ஊர்ந்தது.

தன் கவனத்தைத் திருப்புவதற்காகத்தான் அப்படியொரு கொடி சாளரத்திலிருந்து தொங்கி அசைகிறது என்பதை அவள் புரிந்து கொண்டு சாளரத்தை நிமிர்ந்து நோக்கினாள்.

குரல் மட்டும் கேட்டது.

''இங்கே பார், பூங்கொடி! எவ்வளவு நேரமாக நான் கூப்பிடு கிறேன்? உன் கவனத்தைக் கவர இந்தப் பூங்கொடியை ஒன்றோடு ஒன்று சேர்த்து முடிச்சிட்டுச் சாளரத்தினின்று இறக்கினேன்... நான் செல்வதைக் கவனமாகக் கேள். இந்தச் சாளரத்துக்கு இடப்புறமுள்ள மாடத்தின் அருகே செல். சாத்தப்பட்டிருக்கும் அதன் கதவுகளைத் திற. மாடத்திலுள்ளவற்றை எடுத்துக் கீழே போடு. கையால் சுவரைத் தட்டு. ஒரு சிறு கதவு போல் திறக்கும். பிறகென்ன?'' என்று கூறியது அந்தக் குரல். மெல்லவும் நகைத்தது அந்த உருவம்.

''நீங்கள் யார்? நான் இங்கிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? சோழ அரசரின் மாளிகையில் மர்மம் நிறைந்திருக்கிறதே... நான் உடனே அரசரைச் சந்திக்க வேண்டும்'' - பூங்கொடி ஆத்திரமும், ஆவேசமும் மிகக் குரல் கொடுத்தாள்.

''நான் யார் என்பதை வெளியே வந்த பிறகு நீ தெரிந்து கொள்வாய். மன்னரைச் சந்தித்துக் குறையைத் தெரிவிப்பதற்காக வாவது நான் கூறிய வழியில் உடனே வெளியே வா'' என்றது அந்தக் குரல்.

உண்மையாக இருக்குமா? முயன்று பார்ப்போமா என்ற எண்ணத்தில், மாடத்துக் கதவைத் திறந்து, மாடத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பழைய உடைகளையெல்லாம் வெளியே எடுத்து வீசி, வேறு கதவு தெரிகிறதா என்று ஆராய்ந்தாள்.



குரல் கூறியபடி அங்கே ஒரு சிறு கதவு தென்பட்டது. தன் உடலை நெளித்து வளைத்து அதன் வழியே வெளியே இறங்கினாள்.

மாளிகையின் நந்தவனப் பகுதி அது. மரங்களைப் பின்னிப் பின்னி வளர்ந்திருந்த கொடிகளில் பூக்கள் பூத்துக் குலுங்கின. பாரிஜாத மலர்களின் நறுமணம் அந்தப் பகுதியில் பரவி ஒருவிதத் தெய்விக மணத்தை வீசியது. சரக்கொன்றை தோரணம் போல் தொங்கி அசைந்தன.

புதர்கள் மண்டியிருந்த அந்த இடத்தில் யாரோ நடந்து சென்றதன் விளைவாக கால்பட்டுச் செடிகள் நசுங்கிச் சாய்ந்திருந்தன.

நந்தவனத்தை விட்டு உடனே வெளியேற வேண்டும். அவள் இங்குமங்கும் வழியைத் தேடலானாள். புதர்களை விலக்கியபோது ஏற்பட்ட சலசலப்பால் பறவைகள் சடசடவென ஓசையெழுப்பிப் பறந்தன. அச்சமின்மையைப் பிறவிக் குணமாகக் கொண்டிருந்த பூங்கொடிக்கு சிறிது பயம் ஏற்பட்டது. காய்ந்த முள்ளொன்று சுருக்கென்று பாதத்தைப் பதம் பார்த்தது.

சாளரத்தின் வழியே குரல் கொடுத்து வெளியே வர வழி தெரிவித்தவர் எங்கே? செடி, கொடிகளை விலக்கிக் கொண்டு பூங்கொடி சென்றாள்.

''பூங்கொடி! இந்தப் பக்கமா வா...'' குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிய பூங்கொடி தொலைவில் நின்று கொண்டிருப்பவரைப் பார்த்துத் திகைத்தாள். அதே குரல்தான்.

''ஆ! நீங்களா?'' என்று வியப்புற்றாள். வல்லவரையர் வந்தியத் தேவன் புன்முறுவலுடன் அங்கே நின்று கொண்டிருந்தார்.

# 28. தஞ்சை மாளிகையிலிருந்து தப்பிய பூங்கொடி

வல்லவரையர் வந்தியத்தேவனைக் கண்டவுடன் முதலில் திகைத்தாள் பூங்கொடி. அவர் எப்படி இங்கு வந்தார் என்று வியப்புற்றாள்.

''வல்லவரையரா?'' என்று மெல்லக் கேட்டாள்.

''ஆமாம்! நானேதான். விரைவாக இங்கிருந்து சென்று விடுவோம்'' என்றார் வல்லவரையர்.

''எங்கே என்னை அழைக்கிறீர்கள்?''

''பிரம்மதேசத்திற்கு.''

''பிரம்மதேசத்திற்கா?''

''ஏன், என் ஊருக்கு நீ வரக் கூடாதா?''

''உங்கள் ஊருக்கு வரத்தான் வேண்டும். ஆனால், இப்பொழுது இல்லை. என்னுடைய சபதம் நிறைவேறிய பிறகுதான் வருவேன்.''

வல்லவரையர் மெல்லச் சிரித்தார். இந்த இளம் வயதில் இவள் சபதமிடுகிறாள். என்ன சபதம்? யாரை எதிர்த்து?

வல்லவரையர் அவள் அருகே நெருங்கி அவள் தலை மீது வீழ்ந்திருந்த சருகு ஒன்றை மெல்ல எடுத்துக் கீழே தள்ளிக் கேட்டார்: ''பூங்கொடி! சபதமா? யார் மேல் உனக்குக் கோபம்?''

மிக நெருங்கி வந்து நின்ற வல்லவரையரின் கம்பீரத்தை அவள் அப்பொழுது தெளிவாக உணர்ந்தாள். நல்ல உயரமும், முதுமையின் மெல்லிய பூச்சும், மீசையின் கடுமையை அடக்க முயன்ற வெற்றி உரோமமும் மட்டுமே அவரது வயதை வெளிப்படுத்த முயன்றன.

''என்னை அறைக்குள்ளிட்டு வெளியே தாழிட்டவர் அனைவர் மீதும் நான் வெஞ்சிம் கொண்டிருக்கிறேன்'' என்று அழுத்தத்திருந்தமாகக் கூறினாள். வல்லவரையர் பெரிதாகச் சிரித்தார்.

''அப்படியென்றால் சோழ குலத்தின் மீதே என்று சொல்லு'' வல்லவரையர் அவளைக் கூர்ந்து நோக்கினார்.

''ஆமாம்; என் தாய்க்கு இடையூறு செய்தவர்கள் - செய்பவர்கள் அத்தனை பேர் மீதும்'' பூங்கொடியின் குரலில் சீற்றமிருந்தது. மேலும் அவள் தொடர்ந்து, ''வல்லவரையரே! தங்களுடைய நேர்மையையும், உயர்ந்த குணத்தையும் நான் அறிவேன். நீங்களே சொல்லுங்கள்... என் தாயைச் சந்திக்க வருவதாக சோழ சக்ரவர்த்திகள் சம்மதித்தார்...''

''சரி...''

''என்னையும் வேறு உடை மாற்றிக் கொண்டு உணவுண்டு முடித்து விட்டு வருமாறு கூறினார். அதற்காக நான் அறைக்குள்



சென்றேன். புதிய ஆடையை உடுத்திக் கொண்டு வெளியே வர முயன்றேன். வெளியே தாழிட்டு விட்டார்கள். இது ஒருவர் மட்டும் திட்டமிட்டுச் செய்யக்கூடிய சதியில்லை வல்லவரையரே!''

வல்லவரையர் புன்முறுவல் பூத்தார். அதைக் கவனித்த பூங்கொடி, ''உங்களுக்குச் சிரிப்பு. எனக்கோ உள்ளத்தில் நெருப்பு. ஆமாம்; இளையபிராட்டியாரின் கணவரல்லரோ? சோழர் குலத்தைக் காப்பதில் முன்னணியில் நிற்பவர். அதற்காக சிற்றரசப் பதவியைப் பெற்றவரல்லரோ? நீங்கள் சற்று வித்தியாசமானவராக இருப்பீர்கள் என்று நினைத்தேன்'' என்று சீறினாள்.

''கோபப்படாதே பூங்கொடி! உன் தாய்க்குக் கோபமே வராது. அவர்கள் எவ்வளவு துன்பங்களை ஏற்றவர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று தொடர்ந்து பேச முயன்றவரின் பேச்சை இடைமறித்தாள். கேட்டாள்: ''வல்லவரையரே! சோழ நாட்டின் படைத்தலைவரே! என் தாயைப் பற்றி நன்றாக அறிந்து வைத்துள்ளீர்கள். என் தாயைப் போல் நான் ஏமாந்தவளல்லள். என் தாய்க்கு ஏற்படாத கோபம், சீற்றம், வெஞ்சினம், பழிவாங்கும் உணர்ச்சியெல்லாம் என்னிடம் சேர்ந்துள்ளன. என் தாயைப் பற்றி அறிந்த தாங்கள் என் தாய்க்கு ஏன் உதவவில்லை?''

வல்லவரையர் மறுமொழி பேசவில்லை. பெருமூச்சு எழுந்தது. அவர் பூங்கொடியிடம், ''நாம் இருவரும் விவாதிக்கும் இடமும் நேரமும் இதுவல்ல. பூட்டப்பட்டிருக்கும் அறையினின்று உன்னை விடுவித்ததே உனக்கு உதவத்தான். நாம் பேசியவாறு இங்கு நிற்பதால் உனக்கு மேலும் ஆபத்துதான்'' என்றார்.

''ஆபத்தா? என்ன சொல்கிறீர்கள், வல்லவரையரே! என் தலையைக் கொய்து விடுவார்களா? சோழ நாடு ஒரு பெண்ணின் தலையைக் கொய்யும் அளவிற்குத் தாழ்ந்து விடவில்லை'' என்று படபடப்புடன் பேசினாள்.

அவள் தோளைச் சற்று வாஞ்சையுடன் அழுத்திய வந்தியத்தேவன், ''கோபப்படாதே, பூங்கொடி! ஆபத்து என்றால் தலையை வெட்டுவது, உயிரை எடுப்பது என்று பொருளல்ல. உன் திட்டத்தில் குறுக்கிடுவது, உன் இலட்சியம் நிறைவேறாமல் சதி செய்வது... இன்னும், இன்னும்...'' என்று கூறும்போது பூங்கொடி சற்று அவரிடமிருந்து விலகி அவர் முகத்தை வியப்புடன் நோக்கி, ''வல்லவரையரே! அப்படியென்றால் என் திட்டத்தில் குறுக்கிடு

பவர் இந்த அரண்மனையில் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''ஆம்; இருக்கிறார்கள். அவர்கள்தாம் உன்னை அறையிலிட்டுப் பூட்டி விட்டார்கள். அவர்களுடைய திட்டத்தை முறியடிக்க நான் கங்கணம் கட்டிக் கொண்டேன்'' என்றார்.

''நான் தஞ்சைக்கு வருவேன் என்பதை நீங்கள் அறிவீர்களா?''

''அறிவேன்...''

''சோழப் பேரரசர் என் தாயைச் சந்திக்க, என் அழைப்பை ஏற்று என்னுடன் வருவார் என்று உங்களுக்குத் தெரியுமா?''

தலையை அசைத்தார் வல்லவரையர்.

''என்னை அறையிலிட்டுப் பூட்டி விடுவார்கள் என்பதையும் அறிவீர்களா?''

''ஒவ்வொன்றிற்கும் என்னால் மறுமொழி கூறிக் கொண்டிருக்க முடியாது. சான்று கூறவும் முடியாது. உனக்கு இஷ்டம் இருந்தால் என்னுடன் வரலாம். இல்லாவிடில் இப்படியே இந்த ஒற்றையடிப் பாதை வழியே சென்றால், கோட்டை வெளியே போகலாம். நான் சென்று வருகிறேன் பூங்கொடி! கவனமாக இரு. அளந்து பேசு. அடக்கம் துணை கொள்; ஆடவல்லான் துணை உனக்கு என்றும் இருக்கும். உம்...'' என்று பெருமூச்சு விட்டு ஒரு கணம் நின்றார். பிறகு திரும்பிப் பாராமல் நடக்கத் தொடங்கினார்.

பூங்கொடி சற்று நேரம் சிந்தித்தாள். 'கோட்டைக்கு வெளியே சென்று நாம் என்ன செய்யப் போகிறோம்? வல்லவரையர் யோசனையைத்தான் கேட்போமே. நாம் செய்ய முனையும் எந்தக் காரியத்திலும் திடீர் திருப்பம் வருகிறதே... இப்பொழுதும் அது போன்ற ஏதாவது எதிர்பார்ப்போம்'' என்று வல்லவரையர் சென்ற திக்கை நோக்கினாள்.

அவரைக் காணவில்லை. செடி, கொடிகளை விலக்கிக் கொண்டு அவர் செல்லும் ஓசை கேட்டது.

''ஐயா! ஐயா!'' என்று குரல் கொடுத்தாள். ''வல்லவரையரே!'' என்று குரல் கொடுத்தாள். அப்படி அழைப்பது மரியாதைக் குறைவானது என்று அவள் உள்ளுணர்வு கூறினாலும், 'ஐயா! ஐயா!' என்று எவ்வளவு நேரம் அழைக்க முடியும்?



சிறிது தொலைவு சென்றவுடன், ஒற்றையடிப் பாதை இரண்டாகப் பிரிந்தது. எந்தப் பக்கம் செல்வது? எந்தப் பாதையில் சென்றால் கோட்டைக் கதவை அடையலாம் என்று சிந்தித்தவாறு நின்றபோது, சிரிப்பொலி கேட்டது. முன்பு கேட்ட அதே சிரிப்பொலி.

''குழம்ப வேண்டாம் பூங்கொடி! இப்பொழுதாவது என்னைப் பின்பற்றி வா'' என்ற வல்லவரையர் குரல் கேட்டுச் சற்று நிம்மதியடைந்தாள்.

''நீங்கள் சொல்வதைக் கேட்பதைத் தவிர வேறு ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை'' என்றாள்.

பூங்கொடி அவ்வாறு சொன்னாளே தவிர, அவள் எண்ணமெல்லாம் தன் தாயைக் காணப் புறப்பட்ட மன்னரிடமே இருந்தது.

சோழ மாமன்னர், தன்னைக் காணாது தன்னைத் தேடச் சொல்லி இருப்பாரா? அல்லது தாமே புறப்பட்டுச் சென்றிருப்பாரா? அவள் ஏதோ யோசனையில் ஆழ்ந்து மெல்ல நடந்து வருவதைப் பார்த்த வந்தியத்தேவன், ''நடையில் தயக்கம் ஏன்? களைப்பா? சோர்வா?'' என்று கேட்டார். பிறகு மெல்லியக் குரலில் கூறினார்: ''நாம் மிக வேகமாகப் புறப்பட்டுச் சென்றால்தான் இன்னும் நான்கு நாள்களிலாவது காஞ்சி நகரம் அடையலாம்... அங்கிருந்து பிரம்மதேசம் செல்ல வேண்டும்'' என்று மீண்டும் அவளை நோக்கிப் பேசினார்.

''உம்'' என்ற குரலைத் தவிர வேறு எதும் பூங்கொடியிடமிருந்து வரவில்லை. மௌனமாக நடந்தாள். 'காஞ்சி மாநகருக்கு எப்படிச் செல்லப் போகிறார்? நடந்தா... ரதத்திலா?' என்று யோசித்தாள்.

''நான்கு நாள்களாகுமா?'' பூங்கொடி கேட்டாள்.

''ஆமாம்; நான்கு நாள்களுக்கு மேலும் ஆகலாம்.''

''நடந்தா செல்லப் போகிறோம்?'' பூங்கொடி கேட்டதற்குச் சிரித்து விட்டார் வல்லவரையர்.

''நடந்து ஏன் செல்ல வேண்டும்? குதிரையிலாவது ரதத்திலாவது செல்வோம்'' என்றார்.

''குதிரையிலா? எனக்குக் குதிரை ஏற்றம் தெரியாதே.''

''நான் கற்றுத் தருகிறேன்.''

இதைக் கேட்டுப் பூங்கொடி சிரித்தாள். ''குதிரை மீது ஏறிச் செல்லக் கற்றுக் கொண்ட பிறகு காஞ்சி சென்றடைவதென்றால் இருபது நாள்கள் கூட ஆகலாம்...''

''ஓ! இருபது நாள்களில் குதிரை ஏறிப் பறக்கக் கற்றுக் கொண்டு விடுவாயா?'' வந்தியத்தேவன் இவ்வாறு கேட்டவுடன் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்ன சொல்கிறீர்கள்? நான்கு நாள்களில் சென்றடையலாம் என்று சொன்னீர்கள். இப்பொழுது இருபது நாள்கள் ஆகும் என்கிறீர்கள்; புரியவில்லையே'' என்றாள்.

''குதிரையேற்றம் அறிந்து கொண்டால் நான்கு நாள்களில் செல்லலாம் என்றேன். இல்லாவிடில் ரதத்தில் செல்வோம்'' என்று கூறிக் குறும்புச் சிரிப்புடன் பூங்கொடியை நோக்கினார்.

பூங்கொடிக்குக் கோபம் வந்தது. இவருக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாரே என்று எண்ணி, ''வல்லவரையரே! நான் முன்பே குழம்பி இருக்கிறேன். நீங்கள் வேறு என்னைக் குழப்புகிறீர்கள். பிரம்மதேசத்திற்கு நான் வரவில்லை. என் தாயை உடனே பார்க்க வேண்டும். அதற்கு வழி செய்யுங்கள்'' என்றாள்.

பூங்கொடியிடம் திடீரென்று ஏற்பட்ட மாற்றம் கண்டு, மெல்ல நகைத்தவாறு; ''கோபப்படாதே பூங்கொடி! உன் தாயைப் பார்க்க வேண்டும்; அவ்வளவுதானே? நானும் வருகிறேன். உன் தாயைப் பார்த்து விட்டு நாம் இருவரும் பிரம்மதேசம் செல்வோம்'' என்றார்.

தொடர்ந்து, ''பூங்கொடி! நாம் இருவரும் தஞ்சையில் இருக்கக் கூடாது. உனக்கும் நல்லது; எனக்கும் நல்லது. மதுரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்கள். அந்தச் சமயம் அவருக்குத் திருமணம் நடைபெறும். அந்தச் சமயத்தில் அங்கே நானிருக்க விரும்பவில்லை. நீயும் இருப்பது சரியில்லை'' என்று கூறி, பூங்கொடியின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கூர்ந்து கவனித்தார்.

பூங்கொடி படபடப்புடன், ''என்ன சொல்கிறீர்கள்? நான் இருப்பது ஏன் சரியில்லை? நான் இளவரசரைச் சந்திக்க விரும்புகிறேன். அவருக்கு நடைபெறவிருக்கும் திருமணத்தை நடைபெறாமல் செய்து விடுவேன்'' என்றாள்.



''அடடா... ஏன் இவ்வளவு ஆத்திரம் கொள்கிறாய் பூங்கொடி? இளவரசர் திருமணத்தை நிறுத்துவது என்றால் நான்தான் தடை செய்ய வேண்டும். என் மகளைத் திருமணம் செய்து வைப்பதாக இராசராசர் வாக்குக் கொடுத்திருந்தார். அதை அவர் இப்போது மீறுகிறார். அதனால் நான்தான் தடுத்து நிறுத்த வேண்டும்'' என்று வல்லவரையர் கூறவும் -

பூங்கொடி வியப்புடன் அவரைப் பார்த்து, ''வல்லவரையரே! இளவரசரை மணக்க ஏகப்பட்ட போட்டி போலிருக்கிறதே! குறுநில மன்னர்கள் தங்கள் பதவி காரணமாகத் தங்கள் பெண்ணை இளவரசருக்கு மணம் புரிவிக்க விரும்புகிறார்கள். ஆனால், அவர்களுள் யாரும் உண்மையாகவே அவரை உளமாரக் காதலிப்பதாகத் தெரியவில்லை. அவரை மிக விரும்பிக் காதலிக்கும் ஓர் உண்மையான மங்கையின் வேண்டுகோளை மீறி அவர் வேறு பெண்ணை மணந்து விடுவாரோ? பார்க்கலாம்!'' அவள் குரலில் படபடப்பு இருந்தது.

வல்லவரையர் நிதானமாக, ''பெண்ணே! பூங்கொடி! நீ எந்தப் பெண்ணின் சார்பில் இவ்வாறு பேசுகிறாய்? என் கவனத்துக்கு வராமல் எந்தப் பெண் மதுரனைக் காதலிக்கிறாள்? அவள் எந்தச் சிற்றரசரின் பெண்? யார் என்று சொல். அவளிடம் சென்று அவளது எண்ணம் நிறைவேறாது என்று உறுதியாகச் சொல்லி விடுகிறேன். இன்னும் சில நாள்களில் மதுரனுக்குத் திருமணம் நடந்தாக வேண்டும். இளவரசுப் பட்டம் சூட்டும் நாளில், அவருகே இளவரசி அமர வேண்டும். அந்தப் பாக்கியசாலி யாரோ தெரியவில்லை. உறுதியாக நீ சொல்லும் பெண்ணாக இருக்க முடியாது'' என்றார்.

''ஏன் இருக்க முடியாது? காதலை அவ்வளவு எளிதில் மறந்து விடுவாரா உங்கள் இளவரசர்?'' பூங்கொடி கேட்டாள்.

''காதல்...'' குறும்புச் சிரிப்புடன், ''ஒரு சிற்றரசரின் புதல்வி காதல் கொண்டிருக்கிறாள். காதல் எவ்வாறு ஏற்பட்டது? கட்டுக் காவலை மீறிக் காதலா? வியப்பாக இருக்கிறதே! மதுரனை மயக்கிய அந்த மங்கை யார்? சம்புவரையர் மகளா? வேளிர்குலப் பெண்ணா? மலையமான் வாரிசா? யார் என்று சொல் பூங்கொடி! நான் அவரிடம் உடனே சொல்லியாக வேண்டும்'' என்றார் வல்லவரையர்.

''வல்லவரையரே! சிற்றரசர் மகளுக்கு மட்டும்தான் காதல் ஏற்படுமா? சோழ நாட்டு எளிய குடிமகனின் பெண் இளவரசரைக் காதலிக்கக் கூடாதா?''

''ஆகா; நன்றாகக் காதலிக்கலாம். காதல் உணர்வு தெய்விக மானது. இளவரசர் விரும்பும் யாரை வேண்டுமானாலும் காதலிக்கலாம்.''

''அப்படிச் சொல்லுங்கள். அவ்வாறு ஒரு குடிமகள் காதலித்தால் அதற்குத் தாங்கள் தடை செய்வீர்களா?''

''இது சங்கடமான கேள்வி, பூங்கொடி! யார் காதலிக்கிறார்கள் இளவரசரை? இந்தக் காதல் விவகாரம் எப்படி எனக்குத் தெரியாமல் போயிற்று?''

''ஓ! உங்களுக்குத் தெரிந்துதான் இளவரசர் காதலிக்க வேண்டுமோ?''

''பூங்கொடி! மதுரன் என்னிடம் கொண்டுள்ள மதிப்பை நீ அறிய மாட்டாய். தன் உணர்வுகளை உள்ளத்தின் மறைவிடத்திலிருந் தாலும் என்னிடம் பகிர்ந்து கொள்ளத் தவற மாட்டார். அதனால் கேட்டேன்.''

''நான் கேட்டதற்கு மறுமொழி கூறுங்கள். நீங்கள் அந்தப் புனித மான காதலுக்கு ஆசி கூறுவீர்களா, மாட்டீர்களா? சொல்லுங்கள்...''

''யார் காதலிக்கிறார்கள் என்று நான் அறிய வேண்டும்.''

''வல்லவரையரே! வீரத்தில் சிறந்தவர்கள் நீங்கள். உங்களுக்கும் இளம் வயதில் காதல் அனுபவம் உண்டு. நான் கேட்டறிந்திருக் கிறேன். இந்தக் காதல் செய்தி தங்களுக்குத் தெரியும். தெரிந்தும் தெரியாததுபோல் நடிக்கிறீர்களே...'' என்று கூறி வல்லவரையர் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

அந்த முகத்தில் மெல்லிய புன்னகைக் கீற்று தோன்றி மறைந்ததை அவள் உணரவில்லை.

ஒன்றும் அறியாதவர் போல் தோற்றமளிக்கும் வல்லவரையரைப் பார்த்து, அவருக்குத் தன் காதல் நிலை தெரியாது என்று நம்பி, ''வல்லவரையரே! தங்களுக்குத் தெரியவில்லை என்றால் எனக்கு வியப்பாக இருக்கிறது. இளையபிராட்டி அறிந்திருக்கும்போது தாங்கள் அறியாதது ஆச்சரியம்தான்.''



''குந்தவ்வைக்குத் தெரியுமா?''

''இளையபிராட்டியார் அறிவார். அவரது முழு நேரப் பணியே ஓர் ஏழைப் பெண்ணின் காதலைத் தடை செய்வதில்தான் இருக்கிறது. ஒருவேளை தங்கள் புதல்விக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏழையின் காதலைத் தடை செய்ய முயலலாம்.''

''ஓ! யார் அந்த ஏழைப் பெண்? இப்பொழுதாவது என்னிடம் சொல்லலாம் அல்லவா?''

பூங்கொடியின் விழிகளில் இப்பொழுது நீர் தளும்பியது. இதுவரையில் தன் காதலை ஒருவரிடமும் மனம் திறந்து தெரிவிக்க வில்லை. வல்லவரையரிடம் தெரிவிப்பதால் பலன் கிடைக்கும் என்று எண்ணி, ''சோழப் பெருநாட்டு சக்ரவர்த்தியின் ஒரே திரு மகனைக் காதலிக்கும் சோழ நாட்டுக் குடிமகள் இதோ, இப்பொழுது உங்கள் முன் நிற்கிறாள்'' என்றாள்.

வல்லவரையர் மௌனமானார்.

''இப்பொழுது சொல்லுங்கள். என் காதலுக்குத் தடையாக நீங்கள் இருப்பீர்களா?'' என்று நிமிர்ந்து கேட்டபோது வல்லவரையர் மறுமொழி கூறாமல் வேறு திசையை நோக்கியவாறு இருந்தார்.

அந்தத் திசையில், தஞ்சை மாளிகைக் கோட்டைக் காவலர்கள் விரைந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

## 29. முதலில் திருமணமா, போர்க்களமா?

**கோ**ட்டைக் காவலர்கள் வந்தியத்தேவனை வணங்கி ஐயத்துடன் நின்றார்கள். அவர்களுடைய செயல் வந்தியத்

தேவனுக்கு வியப்பாக இருந்தது. தான் அங்கே இருப்பதை அவர்கள் எப்படி அறிந்திருப்பார்கள் என்ற அவர் பூங்கொடியைச் சற்று திரும்பிப் பார்த்தார். பூங்கொடியின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை.

இப்படி ஏதாவது நேருமென்று அவள் எதிர்பார்த்துத்தான் இருந்தாள். தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டுத் தன்னைச் சலிப்படையச் செய்ய இறைவன் முயன்று கொண்டிருக்கிறான் என்பது அவள் அறிந்ததுதான். ஆனால், அவள் எதற்கும் அஞ்சப் போவதில்லை. அவள் எப்படியாவது அரசரை அழைத்துக் கொண்டு தன் தாயின் குடிலுக்குச் செல்ல வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் இருந்தாள்.

வந்தியத்தேவன் அங்கு வந்த காவலர்களைப் பார்த்து 'என்ன செய்தி?' என்று கேட்பது போல் புருவத்தை உயர்த்திக் கம்பீரமாக நின்றார்.

காவலர்கள் மிகவும் மரியாதை நிறைந்த குரலில் வாய் பொத்தி, ''வல்லவரையரே! தங்களை மாமன்னர் அழைத்து வரச் சொன்னார்'' என்றனர்.

வந்தியத்தேவன் மெல்லிய சிரிப்புடன், ''என்னை அழைத்து வரச் சொன்னாரா? அல்லது இதோ இங்கே நிற்கிறாளே பூங்கொடி... அவளை அழைத்து வரச் சொன்னாரா?'' என்று கேட்டார்.

அவர்கள் சொன்னார்கள்: ''தங்களைத்தான் அவர்கள் அழைத்து வரச் சொன்னார்கள். தாங்கள் நடந்து வரக்கூடாது என்பதற்காக இதோ ஒரு புரவியையும் அனுப்பியிருக்கிறார். தங்களை விரைவில் வருமாறு வேண்டிக் கொண்டார்கள்.''

வல்லவரையர் இதைக் கேட்டவுடன் முன்பே திட்டமிட்டுச் செய்தது போல் இது தோன்றுகிறது என எண்ணினார். பூங்கொடியின் பக்கம் திரும்பி, ''ஒவ்வொரு கணமும் நமது நிகழ்ச்சியை யாரோ அறிய முயன்று கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது'' என்றார். அந்தக் குரலில் சற்றுக் கடுமை இருந்தது.

பூங்கொடி சொன்னாள்: ''நமது நிகழ்ச்சியை என்று ஏன் சொல்கிறீர்கள்? என் நடவடிக்கையை மிக அருகே இருந்து நிழல் போல் யாரோ தொடர்கிறார்கள். நடப்பது நடக்கட்டும். தாங்கள் போய் வாருங்கள். என் அன்னையைச் சந்திக்கத் தான் வருவதாக



மன்னர் என்னிடம் ஒப்புக் கொண்டிருந்தார். அதை நினைவு படுத்துங்கள். நானும் அங்கே மெல்ல வந்து கொண்டிருக்கிறேன். முடிந்தால் அவரை எனக்காகக் காத்திருக்கச் சொல்லுங்கள்'' என்றாள்.

வல்லவரையர் அவளுடைய துணிவை எண்ணிப் பார்த்தார். அந்த இளம் வயதில் இவ்வளவு பொறுப்புடனும் துணிவுடனும் எடுத்த காரியத்தை முடிப்பதற்காக எந்தவிதத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கும் அந்தப் பெண்ணை நோக்கி, ''பூங்கொடி! உன்னையும் அழைத்துக் கொண்டுதான் நான் போகப் போகிறேன்'' என்றார்.

காவலர்கள் அதைக் கேட்டுத் திடுக்கிட்டு மிகவும் பணிவான குரலில், ''ஐயா! சக்ரவர்த்தி அவர்கள் தங்களை மிக விரைவில் வருமாறு செய்வதற்காகத்தான் குதிரை ஒன்றையும் எங்களுடன் அனுப்பியிருக்கிறார். ஒரு முக்கியமான பிரச்னையைக் கலந்து பேசுவதற்காக அவர் தங்களை அழைத்து வரச் சொல்லியிருக்கிறார். தாங்கள் வராவிட்டால் சக்ரவர்த்தி எங்கள் மீது கோபம் கொள்வார்'' என்றனர்.

வந்தியத்தேவன் கேட்டார்: ''நான் இங்கே இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

காவலர்கள் சொன்னார்கள்: ''மன்னர் தெரிவித்தார். 'மாளிகையின் நந்தவனப் பகுதியில் வல்லவரையர் வந்து கொண்டிருப்பார். அவரைச் சந்தித்து உடனே வருமாறு மிகவும் பணிவுடன் சொல்லி அழைத்து வாருங்கள்' என்று கட்டளையிட்டார். அதனால்தான் வந்தோம்.''

''வேறென்ன சொன்னார்?'' என்று கேட்டார் வல்லவரையர்.

''அவர் வேறெதுவும் சொல்லவில்லை. அவர் மிகவும் பரபரப்புடன் இருக்கிறார். அமைச்சர் மண்டலத்தார்களுக்கெல்லாம் சொல்லியனுப்பி இருக்கிறார்'' என்றார் காவல் வீரர்களின் தலைவர்.

அமைச்சர் மண்டலத்தாருக்கு அவர் சொல்லியனுப்பியுள்ளார் என்றால் ஏதோ மிக முக்கியமான செய்தி இருக்கிறது என்று தோன்றுகிறது. அப்படிப்பட்ட முக்கியமான செய்தியின்போது தன்னை மன்னர் அழைப்பார் என்பது அவருக்குத் தெரியும். ஆனால், நான் தஞ்சைக்கு வந்திருப்பதை அவர் எப்படி அறிந்தார்?

வல்லவரையர் சிந்திக்கலானார். அதுதான் இராசராச மாமன்னரின் மிகவும் புத்திக் கூர்மையான செயல். சோழ நாட்டு ஒற்றர்கள் எங்கிருக்கிறார்கள், எங்கில்லை என்பதை யாருமே கண்டறிய முடியாது. மரத்திற்கும் மலைக்கும் சுவருக்கும் காதுகளும் கண்களும் உண்டு என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறார். அந்த முறையில் தன் நடவடிக்கையைக் கண்டறிவதற்கு அவருக்கு எவ்வளவு நேர மாகும்? ஆனால், தன்னைத் தொடர்ந்து ஏன் அவர் ஒற்றர்களை அனுப்ப வேண்டும் என்று அவருக்குப் புரியவில்லை. தான் பழுவூரிலிருந்து தஞ்சைக்கு வந்ததும், இளையபிராட்டியைப் பிரம்மதேசத்திற்கு வருமாறு அழைத்ததும், அவள் வரவில்லை என்று சொன்னவுடன் தான் மட்டும் போவதாகக் கூறிவிட்டு, பிறகு ஏனோ மனம் மாறி தஞ்சைக்கு வந்ததும், அரசர் எப்படி அறிந் திருப்பார்?

வல்லவரையர் பூங்கொடியின் பக்கம் திரும்பி, ''பூங்கொடி! அரசர் அழைப்பை ஏற்று விரைவாக நான் செல்ல வேண்டியிருக்கிறது. நீ உன்னுடைய தாயைச் சந்திக்கச் செல்ல வேண்டுமானால் செல்ல லாம் அல்லது அரசரைச் சந்திப்பதற்கு நீ மாளிகைக்கு வந்து சேரலாம். அதற்குள் நான் அரசரைச் சந்தித்து, நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் தெரிவிக்கிறேன்'' என்றார்.

பூங்கொடி மெல்ல நகைத்தாள். ''வல்லவரையரே! என்னைச் சிறை வைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து தாங்கள் காப்பாற்றி னீர்கள் என்று சொல்வதைவிட வெளியே வருவதற்கு வழியைக் காட்டினீர்கள் என்று சொல்லலாம். அவர்கள் எதற்காக என்னை அந்த அறைக்குள் இட்டு வெளியே தாழிட்டுச் சென்றார்கள் என்பது தெரியவில்லை. ஒரு கணத்தில் இப்படியெல்லாம் நடப்பதை அறியும்பொழுது எனக்குப் பயமாகவும் இருக்கிறது; வேதனையாக வும் இருக்கிறது. எதற்குமே நான் பயப்படாதவள். அரசருடைய மாளிகைக்குள் வந்த பிறகு கூட இப்படியெல்லாம் என்னை நிழல் போல் தொடர்ந்து எனக்குத் தடை விதிப்பதற்காகச் சிலர் திட்டமிடு கிறார்களே என்று நினைக்கும்போது பயமாகத்தான் இருக்கிறது. ஆனால், நான் அஞ்சப் போவதில்லை. நடந்த செய்தியை அரசரிடம் தெரிவிக்கத்தான் போகிறேன். நான் இப்பொழுது என் தாயைக் காணப் போகப் போவதில்லை. அரசரிடம் சென்று, 'தாங்கள் கூறிய சொல் என்னவாயிற்று? புறப்படுவோம் என்று திட்டமிட்டீர்களே! அந்தத் திட்டத்தை ஏன் மறந்து விட்டீர்கள்? என்னை ஏன் அறையில்



அடைத்து வைத்தீர்கள்?' என்று கேட்கப் போகிறேன். நடந்ததைச் சொல்லப் போகிறேன்'' என்று கம்பீரமாகக் கூறினாள்.

வந்தியத்தேவன் அவளை இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தார். ''பூங்கொடி! நீ அரசரைச் சந்திப்பதை நான் தடை செய்யப் போவதில்லை. ஆனால், இப்பொழுது அரசரை உன்னால் சந்திக்க முடியுமா என்பது எனக்குச் சந்தேகம்தான். ஏனெனில், இப்பொழுது என்னை அழைத்திருக்கும் நிலையைப் பார்த்தால், அமைச்சர்களை அவர் கலந்தாலோசிப்பதற்காக அழைக்கும் விரைவைப் பார்த்தால் சோழ நாட்டில் ஏதோ மிக முக்கியமான காரியம் நடைபெறவிருக் கிறது என்பது தெரிகிறது. இந்தச் சமயத்தில் நீ அவரைச் சந்திக்க முடியுமா? உன்னைத் தடுத்து விடுவார்கள். ஆதலால் நான் சொல்கிறேன்... இப்பொழுது நீ உன் தாயைக் காணச் செல். நான் அரசரைச் சந்தித்து நடந்ததையெல்லாம் சொல்லி, உன் தாய் இருக்குமிடத்திற்கு அவரை அழைத்து வருகிறேன்'' என்றார்.

பூங்கொடி ஒன்றும் சொல்லவில்லை. அவள் உறுதியான முடிவுடன் இருப்பது தெரிந்தது. வந்தியத்தேவன் கூறியதற்காக அவள் தன் தாயைச் சந்திப்பதற்கு இப்பொழுது செல்லப் போவதில்லை. அவள் அரசரைத்தான் சந்திக்கப் போகிறாள். நடந்தவற்றையெல்லாம் அரசரிடம் சொல்லித்தான் ஆக வேண்டும். வல்லவரையரை எப்படி நம்புவது? அவர் இளையபிராட்டியின் கணவரல்லவா? பூட்டிய அறையினின்று வெளியே வருவதற்கு உதவினார் என்பதற்காக அவர் தன்னுடைய தேவியின் திட்டங்களுக் கெல்லாம் உறுதுணையாக இருக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்? அதனால்தான் அரசரைச் சந்திக்கப் போவதுதான் சரி என்று முடிவு செய்தாள்.

வந்தியத்தேவன் அவளிடம் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் ஒருமுறை, ''பூங்கொடி! நான் விரைவில் உன் தாயை வந்து சந்திக் கிறேன்'' என்று சொன்னார்.

பூங்கொடி ஒன்றும் மறுமொழி கூறவில்லை. வல்லவரையர் குதிரை மீதேறி, காவலர்கள் பின்தொடர இராசராசர் மாளிகையை நோக்கிச் சென்றார்.

தஞ்சை மாளிகையில் மந்திராலோசனை மண்டபத்தில் மிகுந்த பரபரப்பு காணப்பட்டது. முதலமைச்சரும், படைத்தளபதிகளும், கோட்டைக்காவலர் தளபதியும், தனாதிகாரியும், உட்படு கருமத்

தலைவரும், மந்திர ஓலை நாயகரும் மற்றும் ஆலோசனை கூறும் அறிஞர்களும் கூடியிருந்தனர். எல்லாரும் மதுரனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். வல்லவரையர் வந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்டு இராசராசர் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார். இளையபிராட்டி வருகிறார்களா? என்று அவர் கேட்டறிந்து கொண்டார். இளையபிராட்டியும் அங்கே வந்து கொண்டிருந்தார். அரசருக்கு உற்சாகம் அதிகமாகியது. கவலை குறைந்தது. எந்தவித மான முடிவெடுப்பதற்கு முன்பும் அவர் தன்னுடைய அக்கையார் இளையபிராட்டியைச் சந்திக்காமல் இருந்ததில்லை; கருத்தைக் கேட்காமல் இருந்ததில்லை.

அன்று காலையில் அவர் மாளிகைக்கு வெளியே வந்து பூங்கொடி யின் தாயைச் சந்திக்கச் செல்ல வேண்டும் என்ற அவாவில் பரபரப்பு மிகுந்த நிலையில் இருந்தபொழுது ஒற்றர் தலைவர் அங்கே வந்து சேர்ந்தார்.

அவர் மிகவும் களைத்துக் காணப்பட்டார். அதே போதில் அவர் ஏதோ மிக முக்கியமான செய்தியைச் சொல்வதற்கு விரைந்து வந்திருப்பவர் போல் தோன்றியது. அவர் மேனியெல்லாம் புழுதி படிந்திருந்தது. அவர் ஏறி வந்த புரவியும் மிகக் களைத்துக் காணப்பட்டது. அவர் உடனே செய்தியை மன்னரிடம் தெரிவிக்க வேண்டும் என்ற பரபரப்பில் அங்கே வந்தபொழுது, மன்னரே மாளிகை வாயிலில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் அவருக்குப் புதிய உற்சாகமே பிறந்து விட்டது.

அவருடைய விழிகளில் நிறைந்திருந்த ஒரு வேகத்தைக் கண்டு மன்னர் அவரை அருகழைத்துத் தன் விழியாலேயே என்ன செய்தி என்று கேட்பவர் போல் நோக்கினார். சோழ நாட்டின் மீது படையெடுப்பதற்கான ஆயத்தங்களுடன் சாளுக்கியப் படைகள் தலைநகரிலிருந்து புறப்பட்டு விட்டன என்ற செய்தியை மிகச் சுருக்கமாகவும், அரசர் மட்டும் கேட்கும் மிக மெல்லிய குரலிலும் கூறியவுடன் இராசராச சோழரின் புருவங்கள் இணைந்தன. நீண்ட நாள்களாகப் போரைப் பற்றிய எந்தவிதக் கவலையும் இல்லாமல் மிக அமைதியாக, கலை உணர்வை மட்டும் இதயத்தில் தேக்கிக் கொண்டு நாட்டின் கலையை வளர்ப்பதற்கு என்னவெல்லாம் செய்யலாம் என்ற திட்டத்தில் ஆழ்ந்து, அதைப் பற்றிய தக்கவர் களோடு கலந்தாலோசனை செய்து கொண்டு இருந்தவருக்கு, இப்பொழுது போர் நடத்த வேண்டிய சூழ்நிலை திடீரென



ஏற்பட்டிருப்பதற்கு அவர் கலங்கவில்லை. அதற்கு மாறாக அதை உடனே நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுப்பது பற்றிச் சிந்திக்கலானார்.

அந்தப் போரை மன்னர் எதிர்பார்த்துத்தான் இருந்தார். ஒற்றர்கள் அவ்வப்பொழுது கிடைத்த செய்தியைத் தெரிவித்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால், சாளுக்கிய தலைநகரில் நடைபெறும் செய்தியைத்தான் அவர்கள் கூறினார்களே தவிர, சாளுக்கியர்கள் படையெடுத்துப் புறப்பட்டுவிட்ட செய்தியை அவர்கள் அறிவிக்க வில்லை; சோழ நாட்டில் சாளுக்கிய ஒற்றர்கள் பலவித வடிவில் நடமாடுவதையும், சோழ நாட்டிலுள்ள சூழ்நிலையை அவ்வப் பொழுது வாதாபிக்குத் தெரிவித்துக் கொண்டு இருப்பதையும் அவர் அறிந்துதான் இருந்தார். அண்மையில் சிறைப்படுத்தப்பட்ட ஒரு பிட்சுவிடமிருந்து சாளுக்கியர்கள் எவ்வளவு ஆத்திரத்துடன் சோழ நாட்டைத் தாக்க வேண்டுமென்ற முயற்சியில் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

மிகப் பலத்த படை பலத்துடன் சோழ நாட்டின் மீது விரைவாகப் படையெடுத்து வந்து காஞ்சியைத் தாக்கி, பிறகு மளமளவென்று உள் நாட்டிற்குள் முன்னேற வேண்டும் என்பதுதான் அவர்களுடைய திட்டம். அதற்காக அவர்கள் பல நாள்களாக யானை படைகளையும், குதிரைப் படைகளையும் மற்றும் வேல் எறியும் வீரர்களையும், மல்யுத்த பலம் கொண்டவர்களையும் சேர்த்து வந்தார்கள். அந்தச் செய்தியை ஒற்றர் தலைவன் கொண்டு வரத் தாமதமானதற்குக் காரணம் என்ன என்று மன்னர் எண்ணினார். படைகள் புறப்பட்டு விட்டன என்பதுதான் சோழ ஒற்றன் கூறிய செய்தி. அதனால் அவர் மிக வேகமாக நடவடிக்கை எடுக்க முனைந்தார். படையெடுத்துச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கு அமைச்சர் மண்டலத் தாரைக் கலந்தாலோசிக்க விரும்பினார். அவர்களை உடனே அழைத்து வருமாறு அவர் கட்டளை பிறப்பித்ததார். வல்லவரை யரையும் மிக விரைவில் சோழ மாளிகைக்கு வந்து சேருமாறு கூறி, தக்கவர்களை அனுப்பினார். எல்லாம் சில நாழிகைப் போதில் நடை பெற்றன.

இளையபிராட்டியாரும் தஞ்சையில்தான் இருக்கிறார்கள் என்ப தறிந்து அவர்களையும் வருமாறு செய்தார். இப்படி ஓர் உத்தரவை மிகத் துரிதமான நிலையில் அவர் அனுப்பியதை அறிந்த வல்லவரை யர் பூங்கொடியின் பிரச்னையை விட, நாட்டின் மீது படையெடுத்து

வரும் எதிரிகளை முறியடிக்கும் பிரச்னைதான் மிக முக்கியம் என்பதை உணர்ந்தார். அதனால் அவர் அரசரிடம் சென்றவுடன் தான் பூங்கொடியைச் சந்தித்ததைப் பற்றி தெரிவிக்க மனமில்லாமலேயே இருந்தார். எந்தெந்த விதத்தில் படை வீரர்களை அணிவகுத்து அனுப்புவது என்று தளபதிகளுடன் கலந்தாலோசிக்கலானார். படைகளுக்கு மதுரன்தான் தலைமை தாங்கிச் செல்ல வேண்டும் என்பது அவரது விருப்பம். இளையபிராட்டி இப்பொழுது குறுக்கிட்டு, மதுரனை அனுப்புவதைவிட நம்மிடம் போர்த் திறமையும் வலிமை மிகுந்தவரான படைத் தலைவர் யாரையாவது அனுப்பினால் போதாதா என்று கேட்டார். சாளுக்கியப் படைகளை எதிர்த்து நிற்க மீண்டும் மதுரன்தான் செல்ல வேண்டுமா என்பது அவருடைய கேள்வி. மதுரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டுவதற்கு நாள் பார்த்திருக்கும் இந்தத் தருணத்தில் படை வீரர்களுக்குத் தலைமை தாங்கி வடக்கு நோக்கிச் செல்ல வேண்டியது தேவைதானா என்பதும் அவருடைய கேள்வி.

''போர்க்களத்திற்குச் சென்றால் மதுரன் திரும்பி வருவதற்கு எவ்வளவு நாள்களாகுமோ?'' என்று பிராட்டியார் கேட்டார்.

'நாம் சென்று எதிரிகளின் தலைநகரைத் தாக்கியது போக சாளுக்கியர்களே நம் நாட்டின்மீது படையெடுத்துப் புறப்பட்டு வருகிறார்கள் என்றால் அவர்களை எங்கே சந்திக்கப் போகிறோம் என்பது புரியவில்லை. இந்த நிலையில் போர் நடந்து முடிவதற்கு எவ்வளவு நாள்களாகுமோ?' என்ற கவலை இளையபிராட்டியிடம் ஏற்பட்டது.

''நாம் யாரையாவது அனுப்புவோம், மிக விரைந்து அனுப்புவோம். இரண்டு, மூன்று அணிகளாக அனுப்புவோம்'' என்றார் இளையபிராட்டியார். வல்லவரையர் ஏதும் பேசாமல் சற்று மௌனமாக இருந்தார்.

வல்லவரையர் பக்கம் திரும்பிய குந்தவ்வை, ''வல்லவரையரே! நீங்கள் ஏதும் பேசவில்லை. உங்கள் மௌனத்தைக் கண்டு மன்னரும் மௌனம் சாதிக்கிறார். நீங்கள் என்ன முடிவெடுக்கிறீர்கள்? நீங்களே படைக்குத் தலைமை தாங்கிச் செல்லப் போகிறீர்களா?'' என்று உதடுகளில் குறும்பு மிளிரக் கேட்டாள். வல்லவரையர் அப்பொழுதும் மறுமொழி சொன்னாரில்லை. அவருடைய சிந்தனையெல்லாம் சோழ நாட்டின் மீது படையெடுத்து வரும் அளவிற்குச் சாளுக்கியர்களுக்கு எவ்வாறு துணிவு ஏற்பட்டது என்பதிலேயே இருந்தது.



இப்பொழுது இராசராசர் வல்லவரையரைப் பார்த்துக் கேட்டார்: ''என்ன வல்லவரையரே! அக்கையார் சொல்வது போல் தங்களுடைய மௌனம் எனக்கு எந்தவிதக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. இந்தப் படையெடுப்பைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

தான் படையெடுப்பைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதை அரசர் நொடியில் புரிந்து கொண்டு விட்டார் என்பதை அறிந்த வல்லவரையர், ''நினைப்பதற்கு என்ன இருக்கிறது? நாம் உடனே இயங்க வேண்டும். பேசிக் கொண்டிருப்பதை விடச் செயலாற்றுவதில் நாம் முனைய வேண்டும். எவ்வளவு விரைவில் நாம் செல்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது. சோழ மண்ணைச் சாளுக்கியன் மிதித்து விட்டான் என்ற ஓர் அவப் பெயருக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது'' என்று வல்லவரையர் சொல்லி நிறுத்தினார்.

எல்லாருடைய முகத்திலும் வீர உணர்ச்சி தளும்பியது. அப்பொழுதே அனைவருமே போட்டி போட்டுக் கொண்டு சென்று சாளுக்கியர்களை 'ஹதாஹதம்' செய்யத் துடிக்கும் பரபரப்பு அவர்களிடம் இருந்தது.

ஆனால், மதுரன் இன்னும் வரவில்லையே என்ற கவலைதான் மன்னர் மனத்தில் வட்டமிட்டது. மதுரனின் வருகையை எதிர்பார்த்து அவர் விழிகள் வாயிற்புறத்தை நோக்கியவாறிருந்தன. ஒற்றர் தலைவரைப் பார்த்து, கடைசியாக ''மதுரனை நீங்கள் எப்போது சந்தித்தீர்கள்?'' என்று கேட்டார்.

ஒருவரும் சரியான மறுமொழி கூற முடியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இளையபிராட்டி இப்பொழுது பேசினாள்: ''நாம் மதுரனுக்குத் திருமணம் செய்வித்து இளவரசுப் பட்டமும் சூட்ட வேண்டும் என்ற செய்தியை அறிந்ததிலிருந்து மதுரனின் போக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. மதுரன் முன் எப்பொழுதும் போல் என்னிடம் மனத்திறந்து பேசுவதில்லை'' என்று தெரிவித்தாள்.

வல்லவரையர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''மதுரனின் போக்கில் எந்த மாறுதலும் இல்லை. மதுரனுக்கு இப்பொழுது இருப்பதெல்லாம் யாரைத் திருமணம் செய்து கொள்வது என்ற பிரச்னைதான். அந்தப் பிரச்னையில் இளையபிராட்டியார் குறுக்கிடாமல் இருந்தால் மதுரன் கவலையற்றிருப்பான்'' என்றார்.

இளையபிராட்டியார் மிகக் கோபத்துடன் வல்லவரையரை நோக்கினார். ''வல்லவரையரே! மதுரனுடைய திருமண விஷயத்தில் நான் தலையிடுகிறேனா? மதுரனுக்கு ஏற்ற மணமகளை - தங்கள் மகளை - மன்னர் முடிவு செய்த பிறகு அந்த விஷயத்தில் நான் ஏன் குறுக்கிட வேண்டும்?''

மந்திராலோசனை சபையில் வல்லவரையரை எதிர்த்து, கடும் குரல் கொடுக்கும் இளையபிராட்டியையே எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மிக நெருங்கிய உள்ளம் கொண்ட - கருத்து வேற்றுமையே இல்லாத தம்பதி என்று அவர்களைப் பலர் புகழ்ந்து கொண்டிருக்கும்போது, வல்லவரையர் இளையபிராட்டியாரின் மீது குற்றம் சாட்டுவதும், இளையபிராட்டியார் அதற்கு மறுமொழி கூறுவதுபோல் மிகக் கடுமையாகப் பேசுவதும் மற்றவர்களுக்கு வியப்பாக இருந்தது.

ஆனால், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் எழுந்த கேள்விக் குறியும், வியப்பும், எந்த நொடியிலும் அங்கு நிலவிய அமைதியைக் கெடுக்கக்கூடிய அளவிற்குப் பொங்கி வரும் என்பது புலப்பட்டது.

'வல்லவரையருடைய மகளா?' அவர்கள் கேட்காமலேயே அவர்கள் விழிகள் கேட்டன. 'இளையபிராட்டியாருக்கு ஏது மகள்?'

தங்களுக்குத் தெரியாமல் அவர்களுக்குக் குழந்தை எப்பொழுது பிறந்தது என்று அவர்கள் கேட்க நினைத்தார்கள். ஆனால், மரியாதைக் குறைவு ஏற்படுமோ என்று அவர்கள் வாயைத் திறக்கவில்லை. அதே உணர்ச்சிதான் இராசராசருக்கும். அவரும் கேட்டார், ''வல்லவருடைய மகளா?'' என்று.

அவருக்கு ஓரளவுக்குச் செய்திகள் தெரிந்துதான் இருந்தன. ஆனால், இளையபிராட்டியின் வாய் வழியே சபை மண்டபத்தில் அந்தச் செய்தி வெளிவந்தவுடன் அதை மேலும் வளர்த்து விவாதிக்க விரும்பாமல் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நிலையில், ''என்ன வல்லவரையரே! உங்களுக்கு அப்படி ஓர் எண்ணம் இருந்திருக்கிறதா?'' என்று கேட்டார். அதாவது வல்லவரையருக்கு ஒரு மகள் இருப்பது தனக்கு முன்பே தெரியும் என்றும், அந்த மகளைத் தன்னுடைய மகனுக்கு மணம் புரிவிக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பது மட்டும்தான் தெரியாது என்பது போல அவரது பேச்சு இருந்தது.



வல்லவரையருடைய முகம் இப்பொழுது கடுமையாகியது. ''சக்ரவர்த்தி அவர்களே! திருமணத்தைப் பற்றிப் பேசுவதற்காக நாம் இப்பொழுது இங்கு கூடவில்லை. நம்முடைய எல்லையை நோக்கிச் சாளுக்கியப் படைகள் விரைந்து வந்து கொண்டிருக்கின்றன. நம் கொடியின் நிழல்படும் இடத்தினின்று காததூரம் கூட வரத் துணியாத சாளுக்கியர் இப்பொழுது சோழ நாட்டின் மீது படையெடுக்கின்றனர் என்றால் அது எவ்வளவு முக்கியம் வாய்ந்தது. அதைப் பற்றி நாம் விவாதிக்க வேண்டும். மதுரனுடைய திருமண விஷயம் முடிந்து போன ஒன்று. மன்னர் முடிவு செய்து விட்டார். இளையபிராட்டியார் முடிவு செய்து விட்டார். அதில் நான் தடை சொல்ல என்ன இருக்கிறது? ஆனால், மதுரன் அந்த முடிவை ஏற்றுக் கொண்டு விட்டானா என்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி. மதுரனுடைய திருமணத்தை நடத்தி இளவரசுப் பட்டம் சூட்டி கோலாகலமான விழா கொண்டாடுவது முதலில் நடக்கப் போகிறதா? அல்லது மதுரனைப் போர்க் கவசங்கள் அணியச் செய்து வெற்றி முழக்கத்தோடு படைகளுக்குத் தலைமை தாங்கி வடக்கே காததூரம் வழியனுப்பி வைக்கும் நிகழ்ச்சி நடக்கப் போகிறதா? எது நடக்கப் போகிறது?'' என்று வல்லவரையர் அழுத்தத் திருத்தமாகக் கேட்டார். சபையில் மீண்டும் மௌனம் நிலவியது. இந்தக் கேள்விக்கு மறுமொழி கூறுவது ஒன்று மன்னர் இராசராசனாக இருக்க வேண்டும்; அல்லது முதலமைச்சராக இருக்க வேண்டும்.

இருவருமே வாய் திறப்பதற்கு முன்பாக இளையபிராட்டி மிக அழுத்தமான குரலில், ''திருமணம்தான் முக்கியம். இளவரசுப் பட்டம் சூட்டுவதுதான் முக்கியம். என்னுடைய அருமை மதுரன் ஏராளமான போர்க்களங்களுக்குச் சென்றிருக்கிறான். அவனுடைய புகழ்க்கொடி எட்டுத் திக்குகளிலும் பறக்கிறது. சாளுக்கியர்கள் படையெடுத்து வருகின்றனர் என்றால் அதைச் சோழ நாட்டு இளம் படை வீரன் ஒருவனே சென்று தடுத்து நிறுத்திவிட முடியும். அதற்கு என் அருமை மதுரன் செல்ல வேண்டிய அவசியமில்லை. அரசர் இட்ட கட்டளையை மேற்கொண்டு கடல் கடந்து சென்றும், பல திசைகளுக்குச் சென்றும், என் அருமை மதுரன் இவ்வளவு ஆண்டுகளைக் கழித்து விட்டான். இனியும் அவனைப் போர்க் களத்திற்குச் சென்று எதிரிகளை அழிப்பது ஒன்றுதான் அவன் செய்யக்கூடிய செயல் என்று முடிவு செய்யப் போகிறீர்களா? அவன் திருமணம் செய்து கொண்டு உமக்கு உதவியாக இளவரசுப் பட்டத்தை ஏற்று நாடெங்கும் சுற்றி வந்து நல்லாட்சி முறையை

அழுத்தமாக நிலைநாட்டுவதற்கு அவனுக்கு நீங்கள் வாய்ப்பளிக்கப் போகிறீர்களா? படைத் தலைமையா அல்லது நாட்டு ஆட்சியா? என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். போர்க்களத்திற்குச் செல்ல வேண்டும் என்றால் இளம் வீரர் என்ன? இதோ எங்கள் வல்லவரையரே தன் வாளை ஏந்திச் செல்லக்கூடிய துணிவு அவருக்கிருக்கிறது. தனியாக ஒரு போர்க்களத்திற்கு அவர் தலைமை வகித்துச் சென்று வெற்றிக் கொடியை நாட்ட வேண்டும் என்பது என்னுடைய ஆசை'' என்று இளையபிராட்டி சொன்னவுடன், வல்லவரையர் சீறி எழுந்தார்.

''தனியாக என்று இளையபிராட்டி சொல்வது ஏதோ எனக்குத் துணை இருந்தால்தான் போர்க்களத்திற்குச் செல்ல முடியும் என்பதைத் தெரிவிப்பதுபோல் தோன்றுகிறது. இந்த வார்த்தையை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்'' என்றார்.

மற்றவர்களுக்கெல்லாம் சிரிப்புப் பொங்கியது. என்ன இருவரும் வேடிக்கையாக ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கிறார்களா அல்லது உண்மையாகவே அவர்கள் இருவருக்குமிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறதா? என்று புரியாமல் அவர்கள் மறுமொழி சொல்வதறியாமல் திகைத்தார்கள்.

இராசராசர் இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். இளையபிராட்டியாருக்கும் வல்லவரையருக்கும் இடையே அண்மையில் கருத்து வேற்றுமை நிலவுகிறது என்று தான் கேள்விப் பட்டது இன்று உறுதியாகிவிட்டது. அப்படியென்ன அவர்கள் இடையே மனத்தாங்கல் கொள்ளும் அளவிற்கு நடந்திருக்கும்? அதைப் பற்றிக் கேட்டறிவதற்கு இது தருணம் அன்று. ஆனால், மதுரனைப் பற்றித்தான் இருவரும் விவாதித்துக் கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்தார்.

அவர் வல்லவரையரைப் பார்த்து, ''வல்லவரையரே! மதுரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டும் என்று அதற்கு ஏற்ற நாளையும் பார்த்து விட்டேன். ஆனால், அதேபோதில் சாளுக்கியப் படை களைத் தடுத்து நிறுத்துவது இப்பொழுது மிக முக்கியமாகப் படுகிறது. சாளுக்கியரை வென்று திரும்பி வந்து வீர அபிடேகத் தோடு இளவரசுப் பட்டாபிடேகத்தையும் நாம் நடத்தி விடலாம் என்று தோன்றுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.



வல்லவரையர் மறுமொழி கூறுவதற்குள் இளையபிராட்டி குறுக்கிட்டு, ''வீரத்திருவை மதுரன் மணந்து திரும்பி வருவது உறுதி தான். அவனுக்குத் திருமணம் செய்து இளவரசி வெற்றித் திலகம் இட்டு மதுரனைப் போர்க்களத்திற்கு அனுப்பி வைத்துத் திரும்பி வரும்போது வீரத் திலகமிட்டு வீர ஆரத்தி எடுத்து வரவேற்கும் நிலையை நீங்கள் ஏன் ஏற்படுத்தக்கூடாது?'' என்றாள்.

வல்லவரையர் சொன்னார்: ''இளையபிராட்டியாருக்கு மதுரனின் திருமணத்தை உடனே நடத்த வேண்டுமென்று ஆசை. மணப்பெண் எந்த நாட்டு இளவரசியாக இருந்தாலும் அவருக்குக் கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால், போர்க்களம் போவதற்கு முன்பாகத் திருமணம் நடத்த வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கிறார்கள். திருமணம் என்பது நாளைக் காலையிலே நடைபெறும் ஒரு சிறு சம்பவமா? ஏன் அவசரப்பட வேண்டும்? திரும்பி வந்த பிறகு திருமணத்தை நடத்தினால் என்ன குறைந்து விடப் போகிறது?''

''மதுரன் இங்கு இருந்திருந்தால் அவனே ஒரு சரியான முடிவைச் சொல்லியிருப்பான்'' என்றார் இராசராசர்.

''என்ன சொல்லியிருப்பான்? நான் திருமணம் செய்து கொண்டு போர்க்களம் செல்கிறேன் என்று சொல்லியிருப்பானா? அல்லது இளையபிராட்டியார் சொல்வது போல் நான் போர்க்களத்திற்குப் போக மாட்டேன் என்று சொல்லியிருப்பானா?'' என்று வல்லவரை யர் கேட்கவும் இளையபிராட்டியாருக்குச் சீற்றம் பொங்கியது.

''மதுரன் அப்படி ஒன்றும் கோழையல்லன். அவன் போர்க்களத் திற்குப் போக மாட்டேன் என்று சொல்லவே மாட்டான். இங்கே பேசிக் கொண்டிருக்கும் செய்தியைக் கேட்டாலே அவன் வருத்தப் படுவதோடு கோபங் கொள்வான். இந்நேரம் அவன் செவிகளிலும் போர்க்களத்தைப் பற்றிய செய்தி விழுந்திருக்கும். இந்நேரம் அவன் போர்க்களத்திற்குச் செல்லும் ஆயத்தத்தோடுதான் வருவான். மதுரனை அப்படியொன்றும் கோழையாக்கி விடாதீர்கள்'' என்றாள்.

இருவருடைய விவாதத்தையும் பார்த்து அங்குள்ளோர் எல்லாரும் ரசித்துக் கொண்டிருந்தனர். இவர்கள் இருவருக்கும் மதுரனுடைய திருமணத்தைப் பொறுத்தவரையில், அவனுக்கு யாரை மணம் செய்து கொடுப்பது என்பதில்தான் ஏதோ கருத்து வேற்றுமை நிலவு கிறது என்பது தெள்ளத் தெளிவாக அவர்களுக்குப் புரிந்து விட்டது.

ஒருவர் கேட்டார்: ''இளையபிராட்டி அவர்களே! மதுரனின் திருமண விஷயமாகப் பேசுவதற்காக நாம் இப்பொழுது இங்கு கூடியிருக்கிறோமா? அல்லது நமது வாயிற்கதவைத் தட்ட வந்திருக்கும் விரோதியின் கொட்டத்தை ஒடுக்குவதற்கான திட்டத்தைத் தீட்டுவதற்காக வந்திருக்கிறோமா? தங்களுக்குத் தெரியாததில்லை. ஏன் இப்படி கடுமையான விவாதத்தில் இறங்கி இருக்கிறீர்கள்? தனக்கு மணம் பேசியிருக்கும் இளவரசியை மதுரன் விரும்பவில்லையா? உண்மை நிலை என்ன என்று சொல்லுங்கள்'' என்றார்.

வல்லவரையர் உடனே குறுக்கிட்டு, ''மதுரனைக் கேட்காமலேயே அவனுடைய திருமணத்திற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. அவனை ஒரு வார்த்தை கேட்பதற்கு யாருக்கும் மனமில்லை. அவன் மனத்திலே குடி கொண்டிருக்கும் பெண் யார் என்று யாராவது கேட்டுத் தெரிந்து கொண்டார்களா? ஒருவருக்குத் தெரியும். ஆனால், அவர் அதை வெளியே தெரிவிக்காமல் மறைக்கப் பார்க்கிறார்'' என்றார்.

எல்லாரும் இந்தக் குற்றச்சாட்டைக் கண்டு, மதுரனின் மனத்தை அறிந்தவர் யார் என்று தெரிந்து கொள்வதில் வியப்பைக் காட்டினர். இளையபிராட்டி முகம் சிவந்தாள். தம்மைத்தான் வல்லவரையர் குறிப்பிட்டுச் சொல்கிறார் என்பதை உணர்ந்தாள். ஆனால், தாம்தான் என்று அங்கே வெளியே காட்டிக் கொள்ளாமல், ''மதுரனின் மனத்தை அறிந்தவர் யார் என்பதை வல்லவரையரே சொல்லலாமே! ஒருவேளை தாமே அறிந்திருக்கிறோம் என்பதை நேரிடையாகச் சொல்லாமல் இப்படிச் சுற்றி வளைத்துச் சொல்ல முயல்கிறார் என்று தோன்றுகிறது'' என்றார்.

இராசராசனுக்கு ஒன்றும் புரியவில்லை. 'மதுரனின் மனத்தில் வேறொரு பெண் குடி கொண்டு இருக்கிறாளா? இதுவரையில் நமக்குத் தெரியவில்லையே' என்று எண்ணி அவர் வியப்பு நிறைந்த குரலில், அந்தச் செய்தியை அறிந்து கொள்ள வேண்டிய ஒரு பரபரப்பால் இளையபிராட்டியையும் வல்லவரையரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''வல்லவரையரே! ஏதோ புதிர் போடுவது போல் பேசுகிறீர்கள். என்னுடைய அருமை மகன் தன் மனத்தில் வேறு ஒருத்தியை நினைத்திருக்கிறானா? அவள் எந்த நாட்டு இளவரசி? அதை அவன் என்னிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லியிருக்கிறான்? அவன் நெஞ்சத்தை அறிந்தவர் யார்? சொல்லுங்கள்'' என்றார்.



''அவன் நெஞ்சத்தைப் புரிந்து கொண்டு அதை வெளிப்படுத்தாமல் நான் இருப்பேனா?'' என்று வல்லவரையர் கேட்டார்.

''அது என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவன் நெஞ்சத்தை அறிந்தவர் என்ன நினைக்கிறார் என்பதையும் நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது அதை நீங்கள் இங்கே சொல்லலாமே? நாம் மனம்விட்டுக் கலந்து ஆலோசிப்பதற்காகத்தானே இங்கே கூடியிருக்கிறோம்'' என்றார்.

இளையபிராட்டி இருப்புக் கொள்ளாமல் தவித்தார். வல்லவரையர் போக்கு சமீபகாலமாக மாறித்தான் இருக்கிறது. அவர் தன்னை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக விலகிப் போகிறாரோ என்று கூட அவளுக்குத் தோன்றியது. ஆனால், அப்படி அவர் செய்ய மாட்டார் என்ற உறுதியும் அவள் மனத்தின் அடித்தளத்தில் இருந்தது. மதுரனின் விஷயத்தில் அவருடைய மனத்தை அறிந்தவர் ஒருவர் இருக்கிறார் என்று மறைமுகமாகச் சொல்கிறாரே, அதை ஏன் அவர் தெளிவாகச் சொல்லவில்லை?

அவள் வல்லவரையரைப் பார்த்து, ''இப்படியெல்லாம் நாம் மூடி மறைத்துப் பேசக்கூடாது. மதுரனை வளர்த்தவர்கள் நாம். மதுரனுடைய நல்வாழ்வில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்து வைத்திருப்பவர்கள் நாம். அவன் உயர்ந்தால் நமக்கு மகிழ்ச்சி. அவன் நல்லதோர் இளவரசியை மணந்து அவள் வருங்காலத்துச் சோழ நாட்டு அரசியாகத் திகழ வேண்டுமென்பதில் நமக்கு இல்லாத அக்கறை வேறு யாருக்கு இருக்க முடியும்? பரம்பரை பரம்பரையாக, விஜயாலய சோழன் அமர்ந்த இந்த நாட்டின் அரியணையை அலங்கரிக்கப்போகும் திருமகள் யார் என்பதை முடிவு செய்யும் உரிமை நமக்கு இல்லாதது மதுரனுக்கு உண்டா? மதுரனுக்கு விரோதமாக நாம் முடிவு செய்வோமா?'' என்று கேட்டாள்.

''முடிவு செய்து கொண்டு இருக்கிறோமே; மதுரனின் அருமையான நெஞ்சத்தில் பிடித்தமானவளை அமரச் செய்துவிடாமல் மாற்றுத் திட்டங்கள் வகுத்துக் கொண்டிருக்கிறோமே! சதித் திட்டங்களை உருவாக்குவதில் மாற்றானை வீழ்த்துவதைவிட அருமை மதுரனின் இனிய காதலியை வீழ்த்துவதில்தாமே நாம் சிந்தனையைச் செலுத்துகிறோம்?'' என்றார் வல்லவரையர். அவருடைய இந்த மறைமுகமான பேச்சு ஒருவருக்கும் பிடிக்கவில்லை.

இராசராசர் கேட்டார்: ''இளையபிராட்டியாரே! தங்களுக்குத் தெரியுமா? மதுரனின் நெஞ்சத்தில் வதியும் அந்த மங்கை யார்

என்பதை எவர்க்குச் சொல்லலாமா? அப்படியென்றால் பழுவேட்டரையருடைய மகளை மதுரன் விரும்பவில்லையா? இந்த நாட்டின் வருங்கால அரசியாகத் திகழப் போகும் அந்தப் பெண் யார்? நான் தெரிந்து கொள்வது முக்கியமில்லையா?'' என்று கேட்டார்.

இளையபிராட்டி மௌனம் சாதித்தாள். அந்தச் சமயம் மதுரன் அங்கே விரைவாக வந்து கொண்டிருந்தான். சபையில் பரபரப்பு ஏற்பட்டது. கலகலப்பு ஏற்பட்டது. மதுரனுடைய வேகமான வருகையைக் கண்டு இராசராசர் மகிழ்ந்தார்.

போர் நடைபெறப் போவதைப் பற்றி அங்கே பேச்சு நடந்து கொண்டிருப்பதை அறியாமல், தாம் உள்ளே நுழையும்பொழுது தன்னுடைய திருமணத்தைப் பற்றிப் பேசுகிறார்களே என்பதை உணர்ந்து கொண்டு தன் கருத்தைத் தெரிவிக்க விரும்பிய மதுரன், ''வருங்கால சோழ நாட்டு அரசியை நிர்ணயிப்பதில் எனக்குப் பங்கில்லையா?'' என்று ஓர் அழுத்தமான கேள்வி கேட்டான்.

இராசராசரே அதிர்ந்து விட்டார். வல்லவரையர் சொல்வது போல் மதுரன் தன் மனைவியை - தம் இதய அரசியை - தாமே உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறான் என்பது அவருக்கு இப்பொழுது தெளிவாய்ப் புரிந்தது. அவள் யார் என்பதை அறிந்து கொள்ள அவர் துடித்தார்.

''மதுரா! உன் மனத்தில் நீ ஒரு மங்கையை வரித்திருக்கிறாய் என்று வல்லவரையர் சொல்கிறார். அது உண்மைதானா? அப்படியென்றால் அவள் யார்?'' என்று அரசர் கேட்டார்.

மதுரன் வாயைத் திறக்க முற்பட்டபோது இளையபிராட்டி மிக வேகமாக, ''மதுரா! நில். நீ இப்பொழுது சொல்லப் போவதை என்னிடம் தெரிவிக்காமல் இந்தச் சபைக்கு அறிவிக்கக்கூடாது என்று நான் கட்டளையிடுகிறேன். இது அன்புக் கட்டளை மட்டுமன்று; உன் அத்தையின் உரிமைக் கட்டளை'' என்றாள்.

சபையே மிகப் பரபரப்புடன் அங்கே நடக்கப் போவதைக் கவனித்துத் திகைத்து நின்றது.



# 30. தம்பதியின் கருத்து வேற்றுமை

வல்லவரையர் வந்தியத்தேவன் தனது வெண்ணிறப் புரவியின் மீது அமர்ந்து, அதை வேகமாகத் தட்டிவிடாமல் மெல்லச் செல்லுமாறு பணித்துத் தன்னுடைய சொந்த ஊரான பிரம்மதேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவர் மனத்தில் பலவிதமான எண்ணங்கள் சுழன்று கொண்டிருந்தன.

கடந்து போன ஆண்டுகளின் சம்பவங்களையெல்லாம் மெல்லத் தன் மனத்தில் மீண்டும் எண்ணிப் பார்த்தார். நாற்பதாண்டுகளுக்கு முன் தஞ்சை மாளிகைக்கு அவர் ஒருவருடைய அறிமுகமுமில்லாமல் வந்ததும், ஆதித்த கரிகாலனும் அருள்மொழி வர்மரும் அவருக்கு நண்பரானதும், சோழ மாளிகையில் இளையபிராட்டி குந்தவ்வை தேவியாரை அடிக்கடி சந்திக்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டு மெல்ல மெல்ல அது காதலாக மலர்ந்ததும், பல போர்க்களங்களில் அருள்மொழி வர்மருக்குத் துணையாக ஈழ நாட்டிற்கும் மற்ற பகுதிகளுக்கும் சென்று போரிட்டதும், இளவரசர் ஆதித்த கரிகாலன் திடீரென்று கொலை செய்யப்பட்டு, அந்தக் குற்றம் அவர் மீது சுமத்தப்பட்டதும், அந்தக் கால கட்டத்தில் உயர் நண்பர் அருள்மொழி அரச பதவியைத் தியாகம் செய்து கடல் கடந்த நாடுகளுக்குச் சென்றதும், சிறைக்கூடத்தில் இளையபிராட்டி தம்மை வந்து சந்தித்ததும், இருட்சிறையில் வாடியபொழுது மனத்தில் தோன்றிய எண்ணங்களும், அவர் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டு சிறையிலிருந்து வெளிவந்த பிறகு அவருக்காகக் காத்திருந்த குந்தவ்வையை அவர் மணந்ததும் - கடந்து போன சம்பவங்களை மீண்டும் மன அரங்கிலே கொண்டு வந்து அதைப் பற்றி மீண்டும் நினைத்துப் பார்த்து அதனால் ஏற்பட்ட பின் விளைவுகளை எண்ணியவாறு சென்று கொண்டிருந்தார்.

தஞ்சை மாளிகையில் முதல்நாள் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம் ஒருவித முடிவும் ஏற்படாமல் கலைந்தது அவருக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. மதுரனின் இளவரசுப் பட்டம்

சூட்டும் விழாவைப் பற்றியும் அவனுடைய திருமணத்தைப் பற்றியும் கலந்து பேசுவதற்காகக் குறுநில மன்னர்களும் முதல் அமைச்சரும் கூடிய அந்தக் கூட்டத்தில் இளையபிராட்டியார் நடந்து கொண்ட முறை அவருக்கு எள்ளளவும் பிடிக்கவில்லை.

மிக உயர்தர ராஜதந்திரி என்றும், நாட்டு நிர்வாகத்தைச் செம்மையாக நடத்துவதற்குத் தக்க ஆலோசனைகளைக் கூறக் கூடிய அறிவு படைத்தவர் என்றும், விருப்பு வெறுப்பு அற்ற முறையில் நடந்து கொள்ளும் குணம் படைத்தவரென்றும் சகோதர இராசராசரிடம் மிகவும் பற்றுக் கொண்டவர் என்றும் நாட்டிலே மக்களால் புகழ்ந்து பேசப்படும் இளையபிராட்டி, அன்று தம்முடன் கடுமையான விவாதத்தில் ஏன் ஈடுபட்டார் என்று அவருக்கு விளங்கவில்லை.

அவருக்கும் அவளுக்கும் எந்தவிதமான மனத்தாங்கலும் இதுவரையில் கிடையாது. அடிக்கடி சந்தித்து அமைதியாகப் பேசிக் கொள்வதற்கான நேரமும் இருவருக்கும் இருந்ததுமில்லை. எனினும் ஒருவர் இதயத்தை மற்றொருவர் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டு அதற்கேற்ப இதுவரை நடந்து கொண்டிருந்தனர். அண்மையில் இளையபிராட்டி தம்முடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்தை ஏன் சொல்கிறாள் என்று அவருக்குப் புரியவில்லை.

மதுரனின் திருமணம் தொடர்பாக இளையபிராட்டி மிக அழுத்தமாகவும், கடுமையான கொள்கையுடனும் இருப்பது அவருக்கு வருத்தமாக இருந்தது. மதுரன் இன்னும் சிறுபிள்ளை அல்லன். இந்த நாட்டையே ஆளக்கூடிய அளவிற்கு வயதும், ஆற்றலும் பெற்றிருக்கும் பருவத்தினன். என்னதான் வளர்த்த பிள்ளையாக அவன் இருந்தாலும், இளவரசர் என்ற அளவிற்கு மரியாதை கொடுக்கக் கூடிய நிலையில் மதுரனைத் தன்னுடைய போக்கிற்கு உட்படுத்த வேண்டும், தன் கருத்தை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இளையபிராட்டி அவனை ஆட்டிப் படைப்பது வல்லவரையருக்குப் பிடிக்கவில்லை. இளையபிராட்டி முடிவு செய்திருக்கும் மணமகளை மதுரனுக்குப் பிடிக்கவில்லை. பிடிக்கவில்லை என்பதை மதுரன் வாய்விட்டுச் சொல்லவில்லை. ஆனால், அவன் மனத்தில் வேறொரு பெண்ணைப் பற்றிய எண்ணம் இருந்து கொண்டிருப்பதென்பது தெளிவாகத் தெரிந்து விட்டது. அரசர் எதிரே வாய் திறக்க அவனுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

இளையபிராட்டியை நோக்கிய இராசராசர் மதுரனின் கருத்தை நாம் கேட்போமே என்று கேட்டதற்குச் சபையையும் மறந்து இராச



ராசரிடம் தனக்குள்ள பற்றுதலை முன்னிறுத்தி மன்னா என்றும் அரசே என்றும் எப்பொழுதும் அழைக்கும் இளையபிராட்டி, 'அருள் மொழி' என்று அவருடைய இளம் பருவத்துப் பெயரையே தன் உறவுமுறை காரணமாக விளித்து, 'இந்த விஷயத்தில் நீங்கள் சற்றுப் பொறுமையாக இருக்க வேண்டும். நாம் இந்தப் பொதுவான சபையிலே மதுரனைப் பேசவிடுவது அவ்வளவு சரியில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு மாபெரும் அரச இரகசியத்தை இப்படி அம்பலமாக்க வேண்டாமென்றுதான் நான் இவ்வளவு கடுமையாக நடந்து கொள்கிறேன். சபை கலைந்த பிறகு நான் உங்களுடன் பேச வேண்டிய - சொல்ல வேண்டிய - நீண்ட நாள்களாக மனத்திலே அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் அந்தச் செய்தியை இன்று நான் சொல்லி விடத்தான் போகிறேன். அதுவரையில் மதுரன் இந்தச் சபையில் தன் எண்ணத்தைச் சொல்லக்கூடாது என்று நீங்கள் உத்தரவிடுவீர்களா? அல்லது நானே அதைக் கண்டிப்பாகக் கூறட்டுமா?' என்று இளையபிராட்டி பேசியதைக் கேட்டவுடன் வந்தியத்தேவன் திகைத்து விட்டார்.

ஆலோசனைக் கூட்டத்தை அத்துடன் முடித்துக் கொண்டு மன்னர் இராசராசர் அவையைக் கலைந்து போகுமாறு செய்தார். ஒரு முடிவும் ஏற்படாமல், கலைந்த அன்றையக் கூட்டத்தின் விசித்திரமான போக்கை எண்ணி குறுநில மன்னர்கள், முதலமைச்சர் அனைவரும் கலக்கமுடன் மெல்லப் புறப்பட்டுச் சென்றனர்.

பிறகு மதுரனும் இராசராசனும் இளையபிராட்டியும் வந்தியத் தேவனும் மட்டுமே அங்கிருந்தனர். வந்தியத்தேவன் எழுந்திருக்க முயன்றார். அவரைப் பார்த்து இராசராசன் கேட்டார்: ''நீங்கள் எங்கே எழுந்திருக்கிறீர்கள்?''

''ஆமாம்; நானும் ஒரு குறுநில மன்னர்தானே! மற்றவர்கள் எல்லாரும் இந்தச் சபைக் கூட்டத்தை விட்டுச் செல்லும்போது எனக்கு மட்டும் இங்கே அமர்ந்திருக்க என்ன தகுதி இருக்கிறது? எனக்கு மட்டும் என்ன தனிப்பட்ட உரிமை இருக்கிறது?'' என்று இளையபிராட்டியைப் பார்த்துக் கொண்டே சொன்னார்.

இளையபிராட்டி மெல்லிய பொருள் பொதிந்த புன்னகையுடன், ''குறுநில மன்னர் என்ற சிறப்புப் பதவி காரணமாக மட்டும் நீங்கள் இங்கே வரவில்லை என்பதை அரசர் சொல்ல வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

வந்தியத்தேவன் கடுமையான குரலில், ''நான் இப்பொழுது அந்தப் பாச பந்தத்தையெல்லாம் தாண்டி ஒரு சுய மரியாதை உணர்ச்சியோடு நடந்து கொள்ளக்கூடிய கட்டத்தில் இருக்கிறேன். எனக்குப் பிரம்மதேசத்தில் மிகவும் முக்கியமான பணி இருக்கிறது. பிரம்மதேசம் நோக்கிச் சென்று கொண்டிருந்தவனை மன்னர் அழைத்தார். நான் வந்தேன். ஒரு முக்கியமான முடிவு இங்கு ஏற்படப் போகிறது என்று நினைத்தேன். ஆனால், எந்த முடிவும் ஏற்படவில்லை. ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல வந்த ஒரு பெண்ணை மிகத் தந்திரமாகத் தனி அறையில் அடைத்து அவள் சொல்ல வேண்டிய எண்ணத்தைச் சொல்ல முடியாமல் தடுத்துக் கொண்டிருக்கும் ஒரு சக்தி இங்கு எல்லாரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும்'' என்று நேருக்கு நேர் இளையபிராட்டியைப் பார்த்துச் சொன்னார்.

இளையபிராட்டியின் முகம் மாறியது. அவர் தன்னுடைய இளவல் இராசராசனைப் பார்த்து இப்பொழுது உறவு முறையைக் கொண்டு அழைக்காமல், ''சோழ சக்ரவர்த்திகளே! இங்கு மறைமுகமாகச் சாட்டப்படும் குற்றம் என்னைப் பற்றியதுதான் என்பதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். தங்களைச் சந்திக்க ஒரு பெண் வந்தாள். அந்தப் பெண் சமீப காலமாகவே நமது மாளிகையைச் சுற்றி வட்டமிடுகிறாள். அவள் மிகவும் திறமைசாலி. அவளுக்கு இருக்கும் ஆற்றல், பெரும் அரச குடும்பத்தில் பிறந்திருக்கும் ஒரு பெண்ணுக்கு இருக்கக்கூடிய ஓர் ஆற்றலாக இருக்கிறது. அவள் யாரென்று உங்களுக்குத் தெரியாது. ஆனால், எனக்குத் தெரியும். இந்த மாளிகையில் பணிப் பெண்ணாக அவள் உள்ளே நுழைந்தாள். மன்னருடைய தனி அறையிலே பணியாற்ற அவளுக்குப் பணியும் கொடுக்கப்பட்டது. இவ்வளவு விரைவிலேயே எல்லாரையும் கவர்ந்து முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டிய ஒரு திட்டத்துடன் அவள் வந்திருக்கும் செய்தி ஒருவருக்கும் தெரியாது'' என்று சொல்லி நிறுத்தும்பொழுது...

வல்லவரையர் குறுக்கிட்டு, ''இதென்ன? ஒரு பெண், அறிமுகமாகாத ஒரு பெண், சாதாரணக் குடிமக்களில் ஒருத்தியான ஒரு பெண், அரண்மனைக்குள்ளே அரசருடைய இருப்பிடத்தில் பணி புரியக்கூடிய அளவிற்கு உயர்ந்து வந்திருக்கிறாள் என்றால் அவளது பூர்வோத்திரங்களைத் தக்க முறையில் ஆராயாமல் அவளை வேலையில் நியமித்தவர் யார்? நமது ஒற்றர் படையினருக்கு அவளது உள்நோக்கம் தெரியாதா? இப்படிப் பாதுகாப்பற்ற



முறையில் பல செயல்கள் நமது சோழ நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுப்பதற்கு முடிய வில்லை. மேலும் அந்தப் பெண் நமது மதுரனுடன் நெருங்கிப் பழகியிருக்கும் செய்தியும் எனக்குத் தெரியும். இப்பொழுது மதுரனை அதைச் சொல்லும்படியாகக் கேட்டுக் கொள்வதும், அவன் மூலமாக அரசர் அதை அறிந்து கொள்வதும் அவசியமென்றும் நான் கருதுகிறேன். இப்படியே நாள்களைக் கடத்திக் கொண்டு போனால் நாம் ஒருவருக்கொருவர் மனத்திற்குள்ளேயே ஏதோ ஒன்றை மூடி மறைத்து வெளியே ஒருவருக்கொருவர் சொல்ல முடியாமல் தவித்தோ, மறைத்தோ இருந்தால் அரச குடும்ப விஷயம் நாளைய தினம் பெரிதாக வெடித்து நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் நம்மைப் பற்றிக் குறை கூறும் அளவிற்கு மாறிவிடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

இப்பொழுது மதுரன் இடைமறித்து, ''அரச குடும்பத்தினர் என்பதால் தங்களுடைய சொந்த உணர்ச்சிக்கும் கருத்துக்கும் நாம் மற்றவருக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டுமா? நமக்கென்று ஒரு முடிவெடுக்கும் உரிமை கிடையாதா?'' என்று கேட்டான்.

வந்தியத்தேவன் இப்பொழுது அவனுக்கு மறுமொழி கூறினார்: ''மதுரா! அரச குடும்பம் என்பது மக்களிடமிருந்து வேறுபட்டதன்று. நாம் மக்களுக்காகத்தான் வாழ்கிறோம். கடவுளால் நாம் மக்களுக்குப் பணிபுரிவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்று நமது முன்னோர்கள் கூறியிருப்பது உனக்குத் தெரியாதா? நாம் அவர்களுக்கு வழிகாட்டியாக, ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும். நாம் என்ன செய்கிறோம் என்பதை அவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் செய்யும் தவறுகளை நியாயப்படுத்திப் பேசினால் ஒரு சமயம் புரிந்து கொண்டு விடுவார்கள். மறு சமயம் அதுதான் சரி என்று எண்ணி அவர்களும் அதுபோல் நடக்கத் தொடங்குவார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. அதனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் உன்னுடைய திருமணப் பிரச்னை என்பது உன்னுடைய உணர்ச்சிக்கு மட்டும் மதிப்புக் கொடுப்பதன்று. இது தொடர்பாக பல சிக்கல்களும் பின்னல்களும் அதில் நிறைந்திருக்கின்றன என்பதை நான் தெரியப்படுத்த விரும்புகிறேன். இளையபிராட்டியும் அதைத்தான் சொல்ல விரும்புகிறார். ஆனால், அதைச் சரிவரச் சொல்லாமல் தன் மனத்திற்குள்ளே இருப்பதை வெளியே தெளிவாக எடுத்துச் சொல்லாமல் தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு அவர்கள் பேசி வருவதால்தான்,

அவர்கள் கெட்ட பெயர் வாங்கிக் கொள்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.''

இளையபிராட்டி சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர் முகத்திலே இதுவரையில் இருந்து வந்த ஒருவிதக் கவலையும் கோபமும் சற்று மறைந்தன. தன்னை வல்லவரையர் புரிந்து கொள்ளவில்லை என்று இதுவரை அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். வல்லவரையர் இப்பொழுது அறிந்து கொண்டு விட்டார். ஆனால், தன்னுடைய கருத்தை அவர் ஒப்புக் கொள்ள மாட்டார் என்று எண்ணியவளாய் மதுரனைப் பார்த்து, ''மதுரா! உன் நன்மைக்கும், நம் சக்ரவர்த்தி யின் நலனுக்கும், நாட்டு நன்மைக்கும் நான் பாடுபட்டு வருகிறேன். என்னுடைய சுய நோக்கம், சுய ஆதாய நோக்கம் இதில் எள்ளளவும் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொண்டால் போதும்'' என்று கூறிச் சற்று நிறுத்தினாள்.

இராசராசன் சற்றுப் பரபரப்புடன் சொன்னார்: ''அக்கையாரே! தாங்கள் இவ்வாறு உங்களை விமர்சித்துக் கொள்வது எனக்குச் சற்றுக் கவலையாக இருக்கிறது. தங்களுடைய எண்ணத்தையும் செயலையும் யாரும் இதுவரையில் எள்ளளவும் சந்தேகப்பட்டதே இல்லை. அப்படியிருக்கும்போது, உங்கள் சுய நன்மைக்காக எதையும் செய்யவில்லை என்பதை நீங்கள் வெளியே எடுத்துச் சொல்லவும் வேண்டுமா? இப்பொழுது எனக்கிருக்கும் கவலை யெல்லாம் இந்தச் சிறிய பிரச்னை பெரிய விசுவரூபமெடுத்து என் முன்னே நிற்கிறது என்பதே. நாம் பழுவேட்டரையருடைய குடும் பத்திலிருந்து பெண்ணை எடுப்பதாக முடிவு செய்து விட்டோம். அதுவும் நியாயம்தான். இளவரசர் பட்டம் சூட்டும்போது அவனுடன் அரியணையில் அமர்ந்திருக்கக்கூடிய தகுதி படைத்தவர் களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். எல்லாரும் சேர்ந்து முடிவு செய்தால் அதை மதுரன் ஏற்காமலிருக்கவே மாட்டான். இது ஓர் அரச பரம்பரைக் கடமை. என்னுடைய சொந்த விஷயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தெரியாத இரகசியமொன்று என் வாழ்க்கையில் நடந்துள்ளது; மற்றவர்களுக்கும் தெரியாது. ஆனால், இளையபிராட்டிக்குத் தெரியும். என்னை மணக்க விரும்பியவளும், நான் விரும்பி மணக்க முயன்று முடியாமல் போனவளுமான ஒருத்தியைப் பற்றிய கதை புதைந்து கிடக்கிறது. ஆனால், நான் என்னுடைய பெற்றோர் பார்த்து, அவர்கள் கூறிய இளவரசியைத் தான் திருமணம் செய்து கொண்டேன். என் அருமை வானதி இறந்த



பிறகும் நான் அரச குலமகள் ஒருத்தியை மணந்தேன். அதுபோல் என் மகன் மதுரனும் நம்முடைய எண்ணத்திற்கு மாறுபட்டு நடக்க மாட்டான் என்பது திண்ணம்'' என்று கூறினார்.

மதுரன் இப்பொழுது பரபரப்புடன், இவ்வளவு நேரம் ஏதோ சொல்ல நினைத்ததைச் சொல்ல முடியாமல் இருந்து இப்போது சொல்வதற்கு வாய்ப்புக் கிடைத்ததுபோல், ''சக்ரவர்த்தி அவர்களே! தங்களுடைய எண்ணத்திற்கு மாறுபட்டு நான் எந்தக் காலத்திலும் நடந்ததில்லை; நடக்கப் போவதுமில்லை. ஆனால், எனக்கென்று ஒரு சுயமரியாதையும் எண்ணமும் உண்டல்லவா? என் விருப்பத்தை நான் தெரிவித்தால் அதை நிறைவேற்ற வேண்டியது தங்களுடைய கடமையன்றோ? விருப்பத்திற்கு மாறாக என் மீது நீங்கள் எதையும் திணிக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். தங்களுடைய சொந்த வாழ்க்கையை ஒரு சிறு கோடிட்டுக் காட்டினீர்கள். தாங்கள் வெளிப்படுத்தித் தங்களுடைய எண்ணத்தைத் தடுத்து நிறைவேற்றா மல் செய்வதற்கு யாராவது முன் வந்திருக்கிறார்களா? இல்லையே. ஆனால், என் விஷயம் அப்படியில்லை. நான் ஒரு முடிவு செய்திருக்கிறேன். அதைத் தங்களிடம் தெரிவிப்பதற்குத் தக்க தருணம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். தருணம் வருவதற்கு முன்பாகவே நீங்களாகப் பார்த்து எனக்கு என்னுடன் இணைந்து அமரக்கூடிய இளவரசியைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தீர்கள். ஆனால், அதற்கு முன்பாகவே என் மனத்துக்குப் பிடித்தவளை நான் தேர்ந்தெடுத்து விட்டேன் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்'' என்று கூறும்பொழுது...

இளையபிராட்டி மிகவும் கடுமையான குரலில், ''மதுரா! இதைத் தான் இந்தச் சபையில் சொல்லக்கூடாது என்று கட்டளையிட்டேன். நமக்குள்ளே நம் நான்கு பேருக்குள் தெரிந்திருக்க வேண்டிய ரகசியமிது. இந்த ரகசியத்தை வெளிப்படுத்தினால் அரச குலத் திற்குத்தான் அவமானம். பரம்பரையாக அதைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள். அதனால்தான் நான் வல்லவரையரிடம் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டு, அத்தை மிகப் பொல்லாதவள் என்று நீயும் நினைக்கும்படியான ஓர் எண்ணத்தைத் தோற்று வித்திருக்கிறேன்'' என்றாள்.

மதுரன் முகம் மாறியது. அவன் எழுந்து நின்று விட்டான். ''வல்லவரையர் சற்று முன்பு ஒன்று சொன்னார்... நினைவிருக் கிறதா? சக்ரவர்த்தி அவர்களை ஓர் இளம் பெண் சந்தித்துத் தன்

தாயிடம் அவரை அழைத்துச் செல்வதாகக் கூறினாளாம். ஆனால், என்ன காரணத்தினாலோ அவள் இங்கே தடுக்கப்பட்டு ஓர் அறையில் அடைத்துப் பூட்டப்பட்டாள். அந்தப் பாதுகாவலிலிருந்து அவள் தப்பினாள். அதற்கு வல்லவரையர் உதவி செய்திருக்கிறார் என்பதை நான் அறிந்தேன். அவளை என்ன காரணம் பற்றியோ அரசரைச் சந்திக்க விடாமல் செய்கிறீர்கள். அல்லது அவள் சொல்வதை அரசர் கேட்க விடாமல் செய்கிறீர்கள். இந்த இரண்டு வித்தியாசமான உங்களுடைய நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது என்ன காரணம் பற்றி இதை நீங்கள் செய்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அந்தப் பெண், அரசருக்காக வெளியே நின்று காத்திருக்கிறாள். மன்னர் அவர்களே! அவளுடன் தாங்கள் ஓரிடத்திற்குப் புறப்பட்டுச் செல்வதாக முடிவு செய்தது உண்மைதானே?'' என்று நேரிடையாகப் பளீரென்று கேட்டான்.

சக்ரவர்த்தி சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு, ''ஆமாம்; நான் மாளிகை வாயிலுக்கே வந்து விட்டேன். அவளை அழைத்துக் கொண்டு அவள் தாயைச் சந்திக்கச் செல்ல வேண்டுமென்று நான் முடிவு செய்தேன். புத்தாடை அணிந்து வருகிறேன் என்று சென்றவள் திரும்பி வரவில்லை. அதற்குள் இளையபிராட்டி வந்தாள். வல்லவரையர் வந்தார். இப்படியாக நான் அவளை வரச் சொன்னதையே மறந்து விட்டேன். இப்பொழுது அவள் எங்கே இருக்கிறாள்? நான் உடனே அவளுடன் சென்றாக வேண்டும்'' என்று இராசராசன் பரபரத்தார்.

அந்த முதிய பருவத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்பால் இளையபிராட்டியின் மேனி மெல்ல நடுங்கியது. ஏதோ ஒன்று நிகழப் போவது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. முகத்தில் மாறுதல் ஏற்பட்டது. அவள் உதடுகள் துடித்தன. தான் செய்யக்கூடிய காரியத்தைத் தடுப்பதற்குப் பலர் சூழ்ச்சி செய்கிறார்கள் என்பது போன்று அவளுக்குத் தோன்றியது. பெரிய ஆபத்திலிருந்து தப்புவிப்பதற்கான திட்டங்களை நாம் தீட்டியிருக்கிறோம். ஆனால், நம்மை எல்லாரும் சந்தேகப்படுகிறார்கள். இதுவரை வெளியே சொல்லாமல் அடக்கி வைத்திருந்த ரகசியத்தை உடைத்துச் சொல்லி விட வேண்டும்?'' என்று எண்ணினாள்.

இராசராசன் புறப்பட்டு விட்டார். ''எங்கே அந்தப் பெண்?'' என்று காவலரைக் கேட்டார். ''அவளை உள்ளே அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டார்.



பூங்கொடி மௌனமாக வந்து நின்றாள். அவள் எல்லாரையும் கம்பீரமாக ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தாள். ஏதோ ஒருவித வெற்றிப் பெருமிதம் அவளுடைய கண்களிலே ஒளிவீசுவது போல் தோன்றியது. அவள் மதுரனை ஒருமுறை நோக்கினாள். அந்தப் பார்வை ஆயிரம் செய்திகளைப் பேசின. பிறகு தலையைக் குனிந்து கொண்டாள். மதுரனுக்கு ஏற்பட்ட குதூலகத்திற்கு அளவே இல்லை. அந்தக் கணத்தில் அந்த இடத்தில் யாரும் தடுக்காமல் இருந்திருந்தால் அவன் ஓடிச் சென்று அவளைத் தழுவிக் கொண்டிருப்பான். அப்படிப்பட்ட ஓர் உணர்ச்சிக் கொந்தளிப்பு அவனிடம் ஏற்பட்டது.

குந்தவ்வை தேவியார் அவளை அப்படி சுட்டெரித்து விடுவது போல் நோக்கினாள்.

''பெண்ணே! புறப்படு. நான் மிகவும் தாமதம் செய்து விட்டேன். இதற்கிடையில் ஏதேதோ நிகழ்ந்து விட்டதாகச் சொல்கிறார்கள். அதையெல்லாம் மறந்து விடு. உன் தாயைச் சந்திக்க நாம் புறப்படுவோம்'' என்று கூறினார் இராசராசர்.

அரசர் முடிவொன்று எடுத்து விட்டார் என்றால் அதில் குறுக்கிடுவதற்கு யாருக்கும் சக்தி கிடையாது. இளையபிராட்டி ஒரு கணம் நினைத்தார். அவரைத் தாம் தடுத்து நிறுத்தி விட முடியுமென்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள். மறுகணம் மதுரன், ''தந்தையே! நானும் தங்களுடன் வருகிறேன்'' என்று மெல்லக் கூறினான்.

அப்பொழுது இளையபிராட்டி, ''மதுரா! நீ இந்த நாட்டின் இளவரசராகப் போகிறாய். வருங்காலத்தில் மாபெரும் சக்ரவர்த்தியாகவும் ஆகப் போகிறாய். உன்னைத் தோளிலே தவழ விட்டு நான் வளர்த்தேன். உனக்கு அறிவு புகட்டினேன். உன்னை ஆற்றல் மிகுந்தவனாக வல்லவரையர் செய்தார். ஆனால், இப்பொழுது உன்னைத் தடுத்து நிறுத்தக்கூடிய நிலையில் நான் இல்லை. ஒன்று சொல்ல விரும்புகிறேன். உன்னுடைய நன்மைக்காகவும் இந்த நாட்டு நன்மைக்காகவும் இப்பொழுது நான் அவப்பெயரை ஏற்றிருக்கிறேன். நான் உண்மையைச் சொல்லக்கூடிய ஒரு கட்டத்திற்கு வந்து விட்டேன். ஆனால், நீ இப்போது சக்ரவர்த்தியுடன் அவர்கள் போகுமிடத்திற்குச் செல்ல வேண்டாம் என்பது என்னுடைய வேண்டுகோள். இன்னும் சொல்லப் போனால் கட்டளையிட்டும் சொல்வேன்'' - இளையபிராட்டி அழுத்தத் திருத்தமாகக் கூறக் கேட்டு அனைவரும் திடுக்கிட்டனர்.

இளையபிராட்டியின் பேச்சால் வல்லவரையரிடம் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. பொதுவாக அங்குள்ளவர்கள் அனைவரையும் நோக்கி அவர் கூறினார்: ''எனக்கு நேரமாகிறது. நான் புறப்படுகிறேன் என்று அப்பொழுதே சொல்லிவிட்டேன். நான் இன்னும் இரண்டு நாள்களில் பிரம்மதேசத்தில் இருந்ததாக வேண்டும். சக்ரவர்த்தி அவர்களே! அன்புள்ள மதுரா! நான் புறப்பட்டுச் செல்கிறேன். மீண்டும் எப்போது தஞ்சைக்கு வருவேன் என்று தெரியாது. வராமலும் போகலாம். சாளுக்கியரை முறியடிக்க விரைவில் புறப்படு; வெற்றியுடன் திரும்பி வா! அந்த ஆசியை நான் அளிக்கிறேன். எல்லாம் நல்லபடியாக நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்று கூறினார்.

அனைவரும் அவர் கூறியது கேட்டு வியந்து நோக்க அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்ற கவலை அவருக்கு இருந்தது. அதனால் சிந்தித்துக் கொண்டே தனது வெண்ணிறப் புரவியைத் தட்டிக் கொடுத்து காஞ்சி செல்லும் பாட்டையில் மெல்லச் சென்று கொண்டிருந்தார்.

# 31. எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

இன்பவல்லி கண் விழித்தபோது, நன்றாகவே பொழுது புலர்ந்து விட்டிருந்தது. அவள் உறங்கும் அறைக்குள் சாளரத்தின் வழியே காலைக் கதிரொளி எட்டிப் பார்த்தது. 'இன்று என் இன்னும் உறக்கம்?' என்று கேட்டு நகைத்தது.

அவள் வசிக்கும் குடிலுக்கு அருகிலுள்ள மாமரத்தில் வழக்கமாக வந்து இசைக்கும் குயில் தன் கீதத்தை இசைத்துப் பறந்தோடிச் சென்றது. இன்பவல்லி வளர்க்கும் மான் இன்பவல்லியைக் காணாது இரண்டு மூன்று முறை கதவருகே வந்து ஆசையுடன் விழித்து ஏக்கத்துடன் நின்று திரும்பி விட்டது.

இரவு நெடுநேரம் இன்பவல்லிக்கு உறக்கம் வரவில்லை. பலவிதச் சிந்தனைகள் அவள் மனத்தை அழுத்தின. எதிர் காலத்தைப் பற்றிய கவலையை இதுவரை, அவள் மனத்தில் அலைய விட்டதில்லை. கடந்து போன சம்பவங்களை எப்போதாவது நினைத்துப் பார்ப்பாள். ஆற்றில் மிதந்து வரும் தெப்பம், ஆற்றின் சுழலுக்கேற்ப மிதந்து செல்வது போல், நடக்க வேண்டிய அதன் போக்கின்படியே நடக்கும் என்று விட்டு விட்டு அமைதியை விரும்பினாள்.



தம் சிந்தனை முழுவதையும், தம்மிடம் நாட்டியம் பயிலும் மாணவ - மாணவியரினிடமே செலுத்தி வந்ததால் வேறு எந்தவிதக் கவலையையும் சிந்தனையையும் அவள் மனத்தில் வைத்துக் கொள்ளவில்லை.

ஆனால், அவ்வப்போது மகள் பூங்கொடியைப் பற்றிய எண்ணம் இதயத்தில் தலை தூக்கி நிற்கும். அவள் இப்பொழுது எங்கிருக்கிறாளோ என்ன செய்கிறாளோ என்ற கவலை துளிர்விடும். தம் மகள் பூங்கொடியின் திறமையைப் பற்றியும், துணிவைப் பற்றியும் அவள் நன்றாகப் புரிந்து வைத்திருந்தாள். தன்னைக் காத்துக் கொள்ளும் சக்தியும் பலமும் அவளிடம் இருப்பதைத் தாய் என்ற முறையில் இன்பவல்லி அறிந்திருந்தாள்.

ஒரு சமயம் நினைப்பாள். தன் மகளைத் தஞ்சைக்கு அனுப்பியிருக்கக்கூடாது என்று. தன்னுடைய கடந்த கால வாழ்க்கையைப் பற்றி மகளிடம் சொன்னது சரியில்லையோ என்று கூட நொந்து கொள்வாள்.

ஆண் மகனைப் போல் பழி வாங்கும் மனப்பாங்குடன் தன் மகள் தஞ்சைக்கும், பழையாறைக்கும், உறையூருக்கும் அலையும் செய்தியைக் காற்று வாக்கில் தெரிந்து கொள்ளும்போது இன்பவல்லிக்குக் கவலையாக இருக்கும்.

சோழ சக்ரவர்த்தி இராசராசரிடம் பணிபுரியும் வாய்ப்பு தன் மகளுக்குக் கிடைத்திருக்கும் செய்தியை இன்பவல்லி அறிந்தபோது ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தது; மற்றொரு பக்கம் அதனால் என்ன விளைவு ஏற்படுமோ என்ற கவலையும் ஏற்பட்டது.

சில நாள்களாக மகளைப் பற்றிய எந்தவிதச் செய்தியும் வரவில்லை.

சக்ரவர்த்தியின் திருமகன் மதுராந்தகனுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கும் செய்தி கிடைத்தது. இளவரசராக மதுரன் மகுடம் ஏற்கப் போகும் செய்தி அவளுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

இனி, தன் மகள் தஞ்சையில் இருக்கக்கூடாது. மகள் உள்ளத்தில் கிளர்ந்திருக்கும் பழிவாங்கும் உணர்ச்சியை இனி மாற்றி விட வேண்டும் என்று இன்பவல்லி எண்ணினாள்.

இன்று இன்பவல்லிக்கு இதுநாள் வரை இல்லாத புது உற்சாகம் இதயத்தில் பொங்கி நின்றது. சோர்வகன்று புதுச் சுறுசுறுப்பு உடல் எங்கும் துள்ளி ஓடியது. இடக்கண் துடித்தது. இடத்தோள் துடித்தது.

'இந்தச் சகுனங்கள் நல்லவை என்று சொல்வார்களே!' என்று மனத்துள் எண்ணிக் கொண்டாள்.

பரபரப்புடன் இன்பவல்லி படுக்கையிலிருந்து எழுந்தாள். படுக்கையைச் சுருட்டி வைத்தாள். தலையணையை எடுத்து மூலையில் வைத்தாள். அறையின் மாடத்தில் வைக்கப்பட்டிருந்த முருகன் விக்கிரகத்தினருகே சிறிது நேரம் நின்று பாதத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

அந்த விக்கிரகம் அளவில் சிறியதென்றாலும் அழகிய வேலைப் பாட்டுடன் திகழ்ந்தது.

காலையில் எழுந்திருக்கும்போது முருகன் முகத்தில் விழிப்பாள். முருகன் படிமத்தின் எதிரே சிறிது நேரம் தன்னை மறந்து நிற்பாள். என்றும் அவன்தான் துணை என்று நம்பி இருந்தாள். இவை, இன்பவல்லியின் அன்றாட நியமங்களாகி விட்டன.

அமைதியாக விழிகளை மூடி நிற்கும்போது அவள் செவிகளில் ஏதோ ஒலி கேட்கும். ரசித்து மெய்மறந்து நிற்பாள்.

அந்த இனிய ஒலியை அவள் பல ஆண்டுகளாகக் கேட்டு ரசித்த வண்ணமிருக் கிறாள். அவளுக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை.

'குன்றெறிந்து குலம்காத்த குமரன் வந்து
காவானோ தோழி! காவானோ தோழி?
மன்றிலும் பொதியலிலும் மகிழ்ந்து விளக்குவான்
மலையிடைப் பொழிலிடை மலர்ந்தே வாழ்பவன்,
இன்றிங்கு வந்தெனக் காறுதல் கூறியே
இடரொழித் தினிமை கூட்டுவனோ தோழி?'

இந்தப் பாடலை அவள் பல ஆண்டுகளுக்கு முன்பு பாடியிருக் கிறாள். அவள் பாடிய அதே பாடல் திரும்பவும் அவள் செவிகளில் கேட்கிறது.



இருபத்தைந்து ஆண்டுகள் இருக்குமா? இருக்கும். அதற்கு மேலும் இருக்கும். அவ்வளவு துல்லியமாக அவள் கணக்கிட வில்லை.

முல்லைத் தீவில் ரத்தின வியாபாரி வடிவில் வந்த அருண் மொழியை இப்பொழுது சமீபத்தில் சந்தித்தது போல்தான் தோன்றுகிறது. அனுபவங்கள் புதுமை கலையாமல் இருக்கின்றன. அவள் நினைத்துப் பார்க்கிறாள்.

'கோழிக் கொடியோன் வாழ்க வென்று கூத்திடுவோமே!
குன்றமர் செல்வன் வெல்கவெனக் கூத்திடுவோமே...!'

என்று பாடிக் கொண்டு முல்லைத் தீவிலுள்ள மகளிர் ஆடவருடன் கைகோத்து ஆடிய அந்த நாளை நினைவுபடுத்திக் கொண்டாள்.

அவர்கள் கைகோத்து ஆடினர். பம்பரம் போல் சுழன்றாடினர். ஒரு சமயம் வில் போல் வளைந்தனர். வேல் போல் பாய்ந்தனர். ஒருபோது, ஆகா! அந்தக் கூத்துக் குழாத்தின் நடுவே அவர் வந்து ஆடினார்.

இன்பவல்லி அந்தச் சம்பவத்தை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டாள். ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து பாடலுக்கு ஏற்ப ஆடினர். ஒரு சமயம் பாடலும் அதற்கேற்ப ஒலிக்கும் இசைக் கருவிகளும் உச்சநிலையை அடைந்தன.

அந்தச் சமயம் இன்பவல்லி தன் நிலை மறந்து மயங்கிச் சாய்ந்து விட்டாள். அருண்மொழி அவள் அருகே வந்து நின்றார்.

இப்போது அந்தச் சம்பவத்தை நினைத்துக் கொண்டால் வெட்கமாகவும் இருக்கிறது. மெய்சிலிர்க்கிறது. மயக்கம் தெளிந்த பிறகு, அருண்மொழியைத் தனியே சந்தித்தபோது அவர் எதிரே இன்பவல்லி தாமறிந்த நடனத்தை ஆடிக் காட்டினாள்.

அவள் அகக்கூத்து ஆடினாள். பாடியவாறு ஆடினாள். ஆடியவாறு பாடினாள். மாயவன் ஆடும் அல்லி ஆடினாள். முக்கண்ணன் ஆடும் பாண்டரங்கமாடினாள். நெடியோன் ஆடும் துடியாடினாள். திருமகள் ஆடும் பாவைக் கூத்தாடினாள்.

அந்த ஆட்டம் முடியும்போது அருண்மொழி அவளுக்கு முத்தரிசை கொடுக்க முன்வந்தார். முத்தரிசை கொடுக்க அவள் கரத்தை அவர் பிடித்தபோது அவள் உடல் சிலிர்த்தது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதும் அதை நினைத்தால் அவள் உடல் சிலிர்க்கிறது.

எதிரே உள்ள முருகன் விக்கிரகம் அவளுக்கு அருண்மொழி நிற்பது போலவே தோன்றுகிறது. தன் கண்களைக் கசக்கிக் கொண்டு உற்றுப் பார்க்கிறாள். அதே சுந்தர வடிவம். இளமை ததும்பும் முகம். நீள் கரங்கள். பரந்த மார்பு. கூரிய நாசி. புன்னகை தவழும் இதழ்கள்.

இன்பவல்லி இப்போது தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். கழிந்து போன ஆண்டுகள் அவள் வயதையும் பறித்துச் சென்றன. அவளது எழிலையும் சிறிது சிறிதாகப் பறித்துள்ளன. ஆனால், அவள் கலை உணர்வைப் பறிக்கக் காலக் கிழவனால் முடியவில்லை.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு திங்களும், ஒவ்வோர் ஆண்டும் அவள் கலை உணர்வு வளர்ந்தது. கலைத் திறமை வளர்ந்தது. வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றங்களை, இதயத்தில் ஏற்பட்ட ரணத்தைக் கலைதான் மருந்திட்டுத் துடைத்தது.

அருண்மொழி வர்மர், இராசராசர் என்ற பெயருடன் அரியணை ஏறிய பிறகு அவரைச் சந்திக்க அவளால் முடியவில்லை. இளைய பிராட்டியின் உத்தரவை மீறி, அரசரைச் சந்திக்க முடியவில்லை. இளையபிராட்டி வேண்டிக் கேட்டுக் கொண்டாளா? பயமுறுத்தினாளா? அதிகாரத்தைப் பயன்படுத்தினாளா? எப்படியோ அவள் சொல்லை ஏற்றாள். தஞ்சையினின்று வெகுதொலைவில் உள்ள ஓரிடத்தில் இளையபிராட்டி அவளைக் குடியேற வைத்தார். அப்பொழுது இன்பவல்லி வயிற்றில் பூங்கொடி வளர்ந்து கொண்டிருந்தாள்.

குழந்தை பிறந்ததும் உணவு, உறைவிடம், ஆடை ஆகியனவும் குறைவில்லாமல் அவளுக்குக் கிடைத்தன. அவள் குடியேறிய அந்த வீட்டின் அருகே பல குடில்கள் கட்டப்பட்டன. அவளுக்கு ஒரு குறையும் ஏற்படாமல் இளையபிராட்டி கவனித்துக் கொண்டாள்.

அவளிடம் நடனம் பயில யுவ, யுவதிகள் வந்தனர். அவர்களுடன் அவர்களது குடும்பங்களும் வந்து தங்கின. கிராமம் கலகலப்புடன் காணப்பட்டது.

பூங்கொடி பிறந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியும், நடனக் கலையைக் கற்க வந்தவர்களின் கலை ஆர்வமும் இன்பவல்லியின் மன வேதனையைக் குறைத்தன.



அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தை விட்டு வெளியே எங்கும் செல்ல முடியாது. கிராமச் சிறைவாசத்தை அவள் அனுபவித்தாள். அதற்காக இன்பவல்லி வருந்தவில்லை. காலையில் எழுந்தவுடன் குயிலின் குரலைக் கேட்பாள். மானின் அன்பு நிறைந்த விழிகளை நோக்குவாள். மயிலொன்றை வளர்த்து வந்தாள். அசைந்து அசைந்து அது வந்து அவள் அருகே நிற்கும்.

அவள் நட்ட மாமரம், வேப்ப மரம் இப்போது வளர்ந்திருந்தன.

செல்வமகள் பூங்கொடி வளர்வதுபோல் அனை வளரும் அழகைக் கண்டு பூரித்துப் போவாள் இன்பவல்லி.

அந்தக் கிராமத்திற்கு அருகே சலசலவென்று வாய்க்கால் ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. கொள்ளிடத்திலிருந்து, பாசன நீருக்காக இராசராசனால் புதிதாக வெட்டப்பட்ட வாய்க்கால் அது.

அந்த வாய்க்காலில் ஓடி வரும் நீரில் அமிழ்ந்து குளிப்பதில் இன்பவல்லிக்குத் தனி இன்பம்! கிராமத்திலேயே புதிதாக ஒரு குளம் வெட்டப்பட்டது. அதில் தாமரைக் கொடிகள் படர்ந்திருந்தன. சில நாள்கள் குளத்து நீரில் அமிழ்ந்து குளிப்பாள். தன்னுடன் பூங்கொடியையும் நீராட அழைத்துச் செல்வாள்.

நடனம் பயில வந்துள்ள இளம் பெண்களும், ஆண்களும் வேப்ப மரத்தினடியில் கூடுவார்கள். காலைப் பொன் வெயிலின் ஒளியில், நடனப் பயிற்சி நடைபெறும். பிறகு மாலையிலும் உண்டு. பொன் கதிரொளியில் நடனப் பெண்கள் தேவதைகளைப் போல் காட்சி அளிப்பார்கள்.

தன் முழுக் கவனத்தை, நாட்டியக் கலைக்கே அர்ப்பணித்திருந்ததால் தன் உள்ளத்துக்கு ஏற்பட்டிருந்த வேதனையை இன்பவல்லி மறந்திருந்தாள். வெளியுலகத் தொடர்பைப் பற்றியே அவள் கவலைப்படவில்லை. ஆனால், பூங்கொடி வளர்ந்து, பருவத்தை அடையத் தொடங்கியபோதுதான் இன்பவல்லிக்குப் பிரச்னை எழுந்தது. கவலை சூழ்ந்தது. மகளுக்குத் தன் கதையைத் தெரிவிக்கும் கட்டாயம் ஏற்பட்டது.

அந்தக் கிராமத்தை விட்டு வெளியே சென்று வர பூங்கொடிக்குத் தடை எதுமில்லாமலிருந்ததால் பூங்கொடி மெல்ல மெல்லச் சோழ நாட்டில் நடைபெறும் செய்திகளை அறியலானாள். தன் தாயின் கடந்த கால வரலாற்றை அறிந்து கொண்ட பூங்கொடி, சோழ அரச குடும்பத்தவரைப் பழிக்குப் பழி வாங்க முடிவு செய்தாள்.

சோழ அரசகுமாரன் மதுராந்தகனை முதன்முதலில் தஞ்சை மாளிகையில் சந்தித்தாள். சோழ குடும்பத்துத் தலைமகனை வேதனைக்குள்ளாக்க வேண்டும் என்ற துடிப்பு தொடக்கத்தில் அவளிடமிருந்தாலும் மதுரனது வடிவழகு, அவளைக் கவர்ந்தது. சலனமேற்பட்டது.

இளவரசன் மதுரன் முதன்முதலில் பூங்கொடியைச் சந்தித்த போதே அவளிடம் மனத்தைப் பறிகொடுத்து விட்டான். ஆனால், பூங்கொடியைச் சந்திக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருவதை அவன் உணர்ந்தபோது யாரோ பின்புறமிருந்து, அத்தகைய திட்டத்தை உருவாக்குகிறார்கள் என்பதை உணர்ந்தான். கடைசியாக தஞ்சை மாளிகையில் இளையபிராட்டி, சக்ரவர்த்தி, வந்தியத்தேவன் மற்றும் தன் திருமணம் குறித்துக் கலந்தாலோசிக்கக் கூடியிருந்தவர்கள் முன்னிலையில் பூங்கொடியைச் சந்தித்தான்.

பூங்கொடி தன் தாயைச் சந்திக்க சக்ரவர்த்திகளை அழைத்துச் செல்லப் போகிறாள் என்பதறிந்து தானும் உடன் வருவதாக அரசரிடம் கூறவும், இளையபிராட்டி அவனைத் தடுத்து விட்டாள்.

இன்பவல்லி தங்கியிருந்த கிராமத்தை நோக்கிய இராசராசர், பூங்கொடி இருவரும் சென்றனர். இளையபிராட்டி அவர்கள் புறப்படுவதற்கு முன்பே புறப்பட்டு விட்டாள். அவள் ரதத்தில் ஏறி விரைந்தாள். மதுரனுக்கு ஏமாற்றமும் கோபமும் பொங்கின. குதிரை மீதேறி எங்கோ புறப்பட்டுச் சென்றான். போகுமிடத்தை மெய்க் காவல் படையினரிடமோ அல்லது ஒற்றர் படைத் தலைவரிடமோ சொல்லவில்லை.

காலையில் எழுந்ததிலிருந்து நல்ல சகுனங்களை உணர்ந்து, உள்ளத்தில் மகிழ்ச்சியுடனிருந்த இன்பவல்லிக்கு அந்தச் செய்தி கிடைத்தது.

தஞ்சையினின்று பூங்கொடியுடன் சோழ சக்ரவர்த்திக்கு வருகிறார் என்ற அந்தச் செய்தி மகிழ்ச்சியையும் அதிர்ச்சியையும் அளித்தன. உள்ளத்தில் ஏற்பட்ட பரபரப்பை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

முப்பதாண்டுகளுக்குப் பிறகு, சோழ சக்ரவர்த்தியை அவள் சந்திக்கப் போகிறாள். பூங்கொடியுடன் அவர் வருகிறார். இன்பவல்லி நிலை கொள்ளாமல் தவித்தாள்.



பல ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு பிரிந்திருந்த இருவர் சந்திப்பதென்றால் இறைவன் சந்நிதியில்தான் சந்திக்க வேண்டும் என்று சொல்வார்கள். அந்தக் கிராமத்தில் கோயில் இல்லை.

கோயில் இல்லாவிட்டால் என்ன- வீட்டில் முருகன் விக்கிரகம் இருக்கிறதே - முதன்முதலில் குமரப்பெருமான் சிலை எதிரே சந்திப்போம்.

அதெப்படி முடியும்?

சக்ரவர்த்தி வருகிறார் என்றால் அவரை வரவேற்க வாயிற் புறத்திற்கே வர வேண்டாமா?

வேண்டாம்; வேண்டாம். நாம் வீட்டிற்குள்ளேயே இருப்போம். தாம் வரப் போவதை அறிவித்துவிட்டா சக்ரவர்த்தி இங்கு வருகிறார்? எதிர்பாராமல் சந்திப்பு நேர்வது போல் இருக்கட்டுமே?

அவர் வீட்டிற்குள்ளே வரட்டும். முருகன் திருமுன் அவரை நாம் சந்திப்போம்.

அவள் மேனி இலேசாக நடுங்கியது. எந்த நேரத்திலும் அவர் வரலாம்; அதற்குள் குளித்து, புத்தாடை அணிந்து ஆயத்தமாக இருப்போம்...

நடனம் பயில மாணவர்கள் வந்தனர். வேப்ப மரத்தடியில் அவர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''இன்று நடன வகுப்பு இல்லை'' என்று ஒரே வார்த்தையில் அவள் சொல்லி விட்டாள். அவர்கள் வியப்புடன் இன்பவல்லியை நோக்கினர். அவள் முகத்தில் ஏற்பட்டிருந்த புத்தொளியை அவர்கள் கவனித்தனர். நடையில், பேச்சில் புதிய மாற்றமிருப்பதை அவர்கள் கவனிக்கத் தவறவில்லை.

வழக்கத்திற்கு மாறான பரபரப்பு அவளிடம் தோன்றியது. அடுப்பை மூட்டினாள். சக்ரவர்த்திகளுக்கு நல்ல விருந்தளிக்க வேண்டும் என்று திட்டமிட்டாள். மணக்க மணக்க விதவிதமாகப் பதார்த்தங்களைச் சமைக்க வேண்டும் என எண்ணினாள். அதற்கான பண்டங்கள் எதும் வீட்டிலில்லை. எளிய முறையிலேயே உணவு இருந்தால் போதும் என்ற முடிவுக்கு வந்தாள்.

உச்சிப்பொழுதைத் தாண்டிய வேளையில் வெளியே சிலரின் பேச்சுக்குரல் கேட்டது. அவர்கள் வந்து விட்டனரா?

இன்பவல்லி பலகணி வழியே மெல்லப் பார்த்தாள்.

அங்கே சக்ரவர்த்தி வந்திருக்கவில்லை. விழிகளை அலக விரித்து ஒருமுறைக்கு இருமுறை பார்த்தாள்.

இளையபிராட்டி வாயிற்படியருகே நின்று கொண்டிருந்தாள். மெல்லிய அதிர்ச்சி ஏற்பட்டது.

''இன்பவல்லி!'' என்று இளையபிராட்டி கம்பீரமாக அழைப்பது அவள் செவிகளில் வீழ்ந்தது.

# 32. இளையபிராட்டியின் வேண்டுகோள்

''இன்பவல்லி!''

இளையபிராட்டி அழைக்கும் குரல். அந்தக் குரலைக் கேட்டுப் பல ஆண்டுகள் ஆகின்றன. காலம் ஓடி மறைந்தாலும் அந்தக் குரலில் உள்ள கம்பீரம் மறையவில்லை.

இடத்திற்கு ஏற்றவாறு குரலின் சுருதி மாறும். கம்பீரம், அழுத்தம், கடுமை, குழைவு, இனிமை, பரிவு - இப்படியாகக் குரலை மாற்றிக் கொள்ளும் சக்தி இளையபிராட்டியாருக்கு உண்டு.

கம்பீரமாக ஒலித்த அந்தக் குரலில், பரிவு இருப்பதாக இன்ப வல்லிக்குத் தோன்றியது.

என்ன செய்வதென்று அவளுக்கு ஒரு கணம் ஏதும் தோன்ற வில்லை. அப்படி அவள் உள்ளே நிற்கவும், இளையபிராட்டி வெளியே நிற்கவும் -

அது முறையில்லை. இன்பவல்லி வெளியே விரைந்து வந்தாள்.

வாயிற்படியருகே குந்தவ்வை நின்றாள். இன்பவல்லியின் விழிகளும் இளையபிராட்டியின் விழிகளும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டன.



யார் முதலில் பேசுவது? இன்பவல்லிக்கு என்ன பேசுவது என்று தோன்றவில்லை. அவளிடம் இளையபிராட்டியாரே எப்போதும் அதிகம் பேசியிருக்கிறாள். நிறையப் பேசியிருக்கிறாள்.

நாகப்பட்டினத்தருகே உள்ள சிறு கிராமத்தில் இன்பவல்லி வசிக்கும்போதும் அவளைச் சந்திக்க இளையபிராட்டி வந்திருக்கிறாள். அப்பொழுது பூங்கொடி சிறு வயதினள். மணலில் வீடு கட்டியும், மலர் கொய்து மாலை தொடுத்தும் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருப்பாள்.

ஆனை மங்கலத்தில் புத்தர் கோயில் ஒன்று கட்டப்பட்டு வந்தது. அந்தக் கோயில் திருப்பணிக்கு இளையபிராட்டி பொருளுதவி செய்து வந்தாள். கோயில் திருப்பணியைக் காண வருவது போல், இன்பவல்லி வசிக்கும் இடத்திற்கு வருவாள். ஆனால், உண்மை நிலை இன்பவல்லியைச் சந்திப்பதே.

இன்பவல்லி பூங்கொடியைக் கருத்தரித்திருந்தபோது பலமுறை அவளைச் சந்தித்துப் பேச இளையபிராட்டி வருவாள். பேச்சு பல நாழிகை நீடிக்கும். ஒருவழிப் பேச்சே. குந்தவ்வையே பேசிக் கொண்டிருப்பாள்.

அவர்கள் என்ன பேசிக் கொண்டனர் என்ற செய்தி அவர்களுக்குத் தான் தெரியும். வெளி உலகிற்குத் தெரியக்கூடாது என்று எச்சரிக்கை செய்திருந்தாள் இளையபிராட்டி.

இன்பவல்லியின் இதய பாரம் விழிகளில் தேங்கி கண்ணீராகப் பிரதிபலிக்கும். விம்மிக் கதறி அழ வேண்டும் என்ற துடிப்பு நெஞ்சுக் குழி வரை வந்து நிற்கும்.

இளையபிராட்டிக்குச் சோழ நாட்டில் மதிப்பு மிக அதிகம்.

சக்ரவர்த்திகள் இளையபிராட்டியிடம் மிகுந்த மரியாதை வைத்திருந்தார். அவ்வாறிருக்கும்போது இன்பவல்லியின் சொல் அம்பலமேறாது. ஓர் அரசகுமாரனை அவள் காதலித்தது தவறுதான். சோழ நாட்டு அரச குமாரன் என அறிந்து அவள் காதலிக்கவில்லை.

அவர்களிடையே ஏற்பட்ட காதல் தெய்விகமானது. இரு இதயங்களுக்குள் மௌனமாக நடைபெற்ற உணர்ச்சிப் பரிமாற்றம். விழிகளின் மூலம் விளைந்த கருத்து உடன்பாடு. கலை உள்ளம் கொண்ட புனித ஆத்மாக்களின் சங்கமம் அவர்களுடையது. கடல் கடந்த நாட்டில் ஏற்பட்ட முதல் சந்திப்பின்போது விளைந்த தங்கள்

காதலை ஒருவராலும் கட்டுப்படுத்த முடியாது என்றே இன்பவல்லி நினைத்தாள்.

ஆனால், சோழ நாட்டிற்கு வந்த பிறகுதான் மகத்தான பிழையொன்றைச் செய்து விட்டதாக உணர்ந்தாள். மனத்தைப் பறி கொடுத்தது சோழ நாட்டரசரிடம் என்பதை அறிந்தாள். தான் காதலிப்பது சோழ மாமன்னரை என அறிந்தாள். அது மகத்தான தவறென்பதையும் உணர்ந்தாள். ஆனால், இளையபிராட்டி குந்தவ்வை தேவியார் அவர்களுடைய புனிதக் காதலின் குறுக்கே ஏன் வருகிறாள் என்று இன்பவல்லி கோபப்பட்டதும் உண்டு.

அவள் கோபம் கொண்டு என்ன செய்ய முடியும்? இளைய பிராட்டியின் முடிவை எதிர்த்துப் போராடினால், அதை ஆதரிக்கக் கூட நாட்டில் நாதியில்லை. அவள் ஓர் அநாதை. சோழ நாட்டில் அவளுக்கு வேண்டியவர் ஒரே ஒருவர்தான். அவர்தான் அருண் மொழி வர்மர் என்றழைக்கப்பட்ட இராசராசர்.

ஓர் அநாதைக்குக் காதல் உதயமாகலாமா? அதுவும் ஒரு பேரரசரிடம் அவள் மனத்தைப் பறி கொடுக்கலாமா?

ஒரு நாட்டின் அரசர் என்றால் அவருடன் சரி சமமாக அமர்வதற்கு ஒரே ஒருத்திக்குத்தான் உரிமையுண்டு. அவள்தான் பட்டத்தரசி. அவள் வயிற்றில் பிறக்கும் பாலகனுக்குத்தான் வாரிசுரிமை உண்டு. உலகமெங்கும் நடைபெறும் அரச நியாயம் அது. அரசருக்கும் காதல் உணர்வுண்டு. காம உணர்வு ஏராளம். அதனால் அவர் வலையில் சிக்கும் வனிதையர் எல்லாரும் இளவரசியாகிவிட முடியுமா? ஒருத்தி மேல் அரசர் மிகுந்த ஆசை கொண்டதாலேயே அவள் அரசியாக முடியாது. காமக் கிழத்தியாகத்தான் வாழ முடியும்.

சோழ அரசர் தன்னை அதைப் போன்று கருத மாட்டார். காமத்திற்காகத்தான் தன்னை அவர் காந்தர்வமணம் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் பேதை இன்பவல்லி நினைத்தாள்.

என்றென்றைக்கும் அவள் சோழ அரியணை அருகே கூட வர முடியாது என்று அவளுக்குத் தெரியும். அந்தப்புரத்திலேனும் தன்னுடன் வசிக்க அவர் வாய்ப்பு அளிப்பார் என்று நம்பினாள்.

ஆனால், நிலைமை வேறுவிதமாக அமைந்தது. சூழ்நிலை அவளுக்கு உதவவில்லை. இளையபிராட்டி ஒவ்வொரு கணத்திலும் அவளுக்கு விரோதமாகவே இருந்தாள்.



''நான் எந்தக் காலத்துக்கும் அரசருக்குச் சமமாக அரியணையில் அமர்வதாகக் கனவுகூடக் காண மாட்டேன்.''

''நான் மௌனமாக அவரை நினைத்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கவாவது என்னை அனுமதியுங்கள்'' என்று இன்ப வல்லி கெஞ்சினாள்; உறுதி கூறினாள்.

''ஆகா; நீ கண்ணீர் விடுவதற்கு என் அனுமதியைப் பெற வேண்டுமா? ஒருவர் ஆனந்தப்படுவதற்கும் விம்மி அழுவதற்கும் மற்றவர்களுடைய அனுமதியைப் பெற வேண்டும் என்ற எண்ணம் உனக்கு எப்படி வந்தது?'' என்று கேட்டாள் குந்தவ்வை.

''இளையபிராட்டி அவர்களே! எங்காவது ஒரு மூலையிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும்போது நான் ஆனந்தப்பட முடியுமா? அதனால்தான் மாளிகை நந்தவனத்துக் கோடியிலோ, அரசர் உலா வரும் வீதியில் ஓர் ஒதுக்குப்புறத்திலோ, பூமாலை தொடுத்தளிக்கும் பூக்காரியாகவோ, அரசர் உணவருந்தும் இடத்தைத் தூய்மைப் படுத்தும் பணிப் பெண்ணாகவோ இருந்து அவரைக் காண அனுமதியுங்கள். அப்போது நான் மௌனக் கண்ணீர் விடுகிறேன். ஓசையின்றி ஓலமிடுகிறேன். ஒருவருக்கும் இடையூறு செய்ய மாட்டேன். அந்த உரிமையையாவது கொடுங்கள் தேவி'' என்று இன்பவல்லி வாய்விட்டுக் கதறினாள்.

''முடியாது... அழுவதற்கும் சிரிப்பதற்கும் என் அனுமதி தேவையென்றால் தருவதற்கு நான் தடை செய்யவில்லை. ஆனால், என் இளவலை நீ சந்திக்கக்கூடாது. பார்க்கக்கூடாது. எந்த விதத்திலும் நீ அரசரைப் பார்க்கக்கூடாது. மறைந்திருந்தும் பார்க்கக்கூடாது. என்னைக் கொடுமைக்காரி என்று தூற்றுவாய். ஆனால், நான் அவ்வாறு பெரும் தடையை விதிக்க வேண்டியிருக்கிறது. முன் பிறவியில் நான் செய்த பாவம், தூய காதலர்களைப் பிரிக்க வேண்டி வருகிறது. அதற்குத் தண்டனையை மீண்டும் நான் அடுத்த பிறவியில் அனுபவிக்க நேரிடும் என்று நினைக்கவில்லை; இந்தப் பிறவியிலேயே இறைவன் தண்டனை வழங்கிவிட்டான். எங்கள் குலத்தை விளங்க வைக்க வாரிசு ஏற்படாமல் இறைவன் தண்டனைக் கொடுத்து விட்டான். இன்பவல்லி! என்னைப் பொறுத்தருள். நான் இவ்வாறு நடந்து கொள்வது இந்தச் சோழ நாட்டின் நன்மைக்காக...'' இளையபிராட்டி கூறும்போது இன்பவல்லி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

இன்பவல்லியை இளையபிராட்டி மெல்ல அணைத்துக் கொண்டாள். விழிகளிலிருந்து பெருகும் நீரைத் துடைத்தாள்.

''இன்பவல்லி! சோழ நாட்டின் நன்மைக்காகவே நான் இந்த முயற்சியில் இறங்கினேன். வருங்காலத்தில் சோழ நாட்டில் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டு விடக்கூடாது என்ற முன்யோசனைப் படியே இந்தச் செயலில் ஈடுபட்டேன். இவ்வாறு செய்யுமாறு எனக்கு யாரும் யோசனை கூறவில்லை. கட்டளையிடவில்லை. திட்டம் தீட்டவில்லை'' என்று கூறும்போது, இன்பவல்லி தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, உள்ளத்தில் அழுத்திக் கொண்டிருக்கும் வேதனையைச் சற்று நேரம் மறந்து, குரலில் துணிவை வரவழைத்துக் கொண்டாள்.

''இளையபிராட்டி அவர்களே! தங்கள் விருப்பம் எப்படியோ அதன்படியே நடக்க நான் சித்தமாயிருக்கிறேன். அரியணையில் அரசருடன் சரிசமமாக அமர வேண்டும் என்பதற்காக நான் அவரைக் காதலிக்கவில்லை. தெய்விகக் காதல் ஏற்பட்டபோது அவர் சோழ நாட்டு இளவரசர் என்று நான் அறியவில்லை. எங்களிடம் எழுந்த அன்பு, கலையை அடிப்படையாகக் கொண்டது. சோழ நாட்டில் கலைக் கூடமொன்று அமைக்க வேண்டும் என்ற அவர் கனவு கண்டார். அவரது கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட நான் சோழ நாட்டிற்கு வந்தேன்.

''அவர் உள்ளத்தில் ததும்பிக் கொண்டிருக்கும் கலைத் தாகத்தை நான் நன்றாக அறிந்தேன்.

''கடல் கடந்த நாடுகளில் அவர் சுற்றுப்பயணம் செய்தபோது கண்டவற்றை, அறிந்தவற்றை சோழ நாட்டிலும் படைக்க விரும்பினார். அதைப் பற்றியே நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருப்போம். சித்திரம், சிற்பம் நிறைந்த கூடமொன்றை எழுப்பும் ஆவலை அவர் தெரிவித்தார். கூடத்திற்கு ஒரு மாடம் ஏற்படுத்த விரும்பினார். மாடத்தின் மீது விமானம் அமைக்கத் திட்டமிட்டார். மாடத்தைச் சுற்றிலும் நடனத் தோற்றங்களைச் சிறப்பாக அமைக்க விரும்பினார். வண்ண ஓவியங்களைத் தீட்ட விரும்பினார். மிக விரைவில் அவற்றைச் செய்து முடிக்க அவர் விரும்பினார். அவர் உள்ளத்தில் இருந்த அந்தக் கலைத் தாகத்தை நான் அறிவேன்.

''அவ்வாறு கலைக் கனவு கண்டு, கனவை நனவாக்கத் திட்டமிட்டு, அதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கும் நாள்களில்,



அவர் எதிரே நான் ஆடுவேன். அவர் பாடுவார்'' இதைக் கூறி வரும்போது இன்பவல்லியின் குரல் தழுதழுத்தது.

''ஆகா! அவருடைய குரல் இனிமைக்கு எதை ஒப்பிடலாம்? குயிலின் குரலையா? யாரை ஒப்பிடலாம்? தேவலோகத்து இசை வாணர்களையா? திருமாலைப் போல் அழகு மிகுந்தவராய் அவர் இருப்பதற்குக் காரணம் என்னவென்று நான் யோசிப்பேன். இனிமை நிறைந்த இதய ஒலி எல்லாம் ஒன்று திரண்டு அவரை அழகு மிகுந்தவராகச் செய்து விட்டது. அவருடைய இனிய குரலோசையை நான் இனி எப்போது கேட்பேன்?

''இளையபிராட்டியார் அவர்களே! பெரிய பிராட்டியார் செம்பியன் மாதேவியார் தேடித் தொகுத்த தேவாரப் பாடல்கள் சிலவற்றை அவர் சுவடியில் எழுதி எடுத்து வருவார். அவற்றினின்று ஓரிரு பாடல்களைப் பாடிக் காட்டுவார்.''

இன்பவல்லி மீண்டும் அந்தப் பாடலைப் பாடினாள். இளைய பிராட்டி மேனி மெல்ல நடுங்கியது. அவள் விழிகளை மூடிக் கொண்டாள். மெல்லத் திறந்தாலும் பன்னீர் மலர்கள் உதிர்வது போல் விழி நீர் முத்துகள் சிந்திவிடும். குந்தவ்வை மனத்திற்குள்ளே நினைத்துக் கொள்வாள். 'ஐயோ! இந்தப் பெண்ணிற்கு நாம் துன்பம் விளைவிக்கிறோம். இசைக்கும், நடனத்திற்கும் தன் வாழ்நாளையே அர்ப்பணிக்க உறுதி பூண்டிருக்கும் இன்பவல்லியின் காதலைக் கருக அடிக்க நினைக்கிறோமே. என் இளவல் இராசராசனை அவள் இனி சந்திக்கக்கூடாது என்று கட்டளையிட நினைக்கிறோமே...' துக்கம் அவள் இதயத்தை அழுத்தும்.

நிலவிய மௌனத்தை இன்பவல்லி கலைத்தாள்.

''இளையபிராட்டியார் அவர்களே! மனம்விட்டு நான் பேசுகிறேன். நாங்கள் சந்தித்துப் பேசிய காலமெல்லாம் எங்களிடையே கலைப் பேச்சுத்தான். ஆனால், நாளாக ஆக எங்கள் நெருக்கத்தில் இதயப் பிணைப்போடு உடல் பிணைப்பும் ஏற்பட்டது. பேரின்ப விருந்துக்கிடையே சிற்றின்ப விருந்தையும் நாங்கள் சிறிது அடைந்தோம். சிறிதுதான். ஓரிரு முறைதான்...''

நாணம் விட்டு இன்பவல்லி கூறிவரும்போது, இளையபிராட்டி குறுக்கிட்டு, ''இன்பவல்லி! நீங்களிருவரும் சந்திக்கவே கூடாது என்று நான் பெருமுயற்சி செய்தேன். பாட்டிலும் கூத்திலும் பொழுதைக் கழித்த இடத்தை என்னால் அறிய முடியவில்லை.

பிறகுதான் உன்னைச் சந்தித்துப் பேசியபோது அறிந்து கொண்டேன். நான் அப்போதே உன்னிடம் வேண்டினேன். கடுமையாகப் பேசினேன். கட்டளையிட்டேன். என் இளவலைச் சந்திக்க முடியாத இடத்திற்கு உன்னைக் கொண்டு சேர்த்தேன்.

''நீ கருவுற்றிருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைவதற்கு மாறாக அதிர்ச்சியடைந்தேன். ஆண் குழந்தை பிறந்து விடக் கூடாது என்று கவலைப்பட்டேன். இறைவனைப் பிரார்த்தித்தேன் சீ... என்னைப் பற்றி நினைக்கவே எனக்குக் கூசுகிறது. நான் என்ன செய்ய முடியும்? அப்போது நீ கேட்டாய், 'ஆண் குழந்தை பிறந்தால் சோழ அரியணைக்கு அவன் எவ்வாறு போட்டிக்கு வருவான். அடுத்த பட்டத்துக்குரியவர் மதுரன் இருக்கும்போது, எனக்குப் பிறக்கும் மகன் எவ்வாறு உரியவனாவான்?' என்று.

''இப்போது கூட நினைவிருக்கிறது. நான் சொன்னேன்: இன்றுள்ள நிலையை வைத்துப் பேசக்கூடாது. கடந்த கால நிகழ்ச்சி களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அடுத்த என்ன நேரப் போகிறது என்று கணிக்கும் சக்தி நம்மிடமில்லை. இராசராச சோழ னின் பட்டத்து இளவரசி லோகமாதேவிக்கும் பெண் குழந்தைகள் தாம் பிறந்துள்ளன. அதனால் வாரிசு உரிமை வரிசையில் மதுரனுக்குப் பிறகு ஆண் வாரிசு இல்லை. அடுத்து உன் மகன்தான் அரியணை ஏறும் உரிமையைப் பெறுவான்...''

இளையபிராட்டி சொல்லி முடித்தவுடன் இன்பவல்லி சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. பெருமூச்சுடன், ''பிராட்டியார் அவர்களே! இவ்வளவு நுணுக்கமாக எண்ணும் சக்தி மற்றவர்களுக்கு இருக்க முடியாது என்று நினைக்கிறேன். தங்கள் மனத்தை வீணே குழப்பும் வாரிசு பற்றிய கவலையை மறக்க நான் ஒரு வழி சொல்லட்டுமா? ஒரு வேளை என் வயிற்றில் ஆண் மகன் பிறந்தால் அவன் சோழ நாட்டு அரியணைக்கு உரியவனாக இருக்கட்டும் என்று தாங்கள் பெருந்தன்மையோடு முடிவு செய்து கொள்வதன் மூலம் மனத்தில் ஏற்படும் குழப்பத்தை, கவலையை அழித்து விடலாம். நிம்மதியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.''

இது கேட்ட இளையபிராட்டி சீறினாள்: ''ஓகோ! அப்படி ஓர் எண்ணமிருக்கிறதா? அரச குலப் பெண் வயிற்றில் பிறந்தவர்களே சோழ அரியணைக்கு வாரிசு உடையவராக வேண்டும். அந்தக் கொள்கையினின்று மாறவோ, மீறவோ முடியாது; கூடாது.''



கண்டிப்பான இந்தக் கொள்கையை இளையபிராட்டி கடைப் பிடித்தாள். இன்பவல்லிக்கு ஆண் குழந்தை பிறக்காமல் பெண்தான் பிறந்தது என்று அறிந்த பிறகும் இன்பவல்லியும் இராசராசனும் மீண்டும் சந்திக்க முடியாமல் செய்தாள்.

ஆண்டுகள் பல சென்ற பிறகு, நாகப்பட்டினத்துக்கு அருகே வசித்து வந்த சிறு கிராமத்திலிருந்து அவர்களைக் கொள்ளிடக் கரைக்கருகே உள்ள காட்டுப் பகுதியில் ஓரிடத்தில் வாழ்ந்து வர ஏற்பாடு செய்தாள். அருகே காத தூரத்திற்கு ஊர் ஏதுமில்லாத இடம், உணவு, உடை போன்ற வசதிகளைக் குறையாமல் பார்த்துக் கொண் டாள். இன்பவல்லி இராசராசனைச் சந்திக்க முடியாமல் கடுமையான கட்டுப்பாடும் காவலும் ரகசியமாக ஏற்படுத்தியிருந்தாள்.

இன்பவல்லியின் மகள் வளர்ந்து வருவதையும், அறிவும் ஆற்றலும் நிறைந்து விளங்குவதையும் அவ்வப்போது கேட்டுத் தெரிந்து கொண்டாள். அவளால் எந்தவிதத் தொல்லையும் ஏற்படாது என்று எண்ணிக் கொண்டபோது, மாளிகையில் பூங்கொடி பணி புரியச் சேர்ந்ததையும், இன்பவல்லி தன் மகளைத் திட்டமிட்டே சோழ மாளிகைக்கு அனுப்பியதையும் அறிந்தாள். மதுரனிடம் பூங்கொடி நெருங்கிப் பழகும் செய்தியையும் அறிந்தபோது இளையபிராட்டிக்கு அச்சமும் கவலையும் அதிகம் சேர்ந்தன.

இன்பவல்லியைச் சந்திக்க இளையபிராட்டி விரைந்து வந்த தற்குக் காரணமே, இராசராசன் அவளைச் சந்திக்கும் முன்பே தான் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான்.

தனக்கு வரவேற்பு எந்த விதத்தில் இருக்கும் என்பதைப் பற்றி இளையபிராட்டி கவலைப்படவில்லை. இருபத்தைந்து ஆண்டு களுக்கும் மேலாக நடைபெறும் மனப் போராட்டத்திற்கு அன்று ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும் என்று குந்தவ்வை விரும்பினாள்.

'மதுரனை வளர்த்தவள் நான். இராசராசனுக்கு இணையாக - சொல்லப் போனால் இராசராசனை விடச் சிறந்த மன்னராக விளங்கும் தகுதியை அவனிடம் உண்டாக்க வேண்டும் என்ற ஆர்வத் தில் - ஆசையில் - பாசத்தில் - கடமையில் பெரும் பங்கு முடித்து விட்டது. இப்போது மதுரனுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தினின்று அவனை விடுவிக்க வேண்டும். ஆபத்துதான். பூங்கொடி மதுரனைச்

சந்தித்துப் பழகியபோதே என் உள்ளுணர்வு எச்சரித்தது. பஞ்சும் நீயும் ஒன்றாக இருக்கின்றன என்று ஏதோ ஒன்று என் உள்ளத்தில் இடித்துக் கொண்டே இருந்தது. அவர்கள் சந்திப்பை என்னால் தடுக்க முடியவில்லை. பிரிக்கவும் முடியவில்லை. உண்மையைச் சொல்லி அவர்களை உணருமாறு செய்வது ஒன்றே வழி. அதற்காகத் தான் நான் வந்துள்ளேன்.'

இன்பவல்லியிடம் என்ன பேச வேண்டும், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு மனத்திற்குள்ளேயே ஒத்திகை செய்து கொண்டாள்.

இன்பவல்லியின் விழிகளும் இளையபிராட்டியின் விழிகளும் ஒரு கணம் நேருக்கு நேர் சந்தித்தன.

மறுகணம் இன்பவல்லியிடம் இதுநாள் வரை அடக்கி வைத்திருந்த துயரம் கட்டுக்கடங்காமல் அணை உடைந்து வருவது போல் பீறிட்டுப் பாய்ந்தது.

''அக்கா!'' என்று பெருங்குரலுடன் அவள் இளையபிராட்டியாரின் தோளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறினாள்.

இதை எதிர்பாராத குந்தவ்வை திடுக்கிட்டுப் பதறி, ''என்ன இது இன்பவல்லி! உள்ளே செல்வோம். உன்னைக் காண வாயிற்படியில் வந்து நிற்கும் என்னை வாவென்று அழைக்காமல் இப்படி அழலாமா? என்ன நேர்ந்து விட்டது என்று வெடித்து விம்முகிறாய்? சின்னக் குழந்தை போல் தேம்புகிறாய், எதையோ பறி கொடுத்தவள் போல் குலுங்கி அழுகிறாய்?

''உன்னைச் சந்தித்து எவ்வளவு ஆண்டுகள் ஆகின்றன! உன்னைத் தேடி வந்த என்னை நீ எப்படி வரவேற்பாயோ என்று கவலையுடன் வந்தேன். என் மீது உனக்குக் கோபமில்லையே இன்பவல்லி? நீ நலமாக இருக்கிறாயா? இன்பவல்லி! கண்ணீரைத் துடைத்துக் கொள். புத்தாடை அணிந்து கொள். முகத்திலே புத்துணர்ச்சியை வரவழைத்துக் கொள். மகிழ்ச்சி நிறைந்த செய்தியொன்றை உனக்குச் சொல்லப் போகிறேன். சோழ சக்ரவர்த்தி உன்னைச் சந்திக்க இன்று வருகிறார்'' என்றாள் இன்பவல்லி.

சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, ''தெரியும்'' என்றாள் இன்பவல்லி.

இளையபிராட்டி வியப்படைந்தாள்.



''என் இளவல் இங்கு வரப்போவது உனக்குத் தெரியுமா?'' என்று கேட்கும்போது, அந்தச் செய்தியை அதற்குள் யார் சொல்லியிருப்பார்கள் என்று கவலையடைந்தாள்.

''பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கிறீர்கள். நீங்கள் இருவரும் சந்திக்காமல் தடுத்ததும் நான்தான். இப்போது சந்திக்க வைப்பதும் நான்தான். மகிழ்ச்சிதானே இன்பவல்லி!'' - இளையபிராட்டி அவளை அணைத்தவாறு பேசினள்.

குரலிலும், முகத்திலும் எந்தவிதப் பிரதிபலிப்பையும் புலப்படுத்தாது, ''இளையபிராட்டி அவர்களுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்!'' என்று ஒரே வார்த்தையில் தெரிவித்தாள்.

இளையபிராட்டிக்கு மேலும் வியப்பேற்பட்டது. 'இன்பவல்லிக்கு என்மீது எள்ளளவும் கோபமில்லையா?'

இன்பவல்லியின் முகத்தை ஒருகணம் இமைக்காமல் நோக்கினாள். மனத்தில் ஒன்றும் வெளியே ஒன்றும் தெரிவிக்கும் குணத்தை விழிகள் புலப்படுத்தவில்லை.

''இன்பவல்லி! மீண்டும் உன்னிடம் கோரிக்கை ஒன்றைத் தெரிவிக்க வந்தேன். என்மீது ஏற்பட்ட கோபம் மறையும்போது, இந்த வேண்டுகோள் மீண்டும் உனக்குச் சீற்றத்தை உண்டாக்கலாம்'' என்ற பூர்வ பீடிகையுடன் தொடங்கினாள்.

இன்பவல்லியின் புருவம் உயர்ந்தது. இளையபிராட்டி என்ன கேட்கப் போகிறாள் என்ற ஆவல் எழுந்தது.

''உள்ளே வந்தமர்ந்து பேசலாம் தேவி!'' என்றழைத்தாள்.

''எந்தக் கணத்திலும் சக்ரவர்த்தி இங்கே வந்து விடலாம். அதற்குள் நான் உன்னுடன் பேசி முடிவெடுக்க வேண்டும். மிக முக்கியமானது. ரகசியமானது. தாமதப்படுத்த முடியாது'' என்றாள் குந்தவ்வை.

''சொல்லுங்கள் தேவி! கட்டளையிடுங்கள் என்றும் கேட்கிறேன்...'' இன்பவல்லி நின்று கொண்டே பேசினாள்.

''பல ஆண்டுகள் கழித்து என்னைச் சந்திக்கிறீர்கள். தஞ்சையினின்று வந்திருக்கிறீர்கள். களைப்புத் தீர ஏதாவது பருகிவிட்டுப் பேசலாம். சக்ரவர்த்தி வருகிறார் என்பதற்காக எளிய விருந்தும் ஏற்பாடு செய்துள்ளேன்'' என்றாள் இன்பவல்லி.

''சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு, உன் முடிவைக் கேட்ட பிறகுதான் மற்றவையெல்லாம். இன்பவல்லி! என் வேண்டு கோளை நிறைவேற்றுவாயா?'' இளையபிராட்டியின் குரலில் முன் எப்போதையும் விட பணிவு இருந்தது.

''சொல்லுங்கள் தேவி! உடனே செய்கிறேன். இப்போது என்னைச் சந்திக்க வரும் சக்ரவர்த்திகளை நான் சந்திக்கக்கூடாது என்று சொல்கிறீர்களா? அப்படியே செய்யக் காத்திருக்கிறேன். அவர் வ்ருவதற்குள் இந்தக் கிராமத்தை விட்டே சென்று விட வேண்டும் என்று சொல்கிறீர்களா? இப்போதே புறப்பட்டு விடுகிறேன். சொல்லுங்கள் தேவி, சொல்லுங்கள்'' என்று இன்பவல்லி கூறும்போது -

இளையபிராட்டி அவளுடைய கரங்களைப் பற்றி, ''இன்பவல்லி! பாவ மூட்டையை நான் மேலும் சுமக்கச் செய்யாதே. பல ஆண்டுகள் கழித்து நீங்கள் இருவரும் சந்திக்கிறீர்கள். அதை நான் தடுக்க மாட்டேன். நான் கேட்க வந்தது அதுவன்று, இன்பவல்லி! இயற்கைக்கு மாறாக, உறவின் முறைத் திட்டங்களுக்கு மாறாக நடைபெறவிருக்கும் செயலொன்றைத் தடுக்க உன்னால்தான் முடியும். அதை விவரித்துச் சொல்லித் தடுக்குமாறு கேட்டுக் கொள்ளவே நான் விரைந்து வந்தேன்'' என்றாள்.

இளையபிராட்டி அதை விவரித்தபோது இன்பவல்லி திடுக்கிட்டாள்.

# 33. வல்லவரையரின் நினைவலைகள்

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. இன்னும் சற்று வேகமாகச் சென்றால் இருள் படர்வதற்குள் சிதம்பரத்தை அடைந்து விடலாம். சிதம்பரத்தில் ஒருநாள் தங்கி ஓய்வுவெடுத்துக் கொண்டு பிரம்மதேசம் செல்லலாம் என்று வல்லவரையர் வந்தியத்தேவன் குதிரையைத் தட்டிக் கொடுத்தார்.



அவரும் களைப்புற்றிருந்தார்; புரவியும் சோர்வுற்றிருந்தது. இன்னும் சற்று வேகமாகச் செல்ல அந்தப் புரவி மறுத்து விட்டது.

அது அவருடன் பழகிய குதிரையன்று. பேச்சிலும், மூச்சிலும் மெல்லத் தட்டிக் கொடுப்பதிலும் தடவிக் கொடுப்பதிலும் புரிந்து செயலாற்றும் நீண்ட நாள் பழக்கப்பட்ட அவருடைய குதிரை சிதம்பரத்தில் இருந்தது. வழிப் பயணத்தின்போது மாற்றுக் குதிரைகள் சில ஒத்துழைக்கா. சில குதிரைகள் சுறுசுறுப்பற்றுச் சோர்வுடன் செயலாற்றும். மாவீரர் வந்தியத்தேவன் தன் மீது அமர்ந்திருக்கிறார் என்று உணராமல் சில குதிரைகள் பிடிவாதம் பிடிக்கும்.

வல்லவரையர் குதிரையைத் தொந்தரவு படுத்த விரும்பவில்லை. அதன் போக்குப்படியே விட்டுவிட்டார். அது தன் போக்குப்படி மெல்லச் சென்று கொண்டிருந்தது. நாணல் காட்டையும், மாந் தோப்பையும் கடந்து அவர் வரும்போது சில்லென்ற காற்று வீசியது.

மேற்கே தொடுவானத்துத் தொலைவில், மின்னல் கீற்றுகள் வெட்டிச் செல்வதைக் கண்டார். எங்கோ தொலைவில் மழை பெய்வதை வல்லவரையர் உணர்ந்தார். சோழ நாட்டில் மழைக் காலம் இன்னும் தொடங்கவில்லை. கடுமையான கோடைக்கு மழைத்துளிகள் தேவைதான். பிரச்னையின் அழுத்தத்தால் வேதனைப்படும் மனத்திற்கு நல்ல பேச்சு, நல்ல இசை, நல்ல மணம் தேவைப்படுவதைப் போல.

வல்லவரையர் கூர்ந்து கவனித்தார். 'ஹோ' என்ற பேரிரைச்சல் அருகே கேட்டது. அந்தச் சப்தம் மிக நெருங்கிக் கேட்டது.

'ஓ! இங்கே கொள்ளிடம் ஆறு குறுக்கிடுமே' என்ற எண்ணம் அப்போதுதான் அவருக்கு நினைவிற்கு வந்தது. ஆண்டின் பெரும் பகுதி நாள்கள் மணலாறாகக் காட்சி தரும் அந்தக் கொள்ளிடம், வழியில் குறுக்கிடுவதைப் பற்றி அவர் என்றுமே கவலைப்பட்ட தில்லை.

மணலில் கால் அழுந்த, அழுந்தப் பதிய நடப்பதில் ஏற்படும் உணர்வே தனிதான்! ஆற்றின் நடுவே ஊற்றுக் காலிலிருந்து நீர் பெருகி ஓடும். இடையே சில இடங்களில் ஜீவனுள்ள கொள்ளிடத் தின் ஆத்மா, சருபோல் சலசலவென்று ஓடும். கற்கண்டின் சுவை கலந்ததுபோல் அந்தக் காலின் நீர் இனிக்கும். இலேசான மணல் மூடியிருப்பது தெரியாமல் சில இடங்களில் கால் வைத்தவுடன்

'தடக்'கென்று பாதங்கள் பள்ளத்திற்கு அமிழ்ந்து விடும். அகன்று விரிந்து கிடக்கும் கொள்ளிடத்தைக் கடந்து செல்வதிலுள்ள அனுபவமே தனியானதுதான்!

எப்போதோ ஒருமுறை, இளையபிராட்டியுடன் கொள்ளிடத்தைக் கடந்து சென்ற சம்பவம் அவருக்கு இப்போது நினைவிற்கு வந்தது.

ஆற்றங்கரையில் சிவிகையிலிருந்து இளையபிராட்டி இறங்கி விட்டாள். வல்லவரையரும் குதிரையினின்று இறங்கி, நடந்தே ஆற்றைக் கடக்க விரும்பினார்.

''கொள்ளிட மணலைப் பார்க்கும்போது கடற்கரை நினைவுதான் வருகிறது...'' என்றாள் குந்தவ்வை.

வல்லவரையர் மெல்ல நகைத்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''கடற்கரையைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நாகைக் கடற்கரையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தது நினைவிற்கு வருகிறது.''

''ஆமாம்... அதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?''

''நண்டுகள் ஓடி வந்தன... தொடர்ந்து அலை ஒன்று வந்தது.''

இளையபிராட்டி புரிந்து கொண்டாள். கடற்கரையைத் தழுவி அலை சென்ற பிறகு நண்டுகள் ஓடி வருவதையும், அலை வரும் போது மணற் பொந்துகளில் மறைந்து கொள்வதையும், அவர்கள் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

''ஒவ்வொரு கணமும் அவற்றுக்கு அபாயம்தான் என்றாலும் அவை அஞ்சுவதில்லை'' என்று இளையபிராட்டி சொன்னாள்.

''வாழ்க்கையே அபாயத்தில் இருந்து விட்டால் மரணத்தைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. ஓர் உண்மையான வீரனுக்கு மரணம் ஒரு நண்பன். அதனால்தான் இடர்மிகு சிறைப்பட்ட போதும் நான் அஞ்சவில்லை'' என்றார் வந்தியத்தேவன்.

''நண்டு சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்!'' என்றாள் குந்தவ்வை.

இருவரும் சேர்ந்து சிரித்தனர். பெரிய அலை ஒன்று வந்தது. அவர்கள் இருக்குமிடம் வரை வந்து அவர்களைக் கடந்தும்



சென்றது. ''ஓ! ஓ!'' என்று குரல் எழுப்பியவாறு இருவரும் எழுந்து ஓடினர்.

''சற்று முன்புதான் மரணத்தைக் கண்டு அஞ்ச மாட்டேன் என்றீர்கள்... இப்பொழுது எழுந்து ஓடுகிறீர்களே!'' என்றாள் குந்தவ்வை.

வந்தியத்தேவன் சிரித்தார். ''உயிருக்கு அஞ்சி ஓடவில்லை. இந்தப் புதிய ஆடை நனைந்துவிடப் போகிறதே என்ற கவலையில் தான்'' என்று கூறியபோது இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

அந்தச் சம்பவத்தை வல்லவரையர் மீண்டும் நினைவுபடுத்திக் கூறி, ''அந்தக் கடற்கரைச் சம்பவம் நினைவிற்கு வந்தது. சிரிப்பு வராமல் அழுகையா வரும்?'' என்றார்.

இளையபிராட்டியின் முகம் நாணத்தால் சிவந்தது.

''கடற்கரை நினைவு வந்ததால் நாம் அலையற்ற இந்தக் கொள்ளிட மணலில் அமர்ந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்போமா?'' என்று வல்லவரையர் கேட்டார்.

''மெய்க்காவலர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆற்றில் திடீர் என்று வெள்ளம் வந்துவிடும்... நம் உயிருக்கு அவர்கள் காவலர்கள் அல்லவா?'' குந்தவ்வை கேட்டாள்.

''உயிருக்கு அன்று; உடலுக்குத்தான் மெய்க்காவலர்!'' என்று வல்லவரையர் கூறியபோது இளையபிராட்டி நகைத்தாள்.

''காவிரியில் அதிகம் தண்ணீர் வரும்போது அதன் சீற்றத்தைத் தணிக்க இயற்கை ஏற்படுத்திய ஆறு கொள்ளிடம். அப்படித் தானே?'' என்று வல்லவரையர் இளையபிராட்டியைக் கேட்டார்.

பொன்னி வளநாடு என்று சோழ நாட்டிற்குப் பெயர். பொன்னி மகள் வளப்பமும் தருகிறாள். சீறி வரும்போது அழிக்கவும் தயங்குவதில்லை. தன் கரையிலுள்ள ஊர்கள், வயல்கள் எல்லாம் அவள் கோபத்திற்கு ஆட்படுவதுண்டு. பொன்னியின் பயன் வீணாகாமல் தடுக்கச் சிற்றாறுகளை வெட்ட வேண்டும் என்பது என் இளவலின் திட்டங்களில் ஒன்று'' - இளையபிராட்டி கம்பீரமாகச் சொன்னாள்.

''சோழ அரசர்கள் வீரர்கள் மட்டுமல்லர்; அறிவிற் சிறந்தவர்கள்; திட்டமிடுவதில் வல்லவர்கள். கரிகால சோழர் திருச்சிராப்பள்ளிக்

கருகே காவிரியின் குறுக்கே அணை கட்டியிராவிடில் சோழ நாடு என்றோ மணல் மேடிட்டிருக்கும். உன் சகோதரன் இராசராசன் நிலத்தை அளந்ததுபோல், காவிரி ஆற்றின் நீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்தத் திட்டம் வகுத்திருக்கிறார் என்பதை அறிவேன். இந்தக் கொள்ளிடத்திலிருந்து பல கிளை வாய்க்கால்களை வெட்டுமாறு அவரிடம் சொல்ல வேண்டும்'' என்றார் வல்லவரையர்.

''உம்... சொல்லுங்கள். போர், போர் என்று வீணாகச் செலவிடாமல் சோழ வளநாட்டின் உயர்விற்காகவும் திட்டமிடச் சொல்லுங்கள்'' என்றாள் குந்தவ்வை.

''ஏன், நான்தான் சொல்ல வேண்டுமா? உன்னுடைய ஆலோசனைப்படி செயலாற்றுகிறார் இராசராசர். இந்த யோசனையையும் நீயே சொன்னால் நிறைவேற்றுவாரே!'' என்றார் வல்லவரையர்.

''இப்பொழுதெல்லாம் உங்களுடன்தான் என் தம்பி பெரும் பொழுதைக் கழிக்கிறார். அதனால் நீங்களே சொல்லுங்கள்'' என்றாள் இளையபிராட்டி.

இப்படியாக அவர்கள் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தனர். மெய்க்காவலர்களே அவர்கள் அருகே வந்து பணிவுடன் நின்று நினைவுபடுத்தும் வரை அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

கொள்ளிடம் ஆற்றின் நடுவே மணல்மேட்டில் பேசிக் கொண்டிருந்த அந்த இனிய சம்பவத்தை வல்லவரையர் பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது நினைத்துக் கொண்டபோது, இளையபிராட்டியைப் பிரிந்து பிரம்மதேசம் செல்லும் அந்தப் பயணம் அவருக்கு மன நிறைவை அளிக்கவில்லை. இளையபிராட்டியை அழைக்காமல் பயணப்படுவது தவறோ என்று அவருக்குத் தோன்றியது. கொள்ளிடத்தில் வெள்ளம் இரு கரைகளையும் தொட்டுப் பாய்ந்து கொண்டிருந்தது.

மழைக் காலமுமில்லை. ஆனால், கொள்ளிடத்தில் ஏது வெள்ளம்? மேற்கு வானில் தொலைவில் மின்னுவதைப் பார்த்தார். மேற்கே பெய்யும் மழையால் காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்தோட, அதன் ஒரு பகுதி கொள்ளிடத்தில் பாய்ந்து வருகிறது.

வெள்ளம் வடியச் சில நாள்கள் ஆகுமென்று வல்லவரையருக்குத் தெரியும். கொள்ளிடக் கரையில் ஓங்கி வளர்ந்திருந்த மரத்தின்



வேரில் அமர்ந்தார். அவரது கால்களைத் தழுவிக் கொண்டு கொள்ளிட ஆற்றுப் பிரவாகம் கரை புரண்டோடியது.

மறையும் கதிரவனின் செந்நிறத்தை வெள்ளம் பூசிக் கொண்டோடி வந்தது. வந்தியத்தேவன் ஏறி வந்த புரவியும் களைப்புத் தீர மெல்லப் புல் மேய்ந்து கொண்டிருந்தது.

சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டு எதைப் பற்றியும் சிந்திக்காமல், தில்லை நடராசரின் திருஉருவை மட்டும் நினைத்தவாறு அமர்ந்திருந்தார் வல்லவரையர். மனத்துக்குப் புதுத் தெம்பை அளித்தது அந்த அமைதியான சூழ்நிலை.

நொடிக்கு நொடி வெள்ளத்தின் அளவு அதிகமாயிற்று. கணுக்காலைத் தொட்டுக் கொண்டு ஓடிய வெள்ளம் இப்போது அவர் உட்கார்ந்திருந்த இடத்தையும் சூழ்ந்தது.

வல்லவரையர் திடுக்கிட்டு எழுந்தார். இருள் எங்கும் ஆட்சி செலுத்தத் தொடங்கிவிட்டது. இனி இங்கே இருப்பதில் பலனில்லை என்று வல்லவரையர் கிராமத்தை நோக்கிச் சென்றார். அந்தக் கிராமத்து மக்கள் வல்லவரையரை அடையாளம் தெரிந்து கொண்டனர்.

''வல்லவரையர் வாழ்க!'' எனும் வாழ்த்தொலி எழுப்பிக் கொண்டே அவர்கள் அவரை மிக மரியாதையுடன் அருகே உள்ள கோயில் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

கொள்ளிடம் ஆற்றில் வெள்ளம் பெருகியதையும் அதனால் வல்லவரையர் பயணம் தடைப்பட்டதையும் அவர்கள் அறிந்தனர். அவர்களுள் ஒருவர், ''மிக முக்கியப் பணி நிமித்தம் தாங்கள் சிதம்பரம் செல்ல வேண்டியிருந்தால் ஒரு தோணியை நாங்கள் ஏற்பாடு செய்து தருகிறோம்'' என்றார்.

மற்றொருவர் சொன்னார்: ''மிக வேகமாகச் செல்லும் இந்த வெள்ளத்தில் தோணி கொண்டு ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் செல்ல முடியாது. நடு ஆற்றில் ஆபத்து நேரலாம்.''

அதனால் தோணி மூலம் ஆற்றைக் கடக்கும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

வல்லவரையர் இரவு தங்க இடம் தேடவும் அவருக்கு உணவு தயாரிக்கும் முயற்சியிலும் கிராமப் பெரியவர்கள் முற்பட்டார்கள்.

ஊர்ப் பெரியவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு நாட்டுச் செய்திகளைப் பற்றி உரையாடலானார்கள்.

தஞ்சையில் மன்னர் இராசராசன் நலனையும், அவருடைய மகன் மதுரனுக்கு எப்போது இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்கள் என்ற செய்தியையும் அவரைக் கேட்டு அறிய விரும்பி அத்துடன் நாட்டு நடப்பைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பழைய கதைகளையெல்லாம் பேசத் தொடங்கினார்கள். அன்பு உள்ளம் நிறைந்த அந்தப் பெரியவர்களைப் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் மிக உற்சாகமாக இருந்தது.

ஐம்பதாண்டுச் சம்பவங்கள் அவர்களுக்கு நினைவில் இருந்தன. கொள்ளிடக் கரையில் அவர்கள் மிக அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தனர். சிதம்பரத்தினின்று தஞ்சைக்கு அந்த வழியிலும் செல்லலாம். அந்த வழியாகப் பலர் செல்வதனால் தலைநகரம் தஞ்சையில் நடைபெறும் செய்திகள் உடனுக்குடன் அவர்களுக்கு எட்டிய வண்ணம் இருந்தன.

மதுரனைப் பற்றி அவர்கள் அறிய விரும்பி, ''மதுரனுக்கு எப்போது இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்கள், எப்போது திருமணம்?'' என்று அவர்கள் கேட்டனர்.

வல்லவரையரால் மௌனமாக இருக்க முடியவில்லை. அவர்களுக்கு ஏதாவது மறுமொழி சொல்லியாக வேண்டியிருந்தது. வல்லவரையர் சொன்னார்: ''மதுரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவதற்கான முயற்சி மிக வேகமாக நடைபெற்று வருகிறது. நாள் குறிப்பதற்கு அரண்மனைச் சோதிடர்கள் வந்திருக்கிறார்கள்'' என்று வல்லவரையர் கூறினார்.

''மதுரனோடு அரியணையில் சமமாக அமரும் பாக்கியசாலி இளவரசி யார்?'' என்று ஒருவர் கேட்டார்.

வல்லவரையர் மறுமொழி கூறவில்லை. பழுவூரார் பரம்பரையில் வந்த பெண்ணை மதுரனுக்குத் திருமணம் புரிவிக்க ஏற்பாடாகியுள்ளது என்று கூறலாமா என்று ஒருகணம் எண்ணினார். ஆனால், உடனே கூறாமல் வல்லவரையர் மௌனம் சாதிப்பதைப் பார்த்த மற்றொரு பெரியவர், ''வல்லவரையர் விரும்பாத இடத்தில் அரசர் சம்பந்தம் செய்விக்க விரும்புகிறார் போலும்! அதனால்தான் வல்லவரையர் மௌனம் சாதிக்கிறார்'' என்று கூறவும், அனைவரும் வல்லவரையருடைய முகத்தை உற்று நோக்கினார்கள்.



கொள்ளிடக் கரையிலுள்ள சிறு கிராமத்து மக்கள் அனைத்தும் அறிந்திருக்கிறார்களே என்று வல்லவரையர் வியந்தார். என்ன மறுமொழி என்றே அவருக்குப் புரியவில்லை.

''நாட்டுப் பெரியவர்களே! என்னை விட உங்களுக்கு மாளிகைச் செய்தி மிக அதிகம் தெரிந்திருக்கிறது. நான் இப்போதெல்லாம் அரண்மனை நிகழ்ச்சிகளில் அதிகம் தலையிடுவதில்லை என்பதும் நீங்கள் அறிந்திருக்கலாம். நான் தஞ்சையிலிருந்து வருகிறேன். மதுரனுக்கு மிக விரைவில் திருமணம் நடத்துவதைப் பற்றிய பேச்சு நடைபெற்று வருகிறது. அந்தப் பேச்சு முடியும் முன்பே நான் புறப்பட்டு விட்டேன். பிரம்மதேசத்தில் நான் இருந்தாக வேண்டும். மிகவும் முக்கியமான பணி ஒன்று இருக்கிறது. தஞ்சையிலே தங்கியிருந்தால் என் சொந்தக் காரியங்களை எப்போது முடிப்பது?'' என்று கூறி, அவர்களிடமிருந்து அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார் வல்லவரையர். ஆனால், ஊர்ப் பெரியவர்கள் விட்டபாடில்லை.

''பழுவேட்டரையர் பரம்பரையில் வந்த பெண்ணை மதுரனுக்கு மணம் புரிவிப்பது சரியா? அதற்கு முன்பாக உங்கள் வாரிசாக ஒரு பெண் குழந்தை இருந்திருந்தால் இராசராசன் நிச்சயமாக அந்தப் பெண்ணைத்தான் தன்னுடைய மகனுக்கு ஏற்றுக் கொண்டிருப்பார்'' என்று ஒருவர் கருத்துத் தெரிவித்தவுடன் வல்லவரையர் எண்ணினார். தனக்கு ஒரு பெண் இருக்கும் செய்தி இன்னும் இந்தக் கொள்ளிடக் கரைக்கு எட்டவில்லை. எட்டாததும் ஒரு விதத்தில் மிகவும் நல்லதாகப் போய்விட்டது.

வல்லவரையர் அந்தப் பேச்சைத் தவிர்த்துப் பொதுவாக அந்த வருடப் பயிர் விளைச்சலைப் பற்றியும், நிலங்களை அளந்து ஒழுங்கு படுத்த அரசர் முயல்வதையும் ஊர் பஞ்சாயத்தைப் பற்றியும் பேச்செடுத்துத் திசை திருப்பினார்.

சாளுக்கியர்கள் சோழ நாட்டின் மீது படையெடுக்க மிக மும்முரமாக முனைவதைப் பற்றி அவர்களுக்குத் தெரியுமா என்று வினவினார்.

பெரியவர் ஒருவர் பெரிதாகச் சிரித்தார். சோழ நாட்டின் மீது படையெடுப்பா? அதுபோல் சாளுக்கியர்கள் கனவு கூடக் காண முடியுமா? எங்களுக்கு ஏதும் செய்தி எட்டவில்லை. உங்களுக்கு ஒற்றர்களின் மூலம் ஏதாவது செய்தி கிடைத்ததா?'' என்று கேட்டார்.

சாளுக்கியர்கள் படை திரட்டி வருவதையும், எந்த நேரமும் அவர்களது படை புறப்பட்டு விட்ட செய்தி கிடைக்கும் என்றும் வல்லவரையர் கூறினார்.

''ஓ! அப்படியென்றால் கிராமத்திலும் படைக்கு ஆள் சேர்க்க வேண்டும். வல்லவரையர் போர்க்களம் செல்லப் போவது உறுதி'' என்று கூறினார் ஒருவர். அந்தப் பொழுதில், விருந்து ஆயத்தமாக இருப்பதாகக் கூறி, அதே ஊர்ப் பெரிய தனக்காரர் வீட்டிலிருந்து ஒருவர் வல்லவரையரை வந்து அழைத்தார்.

''நான் இரவு வேளைகளில் ஏதும் உண்பதில்லை'' என்று வல்லவரையர் கூறினார். அவர் அண்மைக் காலத்தில் இரவு உணவைக் குறைத்துக் கொண்டு விட்டார். பால் கிடைத்தால் அருந்தியோ, கஞ்சியைக் குடித்தோ இரவு உணவை முடித்துக் கொள்ளும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தார். அதை அறிந்த பெரியவர் கேட்டார்: ''தங்களைப் போன்ற வீரர்கள் மிகவும் சத்துள்ள ஆகாரத்தை உண்டால்தானே உடல் வலிமை குறைந்து விடாமல் எப்போது நிலைநாட்ட முடியும்? வாதாபிப் படையெடுப்பின்போது உங்கள் உடல் வலிமை மிக முக்கியம் அல்லவா?''

வல்லவரையர் மெல்ல நகைத்து, ''இனிமேல் எனக்கு என்ன புதிய பலம் தேவைப்படுகிறது? நான் என்ன போர்க்களத்திற்குச் செல்லப் போகிறேனா? இனி என் உடல் எந்த நோய்க்கும் ஆட்படாமல் மக்களுக்குப் பணிபுரிவதற்கான பலத்தை மட்டும் கொடுக்குமளவிற்கு நான் என் வாழ்க்கையைத் திடப்படுத்திக் கொண்டு விட்டேன்'' என்றார்.

''போர் என்று வந்து விட்டால். நீங்கள் ஒதுங்கியிருக்க முடியுமா?'' என்று ஒருவர் கேட்டார்.

''ஆமாம்; பிரம்மதேசம் சென்று அமைதியாக இருக்க முடிவு செய்து விட்டேன்'' என்றார் வல்லவரையர்.

பெரியவர்கள் ஒருமிக்க, ''அதெப்படி முடியும் வல்லவரையரே? நீங்கள் அமைதியாக இருந்தாலும், உங்கள் வாள் சும்மாயிராது. வலிமை மிக்க வந்தியத்தேவன் வாளுக்கு ஓய்வேது?'' என்றனர்.

வல்லவரையர் வந்தியத்தேவன் தன் வாளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.



# 34. இன்பவல்லியின் தர்மசங்கடம்

இளையபிராட்டியார் குந்தவ்வை தேவியார் பேசிக் கொண்டிருந்த போது இன்பவல்லி குறுக்கிட்டுப் பேசவில்லை. இளையபிராட்டி பூர்வ பீடிகையாக முதலில் ஏதேதோ கூறினாள்.

அதிர்ச்சி விளைவிக்கும் அந்தச் செய்தி இன்பவல்லியின் உடல் முழுவதும் மெல்லிய அசைவை ஏற்படுத்தியது. துக்கம் பொங்கி வந்தது. உதடுகள் மெல்லத் துடித்தன.

அழுகை வருகிறது என்பதைப் புலப்படுத்த அவள் விரும்பவில்லை. எப்பொழுதும் போல் மகிழ்ச்சியுடன் இளையபிராட்டி சொல்வதைக் கேட்பது போல் புலப்படுத்திக் கொண்டாள்.

அழுகையை அடக்க முயன்றும் அதன் எதிரொலியான விம்மலைத் தடுக்க முடியவில்லை. சேலைத் தலைப்பால் மெல்ல வாயை மூடிக் கொண்டாள்.

''இன்பவல்லி! இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் எடுத்த முடிவு தவறோ, நியாயமோ எனக்குப் புரியவில்லை. உன் மீது என் தம்பிக்கு ஏற்பட்ட காதல் தெய்விகமானது என்பதைப் புரிந்து கொள்ள அப்பொழுது நான் மறந்தேன். உங்களிருவருக்கும் தொடர்பு ஏற்படக் கூடாது என்ற குரூரமான எண்ணம் எனக்கு ஏன் ஏற்பட்டது என்று தெரியவில்லை. உங்களிருவரையும் சந்திக்க விடாமல் செய்ய முயன்றேன். புனித காதலைப் பிரம்மதேவரே வந்தும் தடுக்க முடியாது என்பதை என் பொறாமைப் புத்தியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''முறையாக உங்களிருவருக்கும் திருமணம் நடத்தி அந்தப்புரத்தில் உன்னை அமர்த்த வேண்டிய நான், கடற்கரை அருகிலும், நதிக் கரையிலும், காட்டுப் பகுதியிலும் உன்னைக் குடி அமர்த்தினேன். என் இளவலே அறியாவண்ணம் என் திட்டத்தை நிறைவேற்றினேன். நீ கருவுற்று உனக்கு ஆண்மகவு பிறந்து விடப் போகிறதோ என்று அஞ்சினேன். பெண் குழந்தையை நீ

பெற்றெடுத்தாய் என்பதறிந்தவுடன் என் மனத்தில் ஓரளவு நிம்மதி ஏற்பட்டது.

''உனக்கு எந்தவிதக் குறையும் வரக்கூடாது என்று உன்னை இந்த இடத்தில் மிக வசதியுடன் வசிக்க வைத்தேன். உன் இதயத்திற்குப் பிரியமான நடனக் கலையை நீ மறந்து விடக்கூடாது என்பதற்காகவே உன்னிடம் மாணவிகள் நடனம் பயிலுமாறு செய்தேன். நடனக் கலையில் நாள் முழுவதும் ஈடுபட்டதால், உனக்கு ஏற்பட்ட இடர்ப்பாட்டையும் நீ பெரிதாகக் கொள்ளவில்லை.

''உன்னைப் பற்றி என் இளவல் என்னிடம் பலமுறை விசாரித்தான். என் அருமை இளவல், சோழ நாட்டுச் சக்ரவர்த்தி, மனம் வைத்திருந்தால் உன் இருப்பிடத்தை அவன் அறிந்திருக்கலாம். நீ சோழ நாட்டை விட்டே சென்று விட்டாய் என்று நான் பொய் சொன்னேன். அந்தப் பொய்யை என் இளவல் முற்றிலும் நம்பினான். செய்தி யாரிடமிருந்து வருகிறதோ அதைக் கொண்டே நம்புவதும் நம்பாததும் ஏற்படுகின்றன.

''சோழ நாட்டில் பல முன்னேற்றத் திட்டங்களைச் சக்ரவர்த்தி மேற் கொண்டதாலும், பல புதுமைகளைச் செய்ததாலும், போர் போர் என்று நான்கு திசைகளிலும் படையெடுத்துச் சென்றும், படை எடுத்துச் செல்லத் திட்டங்கள் தீட்டியும் அரசாங்க அலுவல்களில் அவன் தன் கவனம் முழுமையையும் செலுத்தியதால், உன்னைப் பற்றி நான் கூறியவற்றை அவன் நம்பி, பிறகு அதைப் பற்றி விசாரித்தறிய முயலவில்லை. நானும் உன்னை மறந்தேன்.

''சில ஆண்டுகளுக்குப் பிறகு உன் மகள் மிக எழிலுடன் வளர்ந்திருப்பதை அறிந்தேன். என் உள்ளத்திற்குள் பெரிய போராட்டம் ஏற்பட்டது. என் இளவலிடம் அந்தச் செய்தியைச் சொல்லாமல் இருப்பது தவறு என்றுணர்ந்தேன்.

''உன் மகள் தஞ்சை அரண்மனையில் பணிபுரிய வந்தாள். துணிவுடையவள், அறிவுடையவள், ஆற்றல்மிக்கவள். ஓரிரு நாள்கள் சக்ரவர்த்திக்குப் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றாள். அதிலுள்ள ஆபத்தை அறிந்து, அவள் பணி செய்யுமிடத்தை மாற்றினேன். அவள் என் அருமை மதுரனைச் சந்தித்திருக்கிறாள். சந்திப்பில் ஏற்படும் பயங்கர ஆபத்தை நான் முதலில் உணரவில்லை.

''மதுரன் - பூங்கொடி சந்திப்பிலுள்ள விபரீதத்தைப் பிறகு தான் அறிந்தேன். அவர்களிருவரும் கலை உள்ளத்துடன் பழகவில்லை.



அவர்களிடையே ஏற்பட்ட நட்பு காதலாக மெல்ல மெல்ல மலர்கிறது என்றறிந்தேன். காட்டை அழிக்கச் சிறு பொறி போதாதா? மீண்டும் நான் காதலர்களைப் பிரிக்கும் பணியில் இறங்கினேன். ஆனால், எனது இந்தச் செயலில் தவறு ஏதுமில்லை. நீ இப்போது புரிந்து கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். மதுரன் - பூங்கொடி காதல் முறையற்றது என்று நான் சொல்லாமலேயே உனக்கு விளங்கியிருக்கும் என்று எண்ணுகிறேன்.

''ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களைச் சந்திக்க விடாமல் நான் செய்தேன். மதுரனுக்கு என் மீது கோபம். வல்லவரையருக்குச் சீற்றம். காதல் சிட்டுகளைப் பிரிக்கும் மலடி என்ற பேச்சும் என் காதில் விழுந்தது. இவ்வாறு அவப் பெயரை நான் சுமந்து கொள்வது எதற்காக என்று உனக்குப் புரிந்திருக்கும். இப்போது உன் உதவி தேவை. அதற்காகத்தான் நான் உன்னிடம் மன்றாட வந்திருக்கிறேன். மிகத் தெளிவாக நான் சொல்கிறேன் - முறையற்ற இந்தக் காதலை எப்படியாவது நீ தடுத்து விட வேண்டும். உண்மை புலப்பட்ட பிறகாவது என்னைத் தூற்றாமல் இருப்பார்களல்லவா?''

இளையபிராட்டி தன் பேச்சை முடிக்கவில்லை.

விம்மல் ஒலி வெடித்தது. அடக்கி வைத்திருந்த துயர மலை சீறியது. மன வேதனை உடைந்து பொங்கிப் பெருகியது. அவள் உடல் குலுங்கியது. ''அக்கா!'' என்று பெருங்குரலில் கூவி இன்ப வல்லி அழுதாள்.

இளையபிராட்டி அவளைத் தன்னருகில் அழைத்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்துக் கூந்தலைக் கோதி முதுகைத் தடவி, ''இன்பவல்லி! நீ ஏன் அழுகிறாய்? உனக்கும் இந்தச் சோழ நாட்டிற்கும் ஏற்படவிருந்த அவப்பெயர் நல்ல வேளையாகத் தடுக்கப்பட்டது. சோழ நாட்டின் வருங்காலச் சக்ரவர்த்தியாக அமரப் போகும் மதுரனின் வாழ்வில் நேரவிருந்த மாபெரும் மாசைக் களைய நீ உடனே உதவ வேண்டும்.

''எந்த நேரத்திலும் சோழ சக்ரவர்த்தி இங்கே வரக்கூடும். அவருடன் உன் மகளும் வருகிறாள். என்ன அதிசயங்கள் நேரப் போகின்றன என்று அறியாமலேயே அரசர் வருகிறார். உன் மகள் துணிவு மிக்கவள், ஆற்றல்மிக்கவள் என்று சொன்னேனன்றோ? சோழ சக்ரவர்த்தியை அவள் இங்கே அழைத்து வருகிறாள். தந்தை என்று தெரியாமல் அவரை இங்கே அழைத்து வருகிறாள். தன் அபிமான வல்லியைச் சந்திக்கப் போகிறோம் என்றறியாமல்

பூங்கொடியின் தாயைக் காணப் போகிறோம் என்ற எண்ணத்தில் அவர் இங்கே வருகிறார்.

"மதுரனும் இங்கே வரப் போவதாகத் துடித்தான். நான் தடுத்து விட்டேன். ஆனால், என் சொல்லையும் கட்டளையும் மீறி மதுரன் எந்தக் கணமும் இங்கே வந்துவிடலாம். மதுரனுக்குச் சில நாள்களில் இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்கள். திருமணம் நடக்கப் போகிறது. இந்தச் சமயத்தில் மதுரன் தன்னிலை உணர்ந்து, தன் காதலை ஒரு மாயை, முறையற்றது என்றுணர்ந்து, தனக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் பழுவூர்க் குல பெண்ணை மணக்கச் சம்மதிக்க வேண்டும். அதற்கு நீதான் உதவ வேண்டும்.

"நீ அழுவதை நிறுத்து! துயருறுவதற்கு ஏற்ற நேரமிதுவன்று. நீ விரைவில் இயங்க வேண்டும். நான் உனக்குக் கொடுத்த தொல்லையை மறந்து எனக்காக, சோழ நாட்டிற்காக... ஏன், உனக்காகவும் என் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்."

இளையபிராட்டி மிக மெதுவாக - ஆனால், அழுத்தந்திருத்தமாகப் பேசினாள். இன்பவல்லியிடமிருந்து எழுந்த விம்மலின் அதிர்ச்சி அவள் உடல் எங்கும் எதிரொலித்தது. அவளைச் சமாதானப்படுத்த மெல்ல மெல்ல அவளுடைய முதுகைத் தடவிக் கொடுத்தாள், தோளைத் தடவினாள், கரங்களைத் தடவினாள், இமைகளை மெல்ல அழுத்தினாள் இளையபிராட்டி. இன்பவல்லியின் இதயச்சுமை கண்ணீராக வடிந்தது.

இன்பவல்லி புரிந்து கொண்டாள். 'நானொன்று நினைக்க அதைப் பூங்கொடி வேறுவிதமாகப் புரிந்து கொண்டு விட்டாளே! சோழ குடும்பம் வருந்துமாறு செய்ய வேண்டும் என்ற வஞ்சினம் எனக்கு எழுந்தது நியாயமில்லைதான்' என்று மனத்தில் நினைத்தாள். முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டாள்.

"இளையபிராட்டியார் அவர்களே! நிலைமையின் பயங்கரத்தைப் புரிந்து கொண்டு விட்டேன். நான் என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடுங்கள்" என்று கேட்டாள்.

"உன் மகள் இங்கே வருவாள். அவளைத் தனியே அழைத்துச் சென்று பேசு. நிலைமையை உணருமாறு அவளிடம் எடுத்துக் கூறு. மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள்.

இன்பவல்லி தலையசைத்தாள். இளையபிராட்டியைக் குடிலுக்குள் அழைத்தாள்.



'சோழ சக்ரவர்த்தி வரப் போகிறார்'.

அவள் உடல் சிலிர்த்தது.

அவரைச் சந்தித்துப் பேசுவதற்காகத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டாள் இன்பவல்லி.

# 35. விருந்தில் சந்தித்த வீர இளைஞன் யார்?

வல்லவரையருக்கு அந்தப் பெரியவர் வீட்டில் சிறப்பான விருந்து நடைபெற்றது. ஊரின் பெருந்தனக்காரர்களும் தலைவர்களும் முதியவர்களும் கூடத்தில் அமர்ந்து உணவருந்தியவாறே பேசிக் கொண்டிருந்தனர்.

வல்லவரையர் இரவில் அத்தகைய விருந்துண்டு ஆண்டுகள் பல ஆகிவிட்டன என்றாலும் அந்தக் கிராமத்து மக்களின் வேண்டுகோளை அவரால் தட்ட முடியவில்லை.

இளையபிராட்டியாரின் கணவரும் சோழ நாட்டு அரசரின் பெருமதிப்புக்குள்ளான வீரரும் வல்லவரையர் நாட்டுக் குறுநில மன்னருமான வந்தியத்தேவனுக்குத் தமது ஊரில் விருந்து கொடுத்தோம் என்ற ஒரு பெருமையைப் பெற்றதாக அந்தக் கிராம மக்கள் நினைத்தனர்.

வீட்டுப் பெண்டுகள் மணக்க மணக்கச் சமைத்திருந்தனர். ஓடி ஓடிப் பரிமாறினர். இளைஞர்கள் அந்தப் பந்தியில் உட்கார்ந்து உணவருந்தாமல் சற்றுத் தொலைவில் மிக மரியாதையுடன் கை கட்டி நின்று, கவனித்துக் கொண்டிருந்தனர்.

வல்லவரையருடைய கம்பீரமான தோற்றத்தையும், முதுமையின் தலைவாசலில் நின்றாலும் அவர் முகத்தில் வீசும் கம்பீர ஒளியையும், திண்தோள்களையும், அவர் வீற்றிருக்கும் கம்பீரத்தையும் பார்த்து வியந்து கொண்டிருந்தனர்.

உணவருந்திய பிறகு வல்லவரையர் திண்ணையில் வந்தமர்ந்தார். அவரைச் சுற்றிலும் பலர் நின்று கொண்டிருந்தனர். இரண்டு மூன்று முதியவர்கள் வல்லவரையர் அருகே அமர்ந்திருந்தனர். வீட்டுத் திண்ணையில் உள்ள மாடத்தில் பெரிய அகல் விளக்கு ஒளி கொடுத்துக் கொண்டிருந்தது.

குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருநதது. வல்லவரையருக்கு வழி நடந்த சோர்வும் விருந்துண்டதனால் ஏற்பட்ட களைப்பும் ஒன்று சேர கண்ணைச் சுழற்றியது. அவர் தூணிலே மெல்லச் சாய்ந்து கொண்டு சுற்றிலும் உள்ளவர்களை ஒருமுறை பார்த்தார். அந்தச் சமயம் அவர் அருகே இளைஞன் ஒருவன் வந்து கைகட்டி மிகப் பணிவுடன் நின்று கொண்டு, ''வல்லவரையர் அவர்களே! உங்களிடம் ஒரு விண்ணப்பம்'' என்றான்.

வல்லவரையர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். அவன் முகத்தில் அவனுடைய சுறுசுறுப்புத் தன்மை தெரிந்தது. எதையும் கூர்ந்து கவனித்து அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் புலப்பட்டது. துணிவு தெரிந்தது.

அவன் அருகே இருந்த பெரியவர் ஒருவர், ''வல்லவரையரே! இவன் முத்து மாணிக்கம். இந்தக் கிராமத்திலேயே மிக நல்லவன் என்ற பெயர் பெற்றவன். வல்லவனும் கூட. இவனுக்கிருக்கும் சிறிது நிலத்தில் உழுது பயிரிட்டுத் தன்னுடைய வயதான தாயைக் காப்பாற்றி வருகிறான். சிலம்பம் மற்றும் போர் முறைக் கலைகளை இவன் கற்றிருக்கிறான். வாள் வீசும் கலையை அவன் அறிந்திருக்கிறான். எப்படியாவது தங்களைச் சந்தித்துத் தங்களிடம் வாட்போர் முறையைக் கற்றறிய வேண்டுமென்ற ஆவல் கொண்டவனாக இருக்கிறான். தங்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்துமாறு என்னைப் பலமுறை அவன் கேட்டும் இருக்கிறான். தெய்வச் சித்தம் பாருங்கள், இன்று நீங்களே இந்தக் கிராமத்திற்கு வந்து விட்டீர்கள்'' என்றார்.

வல்லவரையர் பெரிதாகச் சிரித்தார். ''பெரியவரே! உங்களுக்கா வாள் சுழற்ற கற்றுக் கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டார்.

பெரியவரும் தன்னுடைய காவிப் பற்கள் தெரிய நகைத்து, ''எனக்கு இல்லை அய்யா, இவனுக்குத்தான்!'' என்றார்.

மாணிக்கம் மிகப் பணிவான குரலில், ''தங்களை நான் வேண்டிக் கேட்பதற்குள் பெரியவர் முந்திக் கொண்டு விட்டார். என் மீதுள்ள



பாசம் காரணமாக அவர் கேட்டு விட்டார். பொறுத்தருளுங்கள். இந்த வயதில் அவருக்கும் வாள் சுழற்ற ஆசைதான். தங்களைச் சந்தித்ததில் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைச் சொல்லி முடிய வில்லை. வல்லவரையரைச் சந்திக்க முடியுமா என்று கனவு கண்டு கொண்டிருந்தேன். உங்களைப் பார்த்தவுடன் எனக்குப் பேசவே நா எழவில்லை. நான் தங்களுடன் வந்து விடுகிறேன். எனக்கு வாள் வீசும் கலையிலுள்ள நுணுக்கங்களையெல்லாம் கற்றுத் தாருங்கள்'' என்று பணிவுடன் கேட்டான்.

வல்லவரையர் மீண்டும் ஒருமுறை அவனை ஏற இறங்கப் பார்த்தார். ''மாணிக்கம்! மிகவும் சுறுசுறுப்பாகவும் முன்னுக்கு வரக் கூடிய தன்மை கொண்டவனாகவும் நீ விளங்குகிறாய். வாள் வீசக் கற்றுக் கொள்வதற்கு வல்லவரையர்தான் வேண்டுமென்பதில்லை. தஞ்சைக்குச் சென்றால் அங்கே பல வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் நீ கற்றுக் கொள்ளலாம். என்னைப் பொறுத்தவரையில் நான் இனி வாளைத் தொடப் போவதில்லை என்று முடிவு செய்திருக்கிறேன்'' என்றார்.

வல்லவரையருக்கு மிக அருகே இருந்த ஒருவர், ''முடிவுதானே செய்திருக்கிறீர்கள், சபதம் செய்யவில்லையே?'' என்று கேட்டார்.

வல்லவரையர் திரும்பிப் பார்த்தார். அந்தக் குரல் பரிச்சயமான குரலாக இருந்தது. ஆனால், அந்தத் தோற்றத்தை எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், அவர் ஓர் இளைஞர் என்பதைப் புரிந்து கொண்டார். அடர்ந்த தாடியும், கலைந்த அந்தச் சிகையும், புழுதி படிந்திருந்த மேல் அங்கியும், தோளில் தொங்கிய பையும் கொண்டிருந்த அந்த வாலிபன் வல்லவரையருக்கு மிக அருகே நின்றிருந்தான். மற்றவர்கள் அவனை உற்று நோக்கினார்கள். அவன் யார் என்று ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டிருந்தனர். வல்லவரையர் அவன் பக்கம் திரும்பினார். யாரென்று அவனைக் கேட்க விரும்பவில்லை. ஆனால், விவரம் தெரிந்த ஒரு வாலிபனாகத் தான் அவன் இருக்க வேண்டும். 'அவனை யாரென்று கண்டு கொள் வதற்காக அவனிடம் பேசிப் பார்ப்போம்' என்று எண்ணியவாறு ''முடிவு செய்வதற்கும், சபதத்திற்கும் என்ன வேற்றுமை இருக்கிறது தம்பி?'' என்று கேட்டார்.

''நிறைய வேற்றுமை இருக்கிறது. தங்களைப் பார்ப்பதென்று முடிவு செய்திருக்கிறேன். ஆனால், நான் தங்களை எப்படியாவது பார்த்துத்தான் ஆக வேண்டுமென்று உள்ளத்தில் உறுதி கொண்டால்

அது சபதமாகிவிடும். இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது அல்லவா?'' என்றான்.

''என்ன வித்தியாசம்? முடிவெடுப்பவன் உறுதியுடன் இருந்தால் அதுவே சபதம்தான். தனியே சபதம் செய்ய வேண்டுமா? சபதம் எடுக்காவிட்டால் தன்னுடைய முடிவை நிறைவேற்றாமல் இருந்தால் அவன் ஒன்று புத்திக் குறைவுடையவனாக இருக்க வேண்டும் அல்லது எந்தக் காரியத்தையும் எளிதாக எண்ணுபவனாக இருக்க வேண்டும்'' என்றார்.

அருகே இருந்தவர்கள் வல்லவரையருடைய மறுமொழியைக் கேட்டு ஆமோதிப்பதுபோல் குரல் கொடுத்தனர். அந்தப் புதிய இளைஞன் அந்த உரையாடலை அப்படியே விட்டு விடுவதாக இல்லை.

''வல்லவரையரே! நீங்கள் சாமர்த்தியமாக இப்போது பேசி விட்டாலும் கூட உங்கள் உள்ளத்துக்குள்ளே முடிவிற்கும் சபதத் திற்கும் வித்தியாசம் இருப்பது தங்களுக்கே தெரியும்'' என்றான்.

வல்லவரையர் சற்று நேரம் மௌனமாக இருந்தார். பிறகு, ''என்னைப் பொறுத்தவரையில் நான் எந்தவிதச் சபதமும் எடுக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. முடிவுதான் எடுத்திருக்கிறேன். அதை நீ எந்தப் பெயரிட்டு வேண்டுமானாலும் அழைக்கலாம்'' என்று அந்தப் பேச்சை அத்துடன் முடித்து விட விரும்பினார்.

ஆனால், அந்த இளைஞன் அப்படி விட்டு விட விரும்பவில்லை. ''வல்லவரையரே! தங்கள் முடிவை நீங்கள் மாற்றிக் கொள்ள முடியு மல்லவா?'' என்ற கேட்டான்.

''மாற்றிக் கொள்ளத் தேவை ஏற்பட்டால் மாற்றிக் கொள் கிறேன்'' என்றார்.

''முடிவு மாற்றிக் கொள்ளக்கூடியது. சபதம் என்றால் அப்படி மாற்றிக் கொள்ள எளிதில் முடியாது'' என்று அவன் கூறி, தன் தீர்மானத்தில் தான் வெற்றி அடைந்ததாக நினைத்தான். பிறகு அவனே தொடர்ந்தான்: ''வல்லவரையரே! தம்பி மாணிக்கம் கேட்டது போல் நானும் தங்களிடம் கேட்கிறேன். எனக்கும் தாங்கள் வாள் வீசுவதில் உள்ள நுணுக்கங்களைக் கற்றுத் தருவீர்களா?'' என்று கேட்டான்.

வல்லவரையர் மீண்டும் அவனை ஆராய்வது போல் நோக்கினார்.



குறைவான வெளிச்சத்தில் அவனை முழுவதும் அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை.

''இந்தக் கிராமத்தில் ஒரு வாள் பயிற்சிக் கூடத்தை நான் தொடங்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள் போல் தோன்றுகிறது!'' என்று நகைச்சுவையாகக் கேட்டார்.

புதிய இளைஞன் சொன்னான்: ''தேவைப்பட்டால் இந்தக் கொள்ளிடக் கரையிலேயே தாங்கள் இருந்து இளைஞர்களுக்கெல் லாம் நுணுக்கமான போர் முறைகளை, குறிப்பாக வாள் வீசும் முறைகளைக் கற்றுத் தந்தால் சோழ நாட்டிற்குப் பயனுடையதாக இருக்கும்.''

''ஆம்; சாளுக்கியருடைய படையெடுப்பை எதிர்த்துப் போரிட நுணுக்கமான போர்முறையை அறிந்த வீரர்கள் அதிகம் பேர் தேவை தான். ஏனெனில் இப்போது நடக்கவிருக்கும் போர் நேருக்கு நேர் நடைபெறாதுபோல் தோன்றுகிறது. திடீரென்று ஆங்காங்கே சதி காரருடைய குழப்பப் போராக அமைந்து விடலாம். ஒவ்வொரு முக்கிய இடங்களிலும் சதிகாரர்களை எதிர்த்து வாட்போர் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம். அதனால் இளை ஞர்கள் வாள் வீசுவதிலும் நிபுணர்களாக விளங்க வேண்டும் என்பது என் எண்ணம்'' என்றார் வல்லவரையர்.

இளைஞன் மாணிக்கம் கேட்டான்: ''ஐயா! போர் வரப் போவது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், சோழ நாட்டிற்கு என்னால் இயன்ற பணிபுரிய வேண்டும்; பகைவரை எதிர்த்துப் போரிடும் போது என் திறமையை நான் புலப்படுத்த வேண்டும் என்று நினைக் கிறேன். அதனால் போர் முறைகளனைத்தையும் கற்றுணர்ந்து இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். வல்லவரையர் வந்தியத்தேவன் சோழ நாட்டில் மிகச் சிறந்த வாள் வீரர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், தாங்கள் இந்தக் கிராமத்தில் தங்கியிருந்து அதோ அந்த புதிய அன்பர் சொன்னாரே அவருடைய வேண்டுகோளை ஏற்று இளைஞர்களுக்கெல்லாம் நீங்கள் வாட் போர் முறை நுணுக்கங்களைக் கற்றுத் தந்தால் மிக நன்றியுடையவர் களாக இருப்போம்'' என்றான்.

''ஓ! இந்த இளைஞன் பெயர் உங்களுக்கே தெரியவில்லை. புதிய இளைஞன் என்றே அழைக்கிறீர்கள்'' என்று கூறி, மீண்டும் அவர் புதிய வாலிபன் மீது பார்வையைச் செலுத்தி மற்றவர்களைப்

பார்த்துக் கேட்டார். அப்போதுதான் மற்றவர்களும் அந்த இளைஞனை நோக்கினார்கள்.

அங்கிருந்தோர் யாருக்குமே அவனைச் சற்றும் அடையாளம் தெரியவில்லை.

# 36. யார் இந்த சிங்கன்?

வல்லவரையர் வந்தியத்தேவன் கண்களை உறக்கம் மெல்லத் தழுவ முனைந்தது. ஆனால், அதற்குள் அவர் உறங்க விரும்பவில்லை. அவருடன் பேச்சுக் கொடுத்த இரு இளைஞர்களிடமும் அவர் மேலும் உரையாட விரும்பினார்.

''தம்பிகளா! இப்படிக் காலாற நடந்து வரலாம்... வருகிறீர்களா?'' என்றழைத்தார்.

இரண்டு இளைஞர்களும் வல்லவரையருடன் புறப்பட்டனர். அடர்த்தியான தாடி மீசையுடன் கூடிய இளைஞரை நோக்கி வல்லவரையர் கேட்டார்: ''இந்த இளம் வயதிலேயே ஏன் தாடி வளர்க்கிறாய்? உடையெல்லாம் புழுதி... நீண்ட தூரம் நடந்து வந்ததாலா?''

மறுமொழி கூறாமல் மெல்லிய சிரிப்பொலி அவனிடமிருந்து எழுந்தது.

''எனக்கும் தாடி வளர்க்க ஆசைதான்'' என்று மாணிக்கம் தன் ஆசையை வெளிப்படுத்தினான்.

''இலட்சியம் ஈடேற வேண்டுமென்றால் தாடி வளர்க்கலாம்'' என்றார் வல்லவரையர். ''அல்லது வாழ்க்கையில் ஏதாவது ஏமாற்றம் ஏற்பட்டாலும் அதன் நினைவாக தாடி வளர்ப்பது வழக்கம்'' என்றார்.

''நினைவாகவா?'' மாணிக்கம் வியப்புடன் கேட்டான்.

''ஆமாம்; அடர்ந்த தாடி மீசையை தினமும் நினைக்கும்போது நிறைவேறாத இலட்சியம் நினைவிற்கு வருமல்லவா?''



வல்லவரையர் தாடி வைத்திருக்கும் இளைஞனைப் பார்த்தவாறு கூறினார்.

''இன்னும் சொல்லப் போனால் காதலில் தோல்வியுற்றவர்கள் முடி வளர்ப்பது வழக்கம்'' என்று கூறி நகைத்தார். மாணிக்கமும் சிரித்தவாறு புதிய இளைஞரைப் பார்த்து, ''நண்பருக்கு அப்படி ஏதாவது அனுபவம் உண்டோ?'' என்று கேட்டான்.

''ஓரளவிற்கு உண்மைதான். நான் போர் வீரனின் மகளைக் காதலித்தேன். சிறந்த வாள் வீரருக்குத்தான் அவர் தன் மகளை மணம் புரிவிக்க விரும்புகிறார். வாள் வீசுவதில் போதிய பழக்கம் எனக்கில்லை. வல்லவரையரைப் போன்றவர்கள் மனது வைத்து வாள் வீசும் கலையில் என்னைத் திறமையுடையவராக்கினால் அந்த மங்கை கிடைக்கலாம்'' என்றான்.

''ஐயா! இந்த இளைஞருடைய ஆசை நிறைவேறவாவது நீங்கள் இங்கு தங்கி வாள் வித்தையைக் கற்றுத் தர வேண்டும்'' என்று வேண்டினான்.

''தம்பிகளா! எனக்குப் பிரம்மதேசத்தில் மிக முக்கியமான பணி இருக்கிறது. ஓரிரு நாள்களில் வாட் பயிற்சியில் தேர்ந்து விட முடியாது. தொடக்கத்தில் பதினைந்து நாள்களாவது கடுமையாகப் பயில வேண்டும்'' என்றார் வல்லவரையர்.

''வெள்ளம் தணிய சில நாள்கள் ஆகும். அதுவரையில் நீங்கள் இங்கிருந்து கற்றுத் தரலாம். பிறகு தங்களுடன் நாங்கள் வருகிறோம். தங்கள் ஊரில் அதைத் தொடரலாம். அவருக்குப் பெண் கிடைப்பாள். நான் போர்க் கலையில் முழு நிறைவடைவேன்'' என்றான் மாணிக்கம்.

கொள்ளிடத்தில் வெள்ளம் அதிகமாகியது. ஊர் எல்லையைத் தொட்டுக் கொண்டோடியது பிரவாகம்.

அந்த இரு இளைஞர்களின் விருப்பப்படி வந்தியத்தேவன் அந்தக் கிராமத்தில் வாள் வீசுவதில் உள்ள நுணுக்கங்களைக் கற்றுத் தரத் தொடங்கினார்.

''உன் பெயரைத் தெரிந்து கொள்ளவில்லை. இந்தக் கிராமத்திற்குப் புதியவனா? வாள் வீசும் கலையில் நீ முன்பே மிகத் தேர்ச்சியுற்றவன் எனத் தோன்றுகிறது. என்னிடம் நீ பயில்வதற்குப் புதிதாக

என்ன இருக்கிறது தம்பி?'' என்று வல்லவரையர் புதிய இளைஞனைப் பார்த்துக் கேட்டார். அவர் விழிகள் அந்த இளைஞனுடைய விழிகளை உற்று நோக்கின.

''எல்லாம் கற்று விட்டேன் என்று சொல்ல முடியாது. இப்போது மாணிக்கம் பல நுணுக்கங்களைக் கற்று விட்டான். வாளை இட வலமாகச் சுழற்றுவதில் புதிய உத்திகளை அவன் கையாளுகிறான். அவை சோழ நாட்டிலுள்ளவர்கள் அறியாதவை. இப்பொழுது நான் அறிந்தேன். தாங்கள் அவற்றில் வல்லவர். அவற்றை நான் கற்க வேண்டாமா?'' என்றான்.

''ஓ! மேலும் மேலும் திறமை பெற ஆர்வம் கொண்ட உன் பெயர் என்ன, எந்த ஊர் என்று சொல்லவில்லையே?'' என்று வல்லவரையர் கேட்டார்.

''என் பெயர் சிங்கன்!''

''சிங்கன்! சிங்கம் போன்ற வலிமை உனக்கிருக்கிறது. உன் பெற்றோர் சரியான பெயரையே இட்டுள்ளனர். உன் விழிகள் கூர்மையாக உள்ளன. அடர்ந்திருக்கும் தாடியும் மீசையும் உன் முக அழகை மறைத்து விட்டன. உன்னைப் போன்றவர்கள் சோழப் படையில் சேர்ந்திருக்க வேண்டும்'' என்றார்.

''எனது நெடுநாளைய கனவும் அதுதான் ஐயா! தங்கள் பார்வை பட்டுவிட்டால், சோழ மன்னரிடம் என்னை அறிமுகப்படுத்தி விட்டால் என் திறமையைப் புலப்படுத்தி நான் முன்னுக்கு வந்து விடுவேன். தங்களைக் கொள்ளிடக்கரை கிராமத்தில் சந்தித்தது என் முன்னோர் செய்த புண்ணியம்'''என்றான்.

''வீரத்துடன் பேச்சுத் திறமையும் பெற்றிருக்கிறாய். என்னுடன் என் ஊருக்கு வருகிறாயா?''

''பிரம்மதேசத்திற்குத்தானே? காத்திருக்கிறேன் ஐயா!'' என்று சிங்கன் கூறியவுடன், மாணிக்கம் அவரை நோக்கி, ''நானும் வருகிறேன்'' என்றான்.

''ஒருவருக்கு மட்டுமே என்னால் கற்றுத் த ர முடியும். உங்களிருவருள் யார் வருவதென்று முடிவு செய்து கொள்ளுங்கள்'' என்றார் வல்லவரையர்.

''நான்தானே தங்களை முதலில் சந்தித்தேன்? நான் இந்த கிராமத்தில் வாழ்பவன். இந்தக் கிராமத்துப் பெரியவர்களின் ஆதரவு எனக்குண்டு. சிங்கன் என்ற பெயரை நான் இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன். எந்த ஊரைச் சேர்ந்தவன் என்று அவன் சொல்லவில்லை. முன்பின் அறியாதவர்களைச் சோழர் படையில் சேர்க்கக்கூடாது. காதலியை மகிழ்விக்க அவன் வாள் வீசும் கலையில் தேர்ச்சி பெற விரும்புகிறான். ஆனால், சிறந்த வாள் வீரனாக மாறுவதே என் இலட்சியம். ஒருவேளை சிங்கனின் காதலி 'வாளைத் தொடாதே' என்று கூறிவிட்டால், வாளைக் கீழே போட்டு விடக்கூடும். நான் அப்படி அல்லன். தங்கள் பெயரை என்றும் நிலை நிறுத்துவேன்'' என்று பரபரப்புடன் கூறினான்.



வல்லவரையர் சிங்கனையும், மாணிக்கத்தையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு எரிச்சல் நிறைந்த குரலில், ''தர்ம சங்கடத்தில் ஆழ்த்துகிறீர்களே! நான் உங்களிருவரையும் பிரம்மதேசம் அழைத்துச் செல்ல விரும்பவில்லை'' என்றார்.

''அப்படியெல்லாம் முடிவெடுத்து விடாதீர்கள். எங்கள் இருவரில் யார் அதிகம் திறமைசாலியோ அவரை அழைத்துச் செல்லுங்கள்'' என்றான் சிங்கன்.

''திறமையை எவ்வாறு பரிசோதிப்பது?'' என்று கேட்டான் மாணிக்கம்.

''இதோ வாளின் மூலம்தான்'' என்றான் சிங்கன்.

அங்கே கணீர் கணீர் என்ற வாளோசை கேட்டது. அவர்களிருவரும் வாள் மூலம் தங்கள் திறமையை நிலை நாட்ட முயல்வதை வந்தியத்தேவன் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

# 37. உறவுச் சிக்கல்கள்

ஒரு பகல், ஓர் இரவு கழிந்தது. அரசரை எதிர்பார்த்து இன்பவல்லியும், குந்தவ்வையும் குடிலில் காத்திருந்தனர். தான் தங்குவதற்குத் தனி வீடு தேவையில்லை என்று கூறி விட்டாள் குந்தவ்வை.

சிறிய, ஆனால் மிகத் தூய்மையாக வைக்கப்பட்டிருந்த இன்ப வல்லியின் குடில் இளையபிராட்டிக்கு மிகவும் பிடித்திருந்தது.

''இங்கேயே தங்கிவிட வேண்டும் என்ற ஆசை எனக்கு நேற்றிலிருந்து ஏற்பட்டு விட்டது. வெயிலின் கடுமை தெரியாதபடி சுற்றிலும் தோப்பு. தஞ்சையில் கூட இது போன்ற அழகிய குளத்தை நான் பார்த்ததில்லை. பறவைகளின் இனிய கீதம். ஆகா; அதனால் தான் இந்தக் கிராமத்தை விட்டு நீ வெளியே செல்ல எந்த முயற்சியும் எடுக்கவில்லை'' என்று இளையபிராட்டி மன நிறைவோடு கூறினாள்.

''எல்லாம் தாங்கள் ஏற்பாடு செய்த இடம்தானே அக்கா! நீங்கள் இங்கே தங்குவதென்றால் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி'' என்றாள் இன்பவல்லி.

இன்பவல்லி எந்தவித இரட்டை அர்த்தத்துடனும் சொல்ல வில்லை. ஆனால், அந்தச் சொற்கள் சுருக்கென்று இதயத்தில் முள் தைத்தது போல் குத்தின.

''இன்பவல்லி! என்னைப் பொறுத்துக் கொள். நாட்டின் நலனுக் காக அரச குடும்ப நலனுக்காகத்தான் நான் உன் வாழ்வில் குறுக்கிட் டேன். அவற்றை மறந்து விடு. உனக்குப் புதுவாழ்வு அளிக்கவே இன்று இங்கே வந்திருக்கிறேன்.''

இளையபிராட்டி கூறியவற்றைக் கேட்ட இன்பவல்லியின் மெய் சிலிர்த்தது.

''என் மகள் சக்ரவர்த்தியின் திருமகனைக் காதலிக்கிறாளா? அந்தச் செய்தி சக்ரவர்த்திக்குத் தெரியுமா?'' என்று இன்பவல்லி பதறினாள். இப்பொழுதே ஓடிச் சென்று தன் மகளிடம் அவளது நடவடிக்கை யில் உள்ள ஆபத்தான நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டது.

''அக்கா! என் மகள் இளவரசரைச் சந்தித்துப் பேசினாளா?'' - அவள் கேள்வியில் பரபரப்பு மிகுந்திருந்தது.

''ஐயோ! நடக்கக் கூடாதது நடந்து விட்டதா? முறை தவறிய செயல் ஏதாவது நடந்து விட்டதா? பூங்கொடிக்கு நான் அளித்திருந்த சுதந்தரம் எனக்கே தீங்காக முடிந்து விட்டதே? கால காலத்திற்கு எனக்கு அவப்பெயர் ஏற்படுமாறு என் மகள் செய்து விட்டாளா? நான் இனி என்ன செய்வேன்? அமைதியாக இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்தேன். என் மனத்தில் ஏற்பட்ட காயத்திற்கு மருந்திட்டுப்



பூசி ரணம் தெரியாமல் வாழ்ந்து வந்தேன். என்றேனும் ஒருநாள் என் வாழ்வில் வசந்தம் வரும் என்று நம்பி இருந்தேன். என்றாவது ஒருநாள் உங்கள் மனம் மாறும்; என்னை அழைத்துச் சக்ரவர்த்தியைச் சந்திக்க வைப்பீர்கள் என்று நம்பியிருந்தேன். ஆனால், இடையில் ஏற்பட்ட என் வக்கிர புத்தியால், என் கதையை என் மகளிடம் தெரிவித்தேன். ஆனால், முழுமையாகச் சொல்லவில்லை. இவ்வாறு தெளிவாகக் கூறாதது எவ்வளவு பெரிய தவறு என்பதை இப்போது தான் அறிந்து கொண்டேன். ஒருநாள் - ஒரே ஒருநாள் எனக்கு ஏற்பட்ட மன உளைச்சலால், ஆத்திரத்தால், வேதனையால் அரச குடும்பத்தினருக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்று என் மகளிடம் சொன்னேன். அவள் உடனே என் சொல்லை அப்படியே ஏற்று இந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டாள்.

''தஞ்சை மாளிகையில் பணிப் பெண்ணாகச் சேருவதற்கும் நான் தான் யோசனை கூறினேன். தங்குவதற்கான இடமும் கூறினேன். இளையபிராட்டியார் அவர்களே! என்னைப் பொறுத்தருளுங்கள். என் மகள் - இளவரசரிடையே ஏற்பட்டுள்ள முறையற்ற காதலை வளர விடக்கூடாது. சோழ சக்ரவர்த்தியை நான் காதலித்தபோது தாங்கள் ஒரு முக்கிய காரணத்திற்காகத் தடுத்தீர்கள். என்னைப் பிரித்தீர்கள். கடுமையாக நடந்து கொண்டதாக நான் அப்போது நினைத்தேன். இன்றைய நிலையில்தான், நீங்கள் மிக மிகக் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும். இப்போது ஏற்பட்டுள்ள பயங்கரமான சூழ்நிலை விலக தாங்கள்தான் உதவி செய்ய வேண்டும்'' - இன்பவல்லி விம்மினாள்.

இளையபிராட்டி மீண்டும் அவளுக்கு ஆறுதல் கூறினாள்.

''இன்பவல்லி! இன்னும் நீ குழந்தை போன்றே இருக்கிறாய். அழாதே. துயரப்படாதே. நானிருக்கிறேன், உன் பக்கம். இது வரை எல்லை மீறி எதும் நடந்து விடவில்லை'' என்று கூறித் தேற்றினாள்.

''மெய்யாகவா? நீங்கள் என் பக்கமிருக்கிறீர்களா? உறவுமுறை அறியாது தவறான சூழ்நிலையில் ஏற்பட்ட காதலைத் தடுக்க நீங்கள் உதவுவீர்களா?'' என்று இன்பவல்லி கேட்டாள்.

''கண்ணீரைத் துடைத்துக் கொள் இன்பவல்லி! உறுதியாக நான் உனக்கு உதவுவேன். உண்மை நிலையை நீ உணர்ந்து கொண்டால் போதும்.''

''என் மகளுடைய தவறான நடவடிக்கைத் தெரிந்து கொண்டு விட்டேன். இளவரசர் மதுரன் கரம் பிடிக்க அரசகுமாரிகளா கிடைக்க மாட்டார்கள்? என் மகளுக்கு உண்மை நிலை தெரியாது. அறியாமல் நடந்து கொண்டு விட்டாள்'' இன்பவல்லியின் கண்கள் கலங்கின.

''மதுரனுக்கு மட்டும் தெரியுமா? முல்லைத் தீவில் நடந்த சம்பவம் எதும் அவன் அறிய மாட்டான்.''*

''உனக்கு ஓர் அருமைப் பெண் பிறந்த செய்தியும் அவனுக்குத் தெரியாது'' - இளையபிராட்டி கூறிவரும்போது இன்பவல்லி பரபரப்புடன் மீண்டும் கேட்டாள்: ''சக்ரவர்த்திகளுக்குத் தெரியுமா?''

இளையபிராட்டி மறுமொழி கூறவில்லை. பேச்சின் போக்கை மாற்ற விரும்பினாள். ''நான் அறிந்தவரை மதுரன் இன்னும் சிறுவன் தான். அவன் மாவீரனாக இருக்கலாம்; பல போர்க்களங்களில் எதிரிகளை வென்றிருக்கலாம். ஆனால், காதல் பெண்கள் கடைக்கண் எதிரே அவன் தோற்று விடுகிறான். அவனுக்கு உடனே திருமணம் செய்து வைத்தாக வேண்டும். அவன் எதிரே மகத்தான கடமைகள் உள்ளன'' என்று இளையபிராட்டி சொல்லி வரும்போது, இன்பவல்லி குறுக்கிட்டாள்.

''இளையபிராட்டியார் அவர்களே! நான் இதுவரை இளவரசரை நேரே தரிசித்ததில்லை. அவர் அழகைப் பற்றி ஊர் உலகத்திலுள்ள வர்கள் வர்ணிக்கிறார்கள். எனக்கு அவரைப் பார்க்க வேண்டும் எனும் ஆவல் ஏற்படுகிறது'' என்றாள்.

''அவர்... ஆகா; என்ன மரியாதையான சொல்! நானும் என் தம்பியை அவர் என்றுதான் அழைக்க வேண்டியிருக்கிறது'' குந்தவ்வை நகைத்தாள்.

''இன்பவல்லி! மதுரனும் உன் மகன்தான். உனக்கு முன்பே, அருண்மொழியின் கரம் பிடித்த வானதி பெற்ற மகன். அவன் உன் வயிற்றில் பிறக்கவில்லை என்றாலும் அவன் உன் மகன்தான். உன் மகனை, உன் மகள் தன் சகோதரன் என்று அறிந்து கொள்ளாமல்...'' இளையபிராட்டி கூறும்போது இன்பவல்லி செவிகளை மூடிக் கொண்டாள்.

* இன்பவல்லி - அருண்மொழி இடையே ஏற்பட்ட தெய்விகக் காதலை விளக்கும் சம்பவங்களை விக்கிரமன் எழுதிய 'நந்திபுரத்து நாயகி'யில் காணலாம். (மூன்று பாகங்கள் ஆயிரம் பக்கங்களுக்கு மேல்)



''ஐயோ! சொல்லாதீர்கள். மற்றொரு முறை சொல்லாதீர்கள்... அக்னி ஆற்றில் விழ இருந்த என் கௌரவத்தைத் தக்க சமயத்தில் காப்பாற்றி விட்டீர்கள். என்னை எச்சரித்து விட்டீர்கள் அக்கா! உங்களை மறக்கவே மாட்டேன். நான் தங்கள் பாதங்களில் வீழ்ந்து...'' என்று கூறி, குந்தவ்வையின் பாதங்களைத் தொடச் சென்றவளை, இளையபிராட்டி தடுத்து, ''இன்பவல்லி! நானன்றோ உன்னை வேண்டிக் கேட்க வந்தேன். சூரிய குலத்திற்கு மாசு, இழுக்கு, களங்கம் ஏற்படாமல் நீ காப்பாற்ற வேண்டும் என்று உன்னை வேண்டிக் கேட்டுக் கொள்ளத்தானே நான் இங்கு வந்தேன். என் கோரிக்கையை நீ புரிந்து கொண்டதில் எனக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அரசருடன் உன் மகளும் உடன் வருகிறாள். அரசருக்கு உன்னை அறிமுகப்படுத்த அவள் வருகிறாள். இங்கே பெரும் அதிர்ச்சி இருவருக்கும் காத்திருக்கிறது. என் தம்பி அதை உணர்ந்திருக்கக் கூடும். ஆனால், உன் மகளிடம் நீ எப்படி எடுத்துச் செல்லப் போகிறாய்? அதுதான் எனக்குப் பெரிய கவலையாக இருக்கிறது'' என்று இளையபிராட்டி உணர்ச்சி மேலீட்டால் பேசும்போது அவள் குரல் தழுதழுத்தது.

## 38. இன்பவல்லி எங்கே?

அந்த அழகிய சிறு கிராமத்திற்குச் சோழ சக்ரவர்த்தி இராசராசர் சோழர் பரிவாரங்களின்றி, கட்டியங் கூறப்படாமல், முறையான பூரண கும்ப வரவேற்பில்லாமல், வீரர்கள் அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தும் வழக்கமான மரியாதை நிகழ்ச்சி யில்லாமல் வந்து சேர்ந்தார்.

இன்பவல்லியிடம் நடனம் பயிலும் மாணவியர் வேப்ப மர நிழலில் நின்று கொண்டிருந்தனர். எந்த நொடியிலும் தாங்கள் நடனமிட அழைக்கப்படலாம் என்று எதிர்பார்த்து அவர்கள் நின்றிருந்தனர்.

அன்று, அங்கே என்ன நிகழப் போகிறது என்றே அவர்களுக்குப் புரியவில்லை. சோழ சக்ரவர்த்திகள் வருகிறார்கள் என்பதை மட்டும்

அறிந்திருந்தனர். இன்பவல்லியும், இளையபிராட்டியும் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பதை அறிந்தனர்.

தங்கள் குரு, இன்பவல்லி வழக்கத்தை விட மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பதைத் தெரிந்து கொண்டனர்.

சோழ அரசருடன், இன்பவல்லியின் மகள் பூங்கொடி கம்பீரமாக இறங்குவதைச் சாளரத்தின் வழியே கண்டாள் இன்பவல்லி. பூங்கொடி மிகவும் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்துக் கொண்டு, ''அம்மா... அம்மா! இங்கே வந்து பாரேன், யார் வந்திருக்கிறார்கள் என்று'' - மகிழ்ச்சியுடன் கூவினாள். இன்பவல்லி இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டாள்.

இன்பவல்லியின் அருகே இளையபிராட்டி நின்று கொண்டிருப்பதைக் கண்ட பூங்கொடியின் முகம் மாறியது. மகிழ்ச்சி மறைந்தது. மலர்ந்திருந்த விழிகளில் அச்சம் குடி கொண்டது. தாயின் பின்புறம் நின்று கொண்டு இளையபிராட்டியை நோக்கினாள்.

''நான்தான், குந்தவ்வைதான் வந்திருக்கிறேன். நலமாயிருக்கிறாயா பூங்கொடி? தஞ்சையிலிருந்து இங்கு வர ஓரிரவு பகல் ஆகிவிட்டதா? நேற்று எங்கே தங்கினீர்கள்?'' என்று இளையபிராட்டி அவளைக் கேட்டாள்.

பூங்கொடி மறுமொழி கூறவில்லை. தாயை நோக்கி, ''அம்மா! உன்னைச் சந்திக்க சோழ நாட்டு மாமன்னர் வந்திருக்கிறார் அம்மா!'' என்று மிகவும் மெதுவாகக் கூறினாள்.

''அம்மா! அவரைச் சந்திக்கச் செல்லலாம், வா அம்மா!''

பூங்கொடி தாயின் கரத்தைப் பிடித்து அழைத்தாள்.

இன்பவல்லியின் முகத்தில் ஏற்பட்ட உணர்ச்சியைப் பார்த்துத் திடுக்கிட்டாள் பூங்கொடி.

''அம்மா! முகம் வாடியிருக்கிறதே ஏனம்மா?'' என்று கவலையுடன் கேட்டவள், இளையபிராட்டியை ஒருமுறை பார்த்து விட்டுத் தாயை நோக்கி, ''அம்மா! உங்கள் மனம் நோகும்படியாக யாராவது ஏதும் சொன்னார்களா?'' என்று கேட்டாள்.

''தங்களுக்கு அங்கே வர விருப்பமில்லை என்றால் நான் அரசரை இங்கே அழைத்து வருகிறேன்'' என்று புறப்பட்ட பூங்கொடியை இளையபிராட்டி தடுத்து, ''பூங்கொடி! நீ இங்கேயே இரு. நான் மன்னரை சந்தித்து, அவரை இங்கே அழைத்து வருகிறேன். உன் தாயிடம் நடந்த செய்திகளை விவரித்துப் பேசிக் கொண்டிரு'' என்று கூறிப் புறப்பட்டாள்.



இராசராச சோழ தேவர், அந்த சிறு குடிலில் தரையில் காலை நீட்டியவாறு இனிய தென்றலை ரசித்தவாறு உட்கார்ந்து கொண்டிருந்தார்.

''தம்பி!'' என்றழைத்தவாறு இளையபிராட்டி அந்தக் குடிலுக்குள் நுழைந்தாள்.

''தம்பி! எதிர்பாராத சம்பவம் ஒன்று இங்கே நடக்கப் போகிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு இன்பவல்லியை நீ சந்திக்கப் போகிறாய். உன்னிடமிருந்து அவளைப் பிரித்தேன். இப்போது நானே அவளைச் சேர்த்து வைக்கப் போகிறேன். இந்தச் சந்திப்பை நீ எதிர்பார்த்திருக்க மாட்டாய். உன் இதயத்தைத் திடப்படுத்திக் கொள். உணர்ச்சிவயப் படாதே. பல உண்மைகளை நீ அறிந்து கொள்ளப் போவதால் அதிர்ச்சியடையாதே'' என்றாள் இளையபிராட்டி.

''அக்கா! புதிர் போடுவது போல் பேசுகிறீர்களே! தஞ்சையில் மிக முக்கியமான காரியத்தையும் ஒதுக்கிவிட்டு நான் இங்கே வந்திருக்கிறேன். இங்கே இன்பவல்லி வசித்து வருகிறாள் என்று எனக்குத் தெரியும். நல்லவேளையாக நீங்களும் உடனிருக்கிறீர்கள்; இன்பவல்லியை உடனே தஞ்சைக்கு அழைத்து வர வேண்டும். அதற்காகத் தான் நான் வந்தேன்'' என்றார் இராசராசன்.

இளையபிராட்டியின் புருவங்கள் வியப்பால் உயர்ந்தன.

''உன்னை இங்கே அழைத்து வந்த பூங்கொடியைப் பற்றி உனக்குத் தெரியுமா?'' இளையபிராட்டி கேட்டாள்.

''தெரியும். நடனக் கலையில் சிறந்தவள். மாளிகையில் சிறிது நாள்கள் பணி புரிந்திருக்கிறாள். தன் தாயைப் பற்றி மிக உயர்வாகப் பேசினாள்...''

''அவ்வளவுதானா?''

இராசராசன் இதழ்களில் மெல்லிய புன்னகை அரும்பியது.

''இன்பவல்லியின் மகள் என்பது உனக்குத் தெரியாதா?'' - இளையபிராட்டி கேட்டாள்.

''ஆகா; தெரியும். தெரிந்துதான் நான் உடனே தஞ்சையினின்று புறப்பட்டேன். இடையே மிக முக்கிய செய்தியொன்றை ஒற்றர் தலைவர் தெரிவித்தார். அதையும் கேட்டு, நாளை அதுபற்றி முடிவெடுப்பதாகக் கூறி இங்கு விரைந்து வந்தேன்'' - இராசராசன் எந்தவிதப் பரபரப்புமின்றிப் பேசியது கேட்டு இளையபிராட்டி வியந்தாள்.

''ஓகோ! இன்பவல்லியைப் பல ஆண்டுகள் கழித்துச் சந்திக்கப் போவதை நீ அறிவாயா? பூங்கொடி உன் மகள் என்பதையும் அறிந்தே ஆவலுடன் இங்கே வந்திருக்கிறாயா?'' இளையபிராட்டி வியப்புடன் கேட்டாள். சோழ மன்னர் 'ஆம்' என்று தலையை அசைத்தார்.

இளையபிராட்டியின் முகத்தில் இப்போது கடுஞ்சினத்தின் பிரதிபலிப்பு தெரிந்தது.

''அருண்மொழி! எல்லாம் தெரிந்துதான் நீ இவ்வளவு அமைதியாக இருக்கிறாயா? பூங்கொடி உன் மகள் என்பதை அறிந்தும் உணர்ச்சியை அடக்கிக் கொண்டு உன்னால் எப்படி இருக்க முடிந்தது?'' இளையபிராட்டியின் குரலில் கடுமை இருந்தது.

இராசராசன் மெல்ல நகைத்தார்.

''நேற்றுதான் நான் அறிந்தேன். பரபரப்படைந்து உணர்ச்சி வயப்பட்டு என்ன பயன்? என்னைச் சந்திக்கப் போவது பற்றி இன்பவல்லி எந்தவிதக் கருத்தைத் தெரிவித்தாள்?'' என்று மிக அமைதியாகக் கேட்டார்.

இளையபிராட்டி, தன் இளவலுடைய முகத்தை உற்று நோக்கியவாறு சிறிது நேரமிருந்தாள். பிறகு, ''தம்பி! பூங்கொடி இன்பவல்லியின் மகள் என்பதை அறிந்த நீ, மதுரன்... பூங்கொடியுடன் நெருங்கிப் பழகுவதை ஏன் தடுக்கவில்லை?''

''மதுரனுக்கு நாட்டியக் கலையின் மீதுள்ள காதலைத் தடுப்பது சரியா?''

''மதுரன் நாட்டியக் கலையின் மீது காதல் கொள்ளவில்லை. தன் சகோதரி என்று தெரியாமல் பூங்கொடியின் மீது மதுரனுக்குக் காதல். நிலைமை விபரீதமாவதற்கு முன்பே இதை நான் தடுத்து விட்டேன். அறிய மாட்டாயா?'' இளையபிராட்டியின் குரல் தழுதழுத்தது.



இராசராசன் மறுமொழி கூறவில்லை. அவர் சிந்திக்கலானார். இளையபிராட்டி அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தாள்.

''இன்பவல்லியிடம் எல்லாவற்றையும் தெரிவித்து விட்டேன். இனி அவள் கவனித்துக் கொள்வாள். நாம் அடுத்துச் செய்ய வேண்டியவற்றைக் கவனிக்க வேண்டும்'' என்றாள் இளையபிராட்டி.

''திருமணம் முடிந்த மறுநாளே மதுரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட சோதிடர் நாளைக் குறித்து விட்டார். தஞ்சைக்குத் திரும்பியவுடன், விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும். அதற்கு முன்பாக சாளுக்கியர்களின் படையெடுப்பைத் தடுக்க மதுரன் படைகளுக்குத் தலைமை ஏற்றுச் செல்ல வேண்டும். தஞ்சையில் இன்பவல்லிக்குத் தனி மாளிகை கட்ட வேண்டும். என் மனக் கோயிலை நனவாக்கிப் பெருங்கோயில் எழுப்பும் பணியைத் தொடங்க வேண்டும். அந்தக் கோயிலில் நடனக் கூடம் அமைக்கும் பணியை இன்பவல்லியிடம் ஒப்படைக்கப் போகிறேன்'' என்று கூறி நிறுத்தி இராசராசன் இளையபிராட்டியின் முகத்தை நோக்கினார்.

இளையபிராட்டிக்கு நம்பிக்கை உதயமாயிற்று. புத்துணர்வு பூத்தது. ''இந்த ஆண்டு சதயத் திருநாள் கோலாகலமாகக் கொண்டாடப்படும். இன்பவல்லி கலந்து கொள்வதால் மேலும் சிறப்பாக அது அமையப் போகிறது'' என்றாள் இளையபிராட்டி.

''அடுத்த ஆண்டுச் சதயத் திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவோம். மதுரன் இளவரசனாகியிருப்பான். சாளுக்கியர்களை வென்றிருப்பான். பெரிய கோயில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கும்'' என்று கூறினார் இராசராசன்.

''தம்பி! நான் இன்பவல்லியை அழைத்து வருகிறேன்'' என்று கூறி இராசராசனின் முகத்தில் எழும் மாறுதலை நோக்கினாள்.

''இன்பவல்லியைச் சந்திக்க நானே அங்கு வருகிறேன்'' என்று புறப்பட்டார் சோழ மன்னர்.

இன்பவல்லியையும், தன் மகள் பூங்கொடியையும் சந்திக்கப் போகிறோம் என்ற ஆவல் பொங்கி நிற்க, இளையபிராட்டி முன் செல்ல, இராசராசன் குடிலை நோக்கிச் சென்றார். இன்பவல்லியின் குடில் திறந்திருந்தது. குடிலின் வாயிற்புறத்தே நின்று, ''இன்பவல்லி! இன்பவல்லி! யார் வந்திருக்கிறார் என்று வெளியில் வந்து பார். பூங்கொடி! உன் தாயை அழைத்துக் கொண்டு விரைவில் வா'' என்று குரல் கொடுத்தாள்.

மறுமொழி இல்லை. எவ்வித எதிரொலியும் இல்லை.

''இன்பவல்லி!'', ''பூங்கொடி!'', ''இன்பவல்லி!'' என்று இளைய பிராட்டி அழைத்தவாறு குடிலுக்குள் விரைந்தாள்.

இன்பவல்லியைக் காணவில்லை. அவள் மகள் பூங்கொடியையும் காணவில்லை.

குந்தவ்வை பரபரப்புடன் அவளைத் தேடினாள். அங்கே மாடத்தில் முருகன் சிலையைக் கண்டாள். முருகன் சிலைக்கருகே ஓர் ஓலை இருந்தது.

அதை எடுத்துப் படித்த இளையபிராட்டி, ''ஓ! இன்பவல்லி நீ போகக்கூடாது'' என்று கூவினாள்.

## 39. 'பூங்கொடி என் தங்கையா?'

இரு இளைஞர்களும் தங்கள் திறமையைப் புலப்படுத்த வாட்போர் நிகழ்த்திக் கொண்டிருந்தபோது, வந்தியத்தேவன் வியப்புடன் அவர்களுடைய ஆற்றலைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

சிங்கனை அவர் கூர்ந்து கவனித்தார். திடீரென்று தனது வாளை உருவி அவர்களிடையே குறுக்கே பாய்ந்து அவர்கள் வாளின் மீது மோதினார்.

மாணிக்கத்தின் வாள் அவன் கரத்தினின்று நழுவி, துள்ளிச் சென்று தொலைவில் வீழ்ந்தது. திகைத்து நின்ற மாணிக்கத்தை நோக்கி, ''உம்... சென்று எடுத்து வா வாளை!'' என்று கட்டளையிட்டார் வல்லவரையர்.

சிங்கன் திகைத்து நின்றான். வல்லவரையர் இடையே புகுந்து ஏன் வாளைத் தட்டினார் என்பது புரியாமல் வாளை எடுத்து வர மாணிக்கம் விரைந்தான்.

''மதுரா! போதும் மாறுவேடம். வேடம் கலைத்து வெளியே இளவரசராக வா!'' என்றார்.



சிங்கன் ஒருகணம் திகைத்தான். ''மதுரனா? என் பெயர் சிங்கன்...'' என்று தடுமாறும் சொற்களுடன் கூறிய அவனை நோக்கி, ''உம்... ஒரே ஒருநாள் ஏமாந்து விட்டேன். தொடர்ந்து ஏமாந்தால் என் ஆற்றலில் எனக்கே சந்தேகம் வந்துவிடும்'' என்ற வல்லவரையர், ''நேற்றே எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. சற்று முன்பு அது உறுதிப் படுத்தி விட்டது. உன் வாள் வீச்சு முறையைக் கூர்ந்து கவனித்தேன். பாதங்களை எடுத்து வைக்கும் முறையைக் கவனித்தேன். வாள் சுழற்றும் இலாகவத்தைக் கூர்ந்து நோக்கினேன்...'' என்று சொல்லி வரும்போது சிங்கன் சிரித்தான்.

வாளை உறையுள் போட்டு இருகரம் கூப்பி, ''வல்லவரையரே! மாமனிதர் நீர்! உங்கள் அறிவுத் திறமையின் எதிரே என் மாய உருமாற்றங்கள் செல்லுபடியாகா!'' என்றான்.

''மாணிக்கம் வருவதற்குள் பேசி விடுவோம்... மதுரா! ஏன் இத்தகைய உருவ மாற்றம்? விழிகளில் சோகம் ஏன்? எங்கே புறப்பட்டு விட்டாய்? என்னைச் சந்தித்திராவிட்டால் வேறு எங்கே செல்வதாகத் திட்டம்?'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு, மதுரனின் மனநிலையை அறிய முயன்றார்.

''தங்களைத் தொடர்ந்தே வருகிறேன். பிரம்மதேசத்திற்கு வந்து தங்களுடன் தங்கிவிட முடிவு செய்தேன். தஞ்சையில் இனி ஒரு கணம் கூட எனக்கு இருக்கப் பிடிக்கவில்லை. வாழ்க்கையே வெறுத்து விட்டது. பேரரசரின் மகனாகப் பிறந்து என்ன பலன்? என் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாத ஓர் எளிய சோழ நாட்டுக் குடிமகன்தான் இனி நான்'' என்றான்.

மாணிக்கம் வாளைக் குனிந்து எடுத்து அவர்களை நோக்கி மெல்ல வந்து கொண்டிருந்தான்.

''வல்லவரையரே! என் அடையாளத்தை இப்போது யாரிடமும் தெரிவிக்க வேண்டாம். சோழ இளவரசர் இங்கு வந்திருக்கிறார் என்ற செய்தி சுற்றும் முற்றும் பரவி விடும்... நான் எடுத்த காரியம் நிறைவேறாமல் போய் விடும்'' என்று அவர் கரங்களைப் பற்றினான்.

வல்லவரையர் ஒரு கணம் பேச முடியாமல் நின்றார்.

''சரி, சரி... மாணிக்கத்தை அனுப்பி விட்டு நாம் பேசுவோம். இன்னும் சிறிது நேரத்திற்கு நீ சிங்கனாகவே இரு. எப்போதும் நீ சோழர் குலச் சிங்கம்தான்!'' என்று கூறி வல்லவரையர் மெல்லச் சிரித்தார்.

கொள்ளிடம் ஆற்றில் சுழலுடன் சென்ற வெள்ளம் சற்று குறைந்தது. படகுகள் செல்லத் தொடங்கின.

கிராம மக்கள் வல்லவரையரை வழி அனுப்பினர். சிங்கனும் வல்லவரையரும் படகில் ஏறுவதைக் கண்டவர்கள் திகைத்தனர்.

மாணிக்கம் குரல் தழுதழுக்க, ''நானும் சிங்கனும் சமமாகத் திறமையைப் புலப்படுத்தினோம். நீங்கள் இடையே குறுக்கிடா திருந்தால் நான் வென்றிக்கக்கூடும். அதனால் நான் பிரம்மதேசம் செல்லும் வாய்ப்பை இழந்து விட்டேன். சிங்கனை மட்டும் அழைத்துச் செல்கிறீர்களே!'' என்றான்.

''மாணிக்கம்! கவலைப்படாதே! விரைவில் உன்னைத் தஞ்சைக்கு வரவழைத்துத் தகுந்த பதவியை உனக்கு அளிக்கச் செய்கிறேன்!'' என்று அவனைச் சமாதானப்படுத்தினார்.

படகு நகர்ந்தது. கரையிலிருந்து மக்கள் கையசைத்து அவர்களுக்கு விடையளித்தனர். இரண்டு நாள்களில் கிராம மக்கள் மறக்க முடியாத அளவிற்குப் பாசத்தைப் பொழிந்து விட்டதை நினைக்கும் போது வல்லவரையர் கண்களில் நீர் தளும்பி நின்றது.

கண்களை மெல்ல மூடித் திறந்த வல்லவரையர் மதுரனை நோக்கி, மாறுவேடத்தில் புறப்பட்ட காரணத்தைக் கேட்க மெல்லப் பேச்சுக் கொடுத்தார்.

இளையபிராட்டியும் அரசரும் சேர்ந்து தன் காதலுக்குக் குறுக்கே நிற்பதாகக் குற்றம் சாட்டினான் மதுரன்.

மதுரன் பூங்கொடியைக் குறித்து வல்லவரையரிடம் எடுத்துச் சொல்லத் தொடங்கினான்.

வல்லவரையர் கையமர்த்தி, ''மதுரா! நடந்த நிகழ்ச்சிகளும், செய்தியும் நான் அறிவேன். உன் தந்தை மீது நீ கோபம் கொள்வது சரியன்று'' என்று கூறியபோது மதுரன் குறுக்கிட்டு, ''பூங்கொடியும் என் தந்தையும் செல்லுமிடத்திற்கு என்னை வரக் கூடாது என்று இளையபிராட்டி கட்டளையிட்டு விட்டார். என் காதலின் குறுக்கே நிற்பது என்று அவர்கள் முடிவு செய்து விட்டனர். இனி எனக்குத் தஞ்சையில் என்ன வேலை?'' என்றான்.

வல்லவரையர் சிரித்தார். ''அப்படி நீ ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யக்கூடாது. மதுரா! உன் காதலுக்கு இளையபிராட்டி குறுக்கே



நிற்பதாக எண்ணி நான் கோபப்பட்டேன். ஆனால், முழு உண்மையை அறிந்தவுடன் எனக்கேற்பட்ட அதிர்ச்சிக்கு அளவில்லை'' என்றார்.

''அதிர்ச்சியா?'' - மதுரன் கேட்டான்.

''ஆம்; அதிர்ச்சிதான். இளையபிராட்டி மீது எனக்கிருந்த கோபம் தணிந்தது. எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து அவள் உன்னைக் காப்பாற்றியிருக்கிறாள்'' என்று அவர் கூறியபோது -

மதுரன் வியப்புற்று, ''ஆபத்தா?'' என்று கேட்டான்.

வல்லவரையர் மிக அமைதியாக நடந்த கதையை எல்லாம் சொன்னார். மதுரனின் தந்தை அருண்மொழி முல்லைத் தீவிற்குச் சென்றதிலிருந்து அங்கு நடந்த சம்பவங்களைக் கூறினார். இன்பவல்லியைச் சந்தித்ததையும், அவர் மீது சோழ அரசர் என்று தெரியாமல் காதல் கொண்டதையும் கூறினார். அருண்மொழி - இன்பவல்லி காதலின் சின்னமாகப் பூங்கொடி பிறந்ததையும் சொன்னார். அவர்கள் இருவரையும் இளையபிராட்டி பிரித்ததையும் அவர் சொல்லத் தவறவில்லை.

மதுரன் பரபரப்படைந்தான். ''என்ன...? பூங்கொடி என் தந்தையின் மகளா?'' என்று கேட்டான். அவன் உடல் நடுங்கியது. இரு கரங்களாலும் முகத்தை மூடிக் கொண்டு தலையைக் குனிந்தவாறு விம்மினான்.

''மதுரா! என்ன இது? சிறு குழந்தையைப் போல அழலாமா? நீ செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன... மாவீரனான நீ போர்க்களத்திலே பல வித்தைகளைப் புரியப் போகிறாய்... உற்சாகம் கொள்! நிமிர்ந்து உட்கார்! நடந்ததைக் கனவு போல் நினைத்து மறந்து விடு!'' என்று உற்சாகமாகப் பேசி அவன் முதுகை அன்புடன் தடவினார்.

''சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்ல எந்தக் கணமும் சக்ரவர்த்திகளிடமிருந்து கட்டளை வரலாம். உள்ளத்தில் ஏற்படும் சோர்வு தோல்விக்கு முதற்படியாகும் மதுரா! தஞ்சைக்கு உடனே திரும்பிச் செல்'' என்றார்.

மதுரன் தலையசைத்தான். ''முடியாது... முடியாது. தஞ்சைக்குத் திரும்பப் போவதில்லை. போர் என்ற பேச்சை இனி என்னிடம் பேசக் கூடாது. பிரம்மதேசத்தில் தங்களுடன் சில நாள்கள் தங்கியிருந்த பிறகு என் வழியே செல்லப் போகிறேன்'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினான்.

''உன் வழியா? அது எந்த வழி?'' - வல்லவரையர் நகைத்தவாறு கேட்டார்.

''தங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது. எனக்கோ வேதனை...'' என்று எரிச்சலுடன் கூறினான் மதுரன்.

''சரி... சரி - உன் வழி என்றாயே... அது எந்த வழி?'' வல்லவரையர் மீண்டும் கேட்டார்.

''நான் துறவியாகப் போகிறேன்... அறநெறியே என் வழி...'' என்றான் மதுரன்.

வல்லவரையர் மிகப் பெரிதாகச் சிரித்தார். ''துறவியாகவா? சோழ குலத்தில் கண்டராதித்தர் ஒருவர்தான் அரசபோகத்தை விட்டு சிவநேயச் செல்வராக வாழ்ந்து, பிறகு மேற்குத் திசையை நோக்கிச் சென்றாராம். அதுவும் திருமணம் செய்து ஆண்டு அனுபவித்து, வாரிசைப் பெற்றெடுத்த பிறகே சென்றார். நீயும் அழகிய இளவரசியை மணந்து கொண்டு ஆண்டு அனுபவித்துப் பிறகு துறவியாகவோ, பிட்சுவாகவோ மாறிவிடு! உன்னையே எண்ணி எண்ணிப் பழுவூர்ப் பெண் கோதை ஏங்கிக் கொண்டிருக்கிறாள். நீ துறவியாகி விட்டால் அவளும் துறவியாகி விடுவாள். நானும் துறவுக் கோலம் பூண்டு விடுவேன். சோழ நாட்டில் எங்கும் காவி உடைதான்!'' என்றார். மதுரன் குபீரெனச் சிரித்து விட்டான்.

பிரம்மதேசம் சென்று இரண்டு நாள்கள் மதுரன் அமைதியாக வல்லவரையருடைய புதிய மாளிகையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும்பொழுது, தஞ்சையினின்று சோழ வீரர்கள் செய்தி கொண்டு வந்தனர்.

'மதுரன் தஞ்சையை விட்டுப் புறப்பட்டுச் சென்ற இடம் தெரியவில்லை. சாளுக்கியர்களின் படைகள் சோழ நாட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டன. உடனே காஞ்சிக்குச் செல்லுங்கள். சோழர் படைகள் காஞ்சியை வந்தடையும். நானே படைகளுக்குத் தலைமை பூண்டு வருகிறேன். அங்கே உங்களைச் சந்திக்கிறேன். படைகளுடன் நீங்களும் புறப்படச் சித்தமாயிருங்கள்' என்று சோழ மாமன்னர் வல்லவரையருக்கு செய்தி அனுப்பியிருந்தார்.

''மதுரா! இனியும் தாமதிக்கக்கூடாது. சக்ரவர்த்திகளே படைக்குத் தலைமை தாங்கி வருகிறாராம். உடல்நலம் தேறி ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டிய வயதில், அவருக்கு மன வேதனையையும் உடல்



வேதனையையும் நீ தரக்கூடாது. உடனே புறப்படு. சாளுக்கியர்கள் மீது படையெடுக்கும் கடைசிப் போராக இது அமையட்டும்! மற்ற போர்க்களங்களிலே உன் திறமையைப் புலப்படுத்தி, வெற்றியை நிலை நாட்டியதை விட, இந்த போர் உன் மகுடத்தில் பதித்த ரத்தினமாக அமையட்டும், மதுரா! உடனே புறப்படு...'' என்று வல்லவரையர் மதுரனை வற்புறுத்தினார்.

மதுரன் தலையை அசைத்தான். ''என் மனம் என்னபாடு பட்டிருக்கும்? இப்போதும் நான் படும் வேதனை...''

''மதுரா! உனக்கு ஏற்பட்ட மனவேதனை நீயே ஏற்படுத்திக் கொண்டது. அது ஒரு மாயை. கானல் நீர். அதை நீ புரிந்து கொண்டு விட்டாய். ஆனால், உன் தந்தை இதுவரை அடைந்திருக்கும் மன வேதனை சொல்லி முடியாது... வாழ்க்கை என்பதை இனிதான் நீ உணரப் போகிறாய். ஒன்றை நீ எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். சொந்த வாழ்க்கையை விட நாட்டின் நலம்தான் மிக முக்கியம் என்பதை நீ உணர வேண்டும். தாமதப்படுத்தாதே. உடனே புறப்படு!'' என்று வல்லவரையர் வற்புறுத்தினார்.

''வல்லவரையரே! நான் மனம் விட்டுப் பேசுகிறேன், பிரம்மதேசம் என் மனத்தை மிகவும் கவர்ந்து விட்டது. இந்த ஊரை விட்டுப் பிரிய எனக்கு மனமே இல்லை...'' என்று கூறும்போது பாச உணர்வு அவனிடம் மிகுந்திருந்தது.

வல்லவரையர் ஒருகணம் சிந்தித்தார். ''மதுரா! நானும் தஞ்சைக்கு வருகிறேன். உடனே புறப்படு'' என்றார்.

''நீங்களும் வருகிறீர்களா?'' என்று மதுரன் ஆவலுடன் கேட்டான்.

''ஆமாம், போருக்குப் புறப்படுவதற்கு முன்பு சக்ரவர்த்திகளுடன் கலந்தாலோசிக்க வேண்டியவை பல உள்ளன. அதனால் நானும் வருகிறேன்'' என்றார்.

வல்லவரையரும், மதுரனும் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் சிதம்பரத்தில் தங்க நினைத்தனர். பிறகு சிதம்பரத்தினின்று வீர நாராயணபுரம் ஏரிக்கரை வழியாக தஞ்சைக்குக் குறுக்கு வழியாகச் செல்லத் திட்டமிட்டனர்.

தில்லைச் சிற்றம்பலம் நகரம் பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. இராசராச சோழர் படை, பரிவாரங்களுடன் சிதம்பரத்திற்கு வந்திருப்பதாக அறிந்த வல்லவரையர் வியப்புற்றார்.

மதுரனும் வல்லவரையரும் இராசராச சோழ தேவரைச் சந்திக்க விரைந்தனர்.

## 40. 'இதோ என் வாள்!'

வல்லவரையர் வந்தியத்தேவனையும், மகன் மதுரனையும் சிதம்பரத்தில் கண்டபோது சோழ சக்ரவர்த்தி இராசராச சோழர் ஒரு கணம் வியப்புற்றார்.

அவர்கள் இருவரையும் அங்கே சந்திக்க முடியும் என்று அவர் நினைக்கவில்லை. வாழ்நாளில் பல இடர்களையும் துன்பங்களையும் சந்தித்தபோதும் மனங்கலங்காத மாவீரர், மதுரனைக் காணாததால் கடந்த சில நாள்களாக மிகுந்த மனவேதனையுற்றிருந்தார்.

முதுமை வந்தணைத்திருந்த அந்தக் காலப்போதில் மனம் நிம்மதியின்றித் தவித்தது. தஞ்சையில் சிவபெருமானுக்குப் பெரிய - மகத்தான - மாபெரும் கோயில் எழுப்ப வேண்டும் என்றெண்ணி அதற்கான திட்டங்களை வகுத்து, அந்தப் பணியைத் தொடங்க வேண்டும் என்ற சிந்தனையில் எப்போதும் ஆழ்ந்திருந்த அவருடைய மனம் பல காரணங்களால் சலனமடைந்தது.

சாளுக்கியர்களின் போர்க் கோலத்தைப் பற்றி அவர் கவலைப் படவில்லை. அருமைப் புதல்வன் மாவீரன் மதுரன் சாளுக்கியர்கள் கொற்றம் ஒடுக்கி விடுவான் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. ஆனால், மதுரனின் அண்மைக்காலப் போக்கு அவருடைய மனத்தில் நிம்மதியை அளிக்கவில்லை. ஓர் இளம் நாட்டியப் பெண்ணிடம் மனத்தைப் பறி கொடுக்கிறான் என்ற செய்தி அவரைத் திடுக்கிட வைத்தது. ஆனால், மனக் கலக்கத்தை வெளியே புலப்படுத்திக் கொள்ளாதிருந்தார்.

இளையபிராட்டி அந்தச் சிக்கலிலிருந்து மதுரனை விடுவித்து விடுவாள் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. அவர் நம்பிக்கை வீண் போகவில்லை. அவருடைய அருமை அக்கையார் குந்தவ்வை தேவி மதுரனுக்கு ஏற்படவிருந்த மாபெரும் மாசு நிறைந்த அவப்



பெயரிலிருந்து அவனை விடுவித்தாள். சோழ அரச குலத்திற்கு ஏற்படவிருந்த அவமானத்திலிருந்து காப்பாற்றினாள். ஆனால், மதுரனைக் காணவில்லை. சக்ரவர்த்தியிடம் சொல்லிக் கொள்ளாமல் மதுரன் எங்கோ சென்று விட்டான். அவனுடைய செயல் இராசராசர் உள்ளத்தில் பெருங்கவலையை ஏற்படுத்தியது.

அரச குலத்தவர்கள் தங்கள் விருப்பப்படி எதும் செய்து கொள்ளக் கூடாது. நாட்டின் நலனையும் மக்கள் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதற்காக எத்தகைய தியாகம் செய்வதென்றாலும் ஆயத்தமாயிருக்க வேண்டும். நாட்டின் நலனுக்காக தங்கள் சுக துக்கங்களையும் விட்டுக் கொடுக்க வேண்டும். இவை மதுரனுக்குப் புரியவில்லையோ!

'இன்னும் சில நாள்களில் சோழ நாட்டின் இளவரசராகப் போகிறான். இன்னும் ஒருபடி மேலே சென்று அரசு ஆணைகளை இட அவனுக்கே உரிமையை அளிக்கப் போவதாக நான் முடிவு செய்துள்ளேன். இந்த நிலையில் அவன் எங்கோ சென்று விட்டானே? நாட்டின் தலைவாயிலில் சாளுக்கியர்கள் மிகத் துணிவுடன் வந்து நிற்கிறார்கள். அவர்களை முறியடிக்க வேண்டும் என்ற கடமையை மனத்தில் கொள்ளாமல் தன்னுடைய சொந்தக் காரணத்திற்காக கோபம் கொண்டு எங்கோ சென்று விட்டானே?'

ஒற்றர்களால் அவன் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. 'சோழ நாட்டு ஒற்றர் படைகளின் திறமை குறைந்து விட்டதா?' என இராசராசர் மனத்திற்குள்ளேயே எண்ணி நொந்தார்.

'இன்பவல்லி!' - இராசராசர் ஒருமுறை அவளுடைய இனிய பெயரை முணுமுணுத்துக் கொண்டார்.

'பல ஆண்டுகளுக்குப் பிறகு இனியவளைச் சந்திக்க முடியும் என்ற ஆவலுடன் வந்தேன். இன்பவல்லியின் கலைத் திறமையை முழு அளவுக்குப் பயன்படுத்த எண்ணினேன். என் மகள்தான் பூங்கொடி என்பதறிந்தபோது எனக்கேற்பட்ட மகிழ்ச்சியை நான் யாரிடம் சொல்ல முடியும்? இன்பவல்லிக்கு நான் தீங்கிழைத்து விட்டேன். என் அக்கையாரின் திட்டத்தில் நியாயம் இருக்கிறது என்றெண்ணி இன்பவல்லியைப் பிரிந்து வாழச் சம்மதித்தேன். சோழ நாட்டின் பல சீர்திருத்தங்களை நிறைவேற்றிய பிறகு, பகைவர்களையெல்லாம் வென்ற பிறகு, திருக்கோயில்களை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபடும்போது இன்பவல்லியைச் சந்தித்து அவளுக்குரிய

இடத்தை அளிப்போம் என்றெண்ணினேன். என்னை நானே சோதனை செய்து கொண்டேன். காமத்திற்கு மனத்தில் இடமில்லை; கலைக்குத்தான் இனி இடம் என்று உறுதி செய்து கொண்ட பிறகு இன்பவல்லியுடன் சேர்ந்து வாழ்வோம் என்று முடிவு செய்து கொண்டேன். மதுரனுக்கு ஆட்சியில் முழு உரிமை அளித்துப் பின் வாழ்நாளில் மீதி நாள்களைப் பெரிய கோயில் கட்டுவதில் கழிப்போம் என்றெல்லாம் திட்டமிட்டேன். எல்லாம் கனவாகி விட்டதா? நினைத்ததையெல்லாம் முடித்து வெற்றி கண்ட எனக்குக் கடைசி காலத்தில் இப்படியொரு தோல்வியா? மதுரா! காதல் வெறியில் கடமையை நீ மறக்கலாமா? இளம் பருவத்திலேயே போர்க்களங்களில் வெற்றி கண்ட நீ இப்பொழுது சாளுக்கியர்களை ஒடுக்கப் படையெடுத்துச் செல்ல முனையாமல் எங்கோ சென்று விட்டாய். நீ சிறுவனல்லன். வருங்கால சோழ நாடே உன் கரங்களில் தாம். ஆனால், ஒன்றை மட்டும் நீ உறுதியாக நினைத்துக் கொள்: இந்த இராசராசன் யாருக்கும் அஞ்ச மாட்டான்! மதுரா! நீ கண் காணாது சென்றுவிட்டதால் நான் புத்திரசோகம் கொண்டு விடுவேன் என்று நினைக்காதே. சாளுக்கியர் மீது படையெடுத்துச் செல்லும் மனவலிமை எனக்கு இருக்கிறது. உடல் வலிமையும் குறைந்து விடவில்லை. நானே முன்னின்று படைகளுக்குத் தலைமை வகித்துச் சென்று வெற்றிக் கொடியை நாட்டுவேன்.'

இராசராச சோழர் நெடுநேரம் மனப் போராட்டத்தில் ஈடு பட்டார். தனக்குத்தானே கேள்வி கேட்டுக் கொண்டார். கோபப் பட்டார். சிரித்தார். சீறினார். இளகியிருந்த அவர் உணர்ச்சிகள் இறுகின. ஒரு திடமான முடிவிற்கு வந்தார்.

அரசுப் பிரதானிகளுக்குச் சொல்லியனுப்பினார். திருமந்திர ஓலை நாயகத்தை வரவழைத்தார். வல்லவரையர் பிரம்மதேசம் போய்ச் சேர்ந்திருப்பார் என்ற எண்ணத்தில் அவருக்குச் செய்திகளை அங்கு அனுப்பினார்.

படைத்தலைவர் கிருஷ்ணன் ராமன் நோய்வாய்ப்பட்டிருப்பதால், தாமே படைகளுக்குத் தலைமை வகித்துச் செல்வதென முடிவு செய்து படைகளைத் திரட்ட உத்திரவிட்டார்.

இராசராச தேவர் தலைமை தாங்கிப் படை வீரர்களுடன் வாதாபி நோக்கிப் படையெடுத்துப் புறப்பட்டார். இடையே சோழர்கள் குல தெய்வம் தில்லைச் சிற்றம்பலத்து ஆடவல்லானைத் தரிசிக்க விரும்பிச் சிதம்பரத்தில் தங்கினார்.



வல்லவரையர் வந்தியத்தேவனும், மதுரனும் தன்னைச் சந்திக்க அங்கே வருவார்கள் என்று இராசராசர் எதிர்பார்க்கவில்லை.

மதுரனைச் சந்தித்தவுடனேயே இராசராசரின் கோபதாபங்கள் எல்லாம் பறந்தோடி விட்டன.

தந்தையை நோக்கிப் பாய்ந்து சென்று அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி அவரை ஆரத் தழுவிக் கொண்டான் மதுரன்.

உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் தந்தை, தனயன் இருவர் விழிகளினின்றும் நீர்த் துளிகள் பெருகின.

வல்லவரையர் மெல்லத் தன் விழிகளை மூடி, கலங்கிய கண்ணீரைத் தடுக்க முயன்றார்.

இராசராசனும் மதுரனும் சிறிது நேரம் மௌன மொழியில் பேசிக் கொண்டனர்.

''தங்கள் மகனைத் தங்களிடம் ஒப்படைத்து விட்டேன்'' என்று வல்லவரையர் மெல்லிய சிரிப்புடன் பேசி அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தார்.

''வல்லவரையரே! தங்களுக்குச் செய்தியொன்று அனுப்பியிருந்தேன்; கிடைத்ததா? வீரர்களை ஆயத்தமாக இருக்கச் சொல்லியிருக்கிறீர்களா? பல போர்க் களங்களுக்கு நாமிருவரும் இணைந்தே சென்றிருக்கிறோம். இப்போதும் அதுபோலவே செல்வோம். புறப்படலாமல்லவா?'' என்றார்.

''இல்லை... இல்லை... என்னைப் பொறுத்தருளுங்கள் அரசே! முன்பே தங்களிடம் சொல்லியிருக்கிறேன்; இனி வாளைத் தொடுவதில்லை என்று'' - வல்லவரையர் கூறினர்.

''வல்லவரையர் சபதமா?'' என்று கேட்ட இராசராசர், ''நீங்கள் மதுரனின் போக்கை ஆதரிக்கிறீர்கள் என்பதை நானறிவேன். இளையபிராட்டியாருக்கும் தங்களுக்கும் கருத்து வேற்றுமை அதிகமாகி வருகிறது என்பதையும் உணர்ந்தேன். பிரம்மதேசத்திற்கு நான் விஜயம் செய்து பல ஆண்டுகள் ஆகின்றன. இப்போது தங்கள் புதல்வியையும், தங்களை மனைவியையும் சந்திக்கும் நல்வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. தங்கள் மகளை மதுரனுக்கு மணம் புரிவிக்க நான் ஒப்பவில்லை என்ற குறை தங்களுக்கு இருக்கிறது. பட்டத்து இளவரசியாக அவளை நான் ஏற்க இயலாவிடினும், மதுரன் விரும்பினால் தங்கள் மகளை அவன் மணம் புரிந்து கொள்வதில் எனக்கு எந்தவிதக் கருத்து வேற்றுமையும் இல்லை என்பதை நான் முன்பே சொல்லியிருக்க வேண்டும். தக்கபோதில்

தெரிவிக்க எண்ணியிருந்த என் மௌனம் தாங்கள் இத்தகைய முடிவை மேற்கொள்ளச் செய்து விட்டது. இப்போது சொல்கிறேன்; வாதாபிப் படையெடுப்பை நான் முடித்துத் திரும்பி வருகிறேன்; இளவரசுப் பட்டம் சூட்டும் விழாவும் மதுரனுக்கு நடைபெற்று முடிந்துவிடும். பிறகு நல்ல நாள் பார்த்துத் தங்கள் மகள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்து கொள்வோம்'' என்று கூறி வரும் பொழுது வல்லவரையர் குறுக்கிட்டு -

''சக்ரவர்த்திகளே! பொறுத்தருளுங்கள். என் மகள் திருமணத்தைப் பற்றி இப்போது நான் எதும் முடிவெடுக்கவில்லை. அவள் சிறியவள். இன்னும் உலகைப் புரிந்து கொள்ளாதவள். இறைவன் அவளுக்கென்று ஓர் இளவரசனை, ஒரு வீரனை எங்காவது பிறக்கச் செய்திருக்காமலா இருக்கப் போகிறான்? நாம் மேலே நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசுவோம்'' என்று கூறும்போது இராசராசர் குறுக்கிட்டார்...

''வல்லவரையரே! நீங்கள் என்னுடைய வராவிடில் நான் போர்க் களம் செல்லப் போவதில்லை. சாளுக்கியப் படைகள் முன்னேறி வரட்டும். காஞ்சியைக் கைப்பற்றட்டும். அங்கே மகுடாபிடேகம் செய்து கொள்ளட்டும். பிறகு தில்லைச் சிற்றம்பலத்துப் பொற் தகடுகளைப் பெயர்த்துச் செல்லட்டும். தஞ்சைக் கோட்டையை அழிக்கட்டும். சோழர்களே எப்போதும் வாதாபியைத் தாக்க வேண்டுமா? எப்போதும் சோழர்களிடம் சாளுக்கியர்கள் தோற்க வேண்டுமா? ஒரு தடவையாவது அவர்களுக்கும் வாய்ப்பளிப்போம். கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் நமது தோல்வி எழுதப்படட்டும். 'இராசராசன் என்றொரு சோழ மன்னனிருந்தான். எட்டுத் திக்குகளிலும் சென்று புலிக் கொடியை நாட்டிய செருக்கில் மதியிழந்தான். அவனுக்கு ஓர் உற்ற நண்பர். வல்லவரையர் வந்தியத்தேவன். அவருக்கு நண்பர் மட்டுமல்லர்; சகோதரியின் கணவரும் கூட. அவர்கூட உதவ முன் வரவில்லை. இராசராசனின் கடைசிக் காலத்தில் அவருடைய மகனும் ஒத்துழைக்கவில்லை. அந்த இராசராசன் குடி மக்களிடம் மிக நல்லவர் என்று பெயரெடுத்தவர். அவருக்குக் கலை, இலக்கியத்தின் மீது ஆர்வம் அதிகம். மூவர் பாடிய தேவாரப் பதிகங்களை முறைப்படுத்தினார். சோழ நாடெங்கும் கோயில் திருப்பணிகளைச் செய்தார். கடல் கடந்த நாடுகளுக்குச் சென்றபோது அங்கு பெரிய பெரிய கோயில்களை, பெரிய பெரிய சிலைகளைக் கண்டார். அதுபோன்று தன் திருநாட்டிலும் மிகப் பெரிய கோயில் கட்ட ஆசை கொண்டார்.



அந்தக் கோயிலில் சித்திரக்கூடம் அமைக்க விரும்பினார். நடனக் கலையை வளர்க்க நடனத் தோற்றங்களைச் சிற்பங்களாக வடிக்க விரும்பினார். அவருடைய கலைக் கனவை நனவாக்கக் காதலி கிடைத்தாள். அவளைப் பிரித்துத் தனியே வாடச் செய்தார். அந்தக் கலைக் காதலியின் பெண்ணைத் தன் மகள் என்று உணரக்கூட அவருக்கு இதயம் இல்லை. மகன் உதவாமல், காதலியும் சந்திக்க விரும்பாது பிரிய, நண்பரும் உதவாமல் தன் கடைசிக் காலத்தில் எதிரியிடம் தோற்றவர் என்ற அவப் பெயருடன் மறைந்தார். அவருக்கு இவையும் வேண்டும்; இன்னும் வேண்டும்! என்றெல்லாம் ஏசிப் பேசட்டும். வல்லவரையரே! நீங்கள் உங்கள் ஊருக்குச் செல்லுங்கள். மதுரா! நீ உன் விருப்பப்படி எங்காவது செல். நான் இங்கேயே ஆடவல்லப் பெருமான் திருவடிகளிலேயே கிடந்து இறுதிக் காலத்தைக் கழிக்கிறேன்'' என்று கூறும்போது -

மதுரன் ''தந்தையே'' என்று கூவினான்.

''சக்ரவர்த்திகளே! என்ன வார்த்தைகள் கூறி விட்டீர்கள்? சாளுக்கியர்கள் சோழ மண்ணில் அடியெடுத்து வைப்பதா? மதுரா! புறப்படு போருக்கு. இதுவரையில் போர்க்களங்களில் வீர சாகசங்களைச் செய்து வந்த நீ, தந்தை சொல்லைக் கேட்காது எங்கோ பதுங்கியிருந்து விட்டாய் என்ற அவப் பெயரை இன்று ஏற்கலாமா? புறப்படு போருக்கு.

''சக்ரவர்த்திகளே! தில்லை அம்பலவாணர் முன்னிலையில் நான் சொல்கிறேன். நீங்கள் பெரிய கோயிலைக் கட்டத்தான் போகிறீர்கள். நடனக் கலாவல்லி இன்பவல்லியையும், உங்கள் அருமை மகள் பூங்கொடியையும் நான் தேடி அழைத்து வந்து தஞ்சையில் சேர்க்கிறேன். போரைத் துறந்துவிட்டாலும், பெரிய கோயிலைக் கட்டுவதில் எங்கள் பங்கு மிக உயர்ந்திருக்கும். ஆமாம்; நானும் குந்தவ்வை தேவியும் அந்தப் பணியில் சிகரமாக அமையப் போகிறோம்

''சக்ரவர்த்திகளே! கவலையை விடுங்கள். இதோ! என் வாளை மதுரனுக்கு அளிக்கிறேன். மதுரனுக்குத் தில்லைச் சிற்றம்பலத்துக் கனகசபையில் இளவரசுப் பட்டத்தைச் சூட்டுங்கள்'' என்ற வல்லவரையர் கூறி தன் இடையில் கட்டியிருந்த வாள் பட்டியை அவிழ்த்து எடுத்து மதுரனை நோக்கி, ''மதுரா! இதோ என் வாள். இனி வாளை எடுப்பதில்லை என்று சபதம் செய்திருந்தேன். வந்தியத் தேவன் வாள் பயனின்றி மழுங்கிக் கிடந்தது என்ற அவப் பெயர் வரக்கூடாது. இதோ என் வாள்! இதை எடுத்து அணிந்து கொள். வாள்

வீசுவதில் திறமை மிகுந்த உன் கரத்தில் திகழப் போகும் இந்த வாள் போர்க்களத்திலே எதிரிப் படைகள் பயந்தோடச் சுழலட்டும்'' என்றார்.

ஒருகணம் திகைத்து நின்ற மதுரன் - தன் அத்தை குந்தவ்வையின் கணவர் வல்லவரையர் வந்தியத்தேவனின் வாளை அவரிடமிருந்து மண்டியிட்டுப் பெற்று, இராசராச சோழ தேவரின் திருப்பாதங்களில் வைத்து வணங்கினான். அவர் அதை எடுத்து மதுரனிடம் அளித்து ''குழந்தாய் மதுரா! மாவீரர் வந்தியத்தேவனின் வாள் அவரது சிறந்த வாழ்த்துடன் உனக்குக் கிடைத்திருக்கிறது. வல்லவரையர் வந்தியத் தேவன் பெரும் வீரர். அறிவாளி. சோழ நாட்டிற்கு அவர் ஆற்றியுள்ள பணி மகத்தானது. தில்லை நடராசர் சந்நிதியில் உனக்கு இளவரசுப் பட்டத்தைச் சூட்டுமாறு அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். இராசேந்திரன் என்ற பட்டப்பெயருடன் உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவதுடன், சாளுக்கியர்களை வென்று வெற்றியுடன் திரும்பி வர வாழ்த்துகிறேன். வெற்றியுடன் நீ திரும்பி வந்தவுடன் சோழ அரியணையில் எனக்கு இணையாக நீ அமர்ந்து ஆட்சி புரியும் உரிமையையும் அளிக்கிறேன்'' என்றார்.

அங்கு குழுமியிருந்தவர்களின் மெய்சிலிர்த்தது.

வேங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்கள ரீழ மண்டலமும்
இரட்டபாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில் வளரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசு கொள் கோ ராச சேகரி வர்மரான
உடையார் ஸ்ரீராச ராச தேவர்
வாழ்க! வாழ்க!

''வாழ்க இளவரசர் மதுராந்தக சோழ தேவர்!''

''வாழ்க! வாழ்க!''

''வாழ்க வல்லவரையர் வந்தியத்தேவன்!''

''வாழ்க! வாழ்க!''

என்ற வாழ்த்தொலி, கோயிலின் பூசைக் கால மணி ஓசையுடன் எங்கும் பரவியது.

⌘



'வந்தியத்தேவன் வாள்' சோழ நாட்டின்
உயர்வுக்காக பல போர்க்களங்களில்
பெரும் பங்கு பெற்றிருக்கிறது.
அந்த வாள் சூரிய ரச்மியைப் பிரதிபலித்து
மின்னும். சந்திரன் ஒளியிலே தன் போர்க்
குணத்தை மறந்து அடக்கமாக
நிலவொளியை உமிழும்.
இராசராச சோழனே பலமுறை அந்த
வாளை எடுத்து 'விர்விர்' என்று சுழற்றிப்
பார்த்தும் முகத்துக்கு நேரே உயர்த்தியும்
முத்தமிட்டு மகிழ்ந்தும், "வல்லவரையரே!
தங்களுக்கு வெற்றி தருவது உங்கள்
கரங்களா? கரங்களில் பூரணமாகத்
திகழும் வாளா?" என்று கேட்டிருக்கிறான்.

விக்கிரமன் பதிப்பகம் வெளியீடு